

श्री देवी भागवत-सारः

I. வேதநூல்களும் பிரயோகங்களும்

ஸ்ரீ ருத்ரம்-சமகம் (மஹாந்யாஸத் துடன்-பக்கம் 296)	6	50
காலிகோ	10	00
தைத்திரீய மந்த்ரகோசம் :—		
தமிழில் ஸ்வரத்துடன்	8	00
நாகரத்தில் ஸ்வரத்துடன் முதல்பாகம்	4	00
ஷை இரண்டாம் பாகம்	4	50
தேவீபாகவத ஸாரம் முதல் பாகம் சாதா பைண்டு	15	00
அட்டை ,,	20	00
தேவீபாகவதசாரம் இரண்டாம் பாகம்	18	00
அட்டை பைண்டு	23	00
ஸ்ரீதேவி மாகாத்மிடம்	9	00
,, அட்டை பைண்டு	12	00
தேவீ மாஹாத்மியம் (மூலம்)	5	00
தேவீ ஸ்தோத்ரங்கள்	2	50
உபநயனம்	3	00
,, காலிகோ	5	00
குருகீதை	3	25
நாரத பக்தி சூத்திரங்கள்		75
அட்டை	3	00
ஜபவிதானம்	4	00
ஸந்தியாவந்தனம் (தமிழ்)	2	00
,, காலிகோ	4	00
,, (நாகரம்-தமிழ்)	5	00
தேவீஸூக்தங்களும் உபநிஷதங்களும்	1	50
புருஷஸூக்தம்	2	25
பூஜாவிதானம் (தமிழ்)	8	00
,, (நாகரம்)	4	50
காலிகோ	6	00

ஸ்ரீதேவீ பாகவத ஸாரம்

॥ श्रीदेवी भागवत सारः ॥

உரையுடன் கூடியது

மூன்றுவது பாகம்

நவாஹக்ரமத்தில் ஏழாவது நாள் முதல்
ஒன்பதாவது நாள் முடிவுவரை உள்ள கதை
(8.18—12.14)

உரை ஆசிரியர்
"அண்ணா"

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்
மயிலாப்பூர் : : சென்னை 600 004

Published by

Sri Ramakrishna Math
16 Ramakrishna Math Road
Madras 600 004

First Edition
3M 3C-9-1981

Printed in India
AT AMRA PRESS
153, L. B. ROAD
MADRAS 600 041

பொருளடக்கம்

ஸ்ரீதேவீ பாகவத ஸாரம்

மூன்ருவது பாகம்

நவாஹக்ரமப்படி
ஏழாவது நாள்
(8.18—9.28)

॥ अधोलोकवर्णनम् ॥ ३४ ॥

श्रीनारायण उवाच —

अधस्तात्सवितुः प्रोक्तमयुतं राहुमण्डलम् ।
नक्षत्रवच्चरति च सैंहिकेयोऽस्तदर्हणः ॥ १८. १ ॥

सूर्याचन्द्रमसोर्दूराद् भवेच्छादनकारकः ।
अधस्तादवनेः सप्त देवर्षे विवराः स्मृताः ॥ १८. १४ ॥

अतलं प्रथमं प्रोक्तं द्वितीयं वितलं तथा ।
तृतीयं सुतलं प्रोक्तं चतुर्थं वै तलातलम् ॥ १८. १५ ॥

महातलं पंचमं च षष्ठं प्रोक्तं रसातलम् ।
सप्तमं विप्र पातालं सप्तैते विवराः स्मृताः ॥ १८. १६ ॥

34. கீழுலகவர்ணனை

ஸ்ரீ நாராயணர் கூறியது—

18.1. சூரியனுக்குப் பதினாயிரம் யோஜனை கீழே உள்ளது ராகு மண்டலம். சிம்ஹிகையின் புத்திரனான ராகு நக்ஷத்திரங்களுடன் சேரத்தகாதவனாயினும் நக்ஷத்திரங்களைப் போல் சஞ்சரிக்கிறான்.

18.14. இவன் தூரத்திலிருந்துகொண்டு சூரிய சந்திரர்களை மறைப்பவனாகிறான். தேவரிஷியே! பூமிக்குக் கீழ் ஏழு பிலத்துவாரங்களிருக்கின்றன.

18.15–16. முதலாவது அதலம், இரண்டாவது விதலம், மூன்றாவது ஸுதலம், நாலாவது தலாதலம், ஐந்தாவது மஹாதலம், ஆறாவது ரஸாதலம், ஏழாவது பாதாளம் எனப்படுவன.

1

एतेषु बिलस्वर्गेषु दिवोऽप्यधिकमेव च ।
कामभोगैश्वर्य-सुखसमृद्धभुवनेषु च ॥ १८. १७ ॥

दैत्याश्च काद्रवेयाश्च दानवा बलशालिनः ।
ईश्वरादप्रतिहतकामा मायाविनश्च ते ॥ १८. २० ॥

निवसन्ति सदा हृष्टाः सर्वर्तुसुखसंयुताः ।
मयेन मायाविभुना येषु येषु च निर्मिताः ॥ १८. २१ ॥

विचित्र-भवनाट्टालगोपुराद्याः सहस्रशः ।
सभाचत्वरचैत्यानि शोभाढ्याः सुरदुर्लभाः ॥ १८. २३ ॥

यत्र नैव भयं क्वापि कालांगदिन-रात्रिभिः ।
यत्राहिप्रवराणां च शिरस्थै-र्मणिरश्मिभिः ॥
नित्यं तमः प्रबाध्येत सदा प्रस्फुटकान्तिभिः ॥ १८. ३० ॥

18.17–20. தேவலோகத்தினும் சிறந்தவையும் காம போகங்களும் ஐசுவரியமும் சுகமும் நிறைந்தவையுமான இவ் வுலகங்களில் பலசாலிகளான தைத்தியர்களும், நாகர்களும், தானவர்களும் வசிக்கின்றனர். அவர்கள் ஈசுவரனுல் தடைபடாத காமமுடையவர்கள், மாயாவிகள்.

18.21. மாயைக்குப் பிரபுவான மயனுல் எல்லா ருதுக் களிலுமுள்ள இன்பங்களுடன் கூடியவையாய் நிர்மாணம் செய்யப்பட்ட எந்த மாளிகைகள் உண்டோ அவற்றில் எப்பொழுதும் மகிழ்ச்சியுடன் அவர்கள் வாழ்கின்றனர்.

18.23. விசித்திரமான பவனங்களும், அரண்மனைகளும் கோபுரம் முதலியவைகளும் ஆயிரக்கணக்கில் இருக்கின்றன. சபா மண்டபங்களும், முற்றங்களும் உத்தியான வனங்களும் அழகுமிக்கவையாய் தேவர்களாலும் அடைதற்கரியனவாய் விளங்குகின்றன.

18.30. காலப்பகுதிகளான பகல் இரவுகளில் அங்கு எவ்விதமான பயமுமில்லை. நாகசிரேஷ்டர்களின் தலை களிலுள்ள ரத்தினங்களின் சிறந்த ஒளிகளால் அங்கு எப் பொழுதும் இருளில்லாமல் செய்யப்படுகிறது.

न वा एतेषु वसतां दिव्यौषधिरसायनैः।
रसान्नपानस्नानाद्यै राधयोन च व्याधयः॥
अनुत्साहवयोऽवस्था न बाधन्ते कदाचन॥ १८. ३२॥

प्रथमे विवरे विप्र अतलाख्ये मनोरमे।
मयपुत्रो बलो नाम वर्ततेऽखर्वगर्वकृत्॥ १९. १॥

जृम्भमाणस्य यस्यैव बलस्य बलशालिनः।
स्त्रीगणा उपपद्यन्ते त्रयोलोकविमोहनाः॥ १९. ३॥

यस्मिन्नुपयुक्ते जनो मनुते बहुधा स्वयम्।
ईश्वरोऽहमहं सिद्धो नागायुतबलो महान्॥ १९. ६॥

भूतलाधस्तले चैव वितले भगवान् भवः।
हाटकेश्वरनामाऽयं स्वपार्षदगणैर्वृतः॥
भवान्या मिथुनीभूय आस्ते देवाधिपूजितः॥ १९. ९॥

18.32. அங்கு வசிப்பவர்களுக்கு தெய்விகமான மூலிகைகளின் ரஸாயனங்கள் இருப்பதால் ருசி மிகுந்த அன்ன பானங்களாலும் ஸ்நானம் முதலியவற்ருலும் மனக் கவலேயோ உடலில் நோய்களோ இல்லே. உற்சாகக் குறைவான வயதின் நிலேயோ மனேநிலேயோ அவர்களுக்கு ஒரு பொழுதுமில்லே.

19.1. விப்ரரே! மனதிற்கினிய அதலம் எனும் முதல் உலகில் மயனுடைய புத்திரனுன பலன் என்பவன் அளவிலாத கர்வத்துடன் இருக்கிருன்.

19.3. பலசாலியான அந்த பலன் கொட்டாவி விட்டால் முவ்வுலகையும் மோகிக்க செய்யும் ஸ்திரீ கணங்கள் தோன்றுவர்.

19.6. அவர்களே அனுபவிக்கும் மனிதன் வெகுவாக 'நான் ஈசுவரன்', நான் ஸித்தன்', பதினுயிரம் யானே பல முள்ளவன், மகான்' என்று எண்ணுவான்.

19.9. பூதலத்திற்குக் கீழுள்ள விதலத்தில் பகவான் பரமசிவன் ஹாடகேச்வரன் என்ற பெயருடன் தனது பாரிஷதகணங்களால் சூழப்பெற்று பவானியுடன் கூட தேவர்களால் நன்கு பூஜிக்கப்பட்டவராய் விளங்குகிருர்.

तद्बिलाधस्तलात्प्रोक्तं सुतलाख्यं बिलेश्वरम् ।
पुण्यश्लोको बलिर्नामा आस्ते वैरोचनिर्मुने ॥ १९. १३ ॥

महेन्द्रस्य च देवस्य चिकीर्षुः प्रियमुत्तमम् ।
त्रिविक्रमोऽपि भगवान् सुतले बलिमानयत् ॥ १९. १४ ॥

इन्द्रादिष्वप्यलब्धा या सा श्रीस्तमनुवर्तते ।
तमेव देवदेवेश-माराधयति भक्तितः ॥ १९. १५ ॥

सुतले वर्तते यस्य द्वारपालो हरिः स्वयम् ।
एकदा दिग्विजये राजा रावणो लोकरावणः ॥ १९. ३० ॥

प्रविशन् सुतले येन भक्तानुग्रहकारिणा ।
पादांगुष्ठेन प्रक्षिप्तो योजनायुत-मत्र हि ॥ १९. ३१ ॥

19.13. அதற்குக் கீழேயுள்ளது ஸுதலம் எனும் சிறந்த உலகம். விரோசன புத்திரனும் நற்கீர்த்தியுடையவனுமான பலி என்பவன் அங்கு இருக்கிறுன்.

19.14. தேவேந்திரனுக்கு உத்தமமான பிரியத்தைச் செய்யக் கருதி பகவான் திரிவிக்ரமர் பலியை ஸுதலத்திற்குக் கொணர்ந்தார்.

19.15. இந்திரன் முதலியவர்களுக்கும் கிட்டாத செல்வம் அவனை அடைந்துளது. தேவர்களுக்கு நாயகரான பகவானை அவன் பக்தியுடன் பூஜிக்கிறுன்.

19.30–31. பகவான் ஹரியானவர் தாமே அவனுக்கு ஸுதலத்தில் துவாரபாலகராயிருக்கிறுர். உலகத்தைக் கதறும்படி செய்த அரசனுகிய இராவணன் திக்விஜயத்தில் ஒரு சமயம் ஸுதலத்தில் நுழைந்த பொழுது பக்தர்களுக்கு அருள் புரியும் பகவான் கால்கட்டைவிரலால் அவனைப் பதினுயிரம் யோஜனை தூரம் போய்விழும்படி தூக்கி எறிந்தார்.

एवं भूतानुभावोऽयं बलिः सर्वसुखैकभुक् ।
आस्ते सुतलराजस्थो देवदेवप्रसादतः ॥ १९. ३२ ॥

ततोऽधस्ताद्विवरकं तलातल-मुदीरतम् ।
दानवेन्द्रो मयो नाम त्रिपुराधिपतिर्महान् ॥ २०. १ ॥

त्रिलोक्याः शंकरेणाऽयं पालितो दग्धपूस्त्रयः ।
देवदेवप्रसादात्तु लब्धराज्यसुखास्पदः ॥ २०. २ ॥

आचार्यो मायिनां सोऽयं नानामायाविशारदः ।
पूज्यते राक्षसैर्घोरैः सर्वकार्यसमृद्धये ॥ २०. ३ ॥

ततोऽधस्तात्सुविख्यातं रसातलमिति स्फुटम् ।
सर्पाणां काद्रवेयाणां गणः क्रोधवशो महान् ॥ २०. ४ ॥

महाभोगा महासत्त्वाः क्रूरा क्रूरस्वजातयः ।
पतत्रिराजाधिपतेरुद्विग्नाः सर्व एव ते ॥ २०. ६ ॥

19.32. தேவதேவருடைய பிரஸாதத்தால் அப்படிப் பட்ட பெருமையுடைய பலியானவன் ஸுதலத்தின் வேந்தனுக இருக்கிறுன்.

20.1–3. அதற்குக் கீழுள்ள உலகம் தலாதலம் எனப்படுவது. பெருமைவாய்ந்த மயன் எனும் தானவ சிரேஷ்டன் பரமசிவனுல் எரிக்கப்பட்ட முப்புரங்களுக்கு அதிபனுயிருந்தவன். பரமசிவனுடைய அருளால் முவ்வுலக அரசாட்சியையும் சுகத்தையும் அடைந்தவனுயிருந்தான். அவன் மாயாவிகளுக்கு குரு; பல மாயைகளில் வல்லவன். எல்லாக் காரியங்களிலும் சித்தி எய்தும் பொருட்டு அவன் கொடிய அரக்கர்களால் பூஜிக்கப்படுகிறுன்.

20.4–6. அதற்குக் கீழே உள்ளது பிரசித்தி பெற்ற ரஸாதலம். அங்கு கத்ருவின் வம்சத்தவர்களான ஸர்ப்பக் கூட்டங்கள் அனைத்தும் மிகக் கோபமுள்ளவையாயும் சிறந்த போகமுள்ளவையாயும் மிகுந்த பலமுள்ளவையாயும் கொடியனவாயும் கொடிய ஸ்வஜாதிகளை உடையவையாயும் பக்ஷிராஜனுகிய கருடனுக்கு பயந்து வாழ்வனவாயும் உள்ளன.

ततोऽधस्ताच्च विवरे महातलसमाह्वये ।
दैतेया निवसन्त्येव पणयो दानवाश्च ये ।। २०. ८ ।।

निवातकवचा नाम हिरण्यपुरवासिनः ।
कालेया इति च प्रोक्ताः प्रत्यनीकाहविर्भुजाम् ।। २०. ९ ।।

ततोऽप्यधस्तात्पाताले नागलोकाधिपालकाः ।
वासुकि-प्रमुखाः शंखः कुलिकः श्वेत एव च ।। २०. १२ ।।

महामर्षा महाभोगा निवसन्ति विषोल्बणाः ।
पंचमस्तकवन्तश्च फणासप्तकभूषिताः ।। २०. १४ ।।

सहस्रशिरसः केऽपि रोचिष्णुमणिधारकाः ।
पातालरन्ध्र-तिमिरनिकरं स्वमरीचिभिः ।।

विधमन्ति च देवर्षे सदा संजातमन्यवः ।। २०. १६ ।।
अस्य मूलप्रदेशे हि त्रिंशत्साहस्रकेऽन्तरे ।

20.8–9 அதற்குக் கீழே உள்ள மகாதலம் எனப்படும் உலகில் ஹிரண்யபுரத்தில் வசிப்பவர்களும் நிவாதகவசர்கள் எனவும் காலேயர்கள் எனவும் பெயர்பெற்றவர்களும் தேவர்களுக்குச் சத்துருக்களுமான கொடிய தைத்தியர்களும் தானவர்களும் வசிக்கின்றனர்.

20.12–16. அதற்கும் கீழேயுள்ள பாதாளத்தில் நாகலோகத்தை யாளும் வாசுகி, சங்கன், குளிகன், சுவேதன் முதலியவர்கள் வசிக்கின்றனர். அவர்கள் கோபம் மிக்கவர்கள், போகம் மிக்கவர்கள், கொடிய விஷம் படைத்தவர்கள். ஐந்து, ஏழு, ஆயிரம் முதலிய தலைகளும் படங்களும் உடையவர்களாயும் பாதாளத்திலுள்ள இருளைத் தங்கள் தலைகளில் தரிக்கும் ஒளிமிக்க ரத்தினங்களின் கிரணங்களால் போக்குபவர்களாயும் எப்பொழுதும் கோபம் மூண்டவர்களாயும் இருப்பர்.

योजनैः परिसंख्याते तामसीभगवत्कला ।
अनन्ताख्या समास्ते हि सर्वदेवप्रपूजिता ॥ २०. १८ ॥

अहमित्यभिमानस्य लक्षणं यं प्रचक्षते ।
संकर्षणं सात्वतीयाः कर्षणं द्रष्टृ दृश्ययोः ॥ २०. १९ ॥

इदं भूमण्डलं यस्य सहस्रशिरसः प्रभोः ।
अनन्तमूर्तेः शेषस्य ध्रियमाणं च शीर्षके ॥ २०. २० ॥

चराचरं भ्रुवोरन्तर्विवरादुदपद्यत ।
सांकर्षणो नाम रुद्रो व्यूहैकादशशोभितः ॥ २०. २२ ॥

त्रिलोचनश्च त्रिशिखं शूलमुत्तम्भयन्स्वयम् ।
उदतिष्टन्महासत्त्वो महाभूतक्षयंकरः ॥ २०. २३ ॥

20.18. இதன் மூலப் பிரதேசத்தில் முப்பதினாயிரம் யோஜனை விசாலமுள்ள இடத்தில் தாமஸீ என்னும் பகவானுடைய கலையானது அனந்தன் எனும் பெயர் படைத்ததாய் எல்லா தேவர்களாலும் பூஜிக்கப்படுவதாய் உள்ளது.

20.19. பார்ப்பவரையும் பார்க்கும் பொருளையும் சேர்த்து இருப்பவராயிருக்கும் அவரை ஸாத்வதீயர்கள் ஸங்கர்ஷணர் என்றும் அஹங்காரமாகிய அபிமானத்திற்கு லக்ஷணம் என்றும் கூறுகின்றனர்.

20.20. அனந்த மூர்த்தியும் ஆயிரம் தலையுடையவரும் பிரபுவுமான சேஷனுடைய தலையில் இந்த பூமண்டலம் தாங்கப்படுகிறது.

20.22. பதினொரு வியூஹங்களுடன் பிரகாசிக்கும் ருத்ராம்சமான ஸங்கர்ஷணர் சராசரப் பிரபஞ்சத்தைத் தமது புருவமத்தியின் இடைவெளியிலிருந்து தோற்றுவித்தார்.

20.23. முக்கண் படைத்த அவர் மூன்று நுனிகளுள்ள சூலத்தை எடுத்துக் கொண்டு மகாபலத்துடன் பஞ்சமகா பூதங்களையழிக்கும் பொருட்டும் கிளம்புகிறார்.

आप्यायमानः स विभुर्वैजयन्तीस्रजं दधत् ।
अम्लानाभिनवैः स्वच्छैस्तुलसीदलसंचयैः ॥ २०. ३५ ॥

नीलवासा देवदेव एककुण्डलभूषितः ।
हलस्य ककुदि न्यस्त-सुपीवर-भुजोऽव्ययाः ॥ २०. ३६ ॥

महेन्द्रः कांचनीं यद्वद्वरत्रां च मतंगमः ।
उदारलीलो देवेशो वर्णितः सात्त्वतर्षभैः ॥ २०. ३७ ॥

नारद उवाच —

वैचित्र्यमेतल्लोकस्य कथं भगवता कृतम् ।
समानत्वे कर्मणां च तन्नो ब्रूहि यथातथम् ॥ २१. १० ॥

नारायण उवाच —

कर्तुः श्रद्धावशादेव गतयोऽपि पृथग्विधाः ।
त्रिगुणत्वात्सदा तासां फलं विसदृसंत्विह ॥ २१. ११ ॥

20.35–37. எல்லோரையும் சந்தோஷிக்கச் செய்பவராய் அந்தப் பிரபுவாகிய தேவதேவர் வாடாது என்றும் புதிதாய்ப் பரிசுத்தமாயிருக்கும் துளஸீதளங்களாலான வைஜயந்தீ மாலையைத் தரிப்பவராயும், நீலமான ஆடை உடுத்தவராயும், ஒற்றைக் குண்டலந்தரித்தவராயும், கலப்பையின் கொண்டையில் வைக்கப்பட்ட பருத்த புஜமுடையவராயும், தங்கச்சங்கிலி தரித்த இந்திரனுடைய யானை போல் விளங்குபவராயும், கம்பீரமான லீலை புரிபவராயும் ஸாத்வத சிரேஷ்டர்களால் துதிக்கப் பட்டவராயும் விளங்குகிறார்.

நாரதர் கூறியது—

21.10. கருமங்கள் ஸமமாயிருந்தாலும் இவ்வுலகில் பயன் விசித்திரமாயிருக்கும்படி பகவானால் எங்ஙனம் செய்யப்பட்டது? அதை உள்ளபடி எங்களுக்குக் கூறியருள வேண்டும்.

நாராயணர் கூறியது—

21.11. கர்த்தாவின் சிரத்தைக்குத் தக்கபடியே மார்க்கங்கள் வெவ்வேறு விதமாகின்றன. மார்க்கங்கள் முக்குணங்களால் வேறுபடுவதால் பயனும் வேறுபடுகிறது.

सात्त्विक्या श्रद्धया कर्तुः सुखित्वं जायते सदा ।
दुःखित्वं च तथा कर्तू राजस्या श्रद्धया भवेत् ॥ २१. १२ ॥

दु:खित्वं चैव मूढत्वं तामस्या श्रद्धयोदितम् ।
तारतम्यात्तु श्रद्धानां फलवैचित्र्यमीरितम् ॥ २१. १३ ॥

अनाद्यविद्याविहितकर्मणां परिणामजाः ।
सहस्रशः प्रवृत्तास्तु गतयो द्विजपुंगव ॥ २१. १४ ॥

तद्भेदान् वर्णयिष्यामि प्राचुर्येण द्विजोत्तम ।
त्रिजगत्या अन्तराले दक्षिणस्यां दिशीह वै ॥ २१. १५ ॥

भूमेरधस्तादुपरि त्वतलस्य च नारद ।
अग्निष्वात्ताः पितृगणा वर्तन्ते पितरश्च ह ॥ २१. १६ ॥

वसन्ति यस्यां स्वीयानां गोत्राणां परमाशिषः ।
सत्याः समाधिना शीघ्रं त्वाशासानाः परेण वै ॥ २१. १७ ॥

21.12. ஸாத்விக சிரத்தை உடைய கர்த்தாவிற்கு எப்பொழுதும் சுகம் ஏற்படுகிறது. ராஜஸ சிரத்தை உடைய கர்த்தாவிற்கு துக்கம் ஏற்படுகிறது.

21.13. துக்கமும் மூடத்தன்மையும் தாமஸசிரத்தையால் தோன்றுவது. சிரத்தைகளின் உயர்வு தாழ்வால் பயனில் வேறுபாடு எனக் கூறப்படுகிறது.

21.14. துவிஜசிரேஷ்டரே! அனாதி அவித்தையால் ஏற்பட்ட கர்மாக்களின் பரிணாமமாக ஆயிரக்கணக்காக கதிகள் உள்ளன.

21.15–17. நாரதரே! அவைகளின் பேதங்களை விரிவாய்க் கூறுகிறேன். மூவுலகங்களுக்கும் நடுவில் தெற்கு திக்கில் பூமிக்குக் கீழும் அதலத்திற்கு மேலும் அக்னிஷ்வாத்தர்கள் எனும் பிதிருகணங்களும், தங்கள் கோத்திரங்களில் உதித்தவர்களுக்கு விரைவில் சிறந்த நன்மைகள் உண்டாக வேண்டுமென்று விரும்பி தியான சமாதியிலிருக்கும் பிதிருக்களும் வசிக்கின்றனர்.

पितृराजोऽपि भगवान् सम्परेतेषु जन्तुषु ।
विषयं प्रापितेष्वेषु स्वकीयैः पुरुषैरिह ॥ २१. १८ ॥

सगणो भगवत्प्रोक्ताज्ञापरो दमधारकः ।
यथाकर्म यथादोषं विदधाति विचारदृक् ॥ २१. १९ ॥

यो वै परस्य वित्तानि दारापत्यानि चैव हि ।
हरते स हि दुष्टात्मा यमानुचरगोचरः ॥ २२. २ ॥

कालपाशेन संबद्धो याम्यैरतिभयानकैः ।
तामिस्रनाम नरके पात्यते यातनास्पदे ॥ २२. ३ ॥

एतन्ममाहमिति यो भूतद्रोहेण केवलम् ।
पुष्णाति प्रत्यहं स्वीयकुटुम्बं कार्यलंपटः ॥ २२. ९ ॥

21.18–19. பிதிருக்களின் அரசனாகிய பகவான் யம தர்மராஜன் தனது ராஜ்யத்திற்குத் தனது ஆட்களால் கொண்டுவரப்பட்ட ஜீவர்களுக்குத் தனது கணங்களைக் கொண்டு பகவானிட்ட கட்டளைப்படி அவரவர்கள் செயலுக்கும் குற்றத்திற்கும் தகுந்தபடி விசாரித்து தண்டனை விதிக்கிறான்.

22.2–3. எவனொருவன் பிறர் பொருளையும் மனைவி மக்களையும் அபகரிக்கிறானோ அந்த துஷ்டாத்மா யம கிங்கரர்களால் கால பாசத்தால் கட்டப்பட்டு மிகவும் பயங்கரமானதும் துன்பம் நிறைந்ததுமான தாமிஸ்ரம் எனும் நரகத்தில் தள்ளப்படுகிறான்.

22.9. இது நான், என்னுடையது என்று பிராணிகளை வஞ்சித்து தினந்தோறும் எவன் தன் குடும்பத்தைப் போஷிப்பதிலேயே காரியமும் கண்ணுமாயிருப்பவனோ அவன் அதையெல்லாம் விட்டு விட்டுத் தனது பாவத்தால் எல்லா உயிர்களும் கண்டு நடுங்கக் கூடிய ரௌரவம் என்னும் நரகத்தில் விழுகிறான்.

एतद्विहाय चाऽत्रैव स्वाऽशुभेन पतेदिह ।
रौरवे नाम नरके सर्वसत्त्वभयावहे ॥ २२.१० ॥

इह लोकेऽमुना ये तु हिंसिता जन्तवः पुरा ।
त एव रुरवो भूत्वा परत्र पीडयन्ति तम् ॥ २२.११ ॥

तस्माद्रौरवमित्याहुः पुराणज्ञा मनीषिणः ।
रुरुः सर्पादतिक्रूरो जन्तुरुक्तः पुरातनैः ॥ २२.१२ ॥

योऽगम्यां योषितं गच्छेदगम्यं पुरुषं च या ।
तावमुत्राऽपि कशया ताडयन्तो यमानुगाः ।
तिग्मया लोहमय्या च सूर्म्याऽप्यालिंगयन्ति तम् ॥ २२.३५ ॥

22.11. இவ்வுலகில் எவனால் எந்தப் பிராணிகள் முன்பு கொல்லப்பட்டனவோ அவை 'ருரு' என்னும் பிராணி வடிவெடுத்துக் கொண்டு பிறவுலகில் இவனைப் பீடிக்கின்றன.

22.12. ஆகையால் புராணமறிந்த புத்திமான்கள் அதை 'ரௌரவம்' எனக் கூறினர். 'ருரு' எனும் பிராணி பாம்பைவிடக் கொடிய ஜந்து என்று முன்னோர்களால் கூறப்பட்டுள்ளது.

22.35. எவன் செல்லக் கூடாத ஸ்திரீயிடம் செல்லுகிறானோ எவள் செல்லக் கூடாத புருஷனிடம் செல்லுகிறாளோ அவ்விருவரும் இறந்தபின் யமபடர்களால் கசையால் அடிக்கப்படுகின்றனர். பழுக்கக் காய்ச்சிய இரும்பு பொம்மைகளைத் தழுவிக் கொள்ளும்படி செய்யப்படுவர்.

राजन्या राजपुरुषा ये वा पाखण्डवर्तिनः ।
धर्मसेतुं विभिन्दन्ति ते परेत्य गता नराः ॥ २२. ३८ ॥

वैतरण्यां पतन्त्येव भिन्नमर्यादपातकाः ।
नद्यां निरयदुर्गस्य परिखायां च नारद ॥ २२. ३९ ॥

ये दम्भा दम्भयज्ञेषु पशून् घ्नन्ति नराधमाः ।
तानमुष्मिन् यमभटा नरके वैशसे तदा ॥
निपात्य पीडयन्त्येव कशाघातैर्दुरासदैः ॥ २२. ४७ ॥

ये नराः सर्वदा साक्ष्ये अनृतं भाषयन्ति च ।
दाने विनिमयेऽर्थस्य देवर्षे पापबुद्धयः ॥ २३. १ ॥

ते प्रेत्याऽमुत्र नरके अवीच्याख्येऽतिदारुणे ।
योजनानां शतोच्छ्रायाद्गिरिमूर्ध्नः पतन्ति हि ॥ २३. २ ॥

22.38–39. நாரதரே அரசராளும் எந்த ராஜ புருஷர்கள் பாஷண்டமார்க்கத்தைக்கைக்கொண்டவர்களாய் தருமத்தின் கட்டுப்பாட்டைப் பிளக்கிறார்களோ, தர்ம மரியாதைக்குப் பாதகம் செய்கிறார்களோ அவர்கள் நரக மாகிற கோட்டைக்கு அகழ் போலுள்ள வைதரிணீ என்னும் நதியில் வீழ்கின்றனர்.

22.47. எவர்கள் இடம்பம் மிக்கவர்களாய் இடம் பத்திற்காக யாகம் செய்து அதில் பிராணிகளைக் கொல்லு கிறார்களோ அந்த மானிடப் பதர்களை இறந்தபின் யம படர்கள் வைசஸம் எனும் நரகில் வீழ்த்திக் கடுமையாகச் சாட்டையாலடித்துப் பீடிக்கின்றனர்.

23.1–2. தேவரிஷியே! எந்த மனிதர்கள் சாக்ஷி சொல்லுவதிலும், தானத்திலும், பண்டமாற்றம் செய் வதிலும் எப்பொழுதும் பொய் பேசுபவர்களோ, தீயபுத்தி யுடையவர்களோ அவர்கள் இறந்தபின் மிகக்கொடிய அவீசி எனும் நரகில் நூறுயோஜனை உயரமுள்ள மலை உச்சியிலிருந்து வீழ்கின்றனர்.

ये भूतानुद्वेजयन्ति नरा उल्वणवृत्तय: ।
यथा सर्पादिकास्तेऽपि नरके निपतन्ति हि ।। २३. १६ ।।

एते बहुविधा विप्र नरका: पापकर्मणाम् ।
नरणां शतश: सन्ति यातनास्थानभूमय: ।। २३. २८ ।।

तथा धर्मपराश्चाऽपि लोकान् यान्ति सुखोद्गतान् ।
स्वधर्मो बहुधा गीतो यथा तव महामुने ।। २३. २६ ।।

देवीपूजनरूपोहि देव्याराधनलक्षण: ।
येनाऽनुष्ठितमात्रेण नरो न नरकं व्रजेत् ।। २३. ३० ।।

देवोपूजनतो विप्र सर्वे कामा भवन्ति हि ।
सर्वपापहति:शुद्धा मतिरन्ते प्रजायते ।। २४. ६२ ।।

23.26. எந்த மனிதர்கள் பாம்புகளேப் பார்க்கிலும் கொடிய செயலுடையவர்களாய்ப் பிராணிகளேத் துன்புறுத்து கிறுர்களோ அவர்களெல்லாம் இவ்வாறு நரகில் வீழ்கின்றனர்.

23.28. விப்ரரே! பாவச்செயலுடைய மனிதர்களுக்குக் கடுமையான துன்பம் அனுபவிக்கும் ஸ்தானங்களாக இவ்வாறு பலவிதமான நரகங்கள் நூற்றுக் கணக்கில் இருக்கின்றன.

23.29–30. அவ்வாறே தர்மத்தை மேலாகக் கொண்டவர்களும் சுகம் நிறைந்த உலகங்களுக்குச் செல்லு கின்றனர். மகா முனிவரே! தேவியின் பூஜைவடிவானதும் வழிபாட்டு இலக்ஷணங்களுடன் கூடினதும் எதை யனுஷ்டித்த மாத்திரத்தால் மனிதன் நரகத்தையடைய மாட்டானே அந்த ஸ்வதர்மம் உமக்கு வெகுவாகக் கூறப்பட்டுளது.

23.62. விப்ரரே! தேவிபூஜையால் எல்லா ஆசை களும் பூர்த்தியாகும். எல்லாப் பாவங்களும் நாசமாகும். பரிசுத்தமான மனம் ஏற்படும்.

यत्र तत्र भवेत्पूज्यो मान्यो मानधनेषु च ।
जायते जगदम्बायाः प्रसादेन विरंचिज ॥ २४. ६३ ॥

॥ अधोलोकवर्णनम् समाप्तम् ॥

इति श्रीदेवीभागवते महापुराणे अष्टमस्कन्धः समाप्तः॥

23.63. பிரம்மபுத்திரரே! எங்கு வெகுமானத்தாலும் செல்வத்தாலும் நன்கு மதிக்கப்பட்டு பூஜிக்கப்படுவானே அங்கு ஜகதாம்பிகையின் அருளால் அங்ஙனம் பூஜை செய்பவன் பிறப்பான்.

கீழுலக வர்ணனை முற்றும்.

இங்ஙனம் தேவீபாகவத மகாபுராணத்தில்
எட்டாவது ஸ்கந்தம் முற்றும்.

ஒன்பதாவது ஸ்கந்தம்

॥ नवमः स्कन्धः ॥

॥ प्रकृति वर्णनम् ॥ ३५ ॥

श्रीनारायण उवाच —

गणेशजननी दुर्गा राधा लक्ष्मीः सरस्वती ।
सावित्री च सृष्टिविधौ प्रकृतिः पंचधा स्मृता ॥ १. १ ॥
प्रकृष्टवाचकः प्रश्च कृतिश्च सृष्टिवाचकः ।
सृष्टौ प्रकृष्टा या देवी प्रकृतिः सा प्रकीर्तिता ॥ १. ५ ॥
गुणे सत्त्वे प्रकृष्टे च प्रशब्दो वर्तते श्रुतः ।
मध्यमे रजसि कृश्चतिशब्दस्तमसि स्मृतः ॥ १. ६ ॥
त्रिगुणात्म-स्वरूपा या सा च शक्तिसमन्विता ।
प्रधाना सृष्टिकरणे प्रकृतिस्तेन कथ्यते ॥ १. ७ ॥

ஒன்பதாவது ஸ்கந்தம்

35 பிரக்ருதி வர்ணனம்

ஸ்ரீ நாராயணர் கூறியது—

1.1. கணேசஜனனியாகிய துர்க்கை, ராதை, லக்ஷ்மி, ஸரஸ்வதி, ஸாவித்ரி என சிருஷ்டி காரியத்தில் பிரக்கிருதிகள் ஐந்து வடிவமாக எண்ணப்படுகின்றனர்.

1.5. 'ப்ர' எனும் பதம் 'ப்ரக்ருஷ்ட' அல்லது சிறந்த எனவும் 'க்ருதி:' எனும் பதம் சிருஷ்டி எனவும் பொருள்படும். சிருஷ்டியில் சிறந்த தேவி எவளோ அவள் 'ப்ரக்ருதி' எனக் கூறப்படுகிறுள்.

1.6. 'ப்ர' எனும் சப்தம் சிறந்த ஸத்துவ குணத்தை குறிப்பிடும்; 'க்ரு' எனும் இடைச்சப்தம் ரஜோ குணத்தையும் 'தி' சப்தம் தமோ குணத்தையும் குறிப்பதாய்க் கூறப்படுகிறது.

1.7. முக்குண வடிவினளாயும் சக்தியுடன் கூடினவளாயும் சிருஷ்டி செய்வதில் முக்கியமானவளாயும் உள்ளவள் எவளோ அவள் அக்காரணத்தால் ப்ரக்ருதி எனக் கூறப்படுகிறுள்.

।। मूलप्रकृतिः ।।

प्रथमे वर्तते प्रश्च कृतिश्च सृष्टिवाचकः ।
सृष्टरादौ च या देवी प्रकृतिः सा प्रकीर्तिता ।। १.८ ।।

योगेनाऽऽत्मा सृष्टिविधौ द्विधारूपो बभूव सः ।
पुमांश्च दक्षिणाधांगो वामार्धा प्रकृतिः स्मृता ।। १.९ ।।

सा च ब्रह्मस्वरूपा च नित्या सा च सनातनी ।
यथाऽऽत्मा च तथा शक्तिर्यथाऽग्नौ दाहिका स्थिता ।। १.१० ।।

अत एव हि योगीन्द्रैः स्त्रीपुंभेदो न मन्यते ।
सर्वं ब्रह्ममयं ब्रह्मन् शश्वत्सदपि नारद ।। १.११ ।।

மூலப்ரக்ருதி

1.8. 'ப்ர' என்பது 'ப்ரதமே' முதலில் அல்லது ஆதியில் என்றும் 'க்ருதி:' என்பது சிருஷ்டி என்றும் பொருள் படும். சிருஷ்டியின் ஆதியில் உள்ள தேவி எவளோ அவள் ப்ரக்ருதி எனப் போற்றப்படுகிருள்.

1.9. சிருஷ்டிக்க விரும்பிய பொழுது பரமாத்மா யோகத்தால் இரண்டு ரூபமாக ஆனுர். வலது பாதி ஆணுகவும் இடது பாதி பெண்ணுன பிரகிருதியாகவும் கூறப்படுகிறது.

1.10. அவள் நித்தியமாயும் ஸநாதனமாயும் உள்ள பிரம்மஸ்வரூபிணி. பரமாத்மா எப்படியோ பராசக்தியும் அப்படித்தான். அக்னியில் எரிக்கும் சக்தி இருப்பது போல் இயல்பாக சக்தி ஆத்மாவிடம் உறைகிருள்.

1.11. பிரம்மஸ்வரூபியான நாரதரே! எல்லாம் பிரம்ம மயமே. அதனுல்தான் யோகீந்திரர்களால் ஆண் பெண் என்ற பேதம் பிருகிருதியிடம் கற்பிக்கப்படுவதில்லை.

स्वेच्छामयस्येच्छया च श्रीकृष्णस्य सिसृक्षया।
साऽऽविर्बभूव सहसा मूलप्रकृतिरीश्वरी
तदाज्ञया पंचविधा सृष्टिकर्म-विभेदिका ॥ १.१२॥

॥ दुर्गा ॥

अथ भक्तानुरोधाद्वा भक्तानुग्रहविग्रहा।
गणेशमाता दुर्गा या शिवरूपा शिवप्रिया।
नारायणी विष्णुमाया पूर्णब्रह्मस्वरूपिणी ॥ १.१४॥

ब्रह्मादिदेवै-र्मुनिभि-र्मनुभिः पूजिता स्तुता।
सर्वाधिष्ठात्री देवी सा शर्वरूपा सनातनी ॥ १.१५॥

1.12. தனது இச்சை வடிவான ஸ்ரீ கிருஷ்ணனுடைய சிருஷ்டிக்கும் விருப்பத்தால் அந்த மூலப் பிரகிருதியான ஈசுவரி தற்செயலாய்ப் பிரிந்து (ஆண் பெண் வடிவில்) தோன்றினள். அப்படித் தோன்றிய மூலப்பிரகிருதியின் கட்டளையால் சிருஷ்டிகர்ம வேற்றுமைகள் ஐந்து வகையாயின.

(1) துர்க்கா தேவி

1.14. பக்தர்களின் பிரார்த்தனைக்கிணங்கி அருள் புரியும் வடிவினளும் சிவபத்னியும் கணேசஜனனியுமான **துர்க்கை** மங்களரூபிணீ, பூர்ணப்ரஹ்மஸ்வரூபிணீ. அவளே நாராயணீ எனவும் விஷ்ணுமாயை எனவும் கூறப்படுவாள்.

1.15. பிரம்மா முதலிய தேவர்களாலும் முனிவர்களாலும், மனுக்களாலும் பூஜித்து துதிக்கப் பெற்றவள். அனைத்திற்கு அதிஷ்டானமாயும் சுகஸ்வரூபிணியாயும் ஸநாதனியாயும் உள்ள தேவி அவளே.

धर्मसत्या पुण्यकीर्ति-र्यशोमंगलदायिनी ।
सुखमोक्षहर्षदात्री शोकार्ति-दुःखनाशिनी ॥ १. १६ ॥

शरणागत-दीनार्त-परित्राण-परायणा ।
तेजः स्वरूपा परमा तदधिष्ठातृदेवता ॥ १. १७ ॥

सर्वशक्तिस्वरूपा च शक्तिरीशस्य सन्ततम् ।
सिद्धेश्वरी सिद्धिरूपा सिद्धिदा सिद्धिरीश्वरी ॥ १. १८ ॥

बुद्धिर्निद्रा क्षुत्पिपासा छाया तन्द्रा दया स्मृतिः ।
जातिः क्षान्तिश्चभ्रान्तिश्च शान्तिः कान्तिश्च चेतना ॥ १. १९ ॥

तुष्टिः पुष्टि स्तथा लक्ष्मीर्धृतिर्माया तथैव च ।
सर्वशक्तिस्वरूपा सा कृष्णस्य परमात्मनः ॥ १. २० ॥

1.16. தர்மமும் ஸத்தியமும் உருவாய்க் கொண்டவள், புண்ணியம், கீர்த்தி, புகழ், மங்களம் ஆகியவற்றை யளிப்பவள், சுகம், மோக்ஷம், மகிழ்ச்சி, முதலியவற்றைத் தந்து சோகம், பீடை, துக்கம் முதலியவற்றைப் போக்குபவள்.

1.17. துன்புற்று மெலிந்து சரணடைந்தவர்களைக் காப்பதைக் கருமமாய்க் கொண்டவள்; தேஜோ ரூபணியாயும் அதற்கு அதிஷ்டான பரதேவதையாயும் உள்ளவள்.

1.18. ஈசனை விட்டு நீங்காத சக்தியாயும் ஸர்வசக்தி ஸ்வரூபிணியாயும் சித்தேச்வரியாயும் சித்திவடிவினளாயும் சித்திகளையளிப்பவளாயும் சித்திகளாயும் அவற்றை ஆள்பவளாயும் உள்ளவள்.

1.19–20. புத்தி, நித்திரை, பசி, தாகம், பிரதிபிம்பம், சோம்பல், தயை, ஞாபக சக்தி, ஜாதி, பொறுமை, பிராந்தி, சாந்தி, காந்தி, சைதன்யம், திருப்தி, புஷ்டி, லக்ஷ்மி, திடச்சித்தம், மாயை, முதலிய வடிவினளாயும் கரிய மேனி படைத்த பரமாத்மா நாராயணனுடைய ஸர்வசக்தி ஸ்வரூபிணியாயும் விளங்குபவள் அவளே.

उक्तः श्रुतौ श्रुतगुणश्चाऽतिस्वल्पो यथागमम्।
गुणोऽस्त्यनन्तोऽनन्ताया अपरां च निशामय ॥ १.२१ ॥

॥ लक्ष्मी ॥

शुद्धसत्त्वस्वरूपा या पद्मा सा परमात्मनः।
सर्वसम्पत्स्वरूपा सा तदधिष्ठातृदेवता ॥ १. २२ ॥
कान्ताऽतिदान्ता शान्ता च सुशीला सर्वमंगला।
लोभमोह-कामरोष-मदाहंकार-वर्जिता ॥ १. २३ ॥
भक्तानुरक्ता पत्युश्च सर्वाभ्यश्च पतिव्रता।
प्राणतुल्या भगवतः प्रेमप्रात्रं प्रियंवदा ॥ १. २४ ॥

1.21. இவளுடைய குணவிசேஷங்கள் அளவற்றன. உள்ளபடி மிகவும் குறைந்த அளவிலேயே அவற்றுள் சில குணங்கள் வேதங்களில் வர்ணிக்கப்பட்டிருக்கின்றன. அளவற்ற மகிமை வாய்ந்த அப்பராசக்தியின் மற்றொரு மூர்த்தியைப் பற்றிக் கூறுகிறேன், கேள்.

(2) லக்ஷ்மீ

1.22. பத்மா அல்லது **லக்ஷ்மீ** எனப்படுபவள் பரமாத்மாவின் சுத்த ஸத்துவ ஸ்வரூபிணீ. அவள் ஸர்வ ஸம்பத் ஸ்வரூபிணியாயும் அதற்கு அதிஷ்டான தேவதை யாயும் விளங்குபவள்.

1.23. அழகுமிக்கவள், அடக்கமுள்ளவள், அமைதி வடிவினள், நல்ல சீலம் படைத்தவள், ஸர்வமங்கள ரூபிணீ. உலோபம், மோகம், காமம், கோபம், மதம், அஹங்காரம் ஆகியவை இல்லாதவள்.

1.24. தன் பதியிடம் பக்தி பூண்டவர்கள் எல்லோருக்கும் இரங்குபவள். பகவானுக்குப் பிராணனுக்குச் சமமான பதிவிரதை. அவருடைய பிரேமைக்குப் பாத்திர மானவள். பிரியமாய்ப் பேசுபவள்.

सर्वसस्यात्मिका देवी जीवनोपायरूपिणी।
महालक्ष्मीश्च वैकुण्ठे पतिसेवारता सती ॥ १. २५ ॥

स्वर्गे च स्वर्गलक्ष्मीश्च राजलक्ष्मीश्च राजसु।
गृहेषु गृहलक्ष्मीश्च मर्त्यानां गृहिणां तथा ॥ १. २६ ॥

सर्वप्राणिषु द्रव्येषु शोभारूपा मनोहरा।
कीर्तिरूपा पुण्यवतां प्रभारूपा नृपेषु च ॥ १. २७ ॥

वाणिज्यरूपा वणिजां पापिनां कलहांकुरा।
दयारूपा च कथिता वेदोक्ता सर्वसम्मता ॥ १. २८ ॥

1.25. இவளே ஜீவனோபாயமான பயிர் பச்சைகளின் வடிவாய் விளங்கும் தேவி; பதி சேவையில் மகிழும் மகாலக்ஷ்மியாக வைகுண்டத்தில் விளங்குபவள்.

1.26. ஸ்வர்க்கத்தில் ஸ்வர்க்க லக்ஷ்மியாகவும், அரசர்களிடம் ராஜலக்ஷ்மியாகவும், கிருஹஸ்தர்களான மனிதர் வீடுகளில் கிருஹலக்ஷ்மியாகவும் உள்ளவள்.

1.27. எல்லாப் பிராணிகளிடத்தும் எல்லாப் பொருள்களிடத்தும் மனதைக் கவரும் அழகாகவும் புண்ணியசாலிகளிடம் கீர்த்திவடிவாகவும் அரசர்களிடம் வீரியப் பிரகாசமாகவும் உள்ளவள்.

1.28. வியாபாரிகளிடம் வர்த்தக வடிவாகவும், பாவிகளிடம் கலகத்தின் முளை வடிவாகவும், (நல்லவர்களிடம்) தயை வடிவாகவும் இருப்பதாக எல்லோராலும் போற்றப்படும் அவள் வேதத்தில் கூறப்பட்டுள்ளாள்.

॥ सरस्वती ॥

सर्वपूज्या सर्ववन्द्या चान्यां मत्तो निशामय।
वाग्बुद्धिविद्याज्ञानाधिष्ठात्री च परमात्मनः ॥ १. २९ ॥

सर्वविद्यास्वरूपा या सा च देवी सरस्वती।
सा बुद्धिः कविता मेधा प्रतिभा स्मृतिदा नृणाम् ॥ १. ३० ॥

नानाप्रकार-सिद्धान्त-भेदार्थकलना मता।
व्याख्या बोधस्वरूपा च सर्वसन्देहभञ्जिनी ॥ १. ३१ ॥

विचारकारिणी ग्रन्थकारिणी शक्तिरूपिणी।
स्वरसंगीत सन्धान-तालकारण-रूपिणी ॥ १. ३२ ॥

विषयज्ञान-वाग्रूपा प्रतिविश्वोपजीविनी।
व्याख्या-वादकरी शान्ता वीणा-पुस्तक-धारिणी ॥ १. ३३ ॥

(3) ஸரஸ்வதீ

1.29–30. எல்லோராலும் பூஜித்து வணங்கப்படும் மற்றொரு மூர்த்தியை என்னிடமிருந்து கேட்பாயாக. வாக்கு, புத்தி, வித்தை, ஞானம் ஆகியவற்றின் அதிதேவதையாகவும் பரமாத்மாவின் ஸர்வவித்யாஸ்வரூபிணியான சக்தியாகவும் உள்ளவள் எவளோ அவள் **ஸரஸ்வதீ** தேவி. அவளே மனிதர்க்கு புத்தி, கவிதை, யுக்தி, நுண்ணியமதி, ஞாபகசக்தி முதலியவற்றை அளிப்பவள்.

1.31. பலவடிவில் விளங்கும் சித்தாந்தங்களின் விளக்கமாகவும் வியாக்கியானமாகவும் எல்லா சந்தேகங்களையும் போக்கும் போத வடிவினளாகவும் உள்ளவள் அவளே.

1.32. ஆராய்ச்சி செய்யும் சக்தியும் நூல்களை ஆக்கும்படி செய்யும் சக்தியும் அவளே. ஸ்வர ஸங்கீத வரிசைகளுக்கும் தாளங்களுக்கும் காரணமாகியவள்.

1.33. விஷய ஞானத்தைப் பற்றிய வாக்கை உலகிற்களிப்பவள்; வியாக்கியானத்தையும் வாதத்தையும் செய்யும் சக்தி வடிவினள்; அமைதியே உருக்கொண்டு வீணையும் புஸ்தகமும் ஏந்தி விளங்குபவள்.

शुद्धसत्त्वस्वरूपा च सुशीला श्रीहरिप्रिया ।
हिमचन्दन-कुन्देन्दु-कुमुदाम्भोज-सन्निभा ॥ १. ३४ ॥

यजन्ती परमात्मानं श्रीकृष्णं रत्नमालया ।
तपःस्वरूपा तपसां फलदात्री तपस्विनाम् ॥ १. ३५ ॥

सिद्धिविद्यास्वरूपा च सर्वसिद्धिप्रदा सदा ।
यया विना तु विप्रौघो मूको मृतसमः सदा ॥ १. ३६ ॥

॥ सावित्री ॥

देवी तृतीया गदिता श्रुत्युक्ता जगदम्बिका ।
यथागमं यथाकिंचिदपरां त्वं निबोध मे ॥ १. ३७ ॥

1.34. சுத்த ஸத்துவ ஸ்வரூபிணி, நல்ல சீலம் படைத்தவள், லக்ஷ்மிக்கும் விஷ்ணுவுக்கும் பிரியமானவள், பனிக்கட்டி, சந்தனம், முல்லை, சந்திரன், ஆம்பல், வெண்தாமரை ஆகியவை போன்ற நிறமுள்ளவள்.

1.35. பரமாத்மாவாகிய கரிய திருமாலை இரத்தின மாலையால் பூஜிப்பவள். தவமே உருக் கொண்டவள். தபஸ்விகளின் தவத்திற்குப் பயனளிப்பவள்.

1.36. சித்திவித்யா ஸ்வரூபிணீ: எல்லா சித்திகளையும் எப்பொழுதும் அளிப்பவள். அவளின்றி பிராம்மணக் கூட்டம் ஊமை போலும் உயிரற்ற சவம் போலுமிருக்கும்.

(4) ஸாவித்ரீ

1.37. வேதத்தில் மூன்ருவதாகக் கூறப்பட்ட ஜகதம்பிகையான தேவியின் பெருமை ஆகமத்தில் உள்ளவாறு ஒரு சிறிது கூறப்பட்டது. இனி இன்னொரு தேவியைப் பற்றிக் கேட்பாயாக.

माता चतुर्णां वर्णानां च छन्दसाम् ।
सन्ध्यावन्दन-मन्त्राणां तन्त्राणां च विचक्षणा ।। १. ३८ ।।

द्विजाति-जातिरूपा च जपरूपा तपस्विनी ।
ब्रह्मण्यतेजो रूपा च सर्वसंस्कार-रूपिणी ।। १. ३९ ।।

पवित्ररूपा सावित्री गायत्री ब्रह्मणः प्रिया ।
तीर्थानि यस्याः संस्पर्शं वांछन्ति ह्यात्मशुद्धये ।। १. ४० ।।

शुद्धस्फटिकसंकाशा शुद्धसत्त्वस्वरूपिणी ।
परमानन्दरूपा च परमा च सनातनी ।। १. ४१ ।।

परब्रह्मस्वरूपा च निर्वाणपददायिनी ।
ब्रह्मतजोमयी शक्तिस्तदधिष्ठातृदेवता ।। १. ४२ ।।

1.38. நான்கு வர்ணங்களுக்கும் வேதங்களுக்கும் தாயாகவும் ஸந்தியாவந்தன மந்திரங்களுக்கும் தந்திரங்களுக்கும் கருத்தாகியவள் இவள்.

1.39. பிராம்மணப் பிறவி வடிவினளாயும், ஜப வடிவினளாயும், தவ வடிவினளாயும், பிரம்ம தேஜோ ரூபிணியாயும் ஸர்வஸம்ஸ்கார ரூபிணியாயும் இருப்பவள்.

1.40. இவள் **ஸாவித்ரீ** எனப்படுபவள். பிராம்மணர்களுக்குப் பிரியமானதும் பவித்ரமானதுமான காயத்ரீ வடிவினள். தீர்த்தங்கள் தாங்கள் சுத்தியடைந்து (தீர்த்தமாவதற்கு) அவளுடைய ஸபர்சத்தை விரும்புகின்றன.

1.41. சுத்தஸ்படிகம் போன்றவள்; சுத்த ஸத்வ ஸ்வரூபிணி: பரமானந்த ரூபிணி; சிறந்தவள்; ஸநாதனமானவள்.

1.42. பரப்பிரம்மஸ்வரூபிணி; நிர்வாணம் எனும் முக்திப் பதவியை அளிப்பவள்; பிரம்ம தேஜஸ் உருக்கொண்டவள்; அதற்கதிஷ்டான தேவதையாய் விளங்கும் சக்தி.

॥ राधा ॥

यत्पादरजसा पूतं जगत्सर्वं च नारद ।
देवी चतुर्थी कथिता पंचमीं वर्णयामि ते ॥ १.४३ ॥

पंचप्राणाधिदेवी या पंचप्राणस्वरूपिणी ।
प्राणाधिकप्रियतमा सर्वाभ्यः सुन्दरी परा ॥ १.४४ ॥

सर्वयुक्ता च सौभाग्यमानिनी गौरवान्विता ।
वामांगार्धस्वरूपा च गुणेन तेजसा समा ॥ १.४५ ॥

परावरा सारभूता परमाद्या सनातनी ।
परमानन्दरूपा च धन्या मान्या च पूजिता ॥ १.४६ ॥

(5) ராதா

1.43. நாரதரே! எவளுடைய பாத தூளியால் உலகனைத்தும் பாவனமாகிறதோ அந்த நாலாவது தேவி கூறப்பட்டாள். உமக்கு ஐந்தாவதாயுள்ள தேவியை இனி வர்ணிக்கிறேன்.

1.44. ஐந்து பிராண சக்திகளுக்கும் அதிஷ்டான தேவதையாகவும் ஐந்து பிராணவடிவினளாகவும் சுந்தரியாகவும் எல்லோருக்கும் பிராணனை விடப் பிரியமானவளாகவும் உள்ளவள் அவள்.

1.45. எல்லோரிடமும் ஸௌபாக்கியமாய் மதிக்கப் படுபவளாயும் பெருமைமிக்கவளாயும் தேகத்தின் இடது பாக வடிவினளாயும் அழகுக்குத் தகுந்த குணமும் சக்தியும் உடையவளாயும் விளங்குகிறாள்.

1.46. பராபரமாயும் ஸாரமாயும் சிறந்தவளாயும் முதன்மையானவளாயும் ஸநாதனியாயும் பரமானந்த ரூபிணியாயும் புண்ணியவதியாயும் போற்றத்தக்கவளாயும் எல்லோராலும் பூஜிக்கப்பட்டவளாயும் இருப்பவள்.

रासक्रीडाधिदेवी श्रीकृष्णस्य परमात्मनः ।
रासमण्डलसम्भूता रासमण्डलमण्डिता ॥ १. ४७ ॥

रासेश्वरी सुरसिका रासावासनिवासिनी ।
गोलोकवासिनी देवी गोपीवेषविधायिका ॥ १. ४८ ॥

परमाह्लादरूपाच सन्तोषहर्षरूपिणी ।
निर्गुणा च निराकारा निर्लिप्ताऽऽत्मस्वरूपिणी ॥ १. ४९ ॥

निरीहा निरहंकारा भक्तानुग्रहानुग्रहा ।
वेदानुसारी-ध्यानेन विज्ञाता सा विचक्षणैः ॥ १. ५० ॥

दृष्टिदृष्टा न सा चेशैः सुरेन्द्रैर्मुनिपुंगवैः ।
वह्निशुद्धांशुकधरा नानालंकार भूषिता ॥ १. ५१ ॥

1.47. ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் ராஸக்ரீடைக்கு அதி தேவதை: ராஸ மண்டலத்தில் தோன்றியவள்; ராஸ மண்டலத்தால் அலங்கரிக்கப் பெற்றவள்.

1.48. பேரின்ப ரஸத்திற்கு ஈசுவரியாயும் ரஸிகை யாயும், இன்பரஸமுள்ள இடத்தில் வசிப்பவளாயும் உள்ளவள். கோபிகை வேஷத்தில் கோலோகத்தில் வசிக்கும் தேவி.

1.49. உற்சாக வடிவினளாயும் ஸந்தோஷ வடிவின ளாயும் மகிழ்ச்சி வடிவினளாயும் உள்ளவள். நிர்க்குண மாயும் நிராகாரமாயும் பற்றற்றவளாயும் இருப்பவள்.

1.50. ஆசையற்றவள், அகங்காரமற்றவள், பக்தர் களுக்கு அருள்புரியக் காரணமாகியவள். வேதத்தை யனுசரித்த தியானத்தால் அறிவாளிகளால் அறியப்படுபவள்.

1.51. ஈசுவரர்களாலும் தேவசிரேஷ்டர்களாலும் முனிசிரேஷ்டர்களாலுங்கூட கண்ணுல் காண முடியாதவள். அக்னிபகவானுல் சுத்தம் செய்யப்பட்ட வஸ்திரம் தரித்தவள்; பலவிதமான ஆபரணங்களால் அலங்கரிக்கப் பட்டவள்.

कोटिचन्द्रप्रभा पुष्टसर्वश्रीयुक्तविग्रहा ।
श्रीकृष्णभक्तिदास्यैककारा च सर्वसम्पदाम् ॥ १. ५२ ॥

अवतारे च वाराहे वृषभानुसुता च या ।
यत्पादपद्मसंस्पर्शात्पवित्रा च वसुन्धरा ॥ १. ५३ ॥

ब्रह्मादिभिरदृष्टाया सर्वै दृष्टा च भारते ।
स्त्रीरत्नसारसम्भूता कृष्णवक्षःस्थले स्थिता ॥ १. ५४ ॥

यथाम्बरे नवघने लोला सौदामनी मुने ।
षष्टिवर्षसहस्राणि प्रतप्ते ब्रह्मणा पुरा ॥ १. ५५ ॥

यत्पादपद्मनखरदृष्टये चाऽत्मशुद्धये ।
न धदृष्टं च स्वप्नेऽपि प्रत्यक्षस्यापि का कथा ॥ १. ५६ ॥

1.52. கோடி சந்திரப் பிரகாசமும் ஸர்வசுபலக்ஷணங்களும் பொருந்திய திருமேனி படைத்தவள். எல்லா சம்பத்துக்களையும் ஸ்ரீ கிருஷ்ண பக்தி ஒன்றிற்கே அடிமையாக்குபவள்.

1.53. சுவேதவராஹகல்பத்தில் பகவான் கிருஷ்ணனாக அவதரித்தபோது எவள் விருஷபானு என்பவரின் புத்திரியாய் அவதரித்து பூதேவியும் எவளுடைய பாத ஸ்பர்சத்தால் புனிதமானளோ அவள்.

1.54. பிரம்மா முதலியவர்களாலும் காணப்படாத அவள் பாரத பூமியில் எல்லோராலும் காணப்பட்டாள். ஸ்திரீரத்னங்களின்ஸாரமாய்த் தோன்றி ஸ்ரீகிருஷ்ணனுடைய மார்பில் நிலைபெற்றவள்.

1.55–56. முனிவரே! ஆகாயத்தில் புதிய மேகத்திடை பிரகாசிக்கும் மின்னல் கொடி போன்றவள். முன்பு அறுபதினாயிரம் ஆண்டு எவளுடைய பாதகமலத்திலுள்ள நகங்களைக் கண்டு ஆத்மசுத்தியைப் பெறவேண்டுமென்று பிரம்மா தவஞ் செய்தும் கனவிலும் காணவில்லையோ அவளைப் பிரத்தியக்ஷமாய்க் காண்பதைப் பற்றி என்ன சொல்ல இருக்கிறது?

तेनैव तपसा दृष्टा भुवि वृन्दावने वने ।
कथिता पंचमी देवी सा राधा च प्रकीर्तिता ॥ १. ५७ ॥

॥ प्रकृतेः प्रधानांशरूपाः ॥

अंशरूपाः कलारूपाः कलांशांशसम्भवाः ।
प्रकृतेः प्रतिविश्वेषु देव्यश्च सर्वयोषितः ॥ १. ५८ ॥

परिपूर्णतमाः पंचविद्या देव्यः प्रकीर्तिताः ।
या याः प्रधानांशरूपा वर्णयामि निशामय ॥ १. ५९ ॥

प्रधानांशस्वरूपा सा गंगा भुवनपावनी ।
विष्णुविग्रहसम्भूता द्रवरूपा सनातनी ॥ १. ६० ॥

1.57. பின்னர் பிருந்தாவனத்தில் தவஞ்செய்து அவராலேயே காணப்பட்டாள். இவ்வாறு ஐந்தாவதான தேவி கூறப்பட்டாள். அவள் **ராதா** என விசேஷமாய்ப் போற்றப்படுபவள்.

பிரகிருதியின் முக்கியமான அம்ச வடிவங்கள்

1.58. பிரகிருதியின் அம்ச வடிவினர்களாகவும், கலை வடிவினர்களாகவும், கலையின் அம்ச வடிவினர்களாகவும் ஒவ்வொரு உலகிலும் தோன்றியவர்கள் தேவிகளும் மற்றும் எல்லா ஸ்திரீகளும்.

1.59. அவர்களில் சிறந்து பரிபூர்ணமாய் விளங்குபவர் கள் எவர்களோ அவ்வைந்து தேவியர்களை வர்ணித்தேன். இனி எவர்கள் முக்கியமான அம்ச வடிவினர்களோ அவர்களை வர்ணிக்கிறேன், கேட்பீராக.

1.60. முக்கியமான அம்சஸ்வரூபத்தில் முதன்மை யானவள் உலகைப் புனிதமாக்கும் **கங்கை**. விஷ்ணுவினுடைய தேகத்திலிருந்து ஜலரூபமாக ஆதியில் தோன்றியவள்.

शम्भुमौलिजटामेरुमुक्तापंक्तिस्वरूपिणी ।
तपः सम्पादिनी सद्यो भारतेषु तपस्विनाम् ।। १. ६३ ।।

प्रधानांशस्वरूपा च तुलसी विष्णुकामिनी ।
विष्णुभूषणरूपा च विष्णुपादस्थिता सती ।। १. ६५ ।।

यया विना च विश्वेषु सर्वं कर्म च निष्फलम् ।
मोक्षदा या मुमुक्षूणां कामिनां सर्वकामदा ।। १. ६९ ।।

प्रधानांशस्वरूपा या मनसा कश्यपात्मजा ।
शंकरप्रियशिष्या च महाज्ञानविशारदा ।। १. ७१ ।।

नागेश्वरस्याऽनन्तस्य भागिनी नागपूजिता ।
नागेश्वरी नागमाता सुन्दरी नागवाहिनी ।। १. ७३ ।।

1.63. பரமசிவனுடைய சிரசில் மேரு போன்ற ஜடா மண்டலத்தில் முத்துமாலை போல் பிரகாசிப்பவள். பாரத பூமியில் தபஸ்விகளுக்கு உடனே தவத்தின் பயனையளிப்பவள்.

1.65. முக்கியமான மற்றொரு அம்சஸ்வரூபம் விஷ்ணுவிற்குப் பிரியமான துளஸீ. அவள் விஷ்ணுவிற்கு அலங்காரமாயிருப்பவள். விஷ்ணு பாதத்தில் நிலைபெற்ற பதிவிரதை. உலகங்களில் துளஸியில்லாத எல்லாக் கருமங்களும் பயனற்றவை. மோக்ஷ நாட்டமுடையவர்களுக்கு மோக்ஷமளிப்பவள். ஆசை உள்ளவர்களுக்கு எல்லா ஆசைகளையும் பூர்த்தி செய்விப்பவள்.

1.71. இன்னொரு முக்கியமான அம்சஸ்வரூபம் கசியப புத்திரியாயவதரித்த மனஸா என்பவள். சிவனுக்குப் பிரியமான சிஷ்யை. உத்தமமான ஞானத்தில் சிறந்தவள்.

1.73. நாகர்களுக்கு ஈசுவரரான அனந்தருடைய சகோதரி; நாகர்களால் பூஜிக்கப் பெற்றவள்; நாகர்களுக்கு ஈசுவரி; நாகர்களுக்குத் தாய்; நாகர்களின் சேனநாயகி.

जरत्कारुमुनेः पानी कृष्णांशस्य पतिव्रता ।
आस्तीकस्य मुनेर्माता प्रवरस्य तपस्विनाम् ॥ १. ७७ ॥

प्रधानांशस्वरूपा या देवसेना च नारद।
मातृकासु पूज्यतमा सा षष्ठी च प्रकीर्तिता ॥ १. ७८ ॥

षष्ठांशरूपा प्रकृतेस्तेन प्रष्ठी प्रकीर्तिता ।
मातृका च दयारूपा शश्वद्रक्षणकारिणी ॥ १. ८२ ॥

प्रधानांशस्वरूपा च देवीमंगलचण्डिका ।
सृष्टौ मंगलरूपा च संहारे कोपरूपिणी ॥ १. ८४ ॥

तेन मंगलचण्डी सा पण्डितैः परिकीर्तिता ।
प्रतिमंगलवारेषु प्रतिलेश्मेषु पूजिता ॥ १. ८५ ॥

1.77. கிருஷ்ணும்சமான ஜரத்காரு எனும் முனிவரின் பத்னி, பதிவிரதை. தவஞ் செய்வோருள் பிரசித்து பெற்ற ஆஸ்தீக முனிவரின் தாய்.

1.78. நாரதரே! **தேவஸேனே** என்பவள் ஒரு பிரதான அம்சஸ்வரூபிணி. மாத்ருகைகளுள் சிறப்பாகப் பூஜித்தற்குரியவள். அவள் **ஷஷ்டீ** எனவும் போற்றப்படுகிருள்.

1.82. அவள் பிரகிருதியின் ஆறிலொரு அம்சமாயிருப்பதால் ஷஷ்டீ எனப் பெயர். தயையே உருக் கொண்ட அன்னே வடிவினள். எப்பொழுதும் இரக்ஷிப்பதைக் காரியமாய்க் கொண்டவள்.

1.84. இன்னெரு பிரதான அம்சஸ்வரூபிணி **மங்கள சண்டிகாதேவி.** சிருஷ்டி காலத்தில் மங்கள வடிவினளாகவும் ஸம்ஹார காலத்தில் கோப வடிவினளாகவும் உள்ளவள்.

1.85. அதனுல் அவள் பண்டிதர்களால் 'மங்கள சண்டிகா' எனப் பெயரிட்டழைக்கப்பட்டாள். மங்கள வாரம் (செவ்வாய்க்கிழமை) தோறும் ஒவ்வொரு வீட்டிலும் பூஜிக்கப்படுபவள்.

प्रधानांशस्वरूपा सा काली कमललोचना।
दुर्गाललाटसंभूता रणे शुम्भनिशुम्भयोः ॥ १. ८७ ॥

दुर्गार्धांशस्वरूपा सा गुणेन तेजसा समा।
कृष्ण भक्ता कृष्णतुल्या तेजसा विक्रमैर्गुणैः ॥ १. ९० ॥

धर्मार्थकाममोक्षांश्च दातुं शक्ता च पूजिता।
ब्रह्मादिभिः स्तूयमाना मुनिभिर्मनुभिर्नरैः ॥ १. ९३ ॥

प्रधानांशस्वरूपा सा प्रकृतेश्च वसुन्धरा।
सर्वोपजीव्यरूपा च सर्वसम्पद्विधायिनी ॥ १. ९५ ॥

॥ प्रकृतेः कलाः ॥

प्रकृतेश्च कला या यास्ता निबोध मुनीश्वर।
यस्य यस्य च या पत्नी तत्सर्वं वर्णयामि ते ॥ १. ९६ ॥

1.87. கமலக்கண்ணியான காளீ இன்னொரு பிரதான அம்சஸ்வரூபிணி. அவள் சும்ப நிசும்ப யுத்த காலத்தில் துர்க்கையின் நெற்றியிலிருந்து தோன்றியவள்.

1.90. அவள் துர்க்கையின் பாதி அம்சஸ்வரூபம். குணத்தாலும் தேஜஸ்ஸாலும் ஸமமானவள். கிருஷ்ணனிடம் பக்தி பூண்டவள். கிருஷ்ணனுக்கொப்பான தேஜஸ்ஸும் பராக்கிரமும் குணமும் பொருந்தியவள்.

1.93. பூஜிக்கப்பட்டால் தருமம், அர்த்தம், காமம், மோக்ஷம் ஆகியவற்றையளிக்கும் சக்தியுடையவள். பிரம்மா முதலியவர்களாலும் முனிவர்களாலும் மனுக்களாலும் மனிதர்களாலும் துதிக்கப்பெற்றவள்.

1.95. **பூமிதேவியும்** பிரகிருதியின் முக்கியமான அம்சம். எல்லோருக்கும் உயிர் வாழ உபாயமாயும் எல்லாச் செல்வங்களையும் அளிப்பவளாயும் விளங்குபவள் அவள்.

பிரகிருதியின் கலைகள்

1.96. முனீசுவரரே! பிரகிருதியின் கலைகளாக விளங்குபவர்கள் எவர்களோ அவர்களையும் அவர்களில் எவரெவர் யார் யாருடைய பத்தினி என்பதையும் உமக்கு இனி வர்ணிக்கிறேன், அறிந்து கொள்ளும்.

स्वाहादेवी वह्निपत्नी प्रतिविश्वेषु पूजिता ।
दक्षिणा यज्ञपत्नी च दीक्षा सर्वत्रपूजिता ॥ १. ९८ ॥

स्वधा पितॄणां पत्नी च मुनिभिर्मनुभिर्नरैः ।
पूजिता पितृदानं हि निष्फलं च यया विना ।
स्वस्ति देवी वायुपत्नी प्रतिविश्वेषु पूजिता ॥ १. १०० ॥

पुष्टिर्गणपतेः पत्नी पूजिता जगतीतले ।
अनन्तपत्नी तुष्टिश्च पूजिता वन्दिता भवेत् ॥ १. १०२ ॥

ईशानपत्नी सम्पत्तिः पूजिता च सुरैर्नरैः ।
क्रिया तूद्योगपत्नी च पूजिता सर्वसम्मता ॥ १. १०९ ॥

ज्ञानस्य तिस्रो भार्याश्च बुद्धिर्मेधा धृतिस्तथा ।
वैराग्यस्य द्वे भार्ये श्रद्धाभक्तिश्च पूजिते ॥ १. १२३ ॥

1.98. ஸ்வாஹாதேவி அக்னியின் பத்னி; ஒவ்வொரு உலகிலும் பூஜிக்கப்படுபவள். தக்ஷிணேயும் தீக்ஷையும் யக்ஞ பத்தினிகள்; எங்கும் பூஜிக்கப்படுபவர்கள்.

1.100. ஸ்வதாதேவி பித்ருக்களின் பத்னி. முனிவர்களாலும் மனுக்களாலும் மனிதர்களாலும் பூஜிக்கப்பட்டவள். அவளின்றி பித்ருக்களுக்குச் செய்யும் தானம் பயனற்றதாகும். ஸ்வஸ்திதேவி வாயுபத்னி; ஒவ்வொரு உலகிலும் பூஜிக்கப்படுபவள்.

1.102. புஷ்டிதேவி கணபதியின் பத்னி; உலகெங்கும் பூஜிக்கப்படுபவள். துஷ்டிதேவி ஆதிசேஷன் பத்னி; பூஜைக்கும் வந்தனத்திற்குமுரியவள்.

1.109. ஸம்பத்திதேவி ஈசானபத்னி; மனிதர்களாலும் தேவர்களாலும் பூஜிக்கப்பட்டவள். கிரியை உத்யோக பத்னி; எல்லோராலும் விரும்பிப் பூஜிக்கப்படுபவள்.

1.123. புத்தி, மேதை, திருதி என்ற மூவர் ஞான பத்னிகள்; சிரத்தையும் பக்தியும் வைராக்கிய பத்னிகளாக பூஜிக்கப்படுபவர்கள்.

अदितिर्देवमाता च सुरभी च गवां प्रसूः।
रोहिणी चन्द्रपत्नी च संज्ञा सूर्यस्य कामिनी ॥ १. १२६ ॥

तारा बृहस्पतेर्भार्या वसिष्ठस्याऽप्यरुन्धती।
अहल्या गौतमस्त्री साऽप्यनसूयाऽत्रिकामिनी ॥ १. १२७ ॥

मन्दोदरी च कौसल्या सुभद्रा कौरवी तथा।
रेवती सत्यभामा च कालिन्दी लक्ष्मणा तथा॥
जाम्बवती नाग्नजिति-र्मित्रविन्दा तथाऽपरा ॥ १. १३२ ॥

लक्ष्मणा रुक्मिणी सीता स्वयं लक्ष्मीः प्रकीर्तिता।
बह्वचः सत्यः कलाश्चैव प्रकृतेरेव भारते ॥ १. १३६ ॥

या याश्च ग्रामदेव्यः स्युस्ताः सर्वाः प्रकृतेः कलाः।
कलांशांशसमुद्भूताः प्रतिविश्वेषु योषितः ॥ १. १३७ ॥

1.126. அதிதி என்பவள் தேவர்களின் தாய்; ஸுரபி பசுக்களின் தாய்; ரோகிணி சந்த்ரபத்னி; ஸம்ஞாதேவி ஸூர்யபத்னி.

1.127. தாரா பிருஹஸ்பதியின் பத்னி; அருந்ததி வசிஷ்டபத்னி; அஹல்யை கௌதமபத்னி; அனஸுயை அத்ரிபத்னி.

1.133. மந்தோதரி, கௌஸல்யை, ஸுபத்ரை, கௌரவீ, ரேவதி, ஸத்யபாமா, காளிந்தீ, லக்ஷ்மணு, ஜாம்பவதி, நாக்னசிதி, மித்ரவிந்தா முதலிய பலரும் பிரகிருதியின் அம்சங்களேயாவர். லக்ஷ்மணு, ருக்மிணீ, ஸீதா முதலியோர் லக்ஷ்மியே எனக் கூறப்படுவர். இவ்வாருகப் பலர் பாரத பூமியில் பிரகிருதியின் கலைகளாய் விளங்குபவர்கள்.

1.137. கிராம தேவதைகளாக உள்ளவர்கள் எவர் களோ அவர்களெல்லோரும்கூடப் பிரகிருதியின் கலைகளே. ஒவ்வொரு உலகிலும் உள்ள ஸ்திரீகளும் பிரகிருதியின் கலைகளின் அம்சங்களாகவும் அம்சங்களின் அம்சங்களாகவும் தோன்றியவர்களேயாவர்.

योषितावमानेन प्रकृतेश्च पराभवः ।
ब्राह्मणी पूजिता येन पतिपुत्रवती सती ॥ १. १३८ ॥
प्रकृतिः पूजिता तेन वस्त्राऽलंकार चन्दनैः ।
कुमारीचाऽष्टवर्षीया वस्त्राऽलंकारचन्दनैः ।
पूजिता येन विप्रस्य प्रकृतिस्तेन पूजिता ॥ १. १४० ॥
पूजिता सुरथेनाऽऽदौ दुर्गा दुर्गार्ति नाशिनी ।
ततः श्रीरामचन्द्रेण रावणस्य वधार्थिना ॥
तत्पश्चाज्जगतां माता त्रिषु लोकेषु पूजिता ॥ १. १४६ ॥
जाताऽऽदौ दक्षकन्या या निहत्य दैत्यदानवान् ।
ततो देहं परित्यज्य यज्ञे भर्तुश्च निन्दिता ॥
जज्ञे हिमवतः पत्न्यां लेभे पशुपतिं पतिम् ॥ १. १४७ ॥

1.138–140. ஸ்திரீகளை அவமதித்தால் அது பிரகிருதி தேவியையே அவமதித்ததாகும். பதியையும் புத்திரனையு முடைய பதிவிரதையான பிராம்மணஸ்திரீ எவரால் வஸ்திரம், ஆபரணம், சந்தனம் முதலியவற்றால் பூஜிக்கப் படுகிறாளோ அவரால் பிரகிருதியே பூஜிக்கப்பட்டவளாகிறாள்.

1.146. கடத்தற்கரிய துன்பங்களை நாசம் செய்யும் துர்கை ஆதியில் ஸுரதன் (எனும் அரசனால்) பூஜிக்கப் பட்டாள். பிறகு ராவணவதத்தின் பொருட்டு ஸ்ரீ ராம சந்திரரால் பூஜிக்கப்பட்டாள்.

1.147 எவள் ஆதியில் தக்ஷப்பிரஜாபதியின் பெண்ணாகப் பிறந்து தைத்தியர்களையும் தானவர்களையும் அழித்து, பர்த்தாவான பரமசிவனை நிந்தித்த தந்தையின் யாகத்தில் உடலைத் துறந்தாளோ அவளே ஹிமவானுடைய பத்னியிடம் பிறந்து பசுபதியைப் பதியாக அடைந்தாள்.

गणेशश्च स्वयं कृष्णः स्कन्दो विष्णुकलोद्भवः।
बभूवतुस्तौ तनयौ पश्चात्तस्याश्च नारद ॥ १. १४८ ॥

लक्ष्मीर्मंगलभूपेन प्रथमं परिपूजिता।
तत्पश्चात् त्रिषु लोकेषु देवतामुनिपुंगवैः ॥ १. १४९ ॥

आदौ सरस्वती देवी ब्रह्मणा परिपूजिता।
तत्पश्चात् त्रिषुलोकेषु देवता मुनिपुंगवैः ॥ १. १५१ ॥

प्रथमं पूजिता राधा गोलोके रासमण्डले।
पौर्णमास्यां कार्त्तिकस्य कृष्णेन परमात्मना ॥ १. १५३ ॥

गोपिकाभिश्च गोपैश्च बालिकाभिश्च बालकैः।
गवां गणैः सुरभ्या च तत्पश्चादाज्ञया हरेः ॥ १. १५४ ॥

1.148. நாரதரே! கிருஷ்ணனே கணேசனுகவும் விஷ்ணு அம்சத்தால் ஸ்கந்தனுகவும் அவளிடம் புத்திரர்களாய்ப் பிறந்தனர்.

1.149. முதலில் லக்ஷ்மீ தேவி மங்கள பூபதியால் பூஜிக்கப்பட்டாள். அதன் பின் மூவுலகிலும் தேவர்களாலும் முனிசிரேஷ்டர்களாலும் பூஜிக்கப்பட்டாள்.

1.151. ஆதியில் ஸரஸ்வதீ தேவி பிரம்மாவால் நன்கு பூஜிக்கப்பட்டாள். அதன் பின் மூவுலகிலும் தேவர்களாலும் முனிபுங்கவர்களாலும் பூஜிக்கப்பட்டாள்.

1.153. முதலில் ராதா தேவி கோலோகத்தில் ராஸ மண்டலத்தில் கார்த்திகைப் பௌர்ணமியன்று பரமாத்மாவாகிய ஸ்ரீ கிருஷ்ணனுல் பூஜிக்கப்பட்டாள்.

1.154. அதன்பின் கோபிகைகளாலும் கோபர்களாலும் அவர்களின் சிறுவர் சிறுமிகளாலும் பசுக் கூட்டங்களாலும், காமதேனுவாலும் ஹரியின் கட்டளையால் பூஜிக்கப்பட்டாள்.

तदा ब्रह्मादिभिर्देवै-र्मुनिभिः परया मुदा।
पुष्पधूपादिभिर्भक्त्या पूजिता वन्दिता सदा ।। १. १५५ ।।

पृथिव्यां प्रथमं देवी सुयज्ञेनैव पूजिता।
शंकरेणोपदिष्टेन पुण्यक्षेत्रे च भारते ।।
त्रिषु लोकेसु तत्पश्चादाज्ञया परमात्मनः ।। १. १५६ ।।

पुष्पधूपादिभिर्भक्त्या पूजिता मुनिभिः सदा।
कला या याः समुद्भूताः पूजितास्ताश्च भारते ।। १. २५७ ।।

1.155. அவ்வாறே பிரம்மாதி தேவர்களாலும், முனிவர்களாலும், பரம சந்தோஷத்துடனும் பக்தியுடனும் புஷ்பங்களாலும் தூபம் முதலியவற்ருலும் பூஜித்து வந்தனம் செய்யப்பட்டாள்.

1.156. பூலோகத்தில் புண்ணிய பூமியாகிய பாரத தேசத்தில் சங்கரரால் உபதேசிக்கப் பெற்ற ஸுயக்ஞர் என்பவரால் முதலில் தேவியானவள் பூஜிக்கப்பட்டாள். அதன்பின் பரமாத்மாவின் கட்டளையால் மூவுலகிலும் பூஜிக்கப்பட்டாள்.

1.157. எப்பொழுதும் முனிவர்களால் புஷ்பம், தூபம் முதலியவற்ருல் பக்தியுடன் பூஜிக்கப்படுகின்ருள். அவளுடைய கலைகளாகத் தோன்றியவர்கள் எவரெவர்களோ அவர்களெல்லாமே பாரதத்தில் பூஜிக்கப்படுகின்றனர்.

पूजिता ग्रामदेव्यश्च ग्रामे च नगरे मुने ।
एवं ते कथितं सर्वं प्रकृतेश्चरितं शुभम् ।। १. १५८ ।।

।। प्रकृतिवर्णनं समाप्तम् ।।

।। इति श्रीदेवीभागवते नवमस्कन्धे प्रथमोऽध्यायः ।।

1.158. முனிவரே ! அவர்கள் கிராம தேவதைகளாக கிராமங்களிலும் நகரந்தோறும் பூஜிக்கப்படுகின்றனர். இவ்வாறு பிரகிருதியின் சுபசரிதம் முழுதும் உமக்குக் கூறப்பட்டது.

பிரகிருதி வர்ணனை முற்றும்

இங்ஙனம் ஸ்ரீதேவிபாகவதத்தில் ஒன்பதாவது
ஸ்கந்தத்தில் முதல் அத்தியாயம்
முற்றும்

॥ नानामूर्ति रहस्यम् ॥ ३६ ॥

श्रीनारायण उवाच —

यथाऽग्नौ दाहिका चन्द्रे पद्मे शोभा प्रभा रवौ।
शश्वद्युक्ता न भिन्ना सा तथा प्रकृतिरात्मनि ॥ २. ७ ॥

ज्ञानं समृद्धि-सम्पत्तिर्यशश्चैव बलं भगः।
तेन शक्तिर्भगवती भगरूपा च सा तदा ॥ २. ११ ॥

तया युक्तः सदाऽऽत्मा च भगवांस्तेन कथ्यते।
स च स्वेच्छामयो देवः साकारश्च निराकृतिः ॥ २. १२ ॥

तेजोरूपं निराकारं ध्यायन्ते योगिनः सदा।
वदन्ति च परं ब्रह्म परमानन्दमीश्वरम् ॥ २. १३ ॥

36. பலவகை மூர்த்தி ரஹஸ்யம்

ஸ்ரீ நாராயணர் கூறியது—

2.7. அக்னியில் சுடும் சக்தி போலும், சந்திரனிடத்திலும் தாமரையிடத்திலும் அழகு போலும், சூரியனிடம் ஒளிபோலும் எப்பொழுதும் பிரியாமல் ஆத்மாவுடன் சேர்ந்தே இருப்பவள் பிரகிருதி.

2.11. சக்தியானவள் ஞானம், பொருள்களின் நிறைவு, செல்வம், புகழ், பலம் (பகம்) ஐசுவரியம் ஆகியவற்றுடன் கூடியிருப்பதால் அவள் பகவதீ எனப்படுகிறுள். அப்பொழுது அவள் ஐசுவர்ய ரூபிணி.

2.12. அவளுடன் கூடிய பரமாத்மா அதனுல் பகவான் எனப்படுகிறுர். அவர் உருவுடையவராகவும் உருவற்றவராகவும் தன்னிச்சைப்படி இருக்கக்கூடிய தேவராவார்.

2.13. உருவமில்லாமல் ஒளி வடிவினராய் அவரை யோகிகள் எப்பொழுதும் தியானிக்கின்றனர். அவரை பரப்பிரம்மம் என்றும் பரமானந்தமென்றும் ஈசுவரனென்றும் கூறுகின்றனர்.

अदृश्यं सर्वद्रष्टारं सर्वज्ञं सर्वकारणम् ।
सर्वदं सर्वरूपं तं वैष्णवास्तन्न मन्वते ॥ २. १४ ॥

किशोरवयसं शान्तं सर्वकान्तं परात्परम् ।
नवीन नीरदाभास-धामैकं श्यामविग्रहम् ॥ २. १७ ॥

मयूरपिच्छ-चूडंच मालतीमाल्यमण्डितम् ।
ज्वलदग्निविशुद्धैक-पीतांशुक-सुशोभितम् ॥ २. २० ॥

द्विभुजं मुरलीहस्तं रत्नभूषणभूषितम् ।
ध्यायन्ते वैष्णवाः शश्वद्देवदेवं सनातनम् ॥ २. २२ ॥

ब्रह्मणो वयसा यस्य निमेष उपचर्यते ।
स चाऽऽत्मा स परं ब्रह्म कृष्ण इत्यभिधीयते ॥ २. २३ ॥

2.14. காணப்படாமல் அனைத்தையும் பார்ப்பவரும் எல்லாமறிந்தவரும் அனைத்திற்கும் காரணமாகியவரும், எல்லாரூபமாய் இருப்பவரும் ஆகிய அவருடைய அந் நிலையை வைஷ்ணவர்கள் வழிபடுவதில்லை.

2.17. குழந்தைப் பருவத்தினரும், சாந்தரும், எல்லோருக்கும் பிரியமானவரும், உயர்ந்ததற்கெல்லாம் உயர்ந்தவரும், புதியமேகம் போல் பிரகாசிக்கும் நீலவண்ணரும்;

2.20. மயிலிறகைத்தலையில் சூடியவரும், ஜாதிமல்லிகை மாலை அணிந்தவரும், ஜ்வலிக்கும் அக்னியைப் போல் சுத்தமான ஒரு வஸ்திரமணிந்து விளங்குபவரும்;

2.22. புல்லாங்குழலுடன் கூடிய இருகைகளை உடையவரும், ரத்னாபரணங்களணிந்தவரும், ஸநாதனருமாகிய தேவதேவனாக வைஷ்ணவர்கள் எப்பொழுதும் பகவானை தியானிக்கின்றனர்.

2.23. பிரம்மாவின் ஆயுள் அவருக்கு ஒரு நிமிஷமாக உபசரிக்கப்படுகிறது. ஆத்மாவும் பரப்பிரம்மமுமாகிய அவர் கிருஷ்ணன் எனும் பெயரால் போற்றப்படுகிறார்.

कृषिश्च सर्ववचनो नकारो बीजमेव च।
स कृष्णः सर्वस्रष्टाऽऽदौ सिसृक्षन्नेक एव च ॥ २. २४ ॥
सृष्टयुन्मुखस्तदंशेन कालेन प्रेरितः प्रभुः।
स्वेच्छामयः स्वेच्छया च द्विधारूपो बभूवह ॥ २. २५ ॥

स्त्रीरूपो वामभागांशो दक्षिणांशः पुमान् स्मृतः।
तां ददर्श महाकामो कामाधारां सनातनः ॥ २. २७ ॥

अतीव कमनीयां च चारु पंकजसन्निभाम्।
दृष्ट्वा तां तु तया सार्धं रासेशो रासमण्डले॥
रसोल्लासेषु रसिको रासक्रीडां चकार ह॥ २. ३६ ॥

एतस्मिन्नन्तरे देवी जिह्वाग्रात्सहसा ततः।
आविर्बभूव कन्यैका शुक्लवर्णा मनोहरा ॥ २. ५२ ॥

2.24–25. 'க்ருஷி' எனும் பதம் எல்லாம் எனவும், 'ந' எனும் பதம் 'வித்து' எனவும் பொருள்படும். ஆதலால் 'கிருஷ்ண' என்றால் அனைத்திற்கும் வித்தாகியவர். அவர் ஆதியில் ஒருவராகவே எல்லாவற்றையும் சிருஷ்டிக்க விரும்பி அந்த விருப்பத்தின் அம்சமான காலத்தால் தூண்டப்பட்டு தனது இச்சாசக்தி மயமாகிய அந்தப் பிரபு தனதிச்சையால் இரண்டு ரூபமாக ஆனார்.

2.27. இடதுபாகப் பகுதி ஸ்திரீரூபம் எனவும் வலது பகுதி புருஷரூபம் எனவும் கூறப்படுகிறது. ஸநாதனரும் (புருஷரூபியுமான) மஹாகாமியுமான பகவான் காமத்திற் காதாரமான அந்த ஸ்திரீ ரூபத்தைப் பார்த்தார்.

2.36. மிகவும் அழகியவளும் சிறந்த தாமரைப்பூப் போன்றவளும் ஆகிய அவளைப் பார்த்து அவளுடன் கூட ரஸத்திற்கு நாயகரான ஈசுவரன் ராஸமண்டலத்தில், ரஸ உல்லாஸத்தில் ரஸிகராய் ராஸக்கிரீடை புரிந்தார்.

2.52. அப்பொழுது தேவியின் நாக்கு நுனியிலிருந்து வெண்மை நிறத்துடன் மனதைக் கவரும் ஒரு கன்னிகை தோன்றினாள்.

श्वेतवस्त्रपरीधाना वीणापुस्तकधारिणी।
रत्नभूषण भूषाढ्या सर्वशास्त्राधिदेवता ॥ २. ५३ ॥

अथ कालान्तरे सा च द्विधा रूपा बभूव ह।
वामार्धांगाच्च कमला दक्षिणार्धाच्च राधिका ॥ २. ५४ ॥

एतस्मिन्नन्तरे कृष्णो द्विधारूपो बभूव सः।
दक्षिणार्धश्च द्विभुजो वामार्धश्च चतुर्भुजः ॥ २. ५५ ॥

एवं लक्ष्मीं च प्रददौ तुष्टो नारायणाय च।
स जगाम च वैकुण्ठं ताभ्यां सार्धं जगत्पतिः ॥ २. ५७ ॥

एतस्मिन्नन्तरे विप्र सहसा कृष्णदेवता।
आविर्बभूव दुर्गा सा विष्णुमाया सनातनी ॥ २. ६३ ॥

2.53. வெள்ளையாடை உடுத்து, வீணையும் புஸ்தகமும் கைகளில் கொண்டு ரத்னங்களாலான ஆபரணங்களாலலங் கரிக்கப் பெற்று விளங்கிய அவள் எல்லா சாஸ்திரங்களுக்கும் அதிதேவதை.

2.54. சிறிது காலத்திற்குப் பின் அவளும் இரண்டு ரூபமாகப் பிரிந்தாள். அவளுடைய அங்கத்தின் இடது பாதி கமலா எனும் லக்ஷ்மியாகவும், வலது பாதி ராதிகையாகவும் ஆயின.

2.55. அதற்கிடையில் கிருஷ்ணனும் இரண்டாகப் பிரியவே, அவ்வலது பாதி உருவம் இருகைகளுடன் கூடிய தாகவும் இடது பாதி உருவம் நான்கு கைகளுடன் கூடிய தாகவும் விளங்கின.

2.57. லக்ஷ்மியை (கிருஷ்ண பரமாத்மா) மகிழ்ச்சி யுடன் (நான்கு கை படைத்த) நாராயணருக்குக் கொடுத்தார்.

2.63. விப்ரரே! பிறகு வெகு சீக்கிரமே கிருஷ்ண னுடைய விஷ்ணுமாயையும் ஸநாதனமான கிருஷ்ண சக்திய மாகியவள் துர்க்கையாக ஆவிர்ப்பவித்தாள்.

देवीनां बीजरूपा च मूलप्रकृतिरीश्वरी ।
परिपूर्णतमा तेजः स्वरूपा त्रिगुणात्मिका ॥ २. ६६ ॥

सर्वैश्वर्यप्रदात्री च कामिनां गृहवासिनाम् ।
कृष्णभक्तिप्रदाया च वैष्णवानां च वैष्णवी ॥ २. ७० ॥

मुमुक्षूणां मोक्षदात्री सुखिनां सुखदायिनी ।
या च संसारवृक्षस्य बीजरूपा सनातनी ॥ २. ७५ ॥

एतस्मिन्नन्तरे तत्र सस्त्रीकश्च चतुर्मुखः ।
पद्मनाभेर्नाभिपद्मान्निस्ससार महामुने ॥ २. ७८ ॥

एतस्मिन्नन्तरे कृष्णो द्विधारूपो बभूव सः ।
वामाऽर्धांगो महादेवो दक्षिणे गोपिकापतिः ॥ २. ८२ ॥

2.66. மூலப் பிரகிருதியும் ஈசுவரியுமான அவள் தேவிகளுக்கு வித்துப் போன்றவள்; பரிபூர்ண வடிவங்களுள் சிறந்தவள். தேஜோரூபிணீ; முக்குண வடிவானவள்.

2.70. காமிகளாகிய கிருஹஸ்தாசிரமிகளுக்கு எல்லா ஐசுவரியத்தையும் அளிப்பவள்; கிருஷ்ணபக்தியைக் கொடுப்பவளாயும் வைஷ்ணவர்களுக்கு வைஷ்ணவியாயும் இருப்பவள்.

2.75. முமுக்ஷுக்களுக்கு மோக்ஷமளிப்பவள்; சுகத்தை நாடுபவர்களுக்குச் சுகத்தையளிப்பவள்; ஸம்ஸாரமாகிற விருக்ஷத்திற்கு அனாதியான வித்தாயிருப்பவள்.

2.78. மகாமுனிவரே! துர்க்கை தோன்றிய பின், பத்மநாபருடைய நாபிக் கமலத்திலிருந்து பத்னியுடன் நான்முகப் பிரம்மா வெளிப் போந்தார்.

2.82. பின்பு மறுபடியும் கிருஷ்ணன் இரண்டு ரூபமாகி இடது பாதியில் மஹாதேவராகவும் வலது பாதியில் கோபிகாபதியாகவும் தோன்றினார்.

दिगम्बरो नीलकण्ठः सर्वभूषणभूषितः।
विभ्रद्दक्षिणहस्तेन रत्नमालां सुसंकृताम् ॥ २. ८५ ॥

संस्तूय मृत्योर्मत्यु तं यतो मृत्युंजयाभिधः।
रत्नसिंहासने रम्ये समुवास हरेः पुरः ॥ २. ८८ ॥

गणेशजननी दुर्गा राधा लक्ष्मीः सरस्वती।
सावित्री च सृष्टिविधौ प्रकृतिः पंचधा स्मृता ॥ ४. ४ ॥

आसां पूजा प्रसिद्धा च प्रभावः परमाद्भुतः।
सुधोपमं च चरितं सर्वमंगलकारणम् ॥ ४. ५ ॥

आदौ सरस्वतीपूजा श्रीकृष्णेन विनिर्मिता।
यत्प्रसादान्मुनिश्रेष्ठ मूर्खो भवति पण्डितः ॥ ४. १० ॥

2.85—88. மஹாதேவர் திசைகளையே ஆடையாயுடையவராயும், கண்டம் கருத்தவராயும், எல்லா ஆபரணங்களாலும் அலங்கரிக்கப் பெற்றவராயும், வலது கையில் சிறந்த ரத்ன மாலை உடையவராயும், மிருத்யுஞ்ஜயர் எனப் பெயர் பெற்ற தாம் எவரிடமிருந்து உண்டானரோ அந்த மிருத்யுவுக்கும் மிருத்யுவான கிருஷ்ணபகவானைத் துதிப்பவராய் அவர் முன்னிலையில் (அவரளித்த) அழகிய ரத்ன சிம்மாஸனத்தில் அமர்ந்தார்.

4.4. பிரகிருதியானவள் சிருஷ்டிகாலத்தில் கணேச ஜனனியாகிய துர்க்கை, ராதா, லக்ஷ்மீ, ஸரஸ்வதீ, ஸாவித்ரீ என ஐந்து வடிவுடையவளாகக் கூறப்படுகிருள்.

4.5. இவர்களுடைய பூஜை பிரசித்தமானது; பிரபாவம் பரம அற்புதமானது; சரிதம் அமிருதம் போன்றது; எல்லா மங்களங்களுக்கும் காரணமாயிருப்பது.

4.10. ஆதியில் ஸரஸ்வதி பூஜை ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவால் ஏற்படுத்தப்பட்டது. முனி சிரேஷ்டரே! அவளுடைய அருளால் முட்டாளும் பண்டிதனுகிருன்.

ततस्तत्पूजनं चक्रु-र्ब्रह्मविष्णुशिवादयः ।
बभूव पूजिता नित्या सर्वलोकैः सरस्वती ॥ ४. २६ ॥

सरस्वती चतुर्थ्यन्तं वह्निजायान्तमेव च ।
लक्ष्मी मायादिकं चैव मन्त्रोऽयं कल्पपादपः ॥ ४. ५२ ॥

सावित्री वेदमाता च वेदाधिष्ठातृदेवता ।
पूज्या द्विजानां वेदज्ञा यज्ज्ञानाद्यस्य सेवया ॥
सर्वस्तुता च सर्वज्ञा सर्वदुर्गार्तिनाशिनी ॥ ८. ८८ ॥

कृष्णवामांशसंभूता कृष्णप्राणाधिदेवता ॥
कृष्णप्राणाधिका प्रेम्णा राधिका शक्तिसेवया ।
सर्वाधिकं च रूपं च सौभाग्यं मानगौरवे ॥ ८. ६३. ॥

4.29. அதன் பின் பிரம்மா, விஷ்ணு, சிவன் முதலியோர் அப்பூஜையைச் செய்தனர். உலகனைத்தாலும் ஸரஸ்வதி எப்பொழுதும் பூஜிக்கப்பெற்றவளானுள்.

4.52. (ஸரஸ்வத்யை என்ற) நாலாவது வேற்றுமை உருபுடன் (ஸ்வாஹா என்ற) அக்னிபத்னியின் பெயரை முடிவில் சேர்த்து (ஸ்ரீம் ஹ்ரீம் என்ற) லக்ஷ்மீ மாயா பீஜங்களை முதலில் வைத்துத் தோன்றும் 'ஸ்ரீம் ஹ்ரீம் ஸரஸ்வத்யை ஸ்வாஹா' என்ற இம்மந்திரம் கற்பக விருக்ஷம் போல் வேண்டுவோர் வேண்டுவதையளிப்பதாகும்.

8.88. வேதமாதாவாயும் வேதத்திற்கு அதிஷ்டான தேவதையாயும் உள்ளவள் ஸாவித்ரீ. அவளுடைய ஞானத்தாலும் சேவையாலும் வேதத்தையறிந்தவர்களாகும் துவிஜர்களால் அவள் பூஜித்தற்குரியவள். எல்லோராலும் துதிக்கப் பெறுபவள். எல்லாமறிந்தவள். எல்லா துக்கங்களையும் நாசம் செய்பவள்.

8.93. கிருஷ்ணபரமாத்மாவின் இடது பாகத்தில் தோன்றியவளும், கிருஷ்ணருடைய பிராணனுக்கு அதிதேவதையும் கிருஷ்ணருக்குப் பிராணனைவிடப் பிரியத்தில் அதிகமாக உள்ளவள் ராதிகா தேவி. சக்திகளால் சேவிக்கப் பெற்று ரூபத்திலும் ஸௌபாக்கியத்திலும், வெகுமானத்திலும் கௌரவத்திலும் எல்லாச் சக்திகளுக்கும் மேலாக விளங்குபவள்.

आदौ च पृथिवी देवी वराहेण च पूजिता ।
ततो हि ब्रह्मणा पश्चात् पूजिता पृथिवी तदा ॥ ९. ४७ ॥

ध्यानं च स्तवनं मन्त्रं शृणु वक्ष्यामि नारद ।
ओं ह्रीं श्रीं क्लीं वसुधायै स्वाहेत्यनेन
मन्त्रेण विष्णुना पूजिता पुरा ॥ ९. ४८ ॥

॥ गंगावरणम् ॥

तपश्चकाराऽसमंजो गंगानयनकारणात् ।
लक्षवर्षं तपस्तप्त्वा ममार कालयोगतः ॥ ११. ११ ॥

अंशुमांस्तस्य तनयो गंगानयनकारणात् ।
तपः कृत्वा लक्षवर्षं ममार कालयोगतः ॥ ११. १२ ॥

9.47. ஆதியில் பூதேவியானவள் வராஹாவதார மெடுத்த விஷ்ணுவால் பூஜிக்கப்பட்டாள். பிறகு பிரம்மாவால் பூஜிக்கப்பட்டாள்.

9.48. நாரதரே! அவளுடைய தியானத்திற்கும் துதிக்கும் உரித்தான மந்திரத்தைக் கூறுகிறேன் கேளும். அது 'ஓம் ஹ்ரீம் ஸ்ரீம் க்லீம் வஸுதாயை ஸ்வாஹா' என்பது. இந்த மந்திரத்தால் தான் விஷ்ணுவால் அவள் முன்பு பூஜிக்கப்பட்டாள்.

கங்காவதரணம்

11.11. கங்கையைக் கொண்டு வருவதற்காக அஸமஞ்ஜன் தவஞ் செய்தான். நெடுங்காலம் (லக்ஷ வருஷம்) தவஞ் செய்து கால யோகத்தால் இறந்தான்.

11.12. அவனுடைய புத்திரன் அம்சுமானும் கங்கையைக் கொணரத் தவஞ் செய்து (லக்ஷ வருஷம்) நெடுங் காலந் தவஞ் செய்து கால யோகத்தால் இறந்தான்.

भगीरथस्तस्य पुत्रो महाभागवतः सुधीः ।
वैष्णवो विष्णुभक्तश्च गुणवानजरामरः ।। ११. १३ ।।

तपः कृत्वा लक्षवर्षं गंगानयनकारणात् ।
ददर्श कृष्णं ग्रीष्मस्थसूर्यकोटिसमप्रभम् ।। ११. १४ ।।

द्विभुजं मुरलीहस्तं किशोरं गोपवेषिणम् ।
गोपालसुन्दरीरूपं भक्तानुग्रहरूपिणम् ।। ११. १५ ।।

तुष्टाव दृष्ट्वा नृपतिः प्रणम्य च पुनः पुनः ।
लीलया च वरं प्राप वांछितं वंशतारणम् ।। ११. १७ ।।

श्री भगवानुवाच —

भारतं भारती शापाद् गच्छ शीघ्रं सुरेश्वरि ।
सगरस्य सुतान् सर्वान् पूतान् कुरु ममाज्ञया ।। ११. १८ ।।

11.13. அவனுடைய புத்திரன் பகீரதன் மகாபாகவதன், சிறந்த புத்திமான், வைஷ்ணவன், விஷ்ணுபக்தன், குணவான், மூப்பும் மரணமுமில்லாத தேவனைப் போன்றவன்.

11.14. நெடுங்காலம் (லக்ஷ வருஷம்) கங்கையைக் கொண்டுவரத் தவஞ் செய்து, கிரீஷ்ம ருதுவில் கோடி சூரியனைப் போன்ற பிரகாசமுடைய கிருஷ்ணனை தரிசித்தான்.

11.15. இரண்டு புஜங்களும் கையில் புல்லாங்குழலும் கோப வேஷமும் கோபாலஸுந்தரீ ரூபமும் உடைய பால வடிவில் பக்தர்களுக்கு அருள் புரியும் (பகவானைக் கண்டான்).

11.17. கண்டதும் அரசன் மீண்டும் மீண்டும் நமஸ்கரித்துத் துதித்தான். குலத்தை கரையேற்றுவதற்குத் தான் விரும்பிய வரத்தை எளிதில் பெற்றான்.

ஸ்ரீபகவான் (கங்கையை நோக்கி) கூறியது—

11.18. தேவர்கள் நாயகியே! ஸரஸ்வதியின் சாபத்தால் நீ சீக்கிரமே பாரத பூமிக்குப் போக வேண்டும். எனது கட்டளையால் ஸகரசக்ரவர்த்தியின் புத்திரர்கள் அனைவரையும் பரிசுத்தர்களாகச் செய்யவேண்டும்.

कोटिजन्मार्जितं पापं भारते यत्कृतं नृभिः ।
गंगाया वातस्पर्शेन नश्यतीति श्रुतौ श्रुतम् ॥ ११. २३ ॥

गंगोवाच —

यामि चेभाद्ररतं नाथ भारतीशापतः पुरा ।
तवाज्ञया च राजेन्द्र तपसा चैव साम्प्रतम् ॥ ११. ३९ ॥

दास्यन्ति पापिनो मह्यं पापानि यानि कानि च ।
तानि मे केन नश्यन्ति तमुपायं वद प्रभो ॥ ११. ४० ॥

श्रीभगवानुवाच —

जानामि वांछितं गंगे तव सर्वं सुरेश्वरि ।
पतिस्ते द्रवरूपाया लवणोदो भविष्यति ॥ ११. ४१ ॥

11.23. பாரத பூமியில் மனிதர்களால் கோடிப் பிறவி களில் செய்து கூடியிருக்கும் பாவம் கங்கையின் காற்றுப் பட்ட மாத்திரத்தில் நாசமாகும் என்று வேதத்தில் கேட்கப் படுகிறது.

கங்கை கூறியது—

11.39–40. நாதா ! முந்தியேற்பட்ட ஸரஸ்வதி சாபத்தாலும் அரச சிரேஷ்டருடைய தவத்தாலும், உங்களுடைய கட்டளையாலும் நான் இப்பொழுது பாரத நாட்டிற்குச் செல்வேனேயானல் பாவிகள் என்னென்ன பாவங்கள் உண்டோ அவற்றை என்னிடம் அளிப்பார்கள். பிரபுவே ! அவை என்னிடம் எதனல் அழியும் என்ற உபாயத்தைக் கூறியருளும்.

ஸ்ரீபகவான் கூறியது—

11.41. தேவர்கள் நாயகியான கங்கையே ! உனது விருப்பமனைத்தையும் நான் அறிவேன். உப்புக்கடல் நீர் வடிவில் உன் பதியாகப்போகிறது.

स ममांशस्वरूपश्च त्वं च लक्ष्मीस्वरूपिणी ।
नित्यं त्वमब्धिना सार्धं करिष्यसि रहो रतिम् ॥ ११. ४६ ॥

सहस्रपापिनां स्नानाद्यत्पापं ते भविष्यति ।
प्रकृतेर्भक्तसंस्पर्शादेव तद्धि विनंक्ष्यति ॥ ११. ६० ॥

भगीरथस्तां तुष्टाव पुजयामास भक्तितः ।
प्रणनाम च श्रीकृष्णं परमात्मान-मीश्वरम् ॥ ११. ६९ ॥

संपूज्य देव-षट्कं च संयतो भक्तिपूर्वकम् ।
गणेशं च दिनेशं च वह्नि विष्णुं शिवं शिवाम् ॥ ११. ७२ ॥

संपूज्य देवषट्कं च सोऽधिकारी च पूजने ।
गणेशं विघ्ननाशाय आरोग्याय दिवाकरम् ॥ ११. ७३ ॥

वह्निं शौचाय विष्णुं च लक्ष्म्यर्थं पूजयेन्नरः ।
शिवं ज्ञानाय ज्ञानेशं शिवां च मुक्तिसिद्धये ॥ ११. ७४ ॥

11.46. அக்கடல் என்னுடைய அம்சஸ்வரூபம்; நீ லக்ஷ்மீ ஸ்வரூபிணீ. நீ கடலுடன் ரகசியத்தில் கூடி எப்பொழுதும் மகிழ்ந்திருப்பாய்.

11.50. ஆயிரம் பாவிகளின் ஸ்நானத்தால் எந்தப் பாவம் உனக்கு ஏற்படுகிறதோ அது நிச்சயமாகப் பரா பிரகிருதியின் பக்தனுடைய ஸ்பர்சத்தால் நாசமடையும்.

11.69. பகீரதன் அந்தப் பராசக்தியைத் துதித்தான். பக்தியுடன் பூஜித்தான்; பரமாத்மாவும் ஈசுவரனுமான ஸ்ரீகிருஷ்ணனே வணங்கினான்.

11.72–74. பக்தியினால் மனதையடக்கி, கணேசன், சூரியன், அக்னி, விஷ்ணு, சிவன், சக்தி ஆகிய ஆறு தெய்வங்களையும் நன்கு பூஜித்து, அங்ஙனம் ஆறு தெய்வங்களையும் நன்கு பூஜித்ததால் பூஜையில் அவன் அதிகாரியானான். கணேசனை விக்னங்கள் ஒழியவும், சூரியனை ஆரோக்கியத்திற்காகவும் அக்னியைப் பரிசுத்தத்திற்காகவும், விஷ்ணுவைச் செல்வத்திற்காகவும், ஞானேசுவரனான சிவனை ஞானத்திற்காகவும், சக்தியை முக்தி எய்தவும் மனிதன் பூஜிக்க வேண்டும்.

श्री नारायण उवाच—

शिवसंगीतसम्मुग्ध-श्रीकृष्णांग-समुद्भवाम् ।
राधांगद्रव संयुक्तां तां गंगां प्रणमाम्यहम् ॥ १२. १८ ॥

यज्जन्म सृष्टेरादौ च गोलोके रासमण्डले ।
सन्निधाने शंकरस्य तां गंगां प्रणमाम्यहम् ॥ १२. १६ ॥

यत्तोय-कणिकास्पर्शे पापिनां ज्ञानसम्भवम् ।
ब्रह्महत्यादिकं पापं कोटिजन्मार्जितं दहेत् ॥ १२. ३७ ॥

स्तोत्रेणानेन गंगां च स्तुत्वा चैव भगीरथः ।
जगाम गां गृहीत्वा च यत्र नष्टाश्च सागराः ॥ १२. ४२ ॥

ஸ்ரீ நாராயணர் கூறியது (கங்காஸ்துதி)—

12.18. ஒரு சமயம் சிவனுடைய ஸங்கீதத்தைக் கேட்டு மோகமடைந்த ஸ்ரீ கிருஷ்ணனுடைய உடலிலிருந்து தோன்றியவளும் ராதையின் உடலினின்றுதித்த திரவத்துடன் கலந்தவளும் ஆகிய அந்த கங்கையை நான் நமஸ்கரிக்கிறேன்.

12.19. சிருஷ்டியின் ஆதியில் கோலோகத்தில் ராஸ மண்டலத்தில் சங்கரருடைய ஸந்நிதானத்தில் தோன்றியவள் எவளோ அந்த கங்கையை நான் நமஸ்கரிக்கிறேன்.

12.37. எந்த தீர்த்தத்தின் ஒரு திவலையைத் தொட்ட மாத்திரத்தில் பாவிகளுக்கும் ஞானமுண்டாகுமோ கோடிப் பிறவிகளில் கூடிய பிரம்மஹத்தி முதலிய பாவம் எரிந்து போகுமோ அந்த கங்கையை நான் நமஸ்கரிக்கிறேன்.

12.42 இந்த ஸ்தோத்திரத்தால் கங்கையைத் துதித்து விட்டு பகீரதன் கங்கையை அழைத்துக் கொண்டு பூமியில் எந்த இடத்தில் ஸகரபுத்திரர்கள் நஷ்டமானூர்களோ அங்கு சென்றுன்.

वैकुण्ठं ते ययुस्तूर्णं गंगायाः स्पर्शवायुना ।
भगीरथेन सा नीता तेन भागीरथी स्मृता ॥ १२.४३ ॥

नारद उवाच —

केनोपायेन सा देवी विष्णुपादाब्जसम्भवा ।
ब्रह्मकमण्डलुस्था च श्रुता शिवप्रिया च सा ॥ १३. ५ ॥
बभूव सा मुनिश्रेष्ठ गंगा नारायणप्रिया ।
अहो केन प्रकारेण तन्मे व्याख्यातुमर्हसि ॥ १३. ६ ॥

श्रीनारायण उवाच —

पुरा बभूव गोलोके सा गंगा द्रवरूपिणी ।
राधाकृष्णांगसंभूता तदंशा तत्स्वरूपिणी ॥ १३. ७ ॥

12.43 கங்கையில் பட்டு வீசிய காற்ருலேயே அவர்கள் விரைவில் வைகுண்ட மெய்தினர். பகீரதனுல் அழைத்து வரப்பட்டதால் கங்கைக்கு பாகிரதி எனப் பெயர் ஏற்பட்டது.

நாரதர் கூறியது—

13.5–6. முனிசிரேஷ்டரே! அந்த கங்கா தேவி விஷ்ணுவின் பாதகமலத்தில் தோன்றியவளாக ஆனது எப்படி? பிரம்மாவின் கமண்டுலுவில் இருந்ததாகவும் அவள் கூறப்படுகிருள். சிவனுக்குப் பிரியமானவளாகவும் நாராயணனுக்குப் பிரியமானவளாகவும் ஆகியவள் கங்கை. இது எவ்வாறென்று விளக்கிக் கூறியருளும்.

ஸ்ரீ நாராயணரிஷி கூறியது—

13.7. ஆதியில் கோலோகத்தில் ராதாகிருஷ்ண அங்கங்களிலிருந்து அம்சஸ்வரூபிணியாய் நீர்வடிவில் அவள் தோன்றினுள்.

द्रवाधिष्ठातृ देवी या रूपेणाऽप्रतिमा भुवि ।
नवयौवनसम्पन्ना सर्वाऽऽभरणभूषिता ।।
सा सकामा कृष्णपार्श्वे समुवास सुलज्जिता ।। १३. ८ ।।

राधोवाच —

केयं प्राणेश कल्याणी सस्मिता त्वन्मुखाम्बुजम् ।
पश्यन्ती सस्मितं पार्श्वे सकामा वक्रलोचना ।। १३. ४१ ।।

नारायण उवाच —

इत्येवमुक्त्वा सा राधा रक्तपंकजलोचना ।
गंगां वक्तुं समारेभे नम्रास्यां लज्जितां सतीम् ।। १३. ७९ ।।

गंगा रहस्यं विज्ञाय योगेन सिद्धयोगिनी ।
तिरोभूय सभामध्ये स्वजलं प्रविवेश सा ।। १३. ८० ।।

13.8. ஜலத்தின் அதிஷ்டமான தேவதையாகவும் உலகில் ஒப்பற்ற அழகுடையவளாகவும் பரிபூர்ண யௌவனம் மிளிர்பவளாகவும், எல்லா ஆபரணங்களும் அணிந்தவளாகவும், காமம் உடையவளாகவும் அவள் உருக்கொண்டு வெட்கத்துடன் கிருஷ்ணனுடைய சமீபத்திலிருந்தாள்.

ராதை கூறியது—

13.41. பிராணநாதரே! இவ்வழகி யார்? புன்முறுவலுடன் உமது முககமலத்தையே பார்த்துக் கொண்டிருக்கிறுள். குறுக்குப் பார்வையுடனும் காமத்துடனும் சிரித்துக் கொண்டு பக்கத்தில் நிற்கிறுள்.

நாராயணரிஷி கூறியது—

13.79. இப்படி கூறிவிட்டுக் கண் சிவந்தவளாய் அந்த ராதை வெட்கத்துடன் தலைகுனிந்து நிற்கும் ஸாதுவான கங்கையைப் பார்த்துப் பேச ஆரம்பித்தாள்.

13.80. ஸித்தயோகினியும் ரகசியத்தை உணர்ந்தவளுமான கங்கை சபையின் மத்தியினின்று மறைந்து தன்னுடைய பிரகிருதியான ஜலத்தில் புகுந்தாள்.

राधा योगेन विज्ञाय सर्वत्रावस्थितां च ताम् ।
पानं कर्तुं समारेभे गण्डूषात् सिद्धयोगिनी ॥ १३. ८१ ॥

गंगा रहस्यं विज्ञाय योगेन सिद्धयोगिनी ।
श्रीकृष्णचरणांभोजे विवेश शरणं ययौ ॥ १३. ८२ ॥

गोलोके सा च वैकुण्ठे ब्रह्मलोकादिके तथा ।
ददर्श राधा सर्वत्र नैव गंगां ददर्श सा ॥ १३. ८३ ॥

सर्वत्र जलशून्यं च शुष्कपंकं च गोलकम् ।
जलजन्तुसमूहैश्च मृतदेहैः समन्वितम् ॥ १३. ८४ ॥

ब्रह्मविष्णुशिवानन्त-धर्मेन्द्रेन्दु-दिवाकराः ।
मनवो मुनयः सर्वे देवसिद्ध-तपस्विनः ॥ १३. ८५ ॥

गोलोकं च समाजग्मुः शुष्ककण्ठोष्ठतालुकाः ।
सर्वे प्रणेमुर्गोविन्दं सर्वेशं प्रकृतेः परम् ॥ १३. ८६ ॥

13.81. ராதையும் ஸித்தயோகினியாகையால் யோகத்தால் அதையுணர்ந்து எங்கும் வியாபித்து நிற்கும் அந்த கங்கையை வாயில் அடக்கிப் பானம் செய்யத் தொடங்கினாள்.

13.82. அந்த ரகசியத்தை யோகத்தாலுணர்ந்த ஸித்தயோகினியான கங்கை ஸ்ரீகிருஷ்ணருடைய திருவடித் தாமரையில் சரண் புகுந்தாள்.

13.83. கோலோகத்திலும் வைகுண்டத்திலும் பிரம்ம லோகத்திலும் ராதை தேடிப் பார்த்தாள்; கங்கையைக் காணவேயில்லை.

13.84. எங்கும் ஜலமே இல்லாமலும் பூமியில் சேர் உலர்ந்தும் நீர்வாழும் பிராணிக் கூட்டங்களின் செத்த உடல்கள் நிறைந்ததாகவும் இருந்தது.

13.85–86. பிரம்மா, விஷ்ணு, சிவன், அனந்தன், தர்மன், இந்திரன், சந்திரன், சூரியன், மனுக்கள், முனிவர்கள், தேவர்கள், சித்தர்கள், தபஸ்விகள் எல்லோரும் தொண்டையும் உதடும் தாடையும் உலர்ந்தவர்களாய் கோலோகம் வந்து சேர்ந்தனர். பிரகிருதிக்கும் அப்பாற்பட்ட ஸர்வேசுவரனை கோவிந்தனை எல்லோரும் நமஸ்கரித்தனர்.

राधारूपधरं कृष्णं कृष्णरूपं कलत्रकम्।
किं स्त्रीरूपं च पुरुषं विधाता ध्यातुमक्षमः ॥ १३. १०४ ॥
हृत्पद्मस्थं श्रीकृष्णं ध्यात्वा ध्यानेन चक्षुषा।
चकार स्तवनं भक्त्या परिहारमनेकधा ॥ १३. १०५ ॥
ततः स्वचक्षुरुन्मील्य पुनश्च तदनुज्ञया।
ददर्श कृष्णमेकं च राधा वक्षःस्थलस्थितम् ॥ १३. १०६ ॥
स्वपार्षदैः परिवृतं गोपीमण्डलमण्डितम्।
पुनः प्रणेमुस्तं दृष्ट्वा तुष्टुवुः परमेश्वरम् ॥ १३. १०८ ॥
तदभिप्रायमाज्ञाय तानुवाच रमेश्वरः।
सर्वात्मा स च सर्वज्ञः सर्वेशः सर्वभावनः ॥ १३. १०९ ॥

13.104. அது ராதாரூபியான கிருஷ்ணனு அல்லது கிருஷ்ணரூபியான கிருஷ்ணன் மனைவி ராதையா, ஸ்திரீ ரூபமா, புருஷரூபமா என்று பிரம்மா அறிந்து கொள்ள முடியவில்லை.

13.105. இருதயகமலத்தில் தியானமாகிற கண்ணுல் ஸ்ரீகிருஷ்ணனை தியானித்துப் பல வகையில் (தனது மதி மயக்கத்திற்கு) பரிகாரம் தேடி பக்தியுடன் துதி செய்தார்.

13.106. பிறகு தமது கண்ணைத் திறந்து பகவானுடைய அருளால் ராதையின் மார்பகத்தில் எழுந்தருளியிருந்த ஒருவராகிய கிருஷ்ணனைக் கண்டார்.

13.108. பின்பு தமது பாரிஷதர்களால் சூழப் பெற்று கோபியர் மண்டலத்திடை விளங்குபவராகவும் கண்டு அந்தப் பரமேசுவரனை மீண்டும் துதித்தார்.

13.109. அவர்களுடைய நோக்கத்தையறிந்தவரும் ஸர்வாத்மாவும் ஸர்வக்ஞரும் ஸர்வேசுவரரும் ஸர்வபாவன ருமான ஸ்ரீகிருஷ்ணன் அவர்களை நோக்கிப் பின்வருமாறு கூறினுர்.

श्रीभगवानुवाच —

आगच्छ कुशलं ब्रह्मन् आगच्छ कमलापते।
इहागच्छ महादेव शश्वत्कुशलमस्तु वः ॥ १३. ११० ॥

आगता हि महाभाग गंगानयनकारणात्।
गंगा च चरणाम्भोजे भयेन शरणं गता ॥ १३. १११ ॥

राधेमां पातुमिच्छन्ती दृष्ट्वा मत्सन्निधानतः।
दास्यामीमां च भवतां यूयं कुरुत निर्भयाम् ॥ १३. ११२ ॥

श्रीकृष्णस्य वचः श्रुत्वा सस्मितः कमलोद्भवः।
तुष्टाव राधामाराध्यां श्रीकृष्णपरिपूजिताम् ॥ १३. ११३ ॥

13.110. பிரம்மாவே வாரும். க்ஷேமமா? கமலாபதியே வாரும். மஹாதேவரே இங்கே எழுந்தருளும். எப்பொழுதும் உங்களுக்கு க்ஷேமம் உண்டாகட்டும்.

13.111. மகாபாக்கியசாலிகளே! நீங்கள் கங்கையை அழைத்துச் செல்லும்பொருட்டு வந்திருக்கிறீர்கள். கங்கை பயத்தால் என் பாதகமலத்தில் சரண்புகுந்துள்ளாள்.

13.112. ராதை என் முன் இவளைக் கண்டு எடுத்துப் பருகிவிட விரும்புகிறாள். நான் உங்களுக்கு அவளைத் தருகிறேன். அவள் பயம் நீங்கும்படி நீங்கள் செய்யுங்கள்.

13.113. ஸ்ரீகிருஷ்ணனுடைய வார்த்தையைக் கேட்டு பிரம்மா கிருஷ்ணனால் பரிவுடன் பூஜிக்கப்பட்டவளும் ஆராதனைக்குரியவளுமான ராதையைத் துதித்தார்.

चतुरानन उवाच —

गंगा त्वदंगसम्भूता प्रभोश्च रासमण्डले।
युवयोर्द्रवरूपा सा मुग्धयोः शंकरस्वनात् ॥ १३.११५ ॥

कृष्णांशा च त्वदंशा च त्वत्कन्यासदृशी प्रिया।
त्वन्मन्त्रग्रहणं कृत्वा करोतु तव पूजनम् ॥ १३.११६ ॥

भविष्यति पतिस्तस्या वैकुण्ठेशश्चतुर्भुजः।
भूस्थाया कलया तस्याः पतिर्लवणवारिधिः ॥ १३.११७ ॥

नारायण उवाच —

ब्रह्मणो वचनं श्रुत्वा स्वीचकार च सस्मिता।
बहिर्बभूव सा कृष्णपादांगुष्ठनखाग्रतः ॥ १३.११८ ॥

நான்முகப்பிரம்மா கூறியது—

13.115. ராஸமண்டலத்தில் பிரபுவிடமிருந்தும் உனதங்கத்திலிருந்தும் தோன்றியவள் கங்கை. சங்கரருடைய ஸங்கீதத்தைக் கேட்டு மயங்கிய உங்களிடமிருந்து ஜலரூபமாய் உதித்தவள்.

13.116. கிருஷ்ணனுடைய அம்சமாயும் உன்னுடைய அம்சமாயும் உதித்த அவள் உனது பிரியமான பெண் போன்றவள். உன் மந்திரத்தை ஏற்று உன்னுடைய பூஜையை அவள் செய்யட்டும்.

13.117. நான்கு புஜங்களுடன் விளங்கும் வைகுண்ட நாதர் அவளுக்குப் பதியாவார். பூமியில் தனது அம்சத்தில் இருக்கும் பொழுது ஸமுத்திரராஜன் அவளுக்குப்பதியாவார்.

நாராயணரிஷி கூறியது—

13.118. பிரம்மாவின் வார்த்தையைக் கேட்டுப் புன்முறுவலுடன் அதை (ராதை) ஏற்றுக் கொண்டாள். அப்பொழுது கங்கை கிருஷ்ணனுடைய கால் கட்டைவிரல் நுனியிலிருந்து வெளிப்போந்தாள்.

तत्रैव सत्कृता शान्ता तस्थौ तेषां च मध्यतः।
उवास तोयादुत्थाय तदधिष्ठातृदेवता ॥ १३. ११९ ॥

तत्तोयं ब्रह्मणा किंचित्स्थापितं च कमण्डलौ।
किंचिद्दधार शिरसि चन्द्रार्धकृतशेखरः ॥ १३. १२१ ॥

गंगायै राधिकामन्त्रं प्रददौ कमलोद्भवः।
तत्स्तोत्रं कवचं पूजां विधानं ध्यानमेव च ॥ १३. १२२ ॥

सर्वं तत्सामवेदोक्तं पुरश्चर्याक्रमं तथा।
गंगा तामेव संपूज्य वैकुण्ठं प्रययौ सह ॥ १३. १२३ ॥

लक्ष्मी सरस्वती गंगा तुलसी विश्वपावनी।
एता नारायणस्यैव चतस्रो योषितो मुने ॥ १३. १२४ ॥

अथ तं सस्मितः कृष्णो ब्रह्माणं समुवाच सः।
सर्वकालस्य वृत्तान्तं दुर्बोध्यमविपश्चितम् ॥ १३. १२५ ॥

13.119. சாந்தமானவளும் ஜலத்தின் அதிஷ்டான தேவதையுமான கங்காதேவி ஜலத்திலிருந்து அவர்கள் மத்தியில் உருக்கொண்டுதித்தவளாகி அவர்களால் பூஜிக்கப் பெற்று விளங்கினாள்.

13.121. அந்த கங்காஜலம் பிரம்மாவால் சிறிது தமது கமண்டலுவில் வைக்கப்பட்டது; அர்த்தசந்திரனைத் தலையில் வைத்த சிவன் அதில் சிறிதளவைத் தமது தலையில் வைத்துக் கொண்டார்.

13.122 பிரம்மா கங்காதேவிக்கு ராதிகா மந்திரத்தை அதற்குரிய ஸ்தோத்ரம், கவசம், பூஜாவிதானம், தியானம் முதலியவற்றையும் அளித்தார்.

13.123. அது முழுவதும் புரச்சரணக்கிரமத்துடன் ஸாமவேதத்தில் கூறப்பட்டுள்ளது. கங்கை ராதையைப் பூஜித்து வைகுண்டமேகினாள்.

13.124. முனிவரே! லக்ஷ்மி, ஸரஸ்வதி, கங்கை, உலகைப் புனிதமாக்கும் துளசி ஆகிய நால்வரும் நாராயணனுடைய சக்திகள்.

श्रीकृष्ण उवाच —

यूयं च येऽन्ये देवाश्च मुनयो मनवस्तथा ।
सिद्धा यशस्विनश्चैव ये येऽत्रैव समागताः ।। १३. १२७ ।।

एते जीवन्ति गोलोके कालचक्रविवर्जिते ।
जलप्लुते सर्वविश्वं जातं कल्पक्षयोऽधुना ।। १३. १२८ ।।

ब्रह्माद्या येऽन्यविश्वस्थास्ते विलीनाऽधुना मयि ।
वैकुण्ठं च विना सर्वं जलमग्नं च पद्मज ।। १३. १२९ ।।

गत्वा सृष्टिं कुरु पुनर्ब्रह्मलोकादिकं भवम् ।
स्वं ब्रह्माण्डं विरचय पश्चाद्गंगा प्रयास्यति ।। १३. १३० ।।

13.125. பிறகு கிருஷ்ணன் புன்முறுவலுடன் பிரம்மாவுக்கு அறிய முடியாததும் காணமுடியாததுமான காலமனைத்தினுடைய விருத்தாந்தத்தைக் கூறினார்.

ஸ்ரீகிருஷ்ணர் கூறியது—

13.127–8 நீரும் மற்ற தேவர்கள் எவர்களோ அவர்களும், முனிவர்களும், மனுக்களும், கீர்த்திவாய்ந்த சித்தர்களும், யார் யார் இங்கு வந்துள்ளார்களோ அவர்களெல்லாம் காலசக்கரத்திற்கப்பாற்பட்ட கோலோகத்தில் பிழைத்திருக்கின்றனர். இப்பொழுது கல்பம் முடிந்து உலகனைத்தும் பிரளயஜலத்தில் மூழ்கிய காலம்.

13.129. பிரம்மாவே! பிறவுலகங்களில் உள்ள பிரம்மா முதலியோர் இப்பொழுது என்னிடம் லயமடைந்துவிட்டனர். வைகுண்டம் நீங்கலாக எல்லாம் நீரில் முழுகிவிட்டது.

13.130. நீர் சென்று மீண்டும் பிரம்மலோகம் முதலியவற்றைச் சிருஷ்டி செய்யும். உம்முடைய பிரம்மாண்டத்தைக் கற்பனை செய்துகொள்ளும். பிறகு கங்கை வருவாள்.

एवमन्येषु विश्वेषु सृष्टौ ब्रह्मादिकं पुनः।
करोम्यहं पुनः सृष्टिं गच्छ शीघ्रं सुरैः सह ॥१३. १३१॥

गतो बहुतरः कालो युष्माकं च चतुर्मुखाः।
गताः कतिविधास्ते च भविष्यन्ति च वेधसः ॥१३. १३२॥

नारायण उवाच —

इत्युक्त्वा राधिकानाथो जगामान्तःपुरे मुने।
देवा गत्वा पुनः सृष्टिं चक्रुरेव प्रयत्नतः ॥१३. १३३॥

गोलोके च स्थिता गंगा वैकुण्ठे शिवलोकके।
ब्रह्मलोके स्थिताऽन्यत्र यत्र यत्र पुरः स्थिता ॥१३. १३४॥

तत्रैव सा गता गंगा चाज्ञया परमात्मनः।
निर्गता विष्णुपादाब्जात्तेन विष्णुपदी स्मृता ॥१३. १३५॥

13.131. அவ்வாறே பிற உலகங்களிலும் சிருஷ்டியின் பொருட்டு நான் பிரம்மா முதலியவர்களைப் பிறப்பிக்கிறேன். தேவர்களுடன் விரைவில் நீர் செல்லலாம்.

13.132. நான்முகப்பிரம்மாக்களே! உங்களுக்கு நெடுங்காலம் கழிந்து விட்டது. எத்தனையோ பிரம்மாக்கள் சென்றுவிட்டனர்; இன்னும் எத்தனையோ பேர் உண்டாகப் போகின்றனர்.

நாராயணரிஷி கூறியது—

13.133. முனிவரே! இவ்வாறு கூறிவிட்டு ராதிகா நாதர் அந்தப்புரம் சென்றார். தேவர்கள் சென்று மீண்டும் முயற்சியை மேற்கொண்டு சிருஷ்டியைச் செய்தனர்.

13.134–135. கங்கை கோலோகத்திலும் வைகுண்டத்திலும் சிவலோகத்திலும் பிரம்ம லோகத்திலும் இருக்கலானாள். மற்றும் வாசஸ்தலங்கள் எங்கெங்குண்டோ அங்கெல்லாம் பரமாத்மாவின் கட்டளையால் கங்கை சென்றாள். விஷ்ணுவின் பாதகமலத்தினின்று வெளிப் போந்தமையால் அவள் விஷ்ணுபதீ எனக் கூறப்படுகிறாள்.

इत्येवं कथितं ब्रह्मन् गंगोपाख्यान-मुत्तमम् ।
सुखदं मोक्षदं सारं किं भूयः श्रोतुमिच्छसि ॥ १३. १३६ ॥

॥ नाना मूर्तिरहस्यं समाप्तम् ॥

॥ इति श्रीदेवीभागवते नवमस्कन्धे त्रयोदशोऽध्यायः ॥

13.136. பிரம்மஸ்வரூபியே! இவ்வாறு உத்தமமான கங்கையின் வரலாறு உமக்குக் கூறப்பட்டது. இது சுகமளிப்பது, மோக்ஷமளிப்பது, ஸாரமானது. மேலே என்ன கேட்க விரும்புகிறீர்?

நாநா மூர்த்திரஹஸ்யம் முற்றும்.

இங்ஙனம் ஸ்ரீதேவீபாகவதத்தில் ஒன்பதாவது
ஸ்கந்தத்தில் பதின்மூன்றுவது
அத்தியாயம் முற்றும்.

॥ वेदवती—उपाख्यानम् ॥ ३७ ॥

नारायण उवाच —

कुशध्वजस्य पत्नी च देवी मालावती सती ।
सा सुषाव च कालेन कमलांशां सुतां सतीम् ॥ १६. ३ ॥

वेदध्वनिं सा चकार जातमात्रेण कन्यका ।
तस्मात् तां च वेदवतीं प्रवदन्ति मनीषिणः ॥ १६. ४ ॥

जातमात्रेण सुस्नाता जगाम तपसे वनम् ।
सर्वै-र्निषिद्धा यत्नेन नारायणपरायणा ॥ १६. ५ ॥

एकमन्वन्तरं चैव पुष्करे च तपस्विनी ।
अत्युग्रां च तपस्यां च लीलया हि चकार सा ॥ १६. ७ ॥

37. வேதவதீ உபாக்யானம்.

நாராயணரிஷி கூறியது—

16.3. குசத்வஜன் என்பவனுடைய பத்னி மாலாவதீ தேவி எனும் உத்தமி லக்ஷ்மியின் அம்சமாக உரியகாலத்தில் ஒரு பெண்ணைப் பெற்றாள்.

16.4. பிறந்தவுடனேயே அவள் வேதகோஷம் செய்தாள்; ஆகையால் அவளை ஞானவான்கள் வேதவதி எனக் கூறுகின்றனர்.

16.5. பிறந்தவுடனேயே நன்கு நீராடியவளாய்த் தவம் புரிய வனம் சென்றாள். எல்லோராலும் முயற்சியால் தடுக்கப்பட்டும் அவள் நாராயணனிடம் முழுமனதையும் வைத்தவளாய் (தவத்திற்கே சென்றாள்).

16.7. தபஸ்வினியாகிய அவள் விளையாட்டுப்போல் ஒரு மன்வந்தரகாலம் மிகக்கடுமையான தவத்தைப் புஷ்கரத்தில் செய்தாள்.

तथाऽपि पुष्टा न क्लिष्टा नवयौवनसंयुता ।
शुश्राव सा च सहसा सुवाच-मशरीरिणीम् ॥ १६. ८ ॥

जन्मान्तरे च ते भर्ता भविष्यति हरिः स्वयम् ।
ब्रह्मादिभि-र्दुराराध्यं पतिं लप्स्यसि सुन्दरि ॥ १६. ९ ॥

इति श्रुत्वा च सा हृष्टा चकार ह पुनस्तपः ।
अतीव निर्जनस्थाने पर्वते गन्धमादने ॥ १६. १० ॥

तत्रैव सुचिरं तप्त्वा विश्वस्य समुवास सा ।
ददर्श पुरतस्तत्र रावणं दुर्निवारणम् ॥ १६. ११ ॥

दृष्ट्वा साऽतिथिभक्त्या च पाद्यं तस्मै ददौ किल ।
सुस्वादभूतं च फलं जलं चापि सुशीतलम् ॥ १६. १२ ॥

16.8. அப்படிச் செய்தும் அவள் கிலேசமின்றி புஷ்டியாகப் புதிய யௌவனத்துடன் கூடியிருந்தாள். ஒரு சமயம் திடீரென அழகியதொரு அசரீரி வாக்கைக் கேட்டாள்.

16.9. 'சுந்தரி! இன்னெரு பிறவியில் பகவான் ஹரியே உனக்கு பர்த்தா ஆவார். பிரம்மா முதலியவர்களுக்கும் ஆராதித்தற்கரிய அவரை நீ பதியாக அடையப் போகிருய்'.

16.10. இதைக் கேட்டு மகிழ்ச்சியுற்ற அவள் சிறிதும் ஜனசஞ்சாரமில்லாத இடத்தில் கந்தமாதன பர்வதத்தில் மீண்டும் தவம் செய்தாள்.

16.11. அங்கேயே நம்பிக்கையுடன் நீண்டகாலம் தவம் செய்து கொண்டிருக்கையில் ஒரு சமயம் தன்முன் அவ்விடத்தில் தடுக்க முடியாதவனுன ராவணனைக் கண்டாள்.

16.12. அவனைக் கண்டதும் அதிதி எனும் பக்தியால் அவனுக்கு பாத்யம் அளித்தாள். நல்ல தித்திப்பான பழமும் குளிர்ந்த தீர்த்தமும் கொடுத்தாள்.

तच्च भुक्त्वा स पापिष्ठश्चोवास तत्समीपतः।
चकार प्रश्नमिति तां का त्वं कल्याणि वर्तसे ॥ १६. १३ ॥

मूर्च्छामवाप कृपणः कामबाण-प्रपीडितः।
स करेण समाकृष्य शृंगारं कर्तुमुद्यतः ॥ १६. १५ ॥

सती चुकोप दृष्ट्वा तु स्तम्भितं च चकार ह।
स जडो हस्तपादैश्च किंचिद्वक्तुं न च क्षमः ॥ १६. १६ ॥

तुष्टाव मनसा देवीं प्रययौ पद्मलोचनाम्।
सा तुष्टा तस्य स्तवनं सुकृतं च चकार ह ॥ १६. १७ ॥

सा शशाप मदर्थे त्वं विनंक्ष्यसि सबान्धवः।
स्पृष्टाऽहं च त्वया कामाद् बलं चाप्यवलोकय ॥ १६. १८ ॥

इत्युक्त्वा सा च योगेन देहत्यागं चकार ह।
गंगायां तां च संन्यस्य स्वगृहं रावणो ययौ ॥ १६. १९ ॥

16.13. அந்தப் பாவி அதை உண்டுவிட்டுச் சமீபத்திலேயே இருந்தான். 'கல்யாணி! இங்கிருக்கும் நீ யார்' என்று அவளைக் கேட்டான்.

16.15. காமபாணத்தால் பீடிக்கப்பட்டு மனநொய்மையடைந்தவனாய் மதியிழந்து அவன் அவளைக் கையால் பிடித்திழுத்துக் காமச் செயல்களைப் புரிய முயன்றான்.

16.16. அதைக்கண்ட அந்நல்லாள் கோபமடைந்து அவனை அசையமுடியாமற் செய்துவிட்டாள். கையும் காலும் அசைவற்றுப் போன அவன் ஒரு சிறிதும் பேசக்கூட முடியவில்லை.

16.17. அவள் மனதால் பத்மலோசானியன தேவியை நாடி அவளைத் துதித்தாள். துதிக்கப்பெற்ற தேவி துதியை நற்பயனுடையதாக்கினாள்.

16.18–19. 'என்னை அவமதித்த காரணத்தால் நீ உன் சுற்றத்துடன் அழிந்து போவாய். காமத்துடன் என்னை நீ தொட்டதற்கு என்னுடைய பலத்தைப் பார்' என்று அவள் அவனிடம் கூறிவிட்டு யோகத்தால் உடலை நீத்துவிட்டாள். கங்கையில் அவளை விட்டு நீங்கி இராவணன் தன் வீடு சென்றான்.

अहो किमद्भुतं दृष्टं किं कृतं वाऽनयाऽधुना।
इति संचिन्त्य संचिन्त्य विललाप पुनः पुनः ॥ १६. २० ॥

सा च कालान्तरे साध्वी बभूव जनकात्मजा।
सीतादेवीति विख्याता यदर्थे रावणो हतः ॥ १६. २१ ॥

महातपस्विनी सा च तपसा पूर्वजन्मतः।
लेभे रामं च भर्तारं परिपूर्णतमं हरिम् ॥ १६. २२ ॥

जातिस्मरा न स्मरति तपसश्च क्लमं पुरा।
सुखेन तज्जहौ सर्वं दुःखं चापि सुखं फले ॥ १६. २४ ॥

पितुः सत्यपालनार्थं सत्यसन्धो रघूद्वहः।
जगाम काननं पश्चात्कालेन च बलीयसा ॥ १६. २७ ॥

16.20. 'நான் கண்டது என்ன ஆச்சரியம்! இவளால் இப்பொழுது என்ன செய்யப்பட்டது!' என்று எண்ணி எண்ணி மேலும் மேலும் அவன் புலம்பலானுன்.

16.21. அந்த நல்லாள் நாளடைவில் ஜனகருக்குப் புத்திரியாகத் தோன்றி சீதை எனும் பெயரால் பிரசித்தி யடைந்தாள். அவள் பொருட்டு இராவணன் கொல்லப் பட்டான்.

16.22. மகாதபஸ்வினியான அவள் முற்பிறவித் தவத் தால் பரிபூர்ண சிரேஷ்டரும் ஹரியுமாகிய ஸ்ரீராமரை பர்த்தாவாக அடைந்தாள்.

16.24. முற்பிறவியின் நினைவுள்ளவளாயினும் அவள் முன்பு தவத்தால் அடைந்த சிரமத்தை நினைக்கவில்லை. அதையெல்லாம் சுகானுபவத்தில் விட்டுவிட்டாள். துக்கமும் பயனளிக்கும்பொழுது சுகமாகி விடுகின்றது.

16.27. விதியின் வலியால் பிறகு ஸத்தியஸந்தரான இராமர் பிதாவின் உண்மையைப் பரிபாலிக்கக் காடு சென்றுர்.

तस्थौ समुद्रनिकटे सीतया लक्ष्मणेन च ।
ददर्श तत्र वह्निं च विप्ररूपधरं हरिः ॥ १६. २८ ॥

रामं च दुःखितं दृष्ट्वा स च दुःखी बभूव ह ।
उवाच किंचित्सत्येष्टं सत्यं सत्यपरायणः ॥ १६. २९ ॥

भगवञ्छ्रूयतां राम कालोऽयं यदुपस्थितः ।
सीताहरणकालोऽयं तवैव समुपस्थितः ॥ १६. ३० ॥

दैवं च दुर्निवार्यं च न च दैवात्परो बली ।
जगत्प्रसूं मयि न्यस्य छायां रक्षान्तिकेऽधुना ॥ १६. ३१ ॥

दास्यामि सीतां तुभ्यं च परीक्षासमये पुनः ।
देवैः प्रस्थापितोऽहं च न च विप्रो हुताशनः ॥ १६. ३२ ॥

16.28. ஒரு சமயம் (மேற்கு) சமுத்திரத்திற்குச் சமீபத்தில் சீதையுடனும் லக்ஷ்மணருடனும் ஹரியாகிய அவரிருக்கையில் பிராம்மணரூபத்தில் அங்கு அக்னி தேவனைக் கண்டார்.

16.29 ஸ்ரீராமர் துக்கிப்பதைக் கண்ட அக்னி தேவனும் துக்கமடைந்தான். ஸத்ய பராயணனான அக்னி ஸத்தியமும் பிரியமுமான ஒரு வார்த்தை சொன்னான்.

16.30. 'பகவானே! ஸ்ரீராமா! எப்படிப்பட்ட காலம் நெருங்கியுள்ளதோ அதைக் கூறுகிறேன், கேளும். சீதை கவரப்படும் காலம் இப்பொழுது வந்துளது.

16.31. 'விதி விலக்கற்கரிது; விதியினும் வலிமிகுந்தது எதுவும் இல்லை. இப்பொழுது ஜகன்மாதாவை என்னுடைய காப்பில் வைத்துவிட்டு அவளுடைய நிழலுருவை உம்மிடம் வைத்துக் காப்பாற்றும்.

16.32. 'மீண்டும் பரீக்ஷை சமயத்தில் உம்மிடம் சீதையை அளிக்கிறேன். நான் பிராம்மணனன்று; தேவர்களால் அனுப்பப்பட்ட அக்னி தேவன்'.

रामस्तद्वचनं श्रुत्वा न प्राकाश्य च लक्ष्मणम्।
स्वीकारं वचसश्चक्रे हृदयेन विदूयता ॥ १६. ३३ ॥

वह्निर्योगेन सीताया मायासीतां चकार ह।
तत्तुल्यगुणसर्वांगां ददौ रामाय नारद ॥ १६. ३४ ॥

सीतां गृहीत्वा स ययौ गोप्यं वक्तुं निषिध्य च।
लक्ष्मणो नैव बुबुधे गोप्यमन्यस्य का कथा ॥ १६. ३५ ॥

लंकां गत्वा रघुश्रेष्ठो जघान सायकेन च।
कालेन प्राप्य तं हत्वा रावणं वान्धवैः सह ॥ १६. ४६ ॥

तां च वह्निपरीक्षां च कारयामास सत्वरम्।
हुताशस्तत्र काले तु वास्तवीं जानकीं ददौ ॥ १६. ४७ ॥

16.33. ஸ்ரீராமர் அவ்வார்த்தையைக் கேட்டு லக்ஷ்மணரிடம்கூடச் சொல்லாமல் உள்ளத்தில் துயரத்துடன் அதை ஏற்றுக் கொண்டார்.

16.34 நாரதரே! அக்னி தேவன் சீதையைப் பெற்றுக் கொண்டு யோகபலத்தால் மாயா சீதையைத் தோற்று வித்தான். சீதைக்குச் சமமான குணமும் உறுப்பனைத்தும் கொண்ட அவளை ராமருக்கு அளித்தான்.

16.35. ரகசியத்தை வெளியே சொல்லாமலிருக்கும்படி கேட்டுக் கொண்டு சீதையை எடுத்துக் கொண்டு அக்னி தேவன் சென்று விட்டான். லக்ஷ்மணர் ரகசியத்தை அறியவே இல்லை. மற்றவர்களைப்பற்றிச் சொல்வானேன்?

16.46–47. ரகுசிரேஷ்டர் இலங்கை சென்று காலம் வந்ததும் பாணங்களால் இராவணனைக் கொன்றார். உற்றாருடன் அவனைக் கொன்றபின் (ஸங்கேதப்படி) அக்னி பரீக்ஷையையும் விரைவில் செய்தார். அக்னிதேவன் உரியகாலத்தில் வாஸ்தவமான ஜானகியை அளித்தான்.

उवाच छाया वह्नि च रामं च विनयान्विता।
करिष्यामीति किमहं तदुपायं वदस्व मे ॥१६.४८॥

श्रीरामाग्नी ऊचतुः —

त्वं गच्छ तपसे देवि पुष्करं च सुपुण्यदम्।
कृत्वा तपस्यां तत्रैव स्वर्गलक्ष्मीर्भविष्यसि ॥ १६. ४९॥

सा च तद्वचनं श्रुत्वा प्रतप्य पुष्करे तपः।
दिव्यं त्रिलक्षवर्षं च स्वर्गलक्ष्मीर्बभूव ह ॥१६. ५०॥

सा च कालेन तपसा यज्ञकुण्डसमुद्भवा।
कामिनी पाण्डवानां च द्रौपदी द्रुपदात्मजा ॥ १६. ५१॥

16.48. மாயா சீதை அக்னியையும் ராமரையும் நோக்கி வினயத்துடன் 'நான் என்ன செய்யட்டும்? எனக்கு உபாயம் சொல்லுங்கள்' என்று கேட்டாள்.

ஶ்ரீராமரும் அக்னியும் கூறியது—

16.49. 'தேவி! நீ புண்ணியமளிக்கும் புஷ்கரம் சென்று தவஞ்செய். தவஞ்செய்து பின்பு அங்கேயே நீ ஸ்வர்க்க லக்ஷ்மியாவாய்.'

16.50. அவளும் அவ்வார்த்தையைக் கேட்டுப் புஷ்கரத்தில் மூன்று லக்ஷம் தேவவருஷம் தவஞ்செய்து ஸ்வர்க்க லக்ஷ்மியாக ஆனாள்.

16.51. அவளே நாளடைவில் தவத்தால் யக்ஞ குண்டத்தில் துருபதனுடைய புத்திரியாகிய திரௌபதியாகத் தோன்றி பாண்டவர்களின் மனைவியானாள்.

क्रते युगे वेदवती कुशध्वजसुता शुभा।
त्रेतायां रामपत्नी च सीतेति जनकात्मजा ॥ १६. ५२ ॥

तच्छाया द्रौपदी देवी द्वापरे द्रुपदात्मजा।
त्रिहायिणी च सा प्रोक्ता विद्यमाना युगत्रये ॥ १६. ५३ ॥

सततं मूर्तिमन्तश्च वेदाश्चत्वार एव च।
सन्ति यस्याश्च जिह्वाग्रे सा च वेदवती श्रुता ॥ १६. ६३ ॥

॥ इति वेदवती-उपाख्यानम् समाप्तम् ॥

16.52–53. கிருதயுகத்தில் குசத்துவஜபுத்திரியான வேதவதீயென்ற நல்லாளாகவும், திரேதாயுகத்தில் ஜனக புத்திரியான சீதையாகி ஸ்ரீ ராம பத்னியாகவும், அவளுடைய மாயாரூபம் துவாபரயுகத்தில் துருபத புத்திரியான திரௌபதியாகவும் மூன்று யுகங்களிலும் தோன்றிய காரணத்தால் அவள் த்ரிஹாயிணீ எனவும் கூறப்படுகிருள்.

16.63. நான்கு வேதங்களும் எவளுடைய நாவின் நுனியில் எப்பொழுதும் உருக்கொண்டு விளங்குகின்றனவோ அவளே வேதவதீ எனப் புகழ் பெற்றவள்.

இங்ஙனம் வேதவதீ உபாக்யானம்
முற்றும்.

॥ तुलसी उपाख्यानम् ॥ ३८ ॥

धर्मध्वजस्य पत्नी च माधवीति च विश्रुता।
कार्तिकी-पूर्णिमायां तु सितवारे च पाद्मज ॥ १७. ७ ॥

सुषाव सा च पद्मांशां पद्मिनीं तां मनोहराम्।
नरा नार्यश्च तां दृष्ट्वा तुलनां दातुमक्षमाः ॥ १७. १२ ॥

तेन नाम्ना च तुलसीं तां वदन्ति मनीषिणः।
सर्वैर्निषिद्धा तपसे जगाम बदरीवनम् ॥ १७. १३ ॥

मनसा नारायणः स्वामी भवितेति च निश्चिता।
निर्लक्ष्यां चैकपादस्थां दृष्ट्वा तां कमलोद्भवः ॥ १७. १८ ॥

समाययौ परं दातुं वरं बदरिकाश्रमम्।
चतुर्मुखं च सा दृष्ट्वा ननाम हंसवाहनम् ॥ १७. १९ ॥

38. துளஸீ உபாக்கியானம்.

நாராயணரிஷி கூறியது—

17.7–13. நாரதரே! (குசத்வ்ஜனுடைய சகோதரனாகிய) தர்மத்வஜனுடைய மனைவி மாதவீ எனப் புகழ் பெற்றவள். அவள் கார்த்திகை பௌர்ணமியில் வெள்ளிக் கிழமையில் லக்ஷ்மியின் அம்சமாக மனதைக் கவரும் அழகுடன் கூடிய ஒரு பெண்ணைப் பெற்றாள். ஆடவரும் பெண்டிரும் அக்குழந்தையைக் கண்டு அவளுக்கு ஒப்பாக ஒருவரையும் கூற முடியாமையால் அவளை துலஸீ (துலனா—ஈடு, துலஸீ—ஈடு இல்லாதவள்) எனும் பெயரால் அழைக்கலாயினர். அவள் எல்லோராலும் தடுக்கப்பட்டும் கேளாமல் பதரீவனத்திற்குத் தவம் புரியச் சென்றாள்.

17.18–19. மனதில் தனக்கு நாராயணர் பர்த்தாவாக வேண்டுமென்று நிச்சயித்துக் கொண்டு எதையும் பாராமல் ஒற்றைக்காலில் நிற்கும் அவளைப் பார்த்து அவளுக்குச் சிறந்த வரமளிக்க பிரம்மா பதரிகாசிரமத்திற்கு வந்தார். ஹம்ஸவாகனத்தில் எழுந்தருளிய நான்முகனைக் கண்டு அவள் நமஸ்கரித்தாள்.

तुलस्युवाच —

अहं नारायणं कान्तं शान्तं सुन्दरविग्रहम्।
साम्प्रतं तं पतिं लब्धुं वरये त्वं च देहि मे ॥ १७. २७ ॥

ब्रह्मोवाच —

सुदामा नाम गोपश्च श्रीकृष्णांगसमुद्भवः।
तदंशश्चातितेजस्वी लेभे जन्म च भारते ॥ १७. २८ ॥

साम्प्रतं राधिकाशापाद्दनुवंशसमुद्भवः।
शंखचूडेति विख्यातस्त्रैलोक्येन च तत्समः ॥ १७. २९ ॥

गोलोके त्वां पुरा दृष्ट्वा कामोन्मथितमानसः।
स च जातिस्मरस्तस्मात्सुदामाऽभूच्च सागरे ॥ १७. ३० ॥

துளஸீ கூறியது—

17.27. சாந்தரும் மனதைக்கவரும் வடிவழகருமான நாராயணரை நான் இப்பொழுது பதியாக அடைவதற்கு விரும்புகிறேன். அந்த வரத்தை நீர் எனக்குக் கொடுத் தருளும்.

பிரம்மா கூறியது—

17.28. ஸுதாமா எனும் கோபன் ஸ்ரீ கிருஷ்ண ருடைய அங்கத்திலிருந்து அவருடைய அம்சமாக மிகவும் தேஜஸ்வியாய் பாரத பூமியில் பிறவியடைந்தான்.

17.29. அவன் இப்பொழுது ராதையின் சாபத்தால் தானவர் குலத்தில் சங்கசூடன் எனப் புகழ் பெற்றவனாய்த் தோன்றியிருக்கிறான். மூவுலகிலும் அவனுக்குச் சமமானவன் இல்லை.

17.30. அவன் முன்பு கோலோகத்தில் உன்னைப் பார்த்துக் காமத்தால் மனம் கலங்கியவன். அவன் முற் பிறவியின் ஞாபகமுடையவன். அந்த ஸுதாமா சமுத் திரத்தில் சங்கசூடனாகத் தோன்றியிருக்கிறான்.

जातिस्मरा त्वमपि सा सर्वं जानासि सुन्दरि।
अधुना तस्य पत्नी त्वं सम्भविष्यसि शोभने ॥ १७. ३२ ॥

पश्चान्नारायणं शान्तं कान्तमेव वरिष्यसि।
शापान्नारायणस्यैव कलया दैवयोगतः ॥ १७. ३३ ॥

भविष्यसि वृक्षरूपा त्वं पूता विश्वपावनी।
प्रधाना सर्वपुष्पेषु विष्णुप्राणाधिका भवेः ॥ १७. ३४ ॥

शंखचूडो महायोगी जैगीषव्यान्मनोहरम्।
कृष्णमन्त्रं च संप्राप्य कृत्वा सिद्धं तु पुष्करे ॥ १८. १४ ॥

आज्ञया ब्रह्मणः सोऽपि बदरीं च समाययौ।
आगच्छन्तं शंखचूडं ददर्श तुलसी मुने ॥ १८. १५ ॥

17.32. சுந்தரி! அப்படிப்பட்ட முற்பிறவியின் ஞாபகமுடைய நீயும் அனைத்தையும் அறிவாய். மங்களமானவளே! இப்பொழுது நீ அவனுடைய பத்னியாயிருக்கும் நிலை ஏற்படப்போகிறது.

17.33–34. பிறகு சாந்த மூர்த்தியான நாராயணரை நாயகராக வரிப்பாய். நாராயணருடைய சாபத்தாலேயே தெய்வாதீனமாக உன்னுடைய அம்சத்தால் பரிசுத்தமாகிய நீ உலகைப் புனிதமாக்கும் செடி ரூபத்தையடையப் போகிறாய். புஷ்பங்கள் அனைத்தினும் சிறந்தவளாய் விஷ்ணுவிற்குப் பிராணனைக் காட்டிலும் பிரியமானவளாக ஆவாய்.

18.14–15. முனிவரே! மகா யோகியான சங்கசூடனும் ஜைகிஷவ்ய முனிவரிடமிருந்து மனதிற்கினிய கிருஷ்ண மந்திரத்தைப் பெற்றுப் புஷ்கரத்தில் அதில் சித்தியடைந்து பிரம்மாவின் கட்டளைப்படி பதரிகாசிரமத்திற்கு வரலானான். வந்து கொண்டிருந்த சங்கசூடனை துளஸீ கண்டாள்.

शंखचूड उवाच —

का त्वं कस्य च कन्या च धन्या मान्याश्च योषिताम् ।
का त्वं मानिनि कल्याणि सर्वकल्याणदायिनि ॥ १८. २८ ॥

तुलस्युवाच —

धर्मध्वजसुताऽहं च तपस्यायां तपोवने ।
तपस्विन्यहं तिष्ठामि कस्त्वं गच्छ यथासुखम् ॥ १८. २९ ॥

शंखचूड उवाच —

आगच्छामि त्वत्समीप-माज्ञया ब्रह्मणोऽधुना ।
गान्धर्वेण विवाहेन त्वां ग्रहीष्यामि शोभने ॥ १८. ६१ ॥

अहमेव शंखचूडो देवविद्रावकारकः ।
दनुवंश्यो विशेषेण सुदामाऽहं हरेः पुरा ॥ १८. ६९ ॥

अहमष्टसु गोपेषु गोपोऽपि पार्षदेषु च ।
अधुना दानवेन्द्रोऽहं राधिकायाश्च शापतः ॥ १८. ७० ॥

சங்கசூடன் கூறியது—

18.28. நீ யார்? யாருடைய பெண்? நன்மதிப்பிற்குரியவளே! கல்யாணி! எல்லா மங்களங்களையும் அளிப்பவளே! ஸ்திரீகளுட் செல்வியாயும் பூஜிக்கத்தக்கவளாயும் உள்ள நீ யார்?

துளஸீ கூறியது—

18.29. நான் தர்மத்துவஜன் புத்திரி. தபோவனத்தில் தவம் புரிய வந்த தபஸ்வினியாய் நான் இங்குள்ளேன். நீர் யார்? உம்மிஷ்டப்படி போகலாம்.

சங்கசூடன் கூறியது—

18.61. இப்பொழுது பிரம்மாவின் கட்டளைப்படி உன் சமீபம் வந்துள்ளேன். மங்கள வடிவினளே! காந்தர்வ விவாக முறைப்படி உன்னை ஏற்கிறேன்.

18.69–70. நான் தேவர்களைத் தோற்கடித்த சங்கசூடன். தானவர் குலத்துதித்தவன். ஸுதாமா என முன்பு சிறப்புப் பெயர் பெற்ற நான் ஹரியின் பார்ஷதர்களாகிய எட்டு கோபர்களுள் ஒரு கோபனுயிருந்தவன். இப்பொழுது ராதிகையின் சாபத்தால் நான் தானவர்களின் அரசனுயிருக்கிறேன்.

नारायण उवाच —

गान्धर्वेण विवाहेन जगृहे तां च दानवः।
तया सह समागत्य स्वाश्रमं दानवस्ततः ।। १९. ४१ ।।

रम्यं क्रीडालयं गत्वा विजहार पुनः पुनः।
एवं स बुभुजे राज्यं शंखचूडः प्रतापवान् ।। १९. ४२ ।।

हृताधिकारा देवाश्च चरन्ति भिक्षुका यथा।
ते सर्वेऽतिविषण्णाश्च प्रजग्मुर्ब्रह्मणः सभाम् ।। १९. ४४ ।।

तदा ब्रह्मा सुरैः सार्धं जगाम शंकरालयम्।
सर्वेशं कथयामास विधाता चन्द्रशेखरम् ।। १९. ४५ ।।

ब्रह्मा शिवं संनियोज्य संहारे दानवस्य च।
जगाम स्वालयं तूर्णं यथास्थानं सुरोत्तमाः ।। २०. १ ।।

நாராயணரிஷி கூறியது—

19.41–42. அந்த தானவன் அவளை காந்தர்வ விவாஹ முறைப்படி கிரகித்துக் கொண்டு பிறகு அவளுடன் தனது வாசஸ்தானம் வந்து அழகிய லீலாக்ரஹம் சென்று அவளுடன் மேன்மேலும் சுகித்திருந்தான். பிரதாபவானுகிய சங்கசூடன் இவ்வாறு தனது அரசையும் அனுபவித்தான்.

19.44. அதிகாரத்தையிழந்த தேவர்கள் அனைவரும் பிச்சைக்காரர்களைப் போல் அலைபவர்களாய் மனமுடைந்தவர்களாய் பிரம்மாவின் சபைக்குச் சென்றனர்.

19.45. தேவர்களுடன் பிரம்மா சங்கரருடைய இருப்பிடம் சென்ருர். சந்திரசேகரரும் ஸர்வேச்வரருமாகிய அவரிடம் பிரம்மா விஷயத்தைத் தெரிவித்தார்.

20.1. தானவர்களை ஸம்ஹரிப்பதற்குச் சிவபிரானைப் சம்மதிக்கச் செய்துவிட்டு பிரம்மா சீக்கிரமே தமதிருப்பிடமேகினுர். தேவசிரேஷ்டர்களும் அவரவரிடத்திற்குச் சென்றனர்.

चन्द्रभागानदीतीरे वटमूले मनोहरे ।
तत्र तस्थौ महादेवो देवविस्तारहेतवे ॥ २०. २ ॥

दूतं कृत्वा चित्ररथं गन्धर्वेश्वरमीप्सितम् ।
शीघ्रं प्रस्थापयामास शंखचूडान्तिकं मुदा ॥ २०. ३ ॥

स गत्वा शंखचूडं तं ददर्श सुमनोहरम् ।
राजमण्डलमध्यस्थं स्वर्णसिंहासने स्थितम् ॥ २०. १८ ॥

एवं भूतं च तं दृष्ट्वा पुष्पदन्तः सविस्मयः ।
उवाच स च वृत्तान्तं यदुक्तं शंकरेण च ॥ २०. २२ ॥

पुष्पदन्त उवाच —

राजेन्द्र शिवभृत्योऽहं पुष्पदन्ताभिधः प्रभो ।
यदुक्तं शंकरेणैव तद् ब्रवीमि निशामय ॥ २०. २३ ॥

20.2. சந்திரபாகா நதிக் கரையில் மனதிற்கினிய தொரு ஆலமரத்தடியில் தேவர்களின் வளர்ச்சியின் பொருட்டு மகாதேவர் வந்துறைந்தார்.

20.3. கந்தர்வராஜனும் தமக்குப் பிரியமானவனுமான சித்ரரதன் என்பவனை மகிழ்ச்சியுடன் சீக்கிரமே சங்க சூடனிடம் தூதாக அனுப்பினர்.

20.18. அவன் சென்று மனதைக் கவர்பவனும் அரசர்கள் சூழ அவர்கள் மத்தியில் தங்க சிம்மாஸனத்தில் வீற்றிருப்பவனுமான சங்கசூடனைக் கண்டான்.

20.22. அப்படிப்பட்ட அவனைப்பார்த்து புஷ்பம் போன்ற பல் படைத்த சித்ரரதன் வியப்புடன் சங்கரரால் சொல்லியனுப்பப்பட்ட செய்தி எதுவோ அதை எடுத்துரைத்தான்.

புஷ்பதந்தன் கூறியது—

20.23. அரசர் பெருமானே! பிரபுவே! நான் சிவ பிரானுடைய அடிமை; புஷ்பதந்தன் என்பது என் பெயர். சங்கரர் சொல்லியனுப்பியதை உம்மிடம் கூறுகிறேன், கேளும்.

राज्यं देहि च देवाना-मधिकारं च साम्प्रतम्।
विषयं देहि तेषां च युद्धं वा कुरु निश्चयम् ॥२०. २६॥

नारायण उवाच —

दूतस्य वचनं श्रुत्वा शंखचूडः प्रहस्य च।
प्रभातेऽहं गमिष्यामि त्वं गच्छेत्युवाच ह ॥ २०. २८ ॥

स गत्वोवाच तं तूर्णं वटमूलस्थमीश्वरम्।
अथ दूते गते तत्र शंखचूडः प्रतापवान् ॥ २०. ४७ ॥

उवाच तुलसीं वार्तां गत्वाऽभ्यन्तरमेव च।
अज्ञानी कातरः शोके विपत्तौ न च पण्डितः॥
सुखे दुःखे भ्रमत्येव कालनेमिक्रमेण च ॥ २०. ६६ ॥

20.26. தேவர்களுடைய ராஜ்யத்தையும் அதிகாரத்தையும் இப்பொழுது அவர்களிடம் கொடுத்து விடும். அவர்களுடைய நாட்டை அவர்களுக்குக் கொடும், இல்லேயேல் நிச்சயமாகப் போருக்கு வாரும்.

நாராயணரிஷி கூறியது—

20.28. தூதனுடைய வார்த்தையைக் கேட்டுச் சங்கசூடன் பரிகசித்து விட்டு 'காலேயில் நான் வருகிறேன், நீ போகலாம்' என்று கூறினுன்.

20.47—66. அவன் விரைந்து சென்று ஆலமரத்தடியில் இருந்த ஈசுவரரிடம் தெரிவித்தான். தூதன் சென்ற பின் பிரதாபவானுன சங்கசூடன் அந்தப்புரம் சென்று துளஸியிடம் பின்வருமாறு கூறினுன்: 'ஆபத்தும் துன்பமும் வந்த பொழுது அஞ்ஞானியானவன் அஞ்சுகிருன், பண்டிதன் அஞ்சுவதில்லே. இன்பத்திலும் துன்பத்திலும் காலசக்கரத்தின் சுழற்சியில் ஜீவன் சுழல்கிருன்.

नारायणं तं सर्वेशं कान्तं यास्यसि निश्चितम् ।
तपः कृतं यदर्थे च पुरा बदरिकाश्रमे ।। २०. ६७ ।।

मया त्वं तपसा लब्धा ब्रह्मणस्तु वरेण च ।
हर्यर्थे यत्तव तपो हरिं प्राप्स्यसि कामिनि ।। २०. ६८ ।।

वृन्दावने च गोविन्दं गोलोके त्वं लभिष्यसि ।
त्वं च देहं परित्यज्य दिव्यं रूपं विधाय च ।। २०. ७१ ।।

ज्ञानं सम्प्राप्य सा देवी प्रसन्नवदनेक्षणा ।
क्रीडां चकार हर्षेण सर्वं मत्वेति नश्वरम् ।। २०. ७२ ।।

श्रीकृष्णं मनसा ध्यात्वा रक्षः कृष्णपरायणः ।
अमूल्यरत्नं यत्किंचिन्मुक्तामाणिक्यहीरकम् ।।
ददौ विप्राय गुरवे यात्रामंगलहेतवे ।। २१. ५ ।।

20.67. 'நீ நிச்சயமாக ஸர்வேசுவரரான நாரயணரைப் பிரியமான நாயகராக அடையப் போகிருய். முன்பு பதரிகாசிரமத்தில் அதற்காகத் தவம் புரிந்திருக்கிருய்.

20.68. 'நானும் தவத்தாலும் பிரம்மாவின் வரத்தாலும் தான் உன்னே அடையப் பெற்றேன். பிரியே! உன்னுடைய தவம் ஹரியைக் குறித்ததாதலால் நீ ஹரியை அடையப் போகிருய்.

20.71. 'இந்த தேகத்தை விட்டு திவ்யரூபத்தை யடைந்து பிருந்தாவனத்திலும் கோலோகத்திலும் நீ அவரை யடைவாய்.'

20.72. துளஸீ தேவியானவள் ஞானத்தையடைந்து மலர்ந்த கண்களும் முகமுடையவளாய் எல்லாம் அழியக் கூடியதென்பதை எண்ணிப்பார்த்து மகிழ்ச்சியுடன் லீலே புரிந்தாள்.

21.5. அசுரனுகிய சங்கசூடனும் ஸ்ரீ கிருஷ்ணனே மனதில் தியானித்து அவனேயே உயர்வற உயர் நலமாய்க் கொண்டு முத்து மாணிக்கம் வைரம் முதலிய விலேயற்ற ரத்னங்களேச் சிறிதளவு பிராம்மணர்களுக்கும் குருவுக்கும் மங்களயாத்திரா தானமாகக் கொடுத்தான்.

गजरत्न-मश्वरत्नं धनरत्नं मनोहरम् ।
ददौ सर्वं दरिद्राय विप्राय मंगलाय च ।। २१. ६ ।।

पुत्रं कृत्वा तु राजेन्द्रं सर्वेषु दानवेषु च ।
स्वयं सन्नाहयुक्तश्च धनुष्पाणिर्वभूव ह ।। २१. ९ ।।

त्रिलक्षाक्षौहिणी-सेनापतिं कृत्वा नराधिपः ।
बहिर्वभूव शिविरान्मनसा श्रीहरिं स्मरन् ।। २१. १४ ।।

रत्नेन्द्रसार-निर्माण-विमान-मारुरोह सः ।
गुरु-वर्गान् पुरस्कृत्य प्रययौ शंकरान्तिकम् ।। २१. १५ ।।

पुष्पभद्रानदीतीरे यत्राऽक्षयवटः शुभः ।
तत्र गत्वा शंखचूडो ददर्श चन्द्रशेखरम् ।। २१. २१ ।।

21.6. மங்களத்திற்காக மனதைக் கவரும் சிறந்த யானையையும் சிறந்த குதிரையையும் சிறந்த பொருளையும் எல்லாவற்றையும் ஏழை பிராம்மணனுக்கு தானம் செய்தான்.

21.9. அசுரர்களுக்கெல்லாம் அரசசிரேஷ்டனைத் தனது புத்திரனைச் செய்துவிட்டுத் தான் யுத்தத்திற்கு ஆயுத்தமாகி வில்லைக் கையிலேந்தியவனானான்.

21.14. மூன்று லக்ஷம் அக்ஷௌஹிணி சேனைக்கு ஒருவனைப் பதியாக்கிவிட்டு அரசன் ஸ்ரீ ஹரியை தியானித்துக் கொண்டு சேனாஸ்தானத்திலிருந்து வெளிப் போந்தான்.

21.15. சிறந்த ரத்னங்களால் நிர்மாணம் செய்யப் பட்ட விமானத்தில் ஏறிக் கொண்டு குருமார்களை முன்னிட்டுக் கொண்டு ஸ்ரீ சங்கரரிருக்குமிடம் சென்றான்.

21.21. புஷ்ப பத்ரா நதிக்கரையில் மங்களமான அக்ஷயவடவிருக்ஷமுள்ள இடம் சென்று சங்கசூடன் சந்திர சேகரப் பெருமானைக் கண்டான்.

अवरुह्य विमानाच्च तं दृष्ट्वा दानवेश्वरः।
सर्वैः सार्धं भक्तियुक्तः शिरसा प्रणनाम सः।
वामतो भद्रकालीं च स्कन्दं च तत्पुरः स्थितम्॥ २१. २८॥

महादेव उवाच—

पुरा त्वं पार्षदो गोपीगोपेष्वपि सुधार्मिकः।
अधुना राधिकाशापाद्भारते दानवेश्वरः॥ २१. ३७॥

आब्रह्मस्तम्बपर्यन्तं तुच्छं मेने च वैष्णवः।
सालोक्य-सार्ष्टि-सायुज्य-सामीप्यंच हरेरपि॥ २१. ३८॥

दीयमानं न गृह्णन्ति वैष्णवाः सेवनं विना।
ब्रह्मत्व-ममरत्वं वा तुच्छं मेने च वैष्णवः॥ २१. ३९॥

21.28. அந்த அசுரவேந்தன் விமானத்திலிருந்து இறங்கி அவரை தரிசித்து எல்லோருடனும் கூடி பக்தியுடன் தலையால் அவரை வணங்கினான். இடது பக்கமிருந்த பத்ர காளியையும் முன்புறமிருந்த ஸ்கந்தரையும் வணங்கினான்.

மகாதேவர் கூறியது—

21.37. நீ முன்பு கோபிமார்களிடையும் கோபர்களிடையும் சிறந்த தார்மிகனாகவும் பாரிஷதனாகவும் இருந்து ராதிகையின் சாபத்தால் பாரத பூமியில் இப்பொழுது அசுர வேந்தனாயிருக்கிறாய்.

21.38–39. பிரம்மா முதல் புழு வரையுள்ள அனைத்தையும் விஷ்ணுபக்தன் அற்பமெனக் கருதுபவன். ஹரியின் ஸாலோக ஸாரூப ஸாமீப ஸாயுஜ்யப் பதவிகளையுங் கூட அவை அளிக்கப்படினும் சேவை ஒன்று தவிர அவற்றை விஷ்ணுபக்தர்கள் ஏற்பதில்லை. தேவர்களின் பதவி பிரம்மாவின் பதவி ஆகியவற்றையும் விஷ்ணுபக்தன் அற்பமெனக் கருதுகிறான்.

इन्द्रत्वं वा मनुत्वं वा न मेने गणनासु च ।
कृष्णभक्तस्य ते किं वा देवानां विषये भ्रमे ।। २१. ४० ।।

देहि रज्यं च देवानां मत्प्रीतिं रक्षभूमिप।
सुखं स्वराज्ये त्वं तिष्ठ देवास्तिष्ठन्तु वै पदे ।। २१. ४१ ।।

अलं भूतविरोधेन सर्वे कश्यपवंश्यजाः ।
काले नश्यन्ति विश्वानि प्रभवन्त्येव कालतः ।। २१. ५६ ।।

ईश्वरस्यैव समता ब्रह्मणः परमात्मनः ।
अहं मृत्युंजयो यस्मादसंख्यं प्रकृतं लयम् ।। २१. ५७ ।।

अदर्शं चापि द्रक्ष्यामि वारं वारं पुनः पुनः ।
स च प्रकृतिरूपं च स एव पुरुषः स्मृतः ।। २१. ५८ ।।

21.40. இந்திரப் பதவியையும் மனுவின் பதவியையும் அவன் பொருட்படுத்துவதில்லை. தேவர்களையும் பிரமிக்கச் செய்யும் அவை கிருஷ்ண பக்தனுக்கு எம்மாத்திரம்?

21.41. பூபாலா! தேவர்களுக்கு அரசைக் கொடுத்து விடு. என்னுடைய அன்பைக் காப்பாற்றிக் கொள். உன்னுடைய சொந்த ராஜ்யத்தில் நீ இரு. தேவர்கள் அவர்கள் பதவியில் இருக்கட்டும்.

21.56. உயிர்களை விரோதித்துக் கொண்டது போதும்; எல்லோரும் காசியபருடைய வம்சத்திலுதித்தவர்கள். காலத்தில் உலகங்கள் அழிகின்றன; காலத்தாலேயே தோன்றுகின்றன.

21.57–58. பிரம்மமும் பரமாத்மாவுமான ஈசுவரன் ஒருவனுக்கு மட்டுமே எப்பொழுதும் சமநிலை. நான் மிருத்யுவை ஜயித்தவனாதலால் எண்ணற்ற பிரகிருதி லயத்தைப் பார்த்துள்ளேன். திரும்பத் திரும்ப அடிக்கடி பார்க்கவும் போகிறேன். பிரம்மமே பிரகிருதி வடிவிலும் புருஷ வடிவிலும் உள்ளதாய்க் கூறப்படுகிறது.

स चात्मा स च जीवश्च नानारूपधरः परः ।
करोति सततं यो हि तन्नामगुणकीर्तनम् ॥ २१. ५९ ॥

काले मृत्युं स जयति जन्म रोगभयं जराम् ।
स्रष्टा कृतो विधिस्तेन पाता विष्णुः कृतो भवेत् ॥ २१. ६० ॥

अहं कृतश्च संहर्ता भयं विषयिणः कृतः ।
कालाग्निरुद्रं संहारे नियोज्य विषये नृप ॥ २१. ६१ ॥

अहं करोमि सततं तन्नामगुणकीर्तनम् ।
तेन मृत्युंजयोऽहं च ज्ञानेनाऽनेन निर्भयः ॥ २१. ६२ ॥

21.59–60. அந்தப் பரம்பொருளே ஆத்மாவாகவும் பலரூபந்தரித்த ஜீவனுகவும் உளது. அதினுடைய நாமங்களேயும் குணங்களேயும் எவன் எப்பொழுதும் கீர்த்தனம் செய்கின்ருனே அவன் நாளடைவில் இறப்பையும் பிறப்பையும் நோய் பயத்தையும் மூப்பையும் ஜயிக்கிருன். அதனுல் தான் பிரம்மா சிருஷ்டி கர்த்தாவாக்கப்பட்டதும் விஷ்ணு ரக்ஷிப்பவராகச் செய்யப்பட்டதும்.

21.61–62. நான் ஸம்ஹரிப்பவனுகச் செய்யப்பட்டுள்ளேன். அரசே! விஷயங்களில் ஆழ்ந்தவர்களுக்கு பயம் ஏற்படுகின்றது. காலாக்னிருத்திரரை ஸம்ஹார விஷயத்தில் கூட்டிவைத்துவிட்டு நான் எப்பொழுதும் பரம்பொருளின் நாமங்களேயும் குணங்களேயும் கீர்த்தனம் செய்கிறேன். அதனுல் நான் மிருத்யுவை ஜயித்தவனுகவும் இந்த ஞானத்தால் பயமற்றவனுகவும் இருக்கிறேன்.

मृत्यु-र्मृत्युभयाद्याति वैनतेयादिवोरगाः।
इत्युक्त्वा स च सर्वेशः सर्वभावेन तत्परः ॥ २१. ६३ ॥

विरराम च शम्भुश्च सभामध्ये च नारद।
राजा तद्वचनं श्रुत्वा प्रशशंस पुनः पुनः ॥ २१. ६४ ॥

शंखचूड उवाच—

त्वया यत्कथितं देव नान्यथा वचनं स्मृतम्
तथाऽपि किंचिद्यथार्थं श्रूयतां मन्निवेदनम् ॥ २१. ६५ ॥

ज्ञातिद्रोहे महत्पापं त्वयोक्त-मधुना च यत्।
गृहीत्वा तस्य सर्वस्वं कुतः प्रस्थापितो बलिः ॥ २१. ६६ ॥

21.63–64. கருடனிடம் பாம்பு பயப்படுவது போல் மிருத்யுவும் அவனிடம் அழிந்து போவோம் என பயப்பட்டு ஓடிவிடுகின்றது. என்றிங்ஙனம் கூறிவிட்டு எல்லாவற்றுலும் பரம்பொருளுடன் ஒன்றுபட்ட ஸர்வேசுவரராகிய சம்பு சபை நடுவில் மௌனமாயிருந்தார். நாரதரே! அரசன் அவ்வார்த்தையைக் கேட்டு அவரைத் திரும்பத் திரும்பக் கொண்டாடினான்.

சங்கசூடன் கூறியது—

21.65. தேவதேவரே! தாங்கள் கூறியதெல்லாம் உண்மை. அதில் வித்தியாஸம் இல்லை. என்றுலும் நான் செய்துகொள்ளும் உண்மையான சிறு விக்ஞாபனத்திற்குச் செவி சாய்க்க வேண்டும்.

21.66. தாயாதியை துரோகம் செய்வது பெரிய பாவம் என்று தாங்கள் இப்பொழுது கூறிய விஷயத்தில் பலிசக்ரவர்த்தி எதற்காகத் தன் சொத்தெல்லாம் அபகரிக்கப்பட்டு வெளியேற்றப் பட்டார் (என நான் கேட்கிறேன்).

मया समुद्धृतं सर्व-मूर्ध्वमैश्वर्य-मीश्वर ।
सुतलाच्च समुद्धर्तुं नालं तत्र गदाधरः ॥ २१. ६७ ॥

सभ्रातृको हिरण्याक्षः कथं देवैश्च हिंसितः ।
शुम्भादयश्चासुराश्च कथं देवैर्निपातिताः ॥ २१. ६८ ॥

पुरा समुद्रमथने पीयूषं भक्षितं सुरैः ।
क्लेशभाजो वयं तत्र ते सर्वे फलभोगिनः २१. ६९ ॥

क्रीडा भाण्डमिदं विश्वं प्रकृतेः परमात्मनः ।
यस्मै यत्र स ददाति तस्यैश्वर्यं भवेत्तदा ॥ २१. ७० ॥

देवदानवयोर्वादः शश्वन्नैमित्तिकः सदा ।
पराजयो जयस्तेषां कालेऽस्माकं क्रमेण च ॥ २१. ७१ ॥

21.67. ஈசுவரரே! என்னால் அந்த ஐசுவரியம் எல்லாம் ஸுதலத்திலிருந்து மீட்டு மேலே கொண்டு வரப் பட்டது. அதைத் தடுக்க கதாதரராகிய விஷ்ணுவுக்கும் சக்தி இல்லை.

21.68. சகோதரனுடன்கூட ஹிரண்யாக்ஷன் தேவர்களால் எப்படி இம்சித்துக் கொல்லப்பட்டான்? சும்பன் முதலிய அசுரர்கள் தேவர்களால் எப்படி வீழ்த்தப்பட்டார்கள்?

21.69. முன்பு கடலைக் கடைந்ததில் அமிருதம் தேவர்களால் அருந்தப்பட்டது. அங்கு கஷ்டப்பட்டவர்கள் நாங்கள். அவர்களனைவரும் பயனை அனுபவித்தவர்கள்.

21.70. பரமபுருஷனுடைய பிரகிருதி சக்திக்கு இவ்வுலகம் ஒரு விளையாட்டுப் பாத்திரமாயிருக்கிறது. அவன் யாருக்கு எங்கு ஐசுவரியத்தைத் தருகிறானோ அவனுக்கு அப்பொழுது ஐசுவரியம் ஏற்படுகிறது.

21.71. தேவ தானவர்களிடை இடையறாத வழக்கு எப்பொழுதும் காரணத்தைப் பின்பற்றியதே. தோல்வியும் வெற்றியும் ஒரு காலத்தில் அவர்களுக்கும் பிறகு எங்களுக்குமாக மாறி மாறி வருகின்றன.

तदावयोर्विरोधं वा गमनं निष्फलं परम् ।
समसम्बन्धिनो बन्धोरीश्वरस्य महात्मनः ॥ २१.७२ ॥

इयं ते महती लज्जा युद्धेऽस्माभिः सहाधुना ।
जये ततोऽधिका कीर्ति-र्हानिश्चैव पराजये ॥ २१.७३ ॥

महादेव उवाच —

का लज्जा महती राजन् मम युद्धे त्वया सह ।
सुराणां शरणस्यैव प्रेषितश्च हरेरहो ॥ २१.८० ॥

देहि राज्यं च देवानामिति मे निश्चितं वचः ।
युद्धं वा कुरु मत्सार्धं वाग्व्यये किं प्रयोजनम् ॥ २१.८१ ॥

नारायण उवाच —

शिवं प्रणम्य शिरसा दानवेन्द्रः प्रतापवान् ।
समारुरोह यानं च सहामात्यैः स सत्वरः ॥ २२.१ ॥

21.72. இது எங்களுடைய விரோதம். மகாத்மாவும் ஈசுவரரும் பந்துவும் ஸமஸம்பந்தம் உடையவருமாகிய நீங்கள் இதற்காக இங்கு போந்தது முற்றும் பயனற்றது.

21.73. எங்களுடன்கூட இப்பொழுது போர் புரிவதாகிய இது உங்களுக்கு மிகுந்த வெட்கமாகும். ஜயத்தில் அதிகமான கீர்த்தி என்றாலும் தோற்றால் கீர்த்திக்கு அழிவும் ஏற்படும்.

மகாதேவர் கூறியது—

21.80. அரசே! தேவர்களால் சரண்புகப்பட்டு ஹரியால் அனுப்பப்பட்ட எனக்கு உன்னுடன் போர் புரிவதில் என்ன வெட்கம்?

21.81. 'தேவர்களுக்கு அரசைக் கொடுத்துவிடு' என்று நான் கூறியது நிச்சயம். இன்றேல் என்னுடன் போர் புரி. வார்த்தையைச் செலவழிப்பதில் என்ன பயன்?

நாராயணரிஷி கூறியது—

22.1. புகழ்மிக்க அசுரவேந்தன் சிவனைத் தலையால் வணங்கிவிட்டுத் தன் மந்திரிகளுடன் விரைவாக வாகனத்தில் ஏறிக் கொண்டான்.

शिवः स्वसैन्यं देवांश्च प्रेरयामास सत्वरम् ।
दानवेन्द्रः ससैन्यैश्च युद्धारंभे बभूव ह ॥ २२. २ ॥

स्वयं महेन्द्रो युयुधे सार्धं च वृषपर्वणा ।
भास्करो युयुधे विप्रचित्तिना सह सत्वरः ॥ २२. ३ ॥

दम्भेन सह चन्द्रश्च चकार परमं रणम् ।
कालस्वरेण कालश्च गोकर्णेन हुताशनः ॥ २२. ४ ॥

कुबेरः कालकेयेन विश्वकर्मा मयेन च ।
भयंकरेण मृत्युश्च संहरेण यमस्तथा ॥ २२. ५ ॥

नन्दीश्वरादयः सर्वे दानवानां गणैः सह ।
युयुधुश्च महायुद्धे प्रलयेऽपि भयंकरे ॥ २२. १२ ॥

22.2. சிவன் தேவர்களேயும் தமது சேனையையும் விரைவாக ஏவினர். அசுரவேந்தன் தனது சேனைகளுடன் கூடிப் போரைத் தொடங்கலானன்.

22.3. மஹேந்திரன் தானுகவே விருஷபர்வாவுடன் போர் புரிந்தான். சூரியன் விப்ரசித்தியுடன் விரைவாக யுத்தம் செய்தான்.

22.4. இடம்பனுடன் சந்திரன் கடுமையாகச் சண்டையிட்டான். காலஸ்வரனுடன் காலனும் கோகர்ணனுடன் அக்னியும் போரிட்டனர்.

22.5. காலகேயனுடன் குபேரனும், மயனுடன் விச்வகர்மாவும், பயங்கரனுடன் ம்ருத்யுவும், ஸம்ஹரனுடன் யமனும் போர் புரிந்தனர்.

22.12. பிரளயத்தைக்காட்டிலும் பயங்கரமாயிருந்த மகாயுத்தத்தில் நந்தீசுவரர் முதலிய எல்லோரும் அசுர கணங்களுடன் போர் நிகழ்த்தினர்.

देवाश्च दुद्रुवुः सर्वे भीताश्च क्षतविग्रहाः।
चकार कोपं स्कन्दश्च देवेभ्यश्चाभयं ददौ ॥ २२.१४ ॥

स्कन्धस्य शरजालेन दानवाः क्षतविग्रहाः।
भीताश्च दुद्रुवुः सर्वे महारणपराक्रमाः ॥ २२.२० ॥

दानवानां क्षयकरं यथा प्राकृतिको लयः।
राजा विमानमारुह्य चकार बाणवर्षणम् ॥ २२.२४ ॥

देवाः प्रदुद्रुवुः सर्वेऽप्यन्ये नन्दीश्वरादयः।
एक एव कार्तिकेयस्तस्थौ समरमूर्धनि ॥ २२.२६ ॥

मूर्च्छां संप्राप शक्त्या च कार्तिकेयो महाबलः।
काली गृहीत्वा तं क्रोडे निनाय शिवसन्निधौ।
शिवस्तं चापि ज्ञानेन जीवयामास लीलया ॥ २२.४१ ॥

22.14. தேவர்களெல்லோரும் உடல்களில் காயம்பட்டு பயந்து ஓடலானார்கள். ஸ்கந்தர் கோபமூண்டு தேவர்களுக்கு அபயமளித்தார்.

22.20. போரில் பராக்கிரமம் மிக்க அசுரர்கள் ஸ்கந்தருடைய அம்புக்கூட்டங்களால் மேனி துளைக்கப்பட்டு எல்லோரும் பயந்து ஓடினார்கள்.

22.24 பிரகிருதிலயம் போல் அசுரர்கள் அழிவடைந்த போது சங்கசூடராஜன் விமானத்திலேறிக் கொண்டு பாணங்களைப் பொழிந்தான்.

22.26. நந்தீசுவரர் முதலியவர்களும் பிறரும் உட்பட இப்பொழுது தேவர்கள் ஓடத் தொடங்கினர். போர்க்களத்தில் கார்த்திகேயர் ஒருவர் மட்டும் நின்றார்.

22.41. மகாபலம் வாய்ந்த கார்த்திகேயரும் சக்தி ஆயுதம் பாய்ந்து மூர்ச்சையடைந்தார். காளிதேவியானவள் அவரைத் தன் கைகளில் அணைத்து எடுத்துக் கொண்டு சிவனுடைய ஸந்நிதி சென்றாள். சிவன் தமது ஞானசக்தியால் விளையாட்டாக அவரை உயிர்ப்பித்தார்.

काली जगाम समरं रक्षितुं कार्तिकस्य या।
नारायणास्त्रं सा देवी चिक्षेप मन्त्रपूर्वकम् ॥ २२. ५१ ॥

राजा ननाम तद् दृष्ट्वा चावरुह्य रथादसौ।
ऊर्ध्वं जगाम तच्चास्त्रं प्रलयाग्निशिखोपमम् ॥ २२. ५२ ॥

जग्राह मन्त्रपूतं च देवी पाशुपतं रुषा।
निक्षेपणं निरोद्धुं च वाग्बभूवाशरीरिणी ॥ २२. ५६ ॥

मृत्युः पाशुपते नास्ति नृपस्य च महात्मनः।
यावदस्ति च मन्त्रस्य कवचं च हरेरिति ॥ २२. ५७ ॥

शिवस्तत्त्वं समाकर्ण्य तत्त्वज्ञानविशारदः।
ययौ स्वयं च समरे स्वगणैः सह नारद ॥ २३. १ ॥

22.51. கார்த்திகேயரைக் காப்பதற்குப் போருக்குச் சென்ற காளிதேவியானவள் மந்திரபூர்வகமாய் நாராயண அஸ்திரத்தை விடுத்தாள்.

22.52. அதைக் கண்டு சங்கசூடராஜன் தேரை விட்டிறங்கி நமஸ்கரித்தான். பிரளயாக்னி ஜ்வாலை போன்ற அவ்வஸ்திரம் மேலே சென்றது.

22.56. தேவியானவள் கோபத்துடன் மந்திரத்தால் பரிசுத்தமான பாசுபதாஸ்திரத்தை எடுத்தாள். அதைத் தடுப்பதற்கு பின்வரும் ஒரு அசரீரி கேட்கப்பட்டது:

22.57. 'மகாத்மாவாகிய இவ்வரசனுக்கு ஹரியின் மந்திரத்தால் ஏற்பட்ட கவசம் உள்ளவரை பாசுபதத்தால் மரணமில்லை.'

23.1. நாரதரே! தத்துவஞான விசாரதரான சிவன் இதைக் கேட்டுத் தமது கணங்களுடன் தாமே போருக்குச் சென்றார்.

शंखचूडः शिवं दृष्ट्वा विमानादवरुह्य च ।
ननाम परया भक्त्या शिरसा दण्डवद्भुवि ॥ २३. २ ॥

तं प्रणम्य च वेगेन विमानमारुरोह सः ।
तूर्णं चकार सन्नाहं धनुर्जग्राह दुर्वहम् ॥ २३. ३ ॥

एतस्मिन्नन्तरे वृद्धो ब्राह्मणः परमातुरः ।
आगत्य च रणस्थान-मुवाच दानवेश्वरम् ॥ २३. ७ ॥

वृद्धब्राह्मण उवाच —

देहि भिक्षां च राजेन्द्र मह्यं विप्राय सांप्रतम् ।
पश्चात् त्वां कथयिष्यामि पुरः सत्यं च कुर्विति ॥ २३. ९ ॥

ओमित्युवाच राजेन्द्रः प्रसन्नवदनेक्षणः ।
कवचार्थी जनश्चाहमित्युवाचाऽतिमायया ॥ २३. १० ॥

23.2. சங்கசூடன் சிவனைக் கண்டு விமானத்திலிருந்து இறங்கி மிகுந்த பக்தியுடன் தடிக்கம்பு போல் பூமியில் விழுந்து அவரைத் தலையால் நமஸ்கரித்தான்.

23.3. பிறகு வேகமாக விமானத்தில் அவன் ஏறிக் கொண்டு பிறர் தூக்கமுடியாத வில்லை விரைவாகத் தூக்கிக் கொண்டு போர் தொடங்கினான்.

23.7. இதனிடையில் மிகவும் நோயுற்ற ஒரு கிழட்டுப் பிராம்மணன் போர் நடக்குமிடத்திற்கு வந்து அசுர வேந்தனிடம் பின்வருமாறு கூறினான்.

கிழட்டுப் பிராம்மணன் கூறியது—

23.9. அரசசிரேஷ்டரே! பிராம்மணனான எனக்கு இப்பொழுது பிச்சையளியும். அளிப்பதாக முன்பு ஸத்தியம் செய்யும். பிறகு நான் வேண்டுவதை உம்மிடம் கூறுவேன்.

23.10. மலர்ந்த முகத்துடனும் பார்வையுடனும் அரசசிரேஷ்டன் ஆகட்டு மென்றான். மிகுந்த கபடத்துடன் 'நான் உமது கவசத்தை விரும்பும் மனிதன்' எனக் கூறினான்.

तच्छ्रुत्वा कवचं दिव्यं जग्राह हरिरेव च।
अथ शंभुर्हरेः शूलं जग्राह दानवं प्रति ॥ २३. १२ ॥

राजा चापं परित्यज्य श्रीकृष्णचरणाम्बुजम्।
ध्यानं चकार भक्त्या च कृत्वा योगासनं धिया ॥ २३. १७ ॥

शूलं च भ्रमणं कृत्वा पपात दानवोपरि।
चकार भस्मसात्तं च सरथं चाऽथ लीलया ॥ २३. १८ ॥

राजा धृत्वा दिव्यरूपं किशोरं गोपवेषकम्।
गोलोकादागतं यानमारुरोह पुरं ययौ ॥ २३. २० ॥

गत्वा ननाम शिरसा स राधाकृष्णयोर्मुने।
भक्त्या च चरणांभोजं रासे वृन्दावने वने ॥ २३. २१ ॥

23.12. அதன்பின் தெய்வீகமான கவசத்தை (பிராம் மணவடிவில் வந்த) ஹரியே எடுத்துக் கொண்டார். பிறகு சம்புவானவர் ஹரியின் சூலத்தை எடுத்து அசுரன் மேல் விடுத்தார்.

23.17. அரசன் வில்லை எறிந்து விட்டு யோகா ஸனத்திலமர்ந்து ஸ்ரீ கிருஷ்ணனுடைய பாத கமலங்களை பக்தியுடன் மனதால் தியானித்தான்.

23.18. சூலம் சுழன்று அசுரன் மேல் விழுந்து விளையாட்டுப்போல் தேருடன் அவனைச் சாம்பலாக்கியது.

23.20. அரசன் திவ்வியமான கோபாலச் சிறுவன் வடிவேற்று கோலோகத்திலிருந்து வந்த விமானத்திலேறிக் கொண்டு தனது புரத்திற்குச் சென்றான்.

23.21. முனிவரே! அங்கு சென்று இன்பரஸம் நிறைந்த வனமாகிய பிருந்தாவனத்தில் ராதா கிருஷ்ணர் களுடைய திருவடித்தாமரைகளில் பக்தியுடன் தலையால் வணங்கினான்.

सुदामानं च तौ दृष्ट्वा प्रसन्नवदनेक्षणौ ।
क्रोडे चक्रतुरत्यन्तं प्रेम्णाऽतिपरिसंयुतौ ॥ २३. २२ ॥

अथ शूलं च वेगेन प्रयतौ तं च सादरम् ।
अस्थिभिः शंखचूडस्य शंखजातिर्बभूव ह ॥ २३. २३॥

शंखो हरेरधिष्ठानं यत्र शंखस्ततो हरिः ।
तत्रैव वसते लक्ष्मीर्दूरीभूत-ममंगलम् ॥ २३. २७ ॥

शिवोऽपि दानवं हत्वा शिवलोकं जगाम ह ।
सुराः स्वविषयं प्रापुः परमानन्दसंयुताः ॥ २३. २९ ॥

श्रीभगवानुवाच —

तपस्त्वया कृतं भद्रे मदर्थे भारते चिरम् ।
त्वदर्थे शंखचूडश्च चकार सुचिरं तपः ॥ २४. २८ ॥

23.22. ஸுதாமாவாகிய அவனைக் கண்டு மலர்ந்த கண்களுடனும் முகத்துடனும் அவர்கள் அவனை மடியில் வைத்துக் கொண்டு மிகுந்த அன்புடன் அணைத்துக் கொண்டனர்.

23.23. (சிவன் விட்ட) சூலம் வேகமாகச் சிவனிடம் ஆதரவுடன் திரும்பிற்று. சங்கசூடனுடைய எலும்புகளி லிருந்து சங்கஜாதிகள் பிறந்தன.

23.27. சங்கம் ஹரியின் இருப்பிடம். எங்கு சங்கம் உளதோ அங்கு ஹரி இருப்பார். அங்கு லக்ஷ்மியும் வசிப்பாள். அமங்களம் விலகிப் போம்.

23.29. சிவன் அவ்வசுரனைக் கொன்ற பின் சிவலோக மேகினர். தேவர்கள் ஆனந்த மிகுந்தவர்களாய்த் தங்கள் நாட்டை மீண்டும் எய்தினர்.

ஸ்ரீ பகவான் (நாராயணர் துளஸியிடம்) கூறியது—

24.28. மங்கள வடிவினளே! பாரத தேசத்தில் நெடுங்காலம் என்னைக் குறித்து உன்னால் தவம் செய்யப் பட்டது. உன்னைக் குறித்துச் சங்கசூடன் வெகுகாலம் தவஞ் செய்தான்.

कृत्वा त्वां कामिनीं सोऽपि विजहार च तत्क्षणात् ।
अधुना दातुमुचितं तवैव तपसः फलम् ॥ २४. २९ ॥

इदं शरीरं त्यक्त्वा च दिव्यदेहं विधाय च ।
रामे रम मया सार्धं त्वं रमासदृशी भव ॥ २४. ३० ॥

इयं तनुर्नदीरूपा गण्डकीति च विश्रुता ।
पूता सुपुण्यदा नृणां पुण्ये भवतु भारते ॥ २४. ३१ ॥

तव केशसमूहश्च पुण्यवृक्षो भविष्यति ।
तुलसी-केशसंभूता तुलसीति च विश्रुता ॥ २४. ३२ ॥

त्रिषु लोकेषु पुष्पाणां पत्राणां देवपूजने ।
प्रधानरूपा तुलसी भविष्यति वरानने ॥ २४. ३३ ॥

24.29. உன்னை மனைவியாக அடைந்து அக்கணம் முதல் உன்னுடன் மகிழ்ந்திருந்தான். இப்பொழுது உன்னுடைய தவத்திற்குப் பலன் அளிப்பது தகும்.

24.30. அன்பின் உருவாகியவளே! இந்த உடலை நீத்து திவ்விய தேகம் தரித்து என்னுடன் இன்புறுவாயாக. நீ லக்ஷ்மீதேவிக்குச் சமமாவாய்.

24.31. உன்னுடைய இந்த சரீரம் புகழ் பெற்ற கண்டகீ எனும் நதியாகப் புனிதமாயும் புண்ணியமளிப்பதாயும் பாரத தேசத்து மக்களின் புண்ணியத்திற்காகவும் ஆகட்டும்.

24.32. உன்னுடைய கூந்தல் கற்றை புண்ணியமான செடியாகப் போகிறது. துளஸியின் கேசத்தினின்று தோன்றியதால் துளஸீ என்ற பெயரால் விளங்கும்.

24.33. அழகிய முகம் படைத்தவளே! மூவுலகிலும் புஷ்பங்களுள்ளும் பத்திரங்களுள்ளும் தேவ பூஜையில் முக்கியமானதாக துளஸி ஆகப்போகிறது.

स स्नातः सर्वतीर्थेषु सर्वयज्ञेषु दीक्षितः।
तुलसीपत्रतोयेन योऽभिषेकं समाचरेत् ।। २४. ३९ ।।

तुलसीपत्रतोयं च मृत्युकाले च यो लभेत्।
मुच्यते सर्वपापेभ्यो विष्णुलोके महीयते ।। २४. ४२ ।।

तुलसीकाष्ठ-निर्माण-मालां गृह्णाति यो नरः।
पदे पदेऽश्वमेधस्य लभते निश्चितं फलम् ।। २४. ४३ ।।

त्रिरात्रं तुलसीपत्रं शुद्धं पर्युषितं सति।
श्राद्धे व्रते च दाने च प्रतिष्ठायां सुरार्चने ।। २४. ५१ ।।

त्वं च स्वयं महासाध्वी वैकुण्ठे मम सन्निधौ।
रमासमा च रामा च भविष्यसि न संशयः ।। २४. ५४ ।।

24.39. எவன் துளஸீபத்ர ஜலத்தால் அபிஷேகம் செய்து கொள்ளுகிருனே அவன் எல்லாத் தீர்த்தங்களிலும் ஸ்நானம் செய்தவனுகவும் எல்லா யாகங்களிலும் தீக்ஷை பெற்றவனுகவும் ஆவான்.

24.42. எவன் மரணகாலத்தில் துளஸீபத்ர தீர்த்தத்தைப் பெறுகிருனே அவன் எல்லாப் பாவங்களினின்றும் விடுபடுகிருன்; விஷ்ணுலோகத்தில் பெருமையடைகிருன்.

24.43. துளஸிக் கட்டையால் ஆக்கப்பட்ட மாலையைக் கைக் கொள்ளும் மனிதன் எவனே அவன் அடிக்கடி அச்வமேதயாகம் செய்த பலனை நிச்சயமாய் அடைகிருன்.

24.51. மூன்று நாள் கடந்தாலும் துளஸீபத்ரம் சிராத்தம், விரதம், தானம், தெய்வப் பிரதிஷ்டை, தேவதார்ச்சனை முதலியவற்றில் உபயோகிக்க சுத்தமானதாகவே கொள்ளப்படும்.

24.54. நீ இயல்பாகவே மிகவும் நல்லவள். வைகுண்டத்தில் என் ஸந்நிதியில் லக்ஷ்மிக்குச் சமமான ஸ்திரீயாக விளங்குவாய். இதில் சந்தேகமில்லை.

अहं च शैलरूपेण गण्डकीतीरसन्निधौ।
अधिष्ठानं करिष्यामि भारते तव शापतः ॥ २४. ५५ ॥

शालग्रामशिला यत्र तत्र सन्निहितो हरिः।
तत्रैव लक्ष्मीर्वसति सर्वतीर्थसमन्विता ॥ २४. ७५ ॥

शालग्रामशिलातोयं मृत्युकाले च यो लभेत्।
सर्वपापविनिर्मुक्तो विष्णुलोकं स गच्छति ॥ २४. ८७ ॥

शालग्रामं च तुलसीं शंखं चैकत्र एव च।
यो रक्षति महाज्ञानी स भवेच्छ्रीहरेः प्रियः ॥ २४. ९३ ॥

इत्युक्त्वा श्रीहरिस्तां च विरराम च नारद।
सा च देहं परित्यज्य दिव्यरूपं विधाय च ॥ २४. ९६ ॥

यथा श्री च तथा सा चाऽप्युवास हरिवक्षसि।
स जगाम तया सार्धं वैकुण्ठं कमलापतिः ॥ २४. ९७ ॥

24.55. நானும் பாரத பூமியில் கண்டகீ நதிக்கரையில் கல்வடிவில் உன் சாபத்தால் இருப்புக் கொள்ளப் போகிறேன்.

24.75. சாளக்ராம சிலே எங்குளதோ அங்கு ஹரி இருப்பார். அங்கு எல்லா தீர்த்தங்களுடன் கூடியவளாய் லக்ஷ்மியும் வசிப்பாள்.

24.87. சாலக்ராமசில தீர்த்தத்தை மரணத்தரு வாயில் எவன் பெறுகிருனே அவன் எல்லா பாவங்களினின்று விடுபட்டு விஷ்ணுலோகம் செல்வான்.

24.93. சாளக்ராமம் துளஸி சங்கம் ஆகியவற்றை எவன் ஒன்றுசேர்த்துக் காப்பாற்றுகிருனே அந்த மகா ஞானி ஸ்ரீஹரிக்குப் பிரியமானவனுவான்.

24.96–97. நாரதரே! ஸ்ரீஹரியானவர் அவளிடம் இவ்வாறு கூறிவிட்டு மௌனமாயிருந்தார். அவள் உடலே நீத்து திவ்யரூபமடைந்து லக்ஷ்மியைப் போல் ஹரியின் மார்பில் உறைபவளானுள். அவளுடன் கூடி கமலாபதி யானவர் வைகுண்டமேகினுர்.

नारद उवाच—

तुलसी च यथा पूज्या कृता नारायणप्रिया।
अस्याः पूजाविधानं च स्तोत्रं च वद साम्प्रतम् ॥ २५.१ ॥

नारायण उवाच—

लक्ष्मी माया काम वाणी बीजपूर्वं दशाक्षरम्।
वृन्दावनीति ङेन्तश्च वह्नि जायान्तमेव च ॥ २५. १० ॥

अनेन कल्पतरुणा मन्त्रराजेन नारद।
पूजयेद् यो विधानेन सर्वसिद्धि लभेद्ध्रुवम् ॥ २५. ११ ॥

घृतदीपेन धूपेन सिन्दूरचन्दनेन च।
नैवेद्येन च पुष्पेण चोपचारेण नारद ॥ २५. १२ ॥

நாரதர் கூறியது—

25.1. நாரயணருக்குப் பிரியமான துளஸீ எப்படி பூஜிக்கப்படவேண்டும்? அவளுடைய பூஜா முறையையும் ஸ்தோத்திரத்தையும் இப்பொழுது கூறியருளுங்கள்.

நாராயணரிஷி கூறியது—

25.10–12. நாரதரே! ஸ்ரீம் (லக்ஷ்மீ) ஹ்ரீம் (மாயா) க்லீம் (காம) ஐம் (வாணீ) என்ற பீஜாக்ஷரங்களை முன் கூட்டி ப்ருந்தாவன்யை (வஹ்னி ஜாயாந்தம்) ஸ்வாஹா 'ஸ்ரீம்– ஹ்ரீம்-க்லீம்—ஐம்-ப்ருந்தாவன்யை ஸ்வாஹா'— என்ற கற்பக விருக்ஷம் போன்ற இச்சிறந்த மந்திரத்தாலும் நெய்விளக்கு, தூபம், ஸிந்தூரச் சந்தனம், புஷ்பம், முதலிய உபசாரங்களாலும் நைவேத்தியத்தாலும் எவன் முறைப்படி பூஜிக்கிருனே அவன் எல்லா சித்திகளையும் நிச்சயமாய் அடைவான்.

वरं विष्णुर्ददौ तस्यै सर्वपूज्या भवेरिति।
शिरोधार्या च सर्वेषां वन्द्या मान्या ममेति च ॥ २५. २९ ॥

बृन्दा बृन्दावनी विश्वपूजिता विश्वपाविनी।
पुष्पसारानन्दनी च तुलसी कृष्णजीवनी ॥ २५. ३२ ॥

एतान्नामाष्टकं चैव स्तोत्रं नामार्थसंयुतम्।
यः पठेत् तां च संपूज्य सोऽश्वमेधफलं लभेत् ॥ २५. ३३ ॥

कार्तिक्यां पूर्णिमायां च तुलस्या जन्ममंगलम्।
तत्र तस्याश्च पूजा च विहिता हरिणा पुरा ॥ २५. ३४ ॥

तद्वृक्षे पूजयेत् तां च भक्त्या चाऽऽवाहनं विना।
तां ध्यात्वा चोपचारेण ध्यानं पातकनाशनम् ॥ २५. ४० ॥

25.29. விஷ்ணுவானவர் 'நீ எல்லோராலும் பூஜிக்கப்படுபவளாவாய். எல்லோராலும் தலையில் தரிக்கப்படுபவளாவாய், என்னுடைய வந்தனைக்கும் மரியாதைக்கும் உரியவளாவாய்' என்று அவளுக்கு வரமளித்தார்.

25.32. ப்ருந்தா, ப்ருந்தாவனீ, விச்வபூஜிதா (எல்லோராலும் பூஜிக்கப்பட்டவள்), விச்வபாவினீ (அனைத்தையும் பரிசுத்தமாக்குபவள்), புஷ்பஸாரா, ஆனந்தனீ, துளஸீ க்ருஷ்ணஜீவனீ;

25.33. அர்த்தம் நிறைந்த இவ்வெட்டு நாமங்களாலாகிய ஸ்தோத்திரத்தை எவன் படித்து அவளைப் பூஜிக்கின்றானோ அவன் அசுவமேதயாகம் செய்த பயனை அடைவான்.

25.34. கார்த்திகைப் பூர்ணிமையில் துளஸியின் மங்களமான ஜயந்தி. அந்நாளில் அவளுடைய பூஜை ஆதியில் ஹரியால் விதிக்கப்பட்டது.

25.40. துளஸிச் செடியில் ஆவாஹனம் செய்ய வேண்டிய அவசியமில்லாமல் அவளை தியானம் செய்து பூஜிக்க வேண்டும். உபசாரத்துடன் அங்ஙனம் தியானிப்பது பாதகங்களைப் போக்கும்.

शिरोधार्या च सर्वेषामीप्सिता विश्वपावनी ।
जीवन्मुक्तां मुक्तिदां च भजे तां हरिभक्तिदाम् ॥ २५. ४३ ॥
इति ध्यात्वा च संपूज्य स्तुत्वा च प्रणमेत्सुधीः ।
उक्तं तुलस्युपाख्यानं किं भूयः श्रोतुमिच्छसि ॥ २५. ४४ ॥

॥ तुलस्युपाख्यानं समाप्तम् ॥

॥ इति श्रीदेवीभागवते नवमस्कन्धे पंचविंशोऽध्यायः ॥

25.43. வேண்டுவார் வேண்டுவதையளிப்பதாயும், உலகைப் பரிசுத்தம் செய்வதாயும் உள்ள துளசி சிரசில் அணிதற்குரியது. ஜீவன்முக்திவடிவினளாயும் ஹரிபக்தியையும் முக்தியையும் அளிப்பவளாயும் உள்ள அவளை தியானிக்கிறேன்.

25.44. இங்ஙனம், தியானித்துத் துதித்து, நமஸ்கரித்து புத்திமானால் பூஜித்தற்குரியவள். துளஸீ என்று துளஸீ உபாக்கியானம் உமக்குக் கூறப்பட்டது. இன்னும் என்ன கேட்க விரும்புகிறீர்?

துளஸீ உபாக்கியானம் முற்றும்.

இங்ஙனம் ஸ்ரீ தேவீபாகவதத்தில் ஒன்பதாவது ஸ்கந்தத்தில் இருபத்தைந்தாவது அத்தியாயம் முற்றும்.

॥ सावित्र्युपाख्यानम् ॥ ३९ ॥

नारद उवाच —

तुलस्युपाख्यानमिदं श्रुतं चातिसुधोपमम् ।
ततः सावित्र्युपाख्यानं तन्मे व्याख्यातुमर्हसि ॥ २६. १ ॥

नारायण उवाच —

ब्रह्मणा वेदजननी प्रथमे पूजिता मुने ।
द्वितीये च वेदगणैस्ततपश्चाद्विदुषां गणैः ॥ २६. ३ ॥

तदा चाऽश्वपतिर्भूपः पूजयामास भारते ।
तत्पश्चात्पूजयामासु-र्वर्णाश्चत्वार एव च ॥ २६. ४ ॥

39. ஸாவித்ரி உபாக்கியானம்

நாரதர் கூறியது—

26.1. அமிருதத்தினும் இனிய துளஸீ உபாக்கியான மாகிய இது என்னுல் கேட்கப்பட்டது. இனி ஸாவித்ரி உபாக்கியானத்தை எனக்குக் கூறியருள வேண்டுகிறேன்.

நாராயண ரிஷி கூறியது—

26.3. முனிவரே! வேதத்தின் தாயாகிய ஸாவித்ரி முதலில் பிரம்மாவால் பூஜிக்கப்பட்டாள். இரண்டாவதாக வேதகணங்களாலும் அதன் பின் வேதியர்களின் கணங்க ளாலும் பூஜிக்கப்பட்டாள்.

26.4. பாரததேசத்தில் அசுவபதி மகாராஜன் பூஜித்தான். அதன் பின் நான்கு வர்ணத்தாரும் பூஜித்தனர்.

मद्रदेशे महाराजो बभूवाश्वपतिर्मुने ।
आसीत्तस्य महाराज्ञी महिषी धर्मचारिणी ।। २६. ६ ।।

मालतीति समाख्याता यथा लक्ष्मीर्गदाभृतः ।
सा च राज्ञी च वन्ध्या च वसिष्ठस्योपदेशतः ।
चकाराराधनं भक्त्या सावित्र्याश्चैव नारद ।। २६. ८ ।।

प्रत्यादेशं न सा प्राप्ता महिषी न ददर्श ताम् ।
राजा तां दुःखितां दृष्ट्वा बोधयित्वा नयेन वै ।
सावित्र्यास्तपसे भक्त्या जगाम पुष्करं तदा ।। २६. १० ।।

एतस्मिन्नन्तरे तत्र आजगाम पराशरः ।
प्रणनाम ततस्तं च मुनिर्नृपमुवाच च ।। २६. १३ ।।

26.6—8. நாரதமுனிவரே! அசுவபதி மத்ரதேசத்தில் மகாராஜனுயிருந்தான். அவனுடைய பட்டமகிஷி தர்மத்தில் பற்றுள்ள மாலதீ எனப் பெயர் பெற்றவள். அவள் விஷ்ணுவுக்கு லக்ஷ்மி எப்படியோ அப்படி இருந்தாள். புத்திரப் பேறில்லாமலிருந்த அவ்வரசி வசிஷ்டருடைய உபதேசத்தால் பக்தியுடன் ஸாவித்திரியை ஆராதித்தாள்.

26.10. அவள் தேவியின் கட்டளையையோ தரிசனத்தையோ அடையவில்லே. அவள் துக்கித்திருப்பதைக் கண்ட அரசன் அவளே நயமான சொற்களால் தேற்றி விட்டு ஸாவித்திரியை நோக்கித் தவம் புரியத் தான் பக்தியுடன் புஷ்கரம் சென்ருன்.

26.13. அப்பொழுது பராசரர் அங்கு வந்தார். அவரை அரசன் நமஸ்கரித்தான். முனிவர் அரசனிடம் பின்வருமாறு கூறிஞர்.

मुनिरुवाच —

सकृज्जपश्च गायत्र्याः पापं दिनभवं हरेत् ।
करं सर्पफणाकारं कृत्वा तद्रन्ध्रमुद्रितम् ।
आनम्रमूर्ध-मचलं प्रजपेत्प्राङ्मुखो द्विजः ॥ २६. १७ ॥

अनामिका-मध्यदेशा-दधोऽवामक्रमेण च ।
तर्जनीमूलपर्यन्तं जपस्यैवं क्रमः करे ॥ २६. १८ ॥

श्वेतपंकजबीजानां स्फटिकानां च संस्कृताम् ।
कृत्वा वा मालिकां राजन् जपेत् तीर्थे सुरालये ॥ २६. १९ ॥

संस्थाप्य माला-मश्वत्थपत्रे पद्मे च संयतः ।
कृत्वा गोरोचनाक्तां च गायत्र्या स्नापयेत् सुधीः ॥ २६. २० ॥

முனிவர் கூறியது—

26.17. காயத்திரியை ஒரு முறை ஜபித்தால் அது அந்த தினத்தில் செய்த பாவத்தை நீக்கும். கைகளைப் பாம்பின் படம் போல் வைத்துக் கொண்டு இடைவெளி யில்லாமல் சேர்த்து, தலைகுனிந்து, அசையாமல், கிழக்கு நோக்கி துவிஜன் ஜபம் செய்யவேண்டும்.

26.18. மோதிர விரலின் நடுரேகையிலிருந்து ஆரம் பித்துக் கீழ் முகமாயிறங்கிப் பிரதக்ஷிணமாக ஆள் காட்டி விரல் அடிரேகை வரை எண்ணிக் கொண்டு ஜபம் செய்ய வேண்டும்.

26.19. அரசே! வெண்தாமரை மணியாலோ, ஸ்படிகத்தாலோ ஆகி ஸம்ஸ்காரம் செய்யப்பட்ட மாலையால் புண்ணிய தீர்த்தத்தில் தேவாலயத்தில் ஜபிக்கவேண்டும்.

26.20. புத்திசாலியான புருஷன் ஜபமாலையை அரசிலை, தாமரைப்பூ இவற்றின் மேல் வைத்து கோரோசனை தடவி காயத்திரி மந்திரத்தால் அபிஷேகம் செய்ய வேண்டும்.

गायत्री शतकं तस्यां जपेच्च विधिपूर्वकम् ।
एवं क्रमेण राजर्षे दशलक्षं जपं कुरु ॥
साक्षाद् द्रक्ष्यसि सावित्रीं त्रिजन्मपातकक्षयात् ॥ २६. २२ ॥

नारायण उवाच —

इत्युक्त्वा च मुनिश्रेष्ठः सर्वपूजाविधिक्रमम् ।
तमुवाच च सावित्र्या ध्यानादिक-मभीप्सितम् ॥ २६. ३९ ॥

दत्त्वा सर्वं नृपेन्द्राय ययौ च स्वाश्रमे मुने ।
राजा संपूज्य सावित्रीं ददर्श वरमाप च ॥ २६. ४० ॥

नारद उवाच —

किं वा ध्यानं च सावित्र्याः किं वा पूजाविधानकम् ।
स्तोत्रं मन्त्रं च किं दत्त्वा प्रययौ स पराशरः ॥ २६. ४१ ॥

26.22. அதில் நூறுதடவை முறைப்படி காயத்ரியை ஜபம் செய்யவேண்டும். இராஜரிஷியே! அப்படி ஸம்ஸ்காரம் செய்யப்பட்ட மாலையால் பத்து லக்ஷம் ஜபம் செய்வாயாக. அதனுல் முப்பிறவிப் பாவங்கள் ஒழிந்து ஸாக்ஷாத்தாக ஸாவித்திரியின் தரிசனத்தைப் பெறுவாய்.

நாராயணரிஷி கூறியது—

26.39. இவ்வாறு பூஜை செய்யும் முறை முழுவதும் உபதேசித்துவிட்டு அம்முனிவர் அவருக்கு விருப்பமான ஸாவித்திரியின் தியானம் முதலியவற்றையும் கூறியருளினுர்.

26.40. அனைத்தையும் அரசசிரேஷ்டனுக்கு அருளி விட்டு முனிவர் தமதாசிரமம் சென்ருர். அரசன் ஸாவித்திரியைப் பூஜித்து அவளைத் தரிசித்து அவளிடம் வரமும் பெற்ருன்.

நாரதர் கூறியது—

26.41. பராசர முனிவர் அளித்துச் சென்ற ஸாவித்ரீ தியானம் யாது? பூஜாமுறை என்ன? ஸ்தோத்திரமும் மந்திரமும் யாவை?

नारायण उवाच —

ज्येष्ठकृष्णत्रयोदश्यां शुद्धकाले च यत्नतः।
व्रतमेवं चतुर्दश्यां व्रती भक्त्या समाचरेत् ॥ २६. ४४ ॥

व्रतं चतुर्दशाब्दं च द्विसप्त फलसंयुतम्।
दत्त्वा द्विसप्तनैवेद्यं पुष्पधूपादिकं चरेत् ॥ २६. ४५ ॥

संस्थाप्य मंगलघटं फलशाखासमन्वितम्।
गणेशं च दिनेशं च वह्निं विष्णुं शिवं शिवाम् ॥ २६. ४७ ॥

संपूज्य पूजयेदिष्टं घटे आवाहिते द्विजः।
ततो विप्राय भक्त्या च व्रती दद्याच्च दक्षिणाम् ॥ २६. ७५ ॥

सावित्रीति चतुर्थ्यन्तं वह्निजायान्तमेव च।
लक्ष्मी-माया-कामपूर्वं मन्त्रमष्टाक्षरं विदुः ॥ २६. ७६ ॥

நாராயணரிஷி கூறியது—

26.44. ஸாவித்ரீ விரதத்தை யனுஷ்டிக்க விரும்புபவன் ஜ்யேஷ்டக்க்ருஷ்ண திரயோதசியில் சுத்தமான காலத்தில் முன்னேற்பாடுகளைச் செய்து கொண்டு இந்த விரதத்தைச் சதுர்த்தசியில் பக்தியுடன் அனுஷ்டிக்க வேண்டும்.

26.45. பதினன்கு வருஷங்கள் பதினன்கு பழவகைகளுடன் கூடிய பதினன்கு நிவேதனங்களையும் புஷ்பம், தூபம் முதலியவற்றையும் ஸமர்ப்பித்துப் பூஜிக்க வேண்டும்.

26.47–75. துவிஜன் தேங்காய், மாவிலை ஆகியவற்றுடன் கூடிய மங்கள கலசத்தை ஸ்தாபித்து, முதலில் கணபதி, சூரியன், அக்னி, விஷ்ணு, சிவன், அம்பிகை ஆகியோரைப் பூஜித்துக் கலசத்தில் இஷ்ட தேவதையாகிய ஸாவித்ரியை ஆவாஹனம் செய்து பூஜிக்க வேண்டும். பிறகு விரதமனுஷ்டிப்பவன் பிராம்மணருக்கு பக்தியுடன் தக்ஷிணை யளிக்க வேண்டும்.

26.76. 'ஸ்ரீம்-ஹ்ரீம்-க்லீம் ஸாவித்ர்யை ஸ்வாஹா' என்ற அஷ்டாக்ஷரத்தை ஸாவித்ரீ மந்திரம் என அறிகின்றனர்.

कृष्णेन दत्तां सावित्रीं गोलोके ब्रह्मणे पुरा।
नायाति सा तेन सार्धं ब्रह्मलोके च नारद ॥ २६. ७७ ॥

ब्रह्मा कृष्णाज्ञया भक्त्या तुष्टाव वेदमातरम्।
तदा सा परितुष्टा च ब्रह्माणं चकमे पतिम् ॥ २६. ७८ ॥

ब्रह्मोवाच —

सच्चिदानन्दरूपे त्वं मूलप्रकृतिरूपिणि।
हिरण्यगर्भरूपे त्वं प्रसन्ना भव सुन्दरि ॥ २६. ८० ॥

विप्रपापेध्मदाहाय ज्वलदग्नि-शिखोपमे।
ब्रह्मतेजः प्रदे देवि प्रसन्ना भव सुन्दरि ॥ २६. ८३ ॥

कायेन मनसा वाचा यत्पापं कुरुते नरः।
तत्त्वत्स्मरणमात्रेण भस्मीभूतं भविष्यति ॥ २६. ८४ ॥

26.77–78. நாரதரே! கிருஷ்ணனால் கோலோகத்தில் முன்பு பிரம்மாவுக்கு ஸாவித்ரி அளிக்கப்பட்டும் அவள் அவருடன் பிரம்மலோகத்திற்கு வராமற் போகவே பிரம்மா கிருஷ்ணனுடைய கட்டளையால் பக்தியுடன் வேதமாதா வாகிய அவளைத் துதித்தார். அப்பொழுது அவள் மன மகிழ்ந்து பிரம்மாவைப் பதியாக அடைந்தாள்.

பிரம்மா கூறியது—

26.80. ஸச்சிதானந்த ரூபிணியும் மூலப்பிரகிருதி ரூபிணியும் ஹிரண்யகர்ப்ப ரூபிணியும், சுந்தரியுமான நீ பிரஸன்னமாகி அருள் புரியவேண்டும்.

26.83 விப்ரர்களிடமேற்படும் பாவ வடிவான விறகை எரிப்பதற்காகக் கொழுந்து விட்டெரியும் அக்கினி போன்றவளும் பிரம்ம தேஜஸ்ஸை அளிப்பவளும் சுந்தரியு மான தேவியே, நீ பிரஸன்னமாகி அருள் புரியவேண்டும்.

26.84. உடலாலும் மனதாலும் வாக்காலும் எந்தப் பாவத்தை மனிதன் செய்கிறானோ அது உன்னை நினைத்த மாத்திரத்தில் சாம்பலாய்ப் போகிறது.

नारायण उवाच —

अनेन स्तवराजेन संस्तूयाश्वपतिर्नृपः ।
ददर्श तां च सावित्रीं वरं प्राप मनोगतम् ।। २६. ८६ ।।

सावित्र्युवाच —

जानाम्यहं महाराज यत्ते मनसि वांछितम् ।
वांछितं तव पत्न्याश्च सर्वं दास्यामि निश्चितम् ।। २७. ३ ।।

साध्वी कन्याभिलाषं च करोति तव कामिनी ।
त्वं प्रार्थयसि पुत्र च भविष्यति क्रमेण च ।। २७. ४ ।।

इत्युक्त्वा सा तदा देवी ब्रह्मलोकं जगाम ह ।
राजा जगाम स्वगृहं तत्कन्याऽऽदौ बभूव ह ।। २७. ५ ।।

आराधनाच्च सावित्र्या बभूव कमलापरा ।
सावित्रीति च तन्नाम चकाराश्वपतिर्नृपः ।। २७. ६ ।।

நாராயணரிஷி கூறியது—

26.86. இச்சிறந்த ஸ்தோத்திரத்தால் அசுவபதி மகாராஜன் துதித்து ஸாவித்திரியை தரிசித்து மனதில் கொண்டிருந்த வரத்தைப் பெற்ருன்.

ஸாவித்ரி கூறியது—

27.3. மகாராஜனே! உன் மனதிலுள்ள விருப்பம் எதுவென்பதையும் உன் மனைவியின் விருப்பத்தையும் நான் அறிவேன். அனைத்தையும் நிச்சயமாய் அளிக்கிறேன்.

27.4. உன் மனைவி நல்ல பெண்ணை விரும்புகிருள்; நீ புத்திரனை வேண்டுகிருய்; முறைப்படி உண்டாகும்.

27.5. இங்ஙனம் கூறிவிட்டு தேவியானவள் பிரம்மலோகம் சென்ருள். அரசன் தன் வீடு சென்ருன். வரமளிக்கப் பட்ட கன்னிகை முதலில் உண்டானுள்.

27.6. ஸாவித்திரியின் ஆராதனையால் பிறந்த அவள் இன்னெரு மகாலக்ஷ்மி போல் இருந்தாள். அசுவபதி மகாராஜன் அவளுக்கு ஸாவித்ரீ என்று அந்த இஷ்ட தெய்வத்தின் பெயரை வைத்தான்.

कालेन सा वर्धमाना बभूव च दिने दिने।
रूपयौवनसंपन्ना शुक्ले चन्द्रकला यथा ॥ २७. ७ ॥

सा वरं वरयामास द्युमत्सेनात्मजं सदा।
सत्यवन्तं सत्यशीलं नानागुणसमन्वितम् ॥ २७. ८ ॥

राजा तस्मै ददौ तांच रत्नभूषणभूषिताम्।
सोऽपि सार्धं कौतुकेन तां गृहीत्वा गृहं ययौ ॥ २७. ९ ॥

स च संवत्सरेऽतीते सत्यवान् सत्यविक्रमः।
जगाम फलकाष्ठार्थं प्रहर्षः पितुराज्ञया ॥ २७. १० ॥

जगाम साध्वी तत्पश्चात्सावित्री दैवयोगतः।
निपत्य वृक्षाद्दैवेन प्राणांस्तत्याज सत्यवान् ॥ २७. ११ ॥

27.7. நாளாக நாளாக அவள் சுக்லபக்ஷச் சந்திரனைப் போல் வளர்ச்சியுற்று அழகும் யௌவனமும் நிறைந்து விளங்கினாள்.

27.8. அவள் த்யுமத்ஸேனருடைய புத்திரனும் எப்பொழுதும் ஸத்தியசீலனும் சிறந்த பல குணங்களுடன் கூடினவனுமான ஸத்யவானைக் கணவனாக வரித்தாள்.

27.9. இரத்தினாபரணங்களால் அலங்கரிக்கப் பெற்ற அவளை அரசன் அவனுக்குக் கன்னிகாதானம் செய்தார். அவன் மகிழ்ச்சியுடன் அவளைப் பெற்று அவளுடன் தன தில்லம் சென்றான்.

27.10. ஒரு வருஷம் சென்றபின் ஒரு நாள் ஸத்திய விக்ரமனான ஸத்தியவான் தந்தையின் கட்டளைப்படி பழங்களும் விறகும் சேகரிக்க மகிழ்ச்சியுடன் புறப்பட்டான்.

27.11. ஸாவித்ரியும் தெய்வாதீனமாய் அவன்பின் சென்றாள். ஸத்தியவான் விதிவசமாய் மரத்திலிருந்து கீழே விழுந்து உயிர்துறந்தான்.

यमस्तं पुरुषं दृष्ट्वा बद्ध्वाऽङ्गुष्ठसमं मुने ।
गृहीत्वा गमनं चक्रे तत्पश्चात् प्रययौ सती ॥ २७. १२ ॥

पश्चात् तां सुदतीं दृष्ट्वा यमः सम्यमनीपतिः ।
उवाच मधुरं साध्वीं साधूनां प्रवरो महान् ॥ २७. १३ ॥

धर्मराज उवाच —

अहो क्व यासि सावित्रि गृहीत्वा मानुषीं तनुम् ।
यदि यास्यसि कान्तेन सार्धं देहं तदा त्यज ॥ २७. १४ ॥

गन्तुं मर्त्यो न शक्नोति गृहीत्वा पांचभौतिकम् ।
देहं च मम लोकं च नश्वरं नश्वरः सदा ॥ २७. १५ ॥

भर्तुस्ते पूर्णकालो वै बभूव भारते सति ।
स्वकर्मफलभोगार्थं सत्यवान् याति मद्गृहम् ॥ २७. १६ ॥

27.12. முனிவரே! யமன் அவனைக் கண்டு கட்டை விரல் அளவுள்ள அவனுடைய ஜீவனைக் கட்டி யெடுத்துக் கொண்டு போகலானன். பதிவிரதையான ஸாவித்ரி யமனைப் பின் தொடர்ந்தாள்.

27.13. யமபுரியின் பதியும் மகானும் ஸாதுக்களிற் சிறந்தவனுமான யமன் தன் பின் வரும் அழகிய பதி விரதையைப் பார்த்து அவளிடம் பின்வருமாறு இனிய வார்த்தையைக் கூறினன்.

யமதர்மராஜன் கூறியது—

27.14. 'ஐயோ! ஸாவித்ரி! மனித உடலுடன் எங்கே வருகிருய்? உன் பதியுடன்கூட வருவதானல் உடலை விட்டுவிடு.

27.15. 'எப்பொழுதும் அழிவுடைய மனிதன் அழியும் பாஞ்சபௌதீக உடலைத் தாங்கி கொண்டு என் உலகிற்குச் செல்ல முடியாது.

27.16. 'பதிவிரதையே! பாரத தேசத்தில் உன் பர்த்தாவின் காலம் பூர்ணமாகிவிட்டது. தனது கரும பலனை அனுபவிக்க ஸத்தியவான் என் வீட்டிற்குச் செல்லு கிருன்.

कर्मणा जायते जन्तुः कर्मणैव प्रलीयते।
सुखं दुःखं भयं शोकः कर्मणैव प्रणीयते ॥ २७. १७ ॥

स्वकर्मणा सर्वसिद्धि-ममरत्वं लभेद् ध्रुवम्।
लभेत्स्वकर्मणा विष्णोः सालोक्यादि-चतुष्टयम् ॥ २७. १९ ॥

दैतेयत्वं दानवत्व-मसुरत्वं स्वकर्मणा।
इत्येतदुक्त्वा सावित्रीं विरराम स वै यमः ॥ २७. २५ ॥

सावित्र्युवाच—

किं कर्म तद्भवेत्केन को वा तद्धेतुरेव च।
को वा देही च देहः कः को वाऽत्र कर्मकारकः ॥ २८. २ ॥

27.17. 'கருமத்தால் ஜீவன் பிறக்கிறுன், கருமத்தாலேயே மரணமடைகிறுன். சுகம், துக்கம், பயம், சோகம் ஆகியவை கருமத்தாலேயே உண்டாக்கப்படுகின்றன.

27.19. 'தனது கருமத்தாலேயே ஒருவன் தேவத் தன்மையையும் எல்லாசித்திகளையும் அடைகிறுன் என்பது நிச்சயம். விஷ்ணுவின் ஸாலோக்யம் முதலிய நான்கு பதவிகளையும் தனது கருமத்தாலேயே அடைகிறுன்.

27.25. 'தைத்தியனுகவும் தானவனுகவும் அசுரனுக வும் பிறப்பது ஸ்வகருமத்தாலேயே'. இப்படி ஸாவித்திரி யிடம் கூறிவிட்டு அந்த யமதர்மராஜன் மௌனமாயிருந் தான்.

ஸாவித்ரி கூறியது—

28.2. கருமம் என்பது என்ன? அது எதனுல் ஏற் படுகிறது? அதற்குக் காரணமென்ன? தேகி என்பவன் யார்? தேகம் என்பது எது? இங்கு கருமத்தைச் செய் பவன் யார்?

भोक्ता भोजयिता को वा को वा भोगश्च निष्कृतिः ।
को जीवः परमात्मा कस्तन्मे व्याख्यातु-मर्हति ॥ २८. ४ ॥

धर्म उवाच —

वदेप्रणिहितो धर्मः कर्म यन्मंगलं परम् ।
अवैदिकं तु यत्कर्म तदेवाशुभमेव च ॥ २८. ५ ॥

अहैतुकी देवसेवा संकल्परहिता सती ।
कर्मनिर्मूलरूपा च सा एव परभक्तिदा ॥ २८. ६ ॥

ब्रह्मभक्तो यो नरश्च स च मुक्तः श्रुतः श्रुतौ ।
जन्ममृत्यु-जराव्याधि-शोक-भीतिविवर्जितः ॥ २८. ७ ॥

भक्तिश्च द्विविधा साध्वि श्रुत्युक्ता सर्वसम्मता ।
निर्वाणपददात्री च हरिरूपप्रदा नृणाम् ॥ २८. ८ ॥

28.4. அனுபவிப்பவன் யார்? அனுபவிக்கச் செய்பவன் யார்? போகம் என்பது யாது? நிஷ்க்ருதி என்பது என்ன? ஜீவன் யார்? பரமாத்மா யார்? இதை எனக்கு விளக்கியருளப் பிரார்த்திக்கிறேன்.

யமதர்மராஜன் கூறியது—

28.5. வேதம் விதித்த தருமமாகிய கருமம் எதுவோ அதுவே சிறந்த நன்மை யாகும். வேதத்திற்கு எதிரான தெதுவோ அந்தக் கருமமே தீயதாகும்.

28.6. காரணமில்லாமலும் ஆசையினுலெழும் ஸங்கல்ப மில்லாமலும் செய்யப்படும் சிறந்த தேவ பூஜை கருமத்தை வேரறுக்கும் வடிவினதாகும்; அதுவே உத்தமமான பக்தியை அளிப்பது.

28.7. பிரம்ம பக்தன் எவனே அவன் முக்தன் என சுருதியில் கூறப்படுகிறது. அவன் பிறப்பிறப்பு, மூப்பு, நோய், சோகம், பயம் முதலியவை நீங்கியவன்.

28.8. நல்லவளே! பக்தி இருவகையென எல்லோருக்கும் சம்மதமான சுருதியில் கூறப்படுகிறது. ஒன்று மனிதர்க்கு நிர்வாணம் எனும் முக்தியை அளிப்பது. மற்றது ஹரியின் ஸாரூபத்தை யளிப்பது.

हरिरूपस्वरूपां च भक्तिं वांछन्ति वैष्णवाः।
अन्ये निर्वाणमिच्छन्ति योगिनो ब्रह्मवित्तमाः ॥ २८. ९ ॥

कर्मणो बीजरूपश्च सततं तत्फलप्रदः।
कर्मरूपश्च भगवान् परात्मा प्रकृतिः परा ॥ २८. १० ॥

सोऽपि तद्धेतुरूपश्च देहो नश्वर एव च।
कर्म-कर्ता च देही च आत्मा भोजयिता सदा ॥ २८. ११ ॥

भोगो विभवभेदश्च निष्कृति-र्मुक्तिरेव च।
प्राणदेहादिभृद्यो हि स जीवः परिकीर्तितः ॥ २८. १९ ॥

परमं व्यापकं ब्रह्म निर्गुणः प्रकृतेः परः।
कारणं कारणानां च परमात्मा स उच्यते ॥ २८. २० ॥

28.9. வைஷ்ணவர்கள் ஹரிரூபத்தை யளிக்கும் பக்தியை விரும்புகிறார்கள். வேதவித்தகர்களாகிய யோகிகள் நிர்வாணமளிக்கும் பக்தியை விரும்புகிறார்கள்.

28.10. கருமவடிவினராயும் கருமங்களுக்கு வித்துப் போலுமிருக்கும் பகவான் எப்பொழுதும் அவற்றின் பலனை அளிப்பவர். அவர் பரமாத்மா எனப்படுவார். பரா அல்லது பராசக்தி என்பது பிரகிருதி.

28.11. பகவான் பிரகிருதிக்கும் காரணமாகியவர். தேகம் அழியக் கூடியது. கருமத்தைச் செய்பவன் தேகி. எப்பொழுதுமே பரமாத்மா போகத்தை அனுபவிக்கச் செய்பவர்.

28.19. போகம் என்பது பலவகை ஐசுவரியம். நிஷ்க்ருதி என்பது முக்தியே. உடலையும் பிராணனையும் தாங்குபவன் எவனோ அவன் ஜீவன் எனக் கூறப்படுகிறான்.

28.20. பிரம்மம் என்பது நிர்க்குணமாய்ப் பிரகிருதிக்கு அப்பாற்பட்டதாய் எங்கும் வியாபித்ததாய் உள்ள பரம்பொருள். காரணத்திற்கெல்லாம் காரணமாகிய அது பரமாத்மா எனவும் கூறப்படுகிறது.

सावित्र्युवाच --

त्यक्त्वा क्व यामि कान्तं वा त्वां वा ज्ञानार्णवं ध्रुवम् ।
यद्यत्करोमि प्रश्नं च तद्भवान्वक्तुमर्हति ॥ २८. २२ ॥

कां कां योनिं याति जीवः कर्मणा केन वा पुनः ।
केन वा कर्मणा स्वर्गं केन वा नरकं पितः ॥ २८. २३ ॥

केन वा कर्मणा मुक्तिः केन भक्तिर्भवेद्गुरौ ।
केन वा कर्मणा योगी रोगी वा केन कर्मणा ॥ २८. २४ ॥

धर्म उवाच —

कन्या द्वादशवर्षीया वत्से त्वं वयसाऽधुना ।
ज्ञानं ते पूर्वविदुषां ज्ञानिनां योगिनां परम् ॥ २९. २ ॥

ஸாவித்ரி கூறியது—

28.22. எனது கணவனேயோ அல்லது நிச்சயமான ஞானக்கடலாகிய உம்மையோ விட்டு நான் எங்கு செல்வேன்? மேலும் நான் கேட்கும் கேள்விகள் எவையோ அவற்றிற்கும் தாங்கள் விடை கூறியருளுதல் வேண்டும்.

28.23. எந்தெந்தக் கர்மாவால் ஜீவன் எந்தெந்தப் பிறவியை அடைகிருன்? பிதாவே! எந்தக் கர்மாவால் ஸ்வர்க்கம், எதனுல் நரகம்?

28.24. எந்தக் கர்மாவால் முக்தி? எதனுல் குருவிடம் பக்தி ஏற்படும்? எப்படிப்பட்ட கர்மாவால் ஒருவன் யோகியாகிருன்? எப்படிப்பட்ட கர்மாவால் ரோகியாகிருன்.

யமதர்மராஜன் கூறியது—

29.2. குழந்தாய்! இப்பொழுது நீ பன்னிரண்டு வயதுக் கன்னிகை. முற்காலத்திய கல்விமான்களுக்கும் ஞானிகளுக்கும் யோகிகளுக்கும் இருந்ததைவிட மேலான ஞானம் உனக்கிருக்கிறது.

सावित्री-वरदानेन त्वं सावित्रीकला सती।
प्राप्ता पुरा भूभृता च तपसा तत्समा सुते ॥ २९. ३ ॥

यथा श्रीः श्रीपते क्रोडे भवानीच भवोरसि।
सौभाग्या सुप्रिया त्वं च तथा सत्यवतः प्रिये ॥ २९. ७ ॥

अयं तुभ्यं वरो दत्तोऽप्यपरं च यथेप्सितम्।
वृणु देवि महाभागे ददामि सकलेप्सितम् ॥ २९. ८ ॥

सावित्र्युवाच —

सत्यवत औरसानां पुत्राणां शतकं मम।
भविष्यति महाभाग वरमेतन्मदीप्सितम् ॥ २९. ९ ॥

मत्पितुः पुत्रशतकं श्वशुरस्य च चक्षुषी।
राज्यलाभो भवत्वेवं वरमेतन्मदीप्सितम् ॥ २९. १० ॥

29.3. பதிவிரதையே! ஸாவித்ரி தேவியின் வர தானத்தால் நீ ஸாவித்ரியின் கலையாகத் தோன்றியவள். பெண்ணே! அரசருடைய முந்தைய தவத்தால் அவளுக்குச் சமமான உன்னை அவர் பெற்றார்.

29.7. ஸத்தியவானுக்குப் பிரியமானவளே! ஸ்ரீபதியின் மார்பில் ஸ்ரீதேவி எப்படியோ, சிவனுடைய உடலில் பவானி எப்படியோ அப்படி ஸௌபாக்கியவதியாயும் பர்த்தாவுக்கு மிகவும் பிரியமானவளாயும் நீ இருப்பாயாக.

29.8. இவ்வரம் என்னால் உனக்களிக்கப்பட்டது. மேலும் உனக்கு விருப்பமான இன்னொரு வரம் கேட்டுக் கொள்ளலாம். மகாபாக்கியசாலியான தேவியே! உனக்கு எல்லா விருப்பங்களையும் அளிக்கிறேன்.

ஸாவித்ரி கூறியது—

29.9. ஸத்தியவானிடம் எனக்கு நூறுபுத்திரர்கள் பிறக்கவேண்டும். மகாபுருஷரே! இது நான் விரும்பும் வரம்.

29.10. என் தந்தைக்கும் நூறு புத்திரர்களும், என் மாமனுருக்குக் கண் பார்வையும், ராஜ்யலாபமும் ஏற்பட வேண்டும். இது நான் விரும்பும் வரம்.

अन्ते सत्यवता सार्धं यास्यामि हरिमन्दिरम् ।
समतीते लक्षवर्षे देहीदं मे जगत्प्रभो ।। २९. ११ ।।

जीवकर्मविपाकं च श्रोतुं कौतूहलं मम ।
विश्वनिस्तारबीजं च तन्मे व्याख्यातु-मर्हसि ।। २९. १२ ।।

धर्मराज उवाचा—

भविष्यति महासाध्वि सर्वं मानसिकं तव ।
जीवकर्मविपाकं च कथयामि निशामय ।। २९. १३ ।।

शुभाना-मशुभानां च कर्मणां जन्म भारते ।
सुरा दैत्या दानवाश्च गन्धर्वा राक्षसादयः ।।
नराश्च कर्मजनका न सर्वे जीविनः सति ।। २९. १५ ।।

29.11. ஜகத்பிரபுவே! இலக்ஷ வருஷம் கழித்து ஸத்தியவானுடன் விஷ்ணு லோகம் செல்லும்படியான இந்த வரத்தையும் கொடுத்தருளும்.

29.12. ஜீவனுடைய கருமத்தின் பயன் எப்படிப் பட்டதென்பதையும் அனைத்தையும் கடந்து செல்வதற்கு வழியையும் எனக்குக் கேட்க ஆசை. அதையும் கூறியருள வேண்டும்.

யமதர்மராஜன் கூறியது—

29.13 மகாபதிவிரதையே! உன் மனதிலுள்ள எண்ண மெல்லாம் பூர்த்தியாகும். ஜீவகர்மப் பயனையும் கூறுகிறேன், கேள்.

29.15. பதிவிரதையே! புண்ணியமும் பாவமுமான கருமங்களுக்குத் தக்கப்படி பாரத பூமியில் பிறவி ஏற்படுகிறது. தேவர்கள், தைத்தியர்கள், தானவர்கள், கந்தர்வர்கள், ராக்ஷஸர்கள் முதலியோரும் மனிதர்களும் கருமத்தை உற்பத்தி செய்கின்றனர்; எல்லா உயிர்களும் அங்ஙனம் செய்வதில்லை.

विशिष्टजीविनः कर्म भुंजते सर्वयोनिषु।
शुभाऽशुभं भुंजते च कर्म पूर्वार्जितं परम् ।। २९. १७ ।।
शुभेन कर्मणा याति स्वर्लोकादिकमेवच ।
कर्मणा चाशुभेनैव भ्रमन्ति नरकेषु च ।। २९. १८ ।।
कर्मनिर्मूलने भक्तिः सा चोक्ता द्विविधा सति।
निर्वाणरूपा भक्तिश्च ब्रह्मणः प्रकृतेरिह ।। २९. १९ ।।
रोगी कुकर्मणा जीवश्चारोगी शुभकर्मणा ।
दार्घजीवी च क्षीणायुः सुखी दुःखी च कर्मणा ।। २९. २० ।।
दुर्लभा मानुषीजातिः सर्वजातिषु भारते ।
कर्मभोगी सकामश्च निष्कामो निरुपद्रवः ।
स याति देहं त्यक्त्वा च पदं यत्तन्निरामयम् ।। २९. २६ ।।

29.17. மற்ற உயிர்கள் பலவகைப் பிறவிகளில் முந்தைய கருமத்தை அனுபவிக்கின்றனர். முந்தைய பிறவிகளில் ஸம்பாதித்த புண்ணியபாவங்களைத் தான் அனுபவிக்கின்றனர்.

29.18. புண்ணியகருமத்தால் ஜீவன் ஸ்வர்க்கம் முதலிய உலகங்களுக்குச் செல்லுகிறான்; பாவகருமங்களால் நரகங்களில் உழல்கிறான்.

29.19. கருமம் வேரற்றுப் போனால் பக்தி உண்டாகும். பதிவிரதையே! அது இருவகை. பிரம்மத்திடம் நிர்வாணரூபமானது ஒன்று; மற்றது பிரகிருதியில் பக்தி.

29.20. தீச் செயலால் ரோகியாகவும் நற்செயலால் ரோகமற்றவனாகவும் ஜீவன் பிறக்கிறான். நீண்ட ஆயுளுள்ளவனாகவும், அற்பாயுளுள்ளவனாகவும், சுகமுள்ளவனாகவும் துக்கமுள்ளவனாகவும் ஆவது கருமத்தாலேயே.

29.26. பலபிறவிகளுள் பாரதபூமியில் மனிதப் பிறவி அடைதற்கரிது. ஆசைவாய்ப்பட்டவன் கருமப் பயன்களை அனுபவிக்கிறான். ஆசையற்றவன் துன்பம் நீங்கியவனாய் உடலைவிட்டபின் நிராமயமான பதத்தையடைகிறான்.

सर्वदानप्रदातुश्च सर्वसिद्धेश्वरस्यच।
अस्त्येव पुनरावृत्ति-र्न भक्तस्य महेशितुः ।। ३०. ५२ ।।

देवीमन्त्रोपासकाश्च विहाय मानवीं तनुम्।
विभूति दिव्यरूपंच जन्ममृत्युजराहरम् ।। ३०. ५४ ।।

लब्ध्वा देव्याश्च सारूप्यं देवीसेवां च कुर्वते।
नश्यन्ति देवा सिद्धाश्च विश्वानि निखिलानि च।
देबी भक्ता न नश्यन्ति जन्ममृत्युजराहराः ।। ३०. ५६ ।।

पाठे चतुर्णां वेदानां प्रदक्षिण्यं भुवस्तथा।
फलभूतमिदं सर्वं मुक्तिदं शक्तिसेवनम् ।। ३०. १३५ ।।

पुराणेषु च वेदेषु चेतिहासेषु सर्वतः।
निरूपितं सारभूत देवी-पादाम्बुजार्चनम् ।। ३० १३६ ।।

30.52. எல்லா தானங்களேயும் செய்தவனுயினும் எல்லா சித்திகளுக்கும் ஈசுவரனுயினும் மறுபிறப்புண்டு; மகேசுவர பக்தனுக்கு இல்லே.

30.54–56. தேவீமந்திர உபாஸகர்கள் மனித உடலே நீத்தபின் பிறப்பு, இறப்பு, மூப்பு ஆகியவற்றைப் போக்கும் பெருமையையும் திவ்யமான தேவியின் ஸாரூப்யத்தையு மடைந்து தேவியின் சேவையைச் செய்கிருர்கள். தேவர் களும் சித்தர்களும் அழிவடைவார்கள். உலகங்கள் எல்லாமும் அழிந்து போம். பிறப்பிறப்பு மூப்பை ஜயித்த தேவீ பக்தர்கள் அழிவதில்லே.

30.135. சக்திசேவையானது நாலு வேதங்களேயும் ஓதிய பயனேயும், பூமியைப் பிரதக்ஷிணம் செய்த பயனேயும் அனேத்தையுமளித்து முக்தியையுமளிக்கும்.

30.136. வேதங்களிலும் இதிஹாஸங்களிலும் புராணங்களிலும் எங்கும் ஸாரமாக நிருபிக்கப்பட்டது தேவியின் பாத கமலங்களே அர்ச்சனே செய்வதேயாம்.

तद्वर्णनं च तद्ध्यानं तन्नामगुणकीर्तनम्।
तत्स्तोत्र-स्मरणं चैवं वन्दनं जपमेव च ॥ ३०. १३७ ॥

तत्पादोदकनैवेद्यं भक्षणं नित्यमेव च।
सर्वसम्मतमित्येवं सर्वेप्सित-मिदं सति ॥ ३० १३८ ॥

सावित्र्युवाच—

शक्तेरुत्कीर्तनं कर्म सकलोद्धारकारणम्।
मुक्तित्व-ममरत्वंच सर्वसिद्धित्व-मेव च।
भजामि केन विधिना वद वेदविदां वर ॥ ३१. ४ ॥

तपसा धर्ममाराध्य पुष्करे भास्करः पुरा।
धर्मं सूर्यः सुतं प्राप धर्मराजं नमाम्यहम् ॥ ३१. ७ ॥

30.137–8. பதிவிரதையே! நாள்தோறும் தேவியை வர்ணிப்பது, அவளை தியானிப்பது, அவளுடைய குணங்களைக் கீர்த்தனம் செய்வது, அவளைத் துதிப்பது, நினைப்பது, வந்தனம் செய்வது, ஜபம் செய்வது. அவளுடைய பாத தீர்த்தத்தைப் பருகுவது, அவளுக்கு நிவேதனம் செய்வதைப் புசிப்பது ஆகிய இவை எல்லோருக்கும் ஏற்றனவாயும் எல்லோராலும் விரும்பப்படுவனவாயும் உள்ளன.

ஸாவித்ரி கூறியது—

31.4. வேதத்தையுணர்ந்தவர்களிற் சிறந்தவரே! எந்த சக்தியைக் கீர்த்தனம் செய்வது எல்லோரையும் கைதூக்கிவிடுவதோ, முக்தியையும் சாகா நிலையையும் எல்லா சித்திகளையும் அளிப்பதோ அந்த சக்தியை எந்த முறையில் நான் பூஜிக்கவேண்டும் என்பதைக் கூறியருளும்.

31.7. ஆதிகாலத்தில் சூரியபகவான் புஷ்கரத்தில் தவமிருந்து தருமதேவதையை ஆராதித்து எந்த தரும தேவதையையே புத்திரனுக அடைந்தாரோ அந்த யமதர்ம ராஜனை நான் நமஸ்கரிக்கிறேன்.

समता सर्वभूतेषु यस्य सर्वस्य साक्षिणः।
अतो यन्नाम शमनमिति तं प्रणमाम्यहम् ॥ ३१. ८ ॥

येनान्तश्च कृतो विश्वो सर्वेषां जीविनां परम्।
कामानुरूपं कालेन तं कृतान्तं नमाम्यहम् ॥ ३१. ९ ॥

बिभर्ति दण्डं दण्डाय पापिनां शुद्धिहेतवे।
नमामि तं दण्डधरं यः शास्ता सर्वजीविनाम् ॥ ३१. १० ॥

विश्वं च कलयत्येव यः सर्वेषु च सन्ततम्।
अतीव दुर्निवार्यं च तं कालं प्रणमाम्यहम् ॥ ३१. ११ ॥

तपस्वी ब्रह्मनिष्ठो यः संयमी सन् जितेन्द्रियः।
जीवानां कर्मफलदस्तं यमं प्रणमाम्यहम् ॥ ३१. १२ ॥

31.8. அனைத்திற்கும் சாக்ஷியாயிருக்கும் எவருக்கு எல்லா உயிர்களிடமும் ஸமபாவனையிருப்பதால் சமனன் எனப் பெயரோ அந்த யமனை நமஸ்கரிக்கிறேன்.

31.9. உயிர்படைத்த உலகனைத்திற்கும் அந்தத்தை (முடிவை) செய்வதால் எவர் கிருதாந்தர் எனப் பெயர் பெற்றவரோ, காலத்திற்குத் தக்கப்படி விரும்பிய வடிவு ஏற்பவரோ அவரை நமஸ்கரிக்கிறேன்.

31.10. பாவிகளைத் தண்டித்துப் புனிதமாக்குவதற்காக எவர் தண்டத்தைத் தாங்குகிறாரோ, எவர் எல்லா ஜீவர்களையும் அடக்கியாள்பவரோ, அந்த தண்டதரரான யமனை நமஸ்கரிக்கிறேன்.

31.11. எல்லோரிடமும் இடைவிடாது, காலத்தைக் கணக்கிட்டு முடிப்பவரும் அதை எவ்வகையிலும் நீக்க முடியாதவருமாயிருக்கும் காலஸ்வரூபியான அவரை நான் நமஸ்கரிக்கிறேன்.

31.12. தபஸ்வியாயும் பிரம்மநிஷ்டராயும் இந்திரியங்களை நன்கு ஜயித்தவராயும் ஜீவர்களுக்குக் கர்மபலனை அளிப்பவராயும் உள்ள அந்த யமனை நான் நமஸ்கரிக்கிறேன்.

स्वात्मारामश्च सर्वज्ञो मित्रं पुण्यकृतां भवेत्।
पापिनां क्लेशदो यस्तं पुण्यमित्रं नमाम्यहम्॥ ३१. १३॥

यज्जन्मब्रह्मणोंऽशेन ज्वलन्तं ब्रह्मतेजसा।
यो ध्यायति परब्रह्म तमीशं प्रणमाम्यहम्॥ ३१. १४॥

नारायण उवाच—

इत्युक्त्वा सा च सावित्री प्रणनाम यमं मुने।
मायाबीजं महामन्त्रं प्रदत्वा विधिपूवकम्।
कर्माशुभविपाकं च तामुवाच रवेः सुतः॥ ३२. १॥

धर्मराज उवाच—

नानाप्रकारं स्वर्गं च याति जीवः स्वकर्मभिः।
शुभकर्मविपाकान्न नरकं याति कर्मभिः।
कुकर्मणा च नरकं याति नानाविधं नरः॥ ३२. ४॥

31.13. ஆத்மாராமரும் எல்லாமறிந்தவரும் புண்ணிய சாலிகளுக்கு நண்பரும் பாவிகளுக்குத் துன்பந் தருபவருமாகிய புண்ணியமித்திரர் எவரோ அவரை நான் நமஸ்கரிக்கிறேன்.

31.14. எவருடைய ஜன்மம் பிரம்மாவின் அம்சமோ, எவர் பிரம்மதேஜஸால் ஜ்வலிக்கிறரோ எவர் பரப் பிரம்மத்தை தியானிப்பவரோ அந்த ஈசுவரரை நான் நமஸ்கரிக்கிறேன்.

நாராயணரிஷி கூறியது—

32.1. முனிவரே! இப்படித் துதித்து ஸாவித்ரி யமனை நமஸ்கரித்தாள். சூரிய புத்திரனை யமன் அவளுக்கு முறைப்படி மாயாபீஜ மந்திரத்தை உபதேசித்துப் பின்னர் பாவச் செயல்களின் பலனைப் பற்றியும் கூறினர்.

யமதர்மராஜன் கூறியது—

32.4. ஜீவன் தனது கர்மங்களுக்குத் தக்கப்படி பல விதமான ஸ்வர்க்க போகங்களை அனுபவிக்கிறன். புண்ணிய கருமங்களின் பயனுக பவன் நரகம் செல்லுவதில்லை. தீச்செயல்களின் பயனுகப் பலவிதமான நரக யாதனைகளை மனிதன் அடைகிறன்.

श्रीकृष्णे च तदर्चाया-मन्येषां प्रकृतौ सति।
शिवे च शिवलिंगे च सूर्ये सूर्यमणौ तथा॥ ३४. ३२॥
गणेशे वाऽथदुर्गाया-मेवं सर्वत्र सुन्दरि।
यः करोति भेदबुद्धिं ब्रह्महत्यां लभेत्तु सः॥ ३४. ३३॥
देवता प्रतिमां दृष्ट्वा गुरुं वा ब्राह्मणं सति।
संभ्रमान्न नमेद्यो हि स गोहत्यां लभते ध्रुवम्॥ ३४. ६५॥
पुंश्चल्यन्नं च यो भुंक्ते योऽस्यां गच्छेत्पतिव्रते।
स द्विजः कालसूत्रं च मृतो याति सुदुर्गमम्॥ ३५. २॥
न पालयेत्प्रतिज्ञां च स च ज्वालामुखं व्रजेत्।
मित्रद्रोही कृतघ्नश्च यश्च विश्वासघातकः।
मिथ्यासाक्ष्यप्रदश्चैव स च ज्वालामुखं व्रजेत्॥ ३५. ३९॥

34.32–33. பதிவிரதையே! சுந்தரி! ஸ்ரீகிருஷ்ணனுக்கும் அவருடைய அர்ச்சாவிக்கிரகத்திற்கும் வேறு பிரகிருதிகளுக்கும், சிவனுக்கும் சிவலிங்கத்திற்கும், சூரியனுக்கும் சூரியகாந்தக் கல்லுக்கும், கணேசருக்கும் துர்க்கைக்கும், அவ்வாறே மற்றெல்லா இடங்களிலும் எவன் பேத புத்தியைச் செய்கிருனே அவன் பிரம்மஹத்தி செய்த பாவத்தை அடைவான்.

34.65. பதிவிரதையே! தேவதையின் பிரதிமையையோ குருவையோ, பிராம்மணனையோ தரிசித்தவுடன் எவன் மதிமயக்கத்தால் நமஸ்கரிக்கவில்லையோ அவன் நிச்சயமாகப் பசுவைக் கொன்ற பாவத்திற்காளாவான்.

35.2. ஒரு வியபசாரியின் அன்னத்தை உண்பவனும் ஸஹகமனம் செய்பவனுமாகிய பிராம்மணன் இறந்த பின் கொடிய காலஸமுத்ரம் எனும் நரகத்தையடைவான்.

35.39. உறுதிமொழியைக் காப்பாற்ருதவன் ஜ்வாலாமுகம் எனும் நரகத்தை யடைவான். நண்பனுக்கு துரோகம் செய்பவனும், நன்றி கெட்டவனும், நம்பியவனைக் கெடுப்பவனும், பொய்ச்சாக்ஷி சொல்பவனும் ஜ்வாலாமுக நரகத்தை யடைவர்.

नित्यक्रियाविहीनश्च जडत्वेन युतो द्विजः।
यस्याऽनास्था वेदवाक्ये मन्दं हसति सन्ततम्॥ ३५. ४९ ॥
व्रतोपवासहीनश्च सद्वाक्यपरनिन्दकः।
धूम्रान्धे च वसेत्सोऽपि शताब्दं धूम्रभक्षकः॥ ३५. ५० ॥

सावित्र्युवाच—

सर्वेषु सारभूतं यत्सर्वेष्टं सर्वसम्मतम्।
कर्मच्छेदबीजरूपं प्रशस्तं सुखदं नृणाम्॥ ३६. २ ॥
कुण्डानि ते न पश्यन्ति तेषु नैव पतन्ति च।
न भवेद्येन जन्मादि तत्कर्म वद साम्प्रतम्॥ ३६. ४ ॥
स्वदेहे भस्मसाद्भूते याति लोकान्तरं नरः।
केन देहेन वा भोगं करोति च शुभाशुभम्॥ ३६. ६ ॥

35.49–50. மூடத்தனத்தால் நித்தியகர்மாக்களைச் செய்யாதவனும், வேதவாக்கியத்தில் பற்றில்லாதவனும், எப்பொழுதும் மந்தமாகச் சிரித்துக் கொண்டிருப்பவனும், விரதம், உபவாஸம் முதலியவையில்லாதவனும், நல்ல வாக்கியங்களையும் பிறரையும் நிந்திப்பவனும், புகையை உண்பவனும் நூறு வருஷம் தூம்ராந்தம் எனும் நரகத்தில் வசிப்பான்.

ஸாவித்ரி கூறியது—

36.2–4. அனைத்தினும் ஸாரமானதும் அனைவருக்கும் பிரியமானதும் சம்மதமானதும் கருமத்தின் விதையை நாசம் செய்வதும் மனிதற்கு சுகமளிப்பதென்று பிரசித்தமானதும் எதுவோ, எதனால் மனிதர்கள் நரகத்தில் விழமாட்டார்களோ நரகத்தைப் பார்க்கவும் மாட்டார்களோ, எதனால் பிறவித் துன்பம் ஒழியுமோ அந்தக்கருமம் எதுவென்று இப்பொழுது கூறியருளும்.

36.6. உடல் சாம்பலாய்ப் போனபின் மனிதன் எந்த உடலுடன் பிற உலகங்களுக்குப் போகிறான், புண்ணியமும் பாவமுமான கர்மபலன்களை அனுபவிக்கிறான்?

सुचिरं क्लेशभोगेन कथं देहो न नश्यति।
देहो वा किं विधो ब्रह्मंस्तन्मे व्याख्यातु-मर्हसि ॥ ३६. ७ ॥

नारायण उवाच—

सावित्री-वचनं श्रुत्वा धर्मराजो हरिं स्मरन्।
कथां कथितुमारेभे कर्मबन्धनिकृन्तनीम् ॥ ३६. ८ ॥

धर्मराज उवाच—

वत्से चतुर्षु वेदेषु धर्मेषु संहितासु च।
पुराणेष्वितिहासेषु पांचरात्रादिकेषु च ॥ ३६. ९ ॥
अन्येषु धर्मशास्त्रेषु वेदांगेषु च सुव्रते।
सर्वेषु सारभूतं च पंचदेवानुसेवनम् ॥ ३६. १० ॥

36.7. நெடுங்காலம் துன்பத்தையனுபவித்தும் எப்படி தேகம் அழியாமலிருக்கிறது? தேகம் எத்தனை வகை? பிரம்மஸ்வரூபியே! அதை எனக்கு விளக்கிக் கூறுதல் தகும்.

நாராயணரிஷி கூறியது—

36.8. ஸாவித்திரியின் வசனத்தைக் கேட்ட தர்ம ராஜர் ஹரியை தியானித்துக் கொண்டு கருமத்தளையைச் சேதிக்கும் வழியைப் பற்றிக் கூறலானார்.

தர்மராஜர் கூறியது—

36.9–10. குழந்தாய்! நல்ல விரதமுடையவளே! நாலு வேதங்களிலும், தருமங்களைக் கூறும் ஸம்ஹிதை களிலும், புராணங்களிலும், இதிஹாஸங்களிலும், பாஞ்ச ராத்ரம் முதலிய தந்திரங்களிலும், பிற தர்ம சாஸ்திரங் களிலும், வேதாங்கங்களிலும், அனைத்திலும் ஸாரமானது பஞ்சதேவ பூஜை.

जन्ममृत्यु-जरा-व्याधि-शोक-सन्ताप-नाशनम् ।
सर्वमंगलरूपंच परमानन्दकारणम् ।। ३६. ११ ।।

कारणं सर्वसिद्धीनां नरकार्णवतारणम् ।
भक्तिवृक्षांकुरकरं कर्मवृक्षनिकृन्तनम् ।। ३६. १२ ।।

कुण्डानि यमदूतैश्च रक्षितानि सदा शुभे ।
न हि पश्यन्ति स्वप्ने च पंचदेवार्चका नराः ।। ३६. १४ ।।

शृणुदेहविवरणं कथयामि यथागमम् ।
पृथिवी वायुराकाशं तेजस्तोयमितिस्फुटम् ।। ३६. २७ ।।

देहिनां देहबीजं च स्त्रष्टसृष्टिविधौपरम् ।
पृथिव्यादि-पंचभूतैर्यो देहो निर्मितो भवेत् ।। ३६. २८ ।।

36.11. பிறப்பு, இறப்பு, மூப்பு, நோய், துக்கம் ஆகிய பீடையைப் போக்குவதும், எல்லா மங்கள வடிவானதும் பரமானந்தத்திற்குக் காரணமாயிருப்பதும் அது.

36.12. எல்லா சித்திகளுக்கும் காரணமாகவும், நரக மாகிற கடலைக் கடத்துவிப்பதாகவும், பக்தியெனும் விருக்ஷத்தை முளைக்கச் செய்வதாகவும், கருமமாகிற விருக்ஷத்தை நாசம் செய்வதாகவும் உளது அது.

36.14. மங்கள வடிவினளே! பஞ்தேவதா பூஜையைச் செய்யும் மனிதர்கள் கனவிலுங்கூட யமதூதர்களால் காக்கப்பட்ட நரக குண்டங்களை ஒரு பொழுதும் பார்க்க மாட்டார்கள்.

36.27–28. இனி தேகத்தைப் பற்றிய விவரணத்தை உள்ளபடி கூறுகிறேன், கேள். பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்ற பஞ்சபூதங்கள் ஜீவர்களுடைய தேகங்களுக்கு வித்துப் போன்றவை. சிருஷ்டிகர்த்தா பிருதிவி முதலிய பஞ்சபூதங்களால் தேகத்தைத் தோற்றுவிக்கிறார்.

स कृत्रिमो नश्वरश्च भस्मसाच्च भवेदिह।
बद्धोऽङ्गुष्ठप्रमाणश्च यो जीवः पुरुषः कृतः ॥ ३६. २९ ॥

बिभर्ति सूक्ष्मं देहं तं तद्रूपं भोगहेतवे।
स देहो न भवेद्भस्म ज्वलदग्नौ ममालये।
न दग्धो न च भग्नः स भुंक्ते सन्तापमेव च ॥ ३६. ३२ ॥

सावित्र्युवाच—
देवीभक्तिं देहि मह्यं साराणां चैव सारकम्।
पुंसां मुक्तिद्वारबीजं नरकार्णवतारकम्।
मुक्तिश्च कतिधाऽप्यस्ति किं वा तासांच लक्षणम् ॥ ३८. १ ॥

धर्मराज उवाच—
श्रोतुमिच्छसि कल्याणि श्रीदेवीगुणकीर्तनम्।
वक्तॄणां पृच्छकानां च श्रोतॄणां कुलतारणम् ॥ ३८. ८ ॥

36.29–32. அப்படி தோற்றுவிக்கப்பட்டது அழிவடைவதாகவும் இங்கு சாம்பலாய்ப் போவதாகவும் ஆகிறது. கட்டை விரல் அளவுடையவனுய்ச் சரீரத்தினுள் கட்டுண்டிருக்கும் ஜீவன் அந்த சூக்ஷ்ம சரீரத்தை இன்ப துன்பங்களை அனுபவிப்பதற்காகத் தாங்குகிறுன். என்னுடைய உலகில் ஜ்வலிக்கும் அக்னியிலும் அந்த தேகம் சாம்பலாவதில்லை. எரிக்கப்படாமலும் சிதைக்கப்படாமலும் அதுவே மிகுந்த தாபத்தை அனுபவிக்கிறது.

ஸாவித்ரி கூறியது—

38.1. ஸாரத்திலெல்லாம் ஸாரமானதும், மனிதர்க்கு முக்திவாயிலுக்கு வித்துப் போன்றதும், நரகக் கடலைத் தாண்டுவிப்பதுமாகிய தேவீபக்தியை எனக்குத் தந்தருளும். முக்தி எத்தனை வகை? அவற்றின் இலக்ஷணம் யாது?

தர்மராஜர் கூறியது—

38.8. கல்யாணி! கூறுபவர்க்கும் கேட்பவர்க்கும் குல உத்தாரணம் செய்யத்தக்க ஸ்ரீதேவியின் குண கீர்த்தனத்தை நீ கேட்க விரும்புகிறுய்.

स्वयं पुमांश्च प्रकृतिस्तावभिन्नौ परस्परम् ।
यथा वह्नेस्तस्य शक्तिर्नभिन्नाऽस्त्येव कुत्रचित् ॥ ३८. २८ ॥

सेयं शक्तिर्महामाया सच्चिदानन्दरूपिणी ।
रूपं बिभर्त्यरूपा च भक्तानुग्रहहेतवे ॥ ३८. २९ ॥

गोपालसुन्दरीरूपं प्रथमं सा ससर्ज ह ।
अतीव कमनीयं च सुन्दरं सुमनोहरम् ॥ ३८. ३० ॥

नवीननीरदश्यामं किशोरं गोपवेषकम् ।
कन्दर्पकोटिलावण्यं लीलाधाममनोहरम् ॥ ३८. ३१ ॥

परब्रह्मस्वरूपं च ज्वलन्तं ब्रह्मतेजसा ।
सुखदृश्यं च शान्तं च राधाकान्तमनन्तकम् ॥ ३८. ३४ ॥

38.28. புருஷனும் பிரகிருதியும் ஒன்றினின்று ஒன்று பிரிக்க முடியாதது; அக்னியும் அதின் சக்தியும் எப்படி ஒரு பொழுதும் வேறன்ருே அப்படி.

38.29. ஸச்சிதானந்த ரூபிணியான சக்தியெனும் இந்த மகாமாயை உருவமற்றவளாயினும் பக்தர்களுக்கு அருள்புரியும் பொருட்டு உருவந்தரிக்கிருள்.

38.30. (புருஷனும் பிரகிருதியும் ஒன்றேயாகிய) கோபால ஸுந்தரீ ரூபத்தை முதலில் அந்தப் பராசக்தி தோற்றுவித்தாள். அது அளவு கடந்த கவர்ச்சியும் அழகும் கொண்டு மனதைத் தன்னிடம் இழுப்பது.

38.31. புதிய மேகம்போல் சியாமளவர்ணத்துடனும் குழந்தைப்பருவமுடைய கோபவேஷத்துடனும் கோடி மன்மத லாவண்யத்துடனும் மனோஹரமான லீலைகளுடனும் கூடியது.

38.34. பிரம்மதேஜஸ்ஸால் ஜ்வலிக்கும் பரப் பிரம்மமே உருக் கொண்டது. காண்பவர்க்கு எல்லையற்ற சுகத்தையும் சாந்தியையும் அளிப்பது. ராதைக்குப் பதியாய் விளங்குவது.

प्रलये प्राकृते सर्वे देवाद्याश्च चराचरा:।
लीना धाता विधाता च श्रीकृष्णनाभिपंकजे ॥ ३८. ५३ ॥

स कृष्ण: प्रलये तस्यां प्रकृतौ लीन एव हि।
एकैव च पराशक्तिर्निर्गुण: परम: पुमान् ॥ ३८. ६८ ॥

सदेवेदमग्र आसीदिति वेदविदो विदु:।
मूलप्रकृतिरव्यक्ताऽप्याव्याकृतपदाभिधा ॥ ३८. ६९ ॥

चिदभिन्नत्वमापन्ना प्रलये सैव तिष्ठति।
तद्गुणोत्कीर्तनं वक्तुं ब्रह्माण्डेषु च क: क्षम: ॥ ३८. ७० ॥

तत्प्रधाना देवभक्तिर्मुक्तेरपि गरीयसी।
सालोक्यदा भवेदेका तथा सारूप्यदा परा।
सामीप्यदाऽथ निर्वाणप्रदा मुक्तिश्चतुर्विधा ॥ ३८. ७१ ॥

38.53. பிராக்ருதப் பிரளய காலத்தில் சராசரங்களும் தேவர்கள் முதலியவர்களும் உலகைச் சிருஷ்டிக்கும் பிரம்மாவும் ஸ்ரீ கிருஷ்ணனுடைய நாபிக்கமலத்தில் லயமடைகின்றனர்.

38.68. பிறகு கிருஷ்ணனும் பிரகிருதியில் லயமடைகிறார். எஞ்சியிருப்பவள் பராசக்தி ஒருவளேயாவாள். பரம புருஷர் நிர்க்குணர்.

38.69. இது ஆதியில் ஸத்தாகவே இருந்தது என்று வேதமறிந்தவர்கள் உணர்ந்தார்கள். மூலப்பிரகிருதியானவள் அப்பொழுது அவ்யக்தம் அவ்யாக்ருதம் எனும் பெயர்களால் குறிப்பிடப்படுகிறாள்.

38.70. பிரளயத்தில் சித்தினின்று வேறுபடாத நிலையை யடைந்து அவள் நிற்கிறாள். அவளுடைய குணத்தை எடுத்துரைக்க பிரம்மாண்டங்களில் யார்தான் வல்லவர்?

38.71. அவளை முதன்மையாய்க் கொண்ட பக்தியானது முக்தியினும் சிறந்ததாகும்; ஸாலோக்யமளிப்பது ஒன்று, ஸாரூப்யமளிப்பது இன்னொன்று, ஸாமீப்யமளிப்பது ஒன்று, நிர்வாணமளிப்பது ஒன்று என பக்தி நான்கு வகை.

भक्तास्ता न हि वांछन्ति विना तत्सेवनं विभोः ।
मुक्तिश्च सेवारहिता भक्तिसेवा विवर्धिनी ।। ३८. ७४ ।।

निर्विघ्नं शुभदं चोक्तं गच्छ वत्से यथा सुखम् ।
इत्युक्त्वा सूर्यपुत्रश्च जीवयित्वा च तत्पतिम् ।। ३८. ७७ ।।

तस्यै शुभाशिषं दत्त्वा गमनं कर्तुमुद्यतः ।
दृष्ट्वा यमं च गच्छन्तं सा सावित्री प्रणम्य च ।। ३८. ७८ ।।

रुरोद चरणौ धृत्वा साधुच्छेदेन दुःखिता ।
सावित्री रोदनं श्रुत्वा यमश्चैव कृपानिधिः ।
तामित्युवाच सन्तुष्टः स्वयं चैव रुरोद ह ।। ३८. ७९ ।।

38.74. பிரபுவாகிய பகவானை ஸேவிப்பதல்லாமல் பக்தர்கள் அந்நான்குவிதமான முக்தி நிலைகளையும் விரும்பு வதில்லை. முக்தி ஸேவைக்கிடமில்லாதது, பக்தி ஸேவையை வளர்ப்பது.

38.77–79. குழந்தாய்! தடையற்றதும் மங்களத்தை யளிப்பதுமான இது உனக்குக் கூறப்பட்டது. இனி நீ இஷ்டப்படி செல்லலாம்—என்று சூரிய புத்திரரான யமன் கூறி அவளுடைய கணவனையும் பிழைப்பித்து அவளுக்கு மங்கள ஆசீர்வாதமளித்து விட்டுச் செல்லத் தொடங்கவே, செல்லும் யமனை ஸாவித்ரி நமஸ்கரித்து அவருடைய பாதங்களைப் பிடித்துக் கொண்டு, ஸாதுவின் பிரிவாற்றுமையால் துக்கம் மேலிட்டு அழலானுள். கிருபா நிதியான யமன் ஸாவித்ரியின் அழுகையைக் கேட்டுத் தானும் அழுகை மேலிட்டவராய், ஸந்தோஷமும் பொங்க அவளை நோக்கி மேலும் பின்வருமாறு கூறினர்.

धर्म उवाच —

गत्वा च स्वगृहं भद्रे सावित्र्याश्च व्रतं कुरु।
द्विसप्तवर्षपर्यन्तं नारीणां मोक्षकारणम्।
ज्येष्ठशुक्लचतुर्दश्यां सावित्र्याश्च व्रतं शुभम् ॥ ३८. ८२ ॥
शुक्लाष्टम्यां भाद्रपदे महालक्ष्म्या यथा व्रतम्।
द्वयष्टवर्षं व्रतं चैव प्रत्यादेयं शुचिस्मिते ॥ ३८. ८३ ॥
करोति भक्त्या या नारी सा याति च विभोः पदम्।
प्रतिमंगलवारे च देवीं मंगलदायिनीम्।
प्रतिमासं शुक्लषष्ठ्यां षष्ठीं मंगलदायिनीम् ॥ ३८. ८४ ॥
तथा चाषाढसंक्रान्त्यां मनसां सर्वसिद्धिदाम्।
राधां रासे च कार्तिक्यां कृष्णप्राणाधिकप्रियाम् ॥ ३८. ८५ ॥

யமதர்மராஜன் கூறியது—

38.82. மங்களவடிவினளே! நீ வீடு சென்று ஸ்திரீகளுக்கு மோக்ஷகாரணமாய் விளங்கும் ஸாவித்ரீ விரதத்தை ஈரேழு வருஷம் அனுஷ்டிப்பாயாக. சுபமான ஸாவித்ரீ விரதம் ஜ்யேஷ்ட்ட (வைகாசி-ஆனி) மாஸம் சுக்ல சதுர்த்தசியில் அனுஷ்டிக்கத் தகுந்தது.

38.83. பாத்ரபத (ஆவணி-புரட்டாசி) சுக்லாஷ்டமியில் மகாலக்ஷ்மி விரதம் கைக் கொண்டு பதினறு வருஷம் அனுஷ்டிக்க வேண்டும்.

38.84. இப்படி பக்தியுடன் செய்யும் ஸ்திரீ பகவத் பதத்தையடைவாள். ஒவ்வொரு மங்கள வாரத்திலும் மங்களதாயினியான தேவியைப் பூஜிக்க வேண்டும். ஒவ்வொரு மாதமும் சுக்லபக்ஷம் ஷஷ்டியில் மங்களத்தையளிக்கும் ஷஷ்டீ தேவியைப் பூஜிக்க வேண்டும்.

38.85. ஆஷாட (ஆனி-ஆடி) ஸங்க்ராந்தியில் ஸர்வ ஸித்திகளையுமளிக்கும் மனஸாதேவியைப் பூஜிக்க வேண்டும். கிருஷ்ணனுக்குப் பிராணனைவிடப் பிரியமான ராதையை ராஸமண்டலத்தில் கார்த்திகையில் பூஜிக்க வேண்டும்.

उपोष्य शुक्लाष्टम्यां च प्रतिमासं वरप्रदाम्।
विष्णुमायां भगवतीं दुर्गां दुर्गार्तिनाशिनीम् ॥ ३८. ८६ ॥

प्रकृतिं जगदम्बां च पतिपुत्रवतीषु च।
पतिव्रतासु शुद्धासु यन्त्रेषु प्रतिमासु च ॥ ३८. ८७ ॥

या नारी पूजयेद्भक्त्या धनसन्तानहेतवे।
इह लोके सुखं भुक्त्वा यात्यन्ते श्रीविभोः पदम् ॥ ३८. ८८ ॥

एवं देव्या विभूतिश्च पूजयेत्साधकोऽनिशम्।
सर्वकालं सर्वरूपा संसेव्या परमेश्वरी ॥ ३८. ८९ ॥

नातः परतरं किंचित्कृतकृत्यत्वदायकम्।
इत्युक्त्वा तां धर्मराजो जगाम निजमन्दिरम् ॥ ३८. ९० ॥

38.86. வரப்பிரஸாதினியும் கடத்தற்கரிய துன்பங்களினின்று விடுவிப்பவளும் பகவதியும் விஷ்ணுமாயையுமான துர்க்கா தேவியை மாதந்தோறும் சுக்லபக்ஷ அஷ்டமியில் உபவாஸமிருந்து பூஜிக்க வேண்டும்.

38.87–88. பிரகிருதியாகிய ஜகதம்பிகையை பதியுடனும் புத்திரருடனும் கூடியிருக்கும் பரிசுத்தமான பதிவிரதையிடத்திலும், யந்திரங்களிலும், பிரதிமைகளிலும் எந்த ஸ்திரீ தனத்தையும் ஸந்தானத்தையும் விரும்பி பக்தியுடன் பூஜிக்கிருளோ அவள் இவ்வுலகில் இன்பத்தையனுபவித்து முடிவில் பிரபுவின் பதத்தையடைவாள்.

38.89. ஸாதகன் இவ்வாறு தேவியின் விபூதிகளை இடைவிடாது பூஜிக்க வேண்டும். எல்லா ரூபங்களிலும் விளங்கும் பரமேசுவரி எல்லாக் காலத்திலும் நன்கு சேவித்தற்குரியவள்.

38.90. கிருதகிருத்யனுகுந் தன்மையையளிப்பது இதைக் காட்டிலும் வேருக ஒரு சிறிதுமில்லை. என்றிவ்வாறு அவளிடம் கூறிவிட்டு தருமராஜர் தனது இருப்பிடமேகினுர்.

गृहीत्वा स्वामिनं सा च सावित्री च निजालयम् ।
सावित्री सत्यवांश्चैव प्रययौ च यथागमम् ॥ ३८. ९१ ॥

सावित्रीजनकः पुत्रान् संप्राप्तः प्रक्रमेण च ।
श्वशुरश्चक्षुषी राज्यं सा च पुत्रान् वरेण च ॥ ३८. ९२ ॥

लक्षवर्षं सुखं भुक्त्वा पुण्यक्षेत्रे च भारते ।
जगाम स्वामिना सार्धं देवीलोकं पतिव्रता ॥ ३८. ९३ ॥

सवितुश्चाधिदेवी या मन्त्राधिष्ठातृदेवता ।
सावित्री ह्यपि वेदानां सावित्री तेन कीर्तिता ॥ ३८. ९४ ॥

38.91. ஸாவித்ரியும் தன் நாயகனைக் கூட்டிக் கொண்டு தன் வீட்டிற்குச் சென்றாள். ஸாவித்ரியும் ஸத்திய வானும் வந்த வழியே சென்றனர்.

38.92. ஸாவித்திரியின் தந்தை நாளடைவில் புத்திரர் களைப் பெற்றார். அவள் மாமனார் இழந்திருந்த கண்களையும் அரசாட்சியையும் பெற்றார். அவளும் வரத்தால் புத்திரர் களைப் பெற்றாள்.

38.93. புண்ணிய பூமியாகிய பாரதத்தில் நீண்ட காலம் (லக்ஷ வருஷம்) சுகத்தையனுபவித்துப் பதிவிரதையான ஸாவித்ரி தனது நாயகனுடன் தேவியின் லோகம் சென்றாள்.

38.94. ஸவித்ரு தேவனுக்கு அதிதேவதையும், மந்திரத்திற்கு அதிஷ்டான தேவதையும், வேதங்களின் ஜனனியும் ஆகையால் அவள் ஸாவித்ரீ எனப் போற்றப் படுகிறாள்.

इत्येवं कथितं वत्स सावित्र्याख्यान-मुत्तमम्।
जीवकर्मविपाकं च किं पुनः श्रोतुमिच्छसि ॥ ३८. ९५ ॥

॥ सावित्र्युपाख्यानं समाप्तम् ॥

॥ इति श्रीदेवीभागवते नवमस्कन्धे अष्टत्रिंशोऽध्यायः ॥

38.95. குழந்தாய்! இங்ஙனம் உனக்கு ஸாவித்ரியின் உத்தமமான உபாக்கியானமும் ஜீவனுடைய கருமம் பயன ளிக்கும் வகையும் கூறப்பட்டன. இன்னும் என்ன கேட்க விரும்புகிறுய்?

ஸாவித்ரி உபாக்கியானம் முற்றும்.

இங்ஙனம் ஸ்ரீ தேவீபாகவதத்தில் ஒன்பதாவது ஸ்கந்தத்தில் முப்பத்தெட்டாவது அத்தியாயம் முற்றும்.

॥ लक्ष्म्युपाख्यानम् ॥ ४० ॥

नारद उवाच —

अधुना श्रोतुमिच्छामि लक्ष्म्युपाख्यानमीश्वर।
केनाऽऽदौ पूजिता साऽपि किं भूता केन वा पुरा।
तद्गुणोत्कीर्तिनं मह्यं वद वेदविदां वर ॥ ३९. ३ ॥

नारायण उवाच —

सृष्टेरादौ पुरा ब्रह्मन् कृष्णस्य परमात्मनः।
देवी वामांश संभूता बभूव रासमण्डले ॥ ३९. ४ ॥

सा देवी द्विविधा भूता सहसैवेश्वरेच्छया।
तद्वामांशान्महालक्ष्मीर्दक्षिणांशाच्च राधिका ॥ ३९. ६ ॥

40. லக்ஷ்மீ உபாக்கியானம்.

நாரதர் கூறியது—

39.3. ஈசுவரரே! இப்பொழுது லக்ஷ்மீ உபாக்கியானத்தைக் கேட்க விரும்புகிறேன். அந்த தேவி ஆதியில் யாரால் பூஜிக்கப்பட்டாள்? அவள் முதலில் எப்படி ஆவிர்ப்பவித்தாள்? எக்காரணத்திற்காக? வேதத்தை அறிந்தவர்களிற் சிறந்தவரே! அவளுடைய குணகீர்த்தனத்தை எனக்குக் கூறியருளும்.

நாரயணரிஷி கூறியது—

39.4. பிரம்மஸ்வரூபியே! முன்பு, சிருஷ்டியின் ஆதியில் பரமாத்மாவாகிய ஸ்ரீகிருஷ்ணனுடைய சக்தி ராஸமண்டலத்தில் அவருடைய இடது அம்சமாகத் தோன்றினாள்.

39.9. ஈசுவரருடைய இச்சையால் அந்த தேவி இரண்டாகப் பிரிந்தாள். அவளுடைய இடது பக்கத்திலிருந்து மகாலக்ஷ்மி, வலது பக்கத்திலிருந்து ராதிகை.

कृष्णस्तद्गौरवेणैव द्विधा रूपो बभूव ह।
दक्षिणांशश्च द्विभुजो वामांशश्च चतुर्भुजः ।। ३९. ११ ।।

चतुर्भुजाय द्विभुजो महालक्ष्मीं ददौ पुरा।
राधाकान्तश्च द्विभुजो लक्ष्मीकान्तश्चतुर्भुज: ।। ३९. १३ ।।

सर्वांशेन समौ तौ द्वौ कृष्णनारायणौ परौ।
महालक्ष्मीश्च योगेन नानारूपा बभूव सा ।। ३९. १५ ।।

वैकुण्ठे च महालक्ष्मीः परिपूर्णतमा रमा।
स्वर्गेषु स्वर्गलक्ष्मीश्च शक्रसम्पत्स्वरूपिणी ।। ३९. १७ ।।

पाताले नागलक्ष्मीश्च राजलक्ष्मीश्च राजसु।
गृहलक्ष्मीर्गृहेष्वेव गृहिणां च कलांशतः ।। ३९. १८ ।।

39.11. அவர்களை கௌரவிக்க ஸ்ரீ கிருஷ்ணனும் இரண்டு வடிவானுர்; வலது புறத்திலிருந்து இரண்டு புஜங்களுடைய உருவம், இடது புறத்திலிருந்து நான்கு புஜங்களுடைய உருவம்.

39.13. முதலில் இரண்டு புஜ மூர்த்தியானவர் நான்கு புஜமூர்த்திக்கு மகாலக்ஷ்மியைக் கொடுத்தார். இரண்டு புஜ மூர்த்தி ராதாகாந்தர், நான்கு புஜமூர்த்தி லக்ஷ்மீகாந்தர்.

39.15. கிருஷ்ணரும் நாராயணருமாகிய அவ்விருவ வரும் எல்லா அம்சங்களிலும் சமமானவர்கள். மகாலக்ஷ்மி யோகசக்தியால் பலவடிவு கொண்டாள்.

39.17. வைகுண்டத்தில் மகாலக்ஷ்மி பரிபூர்ணமான ரமா தேவியாக விளங்குகிருள். ஸ்வர்க்கத்தில் இந்திர னுடைய ஸம்பத்ஸ்வரூபிணியான ஸ்வர்க்கலக்ஷ்மியாக உள்ளாள்.

39.18. பாதாளத்தில் நாகலக்ஷ்மியாகவும், அரசர் களிடம் ராஜ லக்ஷ்மியாகவும், கிருஹஸ்தர்களின் வீடுகளில் தனது கலையின் அம்சத்தால் கிருஹ லக்ஷ்மியாகவும் உள்ளாள்.

सम्पत्स्वरूपा गृहिणां सर्वमंगलमंगला।
गवां प्रसूतिः सुरभिर्दक्षिणा यज्ञकामिनी ॥ ३९. १९ ॥

क्षीरोदसिन्धुकन्या सा श्रीरूपा पद्मिनोषु च।
प्रतिमासु च देवानां मंगलेषु घटेषु च ॥ ३९. २२ ॥

वैकुण्ठे पूजिता साऽऽदौ देवी नारायणेन च।
शुक्लाष्टम्यां भाद्रपदे कृता पूजा च ब्रह्मणा ॥ ३९. २७ ॥

चैत्रे पौषे च भाद्रे च पुण्ये मंगलवासरे।
विष्णुना पूजिता सा च त्रिषु लोकेषु भक्तितः ॥ ३९. २८ ॥

नारद उवाच —

कथं बभूव सा देवी पृथिव्यां सिन्धुकन्यका।
पुरा केन स्तुताऽऽदौ तन्मे व्याख्यातुमर्हसि ॥ ४०. २ ॥

39.19. கிருஹஸ்தர்களின் ஸம்பத்ஸ்வரூபிணியாய் எல்லா மங்களங்களுக்கும் மங்களமாய் விளங்குகிருள். பசுக் களின் தாயாகிய காமதேனுவாகவும், யஜ்ஞபத்னியான தக்ஷிணையாகவும் இருக்கிருள்.

39.22. பாற்கடலில் ஸிந்துகன்யையாகவும், தாமரை யின் அழகாகவும் அவள் உள்ளாள். தெய்வ விக்ரகங் களிலும் மங்களமான கும்பங்களிலும் உள்ளாள்.

39.27. அந்த தேவி ஆதியில் வைகுண்டத்தில் நாராயணனுல் பூஜிக்கப்பட்டாள். பாத்ரபத சுக்லாஷ்டமியில் பிரம்மாவால் பூஜிக்கப்பட்டாள்.

39.28. சைத்ரம், பௌஷம், பாத்ரபதம் ஆகிய மாதங் களில் புண்ணியமான மங்கள வாரத்தில் விஷ்ணுவால் பக்தியுடன் மூவுலகங்களிலும் பூஜிக்கப்பட்டாள்.

நாரதர் கூறியது—

40.2. அவள் எப்படி பூமியில் ஸிந்து கன்னிகையாக அவதரித்தாள்? முன்பு ஆதியில் அவள் யாரால் துதிக்கப் பட்டாள்? அதை எனக்கு விளக்கி கூறியருள வேண்டும்.

श्रीनारायण उवाच —

पुरा दुर्वाससः शापाद् भ्रष्टश्रीश्च पुरन्दरः ।
बभूव देवसंघश्च मर्त्यलोके च नारद ॥ ४०. ३ ॥

लक्ष्मीः स्वर्गादिकं त्यक्त्वा रुष्टा परमदुःखिता ।
गत्वा लीना च वैकुण्ठे महालक्ष्मीश्च नारद ॥ ४०. ४ ॥

तदा शोकाद्ययुः सर्वे दुःखिता ब्रह्मणः सभाम् ।
ब्रह्माणं च पुरस्कृत्य ययुर्वैकुण्ठमेव च ॥ ४०. ५ ॥

श्रीभगवानुवाच —

मद्भक्तानां च मे निन्दा यत्र ब्रह्मन् भवेत् सुराः ।
महारुष्टा महालक्ष्मीस्ततो याति पराभवम् ॥ ४१. ३१ ॥

ஸ்ரீநாராயணர் கூறியது—

40.3. நாரதரே ! முன்பு துர்வாஸ மகரிஷியின் சாபத்தால் இந்திரன் செல்வமிழந்தவனானான். தேவ கணங்களும் மனித லோகத்திற்கிழிந்தனர்.

40.4. நாரதரே ! மகாலக்ஷ்மியானவள் கோபங்கொண்டு மிகுந்த துக்கத்துடன் ஸ்வர்க்கம் முதலியவற்றை விட்டு விலகிச் சென்று வைகுண்டத்தில் மறைந்து விட்டாள்.

40.5. அப்பொழுது எல்லோரும் துக்கத்துடனும் சோகத்துடனும் பிரம்மாவின் சபைக்கு சென்றனர்; பிரம்மாவை முன்னிட்டுக் கொண்டு வைகுண்டம் சென்றனர்.

ஸ்ரீபகவான் கூறியது—

41.31. பிரம்மாவே ! தேவர்களே ! என்னைப்பற்றியும் என் பக்தர்களைப் பற்றியும் எங்கே நிந்தை நிகழ்கிறதோ அங்கிருந்து மகாலக்ஷ்மியானவள் அவமதிக்கப்பட்டவளாய்க் கருதி மிகுந்த கோபத்துடன் விலகிவிடுகிறாள்.

यत्र यत्र हरेरर्चा हरेरुत्कीर्तनं तथा ।
तत्र तिष्ठति सा देवी सर्वमंगलमंगला ॥ ४१.४६ ॥

श्रीनारायण उवाच —

इत्युक्त्वा च सुरान् सर्वान् रमामाह रमापतिः ।
क्षीरोदसागरे जन्म कलयाऽऽकलयेति च ॥ ४१.५१ ॥

इत्युक्त्वा तां जगन्नाथो ब्रह्माणं पुनराह च ।
मथित्वा सागरं लक्ष्मीं देवेभ्यो देहि पद्मज ॥ ४१.५२ ॥

देवाश्चिरेण कालेन ययुः क्षीरोदसागरम् ।
मन्थानं मन्दरं कृत्वा कूर्मं कृत्वा च भाजनम् ॥ ४१.५३ ॥

कृत्वा शेषं मन्थपाशं ममन्थुरसुराः सुराः ।
धन्वन्तरिं च पीयूषमुच्चैःश्रवसमीप्सितम् ।
नानारत्नं हस्तिरत्नं प्रापुर्लक्ष्मीं सुदर्शनम् ॥ ४१.५५ ॥

41.46. எங்கெங்கு ஹரிபூஜையும் ஹரிஸங்கீர்த்தனமும் நிகழ்கின்றனவோ அங்கு ஸர்வமங்களங்களுக்கும் மங்களமான அவள் நிலை பெறுகிருள்.

ஸ்ரீநாராயணரிஷி கூறியது—

41.51. தேவர்களனைவரையும் நோக்கி இங்ஙனம் கூறிவிட்டு லக்ஷ்மீநாராயணர் லக்ஷ்மியிடம் 'பாற்கடலில் நீ உன் கலையால் தோன்றுவாயாக' எனக் கூறினர்.

41.52. ஜகந்நாதர் இவ்வாறு கூறிவிட்டு பிரம்மாவிடம் மீண்டும் 'பிரம்மாவே! கடலைக்கடைந்து தேவர்களுக்கு லக்ஷ்மியைக் கொடும்' என்றுர்.

41.53–55. நாளடைவில் தேவர்கள் பாற்கடலுக்குச் சென்றனர். மந்தரமலையை மத்தாகச் செய்து, கூர்மத்தை மத்தைத்தாங்கும் பாத்திரமாக்கி, ஆதிசேஷனைக் கடையும் கயிருக்கி அசுரர்களும் தேவர்களும் கடைந்தார்கள். தன்வந்திரியையும், அமிருதத்தையும், உச்சைசிரவஸ் என்ற குதிரையையும், விரும்பத்தக்க பல ரத்னங்களையும், யானைகளின் சிறந்த ஐராவதத்தையும், லக்ஷ்மியையும், ஸுதர்சனத்தையும் அடைந்தார்கள்.

वनमालां ददौ सा च क्षीरोदशयिने मुने।
सर्वेश्वराय रम्याय विष्णवे वैष्णवी सती ॥ ४१. ५६ ॥

देवैः स्तुता पूजिता च ब्रह्मणा शंकरेण च।
ददौ दृष्टिं सुरगृहे ब्रह्मशापविमोचनात् ॥ ४१. ५७ ॥

प्रापुर्देवाः स्वविषयं दैत्यग्रस्तं भयंकरम्।
महालक्ष्मीप्रसादेन वरदानेन नारद ॥ ४१. ५८ ॥

नारद उवाच —

हरेरुत्कीर्तनं भद्रं श्रुतं तज्ज्ञानमुत्तमम्।
ईप्सितं लक्ष्म्युपाख्यानं ध्यानं स्तोत्रं वद प्रभो ॥ ४२. १ ॥

41.56. முனிவரே! அந்த விஷ்ணு சக்தியும் பதிபக்தியிற் சிறந்தவளுமான லக்ஷ்மி பாற்கடலில் பள்ளி கொண்டவரும் ஸர்வேசுவரருமான அழகிய விஷ்ணுவுக்கு வனமாலையை அளித்தாள்.

41.57. பிரம்மாவாலும் சங்கரராலும் தேவர்களாலும் துதித்துப் பூஜிக்கப் பெற்று அவள் தேவர்களுடைய வாசஸ்தானத்தில் பிரம்ம சாபவிமோசனத்திற்காக தனது பார்வையைச் செலுத்தினுள்.

41.58. அசுரர்களால் பயங்கரமாய் பீடிக்கப்பட்டிருந்த தங்கள் ராஜ்யத்தை தேவர்கள் மகாலக்ஷ்மியின் பிரஸாதத்தாலும் வரதானத்தாலும் மீண்டும் அடைந்தனர்.

நாரதர் கூறியது—

42.1. மங்களமான ஹரியின் கீர்த்தனமும் உத்தமமான ஞானமும் கேட்கப்பட்டது. பிரபுவே! விரும்பிய லக்ஷ்மி உபாக்கியானத்தில் தியானம், ஸ்தோத்திரம் ஆகியவற்றைக் கூறியருளும்.

नारायण उवाच —

स्नात्वा तीर्थे पुरा शक्रो धृत्वा धौते च वाससी।
घटं संस्थाप्य क्षीरोदे षड्देवान् पर्यपूजयत् ॥ ४२. २ ॥

गणेशं च दिनेशं च वह्निं विष्णुं शिवं शिवाम्।
एतान् भक्त्या समभ्यर्च्य पुष्पगन्धादिभिस्तदा ॥ ४२. ३ ॥

आवाह्य च महालक्ष्मीं परमैश्वर्यरूपिणीम्।
पूजां चकार देवेशो ब्रह्मणा च पुरोधसा ॥ ४२. ४ ॥

सपूज्य ब्रह्मवाक्येन चोपचाराणि षोडश।
ददौ भक्त्या विधानेन प्रत्येकं मन्त्रपूर्वकम् ॥ ४२. १२ ॥

मूलं जजाप भक्त्या च दशलक्षं विधानतः।
लक्ष्मीर्माया काम वाणीङेन्ता कमलवासिनी ॥ ४२. ४२ ॥

நாராயணரிஷி கூறியது—

42.2. ஆதியில் இந்திரன் பூஜித்த முறையைக் கூறுகிறேன். தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து பரிசுத்தமான ஆடையணிந்து பாற்கடலில் கலசத்தை ஸ்தாபித்து ஆறு தேவதைகளைப் பரிவுடன் பூஜித்தான்.

42.3–4. கணேசரையும் சூரியனையும் அக்னியையும் விஷ்ணுவையும் சிவனையும் சிவசக்தியையும் புஷ்பம், கந்தம் முதலியவற்றால் பக்தியுடன் பூஜித்துப் பின்னர் பரமைச்வர்ய ரூபிணியான மகாலக்ஷ்மியை ஆவாஹனம் செய்து பிரம்மாவையே புரோகிதராய்க் கொண்டு தேவேந்திரன் பூஜை செய்தான்.

42.12. பிரம்மாவின் வாக்கியப்படி பக்தியுடன் பூஜித்துப் பதினாறு உபசாரங்களில் ஒவ்வொன்றையும் தனித் தனி மந்திரத்துடன் முறைப்படி ஸமர்ப்பித்தான்.

42.42. மூலமந்திரத்தை முறைப்படி பக்தியுடன் பத்துலக்ஷம் தடவை ஜபித்தான். அம்மந்திரமாவது: 'ஸ்ரீம்—ஹ்ரீம்-க்லீம்—ஐம் கமலவாஸின்யை ஸ்வாஹா.'

वैदिको मन्त्रराजोऽयं प्रसिद्धः स्वाहयान्वितः ।
कुबेरोऽनेन मन्त्रेण परमैश्वर्य-माप्तवान् ।। ४२. ४३ ।।

सिद्धे मन्त्रे महालक्ष्मीः शक्राय दर्शनं ददौ ।
ईषद्धास्य-प्रसन्नास्या भक्तानुग्रहकारका ।। ४२. ४८ ।।

दृष्ट्वा जगत्प्रसूं शान्तां तुष्टावैतां पुरन्दरः ।
पुलकांचितसर्वांगः साऽश्रुनेत्रः कृतांजलिः ।। ४२. ४९ ।।

ब्रह्मणा च प्रदत्तेन स्तोत्रराजेन संयुतः ।
सर्वाभीष्टप्रदेनैव वैदिकेनैव तत्र च ।। ४२. ५० ।।

पुरन्दर उवाच —

नमः कमलवासिन्यै नारायण्यै नमो नमः ।
कृष्णप्रियायै सततं महालक्ष्म्यै नमो नमः ।। ४२. ५१ ।।

42.43. 'ஸ்வாஹா'வுடன் கூடிய இது வைதிகமான மந்திரராஜம் என்பது பிரசித்தம். இந்த மந்திரத்தால் குபேரன் சிறந்த ஐசுவரியத்தை அடைந்தவனுனன்.

42.48. மந்திரஸித்தி எய்திய இந்திரனுக்கு பக்தர் களுக்கு அருள் புரியும் மகாலக்ஷ்மியானவள் புன்முறுவல் பூத்தவளாய்ப் பிரசன்னமாகிக் காட்சியளித்தாள்.

42.49–50. லோக மாதாவும் சாந்தஸ்வரூபிணியுமான அவளைக் கண்டு இந்திரன் உடல் புளகிப்பக் கண்களில் நீர் பெருகக் கை கூப்பியவனுய், பிரம்மாவால் அளிக்கப் பட்ட ஸ்தோத்திரராஜத்தாலும் எல்லா ஆசைகளையும் பூர்த்தி செய்விக்கும் வைதிக மந்திரங்களாலும் துதித்தான்.

இந்திரன் கூறியது—

42.51. கமலவாஸினிக்கு நமஸ்காரம். நாராயணிக்கு நமஸ்காரம். கிருஷ்ணப்பிரியையும் மகாலக்ஷ்மியுமான உனக்கு எப்பொழுதும் மீண்டும் மீண்டும் நமஸ்காரம்.

पद्मपत्रेक्षणायै च पद्मास्यायै नमो नमः।
पद्मासनायै पद्मिन्यै वैष्णव्यै च नमो नमः ॥ ४२. ५२॥

सम्पत्त्यधिष्ठातृदेव्यै महादेव्यै नमो नमः।
नमो वृद्धिस्वरूपायै वृद्धिदायै नमो नमः ॥ ४२. ५५ ॥

अदिति-र्देवमाता त्वं कमला कमलालया।
स्वाहा त्वं च हविर्दाने कव्यदाने स्वधास्मृता ॥ ४२. ५८ ॥

त्वं हि विष्णुस्वरूपा च सर्वाधारा वसुन्धरा।
शुद्धसत्त्वस्वरूपा त्वं नारायणपरायणा ॥ ४२. ५९ ॥

यया विना जगत्सर्वं भस्मीभूत-मसारकम्।
जीवन्मृतं च विश्वं च शश्वत्सर्वं यया विना ॥ ४२. ६१ ॥

42.52. தாமரையிதழ் போன்ற கண்படைத்தவளும், தாமரை போன்ற முகம் படைத்தவளும், தாமரையை ஆஸனமாய்க் கொண்டவளும், பத்மினியும், விஷ்ணுசக்தியுமான உனக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரம்.

42.55. செல்வத்திற்கு அதிஷ்டான தேவதையும், மகாதேவியும், புத்திஸ்வரூபிணியும் விருத்தியை அளிப்பவளுமான உனக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரம்.

42.58. நீயே தேவமாதாவாகிய அதிதிதேவி, கமலாலயத்திலிருக்கும் லக்ஷ்மி; ஹவிஸ்ஸை அர்ப்பணம் செய்கையில் நீ ஸ்வாஹாதேவியாகவும், பிதிருக்களுக்குக் கவ்யம் அளிக்கையில் ஸ்வதா தேவியாகவும் கூறப்படுகிறாய்.

42.59. நீயே விஷ்ணுஸ்வரூபிணி, அனைத்தையும் தாங்கும் பூமிதேவி, சுத்தஸத்துவஸ்வரூபிணி, நாராயணனிடம் உறைபவள்.

42.61. உன்னிடமிருந்து விலகிய உலகனைத்தும் சாம்பல் போல் ஸாரமற்றதாகிறது; உலகனைத்தும் நீயல்லாமல் உயிரற்றது போலாகிறது.

ज्ञानं देहि च धर्मं च सर्वसौभाग्यमीप्सितम्।
प्रभावं च प्रतापं च सर्वाधिकारमेव च ॥ ४२.६७ ॥

जयं पराक्रमं युद्धे परमैश्वर्यमेव च।
इत्युक्त्वा च महेन्द्रश्च सर्वैः सुरगणैः सह ॥ ४२. ६८ ॥

प्रणनाम साश्रुनेत्रो मूर्ध्ना चैव पुनः पुनः।
देवेभ्यश्च वरं दत्त्वा पुष्पमालां मनोहराम् ॥ ४२. ७० ॥

केशवाय ददौ लक्ष्मीः सन्तुष्टा सुरसंसदि।
ययुर्देवाश्च सन्तुष्टाः स्वं स्वं स्थानं च नारद ॥ ४२. ७१ ॥

॥ लक्ष्म्युपाख्यानं समाप्तम् ॥

॥ इति श्रीदेवीभागवते नवमस्कन्धे द्विचत्वारिंशोऽध्यायः ॥

42.67. ஞானத்தையும் தருமத்தையும் விரும்பப்படும் ஸௌபாக்கிய மனைத்தையும், பிரபாவத்தையும், பிரதாபத்தையும், அதிகார மனைத்தையும் தந்தருள் புரிவாயாக.

42.68–71. 'யுத்தத்தில் வெற்றியையும் பராக்கிரமத்தையும், சிறந்த ஐசுவரியத்தையும் தந்தருள்வாயாக'—என்று கூறி மகேந்திரன் எல்லா தேவர்களுடன் கண்களில் நீர் ததும்ப மீண்டும் மீண்டும் தலையால் வணங்கினான். லக்ஷ்மியானவள் தேவர் கூட்டத்தில் மகிழ்ந்து அவர்களுக்கு வரமளித்து விட்டுக் கேசவருக்கு மனதிற்கினிய புஷ்பமாலையை அர்ப்பணம் செய்தாள். நாரதரே! அதன் பின் தேவர்கள் தத்தம் இருப்பிடமேகினர்.

லக்ஷ்மீ உபாக்கியானம் முற்றும்.

ஸ்ரீதேவீபாகவதத்தில் ஒன்பதாவது ஸ்கந்தத்தில்
நாற்பத்திரண்டாவது அத்தியாயம் முற்றும்.

॥ स्वाहा–स्वधा–दक्षिणा–उपाख्यानम् ॥ ४१ ॥

नारद उवाच —

स्वाहा देवी हविर्दाने प्रशस्ता सर्वकर्मसु ।
पितृदाने स्वधा शस्ता दक्षिणा सर्वतो वरा ॥ ४३. ७ ॥

एतासां चरितं जन्म फलं प्राधान्य एव च ।
श्रोतुमिच्छामि त्वद्वक्त्राद्वद वेदविदां वर ॥ ४३. ८ ॥

नारायण उवाच —

हविर्ददति विप्राश्च भक्त्या च क्षत्रियादयः ।
सुरा नैव प्राप्नुवन्ति तद्दानं मुनिपुंगव ॥ ४३. १३ ॥

41. ஸ்வாஹா-ஸ்வதா-தக்ஷிணு-உபாக்கியானம்

நாரதர் கூறியது—

43.7. எல்லாக் கருமங்களிலும் ஹவிஸ் அர்ப்பணம் செய்யப்படும் பொழுது ஸ்வாஹாதேவி தியானிக்கப்படுவது பிரசித்தம்; பிதிருக்களுக்கு அர்ப்பணம் செய்கையில் ஸ்வதா தேவி பிரசித்தம்; தக்ஷிணுதேவி எங்கும் சிறந்தவள்.

43.8. வேதத்தையறிந்தவர்களிற் சிறந்தவரே ! இவர்களுடைய பிறப்பு, சரித்திரம், பூஜாபலன் முதலியவற்றை உமது முகத்திலிருந்து முக்கியமாய்க் கேட்க விரும்புகிறேன்.

நாராயணரிஷி கூறியது—

43.13. முனிபுங்கவரே ! (ஆதியில்) பிராம்மணர்களும் க்ஷத்திரியர் முதலியவர்களும் பக்தியுடன் ஹவிர்தானம் செய்தும் தேவர்கள் அந்த தானத்தைப் பெறவில்லை.

देवा विषण्णास्ते सर्वे तत्सभां च ययुः पुनः।
गत्वा निवेदनं चक्रु-राहाराभावहेतुकम् ॥ ४३. १४॥

ब्रह्मा श्रुत्वा तु ध्यानेन श्रीकृष्णं शरणं ययौ।
पूजां चकार प्रकृते-र्ध्याननैव तदाज्ञया ॥ ४३. १५ ॥

प्रकृतेः कलयाचैव सर्वशक्तिस्वरूपिणी।
अतीव सुन्दरी श्यामा रमणीया मनोहरा ॥ ४३. १६ ॥

ईषद्धास्य-प्रसन्नास्या भक्तानुग्रहकातरा।
उवाचेति विधेरग्रे पद्मयोने वरं वृणु ॥ ४३. १७ ॥

प्रजापतिरुवाच —

त्वमग्ने-र्दाहिका शक्ति-र्भव याऽतीव सुन्दरी।
दग्धुं न शक्तः प्रकृती-र्हुताशश्च त्वया विना ॥ ४३. १८ ॥

43.14. மனம் வருந்திய தேவர்களெல்லோரும் பிரம்ம சபைக்குச் சென்றனர். சென்று தங்களுக்கு ஆஹாரம் கிடைக்காமற் போனதைத் தெரிவித்துக் காரணத்தை நாடினர்கள்.

43.15. அதைக் கேட்டு பிரம்மா ஸ்ரீ கிருஷ்ணனை தியானித்துச் சரணடைந்தார். அவருடைய கட்டளைப்படி தியானத்தாலேயே பிரகிருதியைப் பூஜித்தார்.

43.16–17. பிரகிருதியின் கலையினுல் ஸர்வசக்தி ஸ்வரூபிணியாயும், அழகுமிக்கவளாயும், சியாமளவர்ணமாய் ரமணீயமாய் மனதைக்கவரும் வகையில் புன்முறுவல் பூத்த முகம் படைத்தவளாயும், பக்தர்களுக்கு அருள் புரிவதில் ஆவலுள்ளவளாயும் விளங்கும் தேவியானவள் பிரம்மாவின் முன் பிரஸன்னமாகி 'பிரம்ம தேவரே ! வேண்டிய வரத்தை கேளும்' எனக் கூறினுள்

பிரம்மா கூறியது—

43.18. அக்னியின் அழகுமிக்க எரியும் சக்தியாக நீ ஆவிர்ப்பவிக்க வேண்டும். பிரகிருதியாக நீயில்லாமல் அக்னி தேவன் எரிக்கும் சக்தியைப் பெறவில்லை.

त्वन्नामोच्चार्य मन्त्रान्ते यो दास्यति हविर्नरः।
सुरेभ्यस्तत्प्राप्नुवन्ति सुराः सानन्दपूर्वकम् ॥ ४३. १९ ॥

अग्नेः सम्पत्स्वरूपा च श्रीरूपा सा गृहेश्वरी।
देवानां पूजिताशश्वन्नरादीनां भवाम्बिके ॥ ४३. २० ॥

स्वाहोवाच —

अहं कृष्णं भजिष्यामि तपसा सुचिरेण च।
ब्रह्मंस्तदन्यं यत्किंचित्स्वप्नवद् भ्रममेव च ॥ ४३. २२ ॥

श्रीभगवानुवाच —

वाराहे वै त्वमंशेन मम पत्नी भविष्यसि।
नाम्ना नाग्नजितीकन्या कान्ते नग्नजितस्य च ॥ ४३. ३० ॥

43.19. உனது பெயரை மந்திரத்தின் முடிவில் உச்சரித்து எந்த ஹவிஸ்ஸை தேவர்களுக்கு ஒரு மனிதன் அளிக்கிருனே அதை தேவர்கள் ஆனந்தத்துடன் அடைகிருர்கள்.

43.20. அம்பிகே! அக்னி தேவனுடைய கிருஹேச்வரியாயும் ஸம்பத் ஸ்வரூபிணியாயும், ஸ்ரீரூபிணியாயும் தேவர்களாலும் மனிதர் முதலியவர்களாலும் பூஜிக்கப்பட்டவளாயும் நீ விளங்குவாயாக.

ஸ்வாஹா தேவி கூறியது—

43.22. நான் நீண்டகாலம் தவத்தால் ஸ்ரீகிருஷ்ணனே நாடியிருப்பவள். பிரம்மதேவரே! அப்படிப்பட்ட நான் பிறரை நாடுவது சிறிதளவு கனவைப் போலும் சித்தப்பிரமை போலுமாகும்.

ஸ்ரீ பகவான் கூறியது—

43.30. பிரியே! சுவேதவராக கல்பத்தில் உனது அம்சத்தால் நீ நக்னஜித் என்பவரின் புத்திரியாயவதரித்து நாக்னஜிதீ என்ற பெயர் தாங்கி என் பத்தினியாகப் போகிருய்.

अधुनाऽग्नेर्दाहिका त्वं भव पत्नी च भामिनी ।
मन्त्रांगरूपा पूजा मत्प्रसादाद्भविष्यति ॥ ४३. ३१ ॥

वह्निस्त्वां भक्तिभावेन संपूज्य च गृहेश्वरीम् ।
रमिष्यति त्वया सार्धं रामया रमणीयया ॥ ४३. ३२ ॥

नारायण उवाच —

तत्राऽजगाम सन्त्रस्तो वह्निर्ब्रह्मनिदेशतः ।
सामवेदोक्तध्यानेन ध्यात्वा तां जगदम्बिकाम् ॥ ४३. ३३ ॥

संपूज्य परितुष्टाव पाणिं जग्राह मन्त्रतः ।
बभूव गर्भस्तस्यां च हुताशस्य च तेजसा ॥ ४३. ३६ ॥

ततः सुषाव पुत्रांश्च रमणीयान्मनोहरान् ।
दक्षिणाग्नि-गार्हपत्याऽऽहवनीयान् क्रमेण च ॥ ४३. ३७ ॥

43.31. உத்தமியே! இப்பொழுது அக்கினிதேவருடைய எரிக்கும் சக்தியாகவும் அவருடைய பத்தினியாகவும் விளங்குவாயாக. என்னுடைய அருளால் மந்திரங்களின் அங்கமாய்ப் பூஜிக்கப் பெறுவாய்.

43.32. அழகிய தேவியான உன்னை கிருஹேசுவரியாகப் பெற்று பக்தியுடன் பூஜித்து அக்னி தேவர் உன்னுடன் கூடி ஆனந்தத்தையடைவாராக.

நாராயணரிஷி கூறியது—

43.33–36. பிரம்மாவின் கட்டளையால் அக்னி தேவர் அங்கு பயந்து கொண்டு வந்தார். ஸாம வேதத்தில் கூறிய தியானத்தால் ஜகதம்பிகையாகிய அவளை தியானித்து பூஜித்து, துதித்து, மந்திரபூர்வமாகப் பாணிக்கிரகணம் செய்து கொண்டார். அக்னியின் வீரியத்தால் அவள் கருத் தரித்தாள்.

43.37. பிறகு தக்ஷிணாக்னி, கார்ஹபத்யாக்னி, ஆஹவனீயாக்னி என்று பெயர் பெற்ற அழகியவர்களும் மனதிற்கினியவர்களுமான பிள்ளைகளை வரிசையாகப் பெற்றாள்.

ऋषयो मुनयश्चैव ब्राह्मणाः क्षत्रियादयः।
स्वाहान्तं मन्त्रमुच्चार्यं हविर्दानं च चक्रिरे ॥ ४३. ३८ ॥

स्वाहायुक्तं च मन्त्रं च यो गृह्णाति प्रशस्तकम्।
सर्वसिद्धिर्भवेत्तस्य मन्त्रग्रहणमात्रतः ॥ ४३. ३९ ॥

ओं ह्रीं श्रीं वह्निजायायै देव्यै स्वाहेत्यनेन च।
यः पूजयेच्च तां भक्त्या सर्वेष्टं संभवेद् ध्रुवम् ॥ ४३. ४९ ॥

नारद श्रृणु वक्ष्यामि स्वधोपाख्यान-मुत्तमम्।
पितॄणां च तृप्तिकरं श्राद्धान्नफलवर्धनम् ॥ ४४. १ ॥

ब्रह्मा च मानसीं कन्यां ससृजे च मनोहराम्।
रूपयौवनसम्पन्नां शतचन्द्रनिभाननाम् ॥ ४४. ९ ॥

43.38. ரிஷிகளும், முனிவர்களும், பிராம்மணர்களும், க்ஷத்திரியர் முதலியோரும் ஸ்வாஹா எனும் முடிவுடைய மந்திரங்களை உச்சரித்து ஹவிர்தானம் செய்தனர்.

43.39. ஸ்வாஹாவுடன் கூடிப் பிரசித்திபெற்ற மந்திரத்தை எவன் கைக்கொள்ளுகிருனே அவனுக்கு மந்திரத்தைக் கைக்கொண்ட மாத்திரத்திலேயே எல்லா சித்திகளும் ஏற்படும்.

43.49. 'ஓம் ஹ்ரீம் ஸ்ரீம் வஹ்னிஜாயாயை தேவ்யை ஸ்வாஹா' என்ற இம்மந்திரத்தால் எவன் பக்தியுடன் அந்த தேவியை பூஜிக்கிருனே அவனுக்கு எல்லா இஷ்டங்களும் நிச்சயமாகக் கைகூடும்.

44.1. நாரதரே! இனி உத்தமமான ஸ்வதா உபாக்கியானத்தைக் கூறுகிறேன், கேளும். அது பிதிருக்களுக்குத் திருப்தி யளிப்பதும் சிராத்த அன்ன பலனை விருத்தி செய்வதுமாகும்.

44.9. பிரம்மா அவளை மானஸ கன்னிகையாகச் சிருஷ்டித்தார். அவள் மனதிற்கினியவள், ரூபத்துடனும் யௌவனத்துடனும் கூடியவள், நூறு சந்திரர்களைப் போல் பிரகாசிக்கும் முகமுடையவள்.

स्वधाभिधां च सुदतीं लक्ष्मीलक्षणसंयुताम्।
पत्नीं पितॄणां पद्मास्यां पद्मजां पद्मलोचनाम् ॥ ४४. १२ ॥

पितृभ्यश्च ददौ ब्रह्मा तुष्टेभ्यस्तुष्टिरूपिणीम्।
ब्राह्मणानां चोपदेशं च चकारोपनीयकम् ॥ ४४. १३ ॥

स्वधान्तं मन्त्रमुच्चार्य पितृभ्यो देयमित्यपि।
क्रमेण तेन विप्राश्च पित्रे दान ददुः पुरा ॥ ४४. १४ ॥

पितरो देवता विप्रा मुनयो मनवस्तथा।
पूजांश्चक्रुः स्वधां शान्तां तुष्टुवुः परमादरात् ॥ ४४. १६ ॥

ओं ह्रीं श्रीं क्लीं स्वधादेव्यै स्वाहेति च महामुने।
समुच्चार्य च संपूज्य स्तुत्वा तां प्रणमेद्बुधः ॥ ४४. २५ ॥

44.12–14. ஸ்வதா எனப் பெயர் கொண்டவளும், அழகிய பற்களை உடையவளும், லக்ஷ்மி போன்ற லக்ஷணம் பொருந்தியவளும், தாமரையில் தோன்றியவளும், தாமரை போன்ற கண்களும் முகமும் உடையவளும், ஸந்தோஷமே உருக்கொண்டவளுமான அவளை ஸந்தோஷமடைந்த பிதிருக்களுக்குப் பத்தினியாக பிரம்மா கொடுத்தார். பிராம்மணர்களை அருகிலழைத்து ஸ்வதா என்று முடிவில் சேர்த்து மந்திரத்தை உச்சரித்துப் பிதிருக்களுக்கு அளிப்பது கொடுக்கப்பட வேண்டுமென்று உபதேசம் செய்தார். அம்முறைப்படியே ஆதியில் பிராம்மணர்கள் பிதிருக்களுக்கு தானம் செய்யலாயினர்.

44.16. பிதிருக்களும், தேவர்களும், பிராம்மணர்களும் முனிவர்களும், அவ்வாறே மனுக்களும் சாந்த ஸ்வரூபியான ஸ்வதா தேவியைப் பூஜித்து மிகுந்த ஆதரவுடன் துதித்தனர்.

44.25. முனிசிரேஷ்டரே! 'ஓம் ஹ்ரீம் ஸ்ரீம் க்லீம் ஸ்வதா தேவ்யை ஸ்வாஹா' என்ற மந்திரத்தை உச்சரித்துப் பூஜித்துத் துதித்து அவளை புத்திமான் நமஸ்கரிக்க வேண்டும்.

ओं स्वस्तिश्च नमः स्वाहा स्वधा त्वं दक्षिणा तथा ।
निरूपिताश्चतुर्वेदैः प्रशस्ताः कर्मिणां पुनः ॥४४. ३३ ॥

कर्मपूर्त्यर्थमेवैता ईश्वरेण विनिर्मिताः ।
इत्येवमुक्त्वा स ब्रह्मा ब्रह्मलोके स्वसंसदि ॥ ४४. ३४ ॥

तस्थौ च सहसा सद्यः स्वधा साऽऽविर्बभूव ह ।
तदा पितृभ्यः प्रददौ तामेव कमलाननाम् ॥
तां सम्प्राप्य ययुस्ते च पितरश्च प्रहर्षिताः ॥ ४४. ३५ ॥

उक्तं स्वाहा स्वधाख्यानं प्रशस्तं मधुरं परम् ।
वक्ष्यामि दक्षिणाख्यानं सावधानो निशामय ॥ ४५. १ ॥

अथ सा दक्षिणादेवी ध्वस्ता गोलोकतो मुने ।
सुचिरं च तपस्तप्त्वा विवेश कमलातनौ ॥ ४५. ३६ ॥

44.33–35. 'ஓம், ஸ்வஸ்தி, நம:, ஸ்வாஹா, ஸ்வதா, தக்ஷிணை என்ற சொற்கள் கருமம் செய்பவர்களின் கரும பூர்த்திக்காக நான்கு வேதங்களாலும் நிரூபணம் செய்யப் பட்டவை; ஈசுவரனால் நியமிக்கப்பட்டு மேலும் பிரசித்த மானவை' என்றிவ்வாறு பிரம்மலோகத்தில் தமது சபையில் பிரம்மா கூறிவிட்டு வீற்றிருக்கையில் விரைவில் அங்கு அப்பொழுதே ஸ்வதாதேவி ஆவிர்ப்பவித்தாள். தாமரை போன்ற முகம்படைத்த அவளை அவர் பிதிருக்களுக்கு கொடுத்தார். அவளைப் பெற்றுக் கொண்டு பிதிருக்கள் மகிழ்வுடன் சென்றனர்.

45.1. ஸ்வாஹா, ஸ்வதா தேவிகளின் சிறப்பானதும் மிக இனியதுமான வரலாறு கூறப்பட்டது. இனி தக்ஷிணை தேவியின் வரலாற்றைக் கூறுகிறேன். கவனத்துடன் கேட்பீராக.

45.36 முனிவரே ! கோலோகத்திலிருந்து (ஒரு சமயம் ராதையால்) விரட்டப்பட்ட தக்ஷிணைதேவி நீண்டகாலம் தவஞ் செய்து லக்ஷ்மியின் உடலில் புகுந்தாள்.

अथ देवादयः सर्वे यज्ञं कृत्वा सुदुष्करम् ।
नालभंस्ते फलं तेषां विषण्णाः प्रययुर्विधिम् ॥ ४५. ३७ ॥

विधिर्निवेदनं श्रुत्वा देवादीनां जगत्पतिम् ।
दध्यौ च सुचिरं भक्त्या प्रत्यादेश-मवाप सः ॥ ४५. ३८ ॥

नारायणश्च भगवान् महालक्ष्म्याश्च देहतः ।
विनिष्कृत्य मर्त्यलक्ष्मीं ब्रह्मणे दक्षिणां ददौ ॥ ४५. ३९ ॥

ब्रह्मा ददौ तां यज्ञाय पूरणार्थं च कर्मणाम् ।
यज्ञः संपूज्य विधिवत्तां तुष्टाव तदा मुदा ॥ ४५. ४० ॥

पत्नीं तामेव जग्राह विधिबोधितपूर्वकम् ।
यज्ञश्च दक्षिणां प्राप्य पुत्रं च फलदायकम् ।
फलं ददौ च सर्वेभ्यः कर्मणां चैव नारद ॥ ४५. ५१ ॥

45.37. அப்பொழுது தேவர்களெல்லாம் செய்தற்கரிய யக்ஞங்களைச் செய்த பின்னும் அவற்றின் பயனை அடையாமற் போகவே மனம் வருந்தி பிரம்மாவிடம் சென்றனர்.

45.38. தேவர்களுடைய விண்ணப்பத்தைக் கேட்டு பிரம்மா உலக நாயகரான நாராயணரை பக்தியுடன் நெடு நேரம் தியானித்து அவருடைய ஆதேசத்தைப் பெற்றார்.

45.39. பகவான் நாராயணர் மகாலக்ஷ்மியின் உடலிலிருந்து மானிட உலகின் லக்ஷ்மியாகிய தக்ஷிணா தேவியை வெளிவரச் செய்து அவளை பிரம்மாவிடம் கொடுத்தார்.

45–40. கருமங்களின் பூர்த்திக்காக அவளை பிரம்மா யக்ஞதேவருக்குக் கொடுத்தார். அப்பொழுது யக்ஞதேவர் அவளை முறைப்படி பூஜித்து மகிழ்வுடன் துதித்தார்.

45.51. நாரதரே! யக்ஞதேவர் முறைப்படி அந்த தக்ஷிணாதேவியை விவாகம் செய்து கொண்டு பயனையளிக்கும் புத்திரனைப் பெற்றார். எல்லோருக்கும் கர்மாக்களின் பயனையும் அளித்தார்.

कृत्वा कर्म च कर्ता च तूर्णं दद्याच्च दक्षिणाम् ।
तत्क्षणं फलमाप्नोति वेदैरुक्तमिदं मुने ।। ४५. ५३ ।।

सदक्षिणे कर्मणि च फलमेव प्रवर्तते ।
अदक्षिणं च यत्कर्म तद्भुंक्ते च बलिर्मुने ।।
बलये तत्प्रदत्तं च वामनेन पुरा मुने ।। ४५. ६६ ।।

यज्ञ उवाच —

कर्मरूपी स्वयं ब्रह्मा फलरूपी महश्वरः ।
यज्ञरूपी विष्णुरहं त्वमेषां साररूपिणी ।। ४५. ७८ ।।

फलदातृ परं ब्रह्म निर्गुणा प्रकृतिः परा ।
स्वयं कृष्णश्च भगवान् स च शक्तस्त्वया सह ।। ४५. ७९ ।।

45.53. முனிவரே ! ஒரு கர்த்தாவானவன் கர்மத்தை செய்து உடனே தக்ஷிணையைக் கொடுக்க வேண்டும். அந்த நிமிஷத்தில் பயனையடைவான் எனும் இது வேதங்களால் கூறப்பட்டுளது.

45.66. முனிவரே ! தக்ஷிணையுடன் கூடிய கர்மாவால் தான் பயன் ஏற்படும். தக்ஷிணையில்லாத கர்மம் எதுவோ அதை பலிசக்ரவர்த்தி புசித்து விடுகிறார். முன்பு வாமனாவதாரம் செய்த பகவானால் அந்த வரம் பலிச்சக்ரவர்த்திக்கு அளிக்கப்பட்டது.

யக்ஞதேவர் (தக்ஷிணாதேவியிடம்) கூறியது—

45.78. பிரம்மாவே கர்மரூபி; மஹேசுவரர் பயன் வடிவானவர்; விஷ்ணுவாகிய நான் யக்ஞவடிவினன். நீ இவையனைத்தின் ஸாரவடிவானவள்.

45.79. கருமத்தின் பயனையளிப்பது பரப்பிரம்மம். பராபிரகிருதி நிர்க்குணவடிவானது. ஸ்ரீகிருஷ்ணனே பகவான். அவர் சக்தி உடையவராயிருப்பது உன்னுடன் கூடியதால்.

त्वमेव शक्तिः कान्ते मे शश्वज्जन्मनि जन्मनि।
सर्वकर्मणि शक्तोऽहं त्वया सह वरानने ॥ ४५. ८० ॥

नारायण उवाच —

ओं श्रीं क्लीं ह्रीं दक्षिणायै स्वाहेति च विचक्षणः।
पूजयेद्विधिवद्भक्त्या दक्षिणां सर्वपूजिताम् ॥ ४५. ९२ ॥

॥ स्वाहा-स्वधा-दक्षिणा-उपाख्यानं समाप्तम् ॥

॥ इति श्रीदेवीभागवते नवमस्कन्धे पंचचत्वारिंशोऽध्यायः ॥

45.80. பிரியே! நீயே பிறவிதோறும் என்னுடைய சக்தியாய் விளங்குவாய். அழகியமுகம் படைத்தவளே! உன்னுடன் கூடி நான் எல்லாக் கர்மங்களிலும் சக்தியுடையவனுவேன்.

நாராயணரிஷி கூறியது—

45.92. 'ஓம் ஸ்ரீம் க்லீம் தக்ஷிணையை ஸ்வாஹா' என்ற மந்திரத்தால் அறிவாளியானவன் பக்தியுடன் முறைப்படி எல்லோராலும் பூஜிக்கப்படும் தக்ஷிணா தேவியைப் பூஜிக்க வேண்டும்.

ஸ்வாஹா- ஸ்வதா-தக்ஷிணா-உபாக்கியானம் முற்றும்.

இங்ஙனம் ஸ்ரீதேவீபாகவதத்தில் ஒன்பதாவது
ஸ்கந்தத்தில் நாற்பத்தைந்தாவது
அத்தியாயம் முற்றும்.

॥ षष्टी-मनसा-सुरभि-उपाख्यानम् ॥४२ ॥

नारद उवाच —

षष्टी मंगलचण्डी च मनसा प्रकृतेः कला ।
उत्पत्तिमासां चरितं श्रोतुमिच्छामि तत्त्वतः ॥ ४६. ३ ॥

नारायण उवाच —

षष्ठांशा प्रकृतेर्या च सा च षष्ठी प्रकीर्तिता ।
बालकाना-मधिष्ठात्री विष्णुमाया च बालदा ॥ ४६. ४ ॥

मातृकासु च विख्याता देवसेनाभिधा च या ।
प्राणाधिकप्रिया साध्वी स्कन्दभार्या च सुव्रता ॥ ४६. ५ ॥

42. ஷஷ்டி-மனஸா-ஸுரபி-உபாக்கியானம்

நாரதர் கூறியது—

46.3. ஷஷ்டியும் மங்களசண்டியும் மனஸாதேவியும் பிரகிருதியின் கலைகள். இவர்களுடைய உற்பத்தியையும் சரித்திரத்தையும் உள்ளபடி கேட்க விரும்புகிறேன்.

நாராயணரிஷி கூறியது—

46.4. பிரகிருதியின் ஆறிலொரு அம்சமான தேவி எவளோ அவள் ஷஷ்டியெனப் போற்றப்படுகிறாள். அவள் குழந்தைகளுக்கு அதிஷ்டாத்ரு தேவதை, குழந்தைகளை யளிக்கும் விஷ்ணுமாயாஸ்வரூபிணி.

46.5. மாத்ருகைகளுக்குள் தேவஸேனா என்ற பெயரில் பிரசித்தமானவள். ஸத்துவ குணம் மிக்கவளாயும் நல்ல விரதமுடையவளாயும் ஸ்கந்தருடைய பத்தினியாய் அவருக்குப் பிராணனைவிடப் பிரியமுள்ளவளாயும் விளங்குபவள்.

आयुःप्रदा च बालानां धात्री रक्षणकारिणी।
सततं शिशुपार्श्वस्था योगेन सिद्धियोगिनी ॥ ४६. ६ ॥

राजा प्रियव्रतश्चाऽऽसीत्स्वायंभुवमनोः सुतः।
योगीन्द्रो नोद्वहद्भार्यां तपस्यासु रतः सदा ॥ ४६. ८ ॥

ब्रह्माज्ञया च यत्नेन कृतदारो बभूव ह।
सुचिरं कृतदारश्च न लेभे तनयं मुने ॥ ४६. ९ ॥

पुत्रेष्टियज्ञं तं चापि कारयामास कश्यपः।
मालिन्यै तस्य कान्तायै मुनिर्यज्ञचरुं ददौ ॥ ४६. १० ॥

ततः सुषाव सा ब्रह्मन् कुमारं कनकप्रभम्।
सर्वावयवसंपन्नं मृतमुत्तारलोचनम् ॥ ४६. १२ ॥

46.6. குழந்தைகளுக்கு ஆயுளை அளிப்பவள், போஷிப்பவள், காப்பவள், எப்பொழுதும் குழந்தைகளருகில் இருப்பவள், யோகசக்தியால் ஸித்தியோகினி.

46.8. ஸ்வாயம்புவ மனுவின் புத்திரரான பிரியவிரதர் எனும் அரசர் யோகீந்திரராகவும் எப்பொழுதும் தவத்தில் ஈடுபட்டவராகவும் இருந்ததால் விவாகம் செய்து கொள்ளா மலிருந்தார்.

46.9. முனிவரே! பிரம்மாவின் கட்டளையால் முயற்சி செய்து விவாகம் செய்து கொண்டவரானார். விவாகத்திற்குப் பின் வெகு நாளாகியும் புத்திரப் பேறில்லாமலிருந்தது.

46.10. கசியபர் புத்ரேஷ்டியக்ஞத்தைச் செய்து வைத்தார். முனிவர் அவருடைய பத்தினியான மாலினிக்கு யக்ஞசருவைக் கொடுத்தார்.

46.12. பிரம்மஸ்வரூபியே! அவள் தங்கப் பிரதிமை போன்ற ஒரு குமாரனைப் பெற்றாள்; அவன் எல்லா அவயவங் களிலும் அழகுடையவனாயிருந்தும் உயிரற்றவனாய்த் திறந்த கண்ணுடனிருந்தான்.

तं दृष्ट्वा रुरुदुः सर्वा नार्यश्च बान्धवस्त्रियः।
मूर्च्छामवाप तन्माता पुत्रशोकेन भूयसा ॥ ४६. १३ ॥

नोत्सृजद्बालकं राजा प्राणांस्त्यक्तुं समुद्यतः।
एतस्मिन्नन्तरे तत्र विमानं च ददर्श सः ॥ ४६. १५ ॥

ददर्श तत्र देवीं च कमनीयां मनोहराम्।
दृष्ट्वा तां पुरतो राजा तुष्टाव परमादरम् ॥ ४६. २० ॥

पप्रच्छ राजा तां तुष्टां ग्रीष्मसूर्यसमप्रभाम्।
का त्वं सुशोभने कान्ते कस्य कान्ताऽसि सुव्रते ॥ ४६. २२ ॥

नृपेन्द्रस्य वचः श्रुत्वा जगन्मंगलचण्डिका।
उवाच देवसेना सा देवानां रणकारिणी ॥ ४६. २३ ॥

46.13. அதைக் கண்டு எல்லா ஸ்திரீகளும் உறவினர்களான பெண்களும் கதறினார்கள். புத்திர சோகம் மேலிட்டு குழந்தையின் தாய் மூர்ச்சையடைந்தாள்.

46.15. அரசன் அந்த பாலகனை விடவில்லை; பிராணனைவிட முயன்றான். அப்பொழுது அங்கு அவன் ஒரு விமானத்தைக் கண்ணுற்றான்.

46.20. அப்பொழுது அங்கு மனதைக்கவரும் அழகு வாய்ந்த தேவியைக் கண்டான். அங்ஙனம் அவளைக் கண் முன் தரிசித்த அரசன் மிகுந்த ஆர்வத்துடன் துதித்தான்.

46.22. வேனிற்கால சூரியனைப் போல் பிரகாசித்த அவளைத் துதித்து அரசன் 'மங்களவடிவினளே! நீ யார்? மனதைக் கவர்பவளே! சிறந்த விரதமுடையவளே! நீ யாரைப் பதியாய் கொண்டவள்?' எனக்கேட்டான்.

46.23. அரசனுடைய வார்த்தையைக் கேட்டு ஜகன் மங்கள சண்டிகையும் தேவஸேனா எனப் பெயர் பெற்றவளும் தேவர்களுக்காகப் போர் புரிபவளுமான அவள் பின்வருமாறு கூறினாள்.

श्रीदेवसेनोवाच —

ब्रह्मणो मानसी कन्या देवसेनाऽहमीश्वरी ।
मातृकासु च विख्याता स्कन्दभार्या च सुव्रता ।। ४६. २५ ।।

सुखं दुःखं भयं शोको हर्षो मंगलमेव च ।
संपत्तिश्च विपत्तिश्च सर्वं भवति कर्मणा ।। ४६. २७ ।।

कर्मणा मृतपुत्रश्च कर्मणा चिरजीवनः ।
इत्येवमुक्त्वा सा देवी गृहीत्वा बालकं मुने ।।
महाज्ञानेन सा देवी जीवयामास लीलया ।। ४६. ३२ ।।

धनिनं गुणिनं शुद्धं विदुषां प्रियमेव च ।
यशस्विनं च लोकेषु दातारं सर्वसंपदाम् ।
इत्येवमुक्त्वा सा देवी तस्मै तद्बालकं ददौ ।। ४६. ४१ ।।

ஸ்ரீ தேவஸேனா கூறியது—

46.25 நான் பிரம்மாவின் மானஸபுத்திரி, தேவஸேனா எனும் ஈசுவரி, மாத்ருகாதேவிகளுள் பிரசித்தமானவள், விரதத்திற் சிறந்த ஸ்கந்தபத்னி.

46.27. சுகம், துக்கம், பயம், சோகம், மகிழ்ச்சி, மங்களம், ஸம்பத்து, விபத்து ஆகிய எல்லாம் கருமத்தால் விளைகிறது.

46.32. கருமத்தாலேயே உயிரிழந்த புத்திரனும், சிரஞ்ஜீவியானவனும் தோன்றுகிறார்கள். என்றிவ்வாறு அந்த தேவி கூறிவிட்டு அந்த பாலகனை எடுத்து மகா ஞான பலத்தால் விளையாட்டாகப் பிழைப்பித்தாள்.

46.41. செல்வவந்தனாகவும், குணவானாகவும், பரிசுத்தனாகவும், வித்வான்களுக்குப் பிரியமானவனாகவும், உலகங்களில் புகழ் படைத்தவனாகவும், எல்லாச் செல்வங்களையும் தானம் செய்பவனாகவும் விளங்கும்படி அருள் புரிந்து அந்த தேவி அக்குழந்தையை அவனுக்குக் கொடுத்தாள்.

जगाम देवी स्वर्गं च दत्त्वा तस्मै शुभं वरम् ।
श्रुत्वा बभूवुः सन्तुष्टा नरा नार्यश्च नारद ।। ४६. ४४ ।।

ओं ह्रीं षष्ठीदेव्यै स्वाहेति विधिपूर्वकम् ।
अष्टाक्षरं महामन्त्रं यथाशक्ति जपेन्नरः ।। ४६. ५५ ।।

नमो देव्यै महादेव्यै सिद्धयै शान्त्यै नमो नमः ।। ४६. ५८ ।।

शुभायै देवसेनायै षष्ठ्यै देव्यै नमो नमः ।
वरदायै पुत्रदायै धनदायै नमो नमः ।। ४६. ५९ ।।

प्रत्यक्षायै स्वभक्तानां षष्ठ्यै देव्यै नमोनमः ।
पूज्यायै स्कन्दकान्तायै सर्वेषां सर्वकर्मसु ।। ४६. ६३ ।।

46.44. நாரதரே ! அந்த தேவி அவனுக்கு மங்களமான வரத்தை அளித்துவிட்டு ஸ்வர்க்கலோகம் சென்ருள். அதைக் கேட்டு ஸ்திரீகளும் புருஷர்களும் ஸந்தோஷமுடையவர் களாயினர்.

46.55. 'ஓம் ஹ்ரீம் ஷஷ்டீ தேவ்யை ஸ்வாஹா' என்ற இந்த அஷ்டாக்ஷர மகா மந்திரத்தை சக்திக்குத் தகுந்தவாறு முறைப்படி ஒருவன் ஜபிக்க வேண்டும்.

46.58. தேவிக்கு நமஸ்காரம். சாந்திவடிவினளாயும் ஸித்திவடிவினளாயும் உள்ள மகா தேவிக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரம்.

46.59. மங்களவடிவினளாயும் தேவஸேனு எனப் பெயர் படைத்தவளாயுமுள்ள ஷஷ்டி தேவிக்கு நமஸ்காரம். வரமளிப்பவளாயும், புத்திரனையளிப்பவளாயும், பொருளே யளிப்பவளாயும் உள்ள அவளுக்கு மீண்டும் மீண்டும் நமஸ் காரம்.

46.63. தனது பக்தர்களுக்குப் பிரத்தியக்ஷமாகும் ஷஷ்டி தேவிக்கு நமஸ்காரம். எல்லோராலும் எல்லாக் காரியங்களிலும் பூஜித்தற்குரிய ஸ்கந்தபத்னிக்கு நமஸ்காரம்.

मानं देहि जयं देहि द्विषो जहि महेश्वरी।
धर्मं देहि यशो देहि षष्ठीदेव्यै नमो नमः ॥ ४६. ६६ ॥

इति देवीं च संस्तूय लेभे पुत्रं प्रियव्रतः।
यशस्विनं च राजेन्द्रः षष्ठीदेव्याः प्रसादतः ॥ ४६. ६८ ॥

कथितं षष्ट्युपाख्यानं ब्रह्मपुत्र यथागमम्।
देवीमंगलचण्डी च तदाख्यानं निशामय ॥ ४७. १ ॥

दक्षा या वर्तते चण्डी कल्याणेषु च मंगला।
मंगलेषु च या दक्षा सा च मंगलचण्डिका ॥ ४७. ३ ॥

मंगलो मनुवंशयश्च सप्तद्वीपधरापतिः।
तस्य पूज्याऽभीष्टदेवी तेन मंगलचण्डिका ॥ ४७. ५ ॥

46.66. மகேசுவரி! சத்துருக்களை யொழித்து எங்களுக்கு வெற்றியையும் பெருமையையும் அருள்வாயாக. தருமத்தை அருள்வாயாக. புகழை அருள்வாயாக. ஷஷ்டி தேவி! உனக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரம்.

46.68. இவ்வாறு ஷஷ்டி தேவியைத் துதித்து அரசர் பிரானுகிய பிரியவிரதன் அவளருளால் புகழ்மிக்க புத்திரனை யடைந்தான்.

47.1. பிரம்மபுத்திரரே! ஷஷ்டி உபாக்கியானம் உள்ளபடி செல்லப்பட்டது. இனி மங்கள சண்டீ தேவியின் உபாக்கியானத்தைக் கேளும்.

47.3. எந்த தேவி திறமை மிக்கவளோ அவள் சண்டீ; சுபகாரியங்களில் அவள் மங்களா எனப்படுகிறுள். மங்களங்களில் எவள் திறமை மிக்கவளோ அவள் மங்கள சண்டிகை.

47.5. மனுவம்சத்திலுதித்த ஸப்தத்வீபபதியாயிருந்த மங்களன் எனும் அரசனுல் பூஜிக்கப் பெற்று அவனுக்கு விரும்பியவற்றையெல்லாம் அளித்த தேவியாய் விளங்கியதாலும் மங்களசண்டிகை எனும் பெயர் ஏற்பட்டது.

मूर्तिभेदेन सा दुर्गा मूलप्रकृतिरीश्वरी ।
कृपारूपाऽतिप्रत्यक्षा योषिता-मिष्टदेवता ॥ ४७. ६ ॥

प्रथमे पूजिता सा च शंकरेण परात्परा ।
त्रिपुरस्य वधे घोरे विष्णुना प्रेरितेन च ॥ ४७. ७ ॥

ओं ह्रीं श्रीं क्लीं सर्वपूज्ये देवि मंगलचण्डिके ।
हूं हूं फट् स्वाहाऽप्येकविंशाक्षरो मन्त्रः ॥ ४७. २० ॥

महादेव उवाच —

रक्ष रक्ष जगन्मातर्देवि मंगलचण्डिके ।
हारिके विपदां राशेर्हर्षमंगलकारिके ॥ ४७. २६ ॥

47.6. மூர்த்திபேதத்தால் துர்க்கையாகவும் மூலப்ர கிருதியான ஈசுவரியாகவும் விளங்குபவள் அவளே. கிருபையே உருக்கொண்டு ஸ்திரீகளுக்குக் கண்கண்ட தெய்வமாயும் இஷ்ட தேவதையாயும் உள்ளவள் அவள்.

47.7. உயர்விற்கும் உயர்வான அவள் ஆதியில் கோரமான திரிபுரஸம்ஹாரத்தின் போது விஷ்ணுவால் வேண்டிக் கொள்ளப்பட்டு சங்கரரால் பூஜிக்கப்பட்டாள்.

47.20. 'ஓம் ஹ்ரீம் ஸ்ரீம் க்லீம் ஸர்வபூஜ்யே தேவி மங்கள சண்டிகே ஹூம் ஹூம் பட் ஸ்வாஹா' என்று இருபத்தோரெழுத்துள்ளது அவளுடைய மந்திரம்.

மஹாதேவர் கூறிய ஸ்தோத்ரம்—

47.26. காத்தருள்வாய்! காத்தருள்வாய்! லோகமாதாவாகிய மங்கள சண்டிகாதேவி! விபத்துக் கூட்டங்களைப் போக்குபவளே! மகிழ்ச்சியையும் மங்களத்தையும் அருள்பவளே!

पूज्ये मंगलवारे च मंगलाभीष्टदेवते।
पूज्ये मंगलभूपस्य मनुवंश्यस्य सन्ततम् ।। ४७. २९ ।।

मंगलाधिष्ठातृ देवि मंगलानां च मंगले।
संसारमंगलाधारे मोक्षमंगलदायिनि ।। ४७. ३० ।।

श्रीनारायण उवाच —

उक्तं द्वयोरुपाख्यानं ब्रह्मपुत्र यथागमम्।
श्रूयतां मनसाख्यानं यच्छ्रुतं धर्मवक्त्रतः ।। ४७. ३८ ।।

सा च कन्या भगवती कश्यपस्य च मानसी।
तेनैव मनसा देवी मनसा या च दीव्यति ।। ४७. ३९ ।।

वैष्णवी नागभगिनी शैवी नागेश्वरी तथा।
जरत्कारुप्रियाऽऽस्तीकमाता विषहरेति च ।। ४७. ५२ ।।

47.29–30. மங்களவாரத்தில் பூஜிக்கப்பட்டவளே! மங்களாபீஷ்ட தேவதையே! மனுவம்சத்துதித்த மங்கள பூபனுல் தொடர்ந்து பூஜிக்கப்பட்டவளே! மங்களத்திற்கு அதிஷ்டான தேவதையே! மங்களமனைத்திற்கும் மங்கள மானவளே! ஸம்ஸார மங்களத்திற்கு ஆதாரமானவளே! மோக்ஷ மங்களத்தை அளிப்பவளே!

ஸ்ரீ நாராயணரிஷி கூறியது—

47.38. பிரம்மபுத்திரரே! இரண்டு உபாக்கியானங்கள் உள்ளபடி கூறப்பட்டன. இனி தருமரின் வாயிலாக நான் கேட்ட மனஸா உபாக்கியானத்தைக் கேட்பீராக.

47.39. பகவதீ மானஸீதேவி கசியபருடைய மானஸ புத்ரி. அதனுலும் எப்பொழுதும் மனதால் பரமாத்மாவை தியானிப்பதாலும் அவள் மனஸாதேவி எனப் பெயர் பெற்ருள்.

47.52. வைஷ்ணவீ, நாகசகோதரி, சைவீ, நாகே சுவரி, ஜரத்காருப்பிரியா, ஆஸ்தீகமாதா, விஷஹரா என் பனவும் அவளுடைய பெயர்கள்.

महाज्ञानयुता चैव सा देवी विश्वपूजिता ।
द्वादशैतानि नामानि पूजाकाले तु यः पठेत् ।। ४७. ५३ ।।

तस्य नागभयं नास्ति तस्य वंशोद्भवस्य च ।
अन्ते च विष्णुना सार्धं क्रीडत्येव दिवानिशम् ।। ४७. ५८ ।।

ओं ह्रीं श्रीं क्लीं ऐं मनसादेव्यै स्वाहेति कीर्तितः ।
पंचलक्ष-जपेनैव मन्त्रसिद्धिर्भवेन्नृणाम् ।
सुधा समं विषं तस्य धन्वन्तरि समो भवेत् ।। ४८. ६ ।।

नारद उवाच —

का वा सा सुरभिर्देवी गोलोकादागता च या ।
तज्जन्म चरितं ब्रह्मन् श्रोतुमिच्छामि यत्नतः ।। ४९. १ ।।

47.53–58. அவள் மகாஞானம் படைத்தவள். அந்த தேவி உலகம் முழுவதாலும் பூஜிக்கப்படுபவள். இப்பொழுது கூறிய பன்னிரண்டு நாமங்களையும் பூஜாகாலத்தில் எவன் உச்சரிக்கிறானோ அவனுக்குப் பாம்பு பயம் இல்லை. அவனுடைய வம்சத்தில் உதித்தவனுக்கும் இல்லை. முடிவில் விஷ்ணுவின் பக்கத்தில் சேர்ந்து இரவும் பகலும் இன்புற்றிருப்பான்.

48.6. 'ஓம் ஹ்ரீம் ஸ்ரீம் க்லீம் ஐம் மனஸா தேவ்யை ஸ்வாஹா' என்று சொல்லப்பட்ட மந்திரத்தை ஐந்து லக்ஷம் தடவை ஜபம் செய்தால் அம்மனிதனுக்கு மந்திர ஸித்தி ஏற்படும்.

நாரதர் கூறியது—

49.1. பிரம்மஸ்வரூபியே! கோலோகத்திலிருந்து வந்த ஸுரபிதேவி என்பவள் எப்படிப் பட்டவள்? அவளுடைய பிறப்பையும் சரித்திரத்தையும் கேட்க விரும்புகிறேன்.

नारायण उवाच —

गवामधिष्ठातृदेवी गवामाद्या गवां प्रसूः।
गवां प्रधाना सुरभिर्गोलोके सा समुद्भवा ॥ ४९. २ ॥

पूजां चकार भगवान् सुरभ्याश्च पुरा मुने।
ततो बभूव तत्पूजा त्रिषु लोकेषु दुर्लभा ॥ ४९. १३ ॥

ओं सुरभ्यै नम इति मन्त्रस्तस्याः षडक्षरः।
सिद्धो लक्षजपेनैव भक्तानां कल्पपादपः ॥ ४९. १६ ॥

घटे वा धेनुशिरसि बन्धस्तम्भे गवामपि।
शालग्रामे जलाग्नौ वा सुरभिं पूजयेद्द्विजः ॥ ४९. २० ॥

नमो देव्यै महादेव्यै सुरभ्यै च नमो नमः।
गवां बीजस्वरूपायै नमस्ते जगदम्बिके ॥ ४९. २४ ॥

நாராயணரிஷி கூறியது—

49.2. பசுக்களுக்கு அதிஷ்டான தேவதையும், பசுக்களுக்கு ஆதியும், பசுக்களைத் தோற்றுவிப்பவளும், பசுக்களுட் சிறந்தவளும் ஸுரபிதேவி. அவள் கோலோகத்தில் உற்பவித்தவள்.

49.13. முனிவரே! ஆதியில் பகவான் (கிருஷ்ணர்) ஸுரபியின் பூஜையை முதலில் செய்தார். அடைதற்கரிய அப்பூஜை அதன்பின் மூவுலகிலும் பரவிற்று.

49.16. 'ஓம் ஸுரப்ப்யை நம:' என்ற ஆறு எழுத்துக் கொண்டு அவளுடைய மந்திரம்; ஒரு லக்ஷம் தடவை ஜபிப்பதால் ஸித்தி ஏற்படும்; இது பக்தர்களுக்குக் கற்பக விருக்ஷம் போன்றது.

49.20. கலசத்திலோ, பசுவின் சிரசிலோ பசுவைக் கட்டும் தூணிலோ, ஸாலக்ராமத்திலோ, தீர்த்தத்திலோ, அக்னியிலோ ஸுரபிதேவியை துவிஜன் பூஜிக்க வேண்டும்.

49.24. மஹா தேவியான ஸுரபி தேவிக்கு நமஸ்காரம். பசுக்களுக்கு உற்பத்திஸ்தானமான ஜகதம்பிகைக்கு நமஸ்காரம்.

कल्पवृक्षस्वरूपायै सर्वेषां सततं परे।
क्षीरदायै धनदायै बुद्धिदायै नमो नमः ॥ ४९. २६ ॥

शुभायै च सुभद्रायै गोप्रदायै नमो नमः।
यशोदायै कीर्तिदायै धर्मदायै नमो नमः ॥ ४९. २७ ॥

इदं स्तोत्रं महापुण्यं भक्तियुक्तश्च यः पठेत्।
सा गोमान् धनवांश्चैव कीर्तिमान् पुत्रवांस्तथा ॥ ४९. ३१ ॥

॥ षष्ठी-मनसा-सुरभि-उपाख्यानं समाप्तं ॥

॥ इति श्रीदेवीभागवते नवमस्कन्धे एकोनपंचाशत्तमोऽध्यायः ॥

49.26. எல்லோருக்கும் எப்பொழுதும் சிறந்த கற்பக விருக்ஷஸ்வரூபிணியாயும், பாலேயும், செல்வத்தையும், புத்தியையும் அளிப்பவளாயும் விளங்கும் தேவிக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரம்.

49.27. மங்களத்தையும் நன்மையையும் பசுவையும் கொடுத்தருள்பவளுக்கு நமஸ்காரம். புகழையும், கீர்த்தியையும் தர்மத்தையும் அருளும் அவளுக்கு மேன் மேலும் நமஸ்காரம்.

49.31. புண்ணியம் மிகுந்த இந்த ஸ்தோத்திரத்தை பக்தியுடன் படிப்பவர் பசுக்களே உடையவராயும் தனம் படைத்தவராயும் புகழ் மிக்கவராயும், புத்திரர்களே யடைந்தவராயும் வாழ்வர்.

ஷஷ்டீ-மனஸா-ஸுரபி-உபாக்கியானம் முற்றும்.

இங்ஙனம் ஸ்ரீதேவீபாகவதத்தில் ஒன்பதாவது
ஸ்கந்தத்தில் நாற்பத்தொன்பதாவது
அத்தியாயம் முற்றும்.

॥ देवी पूजाविधानम् ॥ ४३ ॥

नारद उवाच —

श्रुतं सर्वमुपाख्यानं प्रकृतीनां यथातथम् ।
यच्छ्रुत्वा मुच्यते जन्तु-र्जन्मसंसारबन्धनात् ॥ ५०. १ ॥

अधुना श्रोतुमिच्छामि रहस्यं वेदगोपितम् ।
राधायाश्चैव दुर्गाया विधानं श्रुतिचोदितम् ॥ ५०. २ ॥

नारायण उवाच —

शृणु नारद वक्ष्यामि रहस्यं श्रुतिचोदितम् ।
यन्न कस्याऽपि चाऽऽख्यातं सारात्सारं परात्परम् ॥ ५०. ५ ॥

43. தேவீ பூஜாவிதானம்

நாரதர் கூறியது—

50.1. எதைக் கேட்டமாத்திரத்தில் ஜீவன் ஸம்ஸாரப் பிறவித் தளைகளினின்று விடுபடுவானோ அந்தப் பிரகிருதி தேவிகளின் உபாக்கியானங்களெல்லாம் உள்ளபடி கேட்கப் பட்டன.

50.2. வேதத்தில் கூறப்பட்டதும் ரகசியமாய்க் காக்கப்பட்டதுமான ராதையின் பூஜாவிதானத்தையும் துர்க்கையின் பூஜாவிதானத்தையும் இப்பொழுது கேட்க விரும்புகிறேன்.

நாராயணரிஷி கூறியது—

50.5. நாரதரே! வேதத்தில் கூறப்பட்ட ரகசியமும் ஸாரத்துள் ஸாரமானதும், உயர்ந்தவற்றுள் உயர்ந்ததும், இதுவரை எவருக்கும் கூறப்படாததுமான அதைக் கூறு கிறேன், கேளும்.

श्रुत्वा परस्मै नो वाच्यं यतोऽतीव रहस्यकम्।
मूलप्रकृतिरूपिण्याः संविदो जगदुद्भवे ।। ५०. ६ ।।

प्रादुर्भूतं शक्तियुग्मं प्राणबुद्ध्यधिदैवतम्।
जीवानां चैव सर्वेषां नियन्तृ प्रेरकं सदा ।। ५०. ७ ।।

तदधीनं जगत्सर्वं विराडादि-चराचरम्।
यावत्तयोः प्रसादो न तावन्मोक्षो हि दुर्लभः ।। ५०. ८ ।।

ततस्तयोः प्रसादार्थं नित्यं सेवेत तद् द्वयम्।
तत्रादौ राधिकामन्त्रं शृणु नारद भक्तितः ।। ५०. ९ ।।

50.6–7. இது மிகவும் ரகசியமானதால் கேட்டபின் (தகுதியை ஆராயாமல்) பிறர்க்குச் சொல்லக் கூடாது. உலகின் உற்பத்தியின் போது ஞானரூபிணியான மூலப் பிரகிருதியினின்று இரண்டு சக்திகள் தோன்றினர். அவர்கள் பிராணனுக்கும் புத்திக்கும் அதிதேவதைகள். அவர்கள் எக்காலத்தும் ஜீவர்களையெல்லாம் ஆள்பவர்களாகவும் ஆட்டுவிப்பவர்களாகவும் விளங்குகின்றனர்.

50.8. விராட்புருஷன் முதல் சராசரப் பிரபஞ்சம் முழுதும் அவர்கள் வசப்பட்டதேயாகும். எதுவரை அவர்களுடைய அருள் இல்லையோ அதுவரை முக்தி என்பது அடைதற்கரிது.

50.9. ஆகையால் அவர்களுடைய அருளைப்பெற எப்பொழுதும் அவ்விருவரும் ஆராதிக்கப்படவேண்டும். நாரதரே! முதலில் பக்தியுடன் ராதிகையின் மந்திரத்தைக் கேளும்.

ब्रह्मविष्णवादिभिर्नित्यं सेवितो यत्परात्परः।
श्रीराधेति चतुर्थ्यन्तं वह्नेर्जाया ततः परम् ॥ ५०.१० ॥

षडक्षरो महामन्त्रो धर्माद्यर्थप्रकाशकः।
मायाबीजादिकश्चायं वांछाचिन्तामणिः स्मृतः ॥ ५०. ११ ॥

जग्राह प्रथमं मन्त्रं श्रीकृष्णो भक्तितत्परः।
उपदेशान्मूलदेव्या गोलोके रासमण्डले ॥ ५०. १३ ॥

विष्णुस्तेनोपदिष्टस्तु तेन ब्रह्मा विराट् तथा।
तेन धर्मस्तेन चाऽहमित्येषा हि परम्परा ॥ ५०. १४ ॥

अहं जपामि तं मन्त्रं तेनाहमृषिरीडितः।
ब्रह्माद्याः सकला देवा नित्यं ध्यायन्ति तां मुदा ॥ ५०. १५ ॥

50.10–11. அது உயர்ந்ததற்கெல்லாம் உயர்ந்தது; பிரம்மா, விஷ்ணு முதலியவர்களாலும் நித்தியம் சேவிக்கப் படுவது.

'ஸ்ரீராதாயை ஸ்வாஹா' என்ற ஆறெழுத்துக் கொண்டது அம்மகாமந்திரம். அது தருமம் அர்த்தம் முதலியவற்றை விளங்க வைப்பது. (ஹ்ரீம் எனும்) மாயா பீஜம் ஆதியில் சேர்ந்தால் இம்மந்திரம் (வாஞ்ச்சா சிந்தாமணி) எண்ணியதையெல்லாமளிக்கும் சிந்தாமணி எனப்படும்.

50.13. இம்மந்திரத்தை முதன் முதல் மூல தேவியிடமிருந்து உபதேசத்தால் கோலோகத்தில் ராஸமண்டலத்தில் ஸ்ரீகிருஷ்ணன் ஆழ்ந்த பக்தியுடன் பெற்றுக் கொண்டார்.

50.14. விஷ்ணு அவரிடமிருந்து உபதேசம் பெற்றார்; விஷ்ணுவிடமிருந்து பிரம்மா; அவரிடமிருந்து விராட் புருஷன்; அவரிடமிருந்து தர்மப்ரஜாபதி; அவரிடமிருந்து நான்; இது தான் பரம்பரை.

50.15. நான் அம்மந்திரத்தை ஜபிக்கிறேன். அதனால் நான் ரிஷி எனப் போற்றப்படுகிறேன். பிரம்மா முதலிய எல்லா தேவர்களும் அவளை ஆனந்தமாய் எப்பொழுதும் தியானிக்கிறார்கள்.

कृष्णार्चायां नाऽधिकारो यतो राधार्चनं विना।
वैष्णवैः सकलैस्तस्मात्कर्तव्यं राधिकार्चनम् ॥ ५०. १६ ॥

कृष्णप्राणाधिदेवी सा तदधीनो विभुर्यतः।
रासेश्वरी तस्य नित्यं तया हीनो न तिष्ठति ॥ ५०. १७ ॥

राध्नोति सकलान् कामांस्तस्माद्राधेति कीर्तिता।
अत्रोक्तानां मनूनां च ऋषिरस्म्यहमेव च ॥ ५०. १८ ॥

छन्दश्च देवी गायत्री देवताऽत्र च राधिका।
तारो बीजं शक्तिबीजं शक्तिस्तु परिकीर्तिता ॥ ५०. १९ ॥

मूलावृत्त्या षडंगानि कर्तव्यानीतरत्र च।
अथ ध्यायेन्महादेवीं राधिकां रासनायिकाम् ॥ ५०. २० ॥

50.16. ராதையின் அர்ச்சனையில்லாமல் கிருஷ்ணனை அர்ச்சிக்க அதிகாரமில்லாத காரணத்தால் எல்லா வைஷ்ணவர்களாலும் ராதையின் அர்ச்சனை செய்தேயாக வேண்டும்.

50.17. பிரபுவான கிருஷ்ணன் அவளுடைய அதீன மாயிருப்பதால் அவள் கிருஷ்ணனுடைய பிராண தேவதை. அவளை விட்டுப் பிரிந்து அவர் இருப்பதில்லை. எப்பொழுதும் அவள் அவருடைய ராஸமண்டலத்திற்கு ஈசுவரியாயிருக்கிறாள்.

50.18–19. எல்லாக்காமங்களையும் 'ராத்னோதி' நிறைவேற்றுகிறாள் என்பதால் அவள் 'ராதா' என அழைக்கப் படுகிறாள். இங்கு கூறப்பட்ட ராதையின் மந்திரத்திற்கு நான் (நாராயணரிஷி) ரிஷி, தேவிகாயத்ரீச்சந்தம், ராதிகா தேவதை. தாரமாகிய ஓம் பீஜம், (சக்தி பீஜம்) ஹ்ரீம் சக்தியெனக் கூறப்படுகிறது.

50.20. மூலமந்திரத்தின் ஆறு எழுத்துக்களால் ஆறு அங்கநியாஸம் கரநியாஸம் முதலியவற்றைச் செய்ய வேண்டும். பின்பு ராஸநாயிகையும் மகாதேவியுமாகிய ராதிகையை தியானம் செய்ய வேண்டும்.

पूर्वोक्तिरीत्या तु मुने सामवेदे विगीतया।
श्वेतचम्पकवर्णाभां शरदिन्दुसमाननाम् ॥ ५०. २१ ॥

कोटिचन्द्रप्रतीकाशां शरदम्भोजलोचनाम्।
बिम्बाधरां पृथुश्रोणीं कांचीयुत-नितम्बिनीम् ॥ ५०. २२ ॥

कुन्दपंक्तिसमानाभ-दन्तपंक्ति-विराजिताम्।
क्षौमाम्बरपरीधानां वह्निशुद्धांशुकान्विताम् ॥ ५०. २३ ॥
ईषद्धास्य-प्रसन्नास्यां करिकुम्भयुगस्तनीम्।
सदा द्वादशवर्षीयां रत्नभूषणभूषिताम् ॥ ५०. २४ ॥

50.21. முனிவரே! ஸாமவேதத்தில் பாடப் பெற்றுள்ள முன்கூறிய முறையில் ராதிகையை வெண்மையான சம்பக வர்ணமுடையவளாகவும் சரத்கால சந்திரன் போன்ற முகம் படைத்தவளாகவும் தியானம் செய்ய வேண்டும்.

50.22. கோடி சந்திரர்களைப் போல் பிரகாசிப்பவளாயும், சரத்காலத் தாமரை போன்ற கண்களை உடையவளாகவும், கோவைப் பழம் போன்ற உதடுகளை உடையவளாகவும், பருத்த இடுப்பும் அரைநூல் விளங்கும் நிதம்பமும் உடையவளாயும்;

50.23–24. குருக்கத்தி அரும்பு போன்று பிரகாசிக்கும் பல்வரிசையை உடையவளாயும், வெண்பட்டுடுத்து அக்னியால் சுத்தமான மேலாடையுடையவளாயும், புன்முறுவல் பூத்த முகமுடையவளாயும், யானையின் மஸ்தகம் போன்ற நகில்களை உடையவளாயும், எப்போதும் பன்னிரண்டு வயதுள்ளவளைப் போலும் ரத்னாபரணங்கள் அணிந்தவளாயும்;

श्रृंगारसिन्धुलहरीं भक्तानुग्रहकातराम्।
मल्लिकामालती-माला-केशपाशविराजिताम्॥ ५०. २५॥

सुकुमारांगलतिकां रासमण्डलमध्यगाम्।
वराभयकरां शान्तां शश्वत्सुस्थिरयौवनाम्॥ ५०. २६॥

रत्नसिंहासनासीनां गोपीमण्डलनायिकाम्।
कृष्णप्राणाधिकां वेदबोधितां परमेश्वरीम्॥ ५०. २७॥

एवं ध्यात्वा ततो बाह्ये शालग्रामे घटेऽथवा।
यन्त्रे वाऽष्टदले देवीं पूजयेत्सुविधानतः॥ ५०. २८॥

आवाह्य देवीं तत्पश्चादासनादि प्रदीयताम्।
मूलमन्त्रं समुच्चार्य चाऽऽसनादीनि कल्पयेत्॥ ५०. २९॥

50.25–26. சிருங்காரம் எனும் நதியின் பெருக்குப் போன்றவளாயும், பக்தர்களுக்கு அருள் புரிவதில் ஆவல் கொண்டவளாயும், மல்லிகை மாலதி முதலிய புஷ்பங்களாலான மாலை சூடிய கூந்தலுடன் விளங்குபவளாயும், மிருதுவான கொடி போன்ற அங்கங்கள் படைத்தவளாயும், ராஸமண்டலத்தின் மத்தியில் விளங்குபவளாயும், கைகளில் அபயமுத்திரையும் வரமுத்திரையும் தரிப்பவளாயும், சாந்தஸ்வரூபிணியாயும், எப்பொழுதும் நிலைத்த யௌவனப் பருவத்தினளாயும்;

50.27–28. கோபீமண்டல நாயிகையாய் ரத்ன சிம்மாசனத்தில் வீற்றிருப்பவளாயும், கிருஷ்ணனுக்குப் பிராணனைவிட அதிகப் பிரியமானவளாயும், வேதத்தில் போதிக்கப்பட்ட பரமேசுவரியாயும் உள்ள அந்த தேவியை தியானித்துப் பிறகு வெளியில் ஸாளக்ராமத்திலோ, ஒரு கும்பத்திலோ, எட்டு தளமுள்ள யந்திரத்திலோ முறைப்படி பூஜிக்க வேண்டும்.

50.29. தேவியை ஆவாஹனம் செய்தபின் ஆஸனம் முதலியவற்றை அளிக்க வேண்டும். மூலமந்திரத்தை உச்சரித்து ஆஸனம் முதலியவற்றைக் கற்பிக்க வேண்டும்.

पाद्यन्तु पादयोर्दद्यान्मस्तकेऽर्घ्यं समीरितम्।
मुखे त्वाचमनीयं स्यात् त्रिवारं मूलविद्यया ॥ ५०. ३० ॥

मधुपर्कं ततो दद्यादेकांगां च पयस्विनीम्।
ततो नयेत्स्नानशालां तां च तत्रैव भावयेत् ॥ ५०. ३१ ॥

अभ्यंगादिस्नानविधिं कल्पयित्वाऽथ वाससी।
ततश्च चन्दनं दद्यान्नानालंकारपूर्वकम् ॥ ५०. ३२ ॥

पुष्पमाला बहुविधास्तुलसीमंजरीयुताः।
पारिजातप्रसूनानि शतपत्रादिकानि च ॥ ५०. ३३ ॥

ततः कुर्यात्पवित्रं तत्परिवारार्चनं विभोः।
अग्नीशासुरवायव्यमध्ये दिक्ष्वंगपूजनम् ॥ ५०. ३४ ॥

50.30. பாத்யம் பாதங்களிலும் அர்க்கியம் சிரசிலும் அளிக்கவேண்டுமென்று கூறப்பட்டுளது; மூலவித்தையால் மும்முறை முகத்தில் ஆசமனீயம்.

50.31. பிறகு மதுபர்க்கத்தையும் கன்றுடன் கறவைப் பசுவையும் கொடுத்துபசரித்து ஸ்நான சாலைக்கு அழைத்துப் போவதாய் பாவிக்க வேண்டும்.

50.32. அப்யங்கஸ்நானத்தை முறைப்படி கற்பித்து வஸ்திரங்களை யளித்துப் பிறகு பலவகை ஆபரண அலங் காரங்களுடன் சந்தனமளிக்க வேண்டும்.

50.33. துளஸீதளங்களுடன் கூடின பலவிதமான மாலைகளையும் பாரிஜாத புஷ்பங்களையும் நூற்றுக்கணக்கான பத்ரங்களையும் அர்ப்பணம் செய்ய வேண்டும்.

50.34. அதன் பின் பிரபுவின் பவித்ரமான பரிவார அர்ச்சனை செய்ய வேண்டும். அக்னி, ஈசான, நிர்ருதி, வாயு மூலைகளிலும் நடுவிலும் அங்கபூஜை செய்ய வேண்டும்.

कृत्वा पश्चादष्टदले दक्षिणावर्ततोऽग्रतः।
मालावतीमग्रदले वह्निकोणे च माधवीम् ॥ ५०. ३५ ॥

रत्नमालां दक्षिणे च नैर्ऋत्ये तु सुशीलकाम्।
पश्चाद्दले शशिकलां पूजयेन्मतिमान्नरः ॥ ५०. ३६ ॥

मारुते पारिजातां चाप्युत्तरे च परावतीम्।
ईशानकोणे संपूज्या सुन्दरी प्रियकारिणी ॥ ५०. ३७ ॥

ब्राह्म्यादयस्तु तद्बाह्येऽप्याशापालांस्तु भूपुरे।
वज्रादिकान्यायुधानि देवीमित्थं प्रपूजयेत् ॥ ५०. ३८ ॥

ततो देवीं सावरणां गन्धाद्यैरुपचारकैः।
राजोपचारसहितैः पूजयेन्मतिमान्नरः ॥ ५०. ३९ ॥

50.35–37. அதைச் செய்தபின் எட்டுதளங்களிலும் முன்புள்ள தளத்தில் தொடங்கிப் பிரதக்ஷிணமாக முதல் தளத்தில் மாலாவதியையும், அக்னி மூலையில் மாதவியையும், தெற்கில் ரத்னமாலாவையும், நிர்ருதியில் ஸுசீலகாவையும், மேற்கு தளத்தில் சசிகலாவையும் மதிமானுன மனிதன் பூஜிக்க வேண்டும். வாயுதிக்கில் பாரிஜாதாவையும், வடக்கில் பராவதியையும், ஈசான கோணத்தில் பிரியத்தைச் செய்யும் ஸுந்தரியையும் பூஜிக்க வேண்டும்.

50.38. ப்ராஹ்மீ முதலியவர்களை அதற்கு வெளியிலும் திக்பாலகர்களையும் வஜ்ரம் முதலிய ஆயுதங்களையும் பூபுரத்திலுமாக இப்படி தேவியை பூஜிக்க வேண்டும்.

50.39. புத்திமானுன மனிதன் இவ்வாருக ஆவரண தேவதைகளுடன் ராதிகையை கந்தம் முதலிய உபசாரங்களாலும் ராஜமரியாதைகளுடன் கூடிய உபசாரங்களாலும் பூஜிக்கவேண்டும்.

ततः स्तुवीत देवेशीं स्तोत्रैर्नामसहस्रकैः ।
सहस्रसंख्यं च जपं नित्यं कुर्यात्प्रयत्नतः ॥ ५०. ४० ॥

य एवं पूजयेद्देवीं राधां रासेश्वरीं पराम् ।
स भवेद्विष्णुतुल्यस्तु गोलोकं याति सन्ततम् ॥ ५०. ४१ ॥

यः कार्तिक्यां पौर्णमास्यां राधाजन्मोत्सवं बुधः ।
कुरुते तस्य सान्निध्यं दद्याद्रासेश्वरी परा ॥ ५०. ४२ ॥

केनचित्कारणेनैव राधा वृन्दावने वने ।
वृषभानुसुता जाता गोलोकस्थायिनी सदा ॥ ५०. ४३ ॥

अत्रोक्तानां तु मन्त्राणां वर्णसंख्याविधानतः ।
पुरश्चरणकर्मोक्तं दशांशं होममाचरेत् ॥
तिलैस्त्रिस्वादुसंयुक्तै-र्जुहुयाद् भक्तिभावतः ॥ ५०. ४४ ॥

50.40. பிறகு தேவர்களின் ஈசுவரியாகிய அவளை ஸஹஸ்ரநாம ஸ்தோத்திரத்தால் துதிக்க வேண்டும். தினந்தோறும் விடா முயற்சியுடன் ஆயிரம் முறை ஜபமும் செய்யவேண்டும்.

50.41. எவன் இவ்வாறு உத்தம ராஸமண்டல ஈசுவரியான ராதிகா தேவியை பூஜிக்கிறானோ அவன் விஷ்ணுவுக்குச் சமமானவனாய் கோலோகத்தையடைந்து வாழ்பவனாகிறான்.

50.42. எந்த புத்திமான் கார்த்திகை பௌர்ணமியில் ராதிகையின் ஜன்மோத்ஸவத்தைக் கொண்டாடுகிறானோ அவனுக்கு ராஸபரமேசுவரியாகிய அவள் பிரத்தியக்ஷமாகிறாள்.

50.43. எப்பொழுதும் கோலோகத்திலேயே இருக்கும் ராதை ஏதோ ஒரு காரணத்தால் பிருந்தாவனம் எனும் வனத்தில் விருஷபானு என்பவருக்குப் பெண்ணாகப் பிறந்தாள்.

50.44. இங்கு கூறப்பட்ட மந்திரங்களின் எழுத்துக் கணக்குப்படி புரச்சரணகர்மா கூறப்பட்டுளது. ஜபத்தில் பத்திலொரு பங்கு ஹோமம் செய்ய வேண்டும். திரிமதுரம் சேர்ந்த எள்ளினால் பக்தியுடன் ஹோமம் செய்ய வேண்டும்.

नमस्ते परमेशानि रासमण्डलवासिनि।
रासेश्वरि नमस्तेऽस्तु कृष्णप्राणाधिकप्रिये ॥ ५०. ४६ ॥

नमस्त्रैलोक्यजननि प्रसीद करुणार्णवे।
ब्रह्मविष्ण्वादिदेवै-र्वन्द्यमान पदाम्बुजे ॥ ५०. ४७ ॥

नमः सरस्वतीरूपे नमः सावित्रि शंकरि।
गंगा-पद्मावती-रूपे षष्ठिमंगलचण्डिके ॥ ५०. ४८ ॥

नमस्ते तुलसीरूपे नमो लक्ष्मीस्वरूपिणि।
नमो दुर्गे भगवति नमस्ते सर्वरूपिणि ॥ ५०. ४९ ॥

मूलप्रकृतिरूपां त्वां भजामः करुणार्णवाम्।
संसारसागरादस्मादुद्धराम्ब दयां कुरु ॥ ५०. ५० ॥

50.46. ராஸ மண்டலவாஸினியான பரமேசுவரி! உனக்கு நமஸ்காரம். ராஸேசுவரி! கிருஷ்ணனுக்குப் பிராணனைவிடப் பிரியமானவளே! உனக்கு நமஸ்காரம்.

50.47. மூவ்வுலகிற்கும் தாயே! கருணைக்கடலே! நமஸ்காரம். பிரம்மா விஷ்ணு முதலிய தேவர்களால் வணங்கப் பெற்ற பாதகமலங்களையுடையவளே! அருள் புரிவாய்.

50.48. ஸரஸ்வதி ரூபிணியாகவுள்ளவளே! நமஸ்காரம். ஸாவித்ரியாகவும், சங்கரியாகவும், கங்கையாகவும், பத்மாவதி வடிவினளாகவும், ஷஷ்டியாகவும், மங்கள சண்டிகை யாகவும் உள்ள உனக்கு நமஸ்காரம்.

50.49. துளஸீ ரூபமானவளுக்கு நமஸ்காரம். லக்ஷ்மீஸ்வரூபிணிக்கு நமஸ்காரம். துர்க்கையாகவும் பகவதி யாகவும் உள்ளவளுக்கு நமஸ்காரம். எல்லாரூபத்திலும் விளங்கும் உனக்கு நமஸ்காரம்.

50.50. கருணைக்கடலும் மூலப்பிரகிருதிவடிவின ளுமான உன்னை பூஜிக்கிறோம். அம்பிகையே! தயை கூர்ந்து இந்த ஸம்ஸாரஸாகரத்திலிருந்து எங்களைக் கரை யேற்று.

इदं स्तोत्रं त्रिसन्ध्यं यः पठेद्राधां स्मरन्नरः।
न तस्य दुर्लभं किंचित्कदाचिच्च भविष्यति ॥ ५०. ५१ ॥

देहान्ते च वसेन्नित्यं गोलोके रासमण्डले।
इदं रहस्यं परमं न चाऽऽख्येयं तु कस्यचित् ॥ ५०. ५२ ॥

अधुना शृणु विप्रेन्द्र दुर्गादेव्या विधानकम्।
यस्याः स्मरणमात्रेण पलायन्ते महापदः ॥ ५०. ५३ ॥

एनां न भजते यो हि तादृङ् नास्त्येव कुत्रचित्।
सर्वोपास्या सर्वमाता शैवीशक्ति-र्महाद्भुता ॥ ५०. ५४ ॥

सर्वबुद्ध्यधिदेवीय-मन्तर्यामि स्वरूपिणी।
दुर्गसंकटहन्त्रीति दुर्गेति प्रथिता भुवि ॥ ५०. ५५ ॥

50.51. இந்த ஸ்தோத்திரத்தை எவன் மூன்று ஸந்தியிலும் ராதிகையை தியானித்துக் கொண்டு படிக்கிருனே அவனுக்கு ஒரு பொழுதும் எது வொன்றும் அடையமுடியாததாகாது.

50.52. உடலை விட்டபின் அவன் கோலோகத்தில் ராஸமண்டலத்தில் நித்தியவாஸம் செய்பவனுவான். இது மிகவும் ரகசியம். எவருக்கும் சொல்லிவிடக் கூடாது.

50.53. அரசே! இப்பொழுது துர்க்கா தேவியின் பூஜாவிதானத்தைக் கேளும். அவளை நினைத்த மாத்திரத்திலேயே பெரிய ஆபத்துக்கள் பறந்தோடி விடுகின்றன.

50.54. இவளைப் பூஜிக்காதவர்கள் எங்கும் எவரும் இல்லை. இவள் எல்லோராலும் உபாசித்தற்குரியவள், எல்லோருக்கும் தாய், மிகவும் அற்புதமான சிவசக்தி வடிவினள்.

50.55. இவள் எல்லோருடைய புத்திசக்திக்கும் அதிதேவதையும் அந்தர்யாமி ஸ்வரூபிணியுமாவாள். பூவுலகில் 'துர்க்க ஸங்கடஹந்த்ரீ, துர்க்கா' என்று பிரசித்தமானவள்.

वैष्णवानां च शैवाना-मुपास्येयं च नित्यश:।
मूलप्रकृतिरूपा सा सृष्टिस्थित्यन्तकारिणी ॥ ५०. ५६ ॥

तस्या नवाक्षरं मन्त्रं वक्ष्ये मन्त्रोत्तमोत्तमम्।
वाग्भवं शंभुवनिता कामबीजं ततः परम् ॥ ५०. ५७ ॥

चामुण्डायै पदं पश्चाद्विच्चे इत्यक्षरद्वयम्।
नवाक्षरो मनु: प्रोक्तो भजतां कल्पपादप: ॥ ५०. ५८ ॥

ब्रह्मविष्णुमहेशानो ऋषयोऽस्य प्रकीर्तिताः।
छन्दांस्युक्तानि सततं गायत्र्युष्णिगनुष्टुभ: ॥ ५०. ५९ ॥

महाकाली-महालक्ष्मीः सरस्वत्यपि देवता:।
स्याद्रक्तदन्तिका बीजं दुर्गा च भ्रामरी तथा ॥ ५०. ६० ॥

50.56. இவள் வைஷ்ணவர்களாலும், சைவர்களாலும் எப்பொழுதும் உபாசித்தற்குரியவள்; மூலப்ரகிருதி ரூபிணியாகவும் சிருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரத்தைச் செய்பவளாகவும் விளங்குபவள்.

50.57–58. உயர்ந்ததுள் உயர்ந்த அவளுடைய நவாக்ஷரீ மந்திரத்தைக் கூறுகிறேன். (வாக்பவம்) 'ஐம்' (சம்பு வனிதா) 'ஹ்ரீம்' (காமபீஜம்) 'க்லீம்'—அதற்கு மேல் 'சாமுண்டாயை' எனும் பதமும், முடிவில் 'விச்சே' என்பதும். இந்த நவாக்ஷரீ மந்திரம் ஜபிப்பவர்களுக்குக் கற்பக விருக்ஷம் எனக் கூறப்பட்டுள்ளது.

50.59. இதற்கு பிரம்மா, விஷ்ணு, மகேசுவரர் ரிஷிகள். காயத்ரீ, உஷ்ணிக், அனுஷ்டுப் சந்தங்கள் எனக் கூறப்படுகின்றன.

50.60. மகாகாளீ, மகாலக்ஷ்மீ, மகாஸரஸ்வதி தேவதைகள். ரக்த தந்திகா, துர்க்கா, ப்ராமரீ பீஜம்.

नन्दाशाकम्बरी देव्यौ भीमा च शक्तयः स्मृताः।
धर्मार्थकाममोक्षेषु विनियोग उदाहृतः ॥ ५०. ६१ ॥

ऋषिच्छन्दो-दैवतानि मौलौ वक्त्रे हृदि न्यसेत्।
स्तनयोः शक्ति बीजानि न्यसेत्सर्वार्थसिद्धये ॥ ५०. ६२ ॥

बीजत्रयैश्चतुर्भिश्च द्वाभ्यां सर्वेण चैव हि।
षडंगानि मनोः कुर्याज्जातियुक्तानि देशिकः ॥ ५०. ६३ ॥

शिखायां लोचनद्वन्द्वं श्रुतं नासाननेषु च।
गुदे न्यसेन्मन्त्रवर्णान् सर्वेण व्यापकं चरेत् ॥ ५०. ६४ ॥

50.61. நந்தா, சாகம்பரி, பீமா எனும் தேவிகள் சக்திகள், தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் ஆகியவற்றின் சித்திக்காக விநியோகம் எனக் கூறப்பட்டுள்ளது.

50.62. ரிஷி, சந்தஸ், தேவதைகளை சிரசிலும், முகத்திலும், இருதயத்திலும் நியாஸம் செய்ய வேண்டும். ஸ்தனங்களில் பீஜங்களையும் சக்திகளையும் ஸர்வார்த்த சித்திக்காக நியாஸம் செய்ய வேண்டும்.

50.63. (ஐம்-ஹ்ரீம்-க்லீம் எனும்) மூன்று பீஜங்களாலும் (சாமுண்டாயை எனும்) நாலெழுத்துப் பதத்தாலும் (விச்சே எனும்) இரண்டெழுத்துப் பதத்தாலும், கடைசியாக எல்லா ஒன்பது எழுத்துக்களாலும் ஆறு அங்க நியாஸம் முதலியவற்றை நுட்பமறிந்தவன் செய்ய வேண்டும்.

50.64. சிகை, இரண்டு நேத்ரங்கள், இரண்டு காதுகள், இரு நாசித்துவாரங்கள், வாய், ஆஸனம் ஆகிய ஸ்தானங்களில் மந்திரத்தின் ஒன்பது எழுத்துக்களைத் தனித் தனியாகவும் நியாஸம் செய்து எல்லாவற்றாலும் உடல் முழுவதிலும் வியாபக நியாஸமும் செய்ய வேண்டும்.

खड्गचक्रगदाबाणचापानि परिघं तथा ।
शूलं भुशुण्डीं च शिरः शंखं सन्दधतीं करैः ।। ५०. ६५ ।।

महाकालीं त्रिनयनां नानाभूषणभूषिताम् ।
नीलांजनसमप्रख्यां दशपादाननां भजे ।। ५०. ६६ ।।

मधुकैटभ-नाशार्थं यां तुष्टावाम्बुजासनः ।
एवं ध्यायेन्महाकालीं कामबीजस्वरूपिणीम् ।। ५०. ६७ ।।

अक्षमालां च परशुं गदेषु कुलिशानि च ।
पद्मं धनुष्कुण्डिकां च दण्डं शक्तिमसिं तथा ।। ५०. ६८ ।।

चर्माम्बुजं तथा घण्टां सुरापात्रं च शूलकम् ।
पाशं सुदर्शनं चैव दधती-मरुणप्रभाम् ।। ५०. ६९ ।।

रक्ताम्बुजासनगतां मायाबीजस्वरूपिणीम् ।
महालक्ष्मीं भजेदेवं महिषासुरमर्दिनीम् ।। ५०. ७० ।।

50.65-67. வாள், சக்ரம், கதை, பாணம், வில், பரிகம், சூலம், புசுண்டி, சிரம், சங்கு ஆகியவற்றைக் கரங்களில் தரிப்பவளாயும், முக்கண் படைத்தவளாயும், பலவகை ஆபரணங்களால் அலங்கரிக்கப் பெற்றவளாயும், மைபோல் கரிய வண்ணத்தினளாயும், பத்து முகங்களுடனும் பத்துக் கால்களுடனும் விளங்குபவளாயும் உள்ள எந்த தேவியை மதுகைடபர்களை ஸம்ஹரிக்கும் பொருட்டு பிரம்ம தேவர் துதித்தாரோ அந்த மஹாகாளியை (க்லீம் எனும்) காமபீஜஸ்வரூபிணியாக தியானிக்க வேண்டும்.

50.68–70. அக்ஷமாலை, பரசு, கதை, பாணம், குலிசம், தாமரைப்பூ, வில், குண்டிகை, தண்டம், சக்தி, வாள், சர்மம், சங்கு, மணி, மதுபாத்திரம், சூலம், பாசம், ஸுதர்சன சக்ரம் ஆகியவற்றைக் கைகளில் ஏந்தியவளும், உதயசூரியனைப் போல் பிரகாசிப்பவளும், சிவப்புத் தாமரையில் வீற்றிருப்பவளும், (ஹ்ரீம் எனும்) மாயாபீஜ ஸ்வரூபிணியும் மஹிஷாசுரமர்த்தினியுமான மஹாலக்ஷ்மியை இவ்வாறு தியானிக்க வேண்டும்.

घण्टा-शूले हलं शंखं मुसलं च सुदर्शनम् ।
धनुर्बाणान् हस्तपद्मै-र्दधानां कुन्दसन्निभाम् ।। ५०. ७१ ।।

शुम्भादिदैत्यसंहर्त्रीं वाणीबीजस्वरूपिणीम् ।
महासरस्वतीं ध्यायेत्सच्चिदानन्दविग्रहाम् ।। ५०. ७२ ।।

यन्त्रमस्याः शृणु प्राज्ञ त्र्यस्रं षट्कोणसंयुतम् ।
ततोऽष्टदलपद्मं च चतुर्विंशतिपत्रकम् ।। ५०. ७३ ।।

भूगृहेण समायुक्तं यन्त्रमेवं विचिन्तयेत् ।
शालग्रामे घटेवाऽपि यन्त्रे वा प्रतिमासु वा ।। ५०. ७४ ।।

बाणलिंगेऽथवा सूर्ये यजेद्देवी-मनन्यधीः ।
जयादि शक्तिसंयुक्ते पीठे देवीं प्रपूजयेत् ।। ५०. ७५ ।।

50.71–72. மணி, சூலம், கலப்பை, சங்கு, உலக்கை, ஸுதர்சன சக்கரம், வில், அம்பு ஆகியவற்றைத் தாமரை போன்ற கைகளில் தரிப்பவளும், குந்தமலர்போல் வெண்மை யானவளும், சும்பன் முதலிய அசுரர்களை ஸம்ஹரித்தவளும், (ஐம் என்ற) வாணீபீஜஸ்வரூபிணியும், ஸச்சிதானந்தமே உருக் கொண்டவளுமாக மஹாஸரஸ்வதியை தியானம் செய்ய வேண்டும்.

50.73–75. மதிமானே! இவர்களுடைய யந்திரத்தைக் கூறுகிறேன், கேளும். முக்கோணமும், அறுகோணமும் அதன் மேல் எட்டிதழ்த் தாமரையும், இருபத்து நாலிதழ்த் தாமரையும் கொண்டு சதுரமான பூக்ருஹத்துடன் கூடிய தாக இந்த யந்திரத்தை தியானிக்க வேண்டும். இந்த யந்திரத்திலோ, சாலக்ராமத்திலோ, பூர்ண கும்பத்திலோ, பிரதிமையிலோ, பாணலிங்கத்திலோ அல்லது சூரியனிடத் திலோ வேறு நாட்டமில்லாத புத்தியுடன் தேவியைப் பூஜிக்க வேண்டும். ஜயா முதலிய சக்திகளுடன் கூடிய பீடத்தில் தேவியை ஆராதிக்க வேண்டும்.

पूर्वकोणे सरस्वत्या सहितं पद्मजं यजेत्।
श्रिया सह हरिं तत्र नैर्ऋते कोणके यजेत् ॥ ५०. ७६ ॥

पार्वत्या सहितं शम्भुं वायुकोणें समर्चयेत्।
देव्या उत्तरतः पूज्यः सिंहो वामे महासुरम् ॥ ५०. ७७ ॥

महिषं पूजयेदन्ते षट्कोणेषु यजेत्क्रमात्।
नन्दजां रक्तदन्तांच तथा शाकम्बरीं शिवाम् ॥ ५०. ७८ ॥

दुर्गां भीमां भ्रामरीं च ततो वसुदलेषु च।
ब्राह्मीं माहेश्वरीं चैव कौमारीं वैष्णवीं तथा ॥ ५०. ७९ ॥

वाराहीं नारसिंहीं च ऐन्द्रीं चामुण्डकां तथा।
पूजयेच्च ततः पश्चात्तत्त्वपत्रेषु पूर्वतः ॥ ५०. ८० ॥

विष्णुमायां चेतनांच बुद्धिं निद्रां क्षुधां तथा।
छायां शक्तिं परां तृष्णां शान्तिं जातिं च लज्जया ॥ ५०. ८१ ॥

शान्तिं श्रद्धां कीर्तिलक्ष्म्यौ धृतिं वृत्तिं श्रुतिं स्मृतिम्।
दयां तुष्टिं ततः पुष्टिं मातृभ्रान्ती इति क्रमात् ॥ ५०. ८२ ॥

50.76. (யந்திரத்தின்) கிழக்குக் கோணத்தில் ஸரஸ்வதியுடன் பிரம்மாவைப் பூஜிக்க வேண்டும். லக்ஷ்மியுடன் விஷ்ணுவை நிர்ருதிகோணத்தில் பூஜிக்க வேண்டும்.

50.77–82. பார்வதியுடன் சிவனை வாயுகோணத்தில் அர்ச்சிக்க வேண்டும். தேவிக்கு வடக்கில் ஸிம்ஹத்தையும், இடதுபுறம் மஹிஷாசுரனையும் பூஜிக்க வேண்டும். அறு கோணத்தின் உள்ளே வரிசையாக நந்தஜா, ரக்ததந்தா, சாகம்பரீ, சிவா, துர்க்கா, பீமா, ப்ராமரீ ஆகியோரை பூஜிக்க வேண்டும். எட்டு தளங்களில் ப்ராஹ்மீ, மாஹேச்வரீ, கௌமாரீ, வைஷ்ணவீ, வாராஹீ, நாரசிம்ஹீ, ஐந்த்ரீ, சாமுண்டா ஆகியவர்கள் பூஜிக்கப்படவேண்டும். அதற்கு மேல் உள்ள இருபத்துநாலு தளங்களில் கிழக்கிலிருந்து தொடங்கி விஷ்ணுமாயா, சேதனா, புத்தி, நித்ரா, க்ஷுதா, ச்சாயா, சக்தி, பரா, த்ருஷ்ணா, சாந்தி, ஜாதி, லஜ்ஜா, சாந்தி, சிரத்தா, கீர்த்தி, லக்ஷ்மி, த்ருதி, வ்ருத்தி, சுருதி, ஸம்ருதி, தயா, துஷ்டி, புஷ்டி, மாத்ரு, ப்ராந்தி ஆகிய தேவதைகள் வரிசையாக பூஜிக்கப்படவேண்டும்.

ततो भूपुरकोणेषु गणेशं क्षेत्रपालकम् ।
वटुकं योगिनीश्चापि पूजयेन्मतिमान्नरः ।। ५०. ८३ ।।
इन्द्राद्यानपि तद्बाह्ये वज्राद्यायुधसंयुतान् ।
पूजयेदनया रीत्या देवीं सावरणां ततः ।। ५०. ८४ ।।
राजोपचारान् विविधान् दद्यादम्बाप्रतुष्टये ।
ततो जपेन्नवार्णं च मन्त्रं मन्त्रार्थपूर्वकम् ।। ५०. ८५ ।।
ततः सप्तशतीस्तोत्रं देव्या अग्रे तु सम्पठेत् ।
नाऽनेन सदृशं स्तोत्रं विद्यते भुवनत्रये ।। ५०. ८६ ।।
ततश्चानेन देवेशीं तोषयेत्प्रत्यहं नरः ।
धर्मार्थकाममोक्षाणा-मालयं जायते नरः ।। ५०. ८७ ।।

50.83. பிறகு பூபுர கோணங்களில் கணேசர், க்ஷேத்ர பாலகர், வடுகர், யோகினிகள் ஆகியோரை மதிமானுன மனிதன் பூஜிக்க வேண்டும்.

50.84. அதற்கு வெளியில் வஜ்ரம் முதலிய ஆயுதங்களுடன் கூடிய இந்திரன் முதலிய தேவதைகளைப் பூஜித்து இவ்வாருக தேவியின் ஆவரண பூஜையைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

50.85. அம்பிகையின் ஸந்தோஷத்திற்காகப் பலவகை ராஜோபசாரங்களைச் செய்ய வேண்டும். பிறகு மந்திரத்தின் அர்த்த தியானத்துடன் நவாக்ஷரீ மந்திரத்தை ஜபிக்க வேண்டும்.

50.86. பிறகு தேவியின் முன்னிலையில் ஸப்தசதீ ஸ்தோத்திரத்தை நன்ருகப் படிக்க வேண்டும். மூவுலகிலும் இதற்குச் சமமான ஸ்தோத்திரம் கிடையாது.

50.87. இவ்வாறு தேவர்களின் ஈசுவரியை நாள் தோறும் ஒருவன் ஸந்தோஷிப்பிக்க வேண்டும். அம்மனிதன் தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் ஆகியவற்றிற்கு உறைவிடமாவான்.

इति ते कथितं विप्र श्रीदुर्गाया विधानकम् ।
कृतार्थता येन भवेत्तदेतं कथितं तव ।। ५०. ८८ ।।

सर्वे देवा हरिब्रह्ममुखा मनवस्तथा ।
मुनयो ज्ञाननिष्ठाश्च योगिनश्चाऽऽश्रमास्तथा ।। ५०. ८९ ।।

लक्ष्म्यादयस्तथा देव्यः सर्वे ध्यायन्ति तां शिवाम् ।
तदेव जन्मसाफल्यं दुर्गास्मरण-मस्तिचेत् ।। ५०. ९० ।।

तदेतत्सर्वमाख्यातं रहस्यातिरहस्यकम् ।
प्रकृतीनां पंचकस्य तदंशानां च वर्णनम ।। ५०. ९२ ।।

श्रुत्वैतन्मनुजो नित्यं पुरुषार्थचतुष्टयम् ।
लभते नाऽत्र सन्देहः सत्यं सत्यं मयोदितम् ।। ५०. ९३ ।।

50.88. பிராம்மணரே ! இங்ஙனம் உமக்கு ஸ்ரீதுர்க்கா பூஜாவிதானம் கூறப்பட்டது. எதனுல் ஒருவன் கிருதார்த்தனுவானே அப்படிப்பட்ட இது உமக்கு விளக்கிக் கூறப் பட்டது.

50.89–90. பிரம்மா விஷ்ணு முதலிய எல்லா தேவர்களும், மனுக்களும், ஞானத்தில் நிலைபெற்ற முனிவர்களும், யோகிகளும், ஆசிரமவாசிகளும், லக்ஷ்மீ முதலிய எல்லா தேவிகளும் மங்கள வடிவினளான துர்க்கையை தியானிக்கின்றனர். துர்க்கையின் ஸ்மரணமிருக்கமேயானுல் அதுவே ஜன்மஸாபல்யம்.

50.92. பஞ்சப்பிரகிருதிகளின் வர்ணனையும் அவர்களுடைய அம்சங்களின் வர்ணனையும் கொண்டு இரகசியத்தினும் இரகசியமாயுள்ள இது எல்லாம் உமக்குக் கூறப் பட்டது.

50.93. இதைக் கேட்ட மனிதன் எப்பொழுதும் நான்கு புருஷார்த்தங்களையும் அடைந்தவனுவான். இதில் சந்தேகமில்லை. என்னுல் கூறப்பட்டது ஸத்தியம், ஸத்தியம்.

नवरात्रे पठेदेतद्देव्यग्रे तु समाहितः ।
परितुष्टा जगद्धात्री भवत्येव हि निश्चितम् ।। ५०. ९५ ।।

नित्यमेकैकमध्यायं पठेद्यः प्रत्यहं नरः ।
तस्य वश्या भवेद्देवी देवी प्रियकरो हि सः ।। ५०. ९६ ।।

।। देवीपूजाविधानं समाप्तम् ।।

।। इति श्रीदेवीभागवते नवमस्कन्धे पंचाशत्तमोऽध्यायः ।।

।। नवमस्कन्धः समाप्तः ।।

50.95. ஒருமைப்பட்ட மனதுடன் தேவியின் ஸந்நிதியில் நவராத்திரியில் இதைப்படிக்க வேண்டும். ஜகதம்பிகை ஸந்தோஷமடைவாள் என்பது நிச்சயம்.

50.96. தினந்தோறும் ஒரு அத்தியாயமாக எந்த மனிதன் படிக்கிருனே அவன் தேவிக்குப் பிரியத்தைச் செய்பவனுதலால் அவனுக்கு தேவி வசியமாவாள்.

தேவீ பூஜாவிதானம் முற்றும்.

இங்ஙனம் ஸ்ரீ தேவீபாகவதத்தில் ஒன்பதாவது ஸ்கந்தத்தில் ஐம்பதாவது அத்தியாயம் முற்றும்.

ஒன்பதாவது ஸ்கந்தம் முற்றும்.

பத்தாவது ஸ்கந்தம்

॥ दशमः स्कन्धः ॥

॥ स्वायम्भुवमनु चरित्रम् ॥ ४४ ॥

नारद उवाच —

मन्वन्तरेषु सर्वेषु सा देवी यत्स्वरूपिणी ।
यदाकारेण कुरुते प्रादुर्भावं महेश्वरी ॥ १. २ ॥

तान्नः सर्वान् समाख्याहि देवीमाहात्म्यमिश्रितम् ।
यथा च येन येनेह पूजिता संस्तुताऽपि हि ॥ १. ३ ॥

பத்தாவது ஸ்கந்தம்

44. ஸ்வாயம்புவ மனு சரித்திரம்.

நாரதர் கூறியது—

1.2. எல்லா மன்வந்தரங்களிலும் அந்த தேவி எந்த ஸ்வரூபமுடையவள் ? மஹேசுவரியான அவள் எந்த வடிவில் தோன்றுகிறாள் ?

1.3. தேவி மாகாத்மியத்துடன் கூடிய அந்த வரலாறுகளையெல்லாம் கூறியருளும். எவரெவரால் எப்படி இங்கு பூஜித்துத் துதிக்கப்பட்டாள் என்பதையும் கூறுங்கள்.

श्रीनारायण उवाच —

आविरासीन्नाभिपद्माद्देवदेवस्य चक्रिणः ।
स चतुर्मुख आसाद्य प्रादुर्भावं महामते ॥ १. ७ ॥

मनुं स्वायम्भुवं नाम जनयामास मानसात् ।
स मानसो मनुः पुत्रो ब्रह्मणः परमेष्ठिनः ॥ १. ८ ॥

शतरूपां च तत्पुत्रीं जज्ञे धर्मस्वरूपिणीम् ।
स मनुः क्षीरसिन्धोश्च तीरे परमपावने ॥ १. ९ ॥

देवीमाराधयामास महाभाग्यफलप्रदाम् ।
मूर्तिं च मृण्मयीं तस्या विधाय पृथिवीपतिः ॥ १. १० ॥

उपासते स्म तां देवीं वाग्भवं स जपन् रहः ।
निराहारो जितश्वासो नियमव्रतकर्शितः ॥ १. ११ ॥

ஸ்ரீநாராயணரிஷி கூறியது—

1.7–10. மகா மதிமானே! தேவதேவரான சக்ர பாணியின் நாபிகமலத்தில் நான்முகப் பிரம்மா தோன்றினுர். அங்ஙனம் தோன்றிய அவர் தன் மனதிலிருந்து ஸ்வாயம்புவ மனுவைத் தோற்றுவித்தார். பரமேஷ்டியான பிரம்மாவின் மானஸ புத்திரராகிய அவர் பிரம்மாவின் மானஸ புத்திரியும் தர்மஸ்வரூபிணியுமான சதரூபையை மனைவியாகக் கொண்டார். அந்த பூபாலரான மனு பரமபாவனமான பாற்கடலின் கரையில் மண்ணினுல் தேவியின் மூர்த்தியை நிர்மாணம் செய்து மகாபாக்கியத்தை யளிக்கும் அவளை ஆராதித்தார்.

1.11. ஆஹாரமில்லாமல் மூச்சையும் அடக்கி நியமத்தாலும் விரதத்தாலும் மெலிந்தவராய் வாக்பீஜத்தை (ஐம்) ஜபித்துக் கொண்டு அவர் அந்த தேவியை உபாசித்தார்.

तस्य तत्तपसा देवी प्रादुर्भूता जगन्मयी ।
उवाच वचनं दिव्यं वरं वरय भूमिप ॥ १.१३ ॥

मनुरुवाच —

जय देवि विशालाक्षि जय सर्वान्तरस्थिते ।
मान्ये पूज्ये जगद्धात्रि सर्वमंगलमंगले ॥ १.१५ ॥

त्वत्कटाक्षावलोकेन पद्मभूः सृजते जगत् ।
वैकुण्ठः पालयत्येव हरः संहरते क्षणात् ॥ १.१६ ॥

हुतभुङ नैर्ऋतो वायुरीशानः शेष एव च ।
त्वदंशसम्भवा एव त्वच्छक्तिपरिबंहिताः ॥ १.१९ ॥

1.13. உலக வடிவினளான தேவி அவருடைய அத் தவத்தால் அவர்முன் காட்சியளித்து 'அரசே ! வரம் கேளும்' என்று திவ்வியமான வார்த்தையைக் கூறினுள்.

மனு கூறியது—

1.15. தேவி விசாலாக்ஷிக்கு வெற்றி. அனைத்தினுள்ளும் உறைபவளுக்கு வெற்றி. மதிப்புக்கும் பூஜைக்கும் உரியவளே ! உலகைப் போஷிப்பவளே ! மங்களங்களுக்கெல்லாம் மங்களமானவளே !

1.16. உன்னுடைய கடைக்கண் பார்வையால் பிரம்மா உலகைச் சிருஷ்டிக்கிருர், விஷ்ணு காப்பாற்றுகிருர், ருத்ரர் ஒரு கணத்தில் ஸம்ஹாிக்கிருர்.

1.19. அக்னியும், நிர்ருதியும், வாயுவும், ஈசானரும், ஆதிசேஷரும் உன்னுடைய அம்சத்தால் தோன்றி உன்னுடைய சக்தியால் பரிபூர்ணமானவர்களேயாவர்.

अथाऽपि यदि मे देवि वरो देयोऽस्ति साम्प्रतम्।
तदा प्रह्वाः सर्गकार्ये विघ्ना नश्यन्तु मे शिवे ॥ १.२० ॥

वाग्भवस्यापि मन्त्रस्य ये केचिदुपसेविनः।
तेषां सिद्धिः सत्वराऽपि कार्याणां जायतामपि ॥ १, २१ ॥

श्रीदेव्युवाच —

भूमिपाल महाबाहो सर्वमेतद्भविष्यति।
यत्त्वया प्रार्थितं तत्ते ददामि मनुजाधिप ॥ २.१ ॥

अहं प्रसन्ना दैत्येन्द्रनाशना ऽमोघविक्रमा।
वाग्भवस्य जपेनैव तपसा ते सुनिश्चितम् ॥ २. २ ॥

1.20. மங்களவடிவான தேவியே! இப்பொழுது எனக்கு வரமளிக்க வேண்டுமெனின் சிருஷ்டி காரியத்தில் எனக்கு ஏற்படக் கூடிய விக்கினங்கள் அழிந்து போகட்டும்.

1.21. வாக்பவ மந்திரத்தை எவர்கள் ஜபிக்கிறார்களோ அவர்களுக்குக் காரியங்களின் சித்தி விரைவில் ஏற்படட்டும்.

ஸ்ரீதேவி கூறியது—

2.1. அரசே! பெருந்தோள்படைத்தவரே! மானிடர் தலைவரே! நீர் வேண்டியது எதுவோ அதை அளிக்கிறேன். வேண்டியதெல்லாம் அவ்வண்ணமே நிகழும்.

2.2. வாக்பவ ஜபத்துடன் கூடிய உமது தவத்தால் மகிழ்வடைந்த நான் அசுர வீரர்களை அழிப்பவளாகவும் வீண்போகாத வீரியமுள்ளவளாகவும் இருப்பேன் என்பது நிச்சயம்.

राज्यं निष्कण्टकं तेऽस्तु पुत्रा वंशकरा अपि।
मयि भक्तिर्दृढा वत्स मोक्षोऽन्ते सत्पदे भवेत्॥ २. ३॥

एवं वरान्महादेवी तस्मै दत्त्वा महात्मने।
पश्यतस्तु मनोरेव जगाम विन्ध्यपर्वतम्॥ २. ४॥

योऽसौ विन्ध्याचलो रुद्धः कुंभोद्भवमहर्षिणा।
भानुमार्गनिरोधार्थं प्रवृत्तो गगनं स्पृशन्॥ २. ५॥

सा विन्ध्यवासिनी विष्णोरनुजा वरदेश्वरी।
बभूव पूज्या लोकानां सर्वेषां मुनिसत्तम॥ २. ६॥

ऋषय ऊचुः—

कोऽसौ विन्ध्याचलः सूत किमर्थं गगनं स्पृशन्।
भानुमार्गावरोधं च किमर्थं कृतवानसौ॥ २. ७॥

2.3. உன்னுடைய ராஜ்யம் பகையற்றதாயிருக்கட்டும்; புத்திரர்கள் வம்சத்தை விருத்தி செய்பவர்களாய் விளங்கட்டும்; குழந்தாய்! என்னிடம் திடமான பக்தி இருக்கட்டும்; முடிவில் ஸத்தாகிய பதத்தில் மோக்ஷம் சித்திக்கட்டும்

2.4. மகாதேவியானவள் அந்த மகாத்மாவிற்கு இவ்வாறு வரங்களையளித்துவிட்டு அந்த ஸ்வாயம்புவமனுவானவர் பார்த்துக் கொண்டிருக்கும் போதே விந்திய பர்வதத்திற்குச் சென்று விட்டாள்.

2.5. அந்த விந்தியபர்வதம் ஆகாயத்தையளாவி சூரிய மார்க்கத்தையும் தடுக்க முற்பட்டபோது கும்பத்திலுதித்த அகஸ்திய முனிவரால் அடக்கி வைக்கப்பட்டது.

2.6. முனிசிரேஷ்டரே! விஷ்ணுவின் தங்கையும் வரமளிக்கும் ஈசுவரியுமான அந்த விந்த்யவாஸினி எல்லா உலகங்களுக்கும் பூஜிக்கத் தகுந்தவளானாள்.

ரிஷிகள் கூறியது—

2.7. சூதரே! அந்த விந்தியபர்வதம் எத்தன்மையது? எதற்காக ஆகாயத்தை யளாவிச் சூரிய மார்க்கத்தைத் தடை செய்தது?

कथं च मैत्रावरुणिः पर्वतं तं महोन्नतम् ।
प्रकृतिस्थं चकारेति सर्वं विस्तरतो वद ॥ २. ८ ॥

सूत उवाच —

आसीद्विन्ध्याचलो नाम मान्यः सर्वधराभृताम् ।
महावनसमूहाढ्यो महापादपसंवृतः ॥ २. १० ॥

एतादृशे विन्ध्यनगे कदाचित्पर्यटन्महीम् ।
देवर्षिः परमप्रीतो जगाम स्वेच्छया मुनिः ॥ २. १४ ॥

विन्ध्य उवाच —

देवर्षे कथ्यतां जात आगमः कुत उत्तमः ।
तवाऽऽगमनतो जात-मनर्घ्यं मम मन्दिरम् ॥ २. १६ ॥

2.8. மைத்ராவருணியான அகஸ்தியர் மிக உயர்ந்த அம்மலையை இயற்கைக்கு அடங்கியிருக்கும்படி எப்படிச் செய்தார் ? அனைத்தையும் விரிவாகக் கூறியருளும்.

ஸூதர் கூறியது—

2.10. விந்தியாசலம் என்ற பிரசித்தமான பர்வதம் எல்லா மலைகளுக்குள்ளும் மதிப்பு மிக்கதாயும் பெரிய வன ஸமூகத்தால் பெருமையுள்ளதாயும் பெரிய விருக்ஷங்களால் சூழப்பட்டதாயும் விளங்கிற்று.

2.14. இப்படிப்பட்ட விந்தியமலைக்கு உலக சஞ்சாரம் செய்யும் தேவரிஷியாகிய முனிவர் மிகுந்த பிரீதியுடன் தனதிச்சைப்படி ஒரு சமயம் வந்து சேர்ந்தார்.

விந்தியபர்வத தேவதை கூறியது—

2.16. தேவரிஷியே ! தங்களுடைய உத்தமமான இவ் வரவு எக்காரணம் பற்றி ? தங்கள் வருகையால் என்னுடைய வாசஸ்தானம் அளவிடற்கரிய மதிப்புடையதாகி விட்டது.

तव चंक्रमणं देवाऽभयार्थं हि यथा रवेः।
अपूर्वं जन्मतो वृत्तं तद् ब्रूहि मम नारद ॥ २. १७ ॥

नारद उवाच —

ममागमन-मिन्द्रारे जातं स्वर्णगिरेरथ।
तत्र दृष्टा मया लोकाः शक्राग्नि-यम-पाशिनाम् ॥ २. १८ ॥
सर्वेषां लोकपालानां भवनानि समन्ततः।
मया दृष्टानि विन्ध्याग नानाभोगप्रदानि च ॥ २. १९ ॥
इति चोक्त्वा ब्रह्मयोनिः पुनरुच्छ्वासमाविशत्।
उच्छ्वासन्तं मुनिं दृष्ट्वा पुनः पप्रच्छ शैलराट् ॥ २. २० ॥

2.17. தங்களுடைய சஞ்சாரம் சூரியனுடையதைப் போல் தேவர்களின் பயத்தைப் போக்குவதாகும். நாரதரே! தங்கள் வாழ்க்கையில் தாங்கள் கண்ட அதிசயமேதேனு மிருப்பின் அதை எனக்குக் கூறுங்கள்.

நாரதர் கூறியது—

2.18. இந்திரசத்துருவே! நான் வருவது பொன்மலை யிலிருந்து. அங்கு நான் இந்திரன் அக்னி யமன் வருணன் முதலியவர்களின் உலகங்களைக் கண்டேன்.

2.19. விந்தியமலையரசே! எல்லா லோகபாலர்களின் மாளிகைகளும் ஒருங்கே பலவிதமான போகங்களையளிப்பன வாய் அங்கு விளங்கக் கண்டேன்.

2.20. பிரம்மபுத்திரரான நாரதர் இப்படி கூறிவிட்டுப் பெருமூச்சு விட்டார். முனிவர் பெருமூச்சுவிடுவதைக் கண்ட மலையரசர் மேலும் பின்வருமாறு வினவினர்.

उच्छ्वासकारणं किं तद् ब्रूहि देवर्षे मम।
इत्याकर्ण्य नगस्योक्तं देवर्षि-रमितद्युतिः ॥ २. २१ ॥

अब्रवीच्छ्रूयतां वत्स ममोच्छ्वासस्य कारणम्।
गौरीगुरुस्तु हिमवान् शिवस्य श्वशुरः किल।
सम्वन्धित्वात्पशुपतेः पूज्य आसीत् क्षमाभृताम् ॥ २. २३ ॥

निषधः पर्वतो नीलो गन्धमादन एव च।
पूज्याः स्वस्थान-मासाद्य सर्व एव क्षमाभृतः ॥ २. २४ ॥

यं पर्येति च विश्वात्मा सहस्रकिरणः स्वराट्।
स ग्रहर्क्षगणोपेतः सोऽयं कनकपर्वतः ॥ २. २५ ॥

2.21. 'பெருமூச்சுவிடக் காரணமென்ன? தேவ ரிஷியே! அதை எனக்குக் கூறும்.' இங்ஙனம் மலையரசர் கூறியதைக் கேட்ட மகாபுத்திமானுன தேவரிஷி கூறிய தாவது:

'என்னுடைய பெருமூச்சிற்குக் காரணம் கூறுகிறேன் கேள், குழந்தாய்.

2.23. கௌரியின் தந்தையும் சிவனுடைய மாமனுரு மல்லவா ஹிமவான்! பசுபதியின் ஸம்பந்தத்தால் அவர் மலைகளுக்குள்ளெல்லாம் பூஜித்தற்குரியவரானுர்.

2.24. நிஷதமலை, நீலமலை, கந்தமாதனமலை எல்லாமே தத்தம் ஸ்தானத்தில் பூஜைக்கு உரியவைகளே.

2.25. பொன்மலையான மேரு பர்வதம் கிரகங்கள் நக்ஷத்திரக் கூட்டங்களுடன் ஆயிரம் கிரணம் படைத்தவனும் விச்வாத்மாவுமான சூரியனுல் பிரதக்ஷிணம் செய்யப்படுகிறது.

आत्मानं मनुते श्रेष्ठं वरिष्ठं च धराभृताम्।
सर्वेषामहमेवाग्र्यो नास्ति लोकेषु मत्समः ॥ २. २६ ॥

एवं मानाभिमानं तं स्मृत्वोच्छ्वासो मयोज्झितः।
अस्तु नैतावताकृत्यं तपोबलवतां नग ॥
प्रसंगतो मयोक्तं ते गमिष्यामि निजं गृहम् ॥ २. २७ ॥

सूत उवाच —

गते मुनिवरे विन्ध्यश्चिन्तां लेभेऽनपायिनीम्।
नैव शान्ति स लेभे च सदाऽन्तः कृतशोचनः ॥ ३. २ ॥

कथं किन्त्वत्र मे कार्यं कथं मेरुं जयाम्यहम्।
नैव शान्ति लभे नाऽपि स्वास्थ्यं मे मानसे भवेत् ॥ ३. ३ ॥

2.26. அதனுல் தன்னைத் தலைசிறந்ததாகவும் மிக உயர்ந்ததாகவும் அது கருதுகிறது. 'மலைகளனைத்துள்ளும் நானே முதன்மையானவன்; உலகங்களில் எனக்குச் சமமானவன் இல்லை.

2.27. இவ்வாறு அபிமானத்தால் கருவித்திருக்கும் அதை நினைத்து என்னுல் பெருமூச்சு விடப்பட்டது. மலையரசே! அது இருந்து போகட்டும். தபோபலம் படைத்தவர்களுக்கு அதனுலாகவேண்டியது ஒன்றுமில்லை. ஏதோ பேச்சுவந்ததில் என்னுல் உனக்குச் சொல்லப்பட்டது. நான் என்னிருப்பிடம் செல்லுகிறேன்.

ஸூதர் கூறியது—

3.2. முனிசிரேஷ்டர் சென்றபின் விந்தியம் விலக்க முடியாத வியாகூலத்தை யடைந்தது. உள்ளே எப்பொழுதும் வருந்திக்கொண்டு மனதில் நிம்மதியற்றிருந்தது.

3.3. 'இவ்விஷயத்தில் என்னுல் என்ன செய்யப்பட வேண்டும்? நான் மேருவை எப்படி ஜெயிப்பேன்? இன்றேல் எனக்கு அமைதியில்லை. மனதில் சுகம் ஏற்படாது.'

एवं निश्चित्य विन्ध्याद्रिः खं स्पृशन् ववृधे भुजैः ।
महोन्नतैः शृंगवरैः सर्वं व्याप्य व्यवस्थितः ।। ३. ८ ।।

ततः सर्वे सुरगणा महेन्द्रप्रमुखास्तदा ।
पद्मयोनिं पुरस्कृत्य रुद्रं शरणमन्वयुः ।। ४. १ ।।

देवा ऊचुः—

सर्वदेवेश गिरिश शशिमौलिविराजित ।
आर्तानां शंकरस्त्वं च शं विधेहि महाबल ।। ४. १२ ।।

पर्वतो विन्ध्य नामाऽस्ति मेरुद्वेष्टा महोन्नतः ।
भानुमार्गनिरोद्धा हि सर्वेषां दुःखदोऽनघ ।। ४. १३ ।।

3.8. இன்றிப்படி எண்ணி விந்திய பர்வதம் ஆகாயத்தைத் தொடும்படி வளர்ந்து புஜங்களாலும் மிக உயரமான சிறந்த கொடிமுடிகளாலும் எல்லாவற்றையும் வியாபித்துக் கொண்டு நிற்கலாயிற்று.

4.1. அப்பொழுது தேவகணங்களெல்லோரும் மகேந்திரனுடன் பிரம்மாவை முன்னிட்டுக் கொண்டு ருத்ரபகவானைச் சரணடைந்தனர்.

தேவர்கள் கூறியது—

4.12. எல்லா தேவர்களின் நாயகரே! மலையில் உறைபவரே! பிரகாசிக்கும் சந்திரனைத் தலையிலணிந்தவரே! மகாபலம் பொருந்தியவரே! துன்புற்றவர்களுக்கு மங்களத்தைச் செய்யும் நீங்கள் எங்களுக்கு மங்களத்தை அளிக்க வேண்டும்.

4.13. பாவமற்றவரே! விந்தியம் எனப் பெயர் பெற்ற மிக உயர்ந்த மலை உளதே, அது மேருவின் சத்துரு. அது சூரிய மார்க்கத்தைத் தடுத்து எல்லோருக்கும் துக்கத்தைத் தருகிறது.

तद् वृद्धि स्तम्भयेशान सर्वकल्याणकृद्भव ।
भानुसंचाररोधेन कालज्ञानं कथं भवेत् ।। ४.१४ ।।

रुद्र उवाच —

गोविन्दो भगवान् विष्णुः सर्वकारणकारणः ।
तं गत्वा कथयिष्यामः स दुःखान्तो भविष्यति ।। ४.१८ ।।

सूत उवाच —

ते गत्वा देवदेवेशं रमानाथं जगद्गुरुम् ।
स्तोत्रेण तुष्टुवुर्भक्त्या गद्गदस्वर-सत्कृताः ।। ५.१ ।।

देवदेव महाविष्णो सृष्टिस्थित्यन्तकारण ।
विष्णो विन्ध्यनगोऽर्कस्य मार्गरोधं करोति हि ।। ५.२ ।।

4.14. ஈசானரே! அதன் வளர்ச்சியை நிறுத்தி எல்லோருக்கும் மங்களத்தையருள்பவராக நீங்கள் ஆகவேண்டும். சூரியசஞ்சாரம் தடைப்பட்டால் கால அறிவு எப்படி ஏற்படும்?

ருத்ரர் கூறியது—

4.18. விஷ்ணுபகவானுகிய கோவிந்தர் காரணத்திற்கெல்லாம் காரணமாய் விளங்குபவர். அவரிடம் சென்று இதைக் கூறுவோம். அவர் துன்பத்தைத் துடைப்பவராவார்.

ஸூதர் கூறியது

5.1. ஜகத் குருவும் ரமாநாதரும் தேவதேவேசருமான அவரிடம் சென்று அவர்கள் வணங்கி பக்தியால் தழதழத்த குரலில் ஸ்தோத்திரம் செய்து போற்றினர்.

5.2. 'தேவதேவரே! மகாவிஷ்ணுவே! சிருஷ்டி ஸ்திதி ஸம்ஹார காரணரே! எங்கும் நிறைந்தவரே! விந்தியமலே சூரியனுடைய மார்க்கத்தை யடைக்கிறது.

तेषां स्तवं समाकर्ण्य देवः श्रीपुरुषोत्तमः।
उवाच विबुधान्सर्वान् हर्षयञ्छ्रीगदाधरः ॥ ५. १८ ॥

श्री भगवानुवाच —

या कर्त्री सर्वजगतामाद्या च कुलवर्धनी।
देवी भगवती तस्याः पूजकः परमद्युतिः ॥ ६. ४ ॥

अगस्त्यो मुनिवर्योऽसौ वाराणस्यां समासते।
तत्तेजो वंचकोऽगस्त्यो भविष्यति सुरोत्तमाः ॥ ६. ५ ॥

तं प्रसाद्य द्विजवर-मगस्त्यं परमौजसम्।
याचध्वं विबुधाः काशीं गत्वा निःश्रेयसः पदीम् ॥ ६. ६ ॥

5.18. அவர்களுடைய ஸ்தோத்திரத்தைக் கேட்ட தேவரும் புருஷோத்தமருமான கதாதரர் எல்லா தேவர்களையும் சந்தோஷப்படுத்திக்கொண்டு கூறினார்.

ஸ்ரீபகவான் கூறியது—

6.4–5. தேவசிரேஷ்டர்களே! அகஸ்தியர் எனப் பெயர் பெற்ற முனிசிரேஷ்டர் காசியில் இருக்கிறார். அவர் சிறந்த புத்திமான். உலகனைத்திற்கும் ஆதியானவளும் சிருஷ்டித்தவளும் குலத்தை வளர்ப்பவளும் பகவதியுமான தேவி எவளோ அவளைப் பூஜிப்பவர் அவர். அவர் விந்தியத்தின் கர்வத்தையடக்குபவராவார்.

6.6. தேவர்களே! காசிக்குச் சென்று பிராம்மணனைத் தமரும் பரமதேஜஸ்வியுமான அவ்வகஸ்தியரை மகிழ்வித்து உயர் நலத்திற்கு வழியைப் பிரார்த்தியுங்கள்.

सूत उवाच —

एवं समुपदिष्टास्ते विष्णुना विबुधोत्तमाः।
आगत्य मुनिवर्यस्याश्रमं परमं महत् ॥ ६. ९ ॥

समाश्रितं परमया लक्ष्म्या मुनिवरं तदा।
दण्डवत्पतिताः सर्वे प्रणेमुश्च पुनः पुनः॥ ६. १२ ॥

देवा ऊचुः —

लोपामुद्रापते श्रीमन्मित्रावरुणसम्भव।
सर्वविद्यानिधेऽगस्त्य शास्त्रयोने नमोऽस्तु ते॥ ६. १४ ॥

महर्षे विन्ध्यगिरिणा निरुद्धोऽर्क विनिर्गमः।
तद् वृद्धि स्तम्भय मुने निजया तपसः श्रिया॥ ६. २६ ॥

ஸூதர் கூறியது—

6.9. தேவசிரேஷ்டர்கள் விஷ்ணுவால் இங்ஙனம் உபதேசிக்கப் பெற்று முனிசிரேஷ்டருடைய மகிமைமிக்க ஆசிரமத்தையடைந்து;

6.12. உத்தமமான ஞானலக்ஷ்மியால் ஆசிரயிக்கப் பெற்ற முனிசிரேஷ்டரை எல்லோரும் தடிக்கம்பு போல் தரையில் வீழ்ந்து மீண்டும் மீண்டும் நமஸ்கரித்தனர்.

தேவர்கள் கூறியது—

6.14. மித்ராவருணர்களிடம் தோன்றியவரே! லோபாமுத்திரையின் பதியே! எல்லாக்கலைகளுக்கும் உறைவிடமே! சாஸ்திரங்களின் பிறப்பிடமே! அகஸ்தியரே! உமக்கு நமஸ்காரம்.

6.26. மகரிஷியே! சூரியனுடைய கதி விந்திய மலையால் தடுக்கப்பட்டுளது. முனிவரே! உமது தவத்தின் பெருமையால் அதன் வளர்ச்சியை அடக்க வேண்டும்.

सूत उवाच —

इति वाक्यं समाकर्ण्य विबुधानां द्विजोत्तमः।
करिष्ये कार्यमेतद्वः प्रत्युवाच ततो मुनिः ।। ७. १ ।।

देवाः प्रमुदिताः सर्वे बभूवु-र्द्विजसत्तमाः।
ते देवाः स्वानि धिष्ण्यानि भेजिरे मुनिवाक्यतः ।। ७. २ ।।

पत्नीं मुनिवरः श्रीमानुवाच नृपकन्यकाम्।
अये नृपसुते प्राप्तो विघ्नोऽनर्थस्य कारकः ।। ७. ३ ।।

भानुमार्गनिरोधेन कृतो विन्ध्यमहीभृता।
अज्ञातं कारणं तच्च स्मृतं वाक्यं पुरातनम् ।। ७. ४ ।।

ஸூதர் கூறியது—

7.1. தேவர்களின் இவ்வார்த்தையைக் கேட்ட பிராம்மணோத்தமராகிய அம்முனிவர் 'உங்களுக்கு இக் காரியத்தைச் செய்கிறேன்' என்று பதிலளித்தார்.

7.2. விப்ரசிரேஷ்டர்களே! தேவர்களெல்லாம் முனி வருடைய வாக்கியத்தால் மகிழ்ச்சியடைந்தவர்களாய்த் தத்தம் இருப்பிடம் ஏகினர்.

7.3. தவச் செல்வராகிய முனிசிரேஷ்டர் அரச புத்ரி யாகிய மனைவியிடம் பின்வருமாறு கூறினார்: 'பிரியமான அரசகுமாரி! அனர்த்தத்தை விளைக்கும் விக்னம் ஒன்று வந்திருக்கிறது.

7.4. 'அவ்விக்னம் சூரியமார்க்கத்தை யடைத்து விந்திய மலையரசால் செய்யப்பட்டுள்ளது. அதற்குக் காரணம் தெரியவில்லை. எனக்குப் பழைமையான ஒரு வாக்கியம் ஞாபகம் வருகிறது.

काशीमुद्दिश्य यद्गीतं मुनिभिस्तत्त्वदर्शिभिः।
अविमुक्तं न मोक्तव्यं सर्वथैव मुमुक्षुभिः॥

किन्तु विघ्ना भविष्यन्ति काश्यां निवसतां सताम्॥ ७. ५ ॥

सोऽन्तरायो मया प्राप्तः काश्यां निवसता प्रिये।

इत्येवमुक्त्वा भार्यां तां मुनिः परमतापनः॥ ७. ६॥

मणिकर्ण्यां समाप्लुत्य दृष्ट्वा विश्वेश्वरं विभुम्।

दण्डपाणिं समभ्यर्च्य कालराजं समागतः॥ ७. ७॥

कालराजमहाबाहो भक्तानां भयहारक।

कथं दूरयसे पुर्याः काशीपुर्यास्त्वमीश्वरः॥ ७. ८॥

7.5. 'தத்துவஞானம் படைத்த முனிவர்களால் காசியை பற்றிக் கூறப்பட்டது அது. அவிமுக்த க்ஷேத்ர மாகிய காசி முமுக்ஷுக்களால் ஒரு பொழுதும் விட்டுப் பிரியக் கூடாதது. ஆனால் காசியில் வசிக்கும் நல்லவர் களுக்கு விக்னங்கள் ஏற்படுகின்றன.

7.6–8. 'பிரியே! காசியில் வசிக்கும் எனக்கு அப்படிப் பட்ட விக்னம் ஏற்பட்டுள்ளது,' என்றிங்ஙனம் மனைவியிடம் மிகுந்த வருத்தத்துடன் முனிவர் கூறிவிட்டு மணிகர்ணிகை யில் ஸ்நானம் செய்து விபுவாகிய விசுவேசுவரரை தரிசித்து, தண்டபாணியை அர்ச்சித்துக் காலபைரவரிடம் சென்று— காலராஜரே! மகாபாகுவே! பக்தர்களுடைய பயத்தை போக்குபவரே! காசிபுரிக்கு ஈசுவரராகிய நீர் இப்புரியிலி ருந்து என்னை ஏன் தூரத்தில் செல்லும்படி செய்கிறீர்?—

एवं प्रार्थ्य च तं कालनाथं कुम्भोद्भवो मुनिः ।
जगाम साक्षिविघ्नेशं सर्वविघ्ननिवारणम् ॥ ७. १२ ॥
तं दृष्ट्वाऽभ्यर्च्य संप्रार्थ्य ततः पुर्या विनिर्गतः ।
लोपामुद्रापतिः श्रीमानगस्त्यो दक्षिणां दिशम् ॥ ७. १३ ॥
काशीविरहसन्तप्तो महाभाग्यनिधिर्मुनिः ।
संस्मृत्यानुक्षणं काशीं जगाम सह भार्यया ॥ ७. १४ ॥
तपो यानमिवारुह्य निमिषार्धेनैव मुनिः ।
अग्रे ददर्श तं विन्ध्यं रुद्धाम्बरमथोन्नतम् ॥ ७. १५ ॥

7.12. என்றிவ்வாறு காலபைரவரைப் பிரார்த்தித்து விட்டு கும்பத்திலுதித்த முனிவர் எல்லா இடையூறுகளையும் விலக்கும் ஸாக்ஷி விக்னேசரிடம் சென்றார்.

7.13–14. அவரை தரிசித்துப் பூசித்துப் பிரார்த்தித்துக் கொண்ட பின் காசீபுரியைவிட்டுப் புறப்பட்டு லோபாமுத்ரையின் பதியும் தவச் செல்வரும் மகாபாக்கியத்திற்கு உறைவிடமும் ஆகிய அகஸ்திய முனிவர் காசியை விட்டுப் பிரிவதால் தவிப்பவராய் காசியையே ஒவ்வொரு விநாடியும் நினைத்துக் கொண்டு மனைவியுடன் தெற்கு நோக்கிச் சென்றார்.

7.15. தவவலிமையாகிற வாகனத்திலேறி அரை நிமிஷத்தில் அம்முனிவர் ஆகாயத்தை யடைத்துக் கொண்டு உன்னதமாய் நின்ற விந்தியத்தைக் கண்டார்.

चकम्पे चाऽचलस्तूर्णं दृष्ट्वैवाग्रे स्थितं मुनिम् ।
गिरिः खर्वतरो भूत्वा विवक्षुरवनीमिव ॥ ७. १६ ॥

दण्डवत्पतितो भूमौ साष्टांगभक्तिभावितः ।
तं दृष्ट्वा नम्रशिखरं विन्ध्यं नाम महागिरिम् ॥ ७. १७ ॥

प्रसन्नवदनोऽगस्त्यो मुनिर्विन्ध्यमथाऽब्रवीत् ।
वत्सैवं तिष्ठ तावत्त्वं यावदागम्यते मया ॥ ७. १८ ॥

अशक्तोऽहं गण्डशैलारोहणे तव पुत्रक ।
एवमुक्त्वा मुनिर्याम्यदिशं प्रति गमोत्सुकः ॥ ७. १९ ॥

आरुह्य तस्य शिखराण्यवारुहदनुक्रमात् ।
गतो याम्यदिशं चापि श्रीशैलं प्रेक्ष्य वर्त्मनि ॥
मलयाचलमासाद्य तत्राऽऽश्रमपरोऽभवत् ॥ ७. २० ॥

7.16–20. மலையரசன் தன்முன் நிற்கும் முனிவரைக் கண்டு உடனே நடுநடுங்கி மிகச் சிறிய உருக் கொண்டு பூமியை நோக்கிப் பேசுபவனைப் போல் வணங்கி தடிக் கம்பு போல் பூமியில் விழுந்து ஸாஷ்டாங்கமாய் பக்தியுடன் நமஸ்கரித்தான். விந்தியம் என்ற அப்பெரிய மலை முடி தாழ்ந்து வணங்குவதைக் கண்டு அகஸ்திய முனிவர் மகிழ்ச்சி பொங்கும் முகத்துடன் விந்தியத்தைப் பார்த்து 'குழந்தாய்! நான் மறுபடி வரும்வரை நீ இப்படியே இரு.

மகனே! ஆபத்தான உனது உச்சியில் ஏறுவதற்கு எனக்குச் சக்தி இல்லை' என்றிவ்வாறு கூறி விட்டு முனிவர் தெற்கு திசை நோக்கிச் செல்ல விரும்பியவராய் மலைச் சிகரங்களைப் படிப்படியாக ஏறிக்கடந்து தெற்கே சென்று விட்டார். வழியில் ஸ்ரீசைலத்தை தரிசித்துக் கொண்டு மலயாசலத்தையடைந்து அங்கு ஆசிரமவாசியானார்.

साऽपि देवी तत्र विन्ध्यमगता मनुपूजिता ।
लोकेषु प्रथिता विन्ध्यवासिनीति च शौनक ।। ७. २१ ।।

एतच्चरित्रं परमं शत्रुनाशनमुत्तमम् ।। ७. २२ ।।

अगस्त्यविन्ध्यनगयोराख्यानं पापनाशनम् ।
राज्ञां विजयदं तच्च द्विजानां ज्ञानवर्धनम् ।। ७. २३ ।।

कामानवाप्नुयात्कामी भक्त्या चाऽस्य सकृच्छ्रवात् ।
एवं स्वायम्भुवमनुर्देवीमाराध्य भक्तितः ।
लेभे राज्यं धरायाश्च निजमन्वन्तराश्रयम् ।। ७. २६ ।।

।। स्वायम्भुवमनुचरित्रं समाप्तम् ।।

।। इति श्रीदेवीभागवते दशमस्कन्धे सप्तमोऽध्यायः ।।

7.21. சௌனகரே! விந்தியத்தை இடமாய்க் கொண்ட தேவியும் உலகில் விந்தியவாஸினீ எனப் பிரசித்தமான பெயருடன் (ஸ்வாயம்புவ) மனுவால் பூஜிக்கப்பட்டாள்.

7.22. இவ்வுத்தமமான சரித்திரம் பகையைப் போக்கும் சிறப்புடையது.

7.23. அகஸ்தியரையும் விந்திய பர்வதத்தையும் பற்றிய இவ்வரலாறு பாவத்தைப் போக்குவது. அரசர்களுக்கு வெற்றியளிப்பது. பிராம்மணர்களுக்கு ஞானத்தை வளர்ப்பது.

7.26. இதை ஒரு தடவை பக்தியுடன் கேட்பதாலேயே ஆசையுள்ளவன் ஆசைகளின் பூர்த்தியை எய்துவான். இவ்வாறு ஸ்வாயம்புவ மனுவானவர் தேவியை பக்தியுடன் பூஜித்துத் தனது மன்வந்தரத்திற்குரித்தான ராஜ்யத்தை பூமியில் அடைந்தார்.

ஸ்வாயம்புவமனு சரித்திரம் முற்றும்.

இங்ஙனம் தேவீபாகவதத்தில் பத்தாவது ஸ்கந்தத்தில் ஏழாவது அத்தியாயம் முற்றும்.

॥ स्वारोचिषादि मनूनां चरित्रम् ॥ ४५ ॥

शौनक उवाच —

आद्यो मन्वन्तरः प्रोक्तो भवता चायमुत्तमः।
अन्येषामुद्भवं ब्रूहि मनूनां दिव्यतेजसाम् ॥ ८. १ ॥

सूत उवाच —

एवमाद्यस्य चोत्पत्तिं श्रुत्वा स्वायम्भुवस्य हि।
अन्येषां क्रमशस्तेषां सम्भूतिं परिपृच्छति।
नारदः परमो ज्ञानी देवीतत्त्वार्थकोविदः ॥ ८. २ ॥

नारद उवाच —

मनूनां मे समाख्याहि सूत्पत्तिं च सनातन ॥ ८. ३ ॥

45 ஸ்வாரோசிஷர் முதலிய மனுக்களின் சரித்திரம்

சௌனகர் கூறியது—

8.1. உத்தமமான முதல் மன்வந்தரம் உங்களால் கூறப்பட்டது. தெய்வீகமான ஒளி பொருந்திய மற்ற மனுக்களின் வரலாற்றையும் கூறியருளுங்கள்.

ஸூதர் கூறியது—

8.2. இவ்வாறு ஆதி ஸ்வாயம்புவரின் உற்பத்தியைக் கேட்டவரும் பரம ஞானியும் தேவீதத்துவங்களை நன்குணர்ந்தவருமான நாரதர் வரிசையாய் மற்றவர்களின் உற்பத்தியைப் பற்றியும் கேட்கலானார்.

நாரதர் கூறியது—

8.3. ஸநாதன புருஷோத்தமரே! மனுக்களின் சிறப்பான வரலாற்றைக் கூறியருளுங்கள்.

नारायण उवाच —

प्रथमोऽयं मनुः स्वायम्भुव उक्तो मुने।
देव्याराधनतो येन प्राप्तं राज्यमकण्टकम् ॥ ८.४ ॥

प्रियव्रतोत्तानपादौ मनुपुत्रौ महौजसौ।
राज्यपालनकर्तारौ विख्यातौ वसुधातले ॥ ८.५ ॥

द्वितीयश्च मनुः स्वारोचिष उक्तो मनीषिभिः।
प्रियव्रतसुतः श्रीमानप्रमेयपराक्रमः ॥ ८. ६ ॥

स स्वारोचिष नामाऽपि कालिन्दीकूलतो मनुः।
निवासं कल्पयामास सर्वसत्त्वप्रियंकरः ॥ ८. ७ ॥

நாராயணரிஷி கூறியது—

8.4. முனிவரே! தேவியின் ஆராதனத்தால் எவர் இன்னல்கள் ஏதுமற்ற ராஜ்யத்தை அடைந்தாரோ அந்த முதல் மனுவான ஸ்வாயம்புவரைப் பற்றிக் கூறியாயிற்று.

8.5. ஸ்வாயம்புவமனுவின் புத்திரர்கள் பிரியவிரதன், உத்தானபாதன் எனுமிருவர்; அவர்கள் மிகுந்த வீரியம் படைத்தவர்களாகவும் புகழ் படைத்தவர்களாகவும் பூமியில் அரசாட்சி புரிந்தனர்.

8.6. இரண்டாவது மனு புத்திமான்களால் ஸ்வாரோசிஷர் என அழைக்கப்பட்டவர். அவர் பிரியவிரத புத்திரர், ஸ்ரீமான், அளவற்ற பராக்கிரம முடையவர்.

8.7. ஸ்வாரோசிஷர் எனப் பெயர் பெற்ற அந்த மனுவும் எல்லா உயிர்களுக்கும் பிரியத்தைச் செய்பவர். அவர் யமுனை நதிக்கரையில் தனக்கு ஒரு ஆசிரமத்தை அமைத்துக் கொண்டார்.

जीर्णपत्राशनो भूत्वा तपः कर्तु-मनुव्रतः।
देव्यां मूर्ति मृण्मयीं च पूजयामास भक्तितः ॥ ८. ८ ॥

एवं द्वादशवर्षाणि वनस्थस्य तपस्यतः।
देवी प्रादुरभूत्तात सहस्रार्कसमद्युतिः ॥ ८. ९ ॥

ततः प्रसन्ना देवेशी स्तवराजेन सुव्रता।
ददौ स्वारोचिषायैव सर्वमन्वन्तराश्रयम् ॥ ८. १० ॥

आधिपत्यं जगद्धात्री तारिणीति प्रथामगात्।
एवं स्वारोचिषमनुस्तारिण्याराधनात्ततः ॥
आधिपत्यं च लेभे स सर्वारातिविर्वजितम् ॥ ८. ११ ॥

8.8. உலர்ந்த இலைகளை ஆகாரமாய்க் கொண்டு தவஞ் செய்யும் விரத முடையவராய் மண்ணினல் தேவியின் மூர்த்தியைக் கற்பித்து பக்தியுடன் பூஜித்தார்.

8.9. மகனே! இவ்வாறு வனத்திலிருந்து கொண்டு பன்னிரண்டு வருஷங்கள் தவஞ் செய்த அவருக்கு ஆயிரம் சூரியர்களின் பிரகாசத்துடன் தேவி காட்சியளித்தாள்.

8.10–11. விரதத்தாலும் சிறந்த ஸ்தோத்திரத்தாலும் பிரஸன்னமான தேவநாயகி மன்வந்தரத்திலடங்கிய அரசு முழுவதையும் ஸ்வாரோசிஷருக்கே அளித்தாள். அதனல் ஜகத்தாத்ரீ என்றும் தாரிணீ என்றும் பிரசித்தியடைந்தாள். இவ்வாறு ஸ்வாரோசிஷமனு தாரிணியின் ஆராதனையால் ஒருவிதமான உபத்ரவமும் இல்லாத அரசாட்சியை அடைந்தார்.

धर्मं संस्थाप्य विधिवद्राज्यं पुत्रैः समं विभुः।
भुक्त्वा जगाम स्वर्लोकं निजमन्वन्तराश्रयात् ॥ ८. १२ ॥

तृतीय उत्तमो नाम प्रियव्रतसुतो मनुः।
गंगाकूले तपस्तप्त्वा वाग्भवं संजपन् रहः।
वर्षाणि त्रीण्युपवसन् देव्यनुग्रहमाविशत् ॥ ८. १४ ॥

स्तुत्वा देवीं स्तोत्रवरै-र्भक्तिभावितमानसः।
राज्यं निष्कण्टकं लेभे सन्ततिं चिरकालिकीम् ॥ ८. १५ ॥

राज्योत्थान्यानि सौख्यानि भुक्त्वा धर्मान्युगस्य च।
सोऽप्याजगाम पदवीं राजर्षिरभाविताम् ॥ ८. १६ ॥

8.12. பிரபுவான அவர் முறைப்படி அரசாண்டு தர்மத்தை ஸ்தாபித்துத் தான் அனுபவித்த அரசைப் பிள்ளைகளுக்கு ஸமமாகப் பிரித்துக் கொடுத்துவிட்டு தன் மன்வந்தராசிரயத்திலிருந்து ஸ்வர்க்க லோகம் சென்றார்.

8.14. மூன்றாவது மனு பிரியவிரத புத்திரரான உத்தமர் எனும் பெயருடையவர். கங்கைக் கரையில் தவம் செய்து, இரகசியத்தில் வாக்பவ மந்திரத்தை ஜபித்துக் கொண்டு மூன்று வருஷம் உபாசித்து தேவியின் அனுக்ரஹத்தைப் பெற்றார்.

8.15. பக்தி நிறைந்த மனதுடன் சிறந்த ஸ்தோத்ரங்களால் தேவியை ஸ்துதித்து துன்பம் நீங்கிய ராஜ்யத்தையும் நெடுங்காலம் வாழ்ந்த ஸந்ததியையும் அடைந்தார்.

8.16. ராஜ்ய சுகங்களையும் யுகதர்மங்களையும் அனுபவித்தபின் அவரும் ராஜரிஷிசிரேஷ்டர்கள் போற்றும் பதவியை யடைந்தார்.

चतुर्थस्तामसो नाम प्रियव्रतसुतो मनुः ।
नर्मदा दक्षिणे कूले समाराध्य जगन्मयीम् ॥ ८. १७ ॥

महेश्वरीं कामराजकूटजपपरायणः ।
वासन्ते शारदे काले नवरात्रसपर्यया ॥ ८. १८ ॥

तोषयामास देवेशीं जलजाक्षीमनूपमाम् ।
तस्याः प्रसादमासाद्य नत्वा स्तोत्रैरनुत्तमैः ॥ ८. १९ ॥

अकण्टकं महद्राज्यं बुभुजे गतसाध्वसः ।
पुत्रान् बलोद्धतान् शूरान् दश वीर्यनिकेतनान् ॥ ८. २० ॥

उत्पाद्य निजभार्यायां जगामाम्बरमुत्तमम् ।
पंचमो मनुराख्यातो रैवतस्तामसानुजः ॥ ८. २१ ॥

कालिन्दीकूलमाश्रित्य जजाप कामसंज्ञकम् ।
बीजं परमवाग्दर्पदायकं साधकाश्रयम् ॥ ८. २२ ॥

8.17–21. நாலாவது மனு பிரியவிரதரின் புத்திரரான தாமஸர். நர்மதையின் தெற்குக் கரையில் ஜகன்மயியான மஹேசுவரியைப் பூஜித்து காமராஜகூட மந்திர ஜபத்தில் ஈடுபட்டவராய் வஸந்த ருதுவிலும் சரத்ருதுவிலும் நவராத்திரி பூஜை செய்து உவமையற்றவளும் தாமரைக் கண்ணியுமான அந்த தேவேசியை மகிழ்வித்தார். ஒப்புயர்வற்ற ஸ்தோத்திரங்களால் துதித்து நமஸ்கரித்து அவள் அருளைப் பெற்று பயம் நீங்கியவராய்த் துன்பமற்ற பெரிய ராஜ்யத்தை அனுபவித்தார். தன் மனைவியிடம் பலம் மிக்கவர்களும் சூரர்களும் வீரியத்திற்குறைவிடமானவர்களுமான பத்துப் புத்திரர்களைப் பிறப்பித்து விட்டு உத்தமமான மேலுலகையடைந்தார். அந்த தாமஸருடைய தம்பியான ரைவதர் என்பவர் ஆருவது மனுவெனக் கூறப்படுகிருர்.

8.22. யமுனு நதிக்கரையையடைந்து அவர் ஸாதகாசிரயமானதும் சிறந்த வாக்கு வல்லமையைத் தருவதுமான காமபீஜ மந்திரத்தை ஜபித்தார்.

एतदाराधनादाप स्वाराज्यर्द्धि-मनुत्तमाम्।
बलमप्रहतं लोके सर्वसिद्धिविधायकम् ।। ८. २३ ।।

सन्ततिं चिरकालीनां पुत्रपौत्रमयीं शुभाम्।
धर्मान् व्यस्य व्यवस्थाप्य विषयानुपभुज्य च।
जगामाप्रतिमः शूरो महेन्द्रालयमुत्तमम् ।। ८. २४ ।।

अंगस्य राज्ञः पुत्रोऽभूच्चाक्षुषो मनुरुत्तमः।
षष्ठः स पुलहं नाम ब्रह्मर्षिं शरणं गतः ।। ९. २ ।।

ब्रह्मर्षे त्वामहं प्राप्तः शरणं प्रणतार्तिहन्।
शाधि मां किंकरं स्वामिन् येनाहं प्राप्नुयां श्रियम् ।। ९. ३ ।।

8.23. இந்த ஆராதனையால் ஒப்புயர்வற்ற ஸ்வாராஜ்யச் செல்வத்தையும் எல்லா சித்திகளையும் தரக் கூடியதும் வெல்ல முடியாததுமான பலத்தையும் அடைந்தார்.

8.24. நெடுங்காலம் வாழக்கூடிய நல்ல புத்திர பௌத்திரமயமான ஸந்ததியை அடைந்து தருமங்களை ஒழுங்குபடுத்தி ஸ்தாபித்து விஷயசுகங்களை யனுபவித்து ஒப்புயர்வற்ற சூரரான அவர் உத்தமமான தேவேந்திரா லயத்தை யடைந்தார்.

9.2. அங்கராஜனுடைய புத்திரரான சாக்ஷுஷர் என்பவர் உத்தமமான ஆறுவது மனுவானார். அவர் புலஹர் என்ற பிரம்மரிஷியைச் சரணடைந்தார்.

9.3. 'பிரம்மரிஷியே! வணங்கியவரின் துன்பத்தைத் துடைக்கும் உங்களை நான் சரணுயடைந்துள்ளேன். குருவே! எதனால் உங்கள் பணியாளான நான் உயர்நலத்தை அடைவேனோ அதை எனக்கு உபதேசித்தருளும்.

मेदिन्याश्चाधिपत्यं मे स्याद्यथावदखण्डितम्।
अव्याहतं भुजबलं शस्त्रास्त्रनिपुणं क्षमम् ॥ ९.४ ॥

सन्ततिश्चिरकालीनाऽप्यखण्डं वय उत्तमम्।
अन्तेऽपवर्गलाभश्च स्यात्तथोपदिशाऽद्य मे ॥ ९.५ ॥

इत्येवं वचनं तस्य मनोः कर्णपथेऽभवत्।
प्रत्युवाच मुनिः श्रीमान् देव्याः सम्राधनं परम् ॥ ९.६ ॥

राजन्नाकर्णय वचो मम श्रोत्रसुखं महत्।
शिवामाराधयाऽद्य त्वं तत्प्रसादादिदं भवेत् ॥ ९. ७ ॥

चाक्षुष उवाच —

कीदृगाराधनं देव्यास्तस्याः परमपावनम्।
केनाकारेण कर्तव्यं कारुण्याद्वक्तुमर्हसि ॥ ९.८ ॥

9.4–5 'எப்படி பூமியில் பிளவுபடாமல் சீராக ஆட்சி செல்லுமோ, புஜபலம் குறைவு படாமலிருக்குமோ, சஸ்திர அஸ்திரத்திறமை போதுமானதாயிருக்குமோ, நெடுங்காலம் வாழும் ஸந்ததி இருக்குமோ, குறைவுபடாத உத்தமமான ஆயுள் இருக்குமோ, முடிவில் மோக்ஷலாபம் கிட்டுமோ அவ்வாறு இப்பொழுது எனக்கு உபதேசித்தருளும்.'

9.6. அம்மனுவின் இவ்வார்த்தையைச் செவியுற்ற அருட்செல்வராகிய முனிவர் தேவியின் சிறந்த பூஜை முறையை உபதேசித்தார்.

9.7. அரசே! மிகவும் செவிக்கினியதாய் நான் சொல்லும் வார்த்தையைக் கேளும். மங்களஸ்வரூபிணியான தேவியை இப்பொழுது ஆராதனை செய்யும். அவளுடைய அருளால் உம்முடைய இக்கோரிக்கை பூர்த்தியாகும்.

சாக்ஷுஷர் கூறியது—

9.8. அந்த தேவியின் பரமபாவனமான ஆராதனை எவ்வாறு செய்ய வேண்டும்? எந்த வடிவில் செய்ய வேண்டும்? கருணை கூர்ந்து கூற வேண்டுகிறேன்.

मुनिरुवाच—

राजन्नाकर्ण्यतां देव्याः पूजनं परमव्ययम् ।
वाग्भवं बीजमव्यक्तं संजप्यमनिशं तथा ॥ ९. ९ ॥

त्रिकालं संजपन्मर्त्यो भुक्तिमुक्ती लभेत्तु हि ।
न बीजं वाग्भवादन्यदस्ति राजन्यनन्दन ॥ ९. १० ॥

जपार्तसिद्धिकरं वीर्यबलवृद्धिकरं परम् ।
एतस्य जापात्पद्मोऽपि सृष्टिकर्तामहाबलः ॥ ९. ११ ॥

एवं त्वमपि राजन्य महेशीं जगदम्बिकाम् ।
समाराध्य महर्द्धिं च लप्स्यसेऽचिरकालतः ॥ ९. १४ ॥

एवं स मुनिवर्येण पुलहेन प्रबोधितः ।
अंगपुत्रस्तपस्तप्तुं जगाम विरजां नदीम् ॥ ९. १५ ॥

முனிவர் கூறியது—

9.9–10. அரசே! தேவியின் சிறந்த பூஜையைக் கூறுகிறேன், கேளும். வெளிப்படையாய்த் தோன்ருத ('ஐம்' எனும்) வாக்பவ பீஜமந்திரத்தை நாள் தோறும் மூன்று வேளைகளிலும் ஜபித்து மனிதன் போகத்தையும் முக்தியையும் அடைவான். அரசர்களால் போற்றப்பட்டவனே! வாக்பவ பீஜத்தினும் சிறந்த மந்திரம் இல்லை.

9.11. இந்த ஜபத்தால் சித்தியும் வீரியம் பலம் ஆகியவற்றின் சிறப்பான வளர்ச்சியும் ஏற்படும். இதனுடைய ஜபத்தால் தான் பிரம்மாவும் மகாபலம் வாய்ந்த சிருஷ்டிகர்த்தாவாயிருக்கிருர்.

9.14. அரசே! இவ்வாறு நீயும் ஜகதம்பிகையான மஹேசுவரியை நன்கு ஆராதித்துக் குறுகிய காலத்தில் பெரிய செல்வத்தை அடைவாய்.

9.15. முனிசிரேஷ்டர்ரான புலஹரால் இவ்வாறு உபதேசிக்கப்பெற்ற அவ்வங்கபுத்திரன் தவஞ் செய்ய விரஜா நதிக்குச் சென்ருன்.

स च तेपे तपस्तीव्रं वाग्भवस्य जपे रतः।
बीजस्य पृथिवीपालः शीर्णपर्णाशनो विभुः ॥ ९. १६ ॥

प्रथमेऽब्दे पल्लवाशो द्वितीये तोयभक्षणः।
तृतीयेऽब्दे पवनभुक् तस्थौ स्थाणुरिवाचलः ॥ ९. १७ ॥

एवं द्वादशवर्षाणि त्यक्ताहारस्य भूभुजः।
वाग्भवं जपतो नित्यं मतिरासीच्छुभान्विता ॥ ९. १८ ॥

तथा च देव्याः परमं मन्त्रं संजपतो रहः।
प्रादुरासीज्जगन्माता साक्षाच्छ्रीपरमेश्वरी ॥ ९. १९ ॥

तेजोमयी दुराधर्षा सर्वदेवमयीश्वरी।
उवाचांगतनूजं तं प्रसन्ना ललिताक्षरम् ॥ ९. २० ॥

9.16. வாக்பவமந்திர ஜபத்தில் ஆழ்ந்தவனுயப் பிரபுவான அவ்வரசன் காய்ந்த இலைகளைப் புசித்துக் கொண்டு தீவிரமான தவஞ் செய்தான்.

9.17. முதல் வருஷம் இலையைப் புசித்த அவன் இரண்டாம் வருஷம் நீரைப் புசித்துக் கொண்டும் மூன்றும் வருஷம் காற்றைப்புசித்துக் கொண்டும் கட்டைபோல் அசையாமல் நிற்கலானுன்.

9.18. இங்ஙனம் ஆகாரமின்றிப் பன்னிரண்டு வருஷம் இடைவிடாது வாக்பவமந்திர ஜபத்தில் கடந்த அவ்வரசனுக்கு மங்களமான மதி சித்தித்தது.

9.19. அப்படி தேவியின் சிறப்பான மந்திரத்தை இரகசியத்தில் நன்றுக ஜபம் செய்து கொண்டிருந்த அவன் முன் ஜகன்மாதாவான ஸாக்ஷாத் ஸ்ரீபரமேச்வரீ காட்சியளித்தாள்.

9.20. ஒளிமிக்கவளும் வெல்ல முடியாதவளும் ஸகல தேவஸ்வரூபிணியுமான ஈசுவரி அங்க புத்திரனுக்குப் பிரஸன்னமாகி அழகிய அக்ஷரங்களால் பின்வருமாறு கூறினுள்.

देव्युवाच—

पृथिवीपाल ते यत्स्याच्चिन्तितं परमं परम्।
तद् ब्रूहि सम्प्रदास्यामि तपसा ते सुतोषिता ।। ९. २१ ।।

चाक्षुष उवाच—

जानासि देवदेवेशि यत्प्रार्थ्यं मनसेप्सितम्।
अन्तर्यामि स्वरूपेण तत्सर्वं देवपूजिते ।। ९. २२ ।।

तथाऽऽपि मम भाग्येन जातं यत्तवदर्शनम्।
ब्रवीमि देवि मे देहि राज्यं मन्वन्तराश्रितम् ।। ९. २३ ।।

தேவி கூறியது—

9.21. பூமியை ஆள்பவனே! எது சிறந்த வரம் என்று நீ எண்ணுகிருயோ அதைக் கூறு. உனது தவத்தால் ஸந்தோஷித்த நான் அதை அளிக்கிறேன்.

சாக்ஷுஷமனு கூறியது—

9.22. தேவ தேவர்களுக்கும் ஈசுவரியே! தேவர்களால் பூஜிக்கப்பட்டவளே! என் மனதிற்கு விருப்பமான பிரார்த்தனை எதுவோ அதையெல்லாம் அந்தர்யாமி ஸ்வரூபிணியான நீ அறிவாய்.

9.23. தேவி! என்ருலும் எனது பாக்கியத்தால் உனது தரிசனம் கிட்டியிருப்பதால் கூறுகிறேன்; மன்வந்தரத்திற்குரியதான ராஜ்யத்தை எனக்குக் கொடுத்தருள்வாயாக.

श्रीदेव्युवाच—

दत्तं मन्वन्तरस्यास्य राज्यं राजन्यसत्तम।
पुत्रा महाबलास्ते च भविष्यन्ति गुणाधिकाः ॥ ९.२४ ॥

राज्यं निष्कण्टकं भावि मोक्षोऽन्ते चापि निश्चितः।
एवं दत्त्वा वरं देवी मनवे वरमुत्तमम् ॥ ९.२५ ॥

जगामाऽदर्शनं सद्यस्तेन भक्त्या च संस्तुता।
सोऽपि राजा मनुः षष्ठः प्रसादात्तु तदाश्रयात् ॥ ९.२६ ॥

वभूव मनुमान्योऽसौ सार्वभौमसुखैर्वृतः।
पुत्रास्तस्य बलोद्युक्ताः कार्यभारसहाद्दताः ॥ ९.२७ ॥

ஸ்ரீ தேவி கூறியது—

9.24. அரசசிரேஷ்டனே! இந்த மன்வந்தரத்தின் ராஜ்யம் உனக்களிக்கப்பட்டது. மகாபலமுள்ளவர்களும் நற்குணங்களில் மிக்கவர்களுமான புத்திரர்களும் உண்டாவார்கள்.

9.25—27. சத்ருபயமில்லாத அரசும் முடிவில் நிச்சயமாக மோக்ஷமும் உனக்குக் கிடைக்கும். இப்படி மனுவிற்கு உத்தமமான வரத்தையளித்து விட்டு தேவியானவள் அவ்வரசனுல் பக்தியுடன் துதிக்கப்பட்டு உடனே மறைந்தாள். அவளுடைய அருளாலும் ஆதரவாலும் அவ்வரசன் ஆருவது மனுவானுன். எல்லோராலும் போற்றப்பட்டு ஸார்வபௌமப்பதவியின் சுகங்களால் சூழப் பெற்று வாழ்ந்தான். அவனுடைய புத்திரர்கள் பலசாலிகளாகவும் காரியங்களின் பளுவைத்தாங்கக் கூடியவர்களாகவும் விளங்கினர்.

देवी-भक्ताश्च शूराश्च महाबलपराक्रमाः ।
अन्यत्र माननीयाश्च महाराज्यसुखास्पदाः ॥ ९. २८ ॥

एवं चाक्षुषमनुर्देव्याराधनतः प्रभुः ।
बभूव मनुवर्योऽसौ जगामान्ते शिवापदम् ॥ ९. २९ ॥

॥ स्वारोचिषादिमनूनां चरित्रं समाप्तम् ॥

॥ इति श्रीदेवीभागवते दशमस्कन्धे नवमोऽध्यायः ॥

9.28. அவர்கள் தேவி பக்தர்களாகவும் சூரர்களாகவும் சிறந்த பலமும் பராக்கிரமும் உடையவர்களாகவும் பிறரால் போற்றப்பட்டவர்களாகவும் உயர்ந்த ராஜ்ய சுகங்களுக்கு இருப்பிடமாகவும் இருந்தனர்.

9.29. இவ்வாறு சாக்ஷுஷ மனு தேவியின் ஆராதனையால் பிரபுவாகவும் மனுக்களில் சிறந்தவராகவும் விளங்கி முடிவில் மங்கள வடிவினளான தேவியின் பதத்தையடைந்தார்.

ஸ்வாரோசிஷர் முதலிய மனுக்களின் சரித்திரம் முற்றும்.

இங்ஙனம் ஸ்ரீ தேவீபாகவதத்தில் பத்தாவது ஸ்கந்தத்தில் ஒன்பதாவது அத்தியாயம் முற்றும்.

॥ देवीमाहात्म्यम् ॥ ४६ ॥

नारायण उवाच —

सप्तमो मनुराख्यातो मनुर्वैवस्वतः प्रभुः ।
श्राद्धदेवः परानन्दभोक्ता मान्यस्तु भूभुजाम् ॥ १०. १ ॥

स च वैवस्वतमनुः परदेव्याः प्रसादतः ।
तथा तत्तपसा चैव जातो मन्वन्तराधिपः ॥ १०. २ ॥

अष्टमो मनुराख्यातः सावर्णिः प्रथितः क्षितौ ।
स जन्मान्तर आराध्य देवीं तद्वरलाभतः ॥ १०. ३ ॥

जातो मन्वन्तरपतिः सर्वराजन्यपूजितः ।
महापराक्रमी धीरो देवीभक्तिपरायणः ॥ १०. ४ ॥

46. தேவீமாகாத்மியம்

நாராயணரிஷி கூறியது—

10.1. பிரபுவாகிய வைவஸ்வத மனு ஏழாவது மனு எனக் கூறப்படுபவர். அவர் பெயர் சிராத்த தேவர். அவர் பரமானந்தத்தையனுபவித்தவர். அரசர்களுள் போற்றப் பெற்றவர்.

10.2. அந்த வைவஸ்வத மனு பரதேவதையின் அருளாலும் அவளைக்குறித்துச் செய்த தவத்தாலும் மன் வந்தரத்திற்கு அதிபரானார்.

10.3–4. எட்டாவது மனுவாய் ஸாவர்ணி வரப் போவதாய்க் கூறுகின்றனர். அவர் பூவுலகில் பிரசித்தி பெற்றவர். முற்பிறவியில் தேவியைப் பூஜித்துப் பெற்ற வரத்தின் பயனாய் மன்வந்தரத்திற்குப் பதியாகி எல்லா அரசர்களாலும் போற்றப்படுபவராகிறார். அவர் பராக் கிரமம் மிக்கவராய் தீரராய் தேவீபக்திபராயணராய் விளங் கியவர்.

नारद उवाच —

कथं जन्मान्तरे तेन मनुनाऽराधनं कृतम्।

देव्याः पृथिव्युद्भवायास्तन्ममाऽऽख्यातुमर्हसि ॥ १०. ५ ॥

श्रीनारायण उवाच—

चैत्रवंशसमुद्भूतो राजा स्वारोचिषेऽन्तरे।

सुरथो नाम विख्यातो महाबलपराक्रमः ॥ १०. ६ ॥

गुणग्राही धनुर्धारी मान्यः श्रेष्ठः कविः कृती।

धनसंग्रहकर्ता च दाता याचकमण्डले ॥ १०. ७ ॥

நாரதர் கூறியது—

10.5. பூமியைத் தோற்றுவித்த தேவியின் ஆராதனே அம்மனுவால் எவ்வாறு செய்யப்பட்டதென்பதை எனக்கு கூறியருளுதல் வேண்டும்.

ஸ்ரீ நாராயணரிஷி கூறியது.

10.6. ஸ்வாரோசிஷமன்வந்தரத்தில் சைத்ர வம் சத்தில் உதித்து ஸுரதன் என்ற பெயருடன் புகழ்மிக்க வனும் மகாபலபராக்கிரமம் உடையவனும் ஒரு அரசன் இருந்தான்.

10.7. அவன் குணத்தை கிரகிப்பவனும், வில் வித் தையில் வல்லவனும், எல்லோராலும் நன்கு மதிக்கப்பட்ட வனும், சிரேஷ்டனும், தீர்க்க தரிசியாயும், செயல் திறமை உடையவனும், பொருளே ஈட்டுவதில் ஊக்கமுடைய வனும், யாசகர்களின் கூட்டத்தில் தானங்கொடுப்பதில் சிறந்தவனுமிருந்தான்.

अरीणां मर्दनो मानी सर्वास्त्रकुशलो बली।
तस्यैकदा बभूवुस्ते कोलाविध्वंसिनो नृपाः ॥ १०. ८ ॥

शत्रवः सैन्यसहिताः परिवार्यैनमूर्जिताः।
रुरुधुर्नगरीं तस्य राज्ञो मानधनस्य हि ॥ १०. ९ ॥

तदा स सुरथो नाम राजा सैन्यसमावृतः।
निर्ययौ नगरात्स्वीयात्सर्वशत्रुनिबर्हणः ॥ १०. १० ॥

तदा स समरे राजा सुरथः शत्रुभिर्जितः।
अमात्यैर्मन्त्रिभिश्चैव तस्य कोशगतं धनम् ॥ १०. ११ ॥

हृतं सर्वमशेषेण तदाऽतप्यत भूमिपः।
निष्कासितश्च नगरात्स राजा परमद्युतिः ॥ १०. १२ ॥

जगामाऽश्वमथारुह्य मृगयामिषतो वनम्।
एकाकी विजनेऽरण्ये बभ्रामोद्भ्रान्तमानसः ॥ १०. १३ ॥

10.8–9. எதிரிகளை அடக்குபவனையும், மானம் மிகுந்தவனையும் பலவானையும் எல்லா அஸ்திரங்களிலும் வல்லவனையும் இருந்தான். அவனுக்கு ஒரு சமயம் கோலாவித்வம்ஸினர்கள் என்ற அரசர்கள் பகைவர்களாகிச் சைனியஸமூகத்துடன் இவனைத்தாக்கி இவன் தலை நகரையும் பொருளையும் கைப்பற்றிக் கொண்டனர்.

10.10. இதுவரை சத்துருக்களில்லாதவனையிருந்த அந்த ஸுரதன் என்ற அரசன் எதிரிகளின் படைகளால் பீடிக்கப்பட்டபொழுது தன் நகரத்தை விட்டு வெளியேகினான்.

10.11–13. போரில் சத்ருக்களால் வெல்லப்பட்ட ஸுரதன் என்ற அவ்வரசன் பொக்கிஷத்திலிருந்த பொருளெல்லாம் மிச்சமின்றி தன்னுடைய அமாத்தியர்களாலும் மந்திரிகளாலும் கவரப்பட்டு மிகவும் பரிதவித்தான். சிறந்த புத்திமானான அவ்வரசன் நகரத்திலிருந்து வெளியேற்றப்பட்டுக் குதிரையேறி வேட்டைக்குச் செல்பவனைப் போல் வனம் புகுந்து தன்னந்தனியாய் ஜனஸஞ்சாரமற்ற அரணியத்தில் பைத்தியம் பிடித்தவனைப் போல் இங்குமங்கு மலைந்தான்

मुनेः कस्यचिदागत्य स्वाश्रमं शान्तमानसः।
प्रशान्तजन्तुसंयुक्तं मुनिशिष्यगणैर्यतम् ॥ १०. १४ ॥

उवास कंचित्कालं स राजा परमशोभने।
आश्रमे मुनिवर्यस्य दीर्घदृष्टेः सुमेधसः ॥ १०. १५ ॥

एकदा स महीपालो मुनिं पूजावसानके।
काले गत्वा प्रणम्याऽऽशु पप्रच्छ विनयान्वितः ॥ १०. १६ ॥

मुने मम मनो दुःखं बाधते चाधिसम्भवम्।
ज्ञाततत्त्वस्य भूदेव निष्प्रज्ञस्य च सन्ततम् ॥ १०. १७ ॥

शत्रुभिर्निर्जितस्यापि हृतराज्यस्य सर्वशः।
तथापि तेषु मनसि ममत्वं जायते स्फुटम् ॥ १०. १८ ॥

10.14–15. சாந்தமான மனம் படைத்தவரும், தீர்க்க தரிசியும், ஸுமேதஸ் எனப் பெயர் பெற்றவருமான ஒரு முனிவரின் ஆசிரமத்தையடைந்து, சாந்தமான பிராணிக ளுடன் கூடியதும் முனிசிஷ்யகணங்களுடன் பிரகாசிப்பது மான அம்முனிவரின் ஆசிரமத்தில் சிறிது காலம் வசித்தான்.

10.16. ஒரு சமயம் முனிவருடைய பூஜை முடிந்து அவர் அமைதியாயிருக்கையில் அரசன் அவரை விரைந்து அணுகி வினயத்துடன் பின்வருமாறு வினவினான்.

10.17. பூவுலகின் தெய்வமாகிய முனிவரே! தத்து வத்தை நான் உணர்ந்தவன் எனினும் அறிவீனனாகிய என் மனதை இடைவிடாது கவலையால் ஏற்பட்ட துக்கம் பீடிக் கிறது.

10.18. என்னுடைய ராஜ்யம் முற்றும் பகைவரால் ஜயிக்கப்பட்ட பின்னும் அதைப் பற்றிய விஷயங்களில் என் னுடையது என்ற எண்ணம் உண்டாகிக் கொண்டே இருக் கிறது என்பது தெளிவு.

किं करोमि क्व गच्छामि कथं शर्म लभे मुने।
त्वदनुग्रहामाशासे वद वेदविदां वर॥१०. १९॥

मुनिरुवाच—

आकर्णय महीपाल महाश्चर्यकरं परम्।
देवीमाहात्म्यमतुलं सर्वकामप्रदं परम्॥१०. २०॥

जगन्मयी महामाया विष्णुब्रह्महरोद्भवा।
सा बलादपहृत्यैव जन्तूनां मानसानि वै॥१०. २१॥

मोहाय प्रतिसंयच्छेदिति जानीहि भूमिप।
सा सृजत्यखिलं विश्वं सा पालयति सर्वदा॥१०. २२॥

संहारे हररूपेण संहरत्येव भूमिप।
कामदात्री महामाया कालरात्रिर्दुरत्यया॥१०. २३॥

10.19. நான் என்ன செய்வேன்? எங்கு போவேன்? எப்படி மனவமைதியை யடைவேன்? வேதமுணர்ந்தவர்களிற் சிறந்த முனிவரே! கூறியருளும். உமது அனுக்கிரகத்தைப் பிரார்த்திக்கிறேன்.

முனிவர் கூறியது—

10.20. பூபாலரே! மிகவும் ஆச்சரியமானதும் சிறந்ததும் எல்லா ஆசைகளையும் பூர்த்தி செய்வதும் ஒப்பற்றதுமான தேவீமாஹாத்மியத்தைக் கூறுகிறேன், கேளும்.

10.21–23. அரசே! உலகவடிவினளும் விஷ்ணு, பிரம்மா, ருத்ரன் ஆகியோரை உற்பவிப்பவளும் ஆகிய மகாமாயை எனும் அவள் ஜீவர்களின் மனதை பலாத்காரமாக இழுத்து மோஹத்தில் புகுத்துகிறுள் என்று அறியவேண்டும். அவள் அனைத்துலகையும் சிருஷ்டிக்கிருள்; அவளே எப்பொழுதும் பரிபாலிக்கிருள்; ஸம்ஹார காலத்தில் ருத்ர ரூபத்தில் ஸம்ஹரிக்கிருள்; காமத்தையளிப்பவளும் காலராத்ரியும் மஹாமாயையுமான அவள் கடக்க முடியாதவள்.

विश्वसंहारिणी काली कमला कमलालया।
तस्यां सर्वजगज्जातं तस्यां विश्वं प्रतिष्ठितम्॥ १०. २४॥

लयमेष्यति तस्यांच तस्मात्सैव परात्परा।
तस्या देव्याः प्रसादश्च यस्योपरि भवेन्नृप॥
स एव मोहमत्येति नाऽन्यथा धरणीपते॥ १०. २५॥

राजोवाच—

का सा देवी त्वया प्रोक्ता ब्रूहि कालविदांवर।
का मोहयति सत्त्वानि कारणं किं भवेद् द्विज॥ ११. १॥

कस्मादुत्पद्यते देवी किं रूपा सा किमात्मिका।
सर्वमाख्याहि भूदेव कृपया मम सर्वतः॥ ११. २॥

10.24–25. கமலா, கமலாலயா. காளீ எனப்பட்ட அவள் உலகை ஸம்ஹரிப்பவள். அவளிடமிருந்தே உலகனைத்தும் தோன்றி, நிலைபெற்று, லயத்தையடைகிறது. ஆகையால் அவள் பரத்திற்கும் பரமானவள். அரசே! அந்த தேவியின் அருள் எவர்மேல் ஏற்படுகிறதோ அவரே மோஹத்தைக் கடப்பர்; இதற்கு வேறு வழியில்லை.

அரசன் கூறியது—

11.1. காலத்தின் போக்கையறிந்த பிராம்மண சிரேஷ்டரே! உம்மால் கூறப்பட்டவளும் பிராணிகளை மோஹமடையச் செய்பவளுமான அந்த தேவி யார்? அதற்கென்ன காரணம்?

11.2. அந்த தேவி எக்காரணத்தால் உற்பவிக்கிருள்? அவள் எப்படிப்பட்டவள், என்ன ரூபமுடையவள்? பூவுலகின் தெய்வம் போன்றவரே! அனைத்தையும் எனக்குக் கூறியருளுதல் வேண்டும்.

मुनिरुवाच—

राजन् देव्याः स्वरूपं ते वर्णयामि निशामय।
यथा चोत्पतिता देवी येन वा सा जगन्मयी ॥ ११. ३ ॥

यदा नारायणो देवो विश्वं संहृत्य योगराट्।
आस्तीर्य शेषं भगवान् समुद्रे निद्रितोऽभवत् ॥ ११. ४ ॥

तदा प्रस्वापवशगो देवदेवो जनार्दनः।
तत्कर्णमलसंजातौ दानवौ मधुकैटभौ ॥ ११. ५ ॥

ब्रह्माणं हन्तुमुद्युक्तौ दानवौ घोररूपिणौ।
तदा कमलजो देवो दृष्ट्वा तौ मधुकैटभौ ॥ ११. ६ ॥

निद्रितं देवदेवेशं चिन्तामाप दुरत्ययाम्।
निद्रितो भगवानीशो दानवौ च दुरासदौ ॥ ११. ७ ॥

முனிவர் கூறியது—

11.3. அரசே! தேவியின் ஸ்வரூபத்தையும் அவள் எப்படி உற்பவிக்கிருள் என்றும் எதனுல் அவள் உலக வடிவாகிருள் என்றும் கூறுகிறேன், கேளும்.

11.4—5. எப்பொழுது பகவானும், தேவதேவரும் ஜனர்த்தனரும், யோகேசுவரரும், ஆகிய நாராயணர் உலகைத் தன்னுள் அடக்கிக் கொண்டு ஸமுத்திரத்தில் சேஷனுகிய படுக்கையில் நித்திரையிலாழ்ந்து உறக்கத்தின் வசப்பட்டாரோ அப்பொழுது அவருடைய காதின் அழுக்கிலிருந்து மது கைடபர்கள் என்ற இரண்டு அசுரர்கள் தோன்றினர்கள்.

11.6—7. கொடிய வடிவு கொண்ட அவ்வரக்கர்கள் பிரம்மாவைக் கொல்ல முயன்றனர். அப்பொழுது பிரம்ம தேவர் அம்மதுகைடபர்களேயும் தேவதேவராகிய பகவான் உறங்கிக் கொண்டிருப்பதையும் கண்டு மிகுந்த கவலேயுடன் பின்வருமாறு எண்ணினர்.

किं करोमि क्व गच्छामि कथं शर्म लभे ह्यहम् ।
एवं चिन्तयतस्तस्य पद्मयोनेर्महात्मनः ।। ११. ८ ।।

बुद्धिः प्रादुरभूत्तात तदा कार्यप्रसाधिनी ।
यस्या वशं गतो देवो निद्रितो भगवान् हरिः ।।
तां देवीं शरणं यामि निद्रां सर्वप्रसूतिकाम् ।। ११. ९ ।।

ब्रह्मोवाच—

देवदेवि जगद्धात्रि भक्ताभीष्टफलप्रदे ।
जगन्माये महामाये समुद्रशयने शिवे ।। ११. १० ।।

त्वदाज्ञावशगाः सर्वे स्वस्वकार्यविधायिनः ।
कालरात्रि-र्महारात्रि-र्मोहरात्रिर्मदोत्कटा ।। ११. ११ ।।

11.8–9. 'நான் என்ன செய்வேன்? எங்கு செல்வேன்? எப்படி நன்மையை அடைவேன்?' இப்படி சிந்தித்துக் கொண்டிருக்கையில் கமலத்துதித்த மகாத்மாவான அவருக்கு காரியத்தைத் தெளிவாக்கும் புத்தி தோன்றிற்று. அதாவது 'பகவானும் தேவ தேவருமான ஹரி எந்த தேவியின் வசப் பட்டு உறங்குகிருரோ, எவள் அனைத்தையும் தோற்றுவிப்ப வளோ அந்த நித்ரா தேவியை நான் சரணடைகிறேன்.'

பிரம்மா கூறியது—

11.10. தேவதேவியே! உலகைப் போஷிப்பவளே! பக்தர்கள் விரும்பிய பயனையளிப்பவளே! உலகை மயக்கும் மாயாஸ்வரூபிணியான மகாமாயையே! ஸமுத்திரத்தில் சயனிப்பவளே! மங்கள வடிவினளே!

11.11. எல்லோருமே உன்னுடைய கட்டளைக்கடங் கியே தத்தம் காரியத்தைச் செய்கின்றனர். (மரண) காலராத்ரியாகவும், (பிரளயகால) மஹாராத்திரியாகவும், மோஹராத்ரியாகவும், மதம் மிக்கவளாயும் நீ இருக்கிருய்.

व्यापिनी वशगा मान्या महानन्दैकशेवधिः।
महनीया महाराध्या माया मधुमती मही ॥ ११. १२ ॥

परापराणां सर्वेषां परमा त्वं प्रकीर्तिता।
लज्जा पुष्टिः क्षमा कीर्तिः कान्तिः कारुण्यविग्रहा ॥
कमनीया जगद्वन्द्या जाग्रदादिस्वरूपिणी ॥ ११. १३ ॥

परमा परमेशानी परानन्दा परायणा।
एकाऽप्येकस्वरूपा च सा द्वितीया द्वयात्मिका ॥ ११. १४ ॥

त्रयी त्रिवर्गनिलया तुर्या तुर्यपदात्मिका।
पंचमी पंचभूतेशी षष्ठी षष्ठेश्वरीति च ॥ ११. १५ ॥

11.12. எங்கும் வியாபித்தவளாயும், எல்லாவற்றையும் வசப்படுத்தியவளாயும், பெருமைமிக்கவளாயும், சிறந்த ஆனந்தத்தின் பொக்கிஷமாயும், மகிமை பொருந்தியவளாயும், சிறந்த பூஜைக்குரியவளாயும், மாயையாகவும், மதுமதியாகவும், பூமியாகவும் நீ இருக்கிறுய்.

11.13. பரத்திற்கும் அபரத்திற்கும் அனைத்திற்கும் மேலானவள் என நீ கூறப்படுகிறுய். மனதைக்கவர்பவளாகவும், உலகத்தால் வந்தனம் செய்யப்பட்டவளாயும் விழிப்பு முதலிய வடிவினளாயும் நீ இருக்கிறுய்.

11.14–15. சிறந்தவளாயும், சிறந்த ஈசுவரியாயும், பரமானந்த ஸ்வரூபிணியாயும், சிறந்த புகலிடமாயும் இருக்கிறுய். நீ ஒருத்தியேயாயினும் ஒரே ஸ்வரூபமுடையவளாயினும் (தயையுடன் கூடி) இரண்டாகி இரண்டுவடிவங் கொள்கிறுய். மூன்ருகவும் (மூன்று வேதமாகவும்) மூன்றின் வர்க்கமான அனைத்திலும் இருப்பவளாகவும், நான்காகவும் துரீயம் எனும் பதத்தின் கருத்தாகவும், ஐந்தாகவும், ஐம் பூதங்களின் ஈசுவரியாகவும், ஆருகவும் ஷஷ்டேச்வரியாகவும் இருக்கிறுய்.

सप्तमी सप्तवारेशी सप्त सप्तवरप्रदा ।

अष्टमी वसुनाथा च नवग्रहमयीश्वरी ॥ ११. १६ ॥

नवरागकला रम्या नवसंख्या नवेश्वरी ।

दशमी दशदिक् पूज्या दशाशा-व्यापिनी रमा ॥ ११. १७ ॥

एकादशात्मिका चैकादशरुद्रनिषेविता ।

एकादशीतिथिप्रीता एकादशगणाधिपा ॥ ११. १८ ॥

द्वादशी द्वादशभुजा द्वादशादित्यजन्मभूः ।

त्रयोदशात्मिका देवी त्रयोदशगणप्रिया ॥ ११. १९ ॥

11.16. ஸப்தமியாகவும் ஸப்தவாரேசியாகவும், எவ்வேழானவற்றில் சிறந்து விளங்குபவளாகவும், அஷ்டமியாகவும் அஷ்டவசுக்களின் ஈசுவரியாகவும், நவக்கிரகமயமான ஈசுவரியாகவும் இருக்கிறாய்.

11.17. நவராக கலைகளாகவும், மகிழ்விப்பவளாகவும் ஒன்பது என்ற எண்ணிக்கையாகவும், ஒன்பதின் ஈசுவரியாகவும் தசமியாகவும் பத்துதிக்குகளிலும் பூஜிக்கப்பட்டவளாயும் பத்து திக்குகளையும் வியாபிக்கும் செல்வ நாயகியாயும் இருக்கிறாய்.

11.18. பதினொரு வடிவு கொண்ட நீ பதினொரு ருத்திரர்களால் பூஜிக்கப்படுகிறாய். ஏகாதசி திதியில் பிரீதி கொண்டவளாயும், ஏகாதச கணங்களுக்கு நாயகியாயும் இருக்கிறாய்.

11.19. துவாதசியாகவும், பன்னிரண்டு கைகள் உடையவளாகவும், பன்னிரண்டு ஆதித்தியர்களுக்குப் பிறப்பிடமாகவும், பதின்மூன்று வடிவுடைய தேவியாகவும் பதின்மூன்று கணங்களுக்குப் பிரியையாகவும் இருக்கிறாய்.

त्रयोदशाभिधा भिन्ना विश्वेदेवाधिदेवता ।
चतुर्दशेन्द्रवरदा चतुर्दशमनुप्रसूः ॥ ११. २० ॥

पंचाधिकदशी वेद्या पंचाधिकदशी तिथिः ।
षोडशी षोडशभुजा षोडशेन्दुकलामयी ॥ ११. २१ ॥

षोडशात्मकचन्द्रांशु-व्याप्तदिव्यकलेबरा ।
एवं रूपाऽसि देवेशि निर्गुणे तामसोदये ॥ ११. २२ ॥

त्वया गृहीतो भगवान् देवदेवो रमापतिः ।
एतौ दुरासदौ दैत्यौ विक्रान्तौ मधुकैटभौ ॥
एतयोश्च वधार्थाय देवेशं प्रतिबोधय ॥ ११. २४ ॥

11.20. த்ரயோதசீ என்ற பெயருடையவளாய்ப் பிரிந்து விச்வேதேவர்களுக்கு அதிதேவதையாகவும், பதினுன்கு இந்திரர்களுக்கு வரமளிப்பவளாயும் பதினுன்கு மனுக்களைத் தோற்றுவிப்பவளாயும் விளங்குகிருய்.

11.21. பதினைந்து திதிகளின் வடிவில் பஞ்சாதிகதசீ என அறியப்படுகிருய். பதினுறு சந்திர கலைகள் மயமான நீ பதினுறு புஜங்களுடன் ஷோடசியாகிருய்.

11.22–24. பதினுறு சந்திரகலைகளால் வியாபிக்கப் பெற்ற திவ்ய சரீரமுடையவளாகவும் இருக்கிருய். தேவ நாயகியே! நீ இப்படிப்பட்ட ரூபமுடையவள். இக்குணங் களுக்கப்பால் தமோகுணம் உதித்த பொழுது தேவதேவரும் லக்ஷ்மீபதியுமான பகவான் உன்னுல் கவரப்படுகிருர். மது கைடபர்களென்ற இவ்வரக்கர்கள் வெல்ல முடியாத பராக்கிரமம் படைத்தவர்கள். இவர்களுடைய ஸம்ஹாரத் தின் பொருட்டு தேவநாயகரை நீ எழுப்பியருள வேண்டும்.

मुनिरुवाच —

एवं स्तुता भगवती तामसी भगवत्प्रिया।
देवदेवं तदा त्यक्त्वा मोहयामास दानवौ ॥ ११. २५ ॥

तदैव भगवान् विष्णुः परमात्मा जगत्पतिः।
प्रबोधमाप देवेशो ददृशे दानवोत्तमौ ॥ ११. २६ ॥

तदा तौ दानवौ घोरौ दृष्ट्वा तं मधुसूदनम्।
युद्धाय कृतसंकल्पौ जग्मतुः सन्निधिं हरेः ॥ ११. २७ ॥

युयुधे च ततस्ताभ्यां भगवान्मधुसूदनः।
पंचवर्षसहस्राणि बाहुप्रहरणो विभुः ॥ ११. २८ ॥

तौ तदाऽतिबलोन्मत्तौ जगन्माया विमोहितौ।
व्रियतां वर इत्येवमूचतुः परमेश्वरम् ॥ ११. २९ ॥

முனிவர் கூறியது—

11.25. பகவானுக்குப் பிரியமானவளும் தமோகுண வடிவினளுமான பகவதி இங்ஙனம் துதிக்கப் பெற்று தேவ தேவரை விட்டுவிலகி அசுரர்களை மயக்கத்தில் ஆழ்த்தினள்.

11.26. அப்பொழுது பரமாத்மாவும் உலக நாயகரும் தேவேசரும் ஆகிய பகவான் விஷ்ணு விழிப்படைந்து அசுர சிரேஷ்டர்களைக் கண்ணுற்றார்.

11.27. அக்கொடிய அசுரர்களும் மதுஸூதனராகிய ஹரியை நோக்கி அவருடன் போர் புரியும் எண்ணத்துடன் அவர் முன் சென்றனர்.

11.28. பிரபுவாகிய பகவான் மதுஸூதனர் அவர்களுடன் ஐயாயிரம் ஆண்டு கைகலந்து போர் புரிந்தார்.

11.29. அவர்கள் அப்பொழுது பலக் கொழுப்பால் மதி மயங்கி பகவானை நோக்கி 'வரம் கேளும்' என்று கூறினர்.

एवं तयोर्वचः श्रुत्वा भगवानादिपूरुषः ।
वव्रे बध्यावुभौ मेऽद्य भवेतामिति निश्चितम् ॥ ११. ३० ॥

तौ तदाऽतिवलौ देवं पुनरेवोचतुर्हरिम् ।
आवां जहि न यत्रोर्वी पयसा च परिप्लुता ॥ ११. ३१ ॥

तथेत्युक्त्वा भगवता गदाशंखभृता नृप ।
कृत्वा चक्रेण वै छिन्ने जघने शिरसी तयोः ॥ ११. ३२ ॥

एवं देवी समुत्पन्ना ब्रह्मणा संस्तुता नृप ।
महाकाली महाराज सर्वयोगेश्वरेश्वरी ॥
महालक्ष्म्यास्तथोत्पत्तिं निशामय महीपते ॥ ११. ३३ ॥

11.30. அவர்களுடைய இவ்வார்த்தையைக் கேட்ட ஆதிபுருஷரான பகவான் 'இப்பொழுது நீங்களிருவரும் நிச்சயம் என்னால் கொல்லப்படவேண்டும் என்பதே வரம்' என்றார்.

11.31. அப்பொழுது பலம் மிகுந்த அவர்கள் தேவ தேவரான ஹரியிடம் மீண்டும் 'எங்கு பூமியானது பிரளய ஜலத்தால் மூடப்படாமலிருக்கிறதோ அங்கு வைத்து எங்களைக் கொல்லலாம்' என்றனர் (பிரளயஜலம் எங்கும் மூடியிருந்ததால்).

11.32. ''அங்ஙனமே ஆகுக !'' என்று சங்கசக்ர கதா தாரியான பகவான் அவர்களுடைய தலைகளைத் தமது துடை மறைவிலிருத்திக் கொண்டு சக்கரத்தால் சேதித்தார்.

11.33. அரசே ! மகாராஜரே ! பிரம்மாவால் துதிக்கப் பெற்றவளும் மகாகாளியும் ஸர்வயோகேச்வரேச்வரியுமான தேவி இங்ஙனம் தானாகவே தன்னைத் தோற்றுவித்தாள். பூபாலரே ! இனி அங்ஙனமே மகாலக்ஷ்மியின் உற்பத்தியை கேட்பீராக.

महिषीगर्भसंभूतो महाबलपराक्रमः।
देवान् सर्वान् पराजित्य महिषोऽभूज्जगत्प्रभुः ॥ १२. १ ॥

ततः पराजिताः सर्वे देवाः स्वर्गपरिच्युताः।
ब्रह्माणं च पुरस्कृत्य ते जग्मुर्लोकमुत्तमम् ॥ १२. ३ ॥

यत्रोत्तमौ देवदेवौ संस्थितौ शंकराच्युतौ।
वृत्तान्तं कथयामासुर्महिषस्य दुरात्मनः ॥ १२. ४ ॥

एवं श्रुत्वा स भगवान् देवानामार्तियुग्वचः।
चकार कोपं सुबहुं तथा शंकरपद्मजौ ॥ १२. ७ ॥

एवं कोपयुतस्याऽस्य हरेरास्यान्महीपते।
तेजः प्रादुरभूद्दिव्यं सहस्रार्कसमद्युति ॥ १२. ८ ॥

12.1. மஹிஷீ கர்ப்பத்தில் தோன்றியவனும் மகாபல பராக்கிரமம் படைத்தவனுமான மஹிஷாஸுரன் தேவர்களையெல்லாம் ஜயித்து உலகையாள்பவனுனான்.

12.3–4. அப்பொழுது தோல்வியுற்ற தேவர்களனைவரும் ஸ்வர்க்கத்திலிருந்து வெளியேறி பிரம்மாவை முன்னிட்டுக் கொண்டு தேவதேவர்களான சங்கரரும் அச்சுதரும் எங்குள்ளனரோ அந்த உத்தம லோகத்திற்குச் சென்றனர். துராத்மாவான மஹிஷாஸுரனுடைய விருத்தாந்தத்தை அங்கு முறையிட்டனர்.

12.7. தேவர்களுடைய துன்பம் நிறைந்த வார்த்தையைக் கேட்ட பகவான் மிகுந்த கோபத்தையடைந்தார். அவ்வாறே சங்கரரும் பிரம்மாவும் கோபமடைந்தனர்.

12.8. அரசே! இவ்வாறு கோபங்கொண்ட ஹரியினுடைய முகத்திலிருந்து ஆயிரம் சூரியர்களுக்கு நிகரான ஒரு தெய்வீக ஒளி வெளிப்போந்தது.

अथानुक्रमतस्तेजः सर्वेषां त्रिदिवौकसाम् ।
शरीरादुद्भवं प्राप हर्षयद्विबुधाधिपान् ।। १२. ९ ।।
सर्वेषां तेजसा देवी जाता महिषमर्दिनी ।
तां तुष्टुवुर्महादेवीं देवा महिषपीडिताः ।
नानास्तोत्रै-र्महेशानीं जगदुद्भवकारिणीम् ।। १२. २३ ।।
तेषां निशम्य देवेशी स्तोत्रम् विबुधपूजिता ।
महिषस्य वधार्थाय महानाद चकार ह ।। १२. २४ ।।
तेन नादेन महिषश्चकितोऽभूद्धरापते ।
आससाद जगद्धात्रीं सर्वसैन्यसमावृतः ।। १२. २५ ।।
ततः स युयुधे देव्या महिषाख्यो महासुरः ।
शस्त्रास्त्रैर्बहुधा क्षिप्तैः पूरयन्नम्बरान्तरम् ।। १२. २६ ।।

12.9. அதைத் தொடர்ந்து எல்லா தேவர்களுடைய சரீரங்களினின்றும் அவ்வாறே ஒளி கிளம்பிற்று, அது தேவ நாயகர்களை மகிழ்வித்தது.

12.23. எல்லோருடைய ஒளியாலும் மஹிஷமர்த்தினி தேவி தோன்றினள். மஹிஷாசுரனால் பீடிக்கப்பட்ட தேவர்கள் மகேசுவரியும் உலகின் உற்பத்திக்குக் காரணமாகியவளுமான மகாதேவியைப் பலவிதமான ஸ்தோத்திரங்களால் துதித்தனர்.

12. 24. தேவர்களால் பூஜிக்கப்பட்ட தேவி அவர்களுடைய ஸ்தோத்திரத்தைக் கேட்டு மஹிஷாசுர வதத்தின் பொருட்டு பெரிய ஒலியைக் கிளப்பினள்.

12.25. அரசே! அவ்வொலியால் மஹிஷாசுரன் பயமடைந்து எல்லா சேனைகளும் புடைசூழ உலக நாயகியிருக்குமிடம் வந்தான்.

12.26. மஹிஷன் என்ற அம்மகாசுரன் பலவிதமான சஸ்திரங்களையும் அஸ்திரங்களையும் எய்து ஆகாயத்தை நிரப்புபவனாய் தேவியுடன் போர் புரிந்தான்.

रूपान्तराणि सम्भेजे मायया दानवेश्वरः।
तानि तान्यस्य रूपाणि नाशयामास सा तदा ।। १२. ३२ ।।

ततोऽन्ते माहिषं रूपं बिभ्राण-ममरार्दनम्।
पाशेन बद्ध्वा सुदृढं छित्त्वा खड्गेन तच्छिरः ।। १२. ३३ ।।

पातयामास महिषं देव देव गणान्तकम्।
हाहाकृतं ततः शेषसैन्यं भग्नं दिशो दश ।।
तुष्टुवुर्देवदेवेशीं सर्वे देवाः प्रमोदिताः ।। १२. ३४ ।।

एवं लक्ष्मी समुत्पन्ना महिषासुरमर्दिनी।
राजन् शृणु सरस्वत्याः प्रादुर्भावो यथाऽभवत् ।। १२. ३५ ।।

12.32. அவ்வசுரராஜன் தனது மாயா சக்தியால் வெவ்வேறு ரூபங்களை எடுத்துக் கொண்டான். அவனுடைய அவ்வடிவங்களை தேவி நாசமாக்கினாள்.

12.33—34. முடிவில் மீண்டும் எருமை வடிவுகொண்ட அந்த தேவசத்துருவை தேவியானவள் பாசத்தால் இறுகப் பிணித்து, வாளால் அவன் தலையை வெட்டி வீழ்த்தினாள். தேவகணங்களுக்கு யமன் போன்றிருந்த அம்மஹிஷாசுரன் இறந்ததும் 'ஹா ஹா' என்ற இரைச்சலுடன் மீதியுள்ள சைனியம் சிதறிப் பத்துதிக்குகளிலும் பறந்தோடி விட்டது. எல்லா தேவர்களும் மகிழ்ச்சி பொங்க தேவநாயகியைத் துதித்தார்கள்.

12.35. மஹிஷாசுரமர்த்தினியான மஹாலக்ஷ்மி இவ்வாறு தோன்றினாள். அரசே! இனி மஹாஸரஸ்வதியின் தோற்றம் எங்ஙனம் ஏற்பட்டதென்பதைக் கேளும்.

एकदा शुम्भनामाऽऽसीद्दैत्यो मदबलोत्कटः ।
निशुम्भश्चापि तद्भ्राता मायाबलपराक्रमः ।। १२. ३६ ।।

तेन संपीडिता देवाः सर्वे भ्रष्टश्रियो नृप ।
हिमवन्तमथासाद्य देवीं तुष्टुवुरादरात् ।। १२. ३७ ।।

देवा ऊचुः —

देवेशि भक्तिसुलभे महाबलपराक्रमे ।
विष्णुशंकर ब्रह्मादि-स्वरूपेऽनन्तविक्रमे ।। १२. ३९ ।।

निशुम्भशुम्भ-संभूत-भयपाराम्बुवारिधे ।
उद्धरास्मान् प्रपन्नार्तिनाशिके शरणागतान् ।।१२. ४१ ।।

12.36. ஒரு காலத்தில் பலத்தால் கொழுத்த சும்பன் எனப் பெயர் பெற்ற ஒரு அசுரன் இருந்தான். நிசும்பன் என்ற அவனுடைய தம்பியும் மாயாசக்தியும் பலபராக்ரமும் உடையவனுயிருந்தான்.

12.37. அரசே! அவனுல் பீடிக்கப்பட்டுப் பெருமை யிழந்த தேவர்களனைவரும் இமயமலையையடைந்து ஆர்வத்துடன் தேவியைத் துதித்தார்கள்.

தேவர்கள் கூறியது—

12.39. தேவநாயகி! பக்தர்களுக்குக்கெளியவளே! மகாபலபராக்ரமம் பொருந்தியவளே! பிரம்ம விஷ்ணு சிவஸ்வரூபிணி! அளவற்ற ஆற்றல் படைத்தவளே!

12.41. சும்பநிசும்பர்களாலேற்பட்ட பயமாகிய கடலுக்கு அக்கரை போன்றவளே! பக்தர்களின் துன்பத்தைத் துடைப்பவளே! சரணடைந்த எங்களை கைதூக்கிவிடுவாயாக.

मुनिरुवाच —

प्रसन्ना गिरिजा प्राह ब्रूतस्तवनकारणम्।
एतस्मिन्नन्तरे तस्याः कोशरूपात्समुत्थिता ।। १२. ४४ ।।

कौशिकी सा जगत्पूज्या देवान् प्रीत्येदमब्रवीत्।
प्रसन्नाऽहं सुरश्रेष्ठाः स्तवेनोत्तमरूपिणी ।।
व्रियतां वर इत्युक्ते देवाः संवव्रिरे वरम् ।। १२. ४५ ।।

शुम्भनामाऽवरो भ्राता निशुम्भस्तस्य विश्रुतः।
त्रैलोक्यमोजसा क्रान्त दैत्येन बलशालिना ।। १२. ४६ ।।

तद्वधाश्चिन्त्यतां देवि दुरात्मा दानवेश्वरः।
बाधते सततं देवि तिरस्कृत्य निजौजसा ।। १२. ४७ ।।

முனிவர் கூறியது—

12.44–45. மகிழ்வடைந்த பார்வதி 'உங்கள் துதிக்குக் காரணத்தைக் கூறுங்கள்' என்றாள். அதற்குள் அவளுடைய கோசரூபத்திலிருந்து வெளிப்போந்தவளும் உலகனைத்தாலும் பூஜித்தற்குரியவளுமான கௌசிகீ தேவி தேவர்களை நோக்கிப் பிரீதியுடன் பின்வருமாறு கூறினாள்:

''தேவசிரேஷ்டர்களே! உங்கள் ஸ்தோத்திரத்தால் நான் மகிழ்வடைந்துள்ளேன். நீங்கள் வரம் கேட்கலாம்''. உத்தம ரூபிணியான தேவி இங்ஙனம் கூறியதும் தேவர்கள் வரம் கேட்டுக் கொண்டனர்.

12.46–47. சும்பன் எனும் பலசாலியான அசுரனால் அவனுடைய தம்பியான நிசும்பன் என்பவனுடன் கூடி மூவுலகும் பராக்கிரமத்தால் வியாபிக்கப்பட்டுள்ளது; அந்த அசுரவேந்தன் துராத்மா; தேவி! அவனுடைய வதத்திற்கு வழிகாண வேண்டும். தனது வலிமையால் எல்லோரையும் அவமதித்து எப்பொழுதும் துன்புறுத்துகிறான்.

श्रीदेव्युवाच —

देवशत्रुं पातयिष्ये निशुम्भं शुम्भमेव च ।
स्वस्थास्तिष्ठत भद्रं वः कण्टकं नाशयामि वः ।। १२. ४८ ।।

मुनिरुवाच—

चण्डमुण्डौ पश्यतः स्म भृत्यौ शुम्भनिशुम्भयोः ।
दृष्ट्वा तां चारुसर्वांगीं देवीं लोकविमोहिनीम् ।। १२. ५० ।।

कथयामासतू राज्ञे भृत्यौ तौ चण्डमुण्डकौ ।
अपूर्वा कामिनो दृष्टा चाऽऽवाभ्यां रिपुमर्दन ।। १२. ५१ ।।

तां समानय चार्वंगीं भुंक्ष्व सौख्यसमन्वितः ।
तादृशी नासुरी नारी गन्धर्वी वा न दानवी ।। १२. ५३ ।।

ஸ்ரீ தேவி கூறியது—

12.48. தேவசத்ருவான சும்பனையும் நிசும்பனையும் வீழ்த்துகிறேன். நீங்கள் ஸ்வஸ்தமாயிருங்கள். அல்பசத்துருவான அவனை முள்ளை நீக்குவது போல் ஒழிக்கிறேன். உங்களுக்கு மங்களமுண்டாகும்.

முனிவர் கூறியது—

12.50—53. சும்ப நிசும்பர்களின் பணியாட்களான சண்டமுண்டர்கள் அந்த தேவியைக் கண்ணுற்றனர். எல்லா அங்கங்களும் அழகியவளான அந்த உலகை மயக்கும் தேவியைக் கண்டு அவர்கள் தங்கள் அரசனிடம் சென்று பின்வருமாறு கூறினர். 'எங்களால் அபூர்வமான ஒரு கட்டழகி காணப்பட்டாள். சத்துருக்களை அழிப்பவரே! அவ்வழகியை நீங்கள் கொண்டு வந்து சுகமாக அனுபவிக்க வேண்டும். அப்படிப்பட்ட ஸ்திரீ அசுரர்களிலோ, கந்தர்வர்களிலோ, தானவர்களிலோ கிடையாது.'

एवं भृत्यवचः श्रुत्वा शुम्भः परबलार्दनः।
दूतं संप्रेषयामास सुग्रीवं नाम दानवम् ॥ १२. ५४ ॥

स दूतस्त्वरितं गत्वा देव्याः सविध-मादरात्।
वृत्तान्तं कथयामास देव्यै शुम्भस्य यद्वचः ॥ १२. ५५ ॥

सर्वेषां रत्नवस्तूनां भोक्ता मान्यो दिवौकसाम्।
तदुक्तं शृणु मे देवि रत्नभोक्ताऽहमव्ययः ॥ १२. ५६ ॥

त्वं चापि रत्नभूतासि भज मां चारुलोचने।
सर्वेषु यानि रत्नानि देवासुरनरेषु च॥
तानि मय्येव सुभगे भज मां कामजै रसैः ॥ १२. ५८ ॥

12.54. எதிரிகளையடக்கும் சும்பன் தனது வேலையாள் கூறிய இவ்வார்த்தையைக் கேட்டு ஸுக்ரீவன் எனப் பெயர் பெற்ற தானவனைத் தூதாக அனுப்பினன்.

12.55. அந்த தூதன் விரைவாக தேவியின் சமீபம் சென்று பரிவுடன் சும்பன் கூறிய வார்த்தையையும் அவனுடைய விருத்தாந்தத்தையும் தேவியிடம் தெரிவித்தான்.

12.56. வஸ்துக்களில் சிறந்தவற்றையெல்லாம் அனுபவிப்பவர் எங்கள் அரசர். தேவர்களாலும் போற்றப்படுபவர். தேவி! அவர் கூறியதை என்னிடம் கேளுங்கள்: 'நான் ரத்னபோக்தா; அழிவற்றவன்.

12.58. 'நீயோ ஒரு ரத்னமாய் விளங்குகிருய். கண்ணழகியே, என்னை வந்தடைவாயாக. தேவர்களிடமும் அசுரர்களிடமும் மனிதர்களிடமும் உள்ள ரத்னங்கள் எவையோ அவையெல்லாம் என்னிடமுள்ளன. ஸௌபாக்கியம் படைத்தவளே! காமத்தில் பிறந்த ரஸங்களுடன் கூடியவளாய் என்னை வந்தடைவாயாக.'

देव्युवाच—

सत्यं वदसि हे दूत दैत्यराजप्रियंकरम् ।
प्रतिज्ञा या मया पूर्वं कृता साऽप्यनृता कथम् ।। १२. ५९ ।।

भवेतां शृणु मे दूत या प्रतिज्ञा मया कृता।
यो मे दर्पं विधुनुते यो मे बलमपोहति ।। १२. ६० ।।

यो मे प्रतिवलो भूयात्स एव मम भोगभाक् ।
तत एनां प्रतिज्ञां मे सत्यां कृत्वाऽसुरेश्वरः ।
गृह्णातु पाणिं तरसा तस्याशक्यं किमत्र हि ।। १२. ६१ ।।

मुनिरुवाच—

एवं वाक्यं महादेव्याः समाकर्ण्य स दानवः ।
कथयामास शुम्भाय देव्या वृत्तान्त-मादितः ।। १२. ६२ ।।

தேவி கூறியது—

12.59. தூதனே! நீ கூறுவது உண்மை. அசுர வேந்தனுக்குப் பிரியத்தைச் செய்வது. ஆனால் என்னால் முன்பே ஒரு பிரதிக்ஞை செய்யப்பட்டுள்ளது. அது எப்படி பொய்யாகலாம்?

12.60–61. தூதனே! என்னால் செய்யப்பட்ட பிரதிக்ஞை எது வென்று கூறுகிறேன், கேள். எவர் என்னுடைய கர்வத்தை அடக்குபவரோ, எவர் என்னுடைய பலத்தைப் போக்குபவரோ, எவர் எனக்கு நிகரான பலம் படைத்தவரோ அவரே என்னை அனுபவிக்கக்கூடியவர். ஆகையால் இந்த என் பிரதிக்ஞையை உண்மையாக்கி விட்டு அசுரவேந்தர் என்னை விரைவில் கைப்பிடிக்கட்டும். அவருக்கு முடியாதது இங்கு என்ன இருக்கிறது?

முனிவர் கூறியது

12.62. மகாதேவியின் இவ்வாக்கியத்தைக் கேட்டு, அந்த தானவன் சும்பனிடம் ஆதியிலிருந்து தேவியின் விருத்தாந்தத்தைக் கூறினான்.

तदाप्रियं दूतवाक्यं शुम्भः श्रुत्वा महाबलः।
कोपमाहारयामास महान्तं दनुजाधिपः ॥ १२. ६५ ॥

ततो धूम्राक्षनामानं दैत्यं दैत्यपतिः प्रभुः।
आदिदेश शृणु वचो धूम्राक्ष मम चादृतः ॥ १२. ६६ ॥

तां दुष्टां केशपाशेषु धृत्वाऽप्यानीयतां मम।
समीप-मविलम्बेन शीघ्रं गच्छस्व मे पुरः ॥ १२. ६७ ॥

इत्यादेशं समासाद्य दैत्येशो धूम्रलोचनः।
तुहिनाचलमासाद्य देव्याः सविधमेव सः ॥ १२. ६८ ॥

उच्चैर्देवीं जगादाशु भज दैत्यपतिं शुभे।
नो चेत् केशान् गृहीत्वा त्वां नेष्ये दैत्यपतिं प्रति
॥ १२. ७० ॥

12.65. மகாபலசாலியான அசுர வேந்தன் சும்பன் பிரியமில்லாத தூதவாக்கியத்தைக் கேட்டுக் கடுங்கோபங் கொண்டான்.

12.66–67. அசுரர்களின் பிரபுவான அவன் அப்பொழுது தூம்ராக்ஷன் எனும் அசுரனிடம் பின்வருமாறு கட்டளையிட்டான். ''தூம்ராக்ஷ! நான் சொல்லும் வார்த்தையை கவனமாகக் கேள். அந்த துஷ்ட ஸ்திரீயைக் கூந்தலைப் பிடித்திழுத்துத் தாமதமின்றி சீக்கிரம் என் முன் கொண்டுவா. போ.''

12.69–70. இந்தக் கட்டளையை ஏற்று அவ்வசுரவீரன் தூம்ராக்ஷன் இமயமலைக்குச் சென்று தேவியின் முன்னிலையில் உரத்த குரலில் பின்வருமாறு கூறினான்; 'மங்களமானவளே! சீக்கிரமே அசுரவேந்தனை அடைவாயாக. இல்லையேல் கூந்தலைப்பிடித்து உன்னை அவர் முன் இழுத்துச் செல்வேன்.'

भस्मसात्तं चकाराऽऽशु हुंकारेण महेश्वरी ।
तद्वृत्तान्तं समाश्रुत्य स शुम्भो दैत्यराड्विभुः ।। १२. ७४ ।।
चण्डं मुण्डं रक्तबीजं क्रमतः प्रैषयद्विभुः ।
देवीं ग्रहीतु-मारब्धयत्नास्तेऽप्यमवन्बलात् ।। १२. ७६ ।।
तानापतत एवाऽसौ जगद्धात्री मदोत्कटा ।
शूलं गृहीत्वा वेगेन पातयामास भूतले ।। १२. ७७ ।।
ससैन्यान् निहताञ्छ्रुत्वा दैत्यांस्त्रीन् दानवेश्वरौ ।
शुम्भश्चैव निशुम्भश्च समाजग्मतुरोजसा ।। १२. ७८ ।।
निशुम्भश्चैव शुम्भश्च कृत्वा युद्धमहोत्कटम् ।
देव्याश्च वशगौ जातौ निहतौ च तयाऽसुरौ ।। १२. ७९ ।।
इति दैत्यवरं शुम्भं घातयित्वा जगन्मयी ।
विबुधैः संस्तुता तद्वत्सक्षाद्वागीश्वरी परा ।। १२. ८० ।।

12.74–76. மகேசுவரி ஹுங்காரத்தால் அவனைச் சாம்பலாக்கினாள். அந்தச் செய்தியைக் கேட்ட அசுரவேந்தன் சும்பன் ஒருவர்பின் ஒருவராகச் சண்டன் முண்டன் ரக்தபீஜன் ஆகியோரை அனுப்பிவைத்தான். அவர்கள் பலாத்காரமாக தேவியைப் பிடிக்க முயன்றனர்.

12.77. அவர்கள் பாயும் போது பலம் மிகுந்த ஜகதம்பிகை சூலத்தால் வேகமாய் எய்தி அவர்களை பூமியில் வீழ்த்தினாள்.

12.78. அந்த மூன்று அசுரர்களும் சைனியங்களுடன் அழிக்கப்பட்டதைக் கேட்டு அசுர வேந்தர்களாகிய சும்ப நிசும்பர்கள் வீராவேசத்துடன் போருக்கு வந்தனர்.

12.79. நிசும்பனும் சும்பனும் கடும் போர்புரிந்து தேவியின் வசமாகி அவளால் கொல்லப்பட்டனர்.

12.80. இங்ஙனம் அசுரர்தலைவனான சும்பனைக் கொன்றபின் ஜகதம்பிகையான வாகீச்வரீ தேவர்களால் துதிக்கப்பட்டாள்.

एवं ते वर्णितो राजन् प्रादुर्भावोऽतिरम्यकः ।
काल्याश्चैव महालक्ष्म्याः सरस्वत्याः क्रमेण च ॥ १२. ८१ ॥
परापरेश्वरी देवी जगत्सर्गं करोति च ।
पालनं चैव संहारं सैव देवी दधाति हि ॥ १२. ८२ ॥
तां समाश्रय देवेशीं जगन्मोहनिवारिणीम् ।
महामायां पूज्यतमां सा कार्यं ते विधास्यति ॥ १२. ८३ ॥

श्रीनारायण उवाच —

इति राजा वचः श्रुत्वा मुनेः परमशोभनम् ।
देवीं जगाम शरणं सर्वकामफलप्रदाम् ॥ १२. ८४ ॥
निराहारो यतात्मा च तन्मनाश्च समाहितः ।
देवीमूर्ति मृण्मयीं च पूजयामास भक्तितः ॥ १२. ८५ ॥

12.81. அரசே! இங்ஙனம் காளீ, மஹாலக்ஷ்மீ, ஸரஸ்வதி ஆகியோரின் மனதிற்கினிய வரலாறு உமக்கு வர்ணிக்கப்பட்டது.

12.82. பரத்திற்கும் அபரத்திற்கும் ஈசுவரியான தேவி உலகின் சிருஷ்டியைச் செய்கிறுள். அந்த தேவியே பரிபாலனத்தையும் ஸம்ஹாரத்தையும் வகிக்கிருள்.

12.83. பூஜிக்கத்தக்கவர்களிற் சிறந்தவளும் மகாமாயையும் உலகத்தோரின் மதிமயக்கத்தை நீக்குபவளுமான அந்த தேவநாயகியை வழிபடுவீராக. அவள் உமது காரியத்தைக் கூட்டுவிப்பாள்.

ஸ்ரீ நாராயணரிஷி கூறியது—

12.84. முனிவரின் பரமமங்களமான இவ்வார்த்தையைக்கேட்டு அரசன் எல்லா ஆசைகளின் பயனையுமளிக்கும் தேவியைச் சரணடைந்தான்.

12.85. ஆஹாரமில்லாதவனுயும் இந்திரியங்களையடக்கியவனுயும் ஒன்றுபட்ட மனத்துடன் அவளை தியானித்து மண்ணுல் செய்த அவளுடைய மூர்த்தியை பக்தியுடன் பூஜித்தான்.

पूजान्ते बलिं तस्यै निजगात्रासृजं ददत्।
तदा प्रसन्ना देवेशी जगद्योनिः कृपावती ॥ १२. ८६ ॥

प्रादुर्बभूव पुरतो वरं ब्रूहीति भाषिणी।
स राजा निजमोहस्य नाशनं ज्ञानमुत्तमम्।
राज्यं निष्कण्टकं चैव याचतिस्म महेश्वरीम् ॥ १२. ८७ ॥

श्रीदेव्युवाच —

राजन्निष्कण्टकं राज्यं ज्ञानं वै मोहनाशनम्।
भविष्यति मया दत्तमस्मिन्नेव भवे तव ॥ १२. ८८ ॥

अन्यश्च श्रृणु भूपाल जन्मान्तरविचेष्टितम्।
भानोर्जन्म समासाद्य सावर्णिर्भविता भवान् ॥ १२. ८९ ॥

12.86. பூஜை முடிவில் தன்னுடலிலிருந்து இரத்தத்தால் அவளுக்கு பலிதானம் செய்தான். அப்பொழுது உலகின் மூலகாரணமானவளும் கிருபையுடன் கூடியவளுமான தேவநாயகி பிரஸன்னமானாள்.

12.87. 'வரம் கேட்டுக் கொள்' என்று கூறித் தன் முன் காட்சியளித்த மஹேச்வரியிடம் அந்த அரசன் தனது மதிமயக்கத்தை நாசம் செய்யும் உத்தமமான ஞானத்தையும் சத்துரு நீங்கிய ராஜ்யத்தையும் கேட்டுக் கொண்டான்.

ஸ்ரீ தேவி கூறியது—.

12.88. அரசே! உபத்ரவமற்ற ராஜ்யமும் மோஹத்தைப் போக்கும் ஞானமும் இப்பிறவியில் உனக்கு என்னால் அளிக்கப்பட்டன.

12.89. அரசே! மேலும் ஜன்மாந்தரத்தில் ஏற்படக் கூடிய மற்றொன்றையும் கூறுகிறேன், கேள். சூரியனிடம் பிறவியடைந்து ஸாவர்ணி எனும் பெயருடன் விளங்கப் போகிறாய்.

तत्र मन्वन्तरस्यापि पतित्वं बहुविक्रमम् ।
सन्तति बहुलां चापि प्राप्स्यते मद्वराद्भवान् ।। १२. ९० ।।

एवं दत्त्वा वरं देवी जगामाऽदर्शनं तदा ।
सोऽपि देव्याः प्रसादेन जातो मन्वन्तराधिपः ।। १२. ९१ ।।

एवं ते वर्णितं साधो सावर्णेर्जन्म कर्म च ।
एतत्पठंस्तथा श्रृण्वन् देव्यनुग्रहमाप्नुयात् ।। १२. ९२ ।।

अथाऽतः श्रूयतां शेषमनूनां चित्रमुद्भवम् ।
यस्य स्मरणमात्रेण देवीभक्तिः प्रजायते ।। १३. १ ।।

12.90. அப்பிறவியில் மன்வந்தராதிபதியாய் மிகுந்த விக்கிரமத்துடன் விளங்கி என்னுடைய வரத்தால் ஸந்ததியின் பெருக்கத்தையும் அடையப் போகிறுய்.

12.91. இவ்வாறு தேவியானவள் வரமளித்து விட்டு மறைந்து விட்டாள். அவ்வரசன் தேவியின் பிரஸாதத்தால் மன்வந்தராதிபனுனன்.

12.92. ஸாதுவே! இங்ஙனம் உனக்கு ஸாவர்ணியின் ஜன்மமும் கர்மமும் வர்ணிக்கப்பட்டது. இதைப்படித்தாலும் கேட்டாலும் ஒருவன் தேவியின் அனுக்கிரகத்தைப் பெறுவான்.

13.1. இனி மற்ற மனுக்களின் அழகான வரலாற்றை கேட்பாயாக. அதை நினைத்த மாத்திரத்தில் தேவியிடம் பக்தி ஏற்படும்.

आसन्वैवस्वतमनोः पुत्राः षड् विमलोद्भवाः।
करूषश्च पृषध्रश्च नाभागो दिष्ट एव च ।। १३. २ ।।

शर्यातिश्च त्रिशंकुश्च सर्व एव महाबलाः।
बभूवुर्मनुपुत्रास्ते देवीपादैकचिन्तनाः ।। १३. ७ ।।

एवं द्वादशवर्षान्ते तपसा जगदीश्वरी।
प्रादुर्बभूव देवेशी सहस्रार्कसमद्युतिः ।। १३. ९ ।।

तां दृष्ट्वा विमलात्मानो राजपुत्राः षडेव ते।
तुष्टुवु-र्भक्तिनम्रान्तःकरणा भावसंयुताः ।। १३. १० ।।

श्रीदेव्युवाच —

भवन्तः सर्व एवैते मन्वन्तरपतीश्वराः।
सन्तत्या दीर्घया भोगैरनेकैरपि संगमः ।। १३. २० ।।

13.2–7. வைவஸ்வத மனுவிற்குப் பாவனமாய்ப் பிறந்த புத்திரர்கள் ஆறுபேரிருந்தனர். கரூஷன், ப்ருஷத்ரன், நாபாகன், திஷ்டன், சர்யாதி, த்ரிசங்கு என்ற அம்மனு புத்திரர்கள் மகாபலசாலிகளாகவும் தேவியின் திருவடிகளில் ஆழ்ந்த சிந்தனை உடையவர்களாகவுமிருந்தனர்.

13.9. இவ்வாறு அவர்கள் பன்னிரண்டு வருஷம் தவம் செய்தபின் ஜகதீசுவரி ஆயிரம் சூரியர்களுக்கொப்பான பிரகாசத்துடன் அவர்கள் முன் தோன்றினாள்.

13.10. அவளை தரிசித்து மாசற்ற மனம்படைத்த அரசகுமாரர்கள் அறுவரும் பக்தியால் குவிந்த அந்தக் கரணத்துடனும் உள்ள நெகிழ்ச்சியுடனும் துதித்தார்கள்.

தேவி கூறியது—

13.20. நீங்கள் எல்லோருமே மன்வந்தராதிபர்களாய் விளங்கப் போகிறீர்கள். நீண்ட ஸந்ததியுடன் பலவிதமான போகங்களுடன் கூடி வாழ்வீர்கள்.

अखण्डितबलैश्वर्यं यशस्तेजो विभूतयः।
भवितारो मत्प्रसादाद्राजपुत्राः क्रमेण तु ॥ १३. २१ ॥

श्रीनारायण उवाच —

एवं तेभ्यो वरान् दत्वा भ्रामरी जगदम्बिका।
अन्तर्धानं जगामाऽऽशु भक्त्या तैः संस्तुता सती ॥ १३. २२ ॥

ते राजपुत्राः सर्वेऽपि तस्मिन् जन्मन्यनुत्तमम्।
राज्यं महीगतान् भोगान् बुभुजुश्च महौजसः ॥ १३. २३ ॥

सन्ततिं चाखण्डितां ते समुत्पाद्य महीतले।
वंशं संस्थाप्य सर्वेऽपि मनूनां पतयोऽभवन् ॥ १३. २४ ॥

13.21. அரசகுமாரர்களே! குறைவுபடாத பலம், ஐசுவரியம், புகழ், பராக்கிரமம் முதலிய பெருமைகள் உங்களுக்கு என்னருளால் படிப்படியாய் ஏற்படும்.

ஸ்ரீ நாராயணரிஷி கூறியது—

13.22. அவர்களால் பக்தியுடன் துதிக்கப்பெற்ற ஜகதம்பிகையான பிராமரீ இவ்வாறு அவர்களுக்கு வரமளித்துவிட்டு அங்கேயே விரைவில் மறைந்தாள்.

13.23. அவ்வரசகுமாரர்கள் அனைவரும் மிகுந்த வீரியமுடையவர்களாய் ஒப்புயர்வற்ற அப்பிறவியில் பூவுலகின் அரசாட்சியையும் போகங்களையும் அனுபவித்தனர்.

13.24. அவர்கள் அவ்வாறே அகண்டமான ஸந்ததியை பூவுலகில் தோற்றுவித்து வம்சத்தை நிலைநிறுத்தி எல்லோருமே (எதிர்கால) மன்வந்தராதிபர்களாய் நியமிக்கப் பட்டவர்களாயினர்.

प्रथमो दक्षसावर्णिर्नवमो मनुरीरितः।
द्वितीयो मेरुसावर्णिर्दशमो मनुरेव च ॥ १३. २६ ॥
तृतीयो मनुराख्यातः सूर्यसावर्णिनामकः।
चतुर्थश्चन्द्रसावर्णिर्द्वादशो मनुराड्विभुः ॥ १३. २८ ॥
पंचमो रुद्रसावर्णिस्त्रयोदश मनुः स्मृतः।
षष्ठश्च विष्णुसावर्णिश्चतुर्दश मनुः कृती ॥ १३. ३० ॥
देव्याराधनतः पूज्याः वन्द्या लोकेषु नित्यशः।
महाप्रतापिनः सर्वे भ्रामर्यास्तु प्रसादतः ॥ १३. ३२ ॥

नारद उवाच —

केयं सा भ्रामरी देवी कथं जाता किमात्मिका।
न तृप्ति-मधिगच्छामि पिबन् देवीकथामृतम् ॥ १३. ३३ ॥

13.26. முதல்வர் தக்ஷஸாவர்ணியென்ற ஒன்பதாவது மனுவாகக் கூறப்படுகிறார். இரண்டாமவர் மேருஸாவர்ணி என்ற பத்தாவது மனு.

13.28. மூன்றாமவர் (பதினோராவது மனு) ஸூர்ய ஸாவர்ணி எனக் கூறப்படுகிறார். நான்காமவர் சந்திர ஸாவர்ணி எனப் பிரசித்திபெற்ற பன்னிரண்டாவது மனு.

13.30. ஐந்தாமவர் பதின்மூன்றாவதான ருத்ரஸா வர்ணி. ஆறாமவர் பதினான்காவதான விஷ்ணு ஸாவர்ணி என்ற கிருதகிருத்யர்.

13.32. பிராமரீ தேவியின் ஆராதனையாலும் அவ ளுடைய அருளாலும் அவர்களெல்லோரும் எக்காலத்தும் எல்லா உலகங்களிலும் பூஜைக்கும் வந்தனத்திற்கும் உரியவர் களாகவும் பிரதாபம் மிக்கவர்களாகவும் விளங்குகின்றனர்.

நாரதர் கூறியது—

13.33. அந்த பிராமரீதேவி யார்? எப்படி உற் பவித்தாள்? என்ன வடிவுடையவள்? தேவியின் கதை யாகிற அமிருதத்தைப் பருகும் நான் போதுமென்ற திருப் தியை யடையவில்லை.

श्रीनारायण उवाच —

पूर्वं दैत्यो महानासीदरुणाख्यो महाबलः ।
स देवाञ्जेतुकामश्च चकार परमं तपः ॥ १३. ३५ ॥

गायत्रीसहितं देवं चतुर्वेदसमन्वितम् ।
दृष्ट्वोत्थाय ननामाऽथ स्तुत्वा च विविधैः स्तवैः ॥ १३. ४९ ॥

वरं वव्रे स्वबुद्धिस्थं माभवेन्मृत्युरित्यपि ।
श्रुत्वाऽरुणवचो ब्रह्मा बोधयामास सादरम् ॥ १३. ५० ॥

ब्रह्मविष्णुमहेशाद्या मृत्युना कवलीकृताः ।
तदाऽन्येषां तु का वार्ता मरणे दानवोत्तम ॥ १३. ५१ ॥

वरं योग्यं ततो ब्रूहि दातुं यः शक्यते मया ।
इति ब्रह्मवचः श्रुत्वा पुनः प्रोवाच सादरम् ॥ १३. ५२ ॥

ஸ்ரீநாராயணரிஷி கூறியது—

13.35. ஆதிகாலத்தில் மகாபலசாலியான அருணன் என்ற ஒரு அசுரன் இருந்தான். அவன் தேவர்களை வெல்ல விரும்பிக் கடுந்தவம் செய்தான்.

13.49–50. நாலு வேதங்களுடனும் காயத்ரியுடனும் தரிசன மளித்த தேவனைக் கண்டு நமஸ்கரித்துப் பல விதமான துதிகளால் போற்றித் தன் மனதிலிருந்த வரத்தைக் கேட்டான், அதாவது தனக்குச் சாவு ஏற்படக் கூடாதென்று. அந்த அருணன் சொல்லைக் கேட்ட பிரம்மா அவனுக்கு ஆதரவுடன் பின் வருமாறு போதித்தார்.

13.51. 'அசுரசிரேஷ்டனே! பிரம்மா, விஷ்ணு, மகேசுவரன் முதலியோரும் மிருத்யுவால் விழுங்கப்படுகின்றனர். அப்பொழுது மரண விஷயத்தில் பிறரைப்பற்றி என்ன சொல்லக்கூடும்.

13.52. 'ஆகையால் என்னால் கொடுக்கக்கூடிய பொருத்தமான வரனைக் கேள்' என்ற பிரம்மாவின் வாக்கியத்தைக் கேட்ட அவன் நம்பிக்கையுடன் மீண்டும் பின் வருமாறு கூறினான்.

न युद्धेन च शस्त्रास्त्रान्न पुंभ्यो नापि योषितः।
द्विपाद्भ्यो वा चतुष्पाद्भ्यो नोभयाकारतस्तथा ॥ १३. ५३ ॥

भवेन्मे मृत्युरित्येवं देव देहि वरं प्रभो।
बलं च विपुलं देहि येन देवजयो भवेत् ॥ १३. ५४ ॥

इति तस्य वचः श्रुत्वा तथाऽस्त्विति वचोऽब्रवीत्।
दत्त्वा वरं जगामाशु पद्मजः स्वं निकेतनम् ॥ १३. ५५ ॥

अरुणाख्यो दैत्यराजो जगामाऽऽशु त्रिविष्टिपम्।
सूर्येन्दुयमवह्नीना-मधिकारान् पृथक् पृथक् ॥ १३. ६१ ॥

स्वयं चकार तपसा नानारूपधरो मुने।
स्वस्वस्थानच्युताः सर्वे जग्मुः कैलासमण्डलम् ॥ १३. ६२ ॥

13.53. 'போரிலோ அஸ்திரசஸ்திரங்களாலோ ஆணாலோ பெண்ணாலோ இருகால் பிராணிகளாலோ நாற்கால் பிராணிகளாலோ ஈருருவும் கூடியவற்ருலோ;

13.54. 'பிரபுவே! தேவனே! எனக்குச் சாவு நிகழாமலிருக்க வரம் தரல் வேண்டும். எதனுல் எனக்கு தேவர்களின் ஜயம் ஏற்படுமோ அப்படிப்பட்ட மிகுதியான பலத்தையும் கொடுத்தருள வேண்டும்.'

13.55. என்ற அவனுடைய இவ்வார்த்தையைக் கேட்டு 'அப்படியே இருக்கட்டும்' என்று கூறி வரமளித்துவிட்டு பிரம்மா தமதிருப்பிடமேகினுர்.

13.61–62. முனிவரே! அருணன் என்ற அசுரவேந்தன் பிறகு சுவர்க்க லோகத்திற்கு விரைந்து சென்ருன். சூரியன், சந்திரன், யமன், அக்னி ஆகிய தேவர்களின் தனித் தனி அதிகாரங்களைத் தானே கைக்கொண்டு தவ வலிமையால் பல வடிவங்களை தரித்து தானே செலுத்தலானுன். அவரவர்கள் பதவியினின்று நழுவிய எல்லோரும் கைலாஸ மண்டலம் சென்றனர்.

एतस्मिन् समये तत्र वागभूदशरीरिणी।
भजध्वं भुवनेशानीं सा वः कार्यं विधास्यति ॥१३. ६६॥

श्रुत्वा दैवीं तथा वाणीं मन्त्रयामासुराद्दताः।
तत्र गत्वा तपश्चर्यां चक्रुः सर्वे सुनिष्ठिताः॥
मायाबीजजपासक्ता देवीमखपरायणाः॥१३. ७२॥

प्रादुरासीज्जगन्माता जगन्मंगलकारिणी।
भ्रमरीभिर्विचित्राभिरसंख्याभिः समावृता ॥१३. ८२॥

देवा ऊचुः —

गायत्रि वरदे देवि सावित्रि च सरस्वति।
नमः स्वाहे स्वधे मातर्दक्षिणे ते नमो नमः॥१३. ९७॥

13.66. அப்பொழுது 'நீங்கள் புவனேசுவரியை பஜனை செய்யுங்கள். அவள் உங்கள் காரியத்தைக் கூட்டுவிப்பாள்' என்ற அசரீரி வாக்கு அவர்களால் கேட்கப்பட்டது.

13.72. அந்த தெய்விக வாக்கைக் கேட்டு அதில் நம்பிக்கை கொண்டு எல்லோரும் அங்கு சென்று நன்ருக நிஷ்டையிலிருந்து கொண்டு மாயாபீஜத்தை (ஹ்ரீம்) ஜபம் செய்வதில் பற்றுடையவர்களாய் தேவி பூஜையில் ஊக்கம் மிக்கவர்களாய்த் தவம் செய்தனர்.

13.82. உலகிற்கு மங்களத்தைச் செய்யும் ஜகன்மாதா அவர்கள் முன் விசித்திரமானவையும் எண்ணிறந்தவையு மான பிரமரங்களால் (வண்டுகளால்) சூழப் பெற்றவளாய்க் காட்சியளித்தாள்.

தேவர்கள் கூறியது—

13.97. காயத்ரீ தேவியே! வரமளிப்பவளே! ஸாவித் ரியே! ஸரஸ்வதியே! ஸ்வாஹா, ஸ்வதா, தக்ஷிணை என்ற நாமங்களில் விளங்குபவளே! நமஸ்காரம். தாயே! உனக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரம்.

नेति नेतीति वाक्यैर्या बोध्यते सकलागमैः ।
सर्वप्रत्यक्स्वरूपां तां भजामः परदेवताम् ॥ १३. ९८ ॥

भ्रमरैर्वेष्टिता यस्माद् भ्रामरी या ततः स्मृता ।
तस्यै देव्यै नमो नित्यं नित्यमेव नमो नमः ॥ १३. ९९ ॥

श्रीनारायण उवाच —

श्रुत्वा देवमुखाद्वाणीं महाभगवती तदा ।
प्रेरयामास हस्तस्थान् भ्रमरान् भ्रमरी तदा ॥ १३. १०८ ॥

ते सर्वे दैत्यवक्षांसि दारयामासुरुद्गताः ।
नरं मधुहरं यद्वन्मक्षिकाः कोपसंयुताः ॥ १३. ११२ ॥

13.98. எல்லா ஆகமங்களாலும் எவள் 'நேதி, நேதி' எனும் வாக்கியங்களால் போதிக்கப்படுகிருளோ அனைத்துள்ளும் பிரத்யகாத்ம வடிவில் விளங்குபவள் எவளோ அந்தப் பரதேவதையைப் போற்றுகிறோம்.

13.99. பிரமரங்களால் சூழப் பெற்றதால் பிராமரி என எவள் கூறப்படுகிருளோ அந்த தேவிக்கு என்றும் நமஸ்காரம். என்றும் அவளுக்கே மீண்டும் மீண்டும் நமஸ்காரம்.

ஸ்ரீநாராயணரிஷி கூறியது—

13.108. தேவர்கள் கூறிய வார்த்தையைக் கேட்ட மஹாபகவதி ப்ரமரீ தேவியானவள் தன் கையிலிருந்த வண்டுகளை ஏவி விடுத்தாள்.

13.112. அவையனைத்தும் கிளம்பிப் போய்க் கோபமூட்டப் பெற்ற தேனீக்கள் தேனையபகரிக்கும் மனிதனைக் கொட்டுவதுபோல் கொட்டி அசுரர்களுடைய மார்பைக் கிழித்தன.

उपायो न च शस्त्राणां तथाऽस्त्राणां तदाऽभवत्।
न युद्धं न च सम्भाषा केवलं मरणं खलु ॥ १३. ११३ ॥

यस्मिन् यस्मिन् स्थले ये ये स्थिता दैत्या यथा यथा।
तत्रैव च तथा सर्वे मरणं प्रापुरुत्स्मयाः ॥ १३. ११४ ॥

क्षणमात्रेण ते सर्वे विनष्टा दैत्यपुंगवाः।
कृत्वेत्थं भ्रमराः कार्यं देवीनिकटमाययुः ॥ १३. ११५ ॥

ततो देवगणाः सर्वे ब्रह्मविष्णुपुरोगमाः।
निमग्ना हर्षजलधौ पूजयामासुरम्बिकाम् ॥ १३. ११६ ॥

ततस्तुष्टा महादेवी वरान् दत्त्वा पृथक् पृथक्।
स्वस्मिंश्च विपुलां भक्तिं प्रार्थिता तैर्ददौ च ताम् ॥ १३.१२३ ॥

13.113. சஸ்திரங்களுக்கோ அஸ்திரங்களுக்கோ அப்பொழுது உபயோகம் ஏது மில்லாமற் போயிற்று. போருமில்லை, பேச்சுமில்லை. மரணம் ஒன்றுதான் நிகழ்ந்தது.

13.114. எந்தெந்த இடங்களில் எந்தெந்த அசுரர்கள் எப்படி எப்படி நின்றார்களோ அங்கங்கேயே அவர்களனைவரும் பிரமித்துப் போய் மரணமடைந்தனர்.

13.115. அசுரசிரேஷ்டர்களனைவரும் ஒரு கணப்போழ்தில் அழிந்து போயினர். இப்படிக் காரியத்தை முடித்துவிட்டு அவ்வண்டுகள் தேவியிடம் திரும்பிவந்தன.

13.116. பிறகு தேவகணங்களெல்லாம் பிரம்மாவையும் விஷ்ணுவையும் முன்னிட்டுக் கொண்டு ஆனந்தக் கடலில் மூழ்கியவர்களாய் அம்பிகையைப் பூஜித்தனர்.

13.123. தனித்தனியே அவர்களால் துதிக்கப் பெற்ற மகாதேவி அவர்களுக்கு வரங்களை யளித்து மேலும் சிறப்பான பக்தியைத் தன்னிடம் பிரார்தித்த அவர்களுக்கு அதையுமளித்தாள்.

पश्यतामेव देवाना-मन्तर्धानं गता ततः।
इति ते सर्वमाख्यातं भ्रामर्याश्चरित महत् ॥ १३. १२४ ॥

एवं मनूनां सर्वेषां चरितं पापनाशनम्।
यश्चैतत्पठते नित्यं शृणुयाद्योऽनिशं नरः।
सर्वपापविनिर्मुक्तो देवीसायुज्यमाप्नुयात् ॥ १३. १२७ ॥

॥ देवीमाहात्म्यं संपूर्णम् ॥

॥ इति श्रीदेवीभागवते दशमस्कन्धे त्रयोदशोऽध्यायः ॥

॥ दशमस्कन्धः समाप्तः ॥

13.124. பிறகு தேவர்கள் பார்த்துக் கொண்டிருக்கும் போதே மறைந்து விட்டாள். இங்ஙனம் பிராமரியின் மகத்தான சரித்திரம் முழுதும் உனக்குக் கூறப்பட்டது.

13.127. அவ்வாறே பாவத்தைப் போக்கும் மனுக்கள் அனைவருடைய சரித்திரமும் கூறப்பட்டது. இதை எந்த மனிதன் இடைவிடாது நாள்தோறும் படிக்கிறானோ, கேட்கிறானோ அவன் எல்லாப் பாவங்களினின்றும் விடுபட்டு தேவியின் ஸாயுஜ்யப் பதவியை அடைவான்.

தேவீமாஹாத்மியம் ஸம்பூர்ணம்.

இங்ஙனம் ஸ்ரீதேவீபாகவதத்தில் பத்தாவது
ஸ்கந்தத்தில் பதின்மூன்றாவது அத்தியாயம் முற்றும்.

பத்தாவது ஸ்கந்தம் முற்றும்.

பதினோராவது ஸ்கந்தம்

॥ एकादशस्कन्धः ॥

॥ प्रातरनुष्ठानक्रमः ॥ ४६ ॥

नारद उवाच —

भगवन् भूतभव्येश नारायण सनातन।
आख्यातं परमाश्चर्यं देवीचारित्रमुत्तमम् ॥ १. १ ॥

प्रादुर्भावः परो मातुः कार्यार्थमसुरद्रुहाम्।
अधिकाराप्तिरुक्ताऽत्र देवीपूर्णकृपावशात् ॥ १. २ ॥

अधुना श्रोतुमिच्छामि येन प्रीणाति सर्वदा।
स्वभक्तान् परिपुष्णाति तमाचारं वद प्रभो ॥ १. ३ ॥

பதினொருவது ஸ்கந்தம்.

46. காலை அனுஷ்டானக்கிரமம்.

நாரதர் கூறியது—

1.1. பகவானே! உண்டாயதற்கும் இனிவரப் போவதற்கும் ஈசனே! நாராயணா! ஸநாதனா! உத்தமமானதும் பரமாச்சரியமானதுமான தேவியின் சரித்திரம் எடுத்துரைக்கப்பட்டது.

1.2. தேவர்களின் காரிய சித்திக்காக லோகமாதாவின் ஆவிர்ப்பாவமும் தேவியின் பரிபூர்ணகிருபையால் அவர்கள் அதிகாரத்தைத் திரும்பப் பெற்றதும் கூறப்பட்டது.

1.3. பிரபுவே! எதனால் தேவி எப்பொழுதும் பிரீதியை அடைவாளோ எதனால் தனது பக்தர்களைப் பரிவுடன் போஷிப்பாளோ அந்த ஆசாரணையைக் கூறியருளும்.

नारायण उवाच —

शृणु नारद तत्त्वज्ञ सदाचारविधिक्रमम्।
यदनुष्ठानमात्रेण देवीं प्रीणाति सर्वदा ॥ १. ४ ॥

प्रातरुत्थाय कर्तव्यं यद् द्विजेन दिने दिने।
तदहं संप्रवक्ष्यामि द्विजानामुपकारकम् ॥ १. ५ ॥

उदयास्तमयं यावद् द्विजः सत्कर्मकृद्भवेत्।
नित्यनैमित्तिकैर्युक्तः काम्यैश्चान्यै-रगर्हितैः ॥ १. ६ ॥

आत्मैव न सहायार्थं पिता माता च तिष्ठति।
न पुत्रदारा न ज्ञातिर्धर्मस्तिष्ठति केवलम् ॥ १. ७ ॥

நாராயணரிஷி கூறியது—

1.4. நாரதரே! தத்துவஞானியே! எதையனுஷ்டித்த மாத்திரத்தில் தேவியானவள் எப்பொழுதும் பிரீதியடைவாளோ அந்த ஸதாசாரவிதிக்கிரமத்தைக் கூறுகிறேன், கேளும்.

1.5. காலையிலெழுந்து நாள்தோறும் எது துவிஜர்களால் செய்யத்தக்கதோ அதை அவர்களுடைய உபகாரத்திற்காக நான் எடுத்துக் கூறுகிறேன்.

1.6. நித்திய நைமித்திக கர்மங்களுடனும் குற்றமற்ற பிற காமிய கர்மங்களுடனும் கூடிய துவிஜன் உதயாஸ்தமான காலங்களில் ஸத்கர்மாக்களை செய்பவனுயிருக்க வேண்டும்.

1.7. ஆத்மாவிற்குச் சகாயமாகத் தந்தையும் தாயும் நிலைத்திருப்பதில்லை; மனைவிகளும் புத்திரர்களும் இல்லை; பந்துக்களும் இல்லை; தர்மம் ஒன்று தான் நிலைத்து நிற்பது.

तस्माद्धर्मं सहायार्थं नित्यं संचिनु साधनैः।
धर्मेणैव सहायात्तु तमस्तरति दुस्तरम् ॥ १. ८ ॥

आचारः प्रथमो धर्मः श्रुत्युक्तः स्मार्त एव च।
तस्मादस्मिन् समायुक्तो नित्यं स्यादात्मनो द्विजः ॥ १. ९ ॥

आचाराल्लभते चायु-राचाराल्लभते प्रजाः।
आचारादन्नमक्षय्य-माचारो हन्ति पातकम् ॥ १. १० ॥
आचारः परमो धर्मो नृणां कल्याणकारकः।
इह लोके सुखी भूत्वा परत्र लभते सुखम् ॥ १. ११ ॥

अज्ञानान्धजनानां तु मोहितै-र्भ्रामितात्मनाम्।
धर्मरूपो महादीपो मुक्तिमार्गप्रदर्शकः ॥ १. १२ ॥

1.8. ஆகையால் சகாயத்தின் பொருட்டு எப்பொழுதும் தர்மத்தை ஸாதனங்களால் ஸம்பாதிப்பாயாக. தர்மத்தின் சகாயத்தால் தான் ஒருவன் கடத்தற்கரிய இருளைக் கடக்கிறான்.

1.9. சுருதியிலும் ஸம்ருதியிலும் விதிக்கப்பட்ட ஆசாரம் தான் முதன்மையான தர்மம். ஆகையால் துவிஜன் எப்பொழுதும் அத்துடன் கூடி நிற்க வேண்டும்.

1.10. ஆசாரத்தால் ஆயுளை அடைவான், பிரஜைகளை அடைவான், குறைவில்லாத அன்னத்தையடைவான்; ஆசாரம் பாதகங்களைப் போக்கும்.

1.11. மனிதர்களுக்கு மங்களங்களையளிக்கும் சிறந்த தருமமாவது ஆசாரம். அதனால் இவ்வுலகில் ஒருவன் சுகத்தையடைந்து மேலுலகிலும் சுகத்தையடைவான்.

1.12. அஞ்ஞானமாகிற இருளில் மதிமயங்கிச் சுழலும் ஜனங்களுக்கு முக்தி மார்க்கத்தைக் காட்டும் மகாதீபம் தருமரூபத்தில் பிரகாசிக்கிறது.

आचारात्प्राप्यते श्रैष्ठ्य-माचारात्कर्म लभ्यते ।
कर्मणो जायते ज्ञानमिति वाक्यं मनोः स्मृतम् ॥ १. १३ ॥

सर्वधर्मवरिष्ठोऽयमाचारः परमं तपः ।
तदेवज्ञानमुद्दिष्टं तेन सर्वं प्रसाध्यते ॥ १. १४ ॥

आचारो द्विविधः प्रोक्तः शास्त्रीयो लौकिकस्तथा ।
उभावपि प्रकर्तव्यौ न त्याज्यौ शुभमिच्छता ॥ १. १५ ॥

ग्रामधर्मा जातिधर्मा देशधर्माः कुलोद्भवाः ।
परिग्राह्या नृभिः सर्वे नैव तांल्लंघयेन्मुने ॥ १. १६ ॥

दुराचारो हि पुरुषो लोके भवति निन्दितः ।
दुःखभागी च सततं व्याधिना व्याप्त एव च ॥ १. १८ ॥

1.13. ஆசாரத்தால் ஒருவன் சிறப் பெய்துகிறுன்; ஆசாரத்தால் நல்ல கருமத்தையடைகிறுன்; அக்கருமத்தால் ஞானம் உண்டாகிறது என்பது மனுஸ்ம்ருதி வாக்யம்.

1.14. எல்லா தர்மங்களிலும் சிறந்த ஆசாரமே உத்தமமான தவம்; அதிலிருந்தே ஞானமுதிக்கிறது; அதனுல் எல்லாம் சாதிக்கப்படுகிறது.

1.15. ஆசாரம் சாஸ்திரீயமென்றும் லௌகிகமென்றும் இருவகையாகக் கூறப்படும். நன்மையை விரும்புபவனுல் இரண்டும் விடப்படாமல் கைக் கொள்ளப்படவேண்டும்.

1.16. முனிவரே! சமூக தர்மங்கள், ஜாதி தர்மங்கள், தேச தர்மங்கள், குலதர்மங்கள் எல்லாமே மனிதர்களால் ஏற்கப்பட வேண்டும். ஒரு பொழுதும் அவற்றைக் கடக்கலாகாது.

1.18. கெட்ட ஆசாரமுடைய புருஷன் உலகில் நிந்திக்கப்படுபவனுகிறுன். எப்பொழுதும் துக்கத்தையனுபவிப்பவனுயும் வியாதியால் பீடிக்கப்பட்டவனுயும் இருப்பான்.

परित्यजेदर्थकामौ यौ स्यातां धर्मवर्जितौ ।
धर्ममप्यसुखोदर्कं लोकविद्विष्टमेव च ॥ १. १९ ॥

नारद उवाच —

बहुत्वादिह शास्त्राणां निश्चयः स्यात्कथं मुने ।
कियत्प्रमाणं तद् ब्रूहि धर्ममार्गविनिर्णयम् ॥ १. २० ॥

नारायण उवाच —

श्रुतिस्मृती उभे नेत्रं पुराणं हृदयं स्मृतम् ।
एतत्त्रयोक्त एव स्याद्धर्मो नाऽन्यत्र कुत्रचित् ॥ १. २१ ॥

विरोधो यत्र तु भवेत् त्रयाणां च परस्परम् ।
श्रुतिस्तत्र प्रमाणं स्याद् द्वयोर्द्वैधे श्रुतिर्वरा ॥ १. २२ ॥

1.19. தர்மத்திற்குப் புறம்பான பொருளும் இன்பமும் எவையுண்டோ அவற்றைப் புறக்கணிக்க வேண்டும். தர்மமும் உலகைப் பகைத்துச் செய்யின் இன்பத்தையளிக்காது.

நாரதர் கூறியது—

1.20. முனிவரே! சாஸ்திரங்கள் பலவகையாயிருப்பதால் நிச்சயம் எப்படி ஏற்படும்? தர்ம மார்க்கத்தை நிர்ணயிப்பதில் எது பிரமாணம் என்பதைக் கூறுங்கள்.

நாராயணரிஷி கூறியது—

1.21. சுருதியும் ஸம்ருதியும் இரு கண்கள். புராணம் இருதயம் எனக் கூறப்படுகிறது. இம் மூன்றிலும் கூறப்பட்டவையே தர்மம். வேறிடங்களில் எங்கும் கூறப்பட்டவையன்று.

1.22. இம் மூன்றனுள் ஒன்றிற்கொன்று முரண்பட்டால் சுருதிதான் அங்கு பிரமாணம் ஆகும். இரண்டனுள் முரண் ஏற்பட்டாலும் சுருதிதான் சிறந்தது.

श्रुतिद्वैधं भवेद्यत्र तत्र धर्मावुभौ स्मृतौ।
स्मृतिद्वैधं तु यत्रस्याद्विषयः कल्प्यतां पृथक् ॥ १. २३ ॥

पुराणेषु क्वचिच्चैव तन्त्रदृष्टं यथातथम्।
धर्मं वदन्ति तं धर्मं गृहीयान्न कथंचन ॥ १. २४ ॥

वेदाविरोधि चेत्तन्त्रं तत्प्रमाणं न संशयः।
प्रत्यक्षश्रुतिरुद्धं यत्तत्प्रमाणं भवेन्न च ॥ १. २५ ॥

वेदोक्तमेव सद्धर्मं तस्मात्कुर्यान्नरः सदा।
उत्थायोत्थाय बोद्धव्यं किं मयाऽद्यकृतं कृतम् ॥ १. ३२ ॥

1.23. சுருதியில் இருவிதமாய்க் கூறப்பட்டால் இரண்டுமே பிரமாணம் என்று ஒப்புக் கொள்ளப்படுகிறது. ஸ்மிருதியில் எங்கு இருவிதமாய்க் காணப்படுகிறதோ அங்கு அது விஷய வேற்றுமையால் என்று கொள்ளவேண்டும்.

1.24. புராணங்களில் சில விடங்களிலும் அதே மாதிரி தந்திரங்களிலும் தர்மங்கள் கூறப்படுகின்றன. அவற்றை அப்படியே உள்ளபடி ஒருபொழுதும் ஏற்றுக்கொள்ளக் கூடாது.

1.25. வேதத்திற்கு விரோதமில்லாமலிருந்தால் (புராணமும்) தந்திரமும் பிரமாணம் என்பதில் ஸந்தேகமில்லை. சுருதிக்கு நேர் விரோதமாயுள்ளது ஒரு போதும் பிரமாணமாகாது.

1.32. ஆகையால் வேதத்தில் கூறிய ஸத்தர்மத்தையே மனிதன் எப்பொழுதும் அனுஷ்டிக்கவேண்டும். நாள் தோறும் விழித்துக் கொண்டதும் இன்று என்னுல் என்னென்ன செய்யப்பட்டது என்று ஆராய்ந்தறிய வேண்டும்.

अवाप्य रजनीयामं ब्रह्मध्यानं समाचरेत्।
उरुस्थोत्तानचरणः सव्येचोरौ तथोत्तरम् ॥ १. ३४ ॥

उत्तानं किंचिदुत्तानं मुखमवष्टभ्य चोरसा।
निमीलिताक्षः सत्त्वस्थो दन्तैर्दन्तान्नसंस्पृशेत् ॥ १. ३५॥

तालुस्थाचलजिह्वश्च संवृतास्यः सुनिश्चलः।
सन्निरुद्धेन्द्रियग्रामो नातिनिम्नस्थितासनः ॥ १. ३६ ॥

द्विगुणं त्रिगुणं वाऽपि प्राणायाममुपक्रमेत्।
ततो ध्येयः स्थितो योऽसौ हृदये दीपवत्प्रभुः ॥ १. ३७ ॥

1.34–35. விடிய ஒரு யாமமிருக்கும் பொழுது பிரம்மத்தியானம் செய்ய வேண்டும். இடது துடைமேல் வலது பாதத்தையும் வலது துடைமேல் இடது பாதத்தையும் வைத்து முகத்தை நிமிர்த்தி மார்பைத் தொடும்படி வைத்துக் கொண்டு, கண்ணை மூடிக் கொண்டு, பற்களால் பற்களைத் தொடாமல் அமைதியுடன்;

1.36. நாவை அசையாமல் தாடையில் வைத்து வாயை மூடிக் கொண்டு இந்திரியக் கூட்டத்தை அடக்கி, மிகவும் தாழ்வாயில்லாத ஆசனத்தில் அசையாமல் இருந்து கொண்டு (தியானம் பழக வேண்டும்).

1.37. (உள்ளே இழுப்பதை போல்) இருமடங்கோ மும்மடங்கோ (மூச்சையடக்கி) பிராணாயாமத்தை ஆரம்பிக்க வேண்டும். பிறகு இருதயத்தில் தீபத்தைப் போல் பிரகாசிப்பவராக பகவானை தியானிக்க வேண்டும்.

धारयेत्तत्र चात्मानं धारणां धारयेद् बुधः ।
सधूमश्च विधूमश्च गर्भश्चाप्यगर्भकः ॥ १. ३८ ॥

सलक्ष्यश्चाप्यलक्ष्यश्च प्राणायामस्तु षड्विधः ॥
प्राणायामसमो योगः प्राणायाम इतीरितः ॥ १. ३९ ॥

प्राणायाम इति प्रोक्तो रेचपूरककुंभकैः ।
वर्णत्रयात्मका ह्यते रेचपूरककुंभकाः ॥ १. ४० ॥

स एव प्रणवः प्रोक्तः प्राणायामश्च तन्मयः ।
इडया वायुमारोप्य पूरयित्वोदरे स्थितम् ॥ १. ४१ ॥

शनैः षोडशमात्राभिरन्यया तं विरेचयेत् ।
एवं सधूमः प्राणायामः कथितो मुने ॥ १. ४२ ॥

1.38–40. மனதை ஒரு நிலையில் அங்கு நிறுத்தி அறிவாளி தாரணையை அப்பியசிக்க வேண்டும். ஸதூமம்—விதூமம், கர்ப்பம்—அகர்ப்பம், ஸலக்ஷ்யம்—அலக்ஷ்யம் என பிராணாயாமம் அறுவகைப்படும். பிராணாயாமத்துடன் கூடின யோகமே பிராணாயாமம் எனப்படுவது. ரேசகம், பூரகம், கும்பகம் ஆகியவற்றுடன் கூடியது பிராணாயாமம். (அ,உ, ம எனும்) மூன்று அக்ஷரங்கள் வடிவானது ரேசகமும் பூரகமும் கும்பகமும்.

1.41. அது தான் பிரணவம் எனப்படுவது. பிராணாயாமம் பிரணவத்தின் மயமேயாம். இடையில் (வலது நாசியால்) மூச்சை இழுத்து வயிற்றில் நிறுத்த வேண்டும்.

1.42. முனிவரே! பின்பு மெதுவாகப் பதினாறு மாத்திரைகாலம் மற்ற நாசியால் (பிங்கலை எனும் இடது நாசியால்) அந்த மூச்சை வெளிவிடவேண்டும். இப்படிச் செய்வது ஸதூமப் பிராணாயாமம் எனப்படும். (இது மந்திரத்துடன் நிகழ்ந்தால் ஸகர்ப்பம்; இல்லாவிடில் அகர்ப்பம். அத்துடன் பார்வையோ மனதோ ஒரு லக்ஷ்யத்தில் நிறுத்தப்பட்டால் அது ஸலக்ஷ்யம்; இல்லாவிடில் அலக்ஷ்யம்.)

आधारे लिंगनाभिप्रकटितहृदये तालुमूले ललाटे
द्वे पत्रे षोडशारे द्विदशदशदल-द्वादशार्धे चतुष्के ।
वासान्ते बालमध्ये डफकठसहिते कण्ठदेशे स्वराणां
हं क्षं तत्त्वार्थयुक्तं सकलदलगतं वर्णरूपं नमामि ॥ १. ४३॥

अरुणकमलसंस्था तद्रजः पुंजवर्णा
हरनियमितचिह्ना पद्मतन्तुस्वरूपा ।
रवि-हुतवह-राका-नायकाऽऽस्यस्तनाढ्या
सकृदपि यदि चित्ते संवसेत्स्यात्स मुक्तः ॥ १. ४४ ॥

1.43. மூலாதாரம், லிங்கம், நாபி, இருதயம், தாடை மூலம், நெற்றி முதலிய ஸ்தானங்களில், இரண்டு தளம், பதினறு தளம், ஆயிரம் தளம், பன்னிரண்டு தளம், சதுரம் ஆகிய சக்கரங்களில் (மூலாதாரத்தில்) 'வ' முதல் 'ஸ' வரை உள்ள நாலெழுத்துக்களாகவும், (ஸ்வாதிஷ்டானத்தில்) 'ப' (ष) முதல் 'ல' வரை உள்ள ஆறு எழுத்துக்களாகவும், (மணி பூரகத்தில்—நாபியில்) 'ட' (ड) முதல் 'ப' (फ) வரை உள்ள பத்தெழுத்துக்களாகவும், (இருதயத்தில்—அனுஹதத்தில்) 'க' முதல் ட்ட (ठ) வரை உள்ள பன்னிரண்டு எழுத்துக்களாகவும் கழுத்து நடுவில் (விசுத்தியில்) பதினறு உயிரெழுத்துக்களாகவும், (புருவமத்தியில்—ஆக்ஞையில்) ஹம், க்ஷம் எனும் இரண்டெழுத்துக்களாகவும், இங்ஙனம் எல்லாத்தளங்களிலும் தத்வார்த்தத்துடன் கூடிய வர்ண (அக்ஷர) ரூபிணியாய் விளங்கும் தேவியை நமஸ்கரிக்கிறேன்.

1.44. செந்தாமரையில் வீற்றிருப்பவளாயும், அதைப் போல் சிவந்த வண்ணமுடையவளாயும், ஈசுவரனுல் நியமிக்கப்பட்ட சின்னமுடையவளாயும், தாமரைநூல் வடிவினளாயும், சூரியனையும், அக்னியையும், சந்திரனையும் முகமாகவும் இருநகில்களாகவும் உடையவளாயும் விளங்கும் தேவி எவனுடைய சித்தத்தில் ஒரு கணமேனும் விளங்குவாளோ அவன் முக்தனுவான்.

स्थितिः सैव गतिर्यात्रा मतिश्चिन्ता स्तुतिर्वचः ।
अहं सर्वात्मिको देवः स्तुतिः सर्वं त्वदर्चनम् ॥ १. ४५ ॥

अहं देवी न चान्योऽस्मि ब्रह्मैवाहं न शोकभाक् ।
सच्चिदानन्दरूपोऽहं स्वात्मानमिति चिन्तयेत् ॥ १. ४६ ॥

प्रकाशमाने प्रथमे प्रयाणे
प्रतिप्रयाणेऽप्यमृतायमानाम् ।
अन्तः पदव्यामनुसंचरन्ती-
मानन्दरूपामबलां प्रपद्ये ॥ १. ४७ ॥

ततो निजब्रह्मरन्ध्रे ध्यायेत्तं गुरुमीश्वरम् ।
उपचारैर्मानसैश्च पूजयेत्तु यथाविधि ॥ १. ४८ ॥

1.45. என் இருப்பு அவளே; என் நடப்பு யாத்திரை; என் மதியே அவளுடைய தியானம்; என் வார்த்தை அவளுடைய ஸ்துதி; நான் ஸர்வாத்மாவான தேவன்; எல்லாச் செயலும் உன் ஸ்தோத்திரமும் அர்ச்சனையுமாகும்.

1.46. நான் தேவியே, வேறல்லன்; நான் பிரம்மமேயன்றிச் சோகிப்பவனல்லன்; நான் ஸச்சிதானந்த ஸ்வரூபன்; என்றிங்ஙனம் தன்னைப்பற்றி தியானிக்க வேண்டும்.

1.47. முதல் பிரயாணத்தில் (மூலாதாரத்திலிருந்து மேலே செல்லுகையில்) பிரகாசிப்பவளாயும், திரும்புகையில் அமிருதஸ்வரூபிணியாயும், (ஸுஷும்னையின்) உள்பாதையில் சஞ்சரிப்பவளும் ஆனந்தரூபிணியுமான தேவியை வழிபடுகின்றேன்.

1.48. பிறகு தனது பிரம்மரந்திரத்தில் குருவாகிய ஈசுவரனை தியானிக்க வேண்டும். மானசீக உபசாரங்களால் அவரை முறைப்படி பூஜிக்கவேண்டும்.

स्तुवीतानेन मन्त्रेण साधको नियतात्मवान्।
गुरुर्ब्रह्मा गुरुर्विष्णुर्गुरुर्देवो महेश्वरः।
गुरुरेव परं ब्रह्म तस्मै श्रीगुरवे नमः ॥ १.४९ ॥

आचारहीनं न पुनन्ति वेदा यदप्यधीताः सह षड्भिरंगैः।
छन्दांस्येनं मृत्युकाले त्यजन्ति नीडं शकुन्ता इव जातपक्षाः
॥ २.१ ॥

ब्राह्मे मुहूर्ते चोत्थाय तत्सर्वं सम्यगाचरेत्।
रात्रे-रन्तिमयामे तु वेदाभ्यासं चरेद् बुधः ॥ २.२ ॥

किंचित्कालं ततः कुर्यादिष्टदेवानुचिन्तनम्।
योगी तु पूर्वमार्गेण ब्रह्मध्यानं समाचरेत् ॥ २.३ ॥

1.49. குருவே பிரம்மா, குருவே விஷ்ணு, குருவே மகேசுவரனுகிய தெய்வம்; குருவே பரப்பிரம்மம்; அந்த குருவிற்கு நமஸ்காரம்.

இந்த மந்திரத்தால் ஸாதகன் அடக்கிய மனதினனுய் துதிக்க வேண்டும்.

2.1. வேதங்கள் ஆறு அங்கங்களுடன் அத்தியயனம் செய்யப்பட்டிருந்தாலும் ஆசாரமில்லாதவனை அவை புனித மாக்குவதில்லை. இறகு முளைத்த பறவைகள் கூட்டைவிட்டுப் பறந்தோடிப் போவது போல் மரணகாலத்தில் வேதங்கள் இவனை விட்டோடிவிடுகின்றன.

2.2. பிராம்மமுகூர்த்தத்தில் எழுந்து இதையெல்லாம் தியானித்து அனுஷ்டிக்க வேண்டும். இரவின் கடைசி யாமத்தில் புத்திபடைத்தவன் வேதாப்பியாஸம் செய்ய வேண்டும்.

2.3. பிறகு சிறிது நேரம் இஷ்டதெய்வத்தை தியானம் செய்ய வேண்டும். யோகியானவன் முன் கூறிய முறையில் பிரம்மத்தியானம் செய்யவேண்டும்.

जीवब्रह्मैक्यता येन जायते तु निरन्तरम्।
जीवन्मुक्तश्च भवति तत्क्षणादेव नारद॥ २. ४ ॥

पंच पंच उषत्काल: सप्तपंचारुणोदयः।
अष्टापंचाशद्भवेत्प्रातः शेषः सूर्योदयः स्मृतः॥ २. ५ ॥

प्रातरुत्थाय यः कुर्याद्विण्मूत्रं द्विजसत्तमः।
वाय्वग्नी विप्रमादित्यमापः पश्यन् तथैव गाः।
न कदाचन कुर्वीत विण्मूत्रस्य विसर्जनम्॥ २. १५ ॥

वामहस्तेन शौचं तु कुर्याद्वै दक्षिणेन न।
नाभेरधो वामहस्तो नाभेरूर्ध्वं तु दक्षिणः॥ २. २९ ॥

देशकालद्रव्यशक्तिस्वोपपत्तीश्च सर्वशः।
ज्ञात्वा शौचं प्रकर्तव्य-मालस्यं नाऽत्रधारयेत्॥ २. ३२ ॥

2.4. நாரதரே! அந்த தியானத்தால் நிரந்தரமான ஜீவப்பிரம்ம ஐக்யம் ஏற்பட்டு அது ஏற்பட்ட கணத்திலேயே ஒருவன் ஜீவன்முக்தனாகிறான்.

2.5. இரவு ஐம்பத்தைந்து நாழிகை உஷத்காலம்; ஐம்பத்தேழு நாழிகை அருணோதயம்; ஐம்பத்தெட்டு நாழிகை ப்ராதக் காலம்; அதற்கு மேல் சூரியயோதயம் .

2.15. பிராதக்காலத்தில் மலஜலம் கழிக்கும் பிராம் மணன் வாயு, அக்னி, பிராம்மணன், சூரியன், நீர்நிலை ஆகியவற்றிற்கு எதிர்முகமாகவும் அவ்வாறே பசுக்களுக் கெதிரிலும் ஒரு பொழுதும் கழிக்கக் கூடாது.

2.29. இடதுகையால் சௌசம் செய்து கொள்ள வேண்டும். வலதுகையால் செய்து கொள்ளக் கூடாது. நாபிக்குக்கீழ் இடதுகை என்பதும், நாபிக்கு மேல் வலது கை என்பதும் விதி.

2.32. இடம், காலம், பொருள், சக்தி, தன்னுடைய தகுதி ஆகிய அனைத்தையும் மனதிற்கொண்டு சௌசம் செய்து கொள்ளவேண்டும்; இதில் தாமதம் கூடாது.

पुरीषोत्सर्जने कुर्याद्गण्डूषान् द्वादशैव तु।
चतुरो मूत्रविक्षेपे नाऽतोन्यूनान् कदाचन ॥ २. ३३ ॥

आचम्य च ततः कुर्याद्दन्तधावनमादरात्।
ततस्तु गत्वा नद्यादौ प्रातः स्नानं विशोधनम्।
समाचरेन्मुनिश्रेष्ठ देहसंशुद्धिहेतवे ॥ ३. ४ ॥

अस्नातस्य क्रियाः सर्वा भवन्ति विफला यतः।
तस्मात्प्रातश्चरेत्स्नानं नित्यमेव दिने दिने ॥ ३. ७ ॥

स्नानांगतर्पणं कृत्वा देवर्षिपितृतोषकम्।
शुद्धे वस्त्रे परीधाय जलाद्बहिरुपागतः ॥ ३. १५ ॥
विभूतिधारणं कार्यं रुद्राक्षाणां च धारणम्।
क्रमयोगेन कर्तव्यं सर्वदा जपसाधकैः ॥ ३. १६ ॥

2.33. மலவிஸர்ஜனத்திற்குப்பின் பன்னிரண்டு தடவை வாய் கொப்பளிக்க வேண்டும்; ஜலவிஸர்ஜனத்திற்குப் பின் நாலு தடவை; ஒரு பொழுதும் இதற்குக் குறையக் கூடாது.

3.4. முனிசிரேஷ்டரே! பிறகு ஆசமனம் செய்து கவனத்துடன் பல் துலக்க வேண்டும். அதன் மேல் ஆறு முதலியவற்றில் ப்ராதஸ்நாநம் செய்து உடலின் அழுக்கைப் போக்க வேண்டும்.

3.7. ஸ்நாநம் செய்யாதவனுடைய கிரியைகள் எல்லாம் பயனற்றவையாதலால் எப்பொழுதும் நாள்தோறும் அதிகாலையில் (சூரியன் உதிக்குமுன்) ஸ்நாநம் செய்து விட வேண்டும்.

3.15–16. தேவர்கள், ரிஷிகள், பிதிருக்கள் ஆகியோருடைய திருப்திக்காக ஸ்நாநாங்கதர்ப்பணம் செய்து விட்டு ஜலத்திற்கு வெளியே வந்து இரண்டு சுத்தமான வஸ்திரங்களைத் தரித்துக் கொண்டு, விபூதி இட்டுக்கொண்டு ருத்ராக்ஷம் அணிய வேண்டும். ஜபம் செய்யும் ஸாதகர்களால் எப்பொழுதும் இந்த காரியக்கிரமம் கைக் கொள்ளப்பட வேண்டும்.

श्रीमत्पंचाक्षरेणैव प्रणवेन तथापि वा।
निर्व्याजभक्त्या मेधावी रुद्राक्षं धारयेन्मुदा ।
रुद्राक्षधारणं साक्षाच्छिवज्ञानस्य साधनम् ॥ ३. २० ॥

॥ इति प्रातरनुष्ठानक्रमः ॥

॥ इति श्रीदेवीभागवते एकादशस्कन्धे तृतीयोऽध्यायः ॥

3.20. ஸ்ரீமத் பஞ்சாக்ஷர ஜபத்துடனோ அல்லது பிரணவ உச்சாரணத்துடனோ காரணத்தை வேண்டாத பக்தியால் மேதாவியான புருஷன் சந்தோஷத்துடன் ருத்ராக்ஷத்தை தரித்துக் கொள்ள வேண்டும். ருத்ராக்ஷ தாரணம் ஸாக்ஷாத் சிவஞானத்திற்கு ஸாதனமாகும்.

இவ்வாறு காலை அனுஷ்டானக்கிரமம்.

இங்ஙனம் ஸ்ரீதேவீபாகவதத்தில் ஏகாதசஸ்கந்தத்தில் மூன்ருவது அத்தியாயம் முற்றும்.

॥ रुद्राक्षमाहात्म्यम् ॥ ४७ ॥

नारद उवाच —

एवं भूतानुभावोऽयं रुद्राक्षो भवताऽनघ।
वर्णितो महतां पूज्यः कारणं तत्र किं वद ॥ ४. १ ॥

नारायण उवाच —

एवमेव पुरा पृष्टो भगवान् गिरिशः प्रभुः।
षण्मुखेन च रुद्रस्तं यदुवाच शृणुष्व तत् ॥ ४. २ ॥

ईश्वर उवाच —

त्रिपुरस्य वधार्थाय देवानां तारणाय च।
सर्वविघ्नोपशमन-मघोरास्त्र-मचिन्तयम् ॥ ४. ६ ॥

47. ருத்ராக்ஷமாஹாத்மியம்

நாரதர் கூறியது—

4.1. பாவமற்றவரே! இப்படிப்பட்ட ருத்ராக்ஷத்தின் பெருமை தங்களால் வர்ணிக்கப்பட்டது. மகான்களால் அது அங்ஙனம் பூஜிக்கப்படுவதற்குக் காரணம் என்ன வென்று கூறியருளுங்கள்.

நாராயணரிஷி கூறியது—

4.2. மலையில் உறையும் பிரபுவாகிய பகவான் முன்பு இவ்வாறே ஷண்முகரால் வினவப் பெற்றார். ருத்ரர் அவருக்கு என்ன பதிலளித்தாரோ அதைக் கூறுகிறேன், கேளும்.

ஈசுவரர் கூறியது—

4.6. திரிபுரத்தை ஸம்ஹரித்து தேவர்களை இரக்ஷிக்கும் பொருட்டு எல்லா விக்கினங்களையும் போக்கும் அகோராஸ்திரத்தை மனதால் தியானித்தேன்.

दिव्यवर्षसहस्रं तु चक्षुरुन्मीलितं मया।
पश्चान्ममाकुलाक्षिभ्यः पतिता जलबिन्दवः ।। ४. ७ ।।

तत्राश्रुबिन्दुतो जाता महारुद्राक्षवृक्षकाः।
ममाज्ञया महासेन सर्वेषां हितकाम्यया ।। ४. ८ ।।

बभूवुस्ते च रुद्राक्षा अष्टत्रिंशत्प्रभेदतः।
सूर्यनेत्रसमुद्भूताः कपिला द्वादश स्मृताः ।। ४. ९ ।।

सोमनेत्रोत्थिताः श्वेतास्ते षोडशविधाः क्रमात्।
वह्निनेत्रोद्भवाः कृष्णा दश भेदा भवन्ति हि ।। ४. १० ।।

एकवक्त्रः शिवः साक्षाद् ब्रह्महत्यां व्यपोहति।
द्विवक्त्रो देवदेव्यौ स्याद् विविधं नाशयेदघम् ।। ४. १२ ।।

4.7. ஆயிரம் தேவவருஷம் மூடியிருந்தபின் விழித்துக் கலங்கிய என் கண்களிலிருந்து கண்ணீர்த்துளிகள் விழுந்தன.

4.8. மஹாஸேன! அக்கண்ணீர்த்துளிகளினின்று என் கட்டளையால் எல்லோருடைய நன்மைக்காக மகாருத்ராக்ஷ விருக்ஷங்கள் உண்டாயின.

4.9. அந்த ருத்ராக்ஷங்கள் முப்பத்தெட்டு வகையாயின. (வலது கண்ணாகிய) சூரிய நேத்திரத்திலிருந்து தோன்றியவை கபில (பொன்) நிறமுடையவையான பன்னிரண்டு எனக் கூறப்படுகின்றன.

4.10. (இடது கண்ணாகிய) ஸோம நேத்திரத்திலிருந்து தோன்றியவை வெண்மை நிறமுடையவை; அவை பதினாறு வகை. (நெற்றிக் கண்ணாகிய) அக்னி நேத்திரத்திலிருந்து தோன்றியவை கருப்பு; அவை பத்து வகையாகின்றன.

4.12. ஒரு முகமுள்ளது ஸாக்ஷாத் சிவ ஸ்வரூபம், அது பிரம்மஹத்தியைப் போக்கும். இரண்டு முகமுள்ளது தேவ தேவீ ஸ்வரூபம்; அது பலவிதமான பாவங்களைப் போக்கும்.

त्रिवक्त्रस्त्वनलः साक्षात्स्त्रीहत्यां दहति क्षणात्।
चतुर्वक्त्रः स्वयं ब्रह्मा नरहत्यां व्यपोहति ॥ ४. १३ ॥

पंचवक्त्रः स्वयं रुद्रः कालाग्निर्नाम नामतः।
षड्वक्त्रः कार्तिकेयस्तु स धार्यो दक्षिणे करे ॥ ४. १४ ॥

सप्तवक्त्रो महाभागो ह्यनंगो नाम नामतः।
अष्टवक्त्रो महासेन साक्षाद्देवो विनायकः ॥ ४. १५ ॥

नव वक्त्रो भैरवस्तु धारयेद्वामबाहुके।
दशवक्त्रस्तु देवेशः साक्षाद्देवो जनार्दनः ॥ ४. २२ ॥

वक्त्रैकादश रुद्राक्षो रुद्रैकादशकं स्मृतम्।
द्वादशाऽऽस्यस्य रुद्राक्षस्यैव कर्णेतु धारणात् ॥ ४. २६ ॥

4.13. மூன்று முகமுள்ளது ஸாக்ஷாத் அக்னி ஸ்வரூபம்; ஸ்திரீஹத்தியை ஒரு கணத்தில் எரிக்கும். நான்கு முக முள்ளது பிரம்மாவின் ஸ்வரூபம்; நரஹத்தியைப் போக்கும்.

4.14. ஐந்து முகமுள்ளது ருத்திரனேயாம்; அதற்குப் பெயரே காலாக்னி என்று பிரசித்தம். ஆறு முகமுள்ளது கார்த்திகேய ஸ்வரூபம்; அதை வலது கையில் அணிந்து கொள்ள வேண்டும்.

4.15. ஏழு முகமுள்ளது மகாபாக்கியசாலியான மன் மத ஸ்வரூபம் என்பது பிரசித்தம். எட்டு முகமுள்ளது கண நாயகரான ஸாக்ஷாத் விநாயகர்.

4.22. ஒன்பது முகமுள்ளது பைரவர்; அதை இடது கையில் தரிக்க வேண்டும். பத்து முகமுள்ளது தேவேசராகிய ஸாக்ஷாத் ஜனார்த்தனர்.

4.26. பதினொரு முகமுள்ள ருத்ராக்ஷம் ஏகாதச ருத்ர ஸ்வரூபம் எனக் கூறப்படும். பன்னிரண்டு முகமுள்ள ருத்ராக்ஷத்தைக் காதில் அணிய வேண்டும்.

आदित्यास्तोषिता नित्यं द्वादशास्ये व्यवस्थिताः।
वक्त्र त्रयोदशो वत्स रुद्राक्षो यदि लभ्यते ॥ ४. ३१ ॥

कार्तिकेय-समो ज्ञेयः सर्वकामार्थसिद्धिदः।
चतुर्दशास्यो रुद्राक्षो यदि लभ्येत पुत्रक ॥ ४. ३४ ॥

धारयेत् सततं मूर्ध्नि तस्य पिण्डः शिवस्य तु।
किं मुने बहुनोक्तेन वर्णनेन पुनः पुनः ॥ ४. ३५ ॥

पूज्यते सततं देवैः प्राप्यते च परा गतिः।
रुद्राक्ष एकः शिरसा धार्यो भक्त्या द्विजोत्तमैः ॥ ४. ३६ ॥

अष्टोत्तरशतेनापि पंचाशद्भिः षडानन।
अथवा सप्तविंशत्या कृत्वा रुद्राक्षमालिकाम् ॥
धारणाद्वा जपाद्वापि ह्यनन्तं फलमश्नुते ॥ ४. ३८ ॥

4.31–35. பன்னிரண்டு முகமுள்ள ருத்ராக்ஷத்தில் எப்பொழுதும் ஆதித்தியர்கள் மகிழ்ச்சியுடன் நிலை பெறுகின்றனர். குழந்தாய்! பதின்மூன்று முகமுள்ள ருத்ராக்ஷம் கிடைத்தால் அது கார்த்திகேயருக்கு ஸமம் என உணர வேண்டும். அது எல்லா ஆசைகளையும் பூர்த்தி செய்வது. புத்திரா! பதினான்கு முகமுள்ள ருத்ராக்ஷம் கிடைத்தால் அதை எப்பொழுதும் தலையில் தரிக்க வேண்டும்; அது சிவனே உருக் கொண்டது. முனிவரே! திருப்பித் திருப்பி வெகுவாய் வர்ணிப்பதாலாவதென்ன?

4.36. பிராம்மணோத்தமர்களால் சிரசில் ஒரு ருத்ராக்ஷம் தரித்தாலே போதும். அப்படி தரிப்பவர் எப்பொழுதும் தேவர்களால் பூஜிக்கப்படுவர், பராங்கதியை அடைவர்.

4.38. ஷண்முகா! நூற்றெட்டு, அல்லது ஐம்பது அல்லது இருபத்தேழு ருத்ராக்ஷங்களால் மாலை செய்து அணிவதாலும் அதனால் ஜபம் செய்வதாலும் அளவற்ற பயனை ஒருவன் அனுபவிப்பான்.

लक्षणं जपमालायाः शृणु वक्ष्यामि षण्मुख।
रुद्राक्षस्य मुखं ब्रह्मा बिन्दू रुद्र इतीरितः॥ ५.१॥

विष्णुः पुच्छं भवेच्चैव भोगमोक्षफलप्रदम्।
पंचविंशतिभिश्चाक्षैः पंचवक्त्रैः सकण्टकैः॥ ५.२॥

रक्तवर्णैः सितैर्मिश्रैः कृतरन्ध्रविदर्भितैः।
अक्षसूत्रं प्रकर्तव्यं गोपुच्छवलयाकृति॥ ५.३॥

वक्त्रं वक्त्रेण संयोज्य पुच्छं पुच्छेन योजयेत्।
मेरुमूर्ध्वमुखं कुर्यात्तदूर्ध्वं नागपाशकम्॥ ५.४॥

5.1–3. ஷண்முகா! ஜபமாலையின் லக்ஷணத்தைக் கூறுகிறேன், கேள். ருத்ராக்ஷத்தின் முகம் பிரம்மா, பிந்துக்களை உடைய நடுபாகம் ருத்ரன், அடிபாகம் விஷ்ணு; அதனால் போகம் மோக்ஷம் எனும் இரண்டு பலனையும் அளிப்பதாகும். ஐந்து முகங்களுள்ளதும் முட்போன்ற பிந்துக்களை உடையதும் சிவப்பு, வெள்ளை, கலப்பு என்ற வர்ணங்களை உடையதுமான ருத்ராக்ஷங்களில் துவாரம் செய்து இருபத்தைந்தைக் கோத்து பசுவின் வாலைப் போல் மாலையாகச் செய்யவேண்டும்.

5.4. முகத்தை முகத்துடன் அடிபாகத்தை அடிபாகத்துடனும் பொருந்தும்படி கோக்க வேண்டும். நடுவில் மேருவாக உள்ளதை முகம் மேல் நோக்கியிருக்கும்படி செய்து அதின் மேல் நாகபாசம் அமைக்க வேண்டும்.

एवं संग्रथितां मालां मन्त्रसिद्धिप्रदायिनीम्।
प्रक्षाल्य गन्धतोयेन पंचगव्येन चोपरि ॥ ५. ५ ॥
ततः शिवाम्भसाऽऽक्षाल्य ततो मन्त्रगणान्न्यसेत्।
स्पृष्ट्वा शिवास्त्रमन्त्रेण कवचेनावगुण्ठयेत् ॥ ५. ६ ॥
मूलमन्त्रं न्यसेत्पश्चात्पूर्ववत्कारयेत्तथा।
सद्योजातादिभिः प्रोक्ष्य यावदष्टोत्तरं शतम् ॥ ५. ७ ॥
मूलमन्त्रं समुच्चार्य शुद्धभूमौ निधाय च।
तस्योपरि न्यसेत्साम्बं शिवं परमकारणम् ॥ ५. ८ ॥
प्रतिष्ठिता भवेन्माला सर्वकामफलप्रदा।
यस्य देवस्य यो मन्त्रस्तां तेनैवाभिपूजयेत् ॥ ५. ९ ॥

5.5–6. இப்படிக் கோத்த மாலையை மந்திரஸித்தி ஏற்படுவதற்காகச் சந்தனத்திலும் பஞ்சகவ்யத்திலும் முழுக்கிவைத்துப் பின்பு சிவமந்திரங்களால் அபிஷேகம் செய்து மந்திரக் கூட்டங்களை நியாஸம் செய்ய வேண்டும். சிவாஸ்திரமந்திரத்தால் தொட்டு கவசமந்திரத்தால் அவ குண்டனம் செய்ய வேண்டும்.

5.7. மூலமந்திரத்தை நியாஸம் செய்து பிறகு மறு படியும் முன்போல் அபிஷேகம் செய்து ஸத்யோஜாதாதி மந்திரங்களால் நூற்றெட்டுத்தடவை புரோக்ஷிக்க வேண்டும்.

5.8. மூலமந்திரத்தை உச்சரித்துக் கொண்டு சுத்த மான இடத்தில் அதை வைத்து அதில் பரமகாரனேசுவரரான ஸாம்பசிவமூர்த்தியை தியானம் செய்ய வேண்டும்.

5.9. இங்ஙனம் மாலை பிரதிஷ்டை செய்யப்பட்டதாகி எல்லா ஆசைகளின் பூர்த்தியையும் அளிப்பதாகும். எந்த தேவதைக்கு எந்த மந்திரமோ அந்த தேவதையை அந்த மந்திரத்தாலேயே பூஜிக்க வேண்டும்.

रुद्राक्षधारको भूत्वा यत्किंचित्कर्म वैदिकम्।
कुर्वन् विप्रः सदा भक्त्या महदाप्नोति तत्फलम् ॥ ५. १८ ॥

एवं नारद षड्वक्त्रो गिरिशेन विबोधितः।
रुद्राक्षमहिमानं च ज्ञात्वाऽऽसीत्कृतार्थकः ॥ ७. १ ॥

इत्थं भूतानुभावोऽयं रुद्राक्षो वर्णितो मया।
सदाचारप्रसंगेन शृणुचान्यत्समाहितः ॥ ७. २ ॥

रुद्राक्षाणांतु भद्राक्षधारणात्स्यान्महाफलम्।
धात्रीफलप्रमाणं यच्छ्रेष्ठमेतदुदाहृतम् ॥ ७. ६ ॥

बदरीफलमात्रन्तु प्रोच्यते मध्यमं बुधैः।
अधमं चणमात्रं स्यात्प्रतिज्ञैषा मयोदिता ॥ ७. ७ ॥

5.18. ருத்திராக்ஷத்தை தரித்துக் கொண்டு எப்பொழுதும் பக்தியுடன் எந்த ஒரு சிறு வைதீக கருமத்தையும் ஒரு பிராம்மணன் செய்தாலும் அதனால் மகத்தான பலனை அடைவான்.

7.1. நாரதரே! இவ்வாறு ஷண்முகர் பரமசிவனால் உபதேசிக்கப் பெற்று ருத்ராக்ஷமகிமையை உணர்ந்து கிருதார்த்தரானார்.

7.2. இப்படிப்பட்ட பெருமை வாய்ந்த இந்த ருத்ராக்ஷம் ஸதாசார சம்பந்தமாக என்னால் வர்ணிக்கப் பட்டது. கவனத்துடன் இனிக் கூறுவதையும் கேட்பாயாக.

7.6. ருத்ராக்ஷங்களுள் சிறந்த கண்களுடன் கூடியவற்றைக் தரிப்பதால் மகத்தான நன்மை ஏற்படும். நெல்லிக்காய் அளவுள்ளது எதுவோ அது சிரேஷ்டமானதென்று கூறப்படுகிறது.

7.7. இலந்தைப்பழ அளவுள்ளது அதை யறிந்தவர்களால் மத்தியமம் எனப்படுகிறது; கடலை யளவுள்ளது அதமம்; இவ்வாறு இதன் அறிவு என்னால் கூறப்பட்டது.

समाः स्निग्धा दृढास्तद्वत्कण्टकैः संयुताः शुभाः।
कृमिदष्टाञ्छिन्नभिन्नान् कण्ठकै रहितांस्तथा ॥ ७. ११ ॥

व्रणयुक्तानाऽऽवृतांश्च षड् रुद्राक्षांस्तु वर्जयेत्।
स्वयमेव कृतद्वारो रुद्राक्षः स्यादिहोत्तमः ॥ ७. १२ ॥

यत्तु पौरुषयत्नेन कृतं तन्मध्यमं भवेत्।
समानस्निग्धान् दृढान् वृत्तान् क्षौमसूत्रेण धारयेत् ॥
॥ ७. २३ ॥

सर्वगात्रेषु साम्येन समानाऽतिविलक्षणा।
निघर्षे हेमलेखाभा यत्र लेखा प्रदृश्यते।
तदक्षमुत्तमं विद्यात्स धार्यः शिवपूजकैः ॥ ७. १४ ॥

7.11–12. ஸமமாயும், பளபளப்புடையதாயும், திடமானதாயும், அதேமாதிரி முட்களுடன் கூடியதாயும் உள்ளவை மங்களமானவை; புழுக்கள் அரித்தவை, பிளவு பட்டவை, உடைந்தவை, முட்களில்லாதவை, காயப்பட்டவை, மூடப்பெற்றவை ஆகிய ஆறுவகை ருத்ராக்ஷங்களை நீக்கிவிட வேண்டும். இயற்கையில் தானுகவே துவாரத்துடன் கூடிய ருத்ராக்ஷம் உத்தமமானது.

7.13. மனித முயற்சியால் துவாரம் செய்யப்பட்டது மத்தியமம் ஆகும். ஸமமானவையும், பளபளப்பானவையும் கெட்டியானவையும், உருண்டையானவையும் ஆகியவற்றைப் பட்டுச்சரட்டில் கோத்து தரிக்க வேண்டும்.

7.14. எல்லாப் பக்கங்களிலும் ஒரே மாதிரி ஸமமாகவும் மிக்க அழகாகவும் உரைத்தால் தங்கரேகை போன்ற ரேகைகள் காணப்படுவதாயும் உள்ள ருத்ராக்ஷம் உத்தமம் என அறிய வேண்டும். சிவ பூஜை செய்பவர்களால் அது அணியத்தக்கது.

ग्रहणे विषुवे चैव संक्रमे अयने तथा ।
दर्शे च पौर्णमासे च पुण्येषु दिवसेष्वपि ।
रुद्राक्षधारणात्सद्यः सर्वपापैः प्रमुच्यते ॥ ७. ४१ ॥

॥ इति रुद्राक्षमाहात्म्यवर्णनम् ॥

॥ इति श्रीदेवीभागवते एकादशस्कन्धे सप्तमोऽध्यायः ॥

7.41. கிரகணம், விஷுவம் (இரவு பகல் சமமான காலம்—சித்திரை, ஐப்பசி மாதப் பிறப்பு), ஸங்க்ரமணம் (மாதப் பிறப்பு), அயனம் (தக்ஷிணாயனம், உத்தராயணம்), அவ்வாறே அமாவாசை, பௌர்ணமி, ஆகிய காலங்களிலும் மற்றும் புண்ணிய தினங்களிலும் ருத்ராக்ஷம் அணிவதால் அப்பொழுதே ஒருவன் எல்லாப் பாவங்களினின்றும் விடுபடுகிறான்.

ருத்ராக்ஷமாஹாத்மியம் முற்றும்.

இங்ஙனம் ஸ்ரீதேவீபாகவதத்தில் பதினோராவது
ஸ்கந்தத்தில் ஏழாவது அத்தியாயம் முற்றும்.

॥ विभूतिमाहात्म्यम् ॥ ४८ ॥

नारायण उवाच —

भूतशुद्धिप्रकारं च कथयामि महामुने ।
मूलाधारात्समुत्थाय कुण्डलीं परदेवताम् ॥ ८. १ ॥

सुषुम्नामार्ग-माश्रित्य ब्रह्मरन्ध्रगतां स्मरेत्।
जीवं ब्रह्मणि संयोज्य हंसमन्त्रेण साधकः ॥ ८. २ ॥

पादादि जानुपर्यन्तं चतुष्कोणं सवज्रकम्।
लं बीजाढ्यं स्वर्णवर्णं स्मरेदवनिमण्डलम् ॥ ८. ३ ॥

जान्वाद्या नाभिचन्द्रार्ध-निभं पद्मद्वयांकितम्
वं बीजयुक्तं श्वेदाभ- मंभसो मण्डलं स्मरेत् ॥ ८.४ ॥

48. விபூதிமாஹாத்மியம்

நாராயணரிஷி கூறியது—

8.1–3. மகாமுனிவரே! இனி பூதசுத்தி செய்யும் முறை கூறுகிறேன். மூலாதாரத்திலிருந்து பரதேவதையான குண்டலினி எழுந்து ஸுஷும்ந மார்க்கத்தின் வழியாக பிரம்மரந்திரத்தில் சேர்ந்ததாக தியானிக்க வேண்டும். ஜீவனை பிரம்மத்திடம் ஹம்ஸமந்திரத்தால் சேர்த்து ஸாதகன் பாதம் முதல் முழங்கால் வரை பிருதிவி மண்டலத்தை நாற்கோணமாயும் வஜ்ரத்துடன் கூடியதாயும் லம் என்றும் பீஜத்தில் நிலைபெற்றதாயும் பொன் நிறமாயும் தியானம் செய்யவேண்டும்.

8.4. அப்பு மண்டலத்தை முழங்கால் முதல் நாபி வரை பாதிச்சந்திரனைப் போன்றதாயும் இரட்டைத்தாமரை யுடன் கூடியதாயும் வம் என்னும் பீஜத்தில் நிலை பெற்ற தாயும் வெண்மை நிறமாயும் தியானம் செய்ய வேண்டும்.

नाभेर्हृदयपर्यन्तं त्रिकोणं स्वस्तिकान्वितम्।
रं बीजेन युक्तं रक्तं स्मरेत्पावकमण्डलम् ॥ ८. ५ ॥

हृदो भ्रूमध्यपर्यन्तं वृत्तं षड्बिन्दुलांछितम्।
यं बीजयुक्तं धूम्राभं नभस्वन्मण्डले स्मरेत् ॥ ८. ६ ॥

आब्रह्मरन्ध्रं भ्रूमध्याद् वृत्तं स्वच्छं मनोहरम्।
हं बीजयुक्तमाकाशमण्डलं च विचिन्तयेत् ॥ ८. ७ ॥

एवं भूतानि संचिन्त्य प्रत्येकं संविलापयेत्।
भुवं जले जलं वह्नौ वह्निं वायौ नभस्यमुम् ॥ ८. ८ ॥

विलाप्य स्वमहंकारे महत्तत्त्वेऽप्यहंकृतिम्।
महान्तं प्रकृतौ मायामात्मनि प्रविलापयेत् ॥ ८. ९ ॥

8.5. அக்னி மண்டலத்தை நாபியிலிருந்து இருதயம் வரை முக்கோணவடிவாயும் ஸ்வஸ்திகத்துடன் கூடியதாயும் ரம் என்னும் பீஜத்தில் நிலை பெற்றதாயும் சிவப்பு நிறமாயும் தியானம் செய்ய வேண்டும்.

8.6. இருதயத்திலிருந்து புருவமத்திவரை ஆறு பிந்துக்களின் அடையாளமுள்ளதும் யம் என்ற பீஜத்துடன் கூடியதும் புகைபோல் தோன்றுவதுமான வட்டத்தை வாயுமண்டலத்தில் தியானம் செய்ய வேண்டும்.

8.7. புருவமத்தியிலிருந்து பிரம்மரந்திரம்வரை மனதைக் கவர்வதும் மாசற்றதும் ஹம் என்ற பீஜத்துடன் கூடியதும் ஆகிய வட்டத்தை ஆகாசமண்டலமாக தியானம் செய்யவேண்டும்.

8.8–9. இவ்வாறு பஞ்சபூதங்களை தியானித்துப் பிறகு ஒவ்வொன்றையும் லயம் செய்யவேண்டும். பூமியை நீரிலும், நீரை அக்னியிலும், அக்னியை வாயுவிலும், அதை ஆகாயத்திலும் ஒடுக்கி, அதை அகங்காரத்திலும், அகங்காரத்தை மஹத்தத்துவத்திலும், மஹத்தத்துவத்தைப் பிரகிருதியிலும், மாயையாகிய பிரகிருதியை ஆத்மாவிலும் லயம் செய்ய வேண்டும்.

शुद्धसंविन्मयो भूत्वा चिन्तयेत्पापपूरुषम्।
वामकुक्षिस्थितं कृष्णमंगुष्ठपरिमाणकम् ॥ ८. १० ॥

वायुबीजं स्मरन्वायुं संपूर्यैनं विशोषयेत्।
स्वशरीरयुतं मन्त्री वह्निबीजेन निर्दहेत् ॥ ८. ११ ॥

कुंभके परिजप्तेन ततः पापनरोद्भवम्।
बहिर्भस्म समुत्सार्य वायुबीजेन रेचयेत् ॥ ८. १४ ॥

सुधाबीजेन देहोत्थं भस्म संप्लावयेत्सुधीः।
भूबीजेन घनीकृत्य भस्मतत्कनकाण्डवत् ॥ ८. १५ ॥

विशुद्धमुकुराकारं जपबीजं विहायसः।
मूर्धादिपादपर्यन्तान्यंगानि रचयेत्सुधीः ॥ ८. १६ ॥

8.10. சுத்த ஞானமயனாயிருந்துகொண்டு தனது வயிற்றின் இடது புறத்தில் கறுப்பாய்க் கட்டைவிரல் அளவினனாயுள்ள பாப புருஷனைச் சிந்திக்க வேண்டும்.

8.11. (யம் என்ற) வாயு பீஜத்தை ஜபித்துக் கொண்டு வாயுவைப் பூரகம் செய்து அவனை உலர்த்த வேண்டும். பிறகு (ரம் என்ற) அக்னி பீஜத்தை மந்திரித்து அவனை நன்கு எரித்துவிடவேண்டும்.

8.14. அக்னி பீஜத்தை ஜபித்துக் கும்பகம் செய்து பாப புருஷனை எரித்ததனால் உண்டான சாம்பலை வெளியாக்குவதாய்ப் பாவித்து (யம் என்ற) வாயு பீஜத்தால் மூச்சை வெளியே விடவும்.

8.15–16. (வம் என்ற) அமிருத பீஜத்தால் உடலிலிருந்து வெளியாக்கின சாம்பலை புத்திமான் நனைக்க வேண்டும். பிறகு (லம் என்ற) பிருதிவி பீஜத்தால் அந்தச் சாம்பலைப் பொன்னுருண்டை போலாக்கிக் கண்ணாடி போன்ற (ஹம் என்ற) ஆகாச பீஜத்தால் புத்திமான் தலை முதல் கால்வரை அங்கங்களை மனதாலமைக்க வேண்டும்.

आकाशादीनि भूतानि पुनरुत्पादयेच्चितः।
सोऽहंमन्त्रेण चात्मान-मानयेद् धृदयांबुजे ॥ ८. १७ ॥
कुण्डलीजीवमादाय परसंगात्सुधामयम्।
संस्थाप्य हृदयाम्भोजे मूलाधारगतां स्मरेत् ॥ ८. १८ ॥
रक्ताम्भोधिस्थ-पोतोल्लसदरुणसरोजाधिरूढा कराब्जैः
शूलं कोदण्ड-मिक्षूद्भव-मलिगुणमप्यंकुशं पंचबाणान्।
बिभ्रणाऽसृक्कपालं त्रिनयनलसिता पीनवक्षोरुहाढ्या
देवी बालार्कवर्णा भवतु सुखकरी प्राणशक्तिः परा नः
॥ ८. १९ ॥

8.17. பிறகு ஆகாசம் முதலிய ஐம்பூதங்களை அந்தச் சாம்பலுருண்டையில் தோற்றுவித்து 'ஸோஹம்' என்ற மந்திரத்தால் அதைத்தனது இருதயகமலத்துள் கொண்டு வரவேண்டும்.

8.18. குண்டலியிலிருந்து ஜீவனை (ஸஹஸ்ராரத்தில்) பரசிவத்துடன் சேர்த்து அதனால் அமிருதமயமாக்கிப் பின் இருதயத்திற்குக் கொணர்ந்து (அங்கு 'ஸோஹம்'—நான் சிவமயன் என்று தியானத்திலிருந்து) பிறகு மூலாதாரத்திற்குச் சென்றுறைவதாய் தியானிக்க வேண்டும்.

8.19. சிவப்புத்தடாகத்தில் ஒரு ஓடத்தின் மேல் சிவப்புத் தாமரையில் வீற்றிருப்பவளாயும், பாசம், வண்டுகளை நாணகக் கொண்ட கரும்புவில், அங்குசம், ஐந்து பாணங்கள், இரத்தகபாலம், ஆகியவற்றைக் கைகளில் தாங்குபவளாயும், முக்கண்களுடனும் பருத்த ஸ்தனங்களுடனும் உதயசூரியன் போல் பிரகாசிப்பவளாயும் உள்ள பிராண சக்தியாகிய 'பரா' தேவி நமக்கு இன்பமளிப்பவளாயிருக்கட்டும்.

एवं ध्यात्वा प्राणशक्तिं परमात्मस्वरूपिणीम्।
विभूतिधारणं कार्यं सर्वाधिकृतिसिद्धये ॥ ८. २० ॥
विभूते-र्विस्तरं वक्ष्ये धारणे च महाफलम्।
श्रुतिस्मृतिप्रमाणोक्तं भस्मधारणमुत्तमम् ॥ ८. २१ ॥
इदं शिरोव्रतं चीर्णं विधिवद्यैर्द्विजातिभिः।
तेषामेव परां विद्यां वदेदज्ञानबाधिकाम् ॥ ९. १ ॥
विधिवच्छ्रद्धया सार्धं न चीर्णं यैः शिरोव्रतम्।
श्रौतस्मार्त-समाचारस्तेषा-मनुपकारकः ॥ ९. २ ॥
शिरोव्रत-समाचारा देवब्रह्मादिदेवताः।
देवता अभवन् विद्वन् खलु नाऽन्येन हेतुना ॥ ९. ३ ॥

8.20. என்றிங்ஙனம் பரமாத்மஸ்வரூபிணியாகிய பிராணசக்தியை தியானித்து எல்லாக்காரியங்களுக்கும் அதிகாரம் சித்திப்பதற்காக விபூதி தாரணம் செய்து கொள்ள வேண்டும்.

8.21. விபூதியின் விவரத்தைப்பற்றியும் அதைத் தரிப்பதால் ஏற்படும் சிறந்த பயனைப் பற்றியும் இனிக் கூறுகிறேன். சுருதியிலும் ஸ்மிருதியிலும் பஸ்மதாரணம் உத்தமமான தென்பது பிரமாணமாகக் கூறப்பட்டுளது.

9.1. (பஸ்மதாரணம் எனும்) இந்த சிரோவிரதம் எந்த துவிஜர்களால் முறைப்படி அனுஷ்டிக்கப் பட்டதோ அவர்களுக்குத்தான் அஞ்ஞானத்தை நாசம் செய்யும் (பிரம்ம வித்தை அல்லது) பராவித்தையை உபதேசிக்கலாம்.

9.2. சிரத்தையுடன் எவர்களால் சிரோவிரதம் அனுஷ்டிக்கப்படவில்லையோ அவர்களுக்கு சுருதியிலும் ஸ்மிருதியிலும் கூறப்பட்ட ஆசாரங்கள் உபகாரம் செய்ய மாட்டா.

9.3. வித்வானே! பிரம்மா முதலிய தேவர்கள் சிரோ விரதத்தை நன்கு அனுஷ்டித்ததாலேயே தேவர்களாயினர். வேறு காரணத்தாலன்று.

शिरोव्रत-मिदं नाम शिरस्याथर्वणश्रुतेः।
यदुक्तं तद्धि नैवान्यत्तत्तु पुण्येन लभ्यते ॥ ९. ६ ॥

शाखाभेदेषु नामानि व्रतस्याऽस्य विभेदतः।
पठ्यन्ते मुनिशार्दूल शाखास्वेकव्रतं हि तत् ॥ ९. ७ ॥

सर्वशाखासु वस्त्वेकं शिवाख्यं सत्यचिद्घनम्।
तथा तद्विषयं ज्ञानं तथैव च शिरोव्रतम् ॥ ९. ८ ॥

शिरोव्रतविहीनस्तु सर्वधर्मविवर्जितः।
अपि सर्वासु विद्यासु सोऽधिकारी न संशयः ॥ ९. ९ ॥

शिरोव्रतमिदं कार्यं पापकान्तारदाहकम्।
साधनं सर्वविद्यानां यतस्तत्सम्यगाचरेत् ॥ ९. १० ॥

9.6. சிரோவிரதம் என்று அதர்வண வேத உபநிஷத்தில் எது பிரசித்தமாகக் கூறப்பட்டுள்ளதோ அது இதைத் தவிர வேறன்று; அது புண்ணியத்தால் தான் அடையப் படுகிறது.

9.7. முனிசிரேஷ்டரே! வெவ்வேறு சாகைகளில் இந்த விரதத்திற்கு வெவ்வேறு பெயர்கள் கூறப்படுகின்றன. எனினும் அவ்விரதம் ஒன்றேயாம்.

9.8. எல்லா சாகைகளிலும் ஸத்தியசித்கனமான சிவம் எனும் பரம்பொருள் ஒன்றேதான் கூறப்படுகிறது. அதை விஷயமாய்க் கொண்ட ஞானம் அப்படிப்பட்டது. அவ்வாறேதான் சிரோவிரதமும்.

9.9. சிரோவிரதம் செய்யாதவன் எல்லா தர்மங்களினின்றும் விலக்கப்பட்டவனுவான். சிரோவிரதம் செய்தவன் எல்லா உபாஸனைகளுக்கும் அதிகாரியாவான் என்பதில் சந்தேகமில்லை.

9.10. பாவமாகிய பெருங்காட்டை எரிக்கக் கூடிய இந்த சிரோவிரதத்தைச் செய்ய வேண்டும். எல்லா உபாஸனைகளுக்கும் ஸாதனமாயுள்ளதால் அதை நன்கு அனுசரிக்க வேண்டும்.

अग्निरित्यादिभिर्मन्त्रैः षड्भिः शुद्धेन भस्मना।
सर्वांगोद्धूलनं कुर्याच्छिरोव्रतसमाह्वयम् ॥ ९. १२ ॥
एतच्छिरोव्रतं कुर्यात्सन्ध्याकालेषु सादरम्।
यावद्विद्योदयस्तावत्तस्य विद्या खलूत्तमा ॥ ९. १३ ॥
द्वादशाब्द-मथाब्दं वा तदर्धं च तदर्धकम्।
प्रकुर्याद् द्वादशाहं वा संकल्पेन शिरोव्रतम् ॥ ९. १४ ॥
व्रतं पाशुपतं चीर्णं यैर्द्विजैरादरेण तु।
तेषामेवोपदेष्टव्यमिति वेदानुशासनम् ॥ ९. २० ॥
यः पशुस्तत्पशुत्वं च व्रतेनानेन सन्त्यजेत्।
तान् हत्वा न स पापीयान् भवेद्वेदान्तनिश्चयः ॥ ९. २१ ॥

9.12. 'அக்னிரிதி' முதலிய ஆறு மந்திரங்களை உச்சரித்துப் பரிசுத்தமான விபூதியால் எல்லா அங்கங்களிலும் பூசிக் கொண்டு சிரோவிரதம் எனும் இதைச் செய்ய வேண்டும்.

9.13. இந்தச் சிரோவிரதத்தை ஞானமுதிப்பதற்குரிய ஸந்தியாகாலங்களில் சிரத்தையுடன் அனுஷ்டிக்க வேண்டும். அப்பொழுது அவனுக்கு உத்தமமான ஞானோதயம் ஏற்படும்.

9.14. பன்னிரண்டு வருஷம், அல்லது ஒரு வருஷம் அதில் பாதி, பாதியில் பாதி, அல்லது பன்னிரண்டு நாளாவது ஸங்கல்பத்துடன் சிரோவிரதம் அனுஷ்டிக்க வேண்டும்.

9.20. எந்த துவிஜர்களால் இந்தப் பாசுபத விரதம் ஆதரவுடன் அனுஷ்டிக்கப்பட்டதோ அவர்களுக்கே (பிரம்ம ஞானம்) உபதேசிக்கத் தகுந்தது என்பது வேதத்தின் கட்டளை.

9.21. எவன் பசுவோ அவன் தன் பசுத்தன்மையை இந்த விரதத்தால் ஒழிக்க வேண்டும். பசுத்தன்மை ஒழிந்தவன் பாவமொழிந்தவனாகிறான் என்பது வேதாந்த நிச்சயம்.

त्रिपुण्ड्रधारणं प्रोक्तं जाबालैरादरेण तु ।
त्रियम्बकेन मन्त्रेण सतारेण शिवेन च ।। ९. २२ ।।

त्रिपुण्ड्रं धारयेन्नित्यं गृहस्थाश्रममाश्रितः ।
ओंकारेण त्रिरुक्तेन सहंसेन त्रिपुण्ड्रकम् ।। ९. २३ ।।

धारयेद्भिक्षुको नित्यमिति जाबालिकी श्रुतिः ।
त्रियम्बकेन मन्त्रेण प्रणवेन शिवेन च ।। ९. २४ ।।

गृहस्थश्च वानप्रस्थो धारयेच्च त्रिपुण्ड्रकम् ।
मेधावीत्यादिना वाऽपि ब्रह्मचारी दिने दिने ।। ९. २५ ।।

भस्मना सजलेनाऽपि धारयेच्च त्रिपुण्ड्रकम् ।
ब्राह्मणो विधिनोत्पन्न-स्त्रिपुण्ड्रभस्मनैव तु ।। ९. २६ ।।

ललाटे धारयेन्नित्यं तिर्यग्भस्मावगुण्ठनम् ।
आदिब्राह्मणभूतेन त्रिपुण्ड्रं भस्मना धृतम् ।। ९. २७ ।।

9.22–27. த்ரிபுண்ட்ரதாரணம் (மூன்று பட்டையாக விபூதியணிதல்) ஜாபால உபநிஷத்தில் நன்கு கூறப்பட்டுள்ளது. 'த்ரியம்பக' மந்திரத்தாலும் ஓங்காரத்துடன் கூடிய சிவமந்திரத்தாலும் கிருஹஸ்தாசிரமிகளால் த்ரிபுண்ட்ரம் நாள்தோறும் தரிக்கப்படவேண்டும். மூன்று முறை ஹம்ஸமந்திரத்துடன் கூடிய ஓங்காரத்தால் ஸந்நியாஸிகள் த்ரிபுண்ட்ரத்தை தினந்தோறும் தரிக்க வேண்டும் என்பது ஜாபால சுருதி. த்ரியம்பக மந்திரத்தாலும் பிரணவத்துடன் கூடிய சிவமந்திரத்தாலும் கிருஹஸ்தனைப் போல் வானப்பிரஸ்தனும் த்ரிபுண்ட்ரம் தரிக்க வேண்டும். பிரம்மசாரியானவன் ''மேதாவீ' முதலிய மந்திரங்களால் நாள்தோறும் பஸ்மத்தாலோ அல்லது அதை ஜலத்தில் குழைத்தோ த்ரிபுண்ட்ரதாரணம் செய்து கொள்ளவேண்டும். பிராம்மணன் விதிப்படி உற்பத்தி செய்யப்பட்ட திரிபுண்ட்ர பஸ்மத்தால் நெற்றியில் குறுக்காக எப்பொழுதும் இட்டுக் கொள்ள வேண்டும். ஆதிப்பிராம்மணராகிய பிரம்மாவால் அங்ஙனம் பஸ்மத்தால் த்ரிபுண்ட்ரம் தரிக்கப்பட்டது.

यतोऽत एव विप्रस्तु त्रिपुण्ड्रं धारयेत्सदा ।
भस्मना वेदसिद्धेन त्रिपुण्ड्रं देहगुण्ठनम् ।
रुद्रलिंगार्चनं वाऽपि मोहतोऽपि च न त्यजेत् ॥ ९. २९ ॥
भस्माग्निहोत्रजं वाऽथ विरजाग्नि समुद्भवम् ।
आदरेण समादाय शुद्धे पात्रे निधाय तत् ॥ ९. ३६ ॥
प्रक्षाल्य पादौ हस्तौ च द्विराचम्य समाहितः ।
गृहीत्वा भस्म तत्पंचब्रह्ममन्त्रैः शनैः शनैः ॥ ९. ३७ ॥
प्राणायामत्रयं कृत्वा अग्निरित्यादि मन्त्रितम् ।
तैरेव सप्तभिर्मन्त्रैस्त्रिवारमभिमन्त्रयेत् ॥ ९. ३८ ॥
ओमापो ज्योतिरित्युक्त्वा ध्यात्वा मन्त्रानुदीरयेत् ।
सितेन भस्मना पूर्वं समुद्धूल्य शरीरकम् ॥ ९. ३९ ॥

9.29. ஆகையால் பிராம்மணன் எப்பொழுதும் திரி புண்ட்ரம் தரிக்க வேண்டும். வேதஸித்தமான பஸ்மத்தால் தேகத்தை மறைத்துத் திரிபுண்ட்ரம் தரித்தலேயும் ருத்ர லிங்கத்தை அர்ச்சித்தலேயும் மதிமயக்கத்தாலும் விட்டு விடுதல் கூடாது.

9.36–37. அக்னி ஹோத்திரத்திலோ விரஜாஹோ மத்திலோ உண்டான பஸ்மத்தை ஆதரவுடன் சேகரித்துச் சுத்தமான பாத்திரத்தில் வைத்துக் கொண்டு கைகால்களே நன்ருகச் சுத்தம் செய்து கொண்டபின் மௌனமாக இருமுறை ஆசமனம் செய்து அந்த பஸ்மத்தை எடுத்து மெதுவாக பஞ்சப்பிரம்ம மந்திரங்களால் (மந்திரிக்க வேண்டும்).

9.38. மூன்று பிராணுயாமம் செய்து 'அக்னிரிதி' முதலிய ஏழு மந்திரங்களால் மூன்று முறை மந்திரிக்க வேண்டும்.

9.39. 'ஓமாபோஜ்யோதி:' என்ற மந்திரத்தைச் சொல்லி தியானித்து, மந்திரங்களே ஜபிக்கவேண்டும். வெண்மையான விபூதியால் முதலில் தேகத்தில் பூசிக் கொள்ள வேண்டும்.

विपापो विरजो मर्त्यो जायते नाऽत्र संशयः।
ततो ध्यात्वा महाविष्णुं जगन्नाथं जलाधिपम् ॥ ६. ४० ॥

संयोज्य भस्मना तोय-मग्निरित्यादिभिः पुनः।
विमृज्य साम्बं ध्यात्वा च समुद्धूल्योर्ध्वमस्तकम् ॥ ६. ४१ ॥

ते च भावनया ब्रह्मभूतेन सितभस्मना।
ललाटवक्षःस्कन्धेषु स्वाश्रमोचितमन्त्रतः ॥ ६. ४२ ॥

मध्यमानामिकांगुष्ठैरनुलोमविलोमतः।
त्रिपुण्ड्रं धारयेन्नित्यं त्रिकालेष्वपि भक्तितः ॥ ६. ४३ ॥

9.40–43. அதனுல் பாவமற்றவனுகவும் மாசற்றவனுகவும் மனிதன் ஆவான் என்பதில் சந்தேகமில்லே. ஜலத்திற்கு அதிபதியும் ஜகந்நாதனுமான மகாவிஷ்ணுவை தியானித்து பஸ்மத்துடன் ஜலத்தைச் சேர்த்து, மறுபடியும் 'அக்னிரிதி' முதலிய மந்திரங்களேச் சொல்லிக்குழைத்து ஸாம்ப பரமேசுவரனே தியானித்து, முதலில் தலே உச்சியில் இட்டுக்கொண்டு பின்பு அதே தியானத்துடன் பிரம்மமேயாகிய வெள்ளே விபூதியால் நெற்றி, மார்பு, தோள் முதலிய ஸ்தானங்களில் தத்தம் ஆசிரமத்திற்குரிய மந்திரங்களால் நடுவிரல், மோதிரவிரல் ஆகியவற்ருல் இடமிருந்து வலமாக இரண்டு ரேகையும் கட்டைவிரலால் எதிர்புறமாக நடுவில் ஒரு ரேகையுமாக பக்தியுடன் திரிபுண்ட்ரத்தை மூன்று வேளேகளிலும் தினந்தோறும் இட்டுக் கொள்ள வேண்டும்.

आग्नेयं गौणमज्ञानध्वंसकं ज्ञानसाधकम्।
गौणं नानाविधं विद्धि ब्रह्मन् ब्रह्मविदां वर ॥ १०. १ ॥

अग्निहोत्राग्निजं तद्व-द्विरजानलजं मुने।
औपासनसमुत्पन्नं समिदग्निसमुद्भवम् ॥ १०. २ ॥

पचनाग्निसमुत्पन्नं दावानलसमुद्भवम्।
त्रैवर्णिकानां सर्वेषामग्निहोत्रसमुद्भवम् ॥ १०. ३ ॥

विरजानलं चैव धार्यं भस्म महामुने।
औपासनमुत्पन्नं गृहस्थानां विशेषतः।
समिदग्निसमुत्पन्नं धार्यं वै ब्रह्मचारिणा ॥ १०. ४ ॥

कालश्चित्रा पौर्णमासी देशः स्वीयः परिग्रहः।
क्षेत्रारामाद्यरण्यं वा प्रशस्तः शुभलक्षणः ॥ १०. ६ ॥

10.1–4. பிரம்மஞானிகளிற் சிறந்தவரே! பிரம்மஸ்வரூபியே! அக்ஞானத்தைப் போக்குவதும் ஞானத்தைச் சாதிப்பதுமான அக்னியிலிருந்துண்டானது கௌணபஸ்மம் எனப்படும். முனிவரே! அது அக்னிஹோத்ராக்கினியிலுண்டானது, அவ்வாறே விரஜா ஹோமாக்கினியிலுண்டானது, ஔபாஸனக்னியிலுண்டானது, ஸமிதாதான அக்னியிலுண்டானது, சமையலடுப்பிலுண்டானது, காட்டுத்தியிலுண்டானது எனப் பலவகைப்படும். முனிசிரேஷ்டரே! மூன்று வருணத்தாரனைவருக்கும் பொதுவாக அக்னிஹோத்திரபஸ்மமும் விரஜாக்னி பஸ்மமும் தரித்துக் கொள்ளத் தக்கது. ஔபாஸனத்திலுண்டானது விசேஷமாக கிருஹஸ்தர்களுக்காகும். ஸமிதாதானத்தில் உண்டானது பிரம்மசாரியால் தரித்துக்கொள்ளத்தக்கது.

10.6. (விரஜாஹோமத்திற்கு) காலம் சித்ரா பௌர்ணமி. இடம் தனது வீடோ, புண்ணிய க்ஷேத்திரமோ, பூந்தோட்டமோ, சுபலக்ஷணமுள்ள வனமோ சிறந்தது.

तत्र पूर्वत्रयोदश्यां सुस्नातः सुकृताह्निकः।
अनुज्ञाप्य स्वमाचार्यं संपूज्य प्रणिपत्य च ॥ १०.७॥

पूजां वैशेषिकीं कृत्वा शुक्लाम्बरधरः स्वयम्।
शुद्धयज्ञोपवीती च शुक्लमाल्यानुलेपनः ॥ १०.८ ॥

दर्भासने समासीनो दर्भमुष्टिं प्रगृह्य च।
प्राणायामत्रयं कृत्वा प्राङ्मुखो वाप्युदङ्मुखः ॥ १०.९ ॥

ध्यात्वा देवं च देवीं च तद्विज्ञापनवर्त्मना।
व्रतमेतत्करोमीति भवेत्संकल्पदीक्षितः ॥ १०.१० ॥

10.7. அங்கு சுக்லபக்ஷத்திரயோதசியன்று ஸ்நாநம் செய்து ஆஹ்னிகங்களை நன்கனுஷ்டித்து தனது ஆசாரியனைப் பூஜித்து நமஸ்கரித்து அவருடைய அனுமதி பெற்று (அந்த ஹோமத்தைத் தொடங்கவேண்டும்).

10.8. வெண்மையான ஆடையுடுத்து சுத்தமான யக்ஞோபவீதமணிந்து வெள்ளையான மாலை பூச்சு முதலியவற்றுடன் விசேஷ பூஜையை முடித்தபின் (இந்த ஹோமத்தை ஆரம்பிக்க வேண்டும்).

10.9–10. கிழக்கு நோக்கியோ வடக்கு நோக்கியோ தர்ப்பாஸனத்திலமர்ந்து தர்ப்பையைக் கையில் பிடித்துக் கொண்டு மூன்று பிராணாயாமம் செய்து தேவியுடன் கூடிய பரமேசுவரனை தியானிக்க வேண்டிய முறையில் தியானித்து 'இந்த விரதத்தைச் செய்கிறேன்' என்று ஸங்கல்பத்துடன் காரியத்தில் முழுமனதையும் செலுத்தியவனாக வேண்டும்.

अग्निमादाय विधिवद्विरजाहोमकारणात् ।
हुत्वाऽऽज्येन समिद्भिश्च चरुणा च यथाविधि ॥ १०. १४ ॥

पूताहात्पुरतो भूयस्तत्त्वानां शुद्धिमुद्दिशन् ।
जुहुयान्मूलमन्त्रेण तैरेव समिदादिभिः ॥ १०. १५ ॥

तत्त्वान्येतानि मे देहे शुद्ध्यन्तामित्यनुस्मरन् ।
पश्चाद्भूतादितन्मात्राः पंचकर्मेन्द्रियाणि च ॥ १०. १६ ॥

ज्ञानकर्मविभेदेन पंच पंच विभागशः ।
त्वगादि धातवः सप्त पंच प्राणादि वायवः ॥ १०. १७ ॥

मनोबुद्धिरहंकारो गुणाः प्रकृतिपूरुषौ ।
रागो विद्या कला चैव नियतिः काल एव च ॥ १०. १८ ॥

10.14–15. விரஜா ஹோமத்திற்காக அக்னியை முறைப்படி ஏற்று (ஔபாஸனக்னியில் அவரவர் ஸூத்ரப்படி ஆரம்ப ஹோமம் செய்து) நெய்யாலும், ஸமித்தாலும், சருவாலும் விதிப்படி ஹோமம் செய்து, மனேசுத்திக்காக முதலில் (பஞ்சாக்ஷரீ) மூலமந்திரத்தால் முன்போலவே ஸமித்து முதலியவற்ருல் ஹோமம் செய்ய வேண்டும்.

10.16. எனது உடலிலுள்ள இத்தத்துவங்கள் சுத்தியாகட்டும் என்று தியானித்து, பஞ்சபூதங்கள், தன்மாத்திரைகள், ஐந்து கர்மேந்திரியங்கள் (சுத்தியடைய ஹோமம் செய்ய வேண்டும்.)

10.17. ஞானகர்ம வேற்றுமையால் ஐந்து கர்மேந்திரியங்களன்றி ஐந்து ஞானேந்திரியங்கள்; தோல் முதலிய தாதுக்கள், ஏழு; பிராணன் முதலிய ஐந்து வாயுக்கள்;

10.18 மனது, புத்தி, அஹங்காரம், குணங்கள். பிரகிருதி, புருஷன், ராகம். வித்தை, கலே, நியதி, காலம்;

माया च शुद्धविद्या च महेश्वर सदाशिवौ ।
शक्तिश्च शिवतत्त्वं च तत्त्वानि क्रमशो विदुः ॥ १०. १९ ॥

मन्त्रैस्तु विरजैर्हुत्वा होताऽसौ विरजो भवेत् ।
अथ गोमयमादाय पिण्डीकृत्याऽभिमन्त्र्य च ॥ १०. २० ॥

न्यस्याऽग्नौ तं च संरक्ष्य दिने तस्मिन् हविष्यभुक् ।
प्रभाते च चतुर्दश्यां कृत्वा सर्वं पुरोदितम् ॥ १०. २१ ॥

तस्मिन् दिने निराहारः कालशेषं समापयेत् ।
प्रातः पर्वणि चाप्येवं कृत्वा होमावसानतः ॥ १०. २२ ॥

उपसंहृत्य रुद्राग्निं गृहीत्वा भस्म यत्नतः ।
संकलीकृत्य तद्भस्म विरजानलसम्भवम् ॥ १०. २५ ॥

10.19. மாயை, சுத்தவித்தை, மஹேச்வரன், ஸதா சிவன், சக்தி, சிவதத்துவம் என வரிசையாகத் தத்துவங் கள்;

10.20–22. இவ்வாறுன விரஜாஹோம மந்திரங் களால் ஹோமம் செய்தால் ஹோமம் செய்பவன் மாசற்ற வனுகிறுன். பிண்டமாகச் செய்த சாணியை மந்திரித்து அந்த அக்னியிலிட்டு அதை நன்கு காப்பாற்றி அன்று ஹவிஷ்யத்தை மட்டும் ஆகாரமாய்க் கொண்டு மறுநாள் பொழுது விடிந்ததும் சதுர்த்தசியில் முன் கூறியபடி எல்லா வற்றையும் செய்து எஞ்சிய நேரத்தை அன்று ஆகாரமின்றி உபவாஸத்தில் கழித்துக் காலைப்பருவ தினத்திலும் ஹோமம் முடிந்தபின் அவ்வாறே செய்து;

10.25. ருத்ராக்னியை உபஸம்ஹாரம் செய்து விரஜாக் னியிலிருந்துண்டான அந்த பஸ்மத்தைச் கவனத்துடன் சேகரித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

अग्निरित्यादिभि-र्मन्त्रैः षड्भिराथर्वणैः क्रमात् ।
विमृज्यांगानि मूर्धादि चरणान्तं च तैः स्पृशेत् ।। १०. २६ ।।

सर्वांगोद्धूलनं कुर्यात्प्रणवेन शिवेन वा ।
ततश्च पुण्ड्रं रचयेत्त्रियायुष समाह्वयम् ।। १०. २८ ।।

शिवभावं समागम्य शिवभावमथाचरेत् ।
कुर्यात्त्रिसन्ध्यमप्येव-मेतत्पाशुपतं व्रतम् ।
भुक्तिमुक्तिप्रदं चैव पशुत्वं विनिवर्तयेत् ।। १०. २९ ।।

तत्पशुत्वं परित्यज्य कृत्वा पाशुपतं व्रतम् ।
पूजनीयो महादेवो लिंगमूर्तिः सदाशिवः ।। १०. ३० ।।

भस्मस्नानं महापुण्यं सर्वसौख्यकरं परम् ।
शान्तिकं पौष्टिकं भस्म कामदं च त्रिधा भवेत् ।। १०. ३३ ।।

10.26. 'அக்னிரிதி' முதலிய ஆறு அதர்வண மந்திரங்களால் தலை முதல் கால் வரை எல்லா அங்கங்களிலும் பூசிக் கொள்ள வேண்டும்.

10.28: பிரணவத்தாலோ சிவ மந்திரத்தாலோ எல்லா அங்கங்களிலும் தூவிக் கொள்ள வேண்டும். பிறகு 'த்ரியாயுஷ' மந்திரங்களைச் சொல்லி புண்ட்ரம் தரிக்க வேண்டும்.

10.29. சிவ பாவனையை ஏற்று சிவ பாவனையை அனுஷ்டிக்க வேண்டும். இவ்வாறு மூன்று ஸந்தியா காலங்களிலும் செய்ய வேண்டும். இது பாசுபத விரதம் எனப்படும். இது போகத்தையும் முக்தியையும் அளித்து பசுத்தன்மையினின்று விடுவிக்கும்.

10.30. அவ்வாறு பாசுபத விரதத்தை அனுஷ்டித்துப் பசுத்தன்மையை விடுத்து ஸதாசிவனும் லிங்க மூர்த்தியுமான மகாதேவனைப் பூஜிக்க வேண்டும்.

10.33. பஸ்மஸ்நானம் மகா புண்ணியமானது, உயர்ந்த ஸௌக்கியமனைத்தையும் அளிக்கவல்லது, சாந்தியளிப்பது, புஷ்டியளிப்பது, ஆசையைப் பூர்த்தி செய்வது என அது மூவகைப்படும்.

पौर्णमास्या-ममावास्या-मष्टम्यां वा विशुद्धधीः।
प्रासादेन तु मन्त्रेण गृहीत्वा गोमयं शुभम्॥ ११. ९॥
हृदयेन तु मन्त्रेण पिण्डीकृत्य तु गोमयम्।
रविरश्मि सुसन्तप्तं शुचौ देशे मनोहरे॥ ११. १०॥
तुषेण वा बुसैर्वापि प्रासादेन तु निक्षिपेत्।
अरण्युद्भवमग्निं वा श्रोत्रियागारजं तु वा॥ ११. ११॥
तदग्नौ विन्यसेत्तं च शिवबीजेन मन्त्रतः।
गृह्णीयादथ तत्राऽग्निकुण्डाद्भस्म विचक्षणः॥ ११. १२॥
नवपात्रं समादाय प्रासादेन तु निक्षिपेत्।
केतकी पाटली तद्वदुशीरं चन्दनं तथा॥ ११. १३॥
नानासुगन्धि द्रव्याणि काश्मीरप्रभृतीनि च।
निक्षिपेत्तत्र पात्रे तु सद्यो मन्त्रेणशु द्धधीः॥ ११. १४॥

11.9–11. பௌர்ணமி அல்லது அமாவாசை அல்லது அஷ்டமியில் பரிசுத்தமான புத்தியுடன் (ஹ்ஸௌம்: ஸ்ஹௌ: ம் எனும்) ப்ராஸாத மந்திரத்தால் சுபமான கோமயத்தை (பசுவின் சாணியை) எடுத்து (ஹம் ஸம் ரம் ஈம் எனும் தஹர) ஹ்ருதய மந்திரத்தால் உருண்டையாக்கி சூரியகிரணத்தில் உலர்த்தி மனதிற்கினிய சுத்தமான இடத்தில் உமியின் மேலோ பதர் மேலோ ப்ராஸாத மந்திரத்தை உச்சரித்துக் கொண்டு அடுக்கி அரணிக்கட்டையில் உண்டாக்கின அக்னியையோ அல்லது வேதியர் வீட்டு அக்னியையோ மூட்ட வேண்டும்.

11.12–14. அந்த அக்னியில் சிவபீஜ மந்திரத்தை நியாஸம் செய்து அறிவாளியானவன் அந்த அக்னிகுண்டத்திலிருந்து பிறகு பஸ்மத்தை எடுத்துப் புதியதொரு பாத்திரத்தில் பிராஸாத மந்திரத்தை உச்சரித்துச் சேமித்து வைக்க வேண்டும். தாழம்பூ, பாடலீ புஷ்பம், வெட்டிவேர், சந்தனம், குங்குமப்பூ முதலிய பல வாசனை திரவியங்களை அந்தப் பாத்திரத்தில் 'ஸத்யோ' மந்திரத்தால் சுத்த புத்தியுடன் சேர்க்க வேண்டும்.

जलस्नानं पुरा कृत्वा भस्मस्नानमतः परम् ।
जलस्नाने त्वशक्तश्च भस्मस्नानं समाचरेत् ॥ ११. १५ ॥

प्रक्षालय पादहस्तौ च शिरश्चेशानमन्त्रतः ।
समुद्धूल्य ततः पश्चादाननं तत्पुरुषेण तु ॥ ११. १६ ॥

अघोरेण तु हृदयं नाभि वामेन तत्परम् ।
सद्यो मन्त्रेण सर्वांगं समुद्धूलय विचक्षणः ॥ ११. १७ ॥

पूर्ववस्त्रं परित्यज्य शुद्धवस्त्रं परिग्रहेत् ।
प्रक्षाल्य पादौ हस्तौ च पश्चादाचमनं चरेत् ॥ ११. १८ ॥

भस्मनोद्धूलनाभावे त्रिपुण्ड्रं तु विधीयते ।
मध्याह्नात्प्राग्जलैर्युक्तं परतो जलवर्जितम् ॥ ११. १९ ॥

11.15. ஜலத்தில் முதலில் ஸ்நானம் செய்த பின் பஸ்மஸ்நானம் செய்ய வேண்டும். ஜலஸ்நானம் செய்யச் சக்தியில்லாத பொழுது ஒருவன் பஸ்மஸ்நானம் மட்டும் செய்யலாம்.

11.16-18. கைகால்களேக் கழுவிக்கொண்டு சிரசில் ஈசானமந்திரத்தால் உத்தூளனம் செய்து கொண்டு பிறகு தத்புருஷ மந்திரத்தால் முகத்திலும், அகோர மந்திரத்தால் இருதயத்திலும், வாமதேவ மந்திரத்தால் நாபியிலும், ஸத்யோஜாத மந்திரத்தால் எல்லா அங்கங்களிலும் பூசிக்கொண்டு, முன்புடுத்திருந்த வஸ்திரத்தை நீக்கி சுத்த வஸ்திரத்தை அணிய வேண்டும். மறுபடி கைகால்களேக் கழுவி ஆசமனம் செய்ய வேண்டும்.

11.19. பஸ்மத்தால் அங்கம் முழுதும் இவ்வாறு பூசிக்கொள்ளாத பொழுது த்ரிபுண்ட்ரம் விதிக்கப்படுகிறது—நடுப்பகலுக்கு முன்பு ஜலத்தில் குழைத்தும், பிறகு ஜலமில்லாமலும்.

ब्रह्मविष्णुमहेशानास्तिस्रो रेखा इति स्मृताः।
आद्यो ब्रह्मा ततो विष्णुस्तदूर्ध्वं तु महेश्वरः ॥ ११. २५ ॥

शिवलिंगं मणिः सख्यं मन्त्रः पंचाक्षरस्तथा।
विभूतिरौषधं पुंसां मुक्तिस्त्री-वश्यकर्मणि ॥ १३. १५ ॥

एतानि पंचशिवमन्त्रपवित्रितानि
भस्मानि कामदहनांगविभूषितानि।
त्रैपुण्ड्रकाणि रचितानि ललाटपट्टे
लुम्पन्ति दैवलिखितानि दुरक्षराणि ॥ १३. ३५ ॥

भासनाद्भसितं प्रोक्तं भस्म कल्मषभक्षणात्।
भूतिर्भूतिकरी पुंसां रक्षा रक्षाकरी पुरा ॥ १४. ३२ ॥

11.25. மூன்று ரேகைகளும் பிரம்மா, விஷ்ணு, மஹேசுவரர்கள் என ஸ்மிருதி கூறுகிறது; அடியிலுள்ளது பிரம்மா, பின்பு விஷ்ணு, அதற்கு மேல் மஹேசுவரன்.

13.15. (வசிய கர்மாவில் மணி மந்திரம், ஔஷதம் என்பவை பயன் படும்.) ஒரு புருஷனுக்கு முக்தி எனும் ஸ்த்ரீயை வசப்படுத்தும் கர்மாவில் நேயமான சிவலிங்கம் மணி அல்லது ரத்னம், பஞ்சாக்ஷரம் மந்திரம், விபூதி ஔஷதம்.

13.35. ஐந்து சிவ மந்திரங்களால் புனிதமானதும் காமனையெரித்த சிவனுக்கு பூஷணம் போன்றதும் த்ரிபுண்ட்ர வடிவில் அழகியதுமான விபூதிகள் எவனுடைய நெற்றியில் விளங்குகின்றனவோ அவனுடைய தலையில் தெய்வம் எழுதிய துரக்ஷரங்களை அவை அழித்துவிடும்.

14.32. பிரகாசப்படுத்துவதால் விபூதியானது 'பஸிதம்' என்றும், பாவத்தை பக்ஷணம் செய்வதால் 'பஸ்மம்' என்றும், மனிதர்க்கு ஐசுவரியமளிப்பதால் 'பூதி' என்றும், முன்னதாக ரக்ஷிப்பதால் 'ரக்ஷா' என்றும் கூறப்படுகிறது.

त्रिपुण्ड्रधारणं दृष्ट्वा भूतप्रेतपुरः सराः ।
भीताः प्रकम्पिताः शीघ्रं नश्यन्त्येव न संशयः ॥ १४. ३३ ॥

केवलं वारुणं स्नानं देहे बाह्यामलापहम् ।
विभूतिस्नानमनघं बाह्यान्तरमलापहम् ॥ १४. ४३ ॥

भस्मस्नानं श्रुतिप्रोक्त-माग्नेयं स्नानमुच्यते ।
अन्तर्बहिश्च संशुद्धं शिवपूजाफलं लभेत् ॥ १४. ४४ ॥

गायत्रीं मूलमेवाहु-र्ब्राह्मण्ये मुनिपुंगवाः ।
सा भस्मधारणाभावे न केनाप्युपदिश्यते ॥ १५. ६ ॥

न तावदधिकारोऽस्ति गायत्री-ग्रहणे मुने ।
यावन्न भस्म भालादौ धृतमग्निसमुद्भवम् ॥ १५. ७ ॥

14.33. பூதம் பிரேதம் முதலியவை த்ரிபுண்ட்ரதாரணத்தைக் கண்டு பயமடைந்து நடுநடுங்கி விரைவில் அழிந்து போகின்றன என்பதில் சந்தேகமில்லை.

14.43. ஜலஸ்நானம் மட்டும் செய்தால் அது தேகத்திலுள்ள வெளியழுக்கைப் போக்கும். விபூதிஸ்நானம் பாவத்தைப் போக்கி உள்ளும் புறமும் உள்ள மலத்தையழிக்கும்.

14.44. பஸ்மஸ்நானம் சுருதியில் ஆக்னேயஸ்நானம் என்று கூறப்பட்டுளது. அதனுல் அகமும் புறமும் சுத்தமாகி சிவ பூஜையின் பயனை ஒருவன் அடையலாம்.

15.6. பிராம்மணத்தன்மை சித்திப்பதற்கு காயத்ரியே மூலம் என்று முனிசிரேஷ்டர்கள் கூறியுள்ளார்கள். பஸ்மதாரணமில்லாவிட்டால் எவராலும் அந்த காயத்ரீ உபதேசிக்கப்படுவதில்லை.

15.7. முனிவரே! அக்னியில் உற்பவித்த பஸ்மம் எதுவரை நெற்றி முதலிய அங்கங்களில் அணியப்படவில்லையோ அதுவரை காயத்ரியைப் பெற்றுக் கொள்வதற்கு ஒருவனுக்கு அதிகாரமில்லை.

भस्महीनललाटत्वं न ब्राह्मण्यानुमापकम् ।
एवमेव मया ब्रह्मन् हेतुरुक्तः सुपुण्यदः ।। १५. ८ ।।

यथोपवीतरहितैः सन्ध्या न क्रियते द्विजैः ।
तथा सन्ध्या न कर्तव्या विभूतिरहितैरपि ।। १५. १५ ।।

अकारोऽनामिका प्रोक्त उकारो मध्यमांगुलिः ।
मकारस्तर्जनी तस्मात् त्रिपुण्ड्रं त्रिगुणात्मकम् ।। १५. २४ ।।

ऊर्ध्वपुण्ड्रविधिं चैवाप्यधिकारी विभेदतः ।
प्रवक्ष्ये मुनिशार्दूल वैष्णवागमलोकनात् ।। १५. ७७ ।।

15.8. பஸ்மமில்லாத நெற்றி பிராம்மணனுக்குப் பொருந்தாது. பிரம்மஸ்வரூபியே! இவ்வாறுகப் புண்ணிய மளிக்கும் காரணம் என்னுல் கூறப்பட்டது.

15.15. யக்ஞோபவீதமில்லாமல் துவிஜர்களால் எவ்வாறு சந்தியாவந்தனம் செய்யப்படுவதில்லையோ அவ்வாறே விபூதியணியாமலும் ஸந்தியாவந்தனம் செய்யத்தகாது.

15.24. பவித்ரவிரல் அகாரம் என்றும், நடுவிரல் உகாரம் என்றும், ஆள்காட்டி விரல் மகாரம் என்றும் கூறப்படும். ஆகையால் (அம் மூன்று விரல்களால் இட்டுக் கொள்ளப்பட்ட) த்ரிபுண்ட்ரம் முக்குணவடிவானது (மும் மூன்முன எல்லாத் தத்துவங்களையும் குறிக்கும்).

15.77. முனிசிரேஷ்டரே! அதிகாரி பேதத்தால் ஊர்த்வபுண்ட்ரவிதியும் வைஷ்ணவாகம நோக்கத்தின்படி இனிக் கூறுகிறேன்.

पर्वताग्रे नदीतीरे शिवक्षेत्रे विशेषतः।
सिन्धुतीरे च वल्मीके तुलसीमूलमाश्रिते ॥ १५. ७९ ॥

मृद एतास्तु संग्राह्या वर्जयेदन्यमृत्तिकाः।
श्यामं शान्तिकरं प्रोक्तं रक्तं वश्यकरं भवेत् ॥ १५. ८० ॥

श्रीकरं पीतमित्याहु-र्धर्मदं श्वेतमुच्यते।
अंगुष्ठः पुष्टिदः प्रोक्तो मध्यमाऽऽयुष्करी भवेत् ॥ १५. ८१ ॥

अनामिकाऽऽन्नदा नित्यं मुक्तिदा च प्रदेशिनी।
एतैरंगुलिभेदैस्तु कारयेन्न नखैः स्पृशेत् ॥ १५. ८२ ॥

वर्तिदीपावलिक्रुतिं वेणुपत्राक्रुतिं तथा।
पद्मस्य मुकुलाकारं तथा कुर्यात्प्रयत्नतः ॥ १५. ८३ ॥

15.79–80. இதற்குத் திருமண் மலையுச்சியிலிருந்தோ ஆற்றங்கரையிலிருந்தோ, விசேஷமான சிவ க்ஷேத்திரத்திலிருந்தோ, ஸிந்து தீரத்திலிருந்தோ, புற்றிலிருந்தோ, துளஸியின் அடியிலிருந்தோ எடுக்கப்படவேண்டும். வேறு விதமான மண் ஒதுக்கப்படவேண்டும்; கரிய மண் சாந்தி கரம் எனப்படும்; சிவப்பு வச்யகரமாகும்.

15.81–82. மஞ்சள் லக்ஷ்மீகரம் என்பர்; வெள்ளை தர்மத்தையளிப்பது என்று கூறப்படுகிறது. (விரல்களால் இடும் பொழுது) கட்டைவிரல் புஷ்டியளிப்பது எனப்படும்; நடுவிரல் ஆயுளை வளர்ப்பதாகும்; பவித்ரவிரல் எப்பொழுதும் அன்னமளிப்பது; ஆள்காட்டி முக்தியளிப்பது. இப்படி வெவ்வேறு விரல்களால் இட்டுக் கொள்ள வெண்டும். நகத்தினால் தொடக்கூடாது.

15.83. வத்தியில் எரியும் தீபத்தின் வடிவிலும், மூங்கில் இலை வடிவிலும், தாமரை மொட்டு வடிவிலும் கவனத்துடன் இட்டுக் கொள்ள வேண்டும்.

ललाटे केशवं विद्यान्नारायण-मथोदरे।
माधवं हृदि विन्यस्य गोविन्दं कण्ठकूपके ॥ १५. ८७ ॥

उदरे दक्षिणे पार्श्वे विष्णुरित्यभिधीयते।
तत्पार्श्वबाहुमध्ये मधुसूदनमेव च ॥ १५. ८८ ॥

त्रिविक्रमं कर्णदेशे वामकुक्षौ तु वामनम्।
श्रीधरं बाहुके वामे हृषीकेशं तु कर्णके ॥ १५. ८९ ॥

पृष्ठे च पद्मनाभं तु ककुद्दामोदरं स्मरेत्।
द्वादशैतानि नामानि वासुदेवेति मूर्धनि ॥ १५. ९० ॥

पूजाकाले च होमे च सायं प्रातः समाहितः।
नामान्युच्चार्य विधिना धारयेदूर्ध्वपुण्ड्रकम् ॥ १५. ९१ ॥

15.87–89. நெற்றியில் இடும் பொழுது 'கேசவ' என்றும், வயிற்றில் 'நாராயண', இருதயத்தில் 'மாதவ', தொண்டைக் குழியில் 'கோவிந்த', வயிற்றின் வலபக்கம் 'விஷ்ணு' என்ற நாமமும் சொல்லப்பட வேண்டும்; அதே பக்கம் தோளில் 'மதுஸூதன', காதுக்கருகில் 'த்ரிவிக்ரம', வயிற்றின் இடப்பக்கம் 'வாமன', இடது தோளில் 'ஸ்ரீதர', இடது காதுக்கருகில் 'ஹ்ருஷீகேச'.

15.90. பின்புறம் பத்மநாபனையும் பிடரியில் தாமோதரனையும் தலையில் வாஸுதேவனையும் என இப்படி பன்னிரண்டு நாமங்கள்.

15.91. பூஜை செய்யும் பொழுதும் ஹோம காலத்திலும் காலை மாலை ஒன்று பட்ட மனத்துடன் நாமங்களை முறைப்படி உச்சரித்து ஊர்த்த்வ புண்ட்ரத்தை தரிக்க வேண்டும்.

एकान्तिनो महाभागा मत्स्वरूप-विदोऽमलाः।
सान्तरालान् प्रकुर्वन्ति पुण्ड्रान् विष्णुपदाकृतीन् ॥ १५. ६४ ॥

परमैकान्तिनोऽप्येवं मत्पादैकपरायणाः।
हरिद्राचूर्णसंयुक्ताञ्छूलकारांस्तु वाऽमलान् ॥ १५. ६५ ॥

ऊर्ध्वपुण्ड्रस्य मध्ये तु विशाले सुमनोहरे।
लक्ष्म्या साकं सहासीनो रमते विष्णुरव्ययः ॥ १५. १०१ ॥

श्रौतं लिंगं तु विज्ञेयं त्रिपुण्ड्रोद्धलनादिकम्।
अश्रौत-मूर्ध्वपुण्ड्रादि नैव तिर्यक् त्रिपुण्ड्रकम् ॥ १५. ११० ॥

वेदमार्गैकनिष्ठानां वेदोक्तेनैव वर्त्मना।
ललाटे भस्मना तिर्यक् त्रिपुण्ड्रं धार्यमेव हि ॥ १५. ११८ ॥

15.94. என் ஸ்வரூபத்தையறிந்தவர்களும் மாசற்றவர்களுமான ஏகாந்திகள் விஷ்ணுவினுடைய பாதவடிவில் நடுவில் இடம் விட்டு புண்ட்ரங்களை அணிவார்கள்.

15.95. பரமைகாந்திகளும் என்னுடைய திருவடியொன்றையே தியானிப்பவர்களாய் பரிசுத்தமான மஞ்சள் பொடி சேர்த்துச் சூலவடிவில் அணிவார்கள்.

15.101. ஊர்த்வபுண்ட்ரத்தின் மத்தியில் மனோஹரமான விசாலமான இடத்தில் லக்ஷ்மியுடன் கூடி வீற்றிருந்து என்றும் மாறுதலில்லாத விஷ்ணு மகிழ்கிறார்.

15.110. த்ரிபுண்ட்ரமாக விபூதி அணிவது வேதமார்க்கத்திற்கு அடையாளம் என அறியவேண்டும். ஊர்த்வ புண்ட்ரம் முதலியவை வேதத்திற்குப் புறம்பானவை; குறுக்காக இடுவது அப்படியன்று.

15.118. வேதமார்க்கத்தில் நிலைத்தவர்களுக்கு வேதம் கூறிய வழியில் நெற்றியில் குறுக்காக பஸ்மத்தால் த்ரிபுண்ட்ரம் அணிவதுதான் முறை.

यस्तु नारायणं देवं प्रपन्नः परमं पदम्।
धारयेत्सर्वदा शूलं ललाटे गन्धवारिणा ॥ १५. ११९ ॥

॥ इति विभूतिमाहात्म्यम् ॥

॥ इति श्रीदेवीभागवते एकादशस्कन्धे पंचदशोऽध्यायः ॥

15.119. பரமபத நாராயணனை தெய்வமாகக் கொண்டு பிரபத்தி செய்தவன் எவனோ அவன் மட்டும் எப்பொழுதும் சந்தனக் குழம்பால் நெற்றியில் சூல வடிவில் தரித்துக் கொள்ளட்டும்.

இங்ஙனம் விபூதி மாகாத்மியம்
முற்றும்.

இங்ஙனம் ஸ்ரீதேவீபாகவதத்தில் பதினோராவது ஸ்கந்தத்தில் பதினைந்தாவது அத்தியாயம்
முற்றும்.

॥ नित्यकर्मानुष्टानवर्णनम् ॥ ४९ ॥

॥ सन्ध्यावन्दनम् ॥

नारायण उवाच—

अथातः श्रूयतां पुण्यं सन्ध्योपासनमुत्तमम् ।
प्रातः सन्ध्यां सनक्षत्रां मध्याह्ने मध्यभास्कराम् ॥
ससूर्यां पश्चिमां सन्ध्यां तिस्रः सन्ध्या उपासते ॥ १६. २ ॥

विप्रो वृक्षो मूलकान्यत्र सन्ध्या
वेदः शाखा धर्मकर्माणि पत्रम् ।
तस्मान्मूलं यत्नतो रक्षणीयं
छिन्ने मूले नैव वृक्षो न शाखा ॥ १६. ६ ॥

49. நித்யகர்மானுஷ்டானக்கிரமம்.

ஸந்தியாவந்தனம்.

நாராயணரிஷி கூறியது—

16.2. இனி உத்தமமான ஸந்தியோபாஸனையைப்பற்றி கேட்பீராக. காலையில் நக்ஷத்திரத்துடனும், மத்தியான்னத்தில் உச்சியில் சூரியனுடனும் மாலையில் சூரியனுடனும் கூடிய ஸந்தியை மூன்று ஸந்தியா காலங்களிலும் உபாசிக்க வேண்டும்.

16.6. பிராம்மணனே ஒரு விருக்ஷத்திற் கொப்பிட்டால் அதற்கு வேர்கள் ஸந்தியை, கிளைகள் வேதம், இலைகள் தர்ம காரியங்கள்; ஆகையால் வேரை கவனத்துடன் காப்பாற்ற வேண்டும்; வேரறுந்து போனால் மரமும் இல்லை, கிளையுமில்லை.

उदयास्तमयादूर्ध्वं यावत्स्याद् घटिकात्रयम् ।
तावत्सन्ध्यामुपासीत प्रायश्चित्तं ततः परम् ॥ १६. ९ ॥

कालातिक्रमणे जाते चतुर्थार्घ्यं प्रतापयेत् ।
अथवाऽष्टशतंदेवीं जप्त्वाऽऽदौ तां समाचरेत् ॥ १६. १० ॥

यस्मिन् काले तु यत्कर्म तत्कालाधीश्वरीं च ताम् ।
सन्ध्यामुपास्य पश्चात्तु तत्कालीनं समाचरेत् ॥ १६. ११ ॥

गृहे साधारणा प्रोक्ता गोष्ठे वै मध्यमा भवेत् ।
नदीतीरे चोत्तमा स्याद्देवीगेहे तदुत्तमा ॥ १६. १२ ॥

16.9. உதயாஸ்தமனங்களுக்குமேல் மூன்று நாழிகை வரை ஸந்தியோபாஸனம் செய்யலாம்; அதற்கு மேல் பிராயச்சித்தம் விதிக்கப்பட்டுள்ளது.

16.10. சிறிது காலங்கடந்தால் நாலாவது அர்க்கியம் விடவேண்டும். அதுவும் தவறினல் முதலில் நூற்றெட்டு காயத்ரீ ஜபம் செய்துவிட்டு ஸந்தியாவந்தனத்தைச் செய்ய வேண்டும்.

16.11. எந்தக் காலத்தில் எந்தக் கர்மத்தைச் செய்தாலும் அந்தக் காலத்திற்கதீசுவரியாகிய அந்த ஸந்தியா தேவியை உபாஸித்த பின்னரே அந்தக் காலத்துக் கர்மத்தை அனுஷ்டிக்க வேண்டும்.

16.12. வீட்டில் செய்யும் ஸந்தியோபாஸனே ஸாதாரணம்; கோசாலையில் மத்தியமமாகும்; நதி தீரத்தில் உத்தமம்; தேவிகோவிலில் அதினும் சிறந்தது.

यतो देव्या उपासेयं ततो देव्यास्तु सन्निधौ।
सन्ध्यात्रयं प्रकर्तव्यं तदानन्त्याय कल्पते ।। १६. १३ ।।

एतस्या अपरं दैवं ब्राह्मणानां न विद्यते।
न विष्णूपासना नित्या न शिवोपासना तथा ।। १६. १४ ।।

यथा भवेन्महादेव्या गायत्र्याः श्रुतिचोदिता।
सर्ववेदसारभूता गायत्र्यास्तु समर्चना ।। १६. १५ ।।

तस्मात्सर्वे द्विजाः शाक्ता न शैवा न वैष्णवाः।
आदिशक्तिमुपासन्ते गायत्रीं वेदमातरम् ।। १६. १७ ।।

16.13. இது தேவியின் உபாஸனையாகையால் தேவியின் ஸந்நிதியில் மூன்று வேளை ஸந்தியாவந்தனத்தையும் செய்தல் அளவுகடந்த பலனை யளிப்பதாகும்.

16.14. இவளைவிட வேறு தெய்வம் பிராம்மணர்களுக்கில்லை. விஷ்ணு உபாஸனையும் நித்தியகர்மாவன்று, சிவோபாஸனையும் அவ்வாறே.

16.15. எப்படி காயத்ரீ தேவியின் உபாஸனை (நித்ய கர்மாவாக) வேதத்தில் விதிக்கப்பட்டுள்ளதோ (அப்படி மற்ற உபாஸனைகள் விதிக்கப்படவில்லை). காயத்ரியை வழிபடுதல் ஸர்வ வேத ஸாரமாய் விளங்குவது.

16.17. ஆகையால் துவிஜர்களெல்லோருமே சாக்தர்கள் தான்; சைவர்களுமல்லர், வைஷ்ணவர்களுமல்லர். வேதமாதாவும் ஆதிசக்தியுமான காயத்ரியை அவர்கள் உபாசிக்கின்றனர்.

आचान्तः प्राणमायम्य केशवादिकनामभिः।
ओंकारपूर्वकं नाम चतुर्विंशति संख्यया।
स्वाहान्तैः प्राशयेद्वारि नमोऽन्तै स्पर्शयेत्तथा ॥ १६. २२ ॥

केशवादि त्रिभिः पीत्वा द्वाभ्यां प्रक्षालयेत्करौ।
मुखं प्रक्षालयेद्द्वाभ्यां द्वाभ्यामुन्मार्जनं तथा ॥ १६. २३ ॥

एकेन पाणिं संप्रोक्ष्य पादावपि शिरोऽपि च।
संकर्षणादिदेवानां द्वादशांगानि संस्पृशेत् ॥ १६. २४ ॥

गोकर्णाकृति हस्तेन माषमात्रं जलं पिबेत्।
संहतांगुलिना तोयं पाणिना दक्षिणेन तु।
मुक्तांगुष्ठकनिष्ठाभ्यां शेषेणाचमनं विदुः ॥ १६. २६ ॥

16.22–24. ஆசமனம் செய்துவிட்டுப் பிராணுயாமம் செய்து ஓம் கேசவாய ஸ்வாஹா (மாதவாய, கோவிந்தாய, விஷ்ணவே, மதுஸூதனுய, த்ரிவிக்ரமாய, வாமனுய, ஸ்ரீதராய, ஹ்ருஷீகேசாய, பத்மநாபாய, தாமோதராய, ஸங்கர்ஷணுய, வாஸுதேவாய, ப்ரத்யும்னுய, அநிருத்தாய, புருஷோத்தமாய, அதோக்ஷஜாய, நரஸிம்ஹாய, அச்யுதாய, ஜனுர்த்தனுய, உபேந்த்ராய, ஹரயே, க்ருஷ்ணுய) என்று இருபத்து நான்கு நாமங்களைச் சொல்லி தீர்த்தத்தை அருந்த வேண்டும். பிறகு ஓம் கேசவாய நம: மாதவாய நம... என்று சொல்லி பின்வருமாறு செய்யவேண்டும். கேசவன் முதல் மூன்று நாமங்களால் பானம், அடுத்த இரண்டால் கைகளை அலம்புதல், இரண்டால் வாயைத் துடைத்தல், இரண்டால் மார்ஜனம், ஒன்ருல் கைகளில் புரோக்ஷணம், ஒன்ருல் பாதப் புரோக்ஷணம், ஒன்ருல் சிரசில் புரோக்ஷணம்; பிறகு ஸங்கர்ஷணன் முதலிய பன்னிரண்டு நாமங்களால் பன்னிரண்டு அங்கங்களைத் தொடவேண்டும்.

16.26. விரல்களைச் சேர்த்துப் பசுவின் காது போல் வலது கையை வைத்துக் கொண்டு அதில் உளுந்து முழுகுமளவு ஜலத்தை ஏற்றுப் பருகவேண்டும்; கட்டை விரலும் சுண்டு விரலும் சேராமல் மற்ற விரல்களை மட்டும் சுருக்கித் தான் ஆசமனம் என்று அறிய வேண்டும்.

प्राणायामं ततः कृत्वा प्रणवस्मृति पूर्वकम् ।
गायत्रीं शिरसा सार्धं तुरीयपदसंयुताम् ॥ १६. २७ ॥

दक्षिणे रेचयेद्वायुं वामेन पूरितोदरम् ।
कुम्भेन धारयेन्नित्यं प्राणायामं विदुर्बुधाः ॥ १६. २८ ॥

पीडयेद्दक्षिणां नाडीमंगुष्ठेन तथोत्तराम् ।
कनिष्ठानामिकाभ्यां तु मध्यमां तर्जनीं त्यजेत् ॥ १६. २९ ॥

पूरके विष्णुसायुज्यं कुम्भके ब्रह्मणो गतिम् ।
रेचकेन तृतीयं तु प्राप्नुयादीश्वरं परम् ॥ १६. ३६ ॥

16.27. பிரணவத்துடனும் சிரஸுடனும் துரீயபதத்துடனும் கூடிய காயத்ரீ தியானத்துடன் ப்ராணுயாமம் செய்து,

16.28. வலது நாசியால் மூச்சை வெளிவிட்டு இடது நாசியால் இழுத்து வயிற்றை நிரப்ப வேண்டும்; பின்பு மூச்சை அடக்கி நிறுத்தவேண்டும். இதை புத்திமான்கள் பிராணுயாமம் என்கின்றனர்.

16.29. (பிராணுயாமம் செய்யும் பொழுது) வலது நாசியைக் கட்டைவிரலால் அழுத்திக் கொள்ள வேண்டும்; இடது நாசியைச் சுண்டுவிரலாலும் பவித்ரவிரலாலும் அழுத்திக் கொண்டு நடுவிரலேயும் ஆள்காட்டியையும் ஒதுக்கிவிடவேண்டும்.

16.36. பூரகத்தால் விஷ்ணு ஸாயுஜ்யத்தையும், கும்பகத்தால் பிரம்ம ஸாயுஜ்யத்தையும், ரேசகத்தால் மூன்ருவதான ஈச்வர ஸாயுஜ்யத்தையும் ஒருவன் அடைகிருன்.

गायत्रीं शिरसा सार्धं जपेद्व्याहृतिपूर्विकाम्।
प्रतिप्रणवसंयुक्तां त्रिरयं प्राणसंयमः॥ १६. ३९ ॥

आपोहिष्ठेति तिसृभिः प्रोक्षणं स्यात्कुशोदकैः।
ऋगन्ते मार्जनं कुर्यात्पादान्ते वा समाहितः॥ १६. ४२ ॥

तत आचमनं कृत्वा सूर्यश्चेति पिबेदपः।
अन्तःकरणसंभिन्नं पापं तस्य विनश्यति ॥ १६. ४३ ॥

प्रणवेन व्याहृतिभिर्गायत्र्या प्रणवाद्यया।
आपोहिष्ठेति सूक्तेन मार्जनं चैव कारयेत्॥ १६. ४४ ॥

उद्धृत्य दक्षिणे हस्ते जलं गोकर्णवत्कृते।
नीत्वा तं नासिकाग्रं तु वामकुक्षौ स्मरेदघम्॥ १६. ४६ ॥

16.39. வ்யாஹ்ருதிகளுடனும் சிரஸுடனும் கூடிய காயத்ரியை ஒவ்வொன்றுடனும் பிரணவத்தைக் கூட்டி மும்முறை பிராணுயாமம் செய்யவேண்டும்.

16.42. 'ஆபோஹிஷ்ட்டா' முதலிய மூன்று ருக் மந்திரங்களைச் சொல்லி தர்ப்பை நுனியால் புரோக்ஷித்துக் கொள்ள வேண்டும். ருக்கின் முடிவில் கவனமாகக் கால் நுனிகளைத் துடைத்துக் கொள்ள வேண்டும்.

16.43. பிறகு ஆசமனம் செய்துவிட்டு 'ஸூர்யச்ச' எனும் மந்திரத்தைச் சொல்லி ஜலத்தைப் பருக வேண்டும். அதனுல் ஒருவனுடைய அந்தக்கரணத்தைக் கறைப் படுத்திய பாவம் அழியும்.

16.44. பிரணவத்துடன் கூடிய வியாஹ்ருதியாலும், பிரணவம் முதலில் சேர்ந்த காயத்ரியாலும் 'ஆபோஹிஷ்டா' எனும் ஸூக்தத்தாலும் மார்ஜனம் செய்து கொள்ள வேண்டும்.

16.46. பசுவின் காதுபோல் வைத்துக் கொள்ளப்பட்ட வலது கையில் ஜலத்தை ஏந்தி அதை மூக்கு நுனிப்பக்கம் தூக்கி வயிற்றின் இடதுபுறம் பாப புருஷனை நினைக்க வேண்டும்.

द्रुपदां वा ऋचं पश्चाद्दक्षनासापुटेन च ।
श्वासमार्गेण तं पापमानयेत्करवारिणि ।। १६. ४७ ।।

नाऽवलोक्यैवतद्वारि वामभागेऽश्म निक्षिपेत् ।
निष्पापं तु शरीरं मे संजातमिति भावयेत् ।। १६. ४८ ।।

उत्थाय तु ततः पादौ द्वौ मासौ सन्नियोजयेत् ।
जलांजलिं गृहीत्वा तु तर्जन्यंगुष्ठवर्जितम् ।। १६. ४९ ।।

वीक्ष्य भानुं क्षिपेद्वारि गायत्र्या चाऽभिमन्त्रितम् ।
त्रिवारं मुनिशार्दूल विधिरेषोर्घ्यमोचने ।। १६. ५० ।।

ततः पदक्षिणं कुर्या-दसावादित्यमन्त्रतः ।
मध्याह्ने सकृदेव स्यात्सन्ध्ययोस्तु त्रिवारतः ।। १६. ५१ ।।

16.47. 'த்ருபதாதிவ' எனும் மந்திரத்தைச் சொல்லி வலது நாசி வழி மூச்சுக்காற்றுடன் அந்தப் பாப புருஷனை வெளிப்படுத்திக் கையிலுள்ள ஜலத்தில் சேர்க்கவேண்டும்.

16.48. அந்த ஜலத்தைப் பாராமல் இடதுபுறம் கல்லின்மேல் இறைத்து விடவேண்டும். 'என் சரீரம் பாவ மற்றதாக ஆகிவிட்டது' என்று எண்ணிக் கொள்ளவேண்டும்.

16.49. எழுந்து நின்று இரு பாதங்களையும் சேர்த்துக் கொண்டு ஜலாஞ்ஜலி எடுத்துக்கொண்டு கட்டைவிரலையும் ஆள்காட்டியையும் சேர்க்காமல்;

16.50. காயத்ரியால் அபிமந்த்ரணம் செய்யப்பட்ட அந்த ஜலத்தை சூரியனைப் பார்த்து விட வேண்டும். முனி சிரேஷ்டரே! இப்படி மூன்று தடவை அர்க்கியம் விட வேண்டுமென்பது விதி.

16.51. பிறகு 'அஸாவாதித்ய' மந்திரத்தைச் சொல்லிப் பிரதக்ஷிணம் செய்ய வேண்டும்; மத்தியான்னத்தில் ஒரு தடவை, ஸந்தியா காலங்களில் மூன்று தடவை (அர்க்கியம்).

ईषन्नम्र प्रभाते तु मध्याह्ने दण्डवत्स्थित:।
आने चोपविष्टस्तु द्विज: सायं क्षिपेदप: ॥ १६. ५२ ॥

अर्घ्यांगभूत मन्त्रोऽयं प्रोच्यते शृणु नारद।
यदुच्चारणमात्रेण सांगं सन्ध्याफलं भवेत् ॥ १६. ५७ ॥

सोहमर्कोऽस्म्यहं ज्योतिरात्म-ज्योतिरहं शिव:।
आत्मज्योतिरहं शुक्ल: सर्वज्योती रसोऽस्म्यहम् ॥ १६. ५८॥

आगच्छ वरदे देवि गायत्रि ब्रह्मरूपिणि।
जपानुष्ठानसिद्ध्यर्थं प्रविश्य हृदयं मम॥
उत्तिष्ठ देवि गन्तव्यं पुनरागमनाय च ॥ १६. ६० ॥

16.52. காலையில் சற்றுக் குனிந்தும், மத்தியான்னத்தில் தண்டம் போல் நிமிர்ந்தும், ஸாயங்காலத்தில் உட்கார்ந்து கொண்டும் துவிஜன் அர்க்கிய ஜலத்தை விடவேண்டும்.

16.57. நாரதரே! அர்க்கியத்தின் அங்கமான மந்திரத்தைக் கூறுகிறேன், கேளும். அதை உச்சரித்த மாத்திரத்தில் அங்கத்துடன் கூடிய ஸந்தியாவந்தனம் பலன் அளிப்பதாகும்.

16.58. அந்த சூரியன் நானே; நான் ஜோதிஸ்வரூபன்; ஆத்ம ஜோதியான சிவன் நான்; ஆத்ம ஜோதியான சுக்லன் நான்; எல்லா ஜோதியும் ரஸமுமாக நான் இருக்கிறேன்.

16.60. வரமளிக்கும் காயத்ரீ தேவியே! பிரம்மஸ்வரூபிணி! எழுந்தருள்வாய். ஜபானுஷ்ட்டான சித்திக்காக என் இருதயத்தில் புகுந்திருந்து பின் மீண்டும் வருவதற்காக யதாஸ்தானம் செல்ல வேண்டும்.

ततः शुद्धस्थले नैजमासनं स्थापयेद् बुधः ।
तत्राऽऽरुह्य जपेत्पश्चाद्गायत्रीं वेदमातरम् ॥ १६. ६१ ॥

अत्रैव खेचरी मुद्रा प्राणायामोत्तरं मुने ।
प्रातः सन्ध्याविधाने च कीर्तिता मुनिपुंगव ॥ १६. ६२ ॥

चित्तं चरति खे यस्माज्जिह्वा चरति खे गता ।
भ्रुवोरन्तर्गता दृष्टिर्मुद्रा भवति खेचरी ॥ १६. ६३ ॥

न चाऽसनं सिद्धसमं न कुम्भसदृशोऽनिलः ।
न खेचरी समा मुद्रा सत्यं सत्यं च नारद ॥ १६. ६४ ॥

16.61. பிறகு சுத்தமான இடத்தில் தனக்கு ஆசனத்தை புத்திமான் கற்பித்துக் கொள்ள வேண்டும். வேதத்தின் தாய் போன்ற காயத்ரீ மந்திரத்தை அதிலமர்ந்து ஜபிக்க வேண்டும்..

16.62. முனிபுங்கவரே! காலே ஸந்தியாவந்தனத்தில் பிராணாயாமத்திற்குப் பின் கேசரீ முத்திரை கூறப்படுகிறது.

16.63. சித்தம் ஆகாயத்தில் சஞ்சரிப்பதாலும் நாக்கும் ஆகாயத்தில் சென்று சஞ்சரிப்பதாலும் திருஷ்டி புருவமத்தியில் செல்வதாலும் இந்த முத்திரை கேசரீ எனப் படுகிறது.

16.64. ஸித்தாஸனத்திற்குச் சமமான ஆஸனமும், கும்பகத்திற்குச் சமமான பிராணாயாமமும் கேசரீ முத்திரைக்குச் சமமான முத்திரையும் இல்லை. நாரதரே! இது உண்மையினும் உண்மை.

योनिस्थानकमंघ्रिमूलघटितं कृत्वा दृढं विन्यसे-
न्मेट्रे पादमथैकमेव हृदयं कृत्वा समं विग्रहम्।
स्थाणुः संयमितेन्द्रियोऽचलदृशा पश्यन् भ्रुवोरन्तरं।
तिष्ठत्येतदतीव योगिसुखदं सिद्धासनं प्रोच्यते
॥ १६. ६७ ॥

आयातु वरदा देवी अक्षरं ब्रह्मसम्मितम्।
तेजोसीत्यादि मन्त्रेण देवीमावाहयेत्ततः॥ १६. ७१ ॥

ततः शापविमोक्षाय विधानं सम्यगाचरेत्।
ब्रह्मशापस्ततो विश्वामित्रस्य च तथैव च॥ १६. ७२ ॥

वशिष्ठशाप इत्येतत्त्रिविधं शापलक्षणम्।
ब्रह्मणः स्मरणेनैव ब्रह्मशापो निवर्त्यते॥ १६. ७३ ॥

विश्वामित्रस्मरणतो विश्वामित्रस्य शापतः।
वशिष्ठस्मरणादेव तस्य शापो विनश्यति॥ १६. ७५ ॥

16.67. யோனிஸ்தானத்தில் ஒரு குதிகாலைத் திடமாகவைத்து, மறுபாதத்தை ஆண்குறிமேல் வைத்து மார்புக்கு நேராக உடலை அசையாமல் நிமிர்த்தி இந்திரியங்களை அடக்கி, சலிக்காத திருஷ்டியால் புருவமத்தியைப் பார்த்துக்கொண்டு நிலைத்திருத்தல் யோகிக்கு மிகுந்த சுகத்தைத் தரும் ஸித்தாஸனம் எனப்படும்.

16.71. 'ஆயாது வரதா தேவீ அக்ஷரம் ப்ரஹ்ம ஸம்மிதம், தேஜோஸி,' முதலிய மந்திரங்களால் தேவியை ஆவாஹனம் செய்ய வேண்டும்.

16.72–75. பிறகு சாப விமோக்ஷத்திற்காகவுள்ள விதியை நன்கு அனுசரிக்க வேண்டும். பிரம்ம சாபம், விச்வாமித்ர சாபம், வசிஷ்ட சாபம் என்று சாபம் மூன்று வகை. பிரம்மாவை தியானிப்பதால் பிரம்ம சாபம் நீங்கும்; விச்வாமித்திரரை தியானிப்பதால் விச்வாமித்ர சாபம் நீங்கும்; வசிஷ்டரை தியானிப்பதால் அவருடைய சாபம் நீங்கும்.

हृत्पद्ममध्ये पुरुषं प्रमाणं सत्यात्मकं सर्वजगत्स्वरूपम्।
ध्यायामि नित्यं परमात्मसंज्ञं चिद्रूपमेकं वचसामगम्यम्
॥ १६. ७५ ॥

अथ न्यासविधिं वक्ष्ये सन्ध्याया अंगसम्भवम्।
ओंकारं पूर्वंवद्योज्यं ततो मन्त्रानुदीरयेत् ॥ १६. ७६ ॥

भूरित्युक्त्वा च पादाभ्यां नम इत्येव चोच्चरेत्।
भुवः पूर्वन्तु जानुभ्यां स्वः कटिभ्यां नमो वदेत् ॥ १६. ७७ ॥

महर्नाभ्यै जनश्चैव हृदयाय ततस्तपः।
कण्ठाय च ततः सत्यं ललाटे परिकीर्तयेत् ॥ १६. ७८ ॥

अंगुष्ठाभ्यां तत्सवितुस्तर्जनीभ्यां वरेण्यकम्।
भर्गोदेवस्य मध्याभ्यां धीमहीत्येव कीर्तयेत् ॥ १६. ७९ ॥

अनामाभ्यां कनिष्ठाभ्यां धियो यो नः पदं वदेत्।
प्रचोदयात्करपृष्ठतलयो-र्विन्यसेत्सुधीः ॥ १६. ८० ॥

16.75. இருதயகமல மத்தியில் ஸத்தியமே உருக்கொண்டவராய் ஸர்வஜகத் ஸ்வரூபியாய் சித்ரூபியாய் வாக்குக்கெட்டாதவராய்ப் பரமாத்மா எனப் பெயர் படைத்தவராயுள்ள புருஷனை என்றும் தியானிக்கின்றேன்.

16.76. ஸந்தியாவந்தனத்திற்கு அங்கமான நியாஸ விதியை இனிக் கூறுகிறேன். ஓங்காரத்தை முதலில் சேர்த்துப் பிறகு மந்திரங்களை (பின்வருமாறு) உச்சரிக்க வேண்டும்.

16.77—78. ஓம் பூ: பாதாப்ப்யாம் நம:, ஓம் புவ: ஜானுப்ப்யாம் நம:, ஓம் ஸுவ: கடிப்ப் யாம் நம:, ஓம் மஹ: நாப்ப்யை நம:, ஓம் ஜந: ஹ்ருதயாய நம:, ஓம் தப: கண்ட்டாய நம:, ஓம் ஸத்யம் லலாடாய நம:,

16.79—80. தத்ஸவிது: அங்குஷ்ட்டாப்ப்யாம் நம:, வரேண்யம் தர்ஜனீப்ப்யாம் நம:, பர்க்கோ தேவஸ்ய மத்த்யமாப்ப்யாம் நம:, தீமஹி அநாமிகாப்ப்யாம் நம:, தியோயோ ந: கனிஷ்ட்டிகாப்ப்யாம் நம:, ப்ரசோதயாத் கரதல கரப்ருஷ்ட்டாப்ப்யாம் நம: என்று புத்திமான் கரந்யாஸம் செய்ய வேண்டும்.

ब्रह्मात्मने तत्सवितुर्हृदयाय नमस्तथा ।
विष्णवात्मने वरेण्यं च शिरसे नम इत्यपि ॥ १६. ८२ ॥

भर्गोदेवस्य रुद्रात्मने शिखायै प्रकीर्तितम् ।
शक्त्यात्मने धीमहीति कवचाय ततः परम् ॥ १६. ८२ ॥

कालात्मने धियो यो नो नेत्रत्रयाय उदीरितम् ।
प्रचोदयाच्च सर्वात्मनेऽस्त्राय परिकीर्तितम् ॥ १३. ८३ ॥

ततो ध्यायेन्महादेवीं जगन्मातर-मम्बिकाम् ।
भास्वज्जपाप्रसूनाभां कुमारीं परमेश्वरीम् ॥ १६. ९२ ॥

रक्ताम्बुजासनारूढां रक्तगन्धानुलेपनाम् ।
रक्तमाल्याम्बरधरां चतुरास्यां चतुर्भुजाम् ॥ १६. ९३ ॥

द्विनेत्रां स्रुक्स्रुचौ मालां कुण्डिकां चैव बिभ्रतीम् ।
सर्वाभरणसन्दीप्ता-मृग्वेदाध्यायिनीं पराम् ॥ १६. ९४ ॥

16.81–83. தத்ஸவிதுர்–ப்ரஹ்மாத்மனே ஹ்ருதயாய நம:, வரேண்யம் விஷ்ண்வாத்மனே சிரஸே நம: (ஸ்வாஹா), **பர்க்கோ** தேவஸ்ய ருத்ராத்மனே **சி**காயை வஷட், **தீ**மஹி **ச**க்த்யாத்மனே கவசாய ஹும், **தி**யோ யோ ந: காலாத்மனே நேத்ரத்ரயாய வௌஷட், ப்ரசோதயாத் ஸர்வாத்மனே அஸ்தராய பட் (என்று அங்க நியாஸம்).

16.92–94. பிறகு ஜகன்மாதாவும் அம்பிகையுமான காயத்ரீ மகாதேவியைப் பின்வருமாறு தியானம் செய்ய வேண்டும். குமாரியான பரமேசுவரியும் செம்பருத்திப் பூப்போல் சிவந்து பிரகாசிப்பவளும், சிவப்புத் தாமரை மேல் வீற்றிருப்பவளும், சிவப்புச் சந்தனப்பூச்சுடையவளும், சிவப்பு மாலையும் ஆடையும் அணிந்தவளும், இரு கண்களுடன் கூடிய நான்கு முகங்களும் படைத்தவளும், ஸ்ருக், ஸ்ருவம் (எனும் ஹோமக் கரண்டிகள்) அக்ஷமாலை, குண்டிகை (தீர்த்த பாத்ரம்) ஆகியவற்றை ஏந்திய நான்கு கைகளை உடையவளும், எல்லா ஆபரணங்களுமணிந்து பிரகாசிப்ப வளும் ருக் வேதத்தை ஓதும் பரதேவதையும்;

हंसपत्रा-माहवनीय-मध्यस्थां ब्रह्मदेवताम्।
चतुष्पदामष्टकुक्षिं सप्तशीर्षां महेश्वरीम् ॥ १६. ९५ ॥

अग्निवक्त्रां रुद्रशिखां विष्णुचित्तां तु भावयेत्।
ब्रह्मा तु कवचं यस्या गोत्रं सांख्यायनं स्मृतम् ॥ १६. ९६ ॥

आदित्यमण्डलान्तस्थां ध्यायेद्देवीं महेश्वरीम्।
एवं ध्यात्वा विधानेन गायत्रीं वेदमातरम् ॥ १६. ९७ ॥

शताक्षरां च गायत्रीं सकृदावर्तयेत् सुधीः।
चतुर्विंशत्यक्षराणि गायत्र्याः कीर्तितानि हि ॥ १६. १०२ ॥

जातवेदस नाम्नीं च ऋचमुच्चारयेदतः।
त्र्यम्बकस्यर्चमावृत्य गायत्री शतवर्णका ॥ १६. १०४ ॥

16.95–97 ஹம்ஸ வாகனத்திலிருப்பவளும், ஆஹவனீயாக்னிமத்தியிலிருப்பவளும், பிரம்ம பத்னியும், நான்கு வேதங்களை பாதங்களாய்க் கொண்டவளும், எட்டு திக்குகளை வயிருகக் கொண்டவளும், (வியாகரணம், சிக்ஷை, கல்பம், நிருக்தம், ஜோதிஷம், இதிஹாஸ புராணம், உபநிஷத் ஆகிய) ஏழைத் தலையாகக் கொண்ட மகேசுவரியும், அக்னியை முகமாகவும் ருத்திரனை சிகையாகவும் விஷ்ணுவைச் சித்தமாகவும் கொண்டவளும், சூரிய மண்டலத்தில் உறைபவளுமாக மகேசுவரியான காயத்ரீ தேவியை தியானிக்க வேண்டும்.

16.102–104. நல்ல புத்தி படைத்தவன் நூறு அக்ஷரங்கொண்ட காயத்ரீ மந்திரத்தை ஒரு தடவை ஜபிக்க வேண்டும். காயத்ரிக்கு 24 அக்ஷரம்; அதன்பின் 'ஜாத வேதஸே' எனப் பெயர் பெற்ற (44 அக்ஷரம் கொண்ட) மந்திரத்தை உச்சரிக்க வேண்டும்; த்ரயம்பகம் எனும் (32 அக்ஷரங் கொண்ட) மந்திரத்தையும் சேர்த்து ஜபித்தால் நூறு அக்ஷரங் கொண்ட காயத்ரியாகும்.

ओंकारं पूर्वमुच्चार्य भूर्भुवः स्वस्तथैव च।
चतुर्विंशत्यक्षरां च गायत्रीं प्रोच्चरेत्ततः ॥ १६. १०५ ॥

भिन्नपादा तु गायत्री ब्रह्महत्याप्रणाशिनी।
जपसंख्याऽष्टभागान्ते पादो जप्यस्तुरीयकः।
गृहस्थो ब्रह्मचारी वा मोक्षार्थी तुरीयां जपेत् ॥ १७. ६ ॥

तुरीयपादो गायत्र्याः परोरजसे सावदोम्।
विधिनाऽष्टोत्तरशत-मष्टाविंशतिरेव वा ॥
दशवारमशक्तो वा नाऽतो न्यूनं कदाचन ॥ १७. १६ ॥

16.105. ஓம் என்று முதலில் உச்சரித்துப் பின்பு பூர்ப்புவஸ்ஸுவ: என்று சொல்லி, இருபத்து நாலு அக்ஷரங் கொண்ட காயத்ரியை ஜபிக்க வேண்டும்.

17.6. காயத்ரியை ஒவ்வொரு பாதத்திலும் நிறுத்தி ஜபித்தால் அது பிரம்மஹத்தி பாவத்தையும் நாசம் செய்யும். எட்டுத் தடவை ஜபம் செய்ததும் நான்காவது (துரீய) பாதம் ஜபிக்கத் தகுந்தது. மோக்ஷத்தை விரும்பும் பிரம்மசாரியும் கிருஹஸ்தனும் துரீய காயத்ரியை ஜபிக்கலாம்.

17.16. காயத்ரியின் துரீய பாதம் 'பரோரஜஸே ஸாவதோம்' என்பதாம். விதிப்படி நூற்றெட்டு அல்லது இருபத்தெட்டு, அல்லது அசக்தனுயின் பத்துத் தடவை யாவது ஜபிக்க வேண்டும். ஒரு பொழுதும் அதற்குக் குறையக் கூடாது.

तत उद्वासयेद्देवी-मुत्तमेत्यनुवाकतः ।
न गायत्रीं जपेद्विद्वाञ्जलमध्ये कथंचन ॥
यतः साऽग्निमुखी प्रोक्तेत्याहुः केचिन्महर्षयः ॥ १७. १७ ॥

सुरभिर्ज्ञान-शूर्पंच कूर्मो योनिश्च पंकजम् ॥
लिंगं निर्वाणकं चैव जपान्तेऽष्टौ प्रदर्शयेत् ॥ १७. १८ ॥

यदक्षरपदभ्रष्टं स्वरव्यंजनवर्जितम् ।
तत्सर्वं क्षम्यतां देवि कश्यपप्रियवादिनि ॥ १७. १९ ॥

यथाविधि च गोत्रादीनुच्चरेद् द्विजसत्तमः ।
एवं विधानं सन्ध्यायाः प्रातः काले प्रकीर्तितम् ॥ १७. ३४ ॥

17.17. பிறகு 'உத்தமே' எனும் அனுவாகத்தைச் சொல்லி தேவியை உத்வாஸனம் செய்ய வேண்டும். காயத்ரீ ஜபத்தை அறிவாளியானவன் ஜலமத்தியில் ஒரு பொழுதும் செய்யக் கூடாது. ஏனெனில் சில மஹரிஷிகள் காயத்ரீ தேவியை அக்னியை முகமாகவுடையவள் எனக் கூறுகின்றனர்.

17.18. ஜபத்தின் முடிவில் (ஸுரபி) தேனுமுத்திரை, ஞானமுத்திரை, சூர்ப்பமுத்திரை, கூர்மமுத்திரை, யோனி முத்திரை, பங்கஜமுத்திரை, லிங்கமுத்திரை, நிர்வாண முத்திரை, ஆகிய எட்டையும் காட்ட வேண்டும்.

17.19. எழுத்து, பதம், ஸ்வரம் தவறியிருந்தாலும் ஸ்வரமும் வியஞ்ஜனமும் இல்லாமல் போயிருந்தாலும், கசியபப்ரியவாதினியான தேவியே, அதையெல்லாம் மன்னித் தருள வேண்டும்.

17.34. துவிஜசிரேஷ்டன் முறைப்படி கோத்ரம் முதலியவைகளையும் சொல்ல வேண்டும். இவ்வாறுகக் காலை ஸந்தியாவந்தனம் செய்யும் முறைக் கூறப்பட்டது.

सन्ध्याकर्म समाप्यान्तेऽप्यग्निहोत्रं स्वयं हुनेत्।
पंचायतनपूजांच ततः कुर्यात्समाहितः ॥ १७. ३५॥

भवानीं तु यजेन्मध्ये तथेशान्यांतु माधवम्।
आग्नेयां गिरिजानाथं गणेशं रक्षसां दिशि ॥ १७. ३७ ॥

वायव्यामर्चयेत् सूर्य-मिति देवस्थितिक्रमः।
न देवीपूजनात्पुण्य-मधिकं क्वचिदीक्ष्यते।
अत एव तु सन्ध्यासु सन्ध्योपास्तिः श्रुतीरिता ॥ १७. ३६ ॥

नाक्षतैरर्चयेद्विष्णुं न तुलस्या गणेश्वरम्।
दुर्वाभिर्नार्चयेद्दुर्गां केतकैर्न महेश्वरम् ॥ १७. ४० ॥

गुग्गुलस्य भवेद्धूपो दीपः स्यात्तिलतैलतः।
कृत्वेत्थं देवतापूजां ततोमूलमनुं जपेत् ॥ १७. ४६ ॥

17.35. ஸந்தியா கர்மத்தை முடித்தபின் அக்னி ஹோத்திரத்தைச் செய்ய வேண்டும். பிறகு மனதை ஒருமுகப்படுத்திப் பஞ்சாயதன பூஜையைச் செய்ய வேண்டும்.

17.37–39. பவானியை மத்தியில் பூஜிக்க வேண்டும்; ஈசானத்தில் விஷ்ணுவையும், அக்னி திக்கில் சிவனையும், கணேசனை நிர்ருதியிலும், சூரியனை வாயு திக்கிலும் அர்ச்சிக்க வேண்டும் என்பது தேவஸ்திதிக்கிரமம். தேவீ பூஜையைக் காட்டிலும் அதிகமான புண்ணியத்தைத் தரக் கூடியது எங்கும் காணப்படவில்லை.

17.40. விஷ்ணுவை அக்ஷதையாலும், கணபதியைத் துளசியாலும், துர்க்கையை அருகம்புல்லாலும், மகேசுவரனை தாழம் பூவாலும் அர்ச்சிக்கக் கூடாது.

17.46. தூபம் குங்கிலியத்தாலும் தீபம் நல்லெண்ணெய்யாலும் காட்ட வேண்டும். இவ்வாறு தேவதா பூஜையைச் செய்துவிட்டு மூலமந்திரத்தை ஜபிக்க வேண்டும்.

एवं पूजां समाप्यैव वेदाभ्यासं चरेद् बुधः ।
अत्र ते कथयिष्यामि पुरावृत्तं सनातनम् ॥ १८. ४९ ॥

चक्रवाकोऽभवत्पक्षी क्वचिद्देशे हिमालये ।
भ्रमन् नानाविधान् देशान् ययौ काशीपुरं प्रति ॥ १८. ५० ॥

अन्नपूर्णामहास्थाने प्रारब्धवशतो द्विजः ।
जगाम लीलया तत्र कणलोभादनाथवत् ॥ १८. ५१ ॥

कृत्वा प्रदक्षिणामेकां जगाम च विहायसा ।
देशान्तरं विहायैव पुरीं मुक्तिप्रदायिनीम् ॥ १८. ५२ ॥

कालान्तरे ममारासौ गतः स्वर्गपुरीं प्रति ।
बुभुजे विषयान् सर्वान् दिव्यरूपधरो युवा ॥ १८. ५३ ॥

18.49. இப்படிப் பூஜையைச் செய்து முடித்த பின் வேதபாராயணம் செய்ய வேண்டும். இதைப் பற்றிய பழைய வரலாறு ஒன்று கூறுகிறேன்.

18.50. இமாலயத்தில் ஒரு இடத்தில் ஒரு சக்ரவாகப் பறவை இருந்தது. பல தேசங்களுக்குப் பறந்து சென்று விட்டு அது காசீபுரிக்குச் சென்றது.

18.51. அன்னபூர்ணாவின் மகா ஆலயத்திற்கு திக்கற்ற அந்தப் பறவை பிராரப்த வசத்தால் விளையாட்டாக இறை தேடிக் கொண்டு சென்றது.

18.52. ஒரு பிரதக்ஷிணம் செய்து விட்டு முக்தியளிக்கும் அவ்வூரை விட்டு ஆகாயமார்க்கமாக வேறோரிடம் சென்று விட்டது.

18.53. நாளடைவில் அது இறந்தபின் ஸ்வர்க்கம் சென்று யௌவனப் பருவமுள்ள தேவரூபத்தையடைந்து எல்லா சுகங்களையும் அனுபவித்தது.

कल्पद्वयं तथा भुक्त्वा पुनः प्राप भुवं प्रति।
क्षत्त्रियाणां कुले जन्म प्राप सर्वोत्तमोत्तमम् ॥ १८. ५४ ॥

बृहद्रथेति नाम्नाऽभूत्प्रसिद्धः क्षितिमण्डले।
महायज्वा धार्मिकश्च सत्यवादी जितेन्द्रियः ॥ १८. ५५ ॥

त्रिकालज्ञः सार्वभौमो यमी परपुरंजयः।
पूर्वजन्मस्मृतिस्तस्य वर्तते दुर्लभा भुवि ॥ १८. ५६ ॥

इति श्रुत्वा किंवदन्तीं मुनयः समुपागताः।
कृतातिथ्या नृपेन्द्रेण विष्टरेषूपुरेव ते ॥ १८. ५७ ॥

पप्रच्छुर्मुनयः सर्वे संशयोऽस्ति महानृप।
केन पुण्यप्रभावेण पूर्वजन्मस्मृतिस्तव ॥ १८. ५८ ॥

त्रिकालज्ञानमेवाऽपि केन पुण्यप्रभावतः।
ज्ञानं तवेति तज्ज्ञातु-मागताः स्म तवान्तिकम् ॥ १८. ५९ ॥

18.54. இரண்டு கல்பகாலம் அப்படி அனுபவித்து விட்டு மீண்டும் பூமியில் க்ஷத்திரிய குலத்தில் அனைத்தினும் சிறந்ததொரு பிறவியை அடைந்தது.

18.55. பூமண்டலத்தில் பிருஹத்ரதன் என்ற பெயரில் பிரசித்தியடைந்து யாகஞ் செய்பவர்களில் சிறந்தவனாகவும் தார்மிகனாகவும் ஸத்தியவாதியாகவும் இந்திரியங்களை வென்றவனாகவும் அவன் விளங்கினான்.

18.56--59. முக்காலத்தையும் உணர்ந்தவனாகவும், ஸார்வபௌமனாகவும், தன்னடக்க முடையவனாகவும், சத்துருக்களை ஜயித்தவனாகவும், பூமியில் அடைதற்கரிய பூர்வ ஜன்ம ஞாபக முடையவனாகவும், அவன் விளங்குவதைப் பற்றிப் பரவலான செய்தியைக் கேள்விப்பட்டு முனிவர்கள் அவனை நாடி வந்தார்கள். அரசசிரேஷ்டனால் உபசரிக்கப் பெற்றுச் சிறந்த ஆஸனங்களில் அமர்ந்த அவர்கள் எல்லோரும் பின்வருமாறு அவனை வினவினார்கள். ''மகாராஜரே! எங்களுக்கு ஒரு சந்தேகம் உளது. எந்தப் புண்ணியத்தின் சிறப்பால் உங்களுக்குப் பூர்வஜன்ம ஞாபகம் கிட்டிற்று? எந்தப் புண்ணியச் சிறப்பால் முக்கால ஞானம் கிடைத்தது? அந்த ஞானத்தைப் பற்றிய உண்மையை அறிந்து கொள்ளவே நாங்கள் உங்களை அணுகியுள்ளோம்.''

राजोवाच—

श्रूयतां मुनयः सर्वे मम ज्ञानस्य कारणम्।
चक्रवाकः स्थितः पूर्वं नीचयोनिगतोऽपि वा॥ १८. ६१॥

अज्ञानतोऽपि कृतवानन्नपूर्णा प्रदक्षिणाम्।
तेन पुण्यप्रभावेण स्वर्गे कल्पद्वयस्थितिः।
त्रिकालज्ञानताऽप्यस्मिन्नभूज्जन्मनि सुव्रताः॥ १८. ६३॥

नारायण उवाच —

इति तस्य वचः श्रुत्वा राजर्षेर्धार्मिकस्य च।
प्रसन्नहृदयाः सर्वे गताः स्वस्वनिकेतनम्॥ १८. ६९॥

एवं प्रभावा सा देवी तत्पूजायाः फलं कियत्।
अस्तीति केन प्रष्टव्यं वक्तव्यं वा ना केनचित्॥
येषां तु जन्मसाफल्यं तेषां श्रद्धा तु जायते॥ १८. ७०॥

அரசன் கூறியது—

18.61–63. என்னுடைய ஞானத்திற்குக் காரணத்தை முனிவர்களனைவரும் கேட்கட்டும். நான் முற்பிறவியில் சக்ரவாகப் பறவை. இழிந்த பிறவியாயினும் அறியாமல் செய்ததாயினும் நான் அன்னபூர்ணு தேவியைப் பிரதக்ஷிணம் செய்தவனுனேன். அந்தப் புண்ணியச் சிறப்பால் இரண்டு கல்பகாலம் ஸ்வர்க்கத்தில் இருந்தேன். நல்ல விரதம் படைத்தவர்களே! அதனுல் இந்தப் பிறவியில் எனக்கு முக்கால ஞானம் ஏற்பட்டது.

நாராயணர் கூறியது—

18.69. அந்த தார்மிகரான ராஜரிஷியின் வார்த்தையைக் கேட்டு இருதயத்தில் மகிழ்ந்தவர்களாய் அவர்களெல்லோரும் தத்தம் ஆசிரமம் சென்றனர்.

18.70. அந்த தேவி அப்படிப்பட்ட பெருமை வாய்ந்தவள். அவள் பூஜையின் பயன் எப்படிப்பட்டது; எவராலும் கேட்கப்பட வேண்டியதும் சொல்லப்படவேண்டியதும் இல்லை. எவர்களுக்கு வாழ்க்கைப்பயன் சித்தித்ததோ அவர்களுக்கு அதில் சிரத்தை உண்டாகும்.

॥ माध्याह्निकम् ॥

अथाऽतः श्रूयतां ब्रह्मन् सन्ध्यां माध्याह्निकीं शुभाम्।
सावित्रीं युवतीं श्वेतवर्णां चैव त्रिलोचनाम्॥ १९. १॥

वरदां चाऽक्षमालाढ्यां त्रिशूलाभयहस्तकाम्।
वृषारूढां यजुर्वेदसहितां रुद्रदेवताम् ॥ १९. २॥

तमो-गुणयुतां चैव भुवर्लोकव्यवस्थिताम्।
आदित्यमार्गसंचार-कर्त्रीं मायां नमाम्यहम्॥ १९. ३॥

आदिदेवीमथ ध्यात्वाऽऽचमनादि च पूर्ववत्।
अथ चार्घ्यप्रकरणं पुष्पाणि चिनुयात्ततः॥ १९. ४॥

उर्ध्वंच सूर्याभिमुखं क्षिप्त्वार्घ्यं प्रतिपादयेत्।
प्रातःसन्ध्यादिवत्सर्व-मुपसंहारपूर्वकम् ॥ १९. ५॥

மாத்த்யான்ஹிகம்.

19.1–3. பிரம்மஸ்வரூபியே! மங்களமான மாத்தியான்னிக ஸந்தியோபாஸனேயைக் கூறுகிறேன், கேளும். யௌவன வயதுடையவளும், வெண்மை வண்ணத்தினளும், முக்கண்ணுடையவளும், வரமளிப்பவளும், யஜுர் வேதத்துடன் கூடியவளும், ருத்திரனை தேவதையாக உடையவளும், தமோ குணமுடையவளும், புவர்லோகத்திலிருப்பவளும், ஆதித்யமார்க்கத்தில் சஞ்சரிப்பவளும், மாயாஸ்வரூபிணியும் ஆகிய ஸாவித்ரீ தேவியை நான் நமஸ்கரிக்கிறேன்.

19.4. ஆதி தேவியை இங்ஙனம் தியானித்து முன்போல் ஆசமனம் முதலியவற்றைச் செய்து பிறகு புஷ்பத்துடன் அர்க்கியப் பிரதானம் செய்யவேண்டும்.

19.5. அர்க்கியத்தை சூரியனை நோக்கி மேலே தூக்கி அர்ப்பணம் செய்து காலை ஸந்தியாவந்தனம் போலவே உபஸம்ஹாரத்துடன் அனைத்தை செய்து முடிக்க வேண்டும்.

उदुत्यमिति सूक्तेन सूर्योपस्थानमेव च ।
चित्रं देवानामिति च सूर्योपस्थानमाचरेत् ॥ १९. १६ ॥

जपस्याऽपि प्रकारन्तु वक्ष्यामि शृणु नारद ।
कृत्वोत्तानौ करौ प्रातः सायंचाऽधः करौ तथा ॥ १९. १७ ॥

मध्याह्ने हृदयस्थौ तु कृत्वा जपमुदीरयेत् ।
पर्वद्वयमनामिक्याः कनिष्ठादिक्रमेण तु ॥
तर्जनीमूलपर्यन्तं करमाला प्रकीर्तिता ॥ १९. १९ ॥

इति मध्याह्नसन्ध्यायाः प्रकारः कीर्तितो मया ।
अतः परं प्रवक्ष्यामि ब्रह्मयज्ञविधिक्रमम् ॥ १९. २४ ॥

॥ ब्रह्मयज्ञः ॥

त्रिराचम्य द्विजः पूर्वं द्विर्मार्जन-मथाचरेत् ।
उपस्पृशेत्सव्यपाणिं पादौ च प्रोक्षयेत्ततः ॥ २०. १ ॥

19.16. 'உதுத்யம்' எனும் ஸூக்தத்தாலும் 'சித்ரம் தேவாஞம்' எனும் ஸூக்தத்தாலும் ஸூர்யோபஸ்தானத்தைச் செய்ய வேண்டும்.

19.17–19. நாரதரே ! ஜபம் செய்யும் முறையையும் கூறுகிறேன், கேளும். காலையில் கைகளைத் தூக்கிவைத்துக் கொண்டும், மாலையில் கிழாக வைத்துக் கொண்டும், நடுப் பகலில் மார்புக்கு நேராக வைத்துக் கொண்டும் ஜபத்தை உச்சரிக்க வேண்டும். பவித்ர விரலின் இரு கணுக்கள், சுண்டுவிரலின் கணுக்கள் அப்படியே வரிசையாக ஆள் காட்டி அடிக்கணுவரை (ஜபத்தை எண்ணுவதற்கு) கரமாலை எனக் கூறப்படும்.

19.24. இவ்வாறு மத்தியான ஸந்தியோபாஸனமுறை என்னுல் விளக்கப்பட்டது. இனிமேல் பிரம்மயக்ஞ விதியைப் பற்றிக் கூறுகிறேன்.

பிரம்மயக்ஞம்.

20.1. துவிஜன் முதலில் மூன்று தடவை ஆசமனம் செய்து இரண்டு தடவை (உதட்டை) துடைத்துக் கொள்ள வேண்டும். ஜலத்தைத் தொட்டு இடது கையையும் பாதங்களையும் புரோக்ஷிக்க வேண்டும்.

शिरसि चक्षुषि तथा नासायां श्रोत्रदेशके ।
हृदये च तथा मौलौ प्रोक्षणं सम्यगाचरेत् ॥ २०. २ ॥

देशकालौ समुच्चार्य ब्रह्मयज्ञमथाचरेत् ।
गायत्रीं त्रिर्जपेत्पूर्वं चाग्निमीले ततः परम् ॥ २०. ५ ॥

महाव्रतस्येति तथा इषेत्वोर्जे इतीव हि ।
अग्न आयाहि चेत्येवं शन्नो देवीरितीति च ॥ २०. ७ ॥

अथाऽतो धर्मजिज्ञासा अथाऽतो ब्रह्म इत्यपि ।
तच्छंयोरिति च प्रोच्य ब्रह्मणे नम इत्यपि ॥ २०. १० ॥

तर्पणं चैव देवानां ततः कुर्यात्प्रदक्षिणम् ।
प्रजापतिश्च ब्रह्मा च वेदा देवास्तथर्षयः ॥ २०. ११ ॥
यश्चायं कुरुते ब्रह्मयज्ञस्य विधिमुत्तमम् ।
सर्ववेदांगपाठस्य फलमाप्नोति साधकः ॥ २०. २८ ॥

20.2. பிறகு தலை, கண்கள், மூக்கு, காதுப்பிரதேசம், இருதயம், உச்சி முதலிய இடங்களில் நன்கு புரோக்ஷிக்க வேண்டும்.

20.5–28. தேசகாலத்தை உச்சரித்து பிரம்மயக்ஞத்தைச் செய்ய வேண்டும். காயத்ரியை முதலில் மூன்று தடவை ஜபித்துப் பிறகு 'அக்னிமீளே' என்ற மந்திரத்தையும், 'இஷேத் வோர் ஜேத்வா' என்ற மந்திரத்தையும், 'அக்ன ஆயாஹி' என்ற மந்திரத்தையும், '**சந்நோ தேவீ:**' என்ற மந்திரத்தையும், 'அதாதோ தர்மஜிஜ்ஞாஸா' 'அதாதோ ப்ரஹ்மஜிஜ்ஞாஸா', 'தச்சம்யோ:' 'ப்ரஹ்மணே நம:' முதலியவற்றையும் கூறிவிட்டு தேவதர்ப்பணம் செய்து, பிரதக்ஷிணம் செய்ய வேண்டும். பிரஜாபதி, பிரம்மா, தேவர்கள், ரிஷிகள் ஆகியோருக்கும் வேதங்களுக்கும் தர்ப்பணம் செய்து எந்த ஸாதகன் இந்த உத்தமமான பிரம்மயக்ஞவிதியை அனுஷ்டிக்கிறானே அவன் எல்லா அங்கங்களுடன் வேதத்தைப் பாராயணம் செய்த பலனை யடைவான்.

वैश्वदेवं ततः कुर्यान्नित्यश्राद्धं तथैव च।
अतिथिभ्योऽन्नदानं च नित्यमेव समाचरेत् ।। २०. २९ ।।

गोग्रासं च ततो दत्त्वा भुंजीत ब्राह्मणैः सह।
अह्नस्तु पंचमे भागे प्रकुर्यादितदुत्तमम् ।। २०. ३० ।।

इतिहासपुराणाद्यैः षष्ठसप्तमकौ नयेत्।
अष्टमे लोकयात्रा तु बहिः सन्ध्यां ततः पुनः ।। २०. ३१ ।।

20.29. பிறகு வைச்வதேவமும் நித்ய சிராத்தமும் செய்ய வேண்டும். நாள் தோறும் அதிதிகளுக்கு அன்ன தானமும் செய்ய வேண்டும்.

20.30. பிறகு பசுவிற்கு ஆகாரமளித்து விட்டுப் பிராம்மணர்களுடன் கூடி போஜனம் செய்ய வேண்டும். இதைப் பகலின் ஐந்தாவது முகூர்த்தத்தில் செய்வது உத்த மம்.

20.31. ஏழாவது எட்டாவது முகூர்த்தங்களை இதி ஹாஸ புராணங்களுடன் கழிக்க வேண்டும். எட்டாவது முகூர்த்தத்தில் வெளியே சஞ்சாரம் செய்து விட்டு பிறகு ஸந்தியாவந்தனம் செய்ய வேண்டும்.

॥ सायं सन्ध्या ॥

अथ सायन्तनीं सन्ध्यां प्रवक्ष्यामि महामुने ।
आचम्य प्राणानायम्य साधकः स्थिरमानसः ॥ २०. ३२ ॥

बद्धपद्मासनो योगी सायंकाले स्थिरो भवेत् ।
श्रुतिस्मृत्यादिकर्मादौ सगर्भः प्राणसंयमः ।
अगर्भो ध्यानमात्रं तु सचामन्त्रः प्रकीर्तितः ॥ २०. ३४ ॥

ध्यानं प्रकुर्यात्सन्ध्यायां सायंकाले विचक्षणः ।
वृद्धां सरस्वतीं देवीं कृष्णांगीं कृष्णवाससम् ॥ २०. ३६ ॥

ஸாயம் ஸந்தியா.

20.32–36. மகா முனிவரே ! இனி ஸாயங்கால ஸந்தியா வந்தனத்தைக் கூறுகிறேன். ஆசமனமும் பிராணுயாமமும் செய்து யோகியான ஸாதகன் மனதை ஒரு நிலைப் படுத்தி பத்த பத்மாஸனத்திலமர்ந்து ஸாயங்காலத்தில் அசைவற்றிருக்க வேண்டும். சுருதிஸ்மிருதிகளில் விதிக்கப்பட்ட கர்மாக்களின் ஆரம்பத்தில் பிராணுயாமம் ஸகர்ப்பமாகச் செய்ய வேண்டும். அகர்ப்பமாவது தியானம் மாத்திரம்; அது மந்திரமில்லாதது எனக் கூறப்படுகிறது. அறிவாளி ஸாயங்காலத்தில் ஸந்தியாதேவியை வயது சென்றவளாகவும், கரிய மேனியும் கரிய ஆடையும் அணிந்தவளாகவும் ஸரஸ்வதீ தேவியாகவும் தியானிக்க வேண்டும்.

शंखचक्रगदापद्म-हस्तां गरुडवाहनाम् ।
नानारत्नलसद्भूषां क्वणन्मंजीरमेखलाम् ॥ २०. ३७ ॥

अनर्घ्यरत्नमुकुटां तारहारवलीयुताम् ।
ताटंकबद्धमाणिकय-कान्तिशोभि-कपोलकाम् ॥ २०. ३८ ॥

पीताम्बरधरां देवीं सच्चिदानन्दरूपिणीम् ।
सामवेदेन सहितां संयुतां सत्त्ववर्त्मना ॥ २०. ३९ ॥

व्यवस्थितां च स्वर्लोके आदित्पथगामिनीम् ।
आवाहयाम्यहं देवी-मायान्तीं सूर्यमण्डलात् ॥ २०. ४० ॥

एवं ध्यात्वा च तां देवीं सन्ध्यासंकल्पमाचरेत् ।
आपोहिष्ठेति मन्त्रेण अग्निश्चेति तथैव च ॥ २०. ४१ ॥

विदध्यादाचमनकं शेषं पूर्ववदीरितम् ।
गायत्री मन्त्रमुच्चार्य श्रीनारायण प्रीतये ॥ २०. ४२ ॥

अर्घ्यं दद्याच्च सूर्याय साधकः शुद्धमानसः ।
उभौ पादौ समौ कृत्वा हस्ते कृत्वा जलांजलिम् ।
देवं ध्यात्वा मण्डलस्थं क्षिपेदर्घ्यं ततः क्रमात् ॥ २०. ४३ ।

20.37—43. கைகளில் சங்கு, சக்கரம், கதை, தாமரை ஆகியவற்றை ஏந்தியவளும், கருடனை வாகனமாகக் கொண்டவளும், பலவிதமான ரத்னங்கள் பிரகாசிக்கும் ஆபரணங்களையணிந்தவளும், ஒலிக்கும் சலங்கைகளுடன் கூடிய ஒட்டியாணம் பூண்டவளும், விலையொணாத ரத்னக் கிரீடமணிந்தவளும், நக்ஷத்திரமாலை யணிந்தவளும், காதணியில் பதித்த மாணிக்கங்களின் ஒளியால் பிரகாசிக்கும் கன்னங்களை உடையவளும், மஞ்சள் பட்டாடை உடுத்தவளும், ஸச்சிதானந்த ரூபிணியும், ஸாமவேதத்துடன் கூடியவளும், ஸத்வ குணத்துடன் கூடியவளும், ஸ்வர்க்கலோகத்தில் இருப்பவளும், சூரியமார்க்கத்தில் செல்லுபவளும், சூரிய மண்டலத்திலிருந்து எழுந்தருளுபவளுமான தேவியை நான் ஆவாஹனம் செய்கிறேன் என்று அந்த தேவியை தியானித்து ஸந்தியாவந்தன ஸங்கல்பத்தைச் செய்ய வேண்டும்.

अर्घ्यं दद्यात्तु यो नीरे मूढात्मा ज्ञानवर्जितः।
उल्लंघ्य स्मृतिमन्त्रांश्च प्रायश्चित्ती भवेद् द्विजः
॥ २०. ४४ ॥

ततः सूर्यमुपस्थायाऽप्यसावादित्यमन्त्रतः।
गायत्र्याश्च जपं कुर्या-दुपविश्य ततो बृशीम् ॥ २०. ४५ ॥

सहस्रं वा तदर्धं वा श्रीदेवीध्यानपूर्वकम्।
यथा प्रातः पुनस्तद्वदुपस्थानादिकं चरेत् ॥ २०. ४६ ॥

20.44. அறியாமையால் ஞானமின்றி (ஸாயங்கால) அர்க்கியத்தை எந்த துவிஜன் ஜலத்தில் விடுகிருனே அவன் ஸ்மிருதி மந்திரங்களை உல்லங்கனம் செய்ததால் பிராயச் சித்தம் செய்ய வேண்டியவனுகிருன்.

20.45. அர்க்கியத்திற்குப் பிறகு 'அஸாவாதித்ய' மந்திரத்தால் சூரியனை உபாசித்துவிட்டு ஆஸனத்திலமர்ந்து காயத்ரீ ஜபம் செய்ய வேண்டும்.

20.46. தேவீத்தியான பூர்வகமாக ஆயிரமோ அதில் பாதியோ (ஜபம் செய்ய வேண்டும்). காலையில் போலவே உபஸ்தானம் முதலியவற்றைச் செய்ய வேண்டும்.

'ஆபோஹிஷ்ட்டா' என்ற மந்திரத்தாலும் 'அக்னிச்ச' என்ற மந்திரத்தாலும் மற்ற மந்திரங்களாலும் முன் கூறியவாறே மிகுதியுள்ள அனுஷ்டானத்தைச் செய்ய வேண்டும். காயத்ரீ மந்திரத்தை உச்சரித்து 'ஸ்ரீநாராயணப்ரீதிக்காக' என்று சுத்த மனதுடன் ஸாதகன் சூரியனுக்கு அர்க்கியப் பிரதானம் செய்ய வேண்டும். இருபாதங்களையும் சமமாய்ச் சேர்த்துக் கையில் ஜலாஞ்ஜலியை ஏந்தி சூரியமண்டலத்தி லிருக்கும் தெய்வத்தை தியானித்து முறைப்படி அர்க்கியத்தை விட வேண்டும்.

सायं सन्ध्याविधानं च कथितं पापनाशनम्।
सर्वदुःखहरं व्याधिनाशकं मोक्षदं तथा ॥ २०. ५४ ॥

सदाचारेषु सन्ध्यायाः प्राधान्यं मुनिपुंगव।
सन्ध्याचरणतो देवी भक्ताभीष्टं प्रयच्छति ॥ २०.५५ ॥

20.54. இங்ஙனம் ஸாயம் ஸந்தியா விதானம் கூறப்பட்டது. அது பாவத்தைப் போக்குவது, எல்லா துக்கங்களையும் நீக்குவது, வியாதியை நாசம் செய்வது, மோக்ஷத்தை யளிப்பது.

20.55. முனிபுங்கவரே! ஸதாசாரங்களில் முக்கியமானது ஸந்தியாவந்தனம். ஸந்தியாவந்தன அனுஷ்டானத்தால் தேவியானவள் பக்தனுக்கு அபீஷ்டத்தை யளிக்கிருள்.

॥ गायत्रीपुरश्चरणम् ॥ ५० ॥

अथातः श्रूयतां ब्रह्मन् गायत्र्याः पापनाशनम् ।
पुरश्चरणकं पुण्यं यथेष्टफलदायकम् ॥ २१. १ ॥

पर्वताग्रे नदीतीरे बिल्वमूले जलाशये ।
गोष्ठे देवालयेऽश्वत्थे उद्याने तुलसीवने ॥ २१. २ ॥

पुण्यक्षेत्रे गुरोः पार्श्वे चित्तैकाग्र्यस्थलेऽपिच ।
पुरश्चरणकृन्मन्त्री सिद्ध्यत्येव न संशयः ॥ २१. ३ ॥

गायत्रीच्छन्दो मन्त्रस्य यथा संख्याक्षराणि च ।
तावल्लक्षाणि कर्तव्यं पुरश्चरणकं तथा ॥ २१. २३ ॥

50. காயத்ரீ புரச்சரணம்.

21.1. பிரம்மபுத்திரரே ! பாவத்தைப் போக்குவதும் விரும்பிய பலனையளிப்பதும் புண்ணியம் வாய்ந்ததுமான காயத்ரீ புரச்சரண விதியைக் கூறுகிறேன், கேளும்.

21.2. மலையுச்சியிலோ, நதிக்கரையிலோ, பில்வமரத்தடியிலோ, நீர்நிலையிலோ, பசுக்கொட்டிலிலோ, தேவாலயத்திலோ, அரசமரத்தடியிலோ, நந்தவனத்திலோ, துளசிவனத்திலோ;

21.3. புண்ணிய க்ஷேத்திரத்திலோ, குருவின் அருகாமையில் சித்தம் ஒன்றுபடும் இடத்திலோ புரச்சரணம் செய்யும் மந்திர ஸாதகன் சித்தி எய்துவான் என்பதில் சந்தேகமில்லை.

21.23. காயத்திரிச் சந்தத்திலுள்ள மந்திரத்தில் எத்தனை எழுத்துக்கள் உள்ளனவோ அத்தனை லக்ஷம் புரச்சரண ஜபம் செய்ய வேண்டும்.

ज्येष्ठाषाढौ भाद्रपदं पौषं तु मलमासकम्।
अंगारं शनिवारं च व्यतीपातंच वैधृतिम् ॥ २१. २५॥

अष्टमीं नवमीं षष्ठीं चतुर्थीं च त्रयोदशीम्।
चतुर्दशीममावास्यां प्रदोषं च तथा निशाम्॥
सर्वाण्येतानि वर्ज्यानि पुरश्चरणकर्मणि॥ २१. २६॥

चन्द्रतारानुकूले च शुक्लपक्षे विशेषत:।
पुरश्चरणकं कुर्यान्मन्त्रसिद्धिः प्रजायते।
स्वस्तिवाचनकं कुर्यान्नान्दी श्राद्धं यथाविधि॥ २१· ३०॥

विप्रान् सन्तर्प्य यत्नेन भोजनाच्छादनादिभि:।
आरभेत्तुतत: पश्चादनुज्ञानपुरःसरम्॥ २१. ३१॥

प्रारम्भदिनमारभ्य समाप्ति दिवसावधि।
न न्यूनं नातिरिक्तं च जपं कुर्याद्दिने दिने॥ २१. ३३॥

21.25–26. ஜ்யேஷ்ட்டா, ஆஷாடம், பாத்ரபதம், பௌஷம், மலமாதங்கள்; செவ்வாய், சனிக்கிழமைகள்; வ்யதீபாதம், வைத்ருதி; அஷ்டமி, நவமி, ஷஷ்டி, சதுர்த்தி, திரயோதசி, சதுர்த்தசி, அமாவாஸ்யை; பிரதோஷம், இரவு; இவையெல்லாம் புரச்சரண கருமத்திற்குத் தள்ளுபடி.

21.30 சந்திரன் அனுகூலமான சுக்லபக்ஷத்தில் புரச்சரணம் செய்வது விசேஷம்; அதில் மந்திரஸித்தி ஏற்படும். ஸ்வஸ்திவாசனமும் நாந்தி சிராத்தமும் முறைப்படி செய்ய வேண்டும்.

21.31. போஜனத்தாலும் வஸ்திரதானம் முதலியவற்றாலும் பிராம்மணர்களைத் திருப்தி செய்து அதன் பிறகு அவர்களால் அனுக்ஞையளிக்கப் பெற்று ஆரம்பிக்க வேண்டும்.

21.33. ஆரம்பதினத்திலிருந்து முடியுந்தினம் வரை நாள்தோறும் குறைக்காமலும் கூட்டாமலும் (ஸங்கல்பப்படி) ஜபம் செய்ய வேண்டும்.

नैरन्तर्येण कुर्वन्ति पुरश्चर्यां मुनीश्वर।
प्रातरारभ्य विधिवज्जपेन्मध्यदिनावधि ॥
मनः संहरणं शौचं ध्यानं मन्त्रार्थचिन्तनम् ॥ २१. ३४ ॥

जुहुयात्तद्दशांशेन सघृतेन पयोऽन्धसा।
तिलैः पत्रैः प्रसूनैश्च यवैश्च मधुरान्वितैः ॥ २१. ३७ ॥

कुर्याद्दशांशतो होमं ततः सिद्धो भवेन्मनुः।
गायत्री चैव संसेव्या धर्मकामार्थ-मोक्षदा ॥ २१. ३८ ॥

पद्मानां लक्षहोमेन घृताक्तानां हुताशने।
प्राप्नोति निखिलं मोक्षं सिद्ध्यत्येव न संशयः ॥ २१. ४४ ॥

एवं पुरश्चरणकं कृत्वा मन्त्रसिद्धिमवाप्नुयात्।
देवर्षे यदनुष्ठानाद्दारिद्र्यं विलयं व्रजेत्।
यच्छ्रुत्वाऽपि च पुण्यानां महतीं सिद्धिमाप्नुयात्
॥ २१. ५६ ॥

21.34. முனீசுவரரே! காலையில் தொடங்கி நடுப்பகல் வரை இடைவிடாது புரச்சரணஜபம் செய்யப்படவேண்டும். மனதையடக்கி பரிசுத்தமாயிருந்துகொண்டு மந்திரத்தின் அர்த்த சிந்தனையுடன் தியானம் செய்யவேண்டும்.

21.37. அதில் பத்தில் ஒரு பங்கு நெய் பாயஸம் எள் பத்ரம் புஷ்பம் வெல்லங்கலந்த யவதானியம் முதலிய வற்றால் ஹோமம் செய்ய வேண்டும்.

21.38. அப்படி தசாம்ச ஹோமம் செய்வதால் மந்திரம் ஸித்திக்கும். தர்மம் அர்த்தம் காமம் மோக்ஷம் ஆகியவற்றை அளிக்கும் காயத்ரீ தேவி இவ்வாறு சேவித்தற் குரியவள்.

21.44. ஒரு லக்ஷம் தாமரை, நெய்யில் தோய்த்து ஹோமம் செய்தால் ஒருவன் அனைத்தையும் அடைவான்; மோக்ஷமும் சித்திக்கும்; சந்தேகமில்லை.

21.56. இவ்வாறு புரச்சரணம் செய்து மந்திர சித்தியை அடையலாம். தேவரிஷியே! இதை அனுஷ்டிப் பதால் தாரித்திரியம் இல்லாதொழியும். இதைக் கேட்டாலும் மகத்தான புண்ணிய சித்தி ஏற்படும்.

॥ वैश्वदेवविधिः ॥

अथातः श्रूयतां ब्रह्मन् वैश्वदेव विधानकम्।
देवयज्ञो ब्रह्मयज्ञो भूतयज्ञस्तथैव च।
पितृयज्ञो मनुष्यस्य यज्ञश्चैव तु पंचमः ॥ २२. २ ॥

दध्यक्तं वा पायसाक्तं तदभावेऽम्भसाऽपिवा।
जुहुयाद्वैश्वदेवं तु न क्षारादिविमिश्रितम् ॥ २२. १० ॥

शाकं वा यदि वा पत्रं मूलं वा यदि वा फलम्।
संकल्पयेद्यदाहारं तेनाग्नौ जुहुयादपि ॥ २२. १२ ॥

अकृते वैश्वदेवे तु भिक्षौ भिक्षार्थमागते।
उद्धृत्य वैश्वदेवार्थं भिक्षां दत्त्वा विसर्जयेत् ॥ २२. १३ ॥

வைச்வதேவ விதி.

22.2. பிரம்மபுத்திரரே! இனி வைச்வதேவ விதியைப் பற்றிக் கேளும். தேவயக்ஞும், பிரம்மயக்ஞும், பூதயக்ஞும், பித்ருயக்ஞும், மனுஷ்ய யக்ஞும் என யக்ஞுங்கள் ஐந்து.

22.10. உப்பு முதலியது சேர்க்காத தயிர்ச்சாதத்தாலோ பாயஸான்னத்தாலோ அது இல்லாவிட்டால் தீர்த்தத்தாலோ வைச்வதேவ ஹோமத்தைச் செய்ய வேண்டும்.

22.12. கீரையோ, இலையோ, கிழங்கோ, பழமோ எது ஆகாரமாக ஸங்கல்பிக்கப்பட்டதோ அதனுலும் அக்னியில் ஹோமம் செய்யலாம்.

22.13. வைச்வதேவம் செய்வதற்கு முன் ஸந்நியாஸி பிக்ஷைக்காக வந்தால் வைச்வதேவத்திற்கு எடுத்து வைத்துவிட்டு பிக்ஷையளித்து அனுப்பி விட வேண்டும்.

वैश्वदेवकृतं दोषं शक्तो भिक्षुर्व्यपोहितुम् ।
न तु भिक्षुकृतदोषं वैश्वदेवो व्यपोहति ॥ २२. १४ ॥

यतिश्च ब्रह्मचारी च पक्वान्नस्वामिनावुभौ ॥
तयोरन्नमदत्त्वा तु भुक्त्वा चान्द्रायणं चरेत् ॥ २२. १६ ॥

वैश्वदेवानन्तरं च गोग्रासं प्रतिपादयेत् ।
गोभ्यश्च नम इत्येव पूजां कृत्वा गवेऽर्पयेत् ॥ २२. १७ ॥

ततो गोदोहनं कालं तिष्ठेच्चैव गृहांगणे ।
अतिथि-र्यत्र भग्नाशो गृहात्प्रतिनिवर्तते ।
स तस्मै दुष्कृतं दत्त्वा पुण्यमादाय गच्छति ॥ २२. १९ ॥

22.14. வைச்வதேவத்திற்கு ஏற்பட்ட தோஷத்தை போக்கிவிட ஸந்நியாஸிக்குச் சக்தி உண்டு; ஸந்நியாஸிக்குச் செய்த குற்றத்தை வைச்வதேவம் போக்காது.

22.16. ஸந்நியாஸியும் பிரம்மசாரியும் பக்குவமான அன்னத்திற்கு உரிமையுடையவர்கள். அவர்களுக்கு அன்ன மளிக்காமல் போஜனம் செய்தால் சாந்திராயண விரத மனுஷ்டிக்க வேண்டும்.

22.17. வைச்வதேவத்திற்குப் பின் பசுவிற்குக் கவளம் அளிக்க வேண்டும். பசுக்களுக்கு நமஸ்காரம் என்று சொல்லிப் பூஜித்து விட்டு கவளத்தை அர்ப்பணம் செய்ய வேண்டும்.

22.19. பிறகு பால் கறக்கும் நேரம் எவ்வளவோ அவ்வளவு நேரம் வீட்டு அங்கணத்தில் (அதிதியை எதிர் பார்த்துக் காத்து) நிற்க வேண்டும். எந்த வீட்டிலிருந்து ஆசை பூர்த்தியாகாமல் அதிதி திரும்பிப் போகிறானோ அவ் வீட்டிற்குத் தன் பாவத்தைக் கொடுத்து விட்டுப் புண்ணி யத்தைக் கவர்ந்து செல்கிறான்.

यत्फलं सोमयागेन प्राप्नोति धनवान् द्विज: ।
सम्यक् पंचमहायज्ञै-र्दरिद्रस्तेन चाऽऽप्नुयात् ।। २२. २२ ।।

।। प्राणाग्निहोत्रम् ।।

अथ प्राणाग्निहोत्रं तु वक्ष्यामि मुनिपुंगव ।
यज्ज्ञात्वा मुच्यते जन्तु-र्जन्म-मृत्यु-जरादिभि: ।। २२. २३ ।।

तर्जनी-मध्यमांगुष्ठै: प्राणस्यैवाहुतिं क्षिपेत् ।
मध्यमानामिकांगुष्ठैरपानस्याहुतिं क्षिपेत् ।। २२. २७ ।।

कनिष्ठानामिकांगुष्ठै-र्व्यानस्य तदनन्तरम् ।
कनिष्ठातर्जन्यंगुष्ठै-रुदानस्याहुतिं क्षिपेत् ।। २२. २८ ।।

22.22. தனவானான துவிஜன் ஸோமயாகத்தால் எந்தப் பலனை அடைவானோ அதை ஒரு தரித்திரன் நன்கனுஷ்ட்டித்த பஞ்சமகாயக்ஞத்தால் அடைவான்.

ப்ராணாக்னி ஹோத்ரம்

22.23. முனிசிரேஷ்டரே! இனிப் பிராணாக்னி ஹோத்திரத்தைக் கூறுகிறேன். அதையறிந்த ஜீவன் பிறப்பு இறப்பு மூப்புக்களினின்று விடுபடுவான்.

22.27. ஆள்காட்டி, நடுவிரல், கட்டைவிரல்களால் ப்ராணனுக்கு ஆஹுதி செய்யவும்; நடுவிரல், பவித்ரவிரல், கட்டைவிரல்களால் அபானனுக்கு ஆஹுதி செய்யவும்.

22.28. சுண்டுவிரல், பவித்ரவிரல், கட்டைவிரல்களால் வியானனுக்கு அதன் பின் ஆஹுதி; சுண்டுவிரல், ஆள்காட்டி, கட்டை விரல்களால் உதானனுக்கு ஆஹுதி செய்யவும்.

सर्वांगुलैर्गृहीत्वाऽन्नं समानस्याहुतिं क्षिपेत्।
स्वाहान्तान् प्रणवाद्यांश्च नाममन्त्रांश्च वै पठेत्॥ २२. २९॥

मुखे चाहवनीयस्तु हृदये गार्हपत्यकः।
नाभौ च दक्षिणाग्निः स्यादधः सभ्यावसथ्यकौ
॥ २२. ३०॥

वाग्घोता प्राण उद्गाता चक्षुरध्वर्युरेव च।
मनो ब्रह्मा भवेच्छ्रोत्र-माग्नीध्रस्थान एव च॥ २२. ३१॥

अहंकारः पशुश्चात्र प्रणवः पयईरितम्।
बुद्धिश्च पत्नी संप्रोक्ता यदधीनो गृहाश्रमी॥
उरो वेदिस्तु रोमाणि दर्भाः स्युः स्रुक् स्रवौ करौ
॥ २२. ३३॥

22.29. எல்லா விரல்களாலும் அன்னத்தை எடுத்து ஸமானனுக்கு ஆஹுதி செய்யவும். முதலில் 'ஓம்' சேர்த்து முடிவில் 'ஸ்வாஹா' சேர்த்து (ஓம் ப்ராணாய ஸ்வாஹா என்ற மாதிரி) அந்தந்த மந்திரங்களைச் சொல்ல வேண்டும்.

22.30. வாயில் ஆஹவனீயாக்னியும், இருதயத்தில் கார்ஹபத்யாக்னியும், நாபியில் தக்ஷிணாக்னியும், அதன் கீழ் ஸப்யாக்னியும், ஆவஸத்யாக்னியும் இருக்கின்றன.

22.31. வாக்கு ஹோதா, ப்ராணன் உத்காதா, கண் அத்வர்யு, மனது பிரம்மா, காது ஆக்னித்ரஸ்தானம் ஆகும்.

22.33. இந்த யாகத்தில் அஹங்காரம் பசு (பலியிடப் படுவது); பிரணவம் பால்; புத்தி பத்னி ஸ்தானம்—கிருஹஸ்தாசிரமி அதன் அதீனமானவன். மார்பு யாக மேடை, உரோமங்கள் தர்ப்பை, கைகள் ஸ்ருக்கும் ஸ்ரவமும்.

प्राणमन्त्रस्य च ऋषी रुक्मवर्णः क्षुधाग्निकः।
देवतादित्य एवात्र गायत्रीच्छन्द उच्यते ॥ २२. ३४ ॥
प्राणाय तथा स्वाहा मन्त्रान्ते कीर्तयेदपि।
इदमादित्य देवाय नममेति वदेदपि ॥ २२. ३५ ॥
अपानमन्त्रस्य तथा गोक्षीरधवलाकृतिः।
श्रद्धाग्नि ऋषिरेवात्र सोमो वै देवता स्मृता ॥ २२. ३६ ॥
उष्णिक् छन्दस्तथाऽपानाय स्वाहेत्यपि कीर्तयेत्।
सोमायेदं च न ममेत्यत्रोहः परिकीर्तितः ॥ २२. ३७ ॥
व्यानमन्त्रस्य चाख्यातोऽम्बुजवर्णहुताशनः।
ऋषिरुक्तो देवताग्निरनुष्टुप् छन्द ईरितम् ॥ २२. ३८ ॥
व्यानाय तथा स्वाहाऽग्नयेदं न ममेत्यपि ॥
उदानमन्त्रस्य तथा शक्रगोपसवर्णकः ॥ २२. ३९ ॥
ऋषिरग्निः समाख्यातो वायुर्वै देवता स्मृता।
बृहती छन्दमाख्यात-मुदानाय च पूर्ववत् ॥ २२. ४० ॥

22.34–35. பிராணமந்திரத்திற்கு ஸ்வர்ண வர்ண மான க்ஷுதாக்னியே ரிஷி, காயத்ரீ சந்தஸ், ஆதித்யன் தேவதை, 'பிராணாய ஸ்வாஹா' என்று ஹோமம் செய்து மந்திர முடிவில் 'ஆதித்ய தேவாய இதம் ந மம' என்று கூறவேண்டும்.

22.36–37. அபானமந்திரத்திற்கு பசும்பால் போல் வெண்மையான ச்ரத்தாக்னி ரிஷி, உஷ்ணிக் சந்தஸ், ஸோமன் தேவதை என்று கூறப்பட்டுள்ளது. 'அபானா ய ஸ்வாஹா' என்று ஹோமம் செய்து 'ஸோமாய இதம் ந மம' என்று கூறவேண்டும்.

22.38–40. வியானமந்திரத்திற்குத் தாமரை வர்ண மான அக்னி ரிஷி, அனுஷ்டுப் சந்தஸ், அக்னி தேவதை என்று கூறப்பட்டுள்ளது. 'வியானாய ஸ்வாஹா' என்று ஹோமம் செய்து 'அக்னய இதம் ந மம' என்று கூற வேண்டும். உதான மந்திரத்திற்கு இந்திர கோபவர்ண முள்ள அக்னி ரிஷி, ப்ருஹதி சந்தஸ், வாயு தேவதை.

वायवे चेदं न मम एवं चैवोच्चरेद् द्विजः।
समानवायुमन्त्रस्य विद्युद्वर्णो विरूपक: ॥ २२.४१ ॥

ऋषिरग्निः समाख्यात: पर्जन्यो देवता मता।
पङ्क्तिश्छन्दः समाख्यातं समानाय च पूर्ववत् ॥ २२.४२ ॥

पर्जन्यायेदमुक्त्वा षष्ठीं चैवाहुतिं क्षिपेत्।
वैश्वानरो महानग्नि-र्ऋषिर्वै परिकीर्तित: ॥ २२.४३ ॥

गायत्रीच्छन्द आख्यातं देवस्वात्मा भवेदपि।
स्वाहान्तो मन्त्र आख्यातः परमात्मन उच्चरेत् ॥ २२.४४ ॥

इदं न मम चेत्येवं जातं प्राणाग्निहोत्रकम्।
एतज्ज्ञात्वा विधिं कृत्वा ब्रह्मभूयाय कल्पते।
प्राणाग्निहोत्रविद्येयं संक्षेपात्कथिता हि ते ॥ २२.४५ ॥

22.41–45. 'உதாநாய ஸ்வாஹா' என்று முன்போல் சொல்லி 'வாயவ இதம் ந மம' என்று முடிக்க வேண்டும். ஸமான மந்திரத்திற்கு மின்னல் வர்ணமும் பலவித வடிவமும் உள்ள அக்னி ரிஷி, பங்க்திச் சந்தஸ், பார்ஜன்யன் தேவதை எனக் கூறப்படுகிறது. 'ஸமாநாய ஸ்வாஹா' என்று முன் போல் செல்லி ஆஹுதியைச் செய்து 'பார்ஜன்யாய இதம் ந மம' என்று முடிக்கவேண்டும். ஆறாவது ஆஹுதிக்கு மஹாநாகிய வைச்வநராக்னி ரிஷி, காயத்ரீச்சந்தஸ், பரமாத்மா தேவதை. 'ப்ரஹ்மணே ஸ்வாஹா' என்று சொல்லி 'பரமாத்மன இதம் ந மம' என்று சொல்ல வேண்டும். இது தான் பிராணாக்னி ஹோத்ர முறை. இந்த விதியை அறிந்து அனுஷ்டிப்பவன் பிரம்மஸ்வரூபத்தை யடைவதற்கு உரியவனாகிறான். இவ்வாறாக இந்த பிராணாக்னி ஹோத்ர வித்தை சுருக்கமாக உமக்குக் கூறப்பட்டது.

अमृताभिधान-मित्येव-मुच्चार्य साधकोत्तमः ।
उच्छिष्टभाग्भ्यः पात्रान्नं दद्यादन्ते विचक्षणः ॥ २३. १ ॥

ये के चाऽस्मत्कुले जाता दासदास्योऽन्नकांक्षिणः ।
ते सर्वे तृप्तिमायान्तु मयादत्तेन भूतले ॥ २३. २ ॥

रौरवेऽपुण्यनिलये पद्मार्बुदनिवासिनाम् ।
अर्थिनामुदकं दत्त-मक्षय्यमुपतिष्ठतु ॥ २३. ३ ॥

॥ पुरश्चरण-नियमाः ॥

पूजा कालत्रये नित्यं जपस्तर्पण-मेवच ।
होमो ब्राह्मणभुक्तिश्च पुरश्चरणमुच्यते ॥ २३. १० ॥

23.1. 'அம்ருதாபிதானமஸி' என்று உத்தராபோசனம் செய்து அறிவாளியான ஸாதக சிரேஷ்டன் உச்சிஷ்டத்தில் பங்குள்ளவர்களுக்கு உண்ட தட்டில் உள்ள அன்னத்தை முடிவில் அளிக்க வேண்டும்.

23.2. எங்கள் குலத்தில் தோன்றி அன்னத்தை விரும்பும் அடிமைகளாயுள்ள ஸ்திரீபுருஷர்கள் எவர்களாவது இருந்தால் அவர்களெல்லாம் என்னுல் பூமியில் இடப்பட்டதால் திருப்தியடையட்டும்.

23.3. புண்ணியமில்லாத ரௌரவத்தில் பத்மம் அற்புதம் என்ற நீண்டகாலம் வசிப்பவர்களும் ஜலத்தை விரும்புபவர்களும் எவர்களோ அவர்களுக்கு இந்த ஜலம் அக்ஷயமாக இருக்கட்டும் என்று (ஆபோசனம் செய்து மிகுந்த) ஜலத்தை விடவேண்டும்.

புரச்சரண நியமங்கள்

23.10. நாள் தோறும் மூன்று வேளைகளிலும் பூஜை, ஜபம், தர்ப்பணம், ஹோமம், பிராம்மண போஜனம் ஆகியவற்றைச் செய்தல் புரச்சரணம் எனப்படும். (அதற்கு நியமங்கள் பின்வருமாறு).

अधः शयानो धर्मात्मा जितक्रोधो जितेन्द्रियः।
लघुमिष्ट-हिताशी च विनीतः शान्तचेतसा ॥ २३. ११ ॥

नित्यं त्रिषवणस्नायी नित्यं स शुभभाषणः।
नत्वा नैव च भाषेत जपहोमार्चनादिषु ॥ २३. १३ ॥

मैथुनस्य तथाऽऽलापं तद्गोष्ठीमपि वर्जयेत्।
कर्मणा मनसा वाचा सर्वावस्थासु सर्वदा ॥ २३. १४ ॥

सर्वत्र मैथुनत्यागो ब्रह्मचर्यं प्रचक्षते।
अतः कार्यं तु विप्रेन्द्र ऋणत्रयविमोचनम् ॥ २३. १५ ॥

ऋषिभ्यो ब्रह्मचर्येण पितृभ्यस्तु तिलोदकैः॥
मुच्येद्यज्ञेन दैवेभ्यः स्वाश्रमं धर्ममाचरेत् ॥ २३. १८ ॥

23.11–13. தரையில் படுப்பவனுகவும், தர்மத்தை யனுஷ்டிப்பவனுகவும், கோபத்தை ஜயித்தவனுகவும், இந்திரியங்களை அடக்கியவனுகவும், இலகுவானதும் இனியதும் ஹிதமானதுமான உணவுடையவனுகவும், பணிவும், சித்தத்தில் அமைதியும் உடையவனுகவும், தினம் மூன்று வேளை ஸ்நானம் செய்பவனுகவும், எப்பொழுதும் மங்களமான பேச்சுடையவனுகவும், ஜபம், ஹோமம், பூஜை செய்யும் போது பேசாதவனுகவும் இருக்க வேண்டும்.

22.14. ஸ்திரீ ஸங்கமத்தையும் ஸ்த்ரீ ஸங்கமத்தைப் பற்றிப் பேச்சையும் அதைப் பற்றிப் பேசுபவர்களின் கூட்டத்தையும் நீக்க வேண்டும். இது செயலாலும், மனதாலும், வாக்காலும் எல்லா நிலைகளிலும் எப்பொழுதும் தவிர்க்கப் பட வேண்டும்.

23.15. எவ்வகையிலும் ஸ்திரீ ஸங்கமத்தை யொழித்தல் பிரம்மசரியம் எனக் கூறப்படுகிறது. விப்ர சிரேஷ்டரே! மூன்று விதமான கடன்களிலிருந்தும் விடுதலை பெற வேண்டும்.

23.18. பிரம்மசரியத்தால் ரிஷிகள் கடனிலிருந்தும், திலதர்ப்பணத்தால் பிதிருக்கள் கடனிலிருந்தும், யக்ஞத்தால் தேவர்கள் கடனிலிருந்தும் விடுபட வேண்டும். தனது ஆசிரமத்திற்குரிய தருமத்தை அனுஷ்டிக்க வேண்டும்.

क्षीराहारी फलाशी वा शाकाशी वा हविष्यभुक्॥
भिक्षाशी वा जपेद्विद्वान् कृच्छ्रचान्द्रायणादिकम् ॥ २३. १९॥
लवणं क्षारमम्लंच गृंजनं कांस्य भोजनम्।
ताम्बूलं च द्विभुक्तं च दुष्टवासः प्रमत्तनम् ॥ २३. २२ ॥
श्रुतिस्मृतिविरोधं च जपं रात्रौ विवर्जयेत्।
वृथा न कालं गमयेद् द्यूतस्त्रीस्वापवादतः ॥ २३. २३ ॥
गमयेद्देवतापूजास्तोत्रागमविलोकनैः।
भूशय्या ब्रह्मचारित्वं मौनचर्या तथैवच ॥ २३. २४ ॥
नित्यं त्रिषवणस्नानं शूद्रकर्मविवर्जनम्।
नित्यपूजा नित्यदानमानन्द-स्तुतिकीर्तनम् ॥ २३. २५ ॥
नैमित्तिकार्चनंचैव विश्वासो गुरुदेवयोः।
जपनिष्ठस्य धर्मा ये द्वादशैते सुसिद्धिदाः ॥ २३. २६ ॥

23.19. ஆஹாரமாகப் பால், பழம், கீரை, ஹவிஷ்யம், பிக்ஷான்னம் ஆகியவற்றைக் கொண்டு அறிவாளியானவன் ஜபம் செய்ய வேண்டும். கிருச்ச்ரம், சாந்த்ராயணம் முதலிய விரதங்களையும் கைக் கொள்ளலாம்.

23.22–23. உப்பு, கைப்பு, புளிப்பு, உள்ளிப் பூண்டு, பித்தளை போஜன பாத்திரம், தாம்பூலம், இரண்டு வேளை சாப்பாடு, கெட்ட சேர்க்கை, அஜாக்கிரதை, சுருதி ஸ்மிருதிக்கு விரோதமாய் நடத்தல், இரவில் ஜபம் ஆகிய வற்றை நீக்க வேண்டும். சூதாட்டம், ஸ்ரீஸங்கம், தூக்கம், வாக்குவாதம் ஆகியவற்றில் வீண்காலம் போக்கக் கூடாது.

23.24–26. தேவதா பூஜை, ஸ்தோத்ரம், ஆகமத்தைப் படித்தல் முதலியவற்றில் பொழுது போக்கவேண்டும். பூமியில் படுக்கை, பிரம்மசரியம், மௌனம், மூன்று வேளை ஸ்நானம், சூத்ரகர்மாக்களை ஒழித்தல், நித்யபூஜை, நித்ய தானம், ஸந்தோஷம், ஸ்துதி, கீர்த்தனம், நைமித்திக அர்ச்சனம், குருவிடத்தும் தெய்வத்திடத்தும் விசுவாஸம் ஆகிய இப்பன்னிரண்டு தர்மங்களும் ஜபநிஷ்டை யிலிருப்பவனுக்கு நன்கு சித்தியளிப்பவை.

नित्यं सूर्यमुपस्थाय तस्य चाभिमुखो जपेत्।
देवता प्रतिमादौ वा वह्नौ वाऽभ्यर्च्यतन्मुखः ॥ २३. २७ ॥

स्नानपूजातपध्यान-होमतर्पणतत्परः।
निष्कामो देवतायां च सर्वकर्मनिवेदकः ॥ २३. २८ ॥

एवमादींश्च नियमान् पुरश्चरणकृच्चरेत्।
तस्माद् द्विजः प्रसन्नात्मा जपहोमपरायणः ॥ २३. २९ ॥

तपोयुक्तस्य सिद्ध्यन्ति कर्माणि नियतात्मनः।
तानि कर्माणि वक्ष्यामि विधानानि च कर्मणाम् ॥ २३. ३२ ॥

पुरश्चरणमादौ च कर्मणां सिद्धिकारकम।
स्वाध्यायाभ्यसनस्यादौ प्राजापत्यं चरेद्द्विजः ॥ २३. ३३ ॥

23.27–28. நாள் தோறும் ஸுர்யோபஸ்தானம் செய்து அவருக்கு நேரெதிரில் இருந்து கொண்டு ஜபம் செய்யவேண்டும். தேவதையின் பிரதிமை முதலியவற்றிலோ அக்னியிலோ நேர்முகமாயிருந்து பூஜை செய்து ஸ்நானம் பூஜை தவம் தியானம் ஹோமம் தர்ப்பணம் முதலியவற்றில் ஊன்றி நிற்பவனாய் நிஷ்காமனாய் எல்லாக்கருமபலனையும் தெய்வத்திற்கு நிவேதனம் செய்பவனாயிருக்கவேண்டும்.

23.29. இம்மாதிரி நியமங்களைப் புரச்சரணம் செய்பவன் அனுஷ்டிக்க வேண்டும். ஆகையால் துவிஜன் தெளிந்த மனதுடன் ஜபம் ஹோமம் முதலியவற்றை நன்கு செய்ய வேண்டும்.

23.32. தன்னையடக்கித் தவஞ் செய்பவனுக்குக் கர்மங்கள் சித்திக்கின்றன. அந்தக் கர்மங்களையும் கர்மவிதானங்களையும் கூறுகிறேன்.

23.33. கர்மத்திற்குச் சித்தியளிப்பது முதலில் புரச்சரணம். ஸ்வாத்தியாய அப்பியஸனத்திற்கு முன் துவிஜன் பிராஜாபத்ய விரதத்தை அனுஷ்டிக்க வேண்டும்.

केशश्मश्रुलोमना वापयित्वा ततः शुचिः।
तिष्ठेदहनि रात्रौ तु शुचिरासीत वाग्यतः ॥ २३ ३४॥

सत्यवादी पवित्राणि जपेदव्याहृतयस्तथा।
ओंकाराद्यास्तु ता जप्त्वा सावित्रीं च तदित्यृचम्
॥ २३. ३५ ।'

आपोहिष्ठेति सूक्तं च पवित्रं पापनाशनम्।
पुनन्त्यः स्वस्तिमत्यश्च पावमान्यस्तथैव च ॥ २३. ३६॥

सर्वत्रैतत्प्रयोक्तव्य-मादावन्ते च कर्मणाम्।
आसहस्रादाशताद्वाप्यादशादथवा जपेत् ॥
ओंकारं व्याहृतीस्तिस्रः सावित्रीमथवायुतम् ॥ २३. ३७॥

23.34. கேசம் மீசை முதலியவற்றை க்ஷவரம் செய்து கொண்டு பகலும் இரவும் பரிசுத்தனுகவும் வாக்கையடக்கியவனுகவும் இருக்க வேண்டும்.

23.35. ஸத்தியம் பேசுபவனுகவும் பவித்திரமான ஓங்காரத்துடன் கூடிய வியாஹ்ருதிகளேயும் 'தத்ஸவிதுர் வரேண்யம்' எனும் ஸாவித்ரீ மந்திரத்தையும் ஜபிக்க வேண்டும்.

3.36. பவித்ரமானதும் பாவத்தைப் போக்குவது மான 'ஆபோஹிஷ்ட்டா' எனும் மந்திரத்தையும், பரிசுத்த மளிக்கும் 'ஸ்வஸ்திமதீ' மந்திரங்களேயும் 'பாவமானீ' மந்திரங்களேயும் ஜபிக்க வேண்டும்.

23.37. எல்லா விடங்களிலும் கர்மங்களின் ஆரம்பத்திலும் முடிவிலும் இது இங்ஙனம் கூட்டிக் கொள்ள வேண்டியது. ஓங்காரமும் மூன்று வியாஹிருதியும் சேர்ந்த ஸாவித்ரீ மந்திரம் பத்தாயிரம் தடவை, ஆயிரம் தடவை, நூறு தடவை அல்லது பத்து தடவையாவது ஜபிக்கப்பட வேண்டும்.

कृच्छ्राणामेष सर्वेषां विधिरुक्तोऽनुपूर्वशः।
प्राजापत्यस्य कृच्छ्रस्य तथा सान्तपनस्य च ॥ २३. ३८ ॥

पराकस्य कृच्छ्रस्य विधिश्चान्द्रायणस्य च।
तप्तकृच्छ्रेण सर्वाणि पापानि दहति क्षणात्।
त्रिभिश्चान्द्रायणैः पूतो ब्रह्मलोकं समश्नुते ॥ २३. ४३ ॥

त्र्यहं प्रातस्त्र्यहं सायं त्र्यहमद्यादयाचितम्।
त्र्यहं परं च नाश्नीयात्प्राजापत्यं चरेद् द्विजः ॥ २३. ४४ ॥

गोमूत्रं गोमयं क्षीरं दधिः सर्पि कुशोदकम्।
एकरात्रोपवासश्च कृच्छ्रं सान्तपनं स्मृतम् ॥ २३. ४५ ॥

एकैकं ग्रासमश्नीयादहानि त्रीणि पूर्ववत्।
त्र्यहं चोपवसेदित्थ-मतिकृच्छ्रं चरेद् द्विजः ॥ २३. ४६ ॥

23.38–43. உடலை வருத்திச் செய்யும் எல்லாத் தவங்களுக்கும் ஆதியிலிருந்து தொடர்பாகக் கைக்கொள்ள வேண்டிய முறை இங்ஙனம் கூறப்பட்டது. பிராஜாபத்யம் எனும் கிருச்ச்ரம், ஸாந்தபனம், பராகம், சாந்த்ராயணம் எல்லாவற்றிற்கும் இதே விதி. கிருச்ச்ரத்தால் உடலை வருத்துவது எல்லாப் பாவங்களையும் ஒரு நொடியில் எரித்து விடுகிறது. மூன்று சாந்திராயணங்களால் பரிசுத்தமானவன் பிரம்ம லோகச் சுகத்தை யனுபவிப்பான்.

23.44. மூன்று நாள் காலை ஒரு வேளை, மூன்று நாள் மாலை ஒரு வேளை, மூன்று நாள் கேட்காமல் கிடைத்தது, மூன்று நாள் ஒன்றும் சாப்பிடாமலிருப்பது என்று பிராஜா பத்ய விருதத்தை துவிஜன் அனுஷ்டிக்க வேண்டும்.

23.45. கோமூத்ரம் – கோமயம் – பால் – தயிர் – நெய்-தர்ப்பை நீர் இவற்றாலான பஞ்சகவ்யத்தை ஒரு நாள் புசித்து (மறு நாள்) உபவாசமிருப்பது ஸாந்தபன க்ருச்ச்ரம் எனப் படும்.

23.46. மூன்று நாள் ஒவ்வொரு கவளம் மட்டும் புசித்துப்பின் மூன்று நாள் உபவாஸமிருப்பது என்ற முறையில் துவிஜன் அதிக்ருச்ச்ரத்தை அனுஷ்டிக்க வேண்டும்.

एवमेव त्रिभिर्युक्तं महासान्तपनं स्मृतम् ।
तप्तकृच्छ्रं चरन्विप्रो जलक्षीरघृतानिलान् ॥ २३. ४७ ॥

प्रतित्र्यहं पिबेदुष्णान् सकृत्स्नायी समाहितः ।
यतात्मनोऽप्रमत्तस्य द्वादशाहमभोजनम् ।
पराको नाम कृच्छ्रोऽयं सर्वपापप्रणोदनः ॥ २३. ४९ ॥

एकैकं तु ह्रसेत्पिण्डं कृष्णे शुक्लं च वर्धयेत् ।
अमावास्यां न भुंजीत एवं चान्द्रायणे विधिः ॥
उपस्पृश्य त्रिषवणमेतच्चान्द्रायणं स्मृतम् ॥ २३. ५० ॥

चतुरः प्रातरश्नीयाद्विप्रः पिण्डान् कृताह्निकः ।
चतुरोऽस्तमिते सूर्ये शिशुचान्द्रायणं स्मृतम् ॥ २३. ५१ ॥

23.47–49. இதை மூன்றுமுறை அனுஷ்டிப்பது மகாஸாந்தபனம். தப்தக்ருச்ச்ரத்தை யனுஷ்டிக்கும் விப்ரன் ஜலம் பால் நெய் வாயு ஆகியவற்றை வரிசையாக மும் மூன்று நாள் உஷ்ணமாகப் பருகி ஒருமுறை ஸ்நானம் செய்து மனதையடக்கியிருக்க வேண்டும். பன்னிரண்டு நாள் ஜாக்கிரதையுடன் போஜனமின்றி இருப்பது பராகம் எனும் கிருச்ச்ரம். அது எல்லாப்பாவத்தையும் போக்குவது.

23.50. அமாவாசையில் உபவாஸமிருந்து சுக்ல பக்ஷத்தில் ஒவ்வொரு கவளமாக ஏற்றிக் கிருஷ்ணபக்ஷத்தில் ஒவ்வொன்ருகக் குறைத்தல் சாந்திராயணத்திற்கு விதி. மூன்று வேளை ஸ்நானமும் சாந்திராயணத்திற்குக் கூறப் பட்டுள்ளது.

23.51. விப்ரன் காலையில் ஆஹ்னிகத்தை முடித்ததும் நாலு கவளமும் அதேமாதிரி சூரியன் அஸ்தமித்தபின் நாலு கவளமும் உண்டிருத்தல் சிசு சாந்திராயணம் எனப்படும்.

अष्टावष्टौ समश्नीयात्पिण्डान्मध्यं दिने स्थिते ।
नियतात्मा हविष्यस्य यतिचान्द्रायणं व्रतम् ।। २३. ५२ ।।

एतद्रुद्रास्तथादित्या वसवश्च चरन्ति हि ।
सर्वे कुशलिनो देवा मरुतश्च भुवा सह ।। २३. ५३ ।।

एकैकं सप्तरात्रेण पुनाति विधिवत्कृतम् ।
त्वगसृक्पिशितास्थोनि मेदो मज्जा वसास्तथा ।। २३. ५४ ।।

एवं शुद्धस्य कर्माणि सिद्ध्यन्त्येव न संशयः ।
शुद्धात्म कर्म कुर्वीत सत्यवादी जितेन्द्रियः ।। २३. ५६ ।।

त्रिरात्रमेवोपवसेद्रहितः सर्वकर्मणा ।
त्रीणि नक्तानि वा कुर्यात्ततः कर्म समारभेत् ।। २३. ५७ ।।

23.52. மத்தியான்னத்தில் மட்டும் ஹவிஷ்யான்னமாக எட்டுக் கவளம் உண்டு நியமித்துடனிருத்தல் யதிசாந்த்ராயண விரதம் எனப்படும்.

23.53. இதை ருத்திரர்களும் ஆதித்தியர்களும் வசுக்களும் மருத்துக்களும் தேவர்களும் மங்களத்தை நாடிய எல்லோருமே இதை அனுஷ்டிக்கின்றனர்.

23.54. இதில் ஒவ்வொன்றும் விதிப்படி ஏழு நாட்கள் அனுஷ்டிக்கப்பட்டால், தோல், ரத்தம், மாம்ஸம், எலும்பு, கொழுப்பு, ஊன், ஊனின் ஸாரம் ஆகிய அனைத்தையும் புனிதமாக்கும்.

23.56. இவ்வாறு பரிசுத்தமானவனுடைய கர்மங்கள் சித்தியடையுமென்பதில் சந்தேகமில்லை. இப்படிப் பரிசுத்தனாகி உண்மை பேசுபவனாய் இந்திரியங்களை ஜயித்தவனாய் ஒருவன் கர்மம் செய்ய வேண்டும்.

23.57. எல்லாக்கருமங்களையும் விட்டு மூன்று நாள் உபவாஸமிருக்க வேண்டும்; அல்லது மூன்று இரவாவது இருக்க வேண்டும். பிறகு கருமாவைத் தொடங்க வேண்டும்.

एवं विधानं कथितं पुरश्चर्याफलप्रदम् ।
गायत्र्याश्च पुरश्चर्या सर्वकामप्रदायिनी ॥
कथिता तव देवर्षे महापापविनाशिनी ॥ २३. ५८ ॥

आदौ कुयदि् व्रतं मन्त्री देहशोधनकारकम् ।
पुरश्चर्या ततः कुर्यात्समस्तफलभाग्भवेत् ॥ २३. ५९ ॥

॥ शान्तिप्रयोगः ॥

नारद उवाच —

नारायण महाभाग गायत्र्यास्तु समासतः ।
शान्त्यादिकान् प्रयोगांस्तु वदस्व करुणानिधे ॥ २४. १ ॥

23.58. புரச்சரணம் பயனளிப்பதற்கு இவ்வாறு முறை விளக்கப்பட்டது. எல்லா ஆசைகளையும் பூர்த்தி செய்வதும், கொடிய பாவங்களையும் நாசம் செய்வதுமான காயத்ரீ புரச்சரணம், தேவரிஷியே, உமக்குக் கூறப்பட்டது.

23.59. தேகத்தைப் பரிசுத்தமாக்கும் விரதத்தை ஆதியில் மந்திரோபாஸகன் செய்ய வேண்டும், பிறகு புரச்சரணத்தைச் செய்து எல்லாப் பயன்களையும் அடைபவனுவான்.

சாந்திப்பிரயோகம்

நாரதர் கூறியது—

24.1. மகாபாக்கியசாலியான நாராயணரே! கருணை நிதியே! காயத்ரியின் சாந்திகர்மங்களையும் பிரயோகங்களையும் சேர்த்துக் கூறியருளும்.

नारायण उवाच —

अतिगुह्यमिदं पृष्टं त्वया ब्रह्मतनूद्भव ।
न कस्यापि च वक्तव्यं दुष्टाय पिशुनाय च ।। २४. २ ।।

अथ शान्तिः पयोक्ताभिः समिद्भिर्जुहुयाद् द्विजः ।
शमीसमिद्भिः शाम्यन्ति भूतरोग-ग्रहादयः ।। २४. ३ ।।

जलेन तर्पयेत्सूर्यं पाणिभ्यां शान्तिमाप्नुयात् ।
जानुदघ्ने जले जप्त्वा सर्वान् दोषाञ्छमं नयेत् ।। २४. ५ ।।

कण्ठदघ्ने जले जप्त्वा मुच्येत्प्राणान्तिकाद्भयात् ।
सर्वेभ्यःशान्तिकर्मभ्यो निमज्याप्सु जपः स्मृतः ।। २४. ६ ।।

நாராயணரிஷி கூறியது—

24.2. பிரம்மபுத்திரரே! உம்மால் கேட்கப்பட்ட இது மிகவும் ரகசியமானது. துஷ்டனையும் உலோபியாயும் உள்ள எவனுக்கும் இதைச் சொல்லக் கூடாது.

24.3. பாலுடன் கூடிய ஸமித்துக்களால் துவிஜன் சாந்தி ஹோமம் செய்ய வேண்டும். வன்னி ஸமித்துக்க ளால் பூதரோகங்களும் கிரகதோஷங்களும் சாந்தியடை கின்றன.

24.5. சூரியனுக்கு கைகளால் ஜலதர்ப்பணம் செய்து சாந்தியடையலாம். முழங்கால் ஆழமுள்ள ஜலத்தில் நின்று கொண்டு ஜபம் செய்தால் எல்லா தோஷங்களும் சாந்தி யடையும்.

24.6. கழுத்தளவு ஜலத்தில் நின்று கொண்டு ஜபம் செய்தால் ஒருவன் மரணபயத்திலிருந்து விடுபடுவான். எல்லா சாந்தி கர்மங்களிலும் ஜலத்தில் அமர்ந்து ஜபம் செய்வது விதிக்கப்பட்டுள்ளது.

जपेदश्वत्थमालभ्य मन्दवारे शतं द्विजः ।
भूतरोगाभिचरेभ्यो मुच्यते महतां भयात् ।। २४. २१ ।।

गडूच्याः पर्वविच्छिन्नाः पयोक्ता जुहुयाद्द्विजः ।
एवं मृत्युंजयो होमः सर्वव्याधिविनाशनः ।। २४. २२ ।।

आम्रस्य जहुयात्पत्रैः पयोक्तैर्ज्वरशान्तये ।
वचाभिः पयसाक्ताभिः क्षयं हुत्वा विनाशयेत् ।। २४. २३ ।।

मधुत्रितयहोमेन राजयक्ष्मा विनश्यति ।
क्षीरवृक्षसमिद्धोमादुन्मादोऽपि विनश्यति ।। २४. २७ ।।

औदुम्बरसमिद्धोमादतिमेहः क्षयं व्रजेत् ।
मनसैव जपेदेनां बद्धो मुच्येत बन्धनात् ।। २४. २८ ।।

24.21. அசுவத்த மரத்தடியில் சனிக்கிழமை துவிஜன் நூறு தடவை ஜபித்தால் பூதரோகம், அபிசாரம், பெரும் பயம் இவற்றினின்று விடுபடுவான்.

24.22. பருவத்தில் வெட்டிக் கொணர்ந்த சீந்தல் கொடியால் பாலில் நனைத்து துவிஜன் மிருத்யுஞ்ஜய ஹோமம் செய்தால் எல்லா வியாதிகளும் நீங்கும்.

24.23. ஜ்வரசாந்திக்கு மாவிலையைப்பாலில் நனைத்து ஹோமம் செய்ய வேண்டும். பாலில் நனைத்த ஸோமலதை ஹோமம் க்ஷயரோகத்தைப் போக்கும்.

24.27. (பால் சர்க்கரை தேன்) த்ரிமதுர ஹோமத்தால் ராஜயக்ஷ்மா எனும் வியாதி நீங்கும். பால் வடியும் மரத்தின் ஸமித்தை (அத்தி ஆல் அரசு) ஹோமம் செய்வதால் பைத்தியம் நீங்கும்.

24.28. அத்தி ஸமித்து ஹோமம் செய்தால் அதி மேஹமும் க்ஷயமும் நீங்கும். மனதால் ஜபித்த மாத்திரத்தில் கட்டுப்பட்டவன் கட்டிலிருந்து விடுபடுவான்.

भूतरोगविषादिभ्यः स्पृशन् जप्त्वा विमोचयेत्।
समिद्भिर्बिल्ववृक्षस्य हुत्वा श्रियमवाप्नुयात्॥ २४. ३९॥

लाजैस्त्रिमधुरोपेतैर्होमे कन्या-मवाप्नुयात्।
अनेन विधिना कन्या वरमाप्नोति वांछितम्॥ २४. ४२॥

प्रियंगुपायसाज्यैश्च भवेद्धोमादिभिः प्रजा।
निवेद्य भास्करायान्नं पायसं होमपूर्वकम्।
भोजयेत्तदृतुस्नातां पुत्रं परमवाप्नुयात्॥ २४. ४६॥

दुर्वाभिः पयसा वाऽपि मधुना सर्पिषाऽपि वा।
शतं शतं च सप्ताह-मपमृत्युं व्यपोहति॥ २४ ४९॥

संयुक्तैः पयसा पत्रैः पुष्पैर्वा वेतसस्य च।
पायसेन शतं हुत्वा सप्ताहं वृष्टिमाप्नुयात्॥ २४. ५७॥

24.39. பூதம், வியாதி, விஷம் ஆகியவற்றின் பீடை, தொட்டு ஜபித்தால் நீங்கும். பில்வமரத்தின் ஸமித்தால் ஹோமம் செய்தால் செல்வத்தை யடையலாம்.

24.42. மும்மதுரம் சேர்ந்த பொரியால் கன்னிகையை அடையலாம். அதே விதியால் கன்னிகை விரும்பிய வரனை அடைவாள்.

24.46. குங்குமப்பூ பாயஸம் நெய் ஆகியவற்றால் ஹோமம் முதலியன செய்தால் ஸத்பிரஜை உண்டாகும். ஹோமபூர்வகமான அன்னத்தையும் பாயஸத்தையும் சூரியனுக்கு நிவேதனம் செய்து ருதுஸ்நானம் செய்தவளுக்கு அதனால் போஜனம் செய்வித்தால் சிறந்த புத்திரனை அடைவாள்.

24.49. அருகம் புல்லாலோ, பாலாலோ, தேனாலோ, நெய்யாலோ நூறு நூறுதடவை ஏழு நாள் ஹோமம் செய்தால் அபமிருத்யு அகலும்.

24.57. நீர்வஞ்சிக் கொடியின் இலைகளையோ பூக்களையோ பாலிலோ பாயஸத்திலோ சேர்த்து நூறுதடவை ஏழு நாள் ஹோமம் செய்தால் மழையைப் பெறலாம்.

जले भस्मशतं हुत्वा महावृष्टि निवारयेत्।
लवणं मधुसम्मिश्रं हुत्वेष्टं वशमानयेत् ॥ २४. ६१ ॥

नित्यमंजलिनाऽत्मान-मभिषिंचेज्जले स्थितः।
मतिमारोग्य- मायुष्य-मग्र्यं स्वास्थ्य-मवाप्नुयात्
॥ २४. ६२ ॥

इति संक्षेपतः प्रोक्तः सदाचारस्य संग्रहः।
विधिनाचरणादस्य माया दुर्गा प्रसीदति ॥ २४. ९५ ॥

नैमित्तिकंच नित्यंच काम्यं कर्म यथाविधि।
आचरेन्मनुजः सोऽयं भुक्तिमुक्तिफलाप्तिभाक् ॥ २४. ९६ ॥

आचारप्रभवो धर्मो धर्मस्य प्रभुरीश्वरी।
इत्युक्तः सर्वशास्त्रेषु सदाचारफलं महत् ॥ २४. ९७ ॥

24.61. ஜலத்தில் பஸ்மத்தால் நூறு ஹோமம் செய்து பலத்த மழையைத் தடுக்கலாம். உப்பும் தேனும் கலந்து ஹோமம் செய்தால் விரும்பியதை வசப்படுத்தலாம்.

24.62. நாள்தோறும் ஜலத்தில் நின்று கொண்டு தன்னை அஞ்ஜலியால் அபிஷேகம் செய்து கொண்டால் புத்தியையும் ஆரோக்கியத்தையும் ஆயுளையும் முதன்மையையும் மனவமைதியையும் அடையலாம்.

24.95. இவ்வாறு ஸதாசாரத்தின் ஸங்க்ரஹம் சுருக்கமாகக் கூறப்பட்டது. விதிப்படி இதை அனுஷ்டிப்பதால் யோகமாயையான துர்க்கா தேவியின் அருள் கிட்டும்.

24.96. நைமித்திகம், நித்யம், காம்யம் ஆகிய கருமங்களை விதிப்படி மனிதன் அனுஷ்டித்து அதன் பயனாய் போகத்தையும் முக்தியையும் எய்துவான்.

24.97. ஆசாரத்தினின்று தோன்றுவது தருமம், தருமத்திற்குத் தலைவி ஈசுவரி, ஸதாசாரத்தின் பயன் மகத்தானது என்று எல்லா சாஸ்திரங்களிலும் கூறப்பட்டுள்ளது.

आचारवान् सदा पूतः सदैवाचारवान् सुखी।
आचारवान् सदा धन्यः सत्यं सत्यं च नारद ॥ २४. ९८ ॥

देवीप्रसादजनकं सदाचारविधानकम्।
यदपिश्शृणुयान्मर्त्यो महासम्पत्तिसौख्यभाक् ॥ २४. ९९ ॥

सदाचारेण सिद्धेच्च ऐहिकामुष्मिकं सुखम्।
तदेव ते मया प्रोक्तं किमन्यच्छ्रोतु- मिच्छसि ॥ २४. १०० ॥

॥ इति श्रीदेवीभागवते एकादशस्कन्धे चतुर्विंशोऽध्यायः ॥

॥ एकादशः स्कन्धः समाप्तः ॥

24.98. ஆசாரமுடையவன் எப்பொழுதும் பரிசுத்தன்; ஆசாரமுடையவன் எப்பொழுதும் சுகமுள்ளவன்; ஆசாரமுடையவன் எப்பொழுதும் உண்மையான பொருள் படைத்தவன்; நாரதரே! இது ஸத்தியம், ஸத்தியம்.

24.99. தேவியின் அருளைத் தோற்றுவிக்கும் ஸதாசாரவிதானத்தை ஒரு மனிதன் கேட்டாலும் கூட சிறந்த செல்வத்தையும் சுகத்தையும் அடைவான்.

24.100. ஸதாசாரத்தால் இகத்தும் பரத்தும் இன்பம் சித்திக்கும். அதுவே என்னல் உமக்குக் கூறப்பட்டது. மேலும் என்ன கேட்க விரும்புகிறீர்?

இங்ஙனம் ஸ்ரீ தேவீபாகவதத்தில் பதினோராவது
ஸ்கந்தத்தில் இருபத்துநான்காவது
அத்தியாயம் முற்றும்.

பதினொராவது ஸ்கந்தம் முற்றும்.

பன்னிரண்டாவது ஸ்கந்தம்

॥द्वादशः स्कन्धः॥

॥गायत्रीमाहात्म्यम्॥ ५१ ॥

नारद उवाच —

श्रुतं भवन्मुखाम्भोजच्युतं देवीकथामृतम्।
व्रतानि यानि चोक्तानि चान्द्रायणमुखानि ते ॥ १. २ ॥

दुःखसाध्यानि जानीमः कर्तृसाध्यानि तानि च।
तदस्मात्साम्प्रतं यस्तु सुखसाध्यं शरीरिणाम् ॥ १. ३ ॥

देवीप्रसादजनकं सुखानुष्ठानसिद्धिदम्।
तत्कर्म वद मे स्वामिन् कृपापूर्वं सुरेश्वर ॥ १. ४ ॥

பன்னிரண்டாவது ஸ்கந்தம்

51. காயத்ரீமாஹாத்மியம்

நாரதர் கூறியது—

1.2. தங்களுடைய முககமலத்தினின்று நழுவிய அமுதம் போன்ற தேவியின் கதை கேட்கப்பட்டது. சாந்திராயணம் முதலிய விரதங்கள் எவை கூறப்பட்டனவோ அவையும் கேட்கப்பட்டன.

1.3–4. தேவநாயகரே! தலைவரே! அவை (சிறந்த) கர்த்தாக்களால் செய்யக் கூடியவை எனினும் கஷ்டப்பட்டுச் செய்யக் கூடியவை என்று கருதுகிறோம். உடல் படைத்தவர்களுக்கு இவற்றைவிட எளிதில் செய்யக் கூடியதாயும் சுகமாயனுஷ்டிக்கக் கூடியதாயும் தேவியின் அருளை அளிக்கக் கூடியதாயும் உள்ள கருமம் எதுவோ அதைக் கிருபையுடன் எனக்குக் கூறியருளுதல் வேண்டும்.

सदाचारविधौ यश्च गायत्रीविधिरीरितः।
तस्मिन् मुख्यतमं किं स्यात्किं वा पुण्याधिकप्रदम् ॥ १. ५ ॥

नारायण उवाच—

कुर्यादन्यन्नवाकुर्यादनुष्ठानादिकं तथा।
गायत्री-मात्र-निष्ठस्तु कृतकृत्यो भवेद् द्विज: ॥ १. ८ ॥

अस्त्येकं परमं गुह्यं गायत्री कवचं तथा।
पठनाद्धारणान्मर्त्यः सर्वपापैः प्रमुच्यते ॥ ३. ४ ॥
सर्वान् कामानवाप्नोति देवीरूपश्च जायते।

॥ गायत्रीकवचम् ॥

गायत्री-कवचस्यास्य ब्रह्मविष्णुमहेश्वरा: ॥ ३. ५ ॥
ऋषयो ऋग्यजुस्सामाऽथर्वश्छन्दांसि नारद।
ब्रह्मरूपा देवतोक्ता गायत्री परमा कला ॥ ३. ६ ॥
तद्बीजं भर्ग इत्येषा शक्तिरुक्ता मनीषिभिः।
कीलकं च धियः प्रोक्तं मोक्षार्थे विनियोजनम् ॥ ३. ७ ॥

1.5. ஸதாசாரவிதியில் எந்த காயத்ரீ விதி கூறப்பட்டதோ அதில் முக்கியமானதும் அதிகமான புண்ணியமளிப்பதும் எது?

நாராயணரிஷி கூறியது—

1.8. மற்ற அனுஷ்டானங்களைச் செய்தாலும் செய்யாவிட்டாலும் காயத்ரியை மட்டும் அனுஷ்டித்துவரும் துவிஜன் கிருதகிருத்யன் ஆவான்.

3.4—7. பரமரகசியமான காயத்ரீ கவசம் ஒன்று உளது. அதைப் பாராயணம் செய்வதாலும் தரிப்பதாலும் மனிதன் எல்லாப் பாவங்களினின்றும் விடுபடுவான்; எல்லா ஆசைகளின் பூர்த்தியை எய்துவான்; தேவியின் ஸாரூபத்தை அடைவான்.

चतुर्भिर्हृदयं प्रोक्तं त्रिभिर्वर्णैः शिरः स्मृतम् ।
चतुर्भिः स्याच्छिखा पश्चात् त्रिभिस्तु कवचं स्मृतम् ।। ३.८ ।।

चतुर्भिर्नेत्रमुद्दिष्टं चतुर्भिः स्यात्तदस्त्रकम् ।
अथ ध्यानं प्रवक्ष्यामि साधकाभीष्टदायकम् ।। ३. ९ ।।

காயத்ரீகவசம்

நாரதரே !

இந்த காயத்ரீ கவசத்திற்கு பிரம்மா விஷ்ணு மஹேசுவரர் ரிஷிகள்; ருக்–யஜுஸ்–ஸாம–அதர்வம் சந்தங்கள்; காயத்ரீ பரமாகலா தேவதை எனக் கூறப்படுகிறது. 'தத்' பீஜம், 'பர்க்க:' சக்தி:, 'திய:' கீலகம் என்று ஞானிகளால் கூறப்பட்டுளது: 'மோக்ஷார்த்தே விநியோக:' அதாவது மோக்ஷத்தில் இதின் பிரயோஜனம்.

3.8 9. முதல் நாலு எழுத்தால் ஹ்ருதயம் கூறப்படுகிறது—அதாவது 'தத்ஸவிது: ஹ்ருதயாய நம:' என்று ஹ்ருதய நியாஸம். மூன்று எழுத்துக்களால் 'வரேண்யம் சிரஸே ஸ்வாஹா' என்று சிரசில் நியாஸம். பிறகு நாலு (ஐந்து) எழுத்துக்களால் 'பர்க்கோ தேவஸ்ய சிகாயை வஷட்' என்று சிகையில் நியாஸம். மூன்று எழுத்தால் 'தீமஹி கவசாய ஹூம்' என்று கவசம். நாலு எழுத்தால் 'தியோ யோ ந: நேத்ரத்ரயாய வௌஷட்' என்று நேத்ர நியாஸம். நாலு எழுத்தால் 'ப்ரசோதயாத் அஸ்த்ராய பட்' என்று அஸ்திர நியாஸம். இனி ஸாதகனுக்கு அபீஷ்டத்தையளிக்கும் தியானத்தைக் கூறுகிறேன்.

मुक्ताविद्रुम-हेमनील-धवलच्छायै-र्मुखैस्त्रीक्षणै-
र्युक्तामिन्दुनिबद्धरत्नमुकुटां तत्त्वार्थवर्णात्मिकाम् ।
गायत्रीं वरदाभयाऽङ्कुशकशा शुभ्रं कपालं गुणं
शंखं चक्रमथारविन्दयुगलं हस्तै-र्वहन्तीं भजे
॥ ३. १० ॥

कवचम् ॥

गायत्री पूर्वतः पातु सावित्री पातु दक्षिणे ।
ब्रह्मसन्ध्या तु मे पश्चादुत्तरायां सरस्वती ॥ ३. ११ ॥
पार्वती मे दिशं रक्षेत्पावकी जलशायिनी ।
यातुधानी दिशं रक्षेद्यातुधानभयंकरी ॥ ३. १२ ॥
पावमानी दिशं रक्षेत्पवमानविलासिनी ।
दिशं रौद्री च मे पातु रुद्राणी रुद्ररूपिणी ॥ ३. १३ ॥

3.10. 'முக்தா-வித்ரும-ஹேம நீல-தவளச் சாயைர் முகைஸ்த்ரீக்ஷணைர் யுக்தா மிந்து-நிபத்தரத்ன-முகுடாம் தத்வார்த்த-வர்ணாத்மிகாம்)காயத்ரீம் வரதாபயாங்குசகசா சுப்ரம் கபாலம் குணம் சங்கம் சக்ர-மதாரவிந்தயுகளம் ஹஸ்தைர்- வஹந்தீம் பஜே''

கவசம்

3.11. காயத்ரீ பூர்வத: பாது ஸாவித்ரீ பாது தக்ஷிணே ப்ரஹ்மஸந்த்தயா து மே பச்சா உத்தராயாம் ஸரஸ்வதீ ||

3.12. பார்வதீ மே திசம் ரக்ஷேத் பாவகி ஜலசாயினீ |
யாது தானீ திசம் ரக்ஷேத் யாதுதான பயங்கரீ ||

3.13. பாவமானீ திசம் ரக்ஷேத் பவமான விலாஸினீ |
திசம் ரௌத்ரீச மே பாது ருத்ராணீ ருத்ர ரூபிணீ ||

ऊर्ध्वं ब्रह्माणी मे रक्षेदधस्ताद्वैष्णवी तथा ।
एवं दशदिशो रक्षेत्सर्वांगं भुवनेश्वरी ॥ ३. १४ ॥

तत्पदं पातु मे पादौ जंघे मे सवितुः पदम् ।
वरेण्यं कटिदेशेतु नाभिं भर्गस्तथैव च ॥ ३. १५ ॥

देवस्य मे तद्धृदयं धीमहीति च गल्लयोः ।
धियः पदं च मे नेत्रे यः पदं मे ललाटकम् ॥ ३. १६ ॥

नः पातु मे पदं मूर्ध्नि शिखायां मे प्रचोदयात् ।
तत्पदं पातु मूर्धानं सकारः पातु भालकम् ॥ ३. १७ ॥

चक्षुषी तु विकारार्णस्तु कारस्तु कपोलयोः ।
नासापुटं वकारार्णो रेकारस्तु मुखे तथा ॥ ३. १८ ॥

3.14. ஊர்த்த்வம் ப்ரஹ்மாணீ மே ரக்ஷேததஸ்தாத் வைஷ்ணவீ ததா |
ஏவம் தசதிசோ ரக்ஷேத் ஸர்வாங்கம் புவனேச்வரீ ||

3.15. தத் பதம் பாது மே பாதௌ ஜங்கே மே ஸவிது: பதம் |
வரேண்யம் கடிதேசே து நாபிம் பர்க்கஸ்ததைவ ச ||

3.16. தேவஸ்யமே தத் த்ருதயம் தீமஹீதி ச கல்லயோ: |
திய: பதஞ்ச மே நேத்ரே ய: பதம் மே லலாடகம் ||

3.17. ந: பாது மே பதம் மூர்த்னி சிகாயாம் மே ப்ரசோதயாத்
தத்பதம் பாது மூர்த்தானம் ஸகார: பாது பாலகம் | ||

3.18. சக்ஷுஷீது விகாரார்ணஸ்து காரஸ்து கபோலயோ: | ||
நாஸாபுடம் வகாரார்ணோ ரேகாரஸ்து முகே ததா

णिकार ऊर्ध्वमोष्ठन्तु यकारस्त्वधरोष्ठकम्।
आस्यमध्ये भकारार्णो-र्गोकारश्चिबुके तथा ॥ ३. १९ ॥

देकारः कण्ठदेशेतु वकारः स्कन्धदेशकम्।
स्यकारो दक्षिणं हस्तं धीकारो वामहस्तकम् ॥ ३. २० ॥

मकारो हृदयं रक्षेद्धिकार उदरे तथा।
धिकारो नाभिदेशे तु योकारस्तु कटिं तथा ॥ ३. २१ ॥

गुह्यं रक्षतु योकार ऊरू द्वौ नः पदाक्षरम्।
प्रकारो जानुनी रक्षेच्चोकारो जंघदेशकम् ॥ ३. २२ ॥

दकारं गुल्फदेशेतु यकारः पदयुग्मकम्।
चतुः षष्टिकलाविद्यादायकं मोक्षकारकम् ॥ ३. २३ ॥

मुच्यते सर्वपापेभ्यः परं ब्रह्माधिगच्छति।
पठनाच्छ्रवणाद्वाऽपि गोसहस्रफलं लभेत् ॥ ३. २४ ॥

3.19. ணிகார ஊர்த்த்வமோஷ்ட்டந்து யகாரஸ்த்வதரோஷ்ட்டகம் |
ஆஸ்யமத்த்யே பகாரார்ணோர்—கோகாரச்சிபுகே ததா |

3.20. தேகார: கண்டதேசேது வகார: ஸ்கந்ததேசகம் |
ஸ்யகாரோ தக்ஷிணம் ஹஸ்தம் தீகாரோ வாமஹஸ்தகம் ||

3.21. மகாரோ ஹ்ருதயம் ரக்ஷேத்ஹிகார உத்ரேததா |
திகாரோ நாபிதேசே து யோகாரஸ்து கடிம் ததா |

3.22. குஹ்யம் ரக்ஷது யோகார ஊருத்வெள ந: பதாக்ஷரம் |
ப்ரகாரோ ஜானுனீ ரக்ஷேச்சோகாரோ ஜங்கதேசகம் ||

3.23. தகாரம் குல்ப தேசேது யகார: பதயுக்மகம் |
சது: ஷஷ்டிகலா வித்யாதாயகம் மோக்ஷகாரகம் ||

3.24. முச்யதே ஸர்வபாபேப்ப்ய: பரம் ப்ரஹ்மாதிகச்சதி |
படனச்ச்ரவணாத்வாபி கோஸஹஸ்ரபலம் லபேத் ||

॥ गायत्रीहृदयम् ॥

नारायण उवाच —

देव्याश्च हृदयं प्रोक्तं नारदाऽथर्वणे स्फुटम् ।
तदेवाहं प्रवक्ष्यामि रहस्यातिरहस्यकम् ॥ ४. २ ॥

विराड्रूपां महादेवीं गायत्रीं वेदमातरम् ।
ध्यात्वा तस्यास्त्वथांगेषु ध्यायेदेताश्चदेवताः ॥ ४. ३ ॥

पिण्डब्रह्माण्डयोरैक्याद्भावयेत्स्वतनौ तथा ।
देवीरूपे निजे देहे तन्मयत्वाय साधकः ॥ ४. ४ ॥

नादेवोऽभ्यर्चयेद्देवमिति वेदविदो विदुः ।
ततोऽभेदाय काये स्वे भावयेद्देवता इमाः ॥ ४. ५ ॥

காயத்ரீ ஹ்ருதயம்

நாராயண ரிஷி கூறியது

4.2. நாரதரே ! (காயத்ரீ) தேவீ ஹ்ருதயம் அதர்வண வேதத்தில் தெளிவாய்க் கூறப்பட்டுள்ளது. ரஹஸ்யத்திலும் மிக ரஹஸ்யமான அதையே நான் உமக்குக் கூறுகிறேன்.

4.3. விராட்ரூபிணியும் வேதமாதாவுமான காயத்ரீ மகாதேவியை தியானித்து அவளுடைய அங்கங்களில் பின் வரும் தேவதைகளை தியானிக்க வேண்டும்.

4.4. பிரம்மாண்டமும் பிண்டாண்டமும் ஒன்றேயாதலால் ஸாதகன் தேவியின் ரூபமான தன்னுடைய தேகத்திலும் தன்மயமாதற்கு அவ்வாறே பாவனை செய்தல் வேண்டும்.

4.5. தெய்வமாகாதவன் தெய்வத்தைப் பூஜிக்க இயலாதென்று வேதத்தை உணர்ந்தவர் அறிவர். ஆகையால் அபேதம் சித்திக்கத்தனது உடலில் இந்த தேவதைகளை பாவிக்க வேண்டும்.

अथ तत्संप्रवक्ष्यामि तन्मयत्वमथो भवेत् ।
गायत्री हृदयस्यास्याऽप्यहमेव ऋषिः स्मृतः ।। ४. ६ ।।

गायत्रीच्छन्द उद्दिष्टं देवता परमेश्वरी ।
पूर्वोक्तेन प्रकारेण कुर्यादंगानि षट्क्रमात् ।।
आसने विजने देशे ध्यायेदेकाग्रमानसः ।। ४. ७ ।।

अथार्थन्यासः ।। द्यौर्मूर्ध्नि दैवतम् । दन्तपंक्तावश्विनौ ।
उभे सन्ध्ये चोष्टौ । मुखमग्निः । जिह्वा सरस्वती ।
ग्रीवायां तु बृहस्पतिः । स्तनयोर्वसवोऽष्टौ ।
बाह्वोर्मरुतः । हृदये पर्जन्यः । आकाशमुदरम् ।
नाभावन्तरिक्षम् । कट्योरिन्द्राग्नी । जघने
विज्ञानघनः प्रजापतिः । कैलासमलये ऊरू ।

4.6-7. இனி அதைக் கூறுகிறேன். அதனுல், தன் மயத்வம் ஏற்படும். இந்த காயத்ரீ ஹ்ருதயத்திற்கு நானே ரிஷி; காயத்ரீ சந்தம்; பரமேச்வரீ தேவதை. முன் கூறிய வண்ணம் ஷடங்க் நியாஸத்தை வரிசையாகச் செய்யவும். ஜனஸஞ்சார மில்லாத இடத்தில் ஒருமித்த மனதுடன் ஆஸனத்திலமர்ந்து தியானம் செய்ய வேண்டும்.

அதார்த்தந்யாஸ: ॥ த்யௌர்-மூர்த்தனி தைவதம்: தந்தபங்க்தாவச்விநௌ | உபே ஸந்த்யே சோஷ்டௌ | முகமக்னி: | ஹ்ஜிவா ஸரஸ்வதீ | க்ரீவாயாம் து ப்ருஹஸ்பதி: | ஸ்தனயோர்-வஸவோஅஷ்டௌ | பாஹ்வோர்—மருத: | ஹ்ருதயே பர்ஜன்ய: | ஆகாசமுதரம் | நாபாவந்தரிக்ஷம் | கட்யோ-| ரிந்தராக்னீ | ஜகனே விஜ்ஞானகன: ப்ரஜாபதி: | கைலாஸமலயே ஊரு | விச்வே தேவா ஜான்வோ: | ஜங்க்காயாம் கௌசிக: | குஹ்ய மயனே | ஊரு பிதர: | பாதௌ ப்ருதிவீ | வனஸ்பதயோ அங்குலீஷு | ருஷயோ ரோமாணி | நகானி முஹூர்த்தானி | அஸ்த்திஷுக்ரஹா: | அஸ்ருங்— மாம்ஸம்—ருதவ: |

विश्वेदेवा जान्वोः। जंघायां कौशिकः। गुह्यमयने।
ऊरू पितरः। पादौ पृथिवी। वनस्पतयो अंगुलीषु।
ऋषयो रोमाणि। नखानि मुहूर्तानि। अस्थिषु ग्रहाः।
असृङ् मांसमृतवः। संवत्सरा वै निमिषम्।
अहोरात्रावादित्यश्चन्द्रमाः। प्रवरां दिव्यां
गायत्रीं शरणमहं प्रपद्ये॥

ओं तत्सवितुर्वरेण्याय नमः। ओं तत्पूर्वाजयाय नमः।
तत्प्रातरादित्याय नमः। तत्प्रातरादित्यप्रतिष्ठायै नमः।
प्रातरधीयानो रात्रीकृतपापं नाशयति। सायमधीयानो
दिवसकृतपापं नाशयति। सायं प्रातरधीयानो
अपापो भवति। सर्वतीर्थेषु स्नातो भवति।
सर्वैर्देवैर्ज्ञातो भवति। अवाच्यवचनात्पूतो भवति।

ஸம்வத்ஸரா வை நிமிஷம்| அஹோராத்ரா வாதித்யச் சந்த்ரமா:| ப்ரவராம் திவ்யாம் காயத்ரீம் சரண—மஹம் ப்ரபத்யே ||

ஓம் தத்ஸவிதுர் வரேண்யாய நம:| ஓம் தத்பூர்வா ஜயாய நம:| தத்ப்ராதராதித்யாய நம:| தத்ப்ராத ராதித்ய ப்ரதிஷ்ட்டாயை நம:| இதைக் காலையில் ஜபம் செய்பவன் ராத்திரி செய்த பாவத்தை நாசம் சேய்கிறுன். மாலையில் ஜபம் செய்பவன் பகலில் செய்த பாவத்தை நாசம் செய்கிறுன். காலை மாலைகளில் ஜபம் செய்பவன் பாவமற்றவனுகிறுன்; எல்லாத் தீர்த்தங்களிலும் ஸ்நாநம் செய்தவனுகிறுன்; எல்லா தேவதைகளாலும் அறியப்பட்ட வனுகிறுன்; சொல்லத் தகாததைச் சொன்ன பாவத்திலிருந்து விடுபட்டுப் புனிதனுகிறுன்; உண்ணத்தகாத பக்ஷணம், போஜனம், சோஷியம் முதலியவற்றை உண்டபாவம் நீங்கிப் புனிதனுகிறுன்; தகாத ஸாதனங்களினின்று புனி தனுகிறுன்; நூறுயிரம் துர்த்தானம் வாங்கிய பாவத்தி

अभक्ष्यभक्षणात्पूतो भवति। अभोज्यभोजनात्पूतो
भवति। अचोष्यचोषणात्पूतो भवति। असाध्य-
साधनात्पूतो भवति। दुष्प्रतिग्रह-शतसहस्रात्
पूतो भवति। सर्वप्रतिग्रहात्पूतो भवति।

पंक्तिदूषणात्पूतो भवति। अनृतवचनात्पूतो भवति।
अथाऽब्रह्मचारी ब्रह्मचारी भवति। अनेन

हृदयेनाधीतेन क्रतुसहस्रेणेष्टं भवति।
षष्टिसहस्रगायत्र्या जप्यानि फलानि भवन्ति।
अष्टौ ब्राह्मणान् सम्यग्ग्राहयेत्। तस्य
सिद्धिर्भवति। य इदं नित्यमधीयानो
ब्राह्मणः प्रातः शुचिः सर्वपापैः प्रमुच्यत इति।
ब्रह्मलोके महीयते। इत्याह भगवान् श्रीनारायणः॥

னின்று விடுபடுகிருன்; தானம் வாங்கிய எல்லாப் பாவத்தி தினின்றும் விடுபடுகிருன்; தகாதவர்களுடன் சேர்ந்து உண்ட பாவத்தினின்று விடுபடுகிருன்; பொய் பேசிய பாவத்தினின்று விடுபடுகிருன்.

பிரம்மசரிய ஒழுக்கம் தவறியவன் கூட பிரம்மசாரியாகி விடுகிருன். இந்த காயத்ரீ ஹ்ருதயத்தை அத்தியயனம் செய்வது ஆயிரம் யாகங்களைச் செய்ததற்குச் சமமாகிறது. ஆருயிரம் காயத்ரீ ஜபம் செய்த பலன் ஏற்படுகிறது. எட்டு பிராம்மணர்களுக்கு இதை நன்ருகச் சொல்லிக் கொடுத்தால் இதின் சித்தி ஏற்படும். காலையில் பரிசுத்த ஞய் எந்த பிராம்மணன் இதை அத்தியயனம் செய்கிருனே அவன் எல்லாப் பாவங்களினின்றும் விடுபடுகிருன். பிரம்ம லோகத்தில் பெருமையடைவான். பகவான் ஸ்ரீ நாராயணர் இங்ஙனம் கூறினர்.

गायत्रीस्तोत्रम्

नारायण उवाच —

आदिशक्ते जगन्मात-र्भक्तानुग्रहकारिणि ।
सर्वत्र व्यापिकेऽनन्ते श्रीसन्ध्ये ते नमोऽस्तु ते ॥ ५. २ ॥

त्वमेव सन्ध्या गायत्री सावित्री च सरस्वती ।
ब्राह्मी च वैष्णवी रौद्री रक्ता श्वेताऽसितेतरा ॥ ५. ३ ॥

प्रातर्बाला च मध्याह्ने यौवनस्था भवेत्पुनः ।
वृद्धा सायं भगवती चिन्त्यते मुनिभिः सदा ॥ ५. ४ ॥

हंसस्था गरुडारूढा तथा वृषभवाहिनी ।
ऋग्वेदाध्यायिनी भूमौ दृश्यते या तपस्विभिः ॥ ५. ५ ॥

காயத்ரீ ஸ்தோத்ரம்

நாராயண உவாச—

ஆதிசக்தே ஜகன்மாதர்—பக்தானுக்ரஹகாரிணி |
ஸர்வத்ர வ்யாபிகேSனந்தே ஸ்ரீஸந்த்த்யே தே நமோ Sஸ்துதே || 5.2 ||

த்வமேவ ஸந்த்த்யா காயத்ரீ ஸாவித்ரீ ச ஸரஸ்வதீ |
ப்ராஹ்மீ ச வைஷ்ணவீ ரௌத்ரீ ரக்தா ச்வேதா/Sஸிதேதரா || 5.3 ||

ப்ராதர்-பாலா ச மத்த்யான்ஹே யௌவனஸ்த்தா பவேத் புன: |
வ்ருத்தா ஸாயம் பகவதீ சிந்த்யதே முனிபி: ஸதா || 5.4 ||

ஹம்ஸஸ்த்தா கருடாருடா ததா வ்ருஷபவாஹினீ |
ருக்வேதாத்த்யாயினீ பூமௌ த்ருச்யதே யா தபஸ்விபி: — || 5.5 ||

यजुर्वेदं पठन्ती च अन्तरिक्षे विराजते ।
सा सामगाऽपि सर्वेषु भ्राम्यमाणा तथा भुवि ।। ५. ६ ।।

रुद्रलोकं गता त्वं हि विष्णुलोकनिवासिनी ।
त्वमेव ब्रह्मणो लोकेऽमर्त्यानुग्रहकारिणी ।। ५. ७ ।।

सप्तर्षिप्रीतिजननी माया बहुवरप्रदा ।
शिवयोः करनेत्रोत्था ह्यश्रुस्वेद-समुद्भवा ।। ५. ८ ।।

आनन्दजननी दुर्गा दशधा परिपठ्यते ।
वरेण्या वरदा चैव वरिष्ठा वरवर्णिनी ।। ५. ९ ।।

गरिष्ठा च वराही च वरारोहा च सप्तमी ।
नीलगंगा तथा सन्ध्या सर्वदा भोगमोक्षदा ।। ५. १० ।।

யஜுர்வேதம் படந்தீ ச அசுந்தரிக்ஷே விராஜதே |
ஸா ஸாமகாऽபி ஸர்வேஷு ப்ப்ராப்யமாணா ததா புவி
|| — || 5.6 ||

ருத்ரலோகம் கதா த்வம் ஹி விஷ்ணுலோகநிவாஸினீ—
த்வமேவ ப்ரஹ்மணோ லோகே ऽ மர்த்யானுக்ரஹ காரிணீ
|| 5.7 ||

ஸப்தர்ஷிப்ரீதிஜனனீ மாயா பஹுவரப்ரதா |
சிவயோ: கரநேத்ரோத்தா ஹ்யச்ருஸ்வேத—ஸமுத்ப்பவா
|| 5.8 ||

ஆனந்தஜனனீ துர்க்கா தசதா பரிபட்யதே |
வரேண்யா வரதா சைவ வரிஷ்ட்டா வரவர்ணினீ
|| 5.9 |

கரிஷ்ட்டா ச வராஹீ ச வராரோஹாச ஸப்தமீ |
நீலகங்கா ததா ஸந்த்யா ஸர்வதா போகமோக்ஷதா
|| 5.10 ||

भागीरथो मर्त्यलोके पाताले भोगवत्यपि ।
त्रिलोकवाहिनी देवी स्थानत्रयनिवासिनी ॥ ५. ११ ॥

भूलोकस्था त्वमेवासि धरित्री शोकधारिणी ।
भुवो लोके वायुशक्तिः स्वर्लोके तेजसां निधिः ॥ ५. १२ ॥

महर्लोके महासिद्धि-र्जनलोके जनेत्यपि ।
तपस्विनी तपोलोके सत्यलोके तु सत्यवाक् ॥ ५. १३ ॥

कमला विष्णुलोके च गायत्री ब्रह्मलोकदा ।
रुद्रलोके स्थिता गौरी हरार्धांगनिवासिनी ॥ ५. १४ ॥

अहमो महतश्चैव प्रकृतिस्त्वं हि गीयसे ।
साम्यावस्थात्मिका त्वं हि शबलब्रह्मरूपिणी ॥ ५. १५ ॥

பாகிரதி மர்த்யலோகே பாதாளே போகவத்யபி |
த்ரிலோகவாஹினீ தேவீ ஸ்த்தானத்ரய-நிவாஸினீ
|| 5.11 ||

பூலோகஸ்த்தா த்வமேவாஸி தரித்ரீ சோகதாரிணீ |
புவோ லோகே வாயுசக்தி: ஸ்வர்லோகே தேஜஸாம் நிதி:
|| 5.12 ||

மஹர்லோகே மஹாஸித்திர்-ஜனலோகே ஜனேத்யபி |
தபஸ்வினீ தபோலோகே ஸத்யலோகே து ஸத்யவாக்
|| 5.13 ||

கமலா விஷ்ணுலோகே ச காயத்ரீ ப்ரஹ்மலோகதா |
ருத்ரலோகே ஸ்திதா கௌரீ ஹரார்த்தாங்கநிவாஸினீ
|| 5.14 ||

அஹமோ மஹதச்சைவ ப்ரக்ருதிஸ்த்வம் ஹி கீயஸே |
ஸாம்யாவஸ்த்தாத்மிகா த்வம் ஹி சபலப்ரஹ்மருபிணீ
|| 5.15 ||

ततः परा पराशक्तिः परमा त्वं हि गीयसे ।
इच्छाशक्तिः क्रियाशक्तिर्ज्ञानशक्तिस्त्रिशक्तिदा ॥ ५. १६ ॥
गंगाच यमुना चैब विपाशा च सरस्वती ।
सरयूर्देविका सिन्धु-र्नर्मदैरावती तथा ॥ ५. १७ ॥
गोदावरी शतद्रूश्च कावेरी देवलोकगा ।
कौशिकी चन्द्रभागा च वितस्ता च सरस्वती ॥ ५. १८ ॥
गण्डकी तापिनी तोया गोमती वेत्रवत्यपि ।
इडा च पिंगला चैव सुषुम्ना च तृतीयका ॥ ५. १९ ॥
गान्धारी हस्तिजिह्वा च पूषापूषा तथैव च ।
अलंबुसू कुहूचैव शंखिनी प्राणवाहिनी ॥ ५. २० ॥
नाडी च त्वं शरीरस्था गीयसे प्राक्तनैर्बुधैः ।
हृत्पद्मस्था प्राणशक्तिः कण्ठस्था स्वप्ननायिका ॥ ५. २१ ॥

ததः பரா பராசக்திः பரமா த்வம் ஹி கீயஸே |
இச்சாசக்திः க்ரியாசக்திர்-ஜ்ஞானசக்திஸ்- த்ரிசக்திதா || 5.16 ||

கங்கா ச யமுனை சைவ விபாசா ச ஸரஸ்வதீ |
ஸரயூர்-தேவிகா ஸிந்துர்-நர்மதைராவதீ ததா || 5.17 ||

கோதாவரீ சதத்ரூச்ச காவேரீ தேவலோககா |
கௌசிகீ சந்த்ரபாகா ச விதஸ்தா ச ஸரஸ்வதீ || 5.18 ||

கண்டகீ தாபினீ தோயா கோமதீ வேத்ரவத்யபி |
இடா ச பிங்கலா சைவ ஸுஷும்னை ச த்ருதீயகா || 5.19 ||

காந்த்தாரீ ஹஸ்திஜிஹ்வா ச பூஷாபூஷா ததைவ ச |
அலம்புஸு குஹூசைவ சங்க்கினீ ப்ராணவாஹினீ || 5.20 ||

நாடீ ச த்வம் சரீரஸ்த்தா கீயஸே ப்ராக்தனைர்-புதைः |
ஹ்ருத்பத்மஸ்த்தா ப்ராணசக்திः கண்ட்டஸ்த்தா ஸ்வப்ந நாயிகா || 5.21 ||

तालुस्था त्वं सदाधारा बिन्दुस्था बिन्दुमालिनी ।
मूले तु कुण्डलीशक्ति-र्व्यापिनी केशमूलगा ॥ ५. २२ ॥

शिखामध्यासना त्वं हि शिखाग्रे तु मनोन्मनी ।
किमन्यद्बहुनोक्तेन यत्किंचिज्जगती त्रये ॥ ५. २३ ॥

तत्सर्वं त्वं महादेवि श्रिये सन्ध्ये नमोऽस्तु ते ।
इतीदं कीर्तितं स्तोत्रं सन्ध्यायां बहुपुण्यदम् ॥ ५. २४ ॥

॥ इति गायत्रीमाहात्म्यम् ॥

॥इति श्रीदेवीभागवते द्वादशस्कन्धे पंचमोऽध्यायः ॥

தாலுஸ்த்தா த்வம் ஸதாதாரா பிந்துஸ்த்தா பிந்து-மாலினீ |
மூலேது குண்டலீ சக்திர்-வ்யாபினீ கேசமூலகா || 5.22 ||

சிகா மத்த்யாஸனா த்வம் ஹி சிகாக்ரேது மனோன்மனீ |
கிமன்யத்-பஹுநோக்தேன யத்கிஞ்சிஜ்ஜகதீத்ரயே || 5.23 ||

தத்ஸர்வம் த்வம் மஹாதேவி ச்ரியே ஸந்த்யே நமோஸ்து தே |
இதீதம் கீர்த்திதம் ஸ்தோத்ரம் ஸந்த்யாயாம் பஹுபுண்யதம் || 5.24 ||

இங்ஙனம் காயத்ரீமாஹாத்மியம் முற்றும்.

இங்ஙனம் ஸ்ரீதேவீபாகவதத்தில் பன்னிரண்டாவது ஸ்கந்தத்தில் ஐந்தாவது அத்தியாயம் முற்றும்.

॥ गायत्री सहस्रनामस्तोत्रम् ॥ ५२ ॥

नारद उवाच —

भगवन् सर्वधर्मज्ञ सर्वशास्त्रविशारद ।
श्रुतिस्मृतिपुराणानां रहस्यं त्वन्मुखाच्छ्रुतम् ॥ ६. १ ॥

सर्वपापहरं देव येन विद्या प्रवर्तते ।
केन वा ब्रह्मविज्ञानं किं नु वा मोक्षसाधनम् ॥ ६. २ ॥

ब्राह्मणानां गतिः केन केन वा मृत्युनाशनम् ।
ऐहिकामुष्मिकफलं केन वा पद्मलोचन ॥ ६. ३ ॥

52. காயத்ரீ ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம்.

நாரதர் கூறியது—

6.1–3. எல்லா தர்மங்களையும் அறிந்தவரே! எல்லா சாஸ்திரங்களிலும் நிபுணரே! பகவானே! உங்கள் முகத்திலிருந்து சுருதி ஸ்ம்ருதி புராணங்களின் ரகசியம் கேட்கப்பட்டது. அதனுல் எல்லாப் பாவங்களையும் போக்கும் வித்தை வளருகிறது. எதனுல் பிரம்ம ஞானம் கிட்டும்? மோக்ஷஸாதனம் எது? பிராம்மணர்களுக்கு எதனுல் மிருத்யுவை நாசம் செய்யும் கதி கிட்டும்? கமலக் கண்ணரே! இகத்தும் பரத்தும் வாழ்க்கைப் பயன் எதனுல் கிட்டும்?

नारायण उवाच—

साधु साधु महाप्राज्ञ सम्यक् पृष्टं त्वयाऽनघ ॥ ६. ४ ॥

श्रृणु वक्ष्यामि यत्नेन गायत्र्यष्टसहस्रकम् ।
नाम्नां शुभानां दिव्यानां सर्वपापविनाशनम् ॥ ६. ५ ॥

सृष्टयादौ यद्भगवता पूर्वं प्रोक्तं ब्रवीमि ते ।
अष्टोत्तरसहस्रस्य ऋषिर्ब्रह्मा प्रकीर्तितः ॥ ६. ६ ॥

छन्दोऽनुष्टुप् तथा देवी गायत्री देवतास्मृता ।
हलो बीजानि तस्यैव स्वराः शक्तय ईरिताः ॥ ६. ७ ॥

अंगन्यास-करन्यासावुच्येते मातृकाक्षरैः ।
अथ ध्यानं प्रवक्ष्यामि साधकानां हिताय वै ॥ ६. ८ ॥

நாராயணர் கூறியது—

6.4–7 பாவமற்றவரே! மகாமதிமானே! நன்று, நன்று. உம்மால் செம்மையாகக் கேள்வி கேட்கப் பட்டது. எல்லாப் பாவங்களேயும் போக்குவதும் மங்களமானதுமான காயத்ரியின் ஆயிரத்தெட்டு திவ்ய நாமங்களைக் கூறுகிறேன், கவனத்துடன் கேளும். எது பகவானுல் சிருஷ்டியின் தொடக்கத்தில் முதலில் சொல்லப்பட்டதோ அதை உமக்குச் சொல்லுகிறேன். அஷ்டோத்தரஸஹஸ்ரநாமத்திற்கு ரிஷி பிரம்மா எனப் படுகிருர்; சந்தஸ் அனுஷ்டுப்; தேவதை காயத்ரீ தேவி எனக் கூறப்பட்டுள்ளது. மெய்யெழுத்துக்கள் பீஜம்; உயிரெழுத்துக்கள் சக்தி எனப்படும்.

6.8. அங்கநியாஸ கரநியாஸங்கள் மாத்ருகா அக்ஷரங்களால் என்று கூறப்படுகிறது (அம்–கம் க்கம் கம் க்க்ம் ஙம்–ஆம் அங்குஷ்ட்டாப்ப்யாம் நம: | இம்–சம் ச்சம் ஜம் ஜ்ஜம்–ஈம் தர்ஜனீப்ப்யாம் நம:... என்ற முறையில்) ஸாதகர்களுடைய நன்மைக்காக இனி தியானத்தைக் கூறுகிறேன்.

रक्तश्वेत-हिरण्यनीलधवलै-र्युक्तां त्रिनेत्रोज्ज्वलां
रक्तां रक्तनवस्रजं मणिगणै-र्युक्तां कुमारीमिमाम् ।
गायत्रीं कमलासनां करतल-व्यानद्ध-कुण्डाम्बुजां
पद्माक्षीं च वरस्रजं च दधतीं हंसाधिरूढां भजे ॥ ६. ९ ॥

॥स्तोत्रम् ॥

अचिन्त्यलक्षणा ऽव्यक्ताप्यर्धमातृमहेश्वरी ।
अमृतार्णवमध्यस्थाप्यजिता चापराजिता ॥ ६. १० ॥

अणिमादिगुणाधाराप्यर्कमण्डलसंस्थिता ।
अजराऽजाऽपराधर्मा अक्षसूत्रधराऽधरा ॥ ६. ११ ॥

6.9. ரக்தச்வேத–ஹிரண்ய–நீல–தவலைர்–யுக்தாம் த்ரிநேத்ரோஜ்ஜ்வலாம் ரக்தாம் ரக்த நவஸ்ரஜம் மணிகணைர்யுக்தாம் குமாரீமிமாம் | காயத்ரீம் கமலாஸனும் கரதல–வ்யானத்த–குண்டாம்புஜாம் பத்மாக்ஷீஞ் ச வரஸ்ரஜஞ் ச தததீம் ஹம்ஸாதிருடாம் பஜே ||

சிவப்பு முத்து நிறம், மஞ்சள், நீலம், வெளுப்பு ஆகிய வண்ணங்களைக் கொண்டு முக்கண்ணுடன் கூடிப் பிரகாசிக்கும் முகங்களைப் படைத்தவளும், சிவப்பான புதியமாலையணிந்தவளும், இரத்தினங்களால் அலங்கரிக்கப் பெற்றவளும், கைகளில் கமண்டுலுவும் தாமரையும், சிறந்த ஜபமாலையும் தரிப்பவளும், தாமரை போன்ற கண்களுடையவளும், ஹம்ஸவாகனத்தில் கமலாஸனத்தில் வீற்றிருப்பவளும், குமாரியுமான காயத்ரி தேவியை தியானம் செய்கிறேன்.

ஸ்தோத்ரம்

அசிந்த்யலக்ஷணுऽவ்யக்தாப்யர்த்த மாத்ரு மஹேச்வரீ |
அம்ருதார்ணவமத்த்யஸ்த்தாப்யஜிதா சாபராஜிதா || 6.10 ||

அணிமாதிகுணுதாராப்யர்கமண்டலஸம்ஸ்திதா |
அஜராऽஜாऽபராதர்மா அக்ஷஸூத்ரதராऽதரா || 6.11 ||

अकारादिक्षकारान्ताप्यरिषड्वर्गभेदिनी ।
अंजनादिप्रतीकाशाऽप्यंजनाद्रिनिवासिनी ॥ ६. १२ ॥

अदितिश्चाऽजपा विद्याप्यरविन्दनिभेक्षणा ।
अन्तर्बहिः स्थिताऽविद्याध्वंसिनी चान्तरात्मिका ॥ ६. १३ ॥

अजा चाऽजमुखावासाप्यरविन्दनिभानना ।
अर्धमात्राऽर्थदानज्ञाऽप्यरिमण्डलमर्दिनी ॥ ६. १४ ॥

असुरघ्नी ह्यमावास्याप्यलक्ष्मीघ्नन्त्यजार्चिता ।
आदिलक्ष्मीश्चादिशक्ति-राकृति-श्चायतानना ॥ ६. १५ ॥

आदित्यपदवीचाराप्यादित्यपरिसेविता ।
आचार्या-ऽऽवर्तना-ऽऽचाराप्यादिमूर्तिनिवासिनी ॥ ६. १६ ॥

அகராதி க்ஷகாராந்தா ப்யரிஷட்வர்கபேதினீ |
அஞ்ஜனாதிப்ரதீகாசாSப்யஞ்ஜனாத்ரி நிவாஸினீ ॥ 6.12 ॥

அதிதிச்சாSஜபா வித்யாப்யரவிந்தநிபேக்ஷணா |
அந்தர்பஹி: ஸ்திதாSவித்யாத்வம்ஸினீ சாந்தராத்மிகா ॥ 6.13 ॥

அஜா சாS ஜமுகாவாஸாப்யரவிந்தநிபானனா |
அர்த்தமாத்ராS ர்த்ததானஜ்ஞாSப்யரிமண்டலமர்த்தினீ ॥ 6.14 ॥

அஸுரக்கனீ ஹ்யமாவாஸ்யாப்யலக்ஷ்மீக்க்னந்த்ய ஜார்ச்சிதா |
ஆதிலக்ஷ்மீச்—சாதிசக்தி—ராக்ருதிச்—சாயதானனா ॥ 6.15 ॥

ஆதித்யபதவீசாராப்யாதித்ய பரிஸேவிதா |
ஆசார்யாSSவர்த்தனாSSசாராப்யாதிமூர்த்திநிவாஸினீ ॥ 6.16 ॥

आग्नेयी चामरी चाऽऽद्या चाऽऽराध्या चाऽऽसनास्थिता।
आधारनिलया-ऽऽधारा चाकाशान्तनिवासिनी ॥ ६. १७ ॥

आद्याक्षरसमायुक्ता चान्तराकाशरूपिणी।
आदित्यमण्डलगता चान्तरध्वान्तनाशिनी ॥ ६. १८ ॥

इन्दिरा चेष्टदा चेष्टा चेन्दीवरनिभेक्षणा।
इरावती चेन्द्रपदा चेन्द्राणी चेन्दुरूपिणी ॥ ६. १९ ॥

इक्षुकोदण्डसंयुक्ता चेषुसन्धानकारिणी।
इन्द्रनीलसमाकारा चेडापिंगलरूपिणी ॥ ६. २० ॥

इन्द्राक्षी चेश्वरी देवी चेहात्रयविवर्जिता।
उमा चोषा ह्युडुनिभा उर्वारुकफलानना ॥ ६. २१ ॥

ஆக்னேயீ சாமரீ சாSSத்யா சாராத்யா சாSSஸனஸ்த்திதா |
ஆதாரநிலயாSSதாரா சாகாசாந்தநிவாஸினீ ॥ 6.17 ॥

ஆத்யாக்ஷரஸமாயுக்தா சாந்தராகாசரூபிணீ |
ஆதித்யமண்டலகதா சாந்தரத்வாந்தநாசினீ ॥ 6.18 ॥

இந்திரா சேஷ்டதா சேஷ்டா சேந்தீவரநிபேக்ஷணா ||
இராவதீ சேந்த்ரபதா சேந்த்ராணீ சேந்துரூபிணீ ॥ 6.19 ॥

இக்ஷுகோதண்டஸம்யுக்தா சேஷு ஸந்த்தானகாரிணீ |
இந்த்ரநீலஸமாகாரா சேடாபிங்கலரூபிணீ ॥ 6.20 ॥

இந்த்ராக்ஷீ சேச்வரீ தேவீ சேஹாத்ரயவிவர்ஜிதா |
உமா சோஷா ஹ்யுடுநிபா உர்வாருகபலானனா ॥ 6.21 ॥

उडुप्रभा चोडुमती ह्युडुपा ह्युडुमध्यगा ।
ऊर्ध्वा चाप्यूर्ध्वकेशी चाप्यूर्ध्वाधोगतिभेदिनी ॥ ६. २२ ॥

ऊर्ध्वबाहुप्रिया चोर्मिमाला वाग्ग्रन्थदायिनी ।
ऋतं च ऋषिर्ऋतुमती ऋषिदेवनमस्कृता ॥ ६. २३ ॥

ऋग्वेदा ऋणहर्त्री च ऋषिमण्डलचारिणी ।
ऋद्धिदा ऋजुमार्गस्था ऋजुधर्मा ऋतुप्रदा ॥ ६. २४ ॥

ऋग्वेदनिलया ऋज्वी लुप्तधर्मप्रवर्तिनी ।
लूतारिवरसम्भूता लूतादिविषहारिणी ॥ ६. २५ ॥

एकाक्षरा चैकमात्रा चैका चैकैकनिष्ठिता ।
ऐन्द्री ह्यैरावतारूढा चैहिकामुष्मिकप्रदा ॥ ६. २६ ॥

உடுப்ரபா சோடுமதீ ஹ்யுடுபா ஹ்யுடுமத்த்யகா |
ஊர்த்த்வா சாப்யூர்த்த்வகேசீ சாப்யூர்த்த்வாதோகதி-
பேதினி || 6.22 ||

ஊர்த்த்வபாஹுப்ரியா சோர்மிமாலா வாக்க்ரந்ததாயினீ |
ருதஞ்ச ருஷிர்-ருதுமதீ ருஷிதேவநமஸ்க்ருதா || 6.23 ||

ருக்வேதா ருணஹர்த்ரீ ச ருஷிமண்டலசாரிணீ |
ருத்திதா ருஜுமார்க்கஸ்த்தா ருஜுதர்மா ருதுப்ரதா
|| 6.24 ||

ருக்வேதநிலயா ருஜ்வீ லுப்ததர்ம-ப்ரவர்த்தினீ |
லூதாரிவரஸம்ப்பூதா லூதாதிவிஷஹாரிணீ || 6.25 ||

ஏகாக்ஷரா சைகமாத்ரா சைகா சைகைகநிஷ்ட்டிதா |
ஐந்த்ரீ ஹ்யைராவதாரூடா சைஹிகாமுஷ்மிகப்ரதா
|| 6.26 ||

ओंकारा ह्योषधी चोता चोतप्रोतनिवासिनी ।
और्वा ह्यौषधसम्पन्ना औपासनफलप्रदा ।। ६. २७ ।।

अण्डमध्यस्थिता देवी चा:कारमनुरूपिणी ।
कात्यायनी कालरात्रि: कामाक्षी कामसुन्दरी ।। ६. २८ ।।

कमला कामिनी कान्ता कामदा कालकण्ठिनी ।
करिकुम्भस्तनभरा करवीरसुवासिनी ।। ६. २९ ।।

कल्याणी कुण्डलवती कुरुक्षेत्रनिवासिनी ।
कुरुविन्ददलाकारा कुण्डली कुमुदालया ।। ६. ३० ।।

कालजिह्वा करालास्या कालिका कालरूपिणी ।
कमनीयगुणा कान्ति: कलाधारा कुमुद्वती ।। ६. ३१ ।।

ஓங்காரா ஹ்யோஷதீ–சோதா சோதப்ரோதநிவாஸினீ |
ஔர்வா ஹ்யௌஷதஸம்பன்னு ஔபாஸனபலப்ரதா || 6.27 ||

அண்டமத்த்யஸ்த்திதா தேவீ சா:காரமனுரூபிணீ |
காத்யாயனீ காலராத்ரி: காமாக்ஷீ காமஸுந்தரீ || 6.28 ||

கமலா காமினீ காந்தா காமதா காலகண்ட்டினீ |
கரிகும்ப்பஸ்தனபரா கரவீரஸுவாஸினீ || 6.29 ||

கல்யாணீ குண்டலவதீ குருக்ஷேத்ரநிவாஸினீ |
குருவிந்ததலாகாரா குண்டலீ குமுதாலயா || 6.30 ||

காலஜிஹ்வா கராலாஸ்யா காலிகா காலரூபிணீ |
கமனீயகுணு காந்தி: கலாதாரா குமுத்வதீ || 6.31 ||

कौशिकी कमलाकारा कामचारप्रभंजिनी।
कौमारी करुणापांगी ककुबन्ता करिप्रिया ॥ ६. ३२ ॥

केसरी केशवनुता कदम्बकुसुमप्रिया।
कालिन्दा कालिका कांची कलशोद्भवसंस्तुता ॥ ६. ३३ ॥

काममाता क्रतुमती कामरूपा कृपावती।
कुमारी कुण्डनिलया किराती कीरवाहना ॥ ६. ३४ ॥

कैकेयी कोकिलालापा केतकीकुसुमप्रिया।
कमण्डलुधरा काली कर्मनिर्मूलकारिणी ॥ ६. ३५ ॥

कलहंसगतिः कक्षा कृतकौतुकमंगला।
कस्तूरीतिलका कम्रा करीन्द्रगमना कुहुः ॥ ६. ३६ ॥

கௌசிகி கமலாகாரா காமசாரப்ரபஞ்ஜினீ |
கௌமாரீ கருணாபாங்கி ககுபந்தா கரிப்ரியா || 6.32 ||

கேஸரீ கேசவநுதா கதம்ப குஸுமப்ரியா |
காலிந்தா காலிகா காஞ்சீ கலசோத்பவஸம்ஸ்துதா || 6.33 ||

காமமாதா க்ரதுமதீ காமரூபா க்ருபாவதீ |
குமாரீ குண்டநிலயா கிராதீ கீரவாஹனா || 6.34 ||

கைகேயீ கோகிலாலாபா கேதகீகுஸுமப்ரியா |
கமண்டலுதரா காலீ கர்மநிர்மூலகாரிணீ || 6.35 ||

கலஹம்ஸகதி: கக்ஷா க்ருதகௌதுக-மங்கலா |
கஸ்தூரீதிலகா கம்ரா கரீந்த்ரகமனா குஹு: || 6.36 ||

कर्पूरलेपना कृष्णा कपिला कुहराश्रया ।
कूटस्था कुधरा कम्रा कुक्षिस्थाऽखिलविष्टपा ।। ६. ३७ ।।

खड्गकेटकरा खर्वा खेचरी खगवाहना ।
खट्वांगधारिणी ख्याता खगराजोपरिस्थिता ।। ६. ३८ ।।

खलघ्नी खण्डितजरा खण्डाख्यानप्रदायिनी ।
खण्डेन्दुतिलका गंगा गणेशगुहपूजिता ।। ६. ३९ ।।

गायत्री गोमती गीता गान्धारी गानलोलुपा ।
गौतमी गामिनी गाधा गन्धर्वाप्सरसेविता ।। ६. ४० ।।

गोविन्दचरणाक्रान्ता गुणत्रयविभाजिता ।
गान्धर्वी गह्वरी गोत्रा गिरिशा गहनागमी ।। ६. ४१ ।।

கர்ப்பூரலேபனா க்ருஷ்ணா கபிலா குஹராச்ரயா |
கூடஸ்த்தா குதரா கம்ரா குக்ஷிஸ்த்தாகில விஷ்டபா || 6.37 ||

கட்ககேடகரா கர்வா கேசரீ ககவாஹனா |
கட்வாங்கதாரிணீ க்க்யாதா ககராஜோபரிஸ்த்திதா
|| 6.38 ||

கலக்க்னீ கண்டிதஜரா கண்டாக்க்யானப்ரதாயினீ |
கண்டேந்துதிலகா கங்கா கணேசகுஹபூஜிதா || 6.39 ||

காயத்ரீ கோமதீ கீதா காந்த்தாரீ கானலோலுபா |
கௌதமீ காமினீ காதா கந்தர்வாப்ஸர ஸேவிதா || 6.40 ||

கோவிந்தசரணாக்ராந்தா குணத்ரயவிபாஜிதா |
காந்தர்வீ கஹ்வரீ கோத்ரா கிரிசா கஹனாகமீ || 6.41 ||

गुह्वासा गुणवती गुरुपापप्रणाशिनी ।
गुर्वी गुणवती गुह्या गोप्तव्या गुणदायिनी ॥ ६. ४२ ॥

गिरिजा गुह्यमातंगी गरुडध्वजवल्लभा ।
गर्वापहारिणी गोदा गोकुलस्था गदाधरा ॥ ६. ४३ ॥

गोकर्णनिलयासक्ता गुह्यमण्डलवर्तिनी ।
धर्मदा धनदा घण्टा घोरदानवमर्दिनी ॥ ६. ४४ ॥

घृणिमन्त्रमयी घोषा घनसम्पातदायिनी ।
घण्टारवप्रिया घ्राणा घृणिसन्तुष्टकारिणी ॥ ६. ४५ ॥

घनारिमण्डलाघूर्णा घृताची घनवेगिनी ।
ज्ञानधातुमयी चर्चा चर्चिता चारुहासिनी ॥ ६. ४६ ॥

குஹவாஸா குணவதி குருபாபப்ரணாசினீ |
குர்வீ குணவதீ குஹ்யா கோப்தவ்யா குணதாயினீ || 6.42 ||

கிரிஜா குஹ்யமாதங்கீ கருடத்வஜவல்லபா |
கர்வாபஹாரிணீ கோதா கோகுலஸ்த்தா கதாதரா || 6.43 ||

கோகர்ணநிலயாஸக்தா குஹ்யமண்டல வர்த்தினீ |
தர்மதா தனதா கண்டா கோரதானவமர்த்தினீ || 6.44 ||

க்க்ருணிமந்த்ரமயீ கோஷா கனஸம்பாததாயினீ |
கண்டாரவப்ரியா க்க்ராணு க்க்ருணிஸந்துஷ்டகாரிணீ
|| 6.45 ||

கனாரிமண்டலா கூர்ணு க்க்ருதாசி கனவேகினீ |
ஜ்ஞானதாதுமயீ சர்ச்சா சர்ச்சிதா சாருஹாஸினீ || 6.46 ||

चटुला चण्डिका चित्रा चित्रमाल्यविभूषिता ।
चतुर्भुजा चारुदन्ता चातुरी चरितप्रदा ॥ ६. ४७ ॥

चूलिका चित्रवस्त्रान्ता चन्द्रमः कर्णकुण्डला ।
चन्द्रहासा चारुदात्री चकोरी चन्द्रहासिनी ॥ ६. ४८ ॥

चन्द्रिका चन्द्रधात्री च चौरी चौरा च चण्डिका ।
चंचद्वाग्वादिनी चन्द्रचूडा चोरविनाशिनी ॥ ६. ४९ ॥

चारुचन्दनलिप्तांगी चंचच्चामरवीजिता ।
चारुमध्या चारुगति-श्चन्दिला चन्द्ररूपिणी ॥ ६. ५० ॥

चारुहोमप्रिया चार्वाचरिता चक्रबाहुका ।
चन्द्रमण्डलमध्यस्था चन्द्रमण्डलतर्पणा ॥ ६. ५१ ॥

சடுலா சண்டிகா சித்ரா சித்ரமால்யவிபூஷிதா |
சதுர்ப்புஜா சாருதந்தா சாதுரீ சரிதப்ரதா || 6.47 ||

சூலிகா சித்ரவஸ்த்ராந்தா சந்த்ரம: கர்ணகுண்டலா |
சந்த்ரஹாஸா சாருதாத்ரீ சகோரீ சந்த்ரஹாஸினீ || 6.48 ||

சந்த்ரிகா சந்த்ர-தாத்ரீ ச சௌரீ சௌரா ச சண்டிகா |
சஞ்சத்-வாக்வாதினீ சந்த்ரசூடா சோரவிநாசினீ || 6.49 ||

சாருசந்தன-லிப்தாங்கீ சஞ்சச்சாமரவீஜிதா |
சாருமத்த்யா சாருகதிச்-சந்திலா சந்த்ரரூபிணீ || 6.50 ||

சாருஹோமப்ரியா சார்வாசரிதா சக்ரபாஹுகா |
சந்த்ரமண்டலமத்யஸ்த்தா சந்த்ரமண்டலதர்ப்பணு
|| 6.51 ||

चक्रवाकस्तनी चेष्टा चित्रा चारुविलासिनी ।
चित्स्वरूपा चन्द्रवती चन्द्रमाश्चन्दनप्रिया ।। ६. ५२ ।।

चोदयित्री चिरप्रज्ञा चातका चारुहेतुकी ।
छत्रयाता छत्रधरा छाया छन्दः परिच्छदा ।। ६. ५३ ।।

छायादेवी च्छिद्रनखा छन्नेन्द्रियविसर्पिणी ।
छन्दोऽनुष्टुप् प्रतिष्ठान्ता छिद्रोपद्रवभेदिनी ।। ६. ५४ ।।

छेदा छत्रेश्वरी छिन्ना छुरिका छेदनप्रिया ।
जननी जन्मरहिता जातवेदा जगन्मयी ।। ६. ५५ ।।

जाह्नवी जटिला जेत्री जरामरणवर्जिता ।
जम्बूद्वीपवती ज्वाला जयन्ती जलशालिनी ।। ६. ५६ ।।

சக்ரவாகஸ்தனீ சேஷ்டா சித்ரா சாருவிலாஸினீ |
சித்ஸ்வரூபா சந்த்ரவதீ சந்த்ரமாச் சந்தனப்ரியா || 6.52 ||

சோதயித்ரீ சிரப்ரஜ்ஞா சாதகா சாருஹேதுகீ |
ச்சத்ரயாதா ச்சத்ரதரா ச்சாயா ச்சந்த: பரிச்சதா || 6.53 ||

ச்சாயாதேவீ ச்சித்ரநகா ச்சன்னேந்த்ரியவிஸர்ப்பிணீ |
ச்சந்தோऽனுஷ்டுப் ப்ரதிஷ்ட்டாந்தா ச்சித்ரோபத்ரவ
பேதினீ || 6.54 ||

ச்சேதா ச்சத்ரேச்வரீ ச்சிந்நா ச்சுரிகா ச்சேதனப்ரியா |
ஜனனீ ஜன்மரஹிதா ஜாதவேதா ஜகன்மயீ || 6.55 ||

ஜான்ஹவீ ஜடிலா ஜேத்ரீ ஜராமரணவர்ஜிதா |
ஜம்பூத்வீபவதீ ஜ்வாலா ஜயந்தீ ஜலசாலினீ || 6.56 ||

जितेन्द्रिया जितक्रोधा जिताऽमित्रा जगत्प्रिया ।
जातरूपमयी जिह्वा जनकी जगती जरा ॥ ६. ५७ ॥

जनित्री जह्नुतनया जगत्त्रयहितैषिणी ।
ज्वालामुखी जपवती ज्वलघ्नी जितविष्टपा ॥ ६. ५८ ॥

जिताक्रान्तमयी ज्वाला जाग्रती ज्वरदेवता ।
ज्वलन्ती जलदा ज्येष्ठा ज्याघोषास्फोटदिङ्मुखी ॥ ६. ५९ ॥

जम्भिनी जृम्भणा जृम्भा ज्वलन्माणिक्यकुण्डला ।
झिञ्झिका झणनिर्घोषा झंझा-मारुतवेगिनी ॥ ६. ६० ॥

झल्लरीवाद्यकुशला ञरूपा ञभुजा स्मृता ।
टंकबाणसमायुक्ता टंकिनी टंकभेदिनी ॥ ६. ६१ ॥

ஜிதேந்த்ரியா ஜிதக்ரோதா ஜிதாऽமித்ரா ஜகத்ப்ரியா |
ஜாதரூபமயீ ஜிஹ்வா ஜனகீ ஜகதீ ஜரா || 6.57 ||

ஜனித்ரீ ஜஹ்னுதனயா ஜகத்-த்ரய-ஹிதைஷிணீ |
ஜ்வாலாமுகி ஜபவதி ஜ்வலக்க்னீ ஜிதவிஷ்டபா || 6.58 ||

ஜிதாக்ராந்தமயீ ஜ்வாலா ஜாக்ரதி ஜ்வரதேவதா |
ஜ்வலந்தி ஜலதா ஜ்யேஷ்டா ஜ்யாகோஷாஸ்ப்போட-
திங்முகி || 6.59 ||

ஜம்ப்பினி ஜ்ரும்ப்பண ஜ்ரும்ப்பா ஜ்வலன்மாணிக்ய-
குண்டலா |
ஜ்ஜிஞ்ஜ்ஜிகா ஜ்ஜணநிர்க்கோஷா ஜ்ஜஞ்ஜ்ஜா மாருத
வேகினீ || 6.60 ||

ஜ்ஜல்லரீவாத்யகுசலா ஞரூபா ஞபுஜா ஸம்ருதா |
டங்கபாணஸமாயுக்தா டங்கினீ டங்கபேதினீ || 6.61 ||

टंकीगणकृताघोषा टंकनीयमहोरसा ।
टंकारकारिणी देवी टठशब्दनिनादिनी ।। ६. ६२ ।।

डामरी डाकिनी डिम्भा डुण्डुमारैकनिर्जिता ।
डामरीतन्त्रमार्गस्था डमड्डमरुनादिनी ।। ६. ६३ ।।

डिण्डीरवसहा डिम्भलसत्क्रीडापरायणा ।
ढुण्ढिविघ्नेशजननी ढक्काहस्ता ढिलिव्रजा ।। ६. ६४ ।।

नित्यज्ञाना निरुपमा निर्गुणा नर्मदानदी ।
त्रिगुणा त्रिपदा तन्त्री तुलसीतरुणा तरुः ।। ६. ६५ ।।

त्रिविक्रमपदाक्रान्ता तुरीयपदगामिनी ।
तरुणादित्यसंकाशा तामसी तुहिनातुरा ।। ६. ६६ ।।

டங்கிகணக்ருதாகோஷா டங்கனீயமஹோரஸா |
டங்காரகாரிணீ தேவீ டடசப்தநிநாதினீ || 6.62 ||

டாமரீ டாகினீ டிம்பா டுண்டுமாரைகநிர்ஜிதா |
டாமரீ-தந்த்ர-மார்க்ஃஸத்தா டமட்டமருநாதினீ || 6.63 ||

டிண்டீரவஸஹா டிம்ப்பலஸத்க்ரீடா பராயணு |
டுண்டிவிக்னேசஜனனீ டக்காஹஸ்தா டிலிவ்ரஜா || 6.64 ||

நித்யஞாணு நிருபமா நிர்க்குணு நர்மதாநதீ |
த்ரிகுணு த்ரிபதா தந்த்ரீ துலஸீதருணு தரு: || 6.65 ||

த்ரிவிக்ரமபதாக்ராந்தா துரீயபதகாமினீ |
தருணுதித்யஸங்காசா தாமஸீ துஹினுதுரா || 6.66 ||

त्रिकालज्ञानसम्पन्ना त्रिवली च त्रिलोचना।
त्रिशक्तिस्त्रिपुरा तुंगा तुरंगवदना तथा ।। ६. ६७ ।।

तिमिंगिला तीव्रा त्रिस्रोता तामसादिनी।
तन्त्रमन्त्रविशेषज्ञा तनुमध्या त्रिविष्टपा ।। ६. ६८ ।।

त्रिसन्ध्या त्रिस्तनी तोषासंस्था तालप्रतापिनी।
ताटङ्किनी तुषाराभा तुहिनाचलवासिनी ।। ६. ६९ ।।

तन्तुजालसमायुक्ता तारहारावलिप्रिया।
तिलहोमप्रिया तीर्था तमालकुसुमाकृतिः ।। ६. ७० ।।

तारका त्रियुता तन्वी त्रिशंकुपरिवारिता।
तलोदरी तिलाभूषा ताटंकप्रियवाहिनी ।। ६. ७१ ।।

த்ரிகாலஜ்ஞானஸம்பன்னா த்ரிவலீ ச த்ரிலோசனா |
த்ரிசக்திஸ்த்ரிபுரா துங்கா துரங்கவதனா ததா || 6.67 ||

திமிங்கிலா தீவ்ரா த்ரிஸ்ரோதா தாமஸாதினீ |
தந்த்ரமந்த்ரவிசேஷஜ்ஞா தனுமத்த்யா த்ரிவிஷ்டபா || 6.68 ||

த்ரிஸந்த்த்யா த்ரிஸ்தனீ தோஷாஸம்ஸ்த்தா தாலப்ரதாபினீ |
தாடங்கினீ துஷாராபா துஹினாசலவாஸினீ || 6.69 ||

தந்துஜாலஸமாயுக்தா தாரஹாராவலிப்ரியா |
திலஹோமப்ரியா தீர்த்தா தமாலகுஸுமாக்ருதி: || 6.70 ||

தாரகா த்ரியுதா தன்வீ த்ரிசங்குபரிவாரிதா |
தலோதரீ திலாபூஷா தாடங்கப்ரியவாஹினீ || 6.71 ||

त्रिजटा तित्तिरी तृष्णा त्रिविधा तरुणाकृतिः ।
तप्तकांचनसंकाशा तप्तकांचनभूषणा ॥ ६. ७२ ॥

त्र्यम्बका त्रिवर्गा च त्रिकालज्ञानदायिनि ।
तर्पणा तृप्तिदा तृप्ता तामसी तुम्बुरुस्तुता ॥ ६. ७३ ॥

ताक्ष्यस्था त्रिगुणाकारा त्रिभंगीतनुवल्लरिः ।
थात्कारी थारवा थान्ता दोह्निनी दीनवत्सला ॥ ६. ७४ ॥

दानवान्तकरी दुर्गा दुर्गासुरनिबर्हणी ।
देवरीति-र्दिवारात्रि-र्द्रौपदी दुन्दुभिस्वना ॥ ६. ७५ ॥

देवयानी दुरावासा दारिद्र्योद्भेदिनी दिवा ।
दामोदरप्रिया दीप्ता दिग्वासा दिग्विमोहिनी ॥ ६. ७६ ॥

த்ரிஜடா தித்திரீ த்ருஷ்ணா த்ரிவிதா தருணாக்ருதி: |
தப்தகாஞ்சன-ஸங்காசா தப்தகாஞ்சனபூஷணா || 6.72 ||

த்ர்யம்பகா த்ரிவர்க்கா ச த்ரிகாலஜ்ஞானதாயினீ |
தர்ப்பணா த்ருப்திதா த்ருப்தா தாமஸீ தும்புருஸ்துதா || 6.73 ||

தாக்ஷ்யஸ்த்தா த்ரிகுணாகாரா த்ரிபங்கீதனுவல்லரி: |
த்தாத்காரீ த்தாரவா த்தாந்தா தேஹினீ தீனவத்ஸலா || 6.74 ||

தானவாந்தகரீ துர்க்கா துர்க்காஸுர-நிபர்ஹணீ |
தேவரீதிர்-திவாராத்ரீ-த்ரௌபதீ துந்துபிஸ்வனா || 6.75 ||

தேவயானீ துராவாஸா தாரித்ர்யோத்பேதினீ திவா |
தாமோதரப்பிரியா தீப்தா திக்வாஸா திக்விமோஹினீ. || 6.76 ||

दण्डकारण्यनिलया दण्डिनी देवपूजिता ।
देववन्द्या दिविषदा द्वेषिणी दानवाकृतिः ।। ६. ७७ ।।

दीनानाथस्तुता दीक्षा दैवतादिस्वरूपिणी ।
धात्री धनुर्धरा धेनु-र्धारिणी धर्मचारिणी ।। ६. ७८ ।।

धुरंधरा धराधारा धनदा धान्यदोहिनी ।
धर्मशीला धनाध्यक्षा धर्मवेदविशारदा ।। ६. ७९ ।।

धृति-र्धन्या धृन्या धृतपदा धर्मराजप्रिया ध्रुवा ।
धूमावती धूमकेशी धर्मशास्त्रप्रकाशिनी ।। ६. ८० ।।

नन्दा नन्दप्रिया निद्रा नृनुता नन्दनात्मिका ।
नर्मदा नलिनी नीला नीलकण्ठसमाश्रया ।। ६. ८१ ।।

தண்டகாரண்ய-நிலயா தண்டினீ தேவபூஜிதா |
தேவவந்த்யா திவிஷதா த்வேஷிணீ தானவாக்ருதி: || 6.77 ||

தீனநாதஸ்துதா தீக்ஷா தைவதாதிஸ்வரூபிணீ |
தாத்ரீ தனுர்த்தரா தேனுர்-தாரிணீ தர்மசாரிணீ || 6.78 ||

துரந்தரா தராதாரா தனதா தான்யதோஹினீ |
தர்மசிலா தனுத்த்யக்ஷா தர்மவேதவிசாரதா || 6.79 ||

த்ருதிர்-தன்யா த்ருதபதா தர்மராஜப்ரியா த்ருவா |
தூமாவதி தூமகேசி தர்மசாஸ்த்ரப்ரகாசினீ || 6.80 ||

நந்தா நந்தப்ரியா நித்ரா ந்ருநுதா நந்தனுத்மிகா—
நர்மதா நலினீ நீலா நீலகண்டஸமாச்ரயா || 6.81=

नारायणप्रिया नित्या निर्मला निर्गुणा निधिः।
निराधारा निरुपमा नित्यशुद्धा निरंजना ॥ ६. ८२ ॥

नादबिन्दुकलातीता नादबिन्दुकलात्मिका।
नृसिंहिनी नगधरा नृपनागविभूषिता ॥ ६. ८३ ॥

नरकक्लेशशमनी नारायणपदोद्भवा।
निरवद्या निराकारा नारदप्रियकारिणी ॥ ६. ८४ ॥

नानाज्योतिः समाख्याता निधिदा निर्मलात्मिका।
नवसूत्रधरा नीति-निरुपद्रवकारिणी ॥ ६. ८५ ॥

नन्दजा नवरत्नाढ्या नैमिषारण्यवासिनी।
नवनीतप्रिया नारी नीलजीमूतनिस्वना ॥ ६. ८६ ॥

நாராயணப்ரியா நித்யா நிர்மலா நிர்க்குணு நிதி: |
நிராதாரா நிருபமா நித்யசுத்தா நிரஞ்ஜனு ‖ 6.82 ‖

நாதபிந்துகலாதீதா நாதபிந்துகலாத்மிகா |
ந்ருஸிம்ஹினீ நகதரா ந்ருபநாகவிபூஷிதா ‖ 6.83 ‖

நரகக்லேசசமனீ நாராயணபதோத்பவா |
நிரவத்யா நிராகாரா நாரதப்ரியகாரிணீ ‖ 6.84 ‖

நாஞுஜ்யோதி: ஸமாக்க்யாதா நிதிதா நிர்மலாத்மிகா |
நவஸூத்ரதரா நீதிர்-நிருபத்ரவகாரிணீ ‖ 6.85 ‖

நந்தஜா நவரத்ஞுட்யா நைமிஷாரண்யவாஸினீ |
வநநீதப்ரியா நாரீ நீலஜீமூத-நிஸ்வனு ‖ 6.86 ‖

निमेषिणी नदीरूपा नीलग्रीवा निशीश्वरी ।
नामावलि-र्निशुम्भघ्नी नागलोकनिवासिनी ।। ६. ८७ ।।

नवजाम्बूनदप्रख्या नागलोकाधिदेवता ।
नूपुराक्रान्तचरणा नरचित्तप्रमोदिनी ।। ६. ८८ ।।

निमग्ना रक्तनयना निर्घातसमनिस्वना ।
नन्दनोद्याननिलया निर्व्यूहोपचारिणी ।। ६. ८९ ।।

पार्वती परमोदारा परब्रह्मात्मिका परा ।
पंचकोशविनिर्मुक्ता पंचपातकनाशिनी ।। ६. ९० ।।

परचित्तविधानज्ञा पंचिका पंचरूपिणी ।
पूर्णिमा परमाप्रीतिः परतेजः प्रकाशिनी ।। ६. ९१ ।।

நிமேஷிணீ நதீரூபா நீலக்ரீவா நிசீச்வரீ |
நாமாவளிர்-நிசும்ப்பக்க்னீ நாகலோகநிவாஸினீ || 6.87 ||

நவஜாம்பூநதப்ரக்க்யா நாகலோகாதிதேவதா |
நூபுராக்ராந்தசரணா நரசித்தப்ரமோதினீ || 6.88 ||

நிமக்னாரக்தநயனா நிர்க்காதஸமநிஸ்வனா |
நந்தநோத்யானநிலயா நிர்வ்யூஹோபசாரிணீ || 6.89 ||

பார்வதீ பரமோதாரா பரப்ரஹ்மாத்மிகா பரா—
பஞ்சகோசவிநிர்முக்தா பஞ்சபாதகநாசினீ || 6.90 ||

பரசித்தவிதானஜ்ஞா பஞ்சிகா பஞ்சரூபிணீ |
பூர்ணிமா பரமாப்ரீதி: பரதேஜ:ப்ரகாசினீ || 6.91 ||

पुराणी पौरुषी पुण्या पुण्डरीकनिभेक्षणा ।
पातालतलनिर्मग्ना प्रीता प्रीतिविवर्धिनी ।। ६. ९२ ।।

पावनी पादसहिता पेशला पवनाशिनी ।
प्रजापतिः परिश्रान्ता पर्वतस्तनमण्डला ।। ६. ९३ ।।

पद्मप्रिया पद्मसंस्था पद्माक्षी पद्मसंभवा ।
पद्मपत्रा पद्मपदा पद्मिनी प्रियभाषिणी ।। ६. ९४ ।।

पशुपाशविनिर्मुक्ता पुरन्ध्री पुरवासिनी ।
पुष्कला पुरुषा पर्वा पारिजातसुमप्रिया ।। ६. ९५ ।।

पतिव्रता पवित्रांगी पुष्पहासपरायणा ।
प्रज्ञावतीसुता पौत्री पुत्रपूज्या पयस्विनी ।। ६. ९६ ।।

புராணீ பௌருஷீ புண்யா புண்டரீகநிபேக்ஷணா |
பாதாலதல-நிர்மக்ஞா ப்ரீதா ப்ரீதிவிவர்த்தினீ || 6.92 ||

பாவனீ பாதஸஹிதா பேசலா பவநாசினீ |
ப்ரஜாபதி: பரிச்ராந்தா பர்வதஸ்தன-மண்டலா || 6.93 ||

பத்மப்ரியா பத்மஸம்ஸ்த்தா பத்மாக்ஷீ பத்மஸம்ப்பவா |
பத்மபத்ரா பத்மபதா பத்மினீ ப்ரியபாஷிணீ || 6.94 ||

பசுபாசவிநிர்முக்தா புரந்த்ரீ புரவாஸினீ |
புஷ்கலா புருஷா பர்வா பாரிஜாதஸுமப்ரியா || 6.95 ||

பதிவ்ரதா பவித்ராங்கீ புஷ்பஹாஸபராயணா |
ப்ரஜ்ஞாவதீஸுதா பௌத்ரீ புத்ரபூஜ்யா பயஸ்வினீ
|| 6.96 ||

पट्टिपाशधरा पंक्तिः पितृलोकप्रदायिनी ।
पुराणी पुण्यशीला च प्रणतार्तिविनाशिनी ॥ ६. ९७ ॥

प्रद्युम्नजननी पुष्टा पितामहपरिग्रहा ।
पुण्डरीकपुरावासा पुण्डरीकसमानना ॥ ६. ९८ ॥

पृथुजंघा पृथुभुजा पृथुपादा पृथूदरी ।
प्रवालशोभा पिंगाक्षी पीतवासाः प्रचापला ॥ ६. ९९ ॥

प्रसवा पुष्टिदा पुण्या प्रतिष्ठा प्रणवागतिः ।
पंचवर्णा पंचवाणी पंचिका पंजरस्थिता ॥ ६. १०० ॥

परमाया परज्योतिः परप्रीतिः परागतिः ।
पराकष्ठा परेशानी पाविनी पावकद्युतिः ॥ ६. १०१ ॥

பட்டிபாசதரா பங்க்தி: பித்ருலோகப்ரதாயினீ |
புராணீ புண்யசீலா ச ப்ரணதார்த்திவிநாசினீ || 6.97 ||

ப்ரத்யும்னஜனனீ புஷ்டா பிதாமஹபரிக்ரஹா |
புண்டரீகபுராவாஸா புண்டரீகஸமானனு || 6.98 ||

ப்ருதுஜங்கா ப்ருதுபுஜா ப்ருதுபாதா ப்ருதூதரீ |
ப்ரவாலசோபா பிங்காக்ஷீ பீதவாஸா: ப்ரசாபலா || 6.99 ||

ப்ரஸவா புஷ்டிதா புண்யா ப்ரதிஷ்ட்டா ப்ரணவாகதி:i |
பஞ்சவர்ணு பஞ்சவாணீ பஞ்சிகா பஞ்ஜரஸ்த்திதா || 6.100 ||

பரமாயா பரஜ்யோதி: பரப்ரீதி: பராகதி: |
ப்ராகாஷ்ட்டா பரேசானீ பாவினீ பாவகத்யுதி: || 6.101 ||

पुण्यभद्रा परिच्छेद्या पुष्पहासा पृथूदरी।
पीतांगी पीतवसना पीतशय्या पिशाचिनी ॥ ६. १०२ ॥

पीतक्रिया पिशाचघ्नी पाटलाक्षी पटुक्रिया।
पंचभक्षप्रियाचारा पूतना-प्राणघातिनी ॥ ६. १०३ ।

पुन्नागवनमध्यस्था पुण्यतीर्थनिषेविता।
पंचांगी च पराशक्तिः परमाह्लादकारिणी ॥ ६. १०४ ॥

पुष्पकाण्डस्थिता पूषा पोषिताखिलविष्टपा।
पानप्रिया पंचशिखा पन्नगोपरिशायिनी ॥ ६. १०५ ॥

पंचमात्रात्मिका पृथ्वी पथिका पृथुदोहिनी।
पुराणन्यायमीमांसा पाटली पुष्पगन्धिनी ॥ ६. १०६ ॥

புண்யபத்ரா பரிச்சேத்யா புஷ்பஹாஸா ப்ருதூதரீ |
பீதாங்கி பீதவஸனா பீதசய்யா பிசாசினீ || 6.102 ||

பீதக்ரியா பிசாசக்னீ பாடலாக்ஷீ படுக்ரியா |
பஞ்சபக்ஷப்ரியாசாரா பூதனாப்ராணகாதினீ || 6.103 ||

புந்நாகவனமத்த்யஸ்த்தா புண்யதீர்த்தநிஷேவிதா |
பஞ்சாங்கி ச பராசக்தி: பரமாஹ்லாதகாரிணீ || 6.104 ||

புஷ்பகாண்டஸ்த்திதா பூஷா போஷிதாகிலவிஷ்டபா |
பானப்பிரியா பஞ்சசிகா பந்நகோபரிசாயினீ || 6.105 ||

பஞ்சமாத்ராத்மிகா ப்ருத்வீ பதிகா ப்ருதுதோஹினீ |
புராணந்யாயமீமாம்ஸா பாடலீபுஷ்பகந்தினீ || 6.106 ||

पुण्यप्रजा पारदात्री परमार्गैकगोचरा।
प्रवालशोभा पूर्णाशा प्रणवा पल्लवोदरी ॥ ६. १०७ ॥

फलिनी फलदा फल्गुः फूत्कारी फलकाकृतिः।
फणीन्द्रभोगशयना फणिमण्डलमण्डिता ॥ ६. १०८ ॥

बालबाला बहुमता नालातपनिभांशुका।
बलभद्रप्रिया वन्द्या बडवा बुद्धिसंस्तुता ॥ ६. १०९ ॥

बन्दीदेवी बिलवती बडिशघ्नी बलिप्रिया।
बान्धवी बाधिता बुद्धि-र्बन्धूककुसुमप्रिया ॥ ६. ११० ॥

बालभानुप्रभाकारा ब्राह्मी ब्राह्मणदेवता।
बृहस्पतिस्तुता बृन्दा बृन्दावनविहारिणी ॥ ६. १११ ॥

புண்யப்ரஜா பாரதாத்ரீ பரமார்க்கைககோசரா |
ப்ரவாலசோபா பூர்ணாசா ப்ரணவா பல்லவோதரீ || 6.107 ||

பலினீ பலதா பல்கு: பூத்காரீ பலகாக்ருதி: |
பணீந்த்ரபோகசயனா பணிமண்டலமண்டிதா || 6.108 ||

பாலபாலா பஹுமதா பாலாதபநிபாம்சுகா |
பலபத்ரப்ரியா வந்த்யா படவா புத்திஸம்ஸ்துதா || 6.109 ||

பந்தீதேவீ பிலவதீ படிசாக்னீ பலிப்ரியா |
பாந்தவீ பாதிதா புத்திர்-பந்தூககுஸுமப்ரியா || 6.110 |

பாலபானுப்ரபாகாரா ப்ராஹ்மீ ப்ராஹ்மணதேவதா |
ப்ருஹஸ்பதிஸ்துதா ப்ருந்தா ப்ருந்தாவனவிஹாரிணீ
|| 6.111 ||

बालाकिनी बिलाहारा बिलवासा बहूदका।
बहुनेत्रा बहुपदा बहुकर्णाऽवतंसिका ॥ ६. ११२ ॥

बहुबाहुयुता बीजरूपिणी बहुरूपिणी।
बिन्दुनादकलातीता बिन्दुनादस्वरूपिणी ॥ ६. ११३ ॥

बद्धगोदांगुलित्राणा बदर्याश्रमवासिनी।
बृन्दारका बृहत्स्कन्धा बृहती बाणपातिनी ॥ ६. ११४ ॥

बृन्दाध्यक्षा बहुनुता बनिता बहुविक्रमा।
बद्धपद्मासनासीना बिल्वपत्रतलस्थिता ॥ ६. ११५ ॥

बोधिद्रुमनिजावासा बडिस्था बिन्दुदर्पणा।
बाला बाणासनवती बडवानलवेगिनी ॥ ६. ११६ ॥

பாலாகினீ பிலாஹாரா பிலவாஸா பஹூதகா |
பஹுநேத்ரா பஹுபதா பஹுகர்ணாவதம்ஸிகா || 6.112 ||

பஹுபாஹுயுதா பீஜரூபிணீ பஹுரூபிணீ |
பிந்துநாதகலாதீதா பிந்துநாதஸ்வரூபிணீ || 6.113 ||

பத்தகோதாங்குலித்ராணா பதர்யாச்ரமவாஸினீ |
ப்ருந்தாரகா ப்ருஹத்ஸ்கந்த்தா ப்ருஹதீ பாணபாதினீ || 6.114 ||

ப்ருந்தாத்யக்ஷா பஹுநுதா பனிதா பஹுவிக்ரமா |
பத்தபத்மாஸனாஸீனா பில்வபத்ரதலஸ்த்திதா || 6.115 ||

போதித்ரும-நிஜாவாஸா படிஸ்த்தா பிந்துதர்ப்பணா |
பாலா பாணாஸனவதீ படவானலவேகினீ || 6.116 ||

ब्रह्माण्डबहिरन्तःस्था ब्रह्मकंकणसूत्रिणी ।
भवानी भीषणवती भाविनी भयहारिणी ॥६. ११७ ॥

भद्रकाली भुजंगाक्षी भारती भारताशया ।
भैरवी भीषणाकारा भूतिदा भूतिमालिनी ॥ ६. ११८ ॥

भामिनी भोगनिरता भद्रदा भूरिविक्रमा ।
भूतावासा भृगुलता भार्गवी भूसुरार्चिता ॥ ६. ११९ ॥

भागीरथी भोगवती भवनस्था भिषग्वरा ।
भामिनी भोगिनी भाषा भवानी भूरिदक्षिणा ॥ ६. १२० ॥

भर्गात्मिका भीमवती भवबन्धविमोचिनी ।
भजनीया भूतधात्री रंजिता भुवनेश्वरी ॥ ६. १२१ ॥

ப்ரஹ்மாண்டபஹிரந்த:ஸ்த்தா ப்ரஹ்மகங்கணஸூத்ரிணீ |
பவானீ பீஷணவதி பாவினீ பயஹாரிணீ || 6.117 ||

பத்ரகாளீ புஜங்காக்ஷீ பாரதீ பாரதாசயா |
பைரவீ பீஷணாகாரா பூதிதா பூதிமாலினீ || 6.118 ||

பாமினீ போகநிரதா பத்ரதா பூரிவிக்ரமா |
பூதாவாஸா ப்ருகுலதா பார்க்கவீ பூஸுரார்ச்சிதா || 6.119 ||

பாகிரதி போகவதி பவனஸ்த்தா பிஷக்வரா |
பாமினீ போகினீ பாஷா பவானீ பூரிதக்ஷிணா || 6.120 ||

பர்க்காத்மிகா பீமவதி பவபந்தவிமோசினீ |
பஜனீயா பூததாத்ரீ ரஞ்ஜிதா புவனேச்வரீ || 6.121 ||

भुजंगवलया भीमा भेरुण्डा भागधेयिनी ।
माता माया मधुमती मधुजिह्वा मधुप्रिया ॥ ६. १२२ ॥

महादेवी महाभागा मालिनी मीनलोचना ।
मायातीता मधुमती मधुमांसा मधुद्रवा ॥ ६. १२३ ॥

मानवी मधुसम्भूता मिथिलापुरवासिनी ।
मधुकैंटभसंहर्त्री मेदिनी मेघमालिनी ॥ ६. १२४ ॥

मन्दोदरी महामाया मैथिली मसृणप्रिया ।
महालक्ष्मी-र्महाकाली महाकन्या महेश्वरी ॥ ६. १२५ ॥

माहेन्द्री मेरुतनया मन्दारकुसुमार्चिता ।
मंजुमंजीरचरणा मोक्षदा मंजुभाषिणी ॥ ६. १२६ ॥

புஜங்கவலயா பீமா பேருண்டா பாகதேயினீ |
மாதா மாயா மதுமதீ மதுஜிஹ்வா மதுப்ரியா || 6.122 ||

மஹாதேவீ மஹாபாகா மாலினீ மீனலோசனு |
மாயாதீதா மதுமதி மதுமாம்ஸா மதுத்ரவா || 6.123 ||

மானவீ மதுஸம்பூதா மிதிலாபுரவாஸினீ |
மதுகைடபஸம்ஹர்த்ரீ மேதினீ மேகமாலினீ || 6.124 ||

மந்தோதரீ மஹாமாயா மைதிலீ மஸ்ருணப்ரியா |
மஹாலக்ஷ்மீர்-மஹாகாளீ மஹாகன்யா மஹேச்வரீ
|| 6.125 ||

மாஹேந்த்ரீ மேருதனயா மந்தாரகுஸுமார்ச்சிதா |
மஞ்ஜுமஞ்ஜீரசரணு மோக்ஷதா மஞ்ஜு பாஷிணீ || 6.126 ||

मधुरद्राविणी मुद्रा मलया मलयान्विता ।
मेधा मरकतश्यामा मागधी मेनकात्मजा ।। ६. १२७ ।।

महामारी महावीरा महाश्यामा मनुस्तुता ।
मातृका मिहिराभासा मुकुन्दपदविक्रमा ।। ६. १२८ ।।

मूलाधारस्थिता मुग्धा मणिपूरकवासिनी ।
मृगाक्षी महिषाऽऽरूढा महिषासुरमर्दिनी ।। ६. १२९ ।।

योगासना योगगम्या योगा यौवनकाश्रया ।
यौवनी युद्धमध्यस्था यमुना युगधारिणी ।। ६. १३० ।।

यक्षिणी योगयुक्ता च यक्षराजप्रसूतिनी ।
यात्रा यानविधानज्ञा यदुवंशसमुद्भवा ।। ६. १३१ ।।

மதுரத்ராவிணீ முத்ரா மலயா மலயான்விதா |
மேதா மரகதச்யாமா மாகதீ மேனகாத்மஜா || 6.127 ||

மஹாமாரீ மஹாவீரா மஹாச்யாமா மனுஸ்துதா |
மாத்ருகா மிஹிராபாஸா முகுந்தபதவிக்ரமா || 6.128 ||

மூலாதாரஸ்திதா முக்தா மணிபூரகவாஸினீ |
ம்ருகாக்ஷீ மஹிஷாSSரூடா மஹிஷாஸுரமர்த்தினீ
|| 6.129 ||

யோகாஸனா யோககம்யா யோகா யௌவனகாச்ரயா |
யௌவனீ யுத்தமத்த்யஸ்த்தா யமுனா யுகதாரிணீ || 6.130 ||

யக்ஷிணீ யோகயுக்தா ச யக்ஷராஜப்ரஸூதினீ |
யாத்ரா யானவிதானஜ்ஞா யதுவம்சஸமுத்பவா || 6.131 ||

यकारादि हकारान्ता याजुषी यज्ञरूपिणी।
यामिनी योगनिरता यातुधानभयंकरी ॥ ६. १३२ ॥

रुक्मिणी रमणी रामा रेवती रेणुका रतिः।
रौद्री रौद्रप्रियाकारा राममाता रतिप्रिया ॥ ६. १३३ ॥

रोहिणी राज्यदा रेवा रमा राजीवलोचना।
राकेशी रूपसम्पन्ना रत्नसिंहासनस्थिता ॥ ६. १३४ ॥

रक्तमाल्याम्बरधरा रक्तगन्धानुलेपना।
राजहंससमारूढा रम्भा रक्तबलिप्रिया ॥ ६. १३५ ॥

रमणीययुगाधारा राजिताखिलभूतला।
रुरुचर्मपरीधाना रथिनी रत्नमालिका ॥ ६. १३६ ॥

யகாராதி ஹகாராந்தா யாஜுஷீ யஜ்ஞரூபிணீ |
யாமினீ யோகநிரதா யாதுதான-பயங்கரீ ‖ 6.132 ‖

ருக்மிணீ ரமணீ ராமா ரேவதீ ரேணுகா ரதி: |
ரௌத்ரீ ரௌத்ரப்ரியாகாரா ராமமாதா ரதிப்ரியா ‖ 6.133 ‖

ரோஹிணீ ராஜ்யதா ரேவா ரமா ராஜீவலோசனா |
ராகேசீ ரூபஸம்பன்னா ரத்னஸிம்ஹாஸனஸ்த்திதா ‖ 6.134 ‖

ரக்தமால்யாம்பரதரா ரக்தகந்தானுலேபனா |
ராஜஹம்ஸ-ஸமாரூடா ரம்ப்பா ரக்தபலிப்ரியா ‖ 6.135 ‖

ரமணீயயுகாதாரா ராஜிதாகிலபூதலா |
ருருசர்மபரீதானா ரதினீ ரத்னமாலிகா ‖ 6.136 ‖

रोगेशी रोगशमनी राविणी रोमहर्षिणी ।
रामचन्द्रपदाक्रान्ता रावणच्छेदकारिणी ।। ६. १३७ ।।

रत्नवस्त्रपरिच्छिन्ना रथस्था रुक्मभूषणा ।
लज्जाधिदेवता लोला ललिता लिंगधारिणो ।। ६. १३८ ।।

लक्ष्मीर्लोला लुप्तविषा लोकिनी लोकविश्रुता ।
लज्जा लम्बोदरी-देवी ललना लोकधारिणी ।। ६. १३९ ।।

वरदा वन्दिता विद्या वैष्णवी विमलाकृतिः ।
वाराही विरजा वर्षा वरलक्ष्मी-विलासिनी ।। ६. १४० ।।

विनता व्योममध्यस्था वारिजासनसंस्थिता ।
वारिणी वेणुसम्भूता वीतिहोत्रा विरूपिणी ।। ६. १४१ ।।

ரோகேசீ ரோகசமனீ ராவிணீ ரோமஹர்ஷிணீ |
ராமசந்த்ரபதாக்ராந்தா ராவணச்சேதகாரிணீ || 6.137 ||

ரத்னவஸ்த்ரபரிச்சின்ன ரதஸ்த்தா ருக்மபூஷண |
லஜ்ஜாதிதேவதா லோலா லலிதா லிங்கதாரிணீ || 6.138 ||

லக்ஷ்மீர் லோலா லுப்தவிஷா லோகினீ லோகவிச்ருதா |
லஜ்ஜா லம்போதரீ-தேவீ லலன லோகதாரிணீ || 6.139 ||

வரதா வந்திதா வித்யா வைஷ்ணவீ விமலாக்ருதி: |
வாராஹீ விரஜா வர்ஷா வரலக்ஷ்மீர்-விலாஸினீ || 6.140 ||

விநதா வ்யோமமத்த்யஸ்த்தா வாரிஜாஸனஸம்ஸ்த்திதா |
வாரிணீ வேணுஸம்ப்பூதா வீதிஹோத்ரா விரூபிணீ
|| 6.141 ||

वायुमण्डलमध्यस्था विष्णुरूपा विधिप्रिया।
विष्णुपत्नी विष्णुमती विशालाक्षी वसुन्धरा ॥ ६. १४२ ॥

वामदेवप्रिया वेला वज्रिणी वसुदोहिनी।
वेदाक्षरपरीतांगी वाजपेयफलप्रदा ॥ ६. १४३ ॥

वासवी वामजननी वैकुण्ठनिलया वरा।
व्यासप्रिया वर्मधरा वाल्मीकिपरिसेविता ॥ ६. १४४ ॥

शाकम्भरी शिवा शान्ता शारदा शरणागतिः।
शातोदरी शुभाचारा शुम्भासुरविमर्दिनी ॥ ६. १४५ ॥

शोभावती शिवाकारा शंकरार्ध-शरीरिणी।
शोणा शुभाशया शुभ्रा शिरः सन्धानकारिणी ॥ ६. १४६ ॥

வாயுமண்டலமத்த்யஸ்த்தா விஷ்ணுரூபா விதிப்ரியா |
விஷ்ணுபத்னீ விஷ்ணுமதீ விசாலாக்ஷீ வஸுந்த்தரா
|| 6.142 ||

வாமதேவப்ரியா வேலா வஜ்ரிணீ வஸுதோஹினீ |
வேதாக்ஷரபரீதாங்கீ வாஜபேயபலப்ரதா || 6.143 ||

வாஸவீ வாமஜனனீ வைகுண்ட்டநிலயா வரா |
வ்யாஸப்ரியா வர்மதரா வால்மீகிபரிஸேவிதா || 6.144 ||

சாகம்பரீ சிவா சாந்தா சாரதா சரணகதி: |
சாதோதரீ சுபாசாரா சும்ப்பாஸுரவிமர்த்தினீ || 6.145 ||

சோபாவதீ சிவாகாரா சங்கரார்த்தசரீரிணீ |
சோணு சுபாசயா சுப்ரா சிர:ஸந்தானகாரிணீ || 6.146 ||

शरावती शरानन्दा शरज्ज्योत्स्ना शुभानना ।
शरभा शूलिनी शुद्धा शबरी शुकवाहना ॥ ६. १४७ ॥

श्रीमती श्रीधरानन्दा श्रवणानन्ददायिनी ।
शर्वाणी शर्वरी वन्द्या षड्भाषा षड्ऋतुप्रिया ॥ ६. १४८ ॥

षडाधारस्थिता देवी षण्मुखप्रियकारिणी ।
षडंगरूपसुमतिः सुरासुरनमस्कृता ॥ ६. १४९ ॥

सरस्वती सदाधारा सर्वमंगलकारिणी ।
सामगानप्रिया सूक्ष्मा सावित्री सामसम्भवा ॥ ६. १५० ॥

सर्वावासा सदानन्दा सुस्तनी सागराम्बरा ।
सर्वैश्वर्यप्रिया सिद्धिः साधुबन्धुपराक्रमा ॥ ६. १५१ ॥

சராவதீ சரானந்தா சரஜ்ஜ்யோத்ஸ்னா சுபானனா |
சரபா சூலினீ சுத்தா சபரீ சுகவாஹனா ‖ 6.147 ‖

ஶ்ரீமதீ ஶ்ரீதரானந்தா ச்ரவணானந்த-தாயினீ |
சர்வாணீ சர்வரீ வந்த்யா ஷட்பாஷா ஷட்ருதுப்ரியா
‖ 6.148 ‖

ஷடாதாரஸ்த்திதா தேவீ ஷண்முகப்ரியகாரிணீ |
ஷடங்கரூபஸுமதி: ஸுராஸுரநமஸ்க்ருதா ‖ 6.149 ‖

ஸரஸ்வதீ ஸதாதாரா ஸர்வமங்களகாரிணீ |
ஸாமகானப்ரியா ஸூக்ஷ்மா ஸாவித்ரீ ஸாமஸம்ப்பவா
‖ 6.150 ‖

ஸர்வாவாஸா ஸதானந்தா ஸுஸ்தனீ ஸாகராம்பரா |
ஸர்வைச்வர்யப்ரியா ஸித்தி: ஸாதுபந்துபராக்ரமா
‖ 6.151 =

सप्तर्षिमण्डलगता सोममण्डलवासिनी ।
सर्वज्ञा सान्द्रकरुणा समानाधिकवर्जिता ॥ ६. १५२ ॥

सर्वोत्तुंगा संगहीना सद्गुणा सकलेष्टदा ।
सरघा सूर्यतनया सुकेशी सोमसंहतिः ॥ ६. १५३ ॥

हिरण्यवर्णा हरिणी ह्रींकारी हंसवाहिनी ।
क्षौमवस्त्रपरीतांगी क्षीराब्धितनया क्षमा ॥ ६. १५४ ॥

गायत्री चैव सावित्री पार्वती च सरस्वती ।
वेदगर्भा वरारोहा श्रीगायत्री पराम्बिका ॥ ६. १५५ ॥

इति साहस्रकं नाम्नां गायत्र्याश्चैव नारद ।
पुण्यदं सर्वपापघ्नं महासम्पत्तिदायकम् ॥ ६. १५६ ॥

ஸப்தர்ஷிமண்டலகதா ஸோமமண்டலவாஸினீ |
ஸர்வஜ்ஞா ஸாந்த்ரகருணா ஸமானாதிகவர்ஜிதா || 6.152 ||

ஸர்வோத்துங்கா ஸங்கஹீனா ஸகுணா ஸகலேஷ்டதா |
ஸரகா ஸூர்யதனயா ஸுகேசீ ஸோமஸம்ஹதி: || 6.153 ||

ஹிரண்யவர்ணா ஹரிணீ ஹ்ரீங்காரீ ஹம்ஸவாஹினீ |
க்ஷௌமவஸ்த்ரபரீதாங்கீ க்ஷீராப்திதநயா க்ஷமா || 6.154 ||

காயத்ரீ சைவ ஸாவித்ரீ பார்வதீ ச ஸரஸ்வதீ |
வேதகர்ப்பா வராரோஹா ஶ்ரீகாயத்ரீ பராம்பிகா || 6.155 ||

இதி ஸாஹஸ்ரகம் நாம்னாம் காயத்ர்யாச்சைவ நாரத |
புண்யதம் ஸர்வபாபக்னம் மஹாஸம்பத்தி-தாயகம்
|| 6.156 ||

एवं नामानि गायत्र्यास्तोषोत्यत्तिकराणि हि।
अष्टम्यां च विशेषेण पठितव्यं द्विजैः सह ॥ ६. १५७ ॥

जपं कृत्वा होमपूजा ध्यानं कृत्वा विशेषतः।
यस्मै कस्मै न दातव्यं गायत्र्यास्तु विशेषतः ॥ ६. १५८ ॥

सुभक्ताय सुशिष्याय वक्तव्यं भूसुराय वै।
भ्रष्टेभ्यः साधकेभ्यश्च बान्धवेभ्यो न दर्शयेत् ॥ ६. १५९ ॥

यद् गृहे लिखितं शास्त्रं भयं तस्य न कस्यचित्।
चंचलापि स्थिरा भूत्वा कमला तत्र तिष्ठति ॥ ६. १६० ॥

इदं रहस्यं परमं गुह्याद्गुह्यतरं महत्।
पुण्यप्रदं मनुष्याणां दरिद्राणां निधिप्रदम् ॥ ६. १६१ ॥

ஏவம் நாமானி காயத்ர்யாஸ்-தோஷோத்யத்திகராணி ஹி |
அஷ்டம்யாஞ்ச விசேஷேண படிதவ்யம் த்விஜை:ஸஹ |
|| 6.157 ||

ஜபம் க்ருத்வா ஹோமபூஜாத்யானம் க்ருத்வா விசேஷத: |
யஸ்மை கஸ்மை ந தாதவ்யம் காயத்ர்யாஸ்து விசேஷத:
|| 6.158 ||

ஸுபக்தாய ஸுசிஷ்யாய வக்தவ்யம் பூஸுராய வை |
ப்ரஷ்டேப்ப்ய: ஸாதகேப்ப்யச்ச பாந்தவேப்ப்யோ
ந தர்சயேத் || 6.159 ||

யத்க்ருஹே லிகிதம் சாஸ்த்ரம் பயம் தஸ்ய ந கஸ்யசித் |
சஞ்சலாபி ஸ்த்திரா பூத்வா கமலா தத்ர திஷ்ட்டதி || 6.160 ||

இதம் ரஹஸ்யம் பரமம் குஹ்யாத் குஹ்யதரம் மஹத் |
புண்யப்ரதம் மனுஷ்யாணும் தரித்ராணும் நிதிப்ரதம்
|| 6.161 ||

मोक्षप्रदं मुमुक्षूणां कामिनां सर्वकामदम्।
रोगाद्वै मुच्यते रोगी बद्धो मुच्येत बन्धनात् ॥ ६. १६२ ॥

ब्रह्महत्या सुरापानसुवर्णस्तेयिनो नराः।
गुरुतल्पगतो वाऽपि पातकान्मुच्यते सकृत् ॥ ६. १६३ ॥

असत्प्रतिग्रहाच्चैवऽभक्ष्यभक्षाद्विशेषतः।
पाखण्डानृतमुख्येभ्यः पठनादेव मुच्यते ॥ ६. १६४ ॥

इदं रहस्यममलं मयोक्तं पद्मजोद्भव।
ब्रह्मसायुज्यदं नृणां सत्यं सत्यं न संशयः ॥ ६. १६५ ॥

॥ गायत्री सहस्रनामस्तोत्रं संपूर्णम् ॥

॥ इति श्रीदेवीभागवते द्वादशस्कन्धे षष्ठोध्यायः ॥

மோக்ஷப்ரதம் முமுக்ஷூணும் காமிஞம் ஸர்வகாமதம் |
ரோகாத்வை முச்யதே ரோகீ பத்தோ முச்யேத பந்த்தனுத்
|| 6.162 ||

ப்ரஹ்மஹத்யா ஸுராபான ஸுவர்ணஸ்தேயினே நரா: |
குருதல்பகதோ வாऽபி பாதகான்முச்யதே ஸக்ருத் || 6.163 ||

அஸத்ப்ரதிக்ரஹாச்சைவऽபக்ஷ்யபக்ஷாத் விசேஷத: |
பாகண்டான்ருதமுக்க்யேப்ப்ய: படனுதேவ முச்யதே
|| 6.164 ||

இதம் ரஹஸ்யமமலம் மயோக்தம் பத்மஜோத்பவ |
ப்ரஹ்ம-ஸாயுஜ்யதம் ந்ருணும் ஸத்யம் ஸத்யம் ந ஸம்சய:
|| 6.165 ||

காயத்ரீ ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம்
ஸம்பூர்ணம்.

இதி ஸ்ரீதேவீபாகவதே த்வாதசஸ்கந்த்தே
ஷஷ்ட்டோத்த்யாய:

॥मन्त्रदीक्षाविधानम् ॥ ५३ ॥

नारद उवाच —

श्रुतं सहस्रनामाख्यं श्रीगायत्र्याः फलप्रदम् ।
स्तोत्रं महोन्नतिकरं महाभाग्यकरं परम् ॥ ७. १ ॥

अधुना श्रोतुमिच्छामि दीक्षालक्षणमुत्तमम् ।
विना येन न सिध्येत देवी मन्त्रेऽधिकारिता ॥ ७. २ ॥

ब्राह्मणानां क्षत्रियाणां विशां स्त्रीणां तथैव च ।
सामान्यविधिना सर्वं विस्तरेण वद प्रभो ॥ ७. ३ ॥

नारायण उवाच —

शृणु दीक्षां प्रवक्ष्यामि शिष्याणां भावितात्मनाम् ।
देवाग्निगुरुपूजादा-वधिकारो यथा भवेत् ॥ ७. ४ ॥

53. மந்த்ரதீக்ஷாவிதானம்

நாரதர் கூறியது—

7.1. ஸ்ரீகாயத்ரீதேவியின் அருள் பிரஸாதத்தை அளிப்பதும் மேன்மையையும் மஹாபாக்கியத்தையும் அளிப்பது மான சிறந்த ஸஹஸ்ரநாம ஸ்தோத்திரம் கேட்கப்பட்டது.

7.2. இப்பொழுது எது இல்லாவிட்டால் தேவீமந்திரத்தில் அதிகாரம் சித்திக்காதோ அந்த உத்தமமான தீக்ஷா லக்ஷணத்தைக் கேட்க விரும்புகிறேன்.

7.3. பிரபுவே! பிராம்மணர்களுக்கும் க்ஷத்திரியர்களுக்கும் வைசியர்களுக்கும் ஸ்திரீகளுக்கும் பொதுவான முறைப்படி அனைத்தையும் விரிவாய்க் கூறியருளுதல் வேண்டும்.

நாராயணரிஷி கூறியது—

7.4. சிஷ்யர்களாய் நாடுவோர்க்கு தெய்வம், குரு, அக்னி முதலிய பூஜைகளில் எங்ஙனம் அதிகாரம் ஏற்படுமோ அந்த தீக்ஷையைக் கூறுகிறேன், கேட்பாயாக.

दिव्यं ज्ञानं हि या दद्यात्कुर्यात्पापक्षयं तु या।
सैव दीक्षेति संप्रोक्ता वेदतन्त्रविशारदैः ॥ ७. ५ ॥

अवश्यं सा तु कर्तव्या यतो बहुफला मता।
गुरुशिष्यावुभावत्राप्यतिशुद्धावपेक्षितौ ॥ ७. ६ ॥

गुरुस्तु विधिवत्प्रातः कृत्यं सर्वं विधाय च।
स्नानसन्ध्यादिकं सर्वं यथाविधि विधाय च ॥ ७. ७ ॥

आसनं पूजयित्वातु तस्मिन् ध्यायेत्पराम्बिकाम्।
कल्पोक्तविधिना मन्त्री देवमन्त्रस्य देवताम् ॥
मानसैरुपचारैश्च पूजयेत्तां यथाविधि ॥ ७. ३९ ॥

7.5. எது திவ்யஞானத்தைத் தருமோ எது பாப க்ஷயத்தைச் செய்யுமோ அதுவே வேதமும் தந்திர சாஸ்த்திரமும் அறிந்த விற்பன்னர்களால் தீக்ஷை என்று கூறப்படுகிறது.

7.6 எதனுல் மிகுதியான பயன் ஏற்படுகிறதென்று கருதப்படுகிறதோ, அந்த தீக்ஷையானது அவசியம் செய்யப்பட வேண்டும். இதற்கு குருவும் சிஷ்யனுமாகிய இருவருமே மிகவும் சுத்தமாயிருக்க வேண்டும்.

7.7–39. குருவானவர் முறைப்படி காலேயில் செய்ய வேண்டிய கருமங்களேயெல்லாம் முடித்து ஸ்நானம் ஸந்தியா வந்தனம் முதலிய அனேத்தையும் விதிப்படி செய்து ஆஸனத்தைப் பூஜித்து அதிலமர்ந்து பராம்பிகையை தியானம் செய்ய வேண்டும். கல்பத்தில் கூறியுள்ள விதிப்படி மந்திரத்தையுணர்ந்த குருவானவர் மந்திரத்திற்குரிய தேவதையை மானஸ உபசாரங்களால் முறைப்படி பூஜிக்க வேண்டும்.

ततः स्वपुरतो वेद्यां सर्वतो भद्रमण्डलम् ।
संलिख्य कर्णिकामध्यं पूरयेच्छालितण्डुलैः ॥ ७. ५७ ॥

आस्तीर्य दर्भांस्तत्रैव न्यसेत्कूर्चं सलक्षणम् ।
आधारशक्तिमारभ्य पीठमन्वन्तमर्चयेत् ॥ ७. ५८ ॥

निर्व्रणं कुम्भमादायऽस्त्राद्भिः क्षालितान्तरम् ।
तन्तुना वेष्टयेत्तन्तु त्रिगुणेनारुणेन च ॥ ७. ५९ ॥

नवरत्नोदरं कूर्चयुतं गन्धादिपूजितम् ।
स्थापयेत्तत्र पीठे तु तारमन्त्रेण देशिकः ॥ ७. ६० ॥

7.45–58. பிறகு தனக்கு முன்பாக மேடை அமைத்து அதில் ஸர்வதோபத்ர மண்டலத்தை வரைந்து கர்ணிகைகளின் மத்தியில் அரிசியைப் பரப்பி அதன் மேல் தர்ப்பைகளைப் பரப்பி லக்ஷணமான கூர்ச்சத்தை வைக்க வேண்டும். ஆதார சக்தியில் ஆரம்பித்து பீடத்தை முடிவு வரை அர்ச்சிக்கவேண்டும்.

7.59. பழுது படாத ஒரு குடத்தைக் கொணர்ந்து அதை உள்ளே அஸ்திர மந்திரத்தாலும் ஜலத்தாலும் சுத்தம் செய்து அதை மூன்றிழைச் சிவப்பு நூலால் சுற்ற வேண்டும்.

7.60. அதனுள் நவரத்தினங்களைச் சேர்த்து கந்தம் முதலியவற்றுல் அலங்கரித்துக் கூர்ச்சத்துடன் பீடத்தில் தேசிகன் தாரமந்திரத்தால் ஸ்தாபிக்க வேண்டும்.

मूलमन्त्रं च संजप्य पूरयेद्देवताधिया।
अश्वत्थ-पनसाम्राणां कोमलै-र्नवपल्लवैः।
छादयेत्कुम्भवदनं चषकं सफलाक्षतम् ॥ ७. ६२ ॥

संस्थापयेत मतिमान्वस्त्रयुग्मेन वेष्टयेत्।
प्राणस्थापन-मन्त्रेण प्राणस्थापनमाचरेत् ॥ ७. ६३ ॥

आवाहनादिमुद्राभि-र्मोदयेद्देवतां पराम्।
ध्यायेत्तां परमेशानीं कल्पोक्तेन प्रकारतः ॥ ७. ६४ ॥

ततः कुर्यादंगपूजां कल्पोक्तावरणानि च।
सांगां देवी-मथाभ्यर्च्य वैश्वदेवं ततश्चरेत् ॥ ७. ७२ ॥

दक्षिणे स्थण्डिलं कृत्वा तत्राधाय हुताशनम्।
मूर्तिस्थां देवतां तत्रावाह्य संपूज्य च क्रमात् ॥ ७. ७३ ॥

7.62–63. மூல மந்திரத்தை ஜபித்துக் கொண்டு தேவதாபுத்தியுடன் அதை ஜலத்தால் நிரப்ப வேண்டும். அரசு, பலா, மா இவற்றின் மெதுவான புதிய இலைகளுடன் கூடிய கொத்துக்களால் குடத்தின் வாயை மூடி பழம் அக்ஷதையுடன் கிண்ணத்தை வைத்து புத்திமான் இரண்டு வஸ்திரங்களால் அதைச்சுற்ற வேண்டும். பிராணப் பிரதிஷ்ட்டா மந்திரத்தால் பிராணப்ரதிஷ்ட்டை செய்ய வேண்டும்.

7.64. பரதேவதையை ஆவாஹனுதி முத்திரை களால் மகிழ்விக்க வேண்டும். கல்பத்தில் கூறியுள்ள முறைப்படி பரமேசுவரியை தியானம் செய்ய வேண்டும்.

7.72. பிறகு அங்க பூஜையும் ஆவரண பூஜையும் செய்து வைச்வதேவம் செய்ய வேண்டும்.

7.73. வலதுபுறம் மேடையமைத்து அதில் அக்னியைப் பிரதிஷ்ட்டை செய்து அதில் தேவதையின் மூர்த்தியை ஆவாஹனம் செய்து முறைப்படி பூஜித்து;

तारव्याहृतिभिर्हुत्वा मूलमन्त्रेण वै ततः।
पंचविंशति वारं तु पायसेन ससर्पिषा ॥ ७. ७४ ॥

हुनेत्पश्चाद्व्याहृतिभिः पुनश्च जुहुयान्मुने।
गन्धाद्यै रर्चयित्वा तु देवीं पीठे तु योजयेत् ॥ ७. ७५ ॥

बलिं विसृज्य हविषा परितो विकिरेद् बलिम्।
देवतायाः पार्षदेभ्यो गन्धपुष्पादिसंयुतान् ॥ ७. ७६ ॥

पंचोपचारान् दत्त्वाऽथ ताम्बूलं छत्रचामरे।
दद्याद्देव्यै ततो मन्त्रं सहस्रावृत्तितो जपेत् ॥ ७. ७७ ॥

जपं समर्प्य चैशान्यां विकिरे दिशि संस्थिते।
कर्करीं स्थापयेत्तस्यां दुर्गामावाह्य पूजयेत् ॥ ७. ७८ ॥

7.74. பிரணவத்துடன் கூடிய வியாஹ்ருதியால் ஹோமம் செய்து பிறகு இருபத்தைந்து தடவை மூலமந்திரத்தால் நெய்கலந்த பாயஸான்ன ஹோமம் செய்ய வேண்டும்.

7.75–77. முனிவரே! பிறகு மறுபடி வியாஹ்ருதி ஹோமம் செய்து கந்தம் முதலியவற்ருல் தேவியை பூஜித்துப் பீடத்தில் ஸ்தாபிக்க வேண்டும். ஹவிஸ்ஸால் பலிதானம் செய்து பலியைச் சுற்றிலும் தூவ வேண்டும்.

தேவதையின் பாரிஷதர்களுக்கு கந்தம் புஷ்பம் முதலியவற்றுடன் கூடிய பஞ்சோபசாரத்தை யளித்துப் பின்பு தாம்பூலம், குடை, சாமரம் முதலிய உபசாரங்களை தேவிக்குச் செய்து விட்டு ஆயிரம் தடவை மந்திரத்தை ஜபிக்க வேண்டும்.

7.78. ஈசானதிக்கில் ஜபஸமர்ப்பணம் செய்து அந்த திக்கிலேயே கரகஸ்தாபனம் செய்து அதில் துர்க்கையை ஆவாஹனம் செய்து பூஜிக்க வேண்டும்.

रक्ष रक्षेति चोच्चार्य नालमुक्तेन वारिणा।
अस्त्रमन्त्रं जपन् देशं सेचयेत्तु प्रदक्षिणम् ॥ ७. ७९ ॥

कर्करीं स्थापयेत्स्थाने पूजयेच्चास्त्रदेवताम्।
पश्चाद् गुरुस्तु शिष्येण सह भुंजीत वाग्यतः।
तस्यां रात्रौ तु तद्वेद्यां निद्रां कुर्यात्प्रयत्नतः ॥ ७. ८१ ॥

ततः स्रुक्स्रुवसंस्कारावाज्य-संस्कार एव च।
कृत्वा होमं ततः कुर्यात्स्रुवेणाऽऽदाय वै घृतम् ॥ ७. १०७ ॥

गर्भाधानादिसंस्कारकृते तु जुहुयान्मुने।
ततः शिवं पार्वतीं च पूजयित्वा विसर्जयेत् ॥ ७. ११५ ॥

जुहुयात्पंचसमिधो वह्निमुद्दिश्य साधकः।
पश्चादावरणानां चाप्येकैका-माहुतिं हुनेत् ॥ ७. ११६ ॥

7.79. 'ரக்ஷ ரக்ஷ' என்று உச்சரித்துக் கொண்டு அந்தக் கரகஜலத்தை ஒரு குழல் வழியாக விட்டு அஸ்திர மந்திரத்தை ஜபித்து அந்தப் பிரதேசத்தைப் பிரதக்ஷிணமாக நனைக்க வேண்டும்.

7.81. கரகத்தை அதன் ஸ்தானத்தில் வைத்துப் பிறகு அஸ்த்திர தேவதையைப் பூஜிக்க வேண்டும். பின்பு குருவானவர் சிஷ்யனுடன் மௌனமாய் போஜனம் செய்து விட்டு அன்றிரவு யாகசாலையில் நியமத்துடன் நித்திரை செய்யவேண்டும்.

7.107. (மறு நாள் ஹோமத்திற்கு) ஹோமக் கரண்டிகள், நெய் முதலியவற்றிற்கு முறைப்படி ஸம்ஸ்காரம் செய்து ஸ்ருவத்தால் நெய்யை ஹோமம் செய்ய வேண்டும்.

7.115. முனிவரே! கர்ப்பாதானம் முதலிய ஸம்ஸ்காரங்களைச் செய்ய ஹோமத்தைச் செய்து சிவனையும் பார்வதியையும் பூஜித்து விஸர்ஜனம் செய்ய வேண்டும்.

7.116. ஐந்து ஸமித்துக்களால் அக்னியை உத்தேசித்து ஸாதகன் ஹோமம் செய்து பின்பு ஆவரண தேவதைகளுக்கு ஒவ்வொரு ஆஹுதியைச் செய்ய வேண்டும்.

घृतं स्त्रुचिसमादाय चतुर्वारं स्त्रुवेण च।
पिधाय तां तु तेनैव मुने तिष्ठन्निजासने ॥ ७. ११७ ॥

वौषडन्तेन मनुना वह्नेस्तु जुहुयात्ततः।
महागणेशमन्त्रेण जुहुयादाहुतीर्दश ॥ ७. ११८ ॥

वह्नौ पीठं समभ्यर्च्य देयमन्त्रस्य देवताम्।
वह्नौ ध्यात्वा तु तद्वक्त्रे पंचविंशतिसंख्यया ॥ ७. ११९ ॥

मूलमन्त्रेण जुहुया-द्वक्त्रैकीकरणाय च।
वह्निदेवतयोरैक्यं भावयन्नात्मना सह ॥ ७. १२० ॥

एकीभूतं भावयेत्तु ततस्तु साधकोत्तमः।
षडंगं देवतानां च जुहुयादाहुतीः पृथक् ॥ ७. १२१ ॥

7.117. முனிவரே! பின்பு ஸ்ருவத்திஞல் நாலு தடவை நெய்யை எடுத்து ஸ்ருக்கில் சேர்த்து அதை ஸ்ருவத்தால் மூடிக் கொண்டு தனது ஆஸனத்தில் நின்று கொண்டு;

7.118. 'வௌஷட்' கடைசியில் சேர்த்த மந்திரத்தால் அக்னியில் ஹோமம் செய்ய வேண்டும். மஹாகணேச மந்திரத்தால் பத்து தடவை ஹோமம் செய்ய வேண்டும்.

7.119–120. அக்னியில் பீடபூஜை செய்து உபதேசம் செய்யப் போகும் மந்திரத்தின் தேவதையை அக்னியில் தியானம் செய்து அக்னிமுகமாக இருபத்தைந்து தடவை மூலமந்திரத்தால் ஹோமம் செய்ய வேண்டும். அக்னி முகமும் தேவதையின் முகமும் ஒன்றேயாவதற்கு அக்னியையும் தேவதையையும் ஆத்மாவுடன் ஐக்கியானுஸந்தானம் செய்ய வேண்டும்.

7.121. அங்ஙனம் ஒன்ருக பாவித்து உத்தமஸாதகன் பிறகு தேவதைக்கு ஆறு அங்க ஹோமம் தனித்தனியே செய்ய வேண்டும்.

एकादशैव जुहुया-दाहुती-र्मुनिसत्तम ।
एतेन नाडीसन्धानं वह्निदेवतयोर्मुने ॥ ७. १२२ ॥

एकैकक्रमयोगेनाप्यावृत्तीनां तथैव च ।
एकैकक्रमयोगेन घृतेन जुहुयान्मुने ॥ ७. १२३ ॥

ततः कल्पोक्तद्रव्यैस्तु जुहुयादथवा तिलैः ।
देवता मूलमन्त्रेण गजान्तकसहस्रकम् ॥ ७. १२४ ॥

एवं हुत्वा ततो देवीं सन्तुष्टां भावयेन्मुने ।
तथैवावृतिदेवीश्च वह्नचाद्या देवता अपि ॥ ७. १२५ ॥

7.122. முனிசிரேஷ்டரே ! பதினொறு ஆஹுதிகளால் அக்னிக்கும் தேவதைக்கும் நாடீஸந்தானம் செய்ய வேண்டும்.

7.123. முனிவரே ! இனிவரும் ஆஹுதிகளை ஒன்றொன்றுக்கும் உள்ள கிரமப்படியும் ஆவிருத்திப்படியும் நெய்யினால் செய்ய வேண்டும்.

7.124. கல்பத்தில் கூறிய திரவியங்களாலோ எள்ளாலோ தேவதையின் மூலமந்திரத்தால் ஆயிரத்தெட்டுத் தடவை ஹோமம் செய்ய வேண்டும்.

7.125. முனிவரே ! இப்படி ஹோமம் செய்து தேவி ஸந்தோஷத்தை அடைந்ததாயும் அப்படியே ஆவரண தேவதைகளும் அக்னி முதலிய தேவதைகளும் ஸந்தோஷத்தை அடைந்ததாயும் பாவிக்க வேண்டும்.

ततः शिष्यं च सुस्नातं कृतसन्ध्यादिकक्रियम् ।
वस्त्रद्वययुतं स्वर्णाभरेणेन समन्वितम् ॥ ७. १२६ ॥

कमण्डलुकरं शुद्धं कुण्डस्यान्तिकमानयेत् ।
नमस्कृत्य ततः शिष्यो गुरूनथ सभासदः ॥ ७. १२७ ॥

कुलदेवं नमस्कृत्य ततः विशेत्तत्राथ विष्टरे ।
गुरुस्ततस्तु तं शिष्यं कृपादृष्टचा विलोकयेत् ॥ ७. १२८ ॥

तच्चैतन्यं निजे देहे भावयेत्संगतं त्विति ।
ततः शिष्यतनुस्थानामध्वनां परिशोधनम् ॥ ७. १२९ ॥

कुर्यात्तु होमतो विद्वान् दिव्यदृष्टचवलोकनात् ।
येन जायेत शुद्धात्मा योग्यो देवाद्यनुग्रहे ॥ ७. १३० ॥

7.126–129. பிறகு சிஷ்யன் நன்ருக ஸ்நானம் செய்து இரண்டு வஸ்திரங்களணிந்து ஸந்தியாவந்தனம் முதலிய அனுஷ்டானங்களை முடித்துப் பொன்ஞலான ஆபரணங்களணிந்து கொண்டு கையில் கமண்டலுவுடன் சுத்த மாயிருப்பவனை அக்னி குண்டத்திற்கு அருகாமையில் (குரு வானவர்) அழைத்துக் கொள்ள வேண்டும். சிஷ்யன் குருவையும் சபையோர்களையும் குலதெய்வத்தையும் நமஸ் கரித்து விட்டு ஆசனத்திலமர வேண்டும். அப்படி அமர்ந்த சிஷ்யனை குரு கிருபையுடன் கடாக்ஷிக்க வேண்டும். அவனுடைய சைதன்யம் தன்னுடைய சரீரத்தில் ஸங்கம மானதாய் அவர் பாவித்துப் பிறகு சிஷ்யனுடைய சரீரத்தி லுள்ள அத்வாக்களைப் பரிசோதனம் செய்ய வேண்டும்.

7.130. வித்வாஞகிய குரு ஹோமத்தாலும் தெய்வீக திருஷ்டியால் கடாக்ஷிப்பதாலும் சிஷ்யனை பரிசுத்தாத் மாவாகச் செய்து தெய்வானுக்கிரஹத்திற்குத் தகுதியுடைய வஞக்க வேண்டும்.

तनौ ध्यायेत्तु शिष्यस्य षडध्वनः क्रमेण तु ।
पादयोस्तु कलाध्वानं जंघौ तत्त्वाध्वकं पुनः ॥ ७. १३१ ॥

नाभौ तु भुवनाध्वानं वर्णाध्वानं तथा हृदि ।
पदाध्वानं तथा भाले मन्त्राध्वानं तु मूर्धनि ॥ ७. १३२ ॥

शिष्यं स्पृशंस्तु कूर्चेन तिलैराज्य परिप्लुतैः ।
शोधयाम्यमु-मध्वानं स्वाहेति मनुमुच्चरन् ॥ ७. १३३ ॥

ताराढ्यं जुहुयादष्ट-वारं प्रत्यध्वमेव हि ।
षडध्वानस्ततस्तांस्तु लीनान् ब्रह्मणि भावयेत् ॥ ७. १३४ ॥

पुनरुत्पादयेत्तस्मात्सृष्टिमार्गेण वै गुरुः ।
आत्मस्थितं तच्चैतन्यं पुनः शिष्ये तु योजयेत् ॥ ७. १३५ ॥

7.131–134. சிஷ்யனுடைய உடலில் வரிசையாக ஆறு அத்வாக்களை தியானம் செய்ய வேண்டும். பாதங்களில் காலாத்வாவையும் முழங்காலில் தத்வாத்வாவையும் நாபியில் புவனுத்வாவையும், இருதயத்தில் வர்ணுத்வாவையும், நெற்றியில் பதாத்வாவையும், தலையுச்சியில் மந்த்ராத்வாவையும் தியானித்துச் சிஷ்யனைக் கூர்ச்சத்தால் தொட்டுக் கொண்டு நெய்கலந்த எள்ளினுல் 'ஓம் சோதயாமி காலாத்வானம் ஸ்வாஹா, ஓம் சோதயாமி தத்வாத்வானம் ஸ்வாஹா....' என்ற முறையில் மந்திரத்தைச் சொல்லி ஒவ்வொரு அத்வாவுக்கும் எட்டுத் தடவை ஹோமம் செய்ய வேண்டும். பிறகு ஆறு அத்வாக்களையும் பிரம்மத்தில் ஒடுங்கியவையாய் பாவிக்க வேண்டும்.

7.135. பின்பு குருவானவர் சிருஷ்டி மார்க்கத்தால் அத்வாக்களை உற்பவிக்கச் செய்து தன்னிடமுள்ள அந்த சைதன்னியத்தை மீண்டும் சிஷ்யனிடம் சேர்க்க வேண்டும்.

पूर्णाहुतिं ततो हुत्वा देवतां कलशे नयेत्।
पुनर्व्याहृतिभिर्हुत्वा वह्नेरंगाहुतिस्तथा ॥ ७. १३६ ॥
एकैकशो गुरुर्दत्त्वा विसृजेद्वह्निमात्मनि।
ततः शिष्यस्य नेत्रेषु बध्नीयाद्वाससा गुरुः ॥ ७. १३७ ॥
नेत्रमन्त्रेण तं शिष्यं कुण्डतो मण्डलं नयेत्।
पुष्पांजलिं मुख्यदेव्यां कारयेच्छिष्यहस्ततः ॥ ७. १३८ ॥
नेत्रबन्धं निराकृत्य वेशयेत्कुशविष्टरे।
भूतशुद्धिं शिष्यदेहे कुर्यात्प्रोक्तेन वर्त्मना ॥ ७. १३९ ॥
मन्त्रोदितां-स्तथा न्यासान् कृत्वा शिष्यतनौ ततः।
मण्डले वेशयेच्छिष्य-मन्यस्मिन् कुंभसंस्थितान् ॥ ७. १४० ॥
पल्लवाञ्छिष्यशिरसि विन्यसेन्मातृकां जपेत्।
कलशस्थजलैः शिष्यं स्नापयेद्देवतात्मकैः ॥ ७. १४१ ॥

7.136–138. பிறகு பூர்ணாஹுதி செய்து தேவதையைக் கலசத்திற்கு அழைத்து வந்து விட்டு வ்யாஹ்ருதிகளால் ஹோமம் செய்து அக்னியின் அங்க ஆஹுதிகளையும் ஒவ்வொன்றுகச் செய்து குருவானவர் அக்னியைத் தன்னிடம் விஸர்ஜனம் செய்ய வேண்டும். பிறகு குருவானவர் சிஷ்யனுடைய கண்களை நேத்ர மந்திரத்தால் வஸ்திரத்தைக் கொண்டு கட்டி அவனைக் குண்டத்தினின்று மண்டலத்திற்குக் கொணர்ந்து அவனுடைய கையால் முக்கிய தேவதைக்குப் புஷ்பாஞ்ஜலியை ஸமர்ப்பிக்கச் செய்யவேண்டும்.

7.139. கண் கட்டை அவிழ்த்து தர்ப்பாஸனத்தில் உட்காரச் செய்து கூறியுள்ள முறைப்படி சிஷ்ய தேகத்தில் பூத சுத்தியைச் செய்யவேண்டும்.

7.140–141. பிறகு மந்திரத்திற்குரிய நியாஸங்களைச் சிஷ்ய தேகத்தில் செய்து அவனை வேறொரு மண்டலத்தில் இருத்திக் கும்பத்திலுள்ள மாவிலையை அவன் சிரசில் வைத்து மாத்ருகைகளை ஜபிக்க வேண்டும். பிறகு தேவதாமயமான கலசதீர்த்தத்தால் சிஷ்யனுக்கு அபிஷேகம் செய்ய வேண்டும்.

वर्धनीजलसेकं च कुर्याद्रक्षार्थ-मंजसा।
ततः शिष्यः समुत्थाय वाससी परिधाय च ॥ ७. १४२ ॥

कृतभस्मावेलपश्च संविशेद्गुरुसन्निधौ।
ततो गुरुः स्वकीयात्तु हृदयान्निर्गतां शिवाम् ॥ ७. १४३ ॥

प्रविष्टां शिष्यहृदये भावयेत्करुणानिधिः।
पुजयेद्गन्धपुष्पाद्यै रैक्यं वै भावयंस्तयोः ॥ ७. १४४ ॥

ततस्त्रिशो दक्षकर्णे शिष्यस्योपदिशेद् गुरुः।
महामन्त्रं महादेव्याः स्वहस्तं शिरसि न्यसन् ॥ ७. १४५ ॥

अष्टोत्तरशतं मन्त्रं शिष्योऽपि प्रजपेन्मुने।
दण्डवत्प्रणमेद्भूमौ तं गुरुं देवतात्मकम् ॥ ७. १४६ ॥

7.142–144. வர்த்தணீகலசதீர்த்தத்தால் இரக்ஷைக்காகப் புரோக்ஷிக்கவும் வேண்டும். பிறகு சிஷ்யன் எழுந்து வஸ்திரமுடுத்து வீபூதியணிந்து குருஸந்நிதிக்கு வர வேண்டும். கருணை நிறைந்த குருவானவர் தனது இருதயத்திலிருந்து தேவியானவள் எழுந்தருளிச் சிஷ்யனுடைய இருதயத்தில் பிரவேசித்ததாய் பாவிக்க வேண்டும். அவர்களுள் ஐக்கிய பாவனை செய்து கந்தம் புஷ்பம் முதலியவற்றால் பூஜிக்க வேண்டும்.

7.145. பிறகு தனது கையைச் சிஷ்யனுடைய சிரசில் வைத்து மூன்று தடவை அவனுடைய வலது காதில் குருவானவர் மகாதேவியின் மகாமந்திரத்தை உபதேசிக்க வேண்டும்.

7.146. முனிவரே! சிஷ்யன் அம்மந்திரத்தை நூற்றெட்டுத் தடவை ஜபித்து தேவதாஸ்வருபரான குருவைத் தடிக்கம்பு போல் பூமியில் வீழ்ந்து நமஸ்கரிக்க வேண்டும்.

सर्वस्व-मर्पयेत्तस्मै यावज्जीव-मनन्यधीः ।
ऋत्विग्भ्यो दक्षिणां दत्त्वा ब्राह्मणांश्चापि भोजयेत्
॥ ७. १४७ ॥
सुवासिनीः कुमारीश्च वटुकांश्चैव सर्वशः ।
दीनानाथान् दरिद्रांश्च वित्तशाठ्यविवर्जितः ॥ ७. १४८ ॥
कृतार्थतां स्वस्य बुद्ध्वा नित्यमाराधयेन्मनुम् ।
इति ते कथितः सम्यग्दीक्षाविधिरनुत्तमः ॥ ७. १४९ ॥
विमृश्यैतदशेषेण भज देवीपदांबुजम् ।
नान्यस्तु परमो धर्मो ब्राह्मणस्यात्र विद्यते ॥ ७. १५० ॥
वैदिकः स्वस्वगृह्योक्त-क्रमेणोपदिशेन्मनुम् ।
तान्त्रिकस्तत्र रीत्या तु स्थितिरेषा सनातनी ॥
तत्तदुक्तप्रयोगांस्तु ते ते कुर्यु-र्न चान्यथा ॥ ७. १५१ ॥

7.147. வேறு எண்ணமில்லாதவனுய்த் தன்னுடமையனைத்தையும் அவருக்கு வாழ்க்கை முழுதும் அர்ப்பணம் செய்ய வேண்டும். ருத்விக்குகளுக்கு தக்ஷிணையளித்து பிராம்மணர்களுக்கு போஜனம் செய்விக்க வேண்டும்.

7.148. திரவியலோபமில்லாமல் ஸுவாஸினிகளையும் குமாரிகளையும், பிரம்மசாரிகளையும் தீனர்களையும் அநாதைகளையும் தரித்திரர்களையும் போஜனத்தால் திருப்தி செய்விக்க வேண்டும்.

7.149. தன்னைக் கிருதகிருத்யனுய்க் கருதி நித்யம் மந்திர ஜபம் செய்யவேண்டும். இங்ஙனம் ஒப்புயர்வற்ற தீக்ஷாவிதானம் உமக்கு நன்கு விளக்கப்பட்டது.

7.150. இதை முற்றும் ஆராய்ந்தறிந்து தேவியின் பாதகமலங்களை ஆராதிப்பாயாக. இதை விடச் சிறந்த தருமம் பிராம்மணனுக்கு வேறு எதுவுமில்லை.

7.151. வைதிகன் தனது கிருஹ்யஸூத்திரத்தில் கூறியுள்ள கிரமத்தில் மந்திரோபதேசத்தைச் செய்ய வேண்டும். தாந்திரிகன் அதற்குள்ள முறையில் நிற்க வேண்டும். இதுதான் ஸநாதனமான கட்டுப்பாடு. அவரவர்க்குக் கூறப் பட்ட பிரயோகங்களை அவரவர் கைக்கொள்ள வேண்டும். வேறுவிதமாய்ச் செய்யக் கூடாது.

நாராயண உவாச —

इति सर्वं मयाख्यातं यत्पृष्टं नारद त्वया।
अतः परम् पराम्बाया भज नित्यं पदाम्बुजम्॥
नित्य-माराध्य तं चाहं निर्वृतिं परमां गतः॥ ७. १५२॥

வ்யாஸ உவாச —

इति राजन्नारदाय प्रोक्त्वा सर्वमनुत्तमम्।
समाधिमीलिताक्षस्तु दध्यौ देवी पदाम्बुजम्॥ ७. १५३॥

नारायणस्तु भगवान् मुनिवर्यशिखामणिः।
नारदोऽपि ततो नत्वा गुरुं नारायणं परम्।
जगाम सद्यस्तपसे देवीदर्शनलालसः॥ ७. १५४॥

॥ मन्त्रदीक्षाविधानं संपूर्णम्॥

॥ इति श्रीदेवीभागवते द्वादशस्कन्धे सप्तमोऽध्यायः॥

நாராயணர் கூறியது—

7.152. நாரதரே! உம்மால் எது கேட்கப்பட்டதோ அது இவ்வாறாக விளக்கப்பட்டது. இனி எப்பொழுதும் பரதேவதையின் திருவடிகளைப் பூஜிப்பீராக. நானும் நாள் தோறும் அவளை ஆராதித்தே பரமானந்தத்தை யடைந்துள்ளேன்.

வியாஸர் கூறியது—

7.153–154. அரசே! இங்ஙனம் நாரதருக்கு ஒப்புயர்வற்ற இதைக் கூறிவிட்டு ஸமாதியில் கண் மூடியவராய் தேவியின் பாதகமலங்களை தியானித்தார் முனிசிரேஷ்டர்களின் தலைவரான பகவான் நாராயணர். நாரதரும் பரம குருவான நாராயணரை நமஸ்கரித்து விட்டு தேவியை தரிசிக்க ஆவலுடையவராய் அப்பொழுதே தவத்திற்குச் சென்றார்.

மந்திரதீக்ஷாவிதானம் ஸம்பூர்ணம்.

இங்ஙனம் ஸ்ரீதேவீபாகவதத்தில் பன்னிரண்டாவது ஸ்கந்தத்தில் ஏழாவது அத்தியாயம் முற்றும்.

॥ पराशक्ति महिम्नवर्णनम् ॥ ५४ ॥

जनमेजय उवाच —

भगवन् सर्वधर्मज्ञ सर्वशास्त्रविशारद ।

द्विजातीनां तु सर्वेषां शक्त्युपास्तिः श्रुतीरिता ॥ ८. १ ॥

सन्ध्याकालत्रयेऽन्यस्मिन् काले नित्यता विभो ।

तां विहाय द्विजाः कस्माद् गृह्णीयुश्चान्यदेवताः ॥ ८. २ ॥

सूत उवाच —

इति राज्ञो वचः श्रुत्वा भगवान् बादरायणः ।

निजगाद ततः सर्वं क्रमेणैव मुनीश्वराः ॥ ८. ९ ॥

व्यास उवाच —

सम्यक् पृष्टं त्वया राजन् समये समयोचितम् ।

बुद्धिमानसि वेदेषु श्रद्धावांश्चैव लक्ष्यसे ॥ ८. ११ ॥

54. பராசக்தி மகிமை

ஜனமேஜயர் கூறியது.

8.1. எல்லாதர்மங்களையும் அறிந்தவரே! எல்லா சாஸ்திரங்களிலும் வல்லவரே! பகவானே! துவிஜர்கள் அனைவருக்கும் சக்தி உபாசனை சுருதியில் கூறப்பட்டுள்ளது.

8.2. பிரபுவே! மூன்று ஸந்தியா காலங்களிலும் மற்ற காலங்களிலும் அங்ஙனம் சக்தி உபாஸனை கூறப்பட்டிருக்கும் பொழுது அதை விட்டு துவிஜர்கள் எக்காரணத்தால் வேறு தேவதைகளை நாடுகிறார்கள்?

ஸூதர் கூறியது—

8.9. முனீசுவரர்களே! அரசனுடைய இவ்வார்த்தையைக் கேட்ட பகவான் பாதராயணர் முறைப்படி அனைத்தையும் கூறினார்.

வியாஸர் கூறியது—

8.11. அரசே! உம்மால் தக்க சமயத்தில் பொருத்தமான கேள்வி கேட்கப்பட்டது. நீர் புத்திமான். வேதத்தில் சிரத்தையுள்ளவராய்க் காணப்படுகிறீர்.

पूर्वं मदोद्धता दैत्या देवैर्युद्धं तु चक्रिरे।
पराशक्तिकृपावेशाद् देवैर्दैत्या जिता युधि ॥ ८. १३ ॥

ततः प्रहर्षिता देवाः स्वपराक्रमवर्णनम्।
चक्रुः परस्परं मोहात्साभिमानाः समन्ततः ॥ ८. १५ ॥

पराशक्तिप्रभावं ते न ज्ञात्वा मोहमागताः।
तेषामनुग्रहं कर्तुं तदैव जगदम्बिका ॥ ८. १८ ॥

प्रादुरासीत्कृपा पूर्णा यक्षरूपेण भूमिप।
अदृष्टपूर्वं तद्दृष्ट्वा तेजः परमसुन्दरम् ॥ ८. २० ॥

सविस्मयास्तदा प्रोचुः किमिदं किमिदं त्विति।
यक्षस्य निकटे गत्वा प्रष्टव्यं कस्त्वमित्यपि ॥ ८. २२ ॥

8.13. முன் காலத்தில் மதம் பிடித்த அசுரர்கள் தேவர்களுடன் போர் புரிந்தனர். தேவர்கள் பராசக்தியின் கிருபையால்தான் போரில் வெற்றியடைந்தனர்.

8.15. அதனால் மகிழ்ச்சி பொங்கிய தேவர்கள் தங்களுடைய பராக்கிரமங்களை ஒருவர்க்கொருவர் வர்ணித்துக் கொண்டு மிகுந்த அபிமானத்தால் மதிமயக்கமடைந்தனர்.

8.18-22. பராசக்தியின் பிரபாவத்தை அறியாமல் அவர்கள் மதிமயக்கத்தை யடைந்திருந்தார்கள். அப்பொழுது அவர்களுக்கு அனுக்கிரகம் செய்வதற்காக ஜகதம்பிகை பரிபூர்ணகிருபையுடன் ஒரு யக்ஷரூபத்தில் அவர்கள் முன் தோன்றினாள். முன்பின் காணாததும் அழகுமிக்கதுமான அந்த ஒளிவடிவத்தைக் கண்ட அவர்கள் ஆச்சரியம் மேலிட்டவர்களாய் 'இது என்ன! இது என்ன!' என்று ஒருவர்க்கொருவர் வினவலாயினர். யக்ஷவடிவத்தின் சமீபம் சென்று 'நீ யார்' என்று கேட்க வேண்டும் என்றும் கூறிக் கொண்டனர்.

ततो वह्निं समाहूय प्रोवाचेन्द्रः सुराधिपः ।
गच्छ वह्ने त्वमस्माकं यतोऽसि मुखमुत्तमम् ॥ ८. २४ ॥

वेगात्स निर्गतो वह्निर्ययौ यक्षस्य सन्निधौ ।
तदा प्रोवाच यक्षस्तं त्वं कोऽसीति हुताशनम् ॥ ८. २६ ॥

अग्निरस्मि तथा जातवेदा अस्मीति सोऽब्रवीत् ।
सर्वस्य दहने शक्तिर्मयि विश्वस्य तिष्ठति ॥ ८. २७ ॥

तदा यक्षं परं तेजस्तदग्रे निदधौ तृणम् ।
दहैनं यदि ते शक्तिर्विश्वस्य दहनेऽस्ति हि ॥ ८. २८ ॥

तदा सर्वबलेनैवाकरोद्यत्नं हुताशनः ।
न शशाक तृणं दग्धुं लज्जितोऽगात्सुरान् प्रति ॥ ८. २९ ॥

8.24. தேவராஜனுகிய இந்திரன் அக்னி தேவனைக் கூப்பிட்டு 'அக்னியே! நீ எங்கள் வாய் போன்று சிறந்தவனுதலால் நீ போ' என்றுன்.

8.26. வேகமாக அக்னி வெளிச் சென்று யக்ஷ வடிவத்தின் முன்னிலையை யடைந்தான். யக்ஷவடிவம் அக்னியை 'நீ யார்?' என்று கேட்டது.

8.27. 'நான் அக்னி; நான் ஜாதவேதஸ்; உலகனைத்தையும் எரிக்கக் கூடிய சக்தி என்னிடமுளது' என்று கூறினுன்.

8.28. உத்தம தேஜோரூபியான யக்ஷவடிவம் அவன் முன்பு ஒரு புல்லை வைத்து 'உலகை எரிக்கக் கூடிய சக்தி உன்னிடம் இருக்குமேயாஞல் இதை எரி என்றது.

8.29. அப்பொழுது அக்னிதேவன் முழு பலத்துடன் முயன்றும் அந்தப் புல்லை எரிக்க மாட்டாமல் வெட்கத்துடன் தேவர்களிடம் திரும்பிச் சென்றுன்.

ततस्तु वृत्रहा वायं समाहूयेदमब्रवीत् ।
त्वमेव गत्वा जानीहि किमिदं यक्षमित्यपि ॥ ८. ३२ ॥

साभिमानो जगामाऽऽशु यत्र यक्षं विराजते ।
यक्षं दृष्ट्वा ततो वायुं प्रोवाच मृदुभाषया ॥ ८. ३३ ॥

कोऽसि त्वं त्वयि का शक्तिर्वद सर्वं ममाग्रतः ।
मातरिश्वाऽहमस्मीति वायुरस्मीति चाब्रवीत् ॥ ८. ३६ ॥

वीर्यं तु मम सर्वस्य चालने ग्रहणेऽस्ति हि ।
इति श्रुत्वा वायुवाणीं निजगाद परं महः ॥ ८. ३७ ॥

तृणमेतत्तवाग्रे यत्तच्चालय यथेप्सितम् ।
श्रुत्वा यक्षवचो वायुः सर्वशक्तिसमन्वितः ॥ ८. ३६ ॥

8.32. பிறகு விருத்ராசுரனை வதைத்த இந்திரன் வாயுவைக் கூப்பிட்டு 'நீ போய் இந்த யக்ஷவடிவம் என்ன வென்று அறிந்து வா' என்று கூறினான்.

8.33–37. அந்த வாயுதேவன் கர்வத்துடன் யக்ஷ வடிவம் பிரகாசித்த இடத்திற்கு விரைந்து சென்றான். யக்ஷ வடிவம் வாயுவைப் பார்த்து நயமான சொல்லில் 'நீ யார்? உன்னிடம் என்ன சக்தி உளது? அனைத்தையும் என்னிடம் முதலில் கூறுவாயாக' என்றது. 'நான் மாதரிச்வா, நான் வாயு. அனைத்தையும் அசைக்கவும் எடுக்கவும் கூடிய வீரியம் என்னிடம் உளது' என வாயு தேவன் கூறினான். வாயுவின் இவ்வார்த்தையைக் கேட்டு அப் பேரொளி வடிவம் பின் வருமாறு கூறிற்று.

8.39–40. 'உன் முன்னுள்ள இந்தப்புல்லை உன்னிஷ்டம் போல் அசைக்கலாம்'. அந்த யக்ஷவசனத்தைக் கேட்ட வாயு ஸர்வசக்தியுடன் முயன்றும் அப்புல் இடம் விட்டு நகரவில்லை. அதனால் கர்வத்தை விட்டு வாயு தேவன் வெட்கத்துடன் தேவர்களிடம் திரும்பினான்.

उद्योगमकरोत्तच्च स्वस्थानान्न चचाल ह।
लज्जितोऽगाद्देवपार्श्वं हित्वा गर्वं सचानिलः ॥ ८. ४० ॥

ततः सर्वे सुरगणाः सहस्राक्षं समूचिरे।
देवराडसि यस्मात्त्वं यक्षं जानीहि तत्त्वतः ॥ ८. ४२ ॥

तत इन्द्रो महागर्वात्तद्यक्षं समुपाद्रवत्।
प्राद्रवच्च परं तेजो यक्षरूपं परात्परम् ॥ ८. ४३ ॥

अन्तर्धानं ततः प्राप तद्यक्षं वासवाग्रतः।
अतीव लज्जितो जातो वासवो देवराडपि ॥ ८. ४४ ॥
माने नष्टे जीवितं तु मृति तुल्यं न संशयः।
इति निश्चित्य तत्रैव गर्वं हित्वा सुरेश्वरः ॥ ८. ४७ ॥

चरित्रमीदृशं यस्य तमेव शरणं गतः।
तस्मिन्नेव क्षणे जाता व्योमवाणी नभस्तले ॥ ८. ४८ ॥

मायाबीजं सहस्राक्ष जप तेन सुखी भव।
ततो जजाप परमं मायाबीजं परात्परम् ॥ ८. ५० ॥

8.42. பிறகு எல்லா தேவகணங்களும் இந்திரனை நோக்கி, 'நீர் தேவர்களின் அரசராயிருப்பதால் நீர் அந்த யக்ஷவடிவத்தை உள்ளபடி அறியக் கூடும்' என்றனர்.

8.43–47. அப்பொழுது மிகுந்த கர்வத்துடன் இந்திரன் யக்ஷவடிவத்தை நோக்கி விரைந்தான். பராத்பரமானதும் தேஜோரூபமானதுமான அந்த யக்ஷரூபம் இந்திரன் நெருங்கியதும் அவன் முன்னின்று மறைந்து போயிற்று. தேவநாயகனான இந்திரன் 'மானம் போன பின் ஜீவித்திருப்பது மரணத்துக் கொப்பாகும், இதில் சந்தேகமில்லை' என்று நிச்சயித்தவனாய் கர்வத்தை விட்டு மிகவும் வெட்கம் மேலிட்டவனானான்.

8.48. எந்த சக்தியின் சரித்திரம் இப்படிப்பட்டதோ அதையே எண்ணி இந்திரன் சரண் புகுந்தான். அதே நொடியில் ஆகாயத்தில் அசரீரிவாக்கு எழுந்தது.

8.50. 'ஆயிரங்கண் படைத்தோனே! மாயா பீஜ மந்திரத்தை ஜபித்து அதனால் சுக மடைவாயாக'. பராத்பரமான சிறந்த மாயாபீஜத்தை அதன் மேல் ஜபம் செய்யலானான்.

अकस्माच्चैत्रमासीय नवम्यां मध्यगे रवौ।
तदेवाविरभूत्तेजस्तस्मिन्नेव स्थले पुनः ।। ८. ५१ ।।

तेजोमण्डलमध्ये तु कुमारीं नवयौवनाम् ।
भास्वज्जपाप्रसूनाभां बालकोटिरविप्रभाम् ।। ८. ५२ ।।

बालशीतांशुमकुटां वस्त्रान्तर्व्यं जितस्तनीम् ।
चतुर्भिर्वरहस्तैस्तु वरपाशांकुशाभयान् ।। ८. ५३ ।।

दधानां रमणीयांगीं कोमलांगलतां शिवाम् ।
उमाभिधानां पुरतो देवीं हैमवतीं शिवाम् ।। ८. ५४ ।।

निर्व्याजकरुणामूर्तिं सर्वकारणकारणाम् ।
ददर्श वासवस्तत्र प्रेमगद्गदितान्तरः ।। ८. ५८ ।।

दण्डवत्प्रणनामाऽथ पादयोर्जगदीशितुः ।
तुष्टाव विविधैः स्तोत्रै-र्भक्तिसन्नतकन्धरः ।। ८. ५९ ।।

8.51. சைத்ரமாதம் நவமி திதியன்று சூரியன் நடு வானத்திலிருக்கையில் எதிர்பாராமல் முன் தோன்றிய அதே தேஜோரூபம் அதே இடத்தில் மீண்டும் காணப்பட்டது.

8.52. அந்த தேஜோமண்டல மத்தியில் புதிய யௌ வனம் மிளிரும் ஒரு திவ்விய குமாரியைக் கண்டான். அவள் செம்பருத்திப்பூப் போல் சிவந்த வண்ணத்தினளாய், கோடி உதய சூரியப் பிரகாசம் உடையவளாயிருந்தாள்.

8.53–54. தலையில் இளம் பிறைச்சந்திரனையணிந்து வஸ்திரத்திற்குள் பிரகாசிக்கும் நகில்களை யுடையவளாய், நான்கு அழகிய கைகளில் வரம், பாசம், அங்குசம், அபயம் ஆகியவற்றை தரிப்பவளாய், அழகுமிக்கவையும் மெதுவான வையுமான அங்கங்களை யுடையவளாய், மங்களமே உருக் கொண்டவளாய் இருந்த அவள் இமவானின் புத்திரியாகிய உமா எனப் பெயர்படைத்த பரதேவதை.

8.58–59. காரணத்தை வேண்டாத கருணாமூர்த்தியும் எல்லாக் காரணத்திற்கும் காரணமாகியவளும் ஆகிய அவளை இந்திரன் அங்கு தரிசித்து அன்பின் பரவசத்தால் உள்ளம் நெகிழ தடிக்கம்பு போல் ஜகதீசுவரியின் பாதங் களில் நமஸ்கரித்து பக்தியால் சிரம் தாழ்த்திப் பலவிதமான ஸ்தோத்திரங்களால் துதித்தான்.

उवाच परमप्रीतः किमिदं यक्षमित्यपि ।
प्रादुर्भूतं च कस्मात्तद्वद सर्वं सुशोभने ।। ८. ६० ।।

इति तस्य वचः श्रुत्वा प्रोवाच करुणार्णवा ।
रूपं मदीयं ब्रह्मैतत्सर्वकारणकारणम् ।। ८. ६१ ।।

मायाधिष्ठानभूतं तु सर्वसाक्षिनिरामयम् ।
ओमित्येकाक्षरं ब्रह्म तदेवाहुश्च ह्रीं मयम् ।। ८. ६३ ।।

द्वे बीजे मम मन्त्रौ स्तो मुख्यत्वेन सुरोत्तम ।
भागद्वयवती यस्मात्सृजामि सकलं जगत् ।। ८. ६४ ।।

तत्रैकभागः संप्रोक्तः सच्चिदानन्दनामकः ।
माया प्रकृतिसंज्ञस्तु द्वितीयो भाग ईरितः ।। ८. ६५ ।।

8.60. 'மங்கள வடிவினளே! இந்த யக்ஷவடிவம் என்ன? எதற்காகத் தோன்றியது? அனைத்தையும் கூறியருள வேண்டும்' என்று மிகுந்த பிரீதியுடன் இந்திரன் கூறினன்.

8.61–65. அவனுடைய இவ்வார்த்தையைக் கேட்ட கருணைக் கடலாகிய தேவி 'இது என்னுடைய பிரம்ம ஸ்வரூபம்; காரணங்களுக்கெல்லாம் காரணமாகியது; மாயைக்கு அதிஷ்டானமாயுள்ளது; அனைத்திற்கும் ஸாக்ஷியாய் நோயற்றதாயுள்ளது; ஓம் எனும் ஓரெழுத்தாகியது பிரம்மம்; அதுவே ஹ்ரீம் வடிவாகும் எனவும் கூறுவர். தேவர்களின் அரசே! முக்கியமாக இவ்விரண்டு பீஜாக்ஷரங்களும் என்னுடைய மந்திரங்கள். நான் இரண்டு பாகமுடையவள். எதனுல் உலகையெல்லாம் சிருஷ்டிக்கிறேனே அது ஒரு பாகம் ஸச்சிதானந்தம் எனப் பெயர் பெறும். மற்றது மாயை என்றும் பிரகிருதி என்றும் கூறப்படும்.

सा च माया पराशक्तिः शक्तिमत्यहमीश्वरी ।
चन्द्रस्य चन्द्रिकेवेयं ममाभिन्नत्व-मागता ॥ ८. ६६ ॥

साम्यावस्थात्मिका चैषा माया मम सुरोत्तम ।
प्रलये सर्वजगतो मदभिन्नैव तिष्ठति ॥ ८. ६७ ॥

प्राणिकर्म परीपाकवशतः पुनरेव हि ।
रूपं तदेवमव्यक्तं व्यक्तीभावमुपैति च ॥ ८. ६८ ॥

अन्तर्मुखा तु याऽवस्था सा मायेत्यभिधीयते ।
बहिर्मुखा तु या माया तमः शब्देन सोच्यते ॥ ८. ६९ ॥

बहिर्मुखात्तमोरूपाज्जायते सत्त्वसम्भवः ।
रजोगुणस्तदैव स्यात्सर्गादौ सुरसत्तम ॥ ८. ७० ॥

8.66. அந்த மாயை, பராசக்தி, சக்திமதீ, அஹம் எனும் தத்துவம். ஈசுவரீ சந்திரனுடைய நிலவைப் போன்று என்னிடமிருந்து பிரிக்க முடியாதவளாவாள்.

8.67. தேவசிரேஷ்டனே! இந்த மாயை ஸாம்யா வஸ்தை வடிவினள். உலகனைத்தும் பிரளயத்தில் ஆழ்ந்த பொழுது என்னிடமிருந்து வேறுபடாமல் நிலைப்பெறுகிறுள்.

8.68. பிராணிகர்ம பரிபாகவசத்தால் மீண்டும் அந்த அவ்யக்தம் வெளிப்படையான உருவத்தையடைகிறது.

8.69. அந்தர்முகமான அவஸ்தை எதுவோ அது மாயை என்று கூறப்படுகிறது. பஹிர்முகமான மாயை தமஸ் என்னும் சொல்லால் குறிப்பிடப்படுகிறது.

8.70. தேவசிரேஷ்டனே! பஹிர்முகமான தமோ ரூபத்திலிருந்து சிருஷ்டியின் ஆரம்பத்தில் ஸத்வ குணமும் ரஜோ குணமும் தோன்றுகின்றன.

गुणत्रयात्मकाः प्रोक्ता ब्रह्मविष्णुमहेश्वराः ।
स्थूलदेहो भवेद्ब्रह्मा लिंगदेहो हरिः स्मृतः ॥ ८. ७२ ॥

रुद्रस्तु कारणोदेहस्तुरीयात्वहमेव हि ।
साम्यावस्था तु या प्रोक्ता सर्वान्तर्यामिरूपिणी ॥ ८. ७३ ॥

अत ऊर्ध्वं परं ब्रह्म मद्रूपं रूपवर्जितम् ।
निर्गुणं सगुणं चेति द्विधा मद्रूपमुच्यते ॥ ८. ७४ ॥

निर्गुणं मायया हीनं सगुणं मायया युतम् ।
साऽहं सर्वं जगत्स्रष्टा तदन्तः संप्रविश्य च ॥ ८. ७५ ॥

प्रेरयाम्यनिशं जीवं यथाकर्म यथाश्रुतम् ।
मद्भयाद्वाति पवनो भीत्या सूर्यश्च गच्छति ॥ ८. ७७ ॥

8.72—73. பிரம்மாவும் விஷ்ணுவும் மஹேசுவரரும் முக்குண வடிவினர்கள் எனக் கூறப்படுகின்றனர். பிரம்மா ஸ்தூல தேகமாவார், ஹரி லிங்கதேகம் எனப்படுவார், ருத்ரர் காரண தேகம்; ஸாம்யாவஸ்தை எனப்படுவதும் அனைத்துள்ளும் அந்தர்யாமி வடிவினளாயிருப்பவளும் நானே.

8.74. அதற்கும் அப்பாலுள்ளது உருவற்ற எனது பரப்பிரம்ம ஸ்வரூபம். நிர்க்குணம் என்றும் ஸகுணம் என்றும் இரண்டுவிதமாக எனது ரூபம் கூறப்படுகிறது.

8.75-77. நிர்க்குணம் மாயையைக் கடந்தது, ஸகுணம் மாயையுடன் கூடியது. அப்படிப்பட்ட நான் உலகையெல்லாம் சிருஷ்டித்து அதனுள் புகுந்து கருமத்திற்கும் கேள்விக்கும் தக்கவாறு ஜீவனை எப்பொழுதும் நான் இயக்குவிக்கிறேன். எனக்கு பயந்தே காற்று வீசுகிறது. எனக்கு பயந்தே சூரியன் சஞ்சரிக்கிறான்.

इन्द्राग्नि-मृत्यवस्तद्वत्साऽहं सर्वोत्तमा स्मृता।
मत्प्रसादाद्भवद्भिस्तु जयो लब्धोऽस्ति सर्वथा ॥ ८. ७८ ॥

तां मां सर्वात्मिकां यूयं विस्मृत्य निजगर्वतः।
अहंकारावृतात्मानो मोहमाप्ता दुरन्तकम् ॥ ८. ८१ ॥

अनुग्रहं ततः कर्तुं युष्मद्देहादनुत्तमम्।
निःसृतं सहसा तेजो मदीयं यक्षमित्यपि ॥ ८. ८२ ॥

अतः परं सर्वभावै-र्हित्वा गर्वं तु देहजम्।
मामेव शरणं यात सच्चिदानन्दरूपिणीम् ॥ ८. ८३ ॥

8.78. இந்திரன், அக்னி, யமன் ஆகியோரும் அவ்வாறே. அப்படிப்பட்ட நான் அனைத்திற்கும் உயர்ந்தவளாய்க் கருதப்படுகிறேன். என்னுடைய அருளால் தான் உங்களுக்கு எல்லாவகையாலும் வெற்றி அடையப் பட்டதாகிறது.

8.81. அப்படிப்பட்ட ஸர்வாத்மிகையான என்னை நீங்கள் உங்களுடைய கர்வத்தால் மறந்து அஹங்காரத்தால் சூழப்பட்டவர்களாய்க் கடக்க முடியாத மோஹத்தையடைந்து விட்டீர்கள்.

8.82. அதன்மேல் உங்களுக்கு அனுக்கிரகம் செய்யும் பொருட்டு என்னுடைய ஒப்புயர்வற்ற தேஜஸ்ஸானது உங்கள் தேகத்திலிருந்தே விரைவில் வெளிப்போந்து யக்ஷ வடிவில் காணப்பட்டது.

8.83. ஆகையால் இனி தேகத்திலுதித்த கர்வத்தை விட்டு எல்லா வகையாலும் ஸச்சிதானந்த ரூபிணியான என்னையே நீங்கள் சரணடைய வேண்டும்.

व्यास उवाच —

इत्युक्त्वा च महादेवी मूलप्रकृतिरीश्वरी ।
अन्तर्धानं गता सद्यो भक्त्या देवैरभिष्टुता ॥ ८. ८४ ॥

ततः सर्वे स्वगर्वं तु विहाय पदपंकजम् ।
सम्यगाराधयामासु-र्भगवत्याः परात्परम् ॥ ८. ८५ ॥

एवं सत्ययुगे सर्वे गायत्रीजपतत्पराः ।
तारहृल्लेखयोश्चापि जपे निष्णात मानसाः ॥ ८. ८६ ॥

गायत्रीमात्रनिष्णातो द्विजो मोक्षमवाप्नुयात् ।
कुर्यादन्यन्न वा कुर्यादिति प्राह मनुः स्वयम् ॥ ८. ९० ॥

कदाचिदथ काले तु दशपंचसमा विभो ।
प्राणिनां कर्मवशतो न ववर्ष शतक्रतुः ॥ ९. १ ॥

வியாஸர் கூறியது—

8.84. மூலப்பிரகிருதியும் ஈசுவரியுமான மகா தேவி இவ்வாறு கூறிய பின் தேவர்களால் பக்தியுடன் துதிக்கப் பெற்று உடனே மறைந்தாள்.

8.85. பிறகு எல்லோரும் தத்தம் கர்வத்தை விட்டு பகவதியின் பராத்பரமான பாதகமலங்களை நன்றாக ஆராதிக்கலாயினர்.

8.86. இவ்வாறு ஸத்யயுகத்தில் எல்லோரும் காயத்ரீ ஜபத்தில் ஊன்றியவர்களாயும் ஓங்காரம் ஹ்ரீங்காரம் ஆகிய மந்திரஜபத்தில் மனது நிலைத்தவர்களாயும் ஆயினர்.

8.90. காயத்ரியில் மட்டும் நிலைபெற்ற துவிஜன் மற்ற ஸாதனங்களைச் செய்தாலும் செய்யாவிட்டாலும் மோக்ஷமடைவான் என்று மனுவே கூறியுள்ளார்.

9.1. பிரபுவே! ஒரு சமயம் பூமியில் பிராணிகளின் கர்மவசத்தால் பதினைந்து வருஷங்கள் இந்திரன் மழை பொழியவில்லை.

ब्राह्मणा बहवस्तत्र विचारं चक्रुरुत्तमम्।
तपोधनो गौतमोऽस्ति स नः खेदं हरिष्यति ।। ९. ५ ।।

सुभिक्षं श्रूयते तत्र प्राणिनो बहवो गताः।
एवं विमृश्य भूदेवाः साग्निहोत्राः कुटुम्बिनः ।। ९. ७ ।।

सगोधनाः सदासाश्च गौतमस्याश्रमं ययुः।
दृष्ट्वा समाजं विप्राणां प्रणनाम स गौतमः ।। ९. ९ ।।

ते सर्वे स्वस्ववृत्तान्तं कथयामासुरुत्स्मयाः।
दृष्ट्वा तान् दुःखितान् विप्रानभयं दत्तवान्मुनिः ।। ९. १० ।।

युष्माकमेतत्सदनं भवद्दासोऽस्मि सर्वथा।
स्थेयं सर्वैः सुखेनैव सन्ध्याजप परायणैः ।। ९. १४ ।।

9.5-9. பல பிராமணர்கள் அப்பொழுது சிறந்த யோசனையைச் செய்து, 'தவச் செல்வரான கௌதமர் இருக்கிறார், அவர் நமது துக்கத்தைப் போக்குவார். அங்கு சுபிக்ஷம் இருப்பதாயும் பல பிராணிகள் அங்கு சென்றிருப்பதாயும் கேள்விப்படுகிறோம்' என்று நிச்சயித்து அவர்கள் குடும்பத்துடனும் அக்னிஹோத்திரத்துடனும் பசுக்களுடனும் ஆட்களுடனும் கௌதமாசிரமம் சென்றனர். பிராம்மணர்களின் கூட்டத்தைக் கண்டு கௌதமர் நமஸ்கரித்தார்.

9.10. வியப்புடன் அவர்களனைவரும் தங்கள் தங்கள் வரலாறுகளைக் கூறிக் கொண்டனர். பிராம்மணர்கள் துக்கத்திலாழ்ந்திருப்பதைக் கண்ட முனிவர் அவர்களுக்கு அபயமளித்தார்.

9.14. 'இது உங்களுடைய இருப்பிடம். நான் எப்பொழுதும் உங்களுடைய அடிமை. ஸந்தியாஜப பராயணர்களாகிய நீங்களெல்லோரும் இங்கே சுகமாயிருக்கலாம்'.

इति सर्वान् समाश्वास्य गौतमो मुनिराट् ततः।
गायत्रीं प्रार्थयामास भक्तिसन्नतकन्धरः॥ ९. १५ ॥

नमो देवि महाविद्ये वेदमातः परात्परे।
सर्वंभूतारणे देवि क्षमस्व परमेश्वरी॥ ९. २० ॥

इति स्तुता जगन्माता प्रत्यक्षं दर्शनं ददौ।
पूर्णपात्रं ददौ तस्मै येन स्यात्सर्वपोषणम्॥ ९. २१ ॥

यद्यदिष्टमभूद्राजन् मुनेस्तस्य महात्मनः।
तत्सर्वं निर्गतं तस्माद्गायत्रीपूर्णपात्रतः॥ ९. २६ ॥

मुनयो देवसदृशा वस्त्रचन्दनभूषणैः।
नित्योत्सवः प्रववृते मुनेराश्रममण्डले॥ ९. ३१ ॥

9.15. என்று இவ்வாறு எல்லோருக்கும் ஆறுதல் கூறி முனிசிரேஷ்டரான கௌதமர் அதன் மேல் பக்தியால் வணங்கிய கழுத்துடன் காயத்ரீ தேவியைப் பிரார்த்திக்கலானார்.

9.20. 'மஹா வித்யா ஸ்வரூபிணி! பராத்பரையான வேதமாதாவே! உயிர்களை யெல்லாம் காப்பவளே! பரமேச்வரி! தேவி! மன்னித்து அருள்புரிய வேண்டும். உனக்கு நமஸ்காரம்.'

9.21. இங்ஙனம் துதிக்கப் பெற்ற ஜகன்மாதா பிரத்தியக்ஷமாகி தரிசனமளித்தாள். எல்லோரையும் போஷிக்கக் கூடிய ஒரு பூர்ண பாத்திரத்தை அவருக்கு அளித்தாள்.

9.26. அரசே! மகாத்மாவாகிய அம் முனிவருக்கு எது எது விரும்பத்தக்கதாயிற்றோ அது எல்லாம் அந்த காயத்ரீ பூர்ண பாத்திரத்திலிருந்து வெளிப்பட்டது.

9.31. முனிவர்கள் வஸ்திரம், சந்தனம், பூஷணம் ஆகியவற்றால் தேவர்களுக்கொப்பாக விளங்கினார்கள். அம் முனிவரின் ஆச்ரம மண்டலத்தில் நித்யோத்ஸவம் நடைபெறலாயிற்று.

इत्थं द्वादशवर्षाणि पुपोष मुनिपुंगवान् ।
पुत्रवन्मुनिराड् गर्वगन्धेन परिवर्जितः ॥ ९. ३७ ॥

तत्रैकदा समायातो नारदो मुनिसत्तमः ।
कथाश्चकार विविधा यशसो गौतमस्य च ॥ ९. ४२ ॥

उत्कर्षं तु मुनेः श्रुत्वाऽसूयया खेदमागताः ।
यथाऽस्य न यशो भूयात्कर्तव्यं सर्वथैव हि ॥ ९. ४७ ॥

गौर्निर्मिता माययैका मुमूर्षुर्जरती नृप ।
जगाम सा च शालायां होमकाले मुनेस्तदा ॥ ९. ५१ ॥

हुं हुं शब्दै-र्वारिता सा प्राणांस्तत्याज तत्क्षणे ।
गौर्हताऽनेन दुष्टेनेत्येवं ते चुक्रुशुर्द्विजाः ॥ ९. ५२ ॥

9.37. முனிசிரேஷ்டர் இவ்வாறு கர்வத்தின் வாஸனை கூட இல்லாதவராய்ப் பன்னிரண்டு வருஷங்கள் முனிபுங்கவர்களைப் புத்திரர்களைப் போல் போஷித்தார்.

9.42. அப்பொழுது ஒரு சமயம் முனிவர்களிற் சிறந்த நாரதர் அங்கு வந்தார். கௌதமருடைய நற்கீர்த்தியைப் பற்றிப் பல வரலாறுகளைக் கூறினார்.

9.47. மற்ற முனிவர்கள் கௌதம முனிவரின் ஏற்றத்தைப் பற்றிக் கேட்டுப் பொறாமையால் வருத்தப்படலாயினர். இவருடைய புகழ் எப்படி இல்லாமற் போகுமோ அப்படி எவ்வாற்றானும் செய்ய வேண்டும் என்று எண்ணினார்கள்.

9.51. அரசே! மாயையால் ஒரு கிழட்டுப் பசு தோற்றுவிக்கப் பட்டது. அது சாகுந்தறுவாயிலிருந்தது. அது முனிவர் ஹோமம் செய்யும் பொழுது ஹோமசாலைக்குள் சென்றது.

9.52. 'ஹூம் ஹூம்' என்ற சப்தத்தால் அது விரட்டப்படவே அக்கணத்திலேயே அது உயிரை விட்டது. பிராம்மணர்கள் இந்த துஷ்ட முனிவரால் பசு கொல்லப்பட்டது என்று கோபிக்கலாயினர்.

कृतं सार्वं द्विजैरेतदिति ज्ञात्वा तदैव सः।
शशाप च ऋषीन् सर्वान् कोपसंरक्तलोचनः ॥ ९. ५५ ॥

वदेमातरि गायत्र्यां तद्ध्याने तन्मनोर्जपे।
भवतानुन्मुखा यूयं सर्वथा ब्राह्मणाधमाः ॥ ९. ५६ ॥

युष्माकं वंशजाताश्च स्त्रियश्च पुरुषास्तथा।
मद्दत्तशापदग्धास्ते भविष्यन्ति भवत्समाः ॥ ९. ७७ ॥

इति सर्वान् विसृज्याथ गौतमो मुनिसत्तमः।
प्रारब्धमिति मत्वातु चित्ते शान्ति जगाम ह ॥ ९. ९१ ॥

9.55. இது எல்லாம் பிராம்மணர்களால் செய்யப் பட்ட தென்பதை அறிந்த அவர் கோபத்தால் சிவந்த கண்களுடன் பிராம்மண ரிஷிகளை யெல்லாம் சபித்தார்.

9.56. வேதமாதாவாகிய காயத்ரியினிடத்தும் அந்த தியானத்திலும் அந்த மந்திர ஜபத்திலும் நீங்கள் நோக்க மற்றவர்களாகவும் எல்லாவகையிலும் பிராம்மணர்களில் கடைப் பட்டவர்களாகவும் ஆகக் கடவீர்கள்.

9.77. உங்களுடைய வம்சத்தில் பிறந்தவர்களான ஸ்திரீகளும் அவ்வாறே புருஷர்களும் என்னால் கொடுக்கப் பட்ட சாபத்தால் பொசுங்கியவர்களாய் உங்களுக்குச் சமமாக ஆவார்கள்.

9.91. முனி சிரேஷ்டராகிய கௌதமர் இவ்வாறு அவர்களை யெல்லாம் வெளியேற்றி விட்டு இது ஒரு பிராரப்தம் என்று எண்ணி மனதைத் தேற்றிக் கொண்டார்.

एतस्मात्कारणाद्राजन् गते कृष्णे तु धीमति।
भुवि जाता ब्राह्मणाश्च शापदग्धाः पुरा तु ये ।। ९. ९२ ।।

सन्ध्यात्रयविहीनाश्च गायत्रीभक्तिवर्जिताः।
वेदभक्तिविहीनाश्च पाषण्डमतगामिनः ।। ९. ९३ ।।

पण्डिता अपि ते सर्वे दुराचारप्रवर्तकाः।
तस्मात्सर्वात्मना राजन् संसेव्या परमेश्वरी ।। ९. ९७ ।।

सर्वमुक्तं समासेन यत्पृष्टं तत्त्वयानघ।
अतः परं मणिद्वीपवर्णनं शृणु सुन्दरम् ।। ९. १०० ।।

।। इति परशक्ति-महिम्नवर्णनं संपूर्णम् ।।

।। इति श्रीदेवीभागवते द्वादशस्कन्धे नवमोऽध्यायः ।।

9.92–93. அரசே! இக்காரணத்தால் புத்தியிற் சிறந்த ஸ்ரீ கிருஷ்ணர் மறைந்த பின் சாபத்தால் முன்பு பொசுக்கப்பட்டவர்கள் எவர்களோ அவர்கள் மூன்று கால ஸந்தியாவந்தனமும் இல்லாதவர்களாய் காயத்ரீ பக்தியற்ற வர்களாய் வேதபக்தி இல்லாதவர்களாய் பாஷண்ட மதத் தைப் பின்பற்றுபவர்களான பிராம்மணர்களாய் பூமியில் தோன்றினுர்கள்.

9.97. அவர்கள் பண்டிதர்களாயிருந்தாலும் எல்லோ ரும் துராசாரத்தைக் கைக்கொண்டவர்கள். ஆகையால், அரசே, எவ்வாற்ருனும் பரமேச்வரியைப் பூஜிக்க வேண்டும்.

9.100. பாவமற்றவனே! உன்னுல் எது கேட்கப் பட்டதோ அது அனைத்தும் சுருக்கமாகக் கூறப்பட்டது. இனிமேல் அழகிய மணித்துவீப வர்ணனையைக் கேட்பாயாக.

இங்ஙனம் பராசக்தி மகிமை வர்ணனை
முற்றும்.

இங்ஙனம் ஸ்ரீதேவீபாகவதத்தில் பன்னிரண்டாவது
ஸ்கந்தத்தில் ஒன்பதாவது
அத்தியாயம் முற்றும்.

॥ मणिद्वीपवर्णनम् ॥ ५५॥

व्यास उवाच—

ब्रह्मलोकादूर्ध्वभागे सर्वलोकोऽस्ति यः श्रुतः।
मणिद्वीपः स एवऽस्ति यत्र देवी विराजते ॥ १०. १ ।

सर्वस्मादधिको यस्मात्सर्वलोकस्ततः स्मृतः।
पुरा पराम्बयैवायं कल्पितो मनसेच्छया ॥ १०. २ ॥

मणिद्वीपस्य परितो वर्तते सुधोदधिः।
विराजमानः परितस्तीररत्नद्रुमो महान् ॥ १०. ८ ॥

तदुत्तर-मयो धातु-र्निमितो गगने ततः।
सप्तयोजनविस्तीर्णः प्राकारो वर्तते महान् ॥ १०. ९ ॥

55. மணித்வீப வர்ணனே

வியாஸர் கூறியது—

10.1 பிரம்மலோகத்திற்கும் மேல் பாகத்தில் ஸர்வ லோக வடிவான மணித்வீபம் என்ற எது உளதோ அங்கு தேவி பிரகாசிக்கிருள்.

10.2. எல்லாவற்றிற்கும் அது மேம்பட்டதால் அது ஸர்வலோகம் எனப்படுகிறது. ஆதியில் பரதேவதையான அம்பிகையாலேயே அது மனதின் இச்சையால் கற்பிக்கப் பட்டது.

10.8. மணிதுவீபத்தைப் பாற்கடல் சூழ்ந்திருக்கிறது. அதன் கரையில் பெரிய சிறந்த விருக்ஷங்கள் பிரகாசிக் கின்றன.

10.9. அதற்கப்பால் ஆகாயத்தில் ஏழு யோஜனே உயர்ந்து விளங்கும் இரும்புப் பிராகாரம் உளது.

नानाशस्त्रप्रहरणा नानायुद्धविशारदाः।
रक्षका निवसन्त्यत्र मोदमानाः समन्ततः ॥ १०. १० ॥

वाटिका विविधा राजन् रत्नद्रुमविराजिताः।
तदुत्तरं महासारधातु-निर्मितमण्डलः ॥ १०. १७ ॥

सालोऽपरो महानस्ति गगनस्पर्शियच्छिरः।
गोपुरद्वारसहितो बहुवृक्षसमन्विताः ॥ १०. १८ ॥

नृत्यद् बर्हिकदम्बस्य केकरावैः सुखप्रदैः।
नादितं तद्वनं दिव्यं मधुस्रावि समन्ततः ॥ १०. ३३ ॥

कांस्यसालादुत्तरे तु ताम्रसालः प्रकीर्तितः।
द्वयोस्तु सालयोर्मध्ये संप्रोक्ता कल्पवाटिका ॥ १०. ३४ ॥

येषां तरूणां पुष्पाणि कांचनाभानि भूमिप।
तद्वनं रक्षितं राजन् वसन्तेनर्तुनाऽनिशम् ॥ १०. ३६ ॥

10.10. அங்கு பல ஆயுதங்களேத் தாங்கிய பலபோர் வீரர்கள் நாற்புறமும் சூழ்ந்து மகிழ்ச்சியுடன் காவல் புரிபவர்களாய் வசிக்கின்றனர்.

10.17–18. அரசே! சிறந்த விருக்ஷங்களுடன் கூடிய பல நந்தவனங்கள் இருக்கின்றன. அதற்கப்பால் வெண்கலக் கோட்டை ஒன்று மிகப் பெரியதாய் ஆகாயத்தை அளாவியதாய் கோபுரத்துவாரங்களுடனும் பல விருக்ஷங்களுடனும் கூடியதாய் உளது.

10.33. இன்பமாய்க் கூவிக் கொண்டு நடனமிடும் மயில் கூட்டங்களுடனும் தேனேப் பெருக்கும் மரங்கள் நிறைந்த வனங்களுடனும் கூடியது அது.

10.34. அந்த வெண்கல கோட்டைக்கப்பால் உள்ளது தாமிரக் கோட்டை எனக் கூறப்படுகிறது. இரண்டு கோட்டைகளுக்கும் மத்தியில் கல்பவாடிகை கூறப்படுகிறது.

10.36. அரசே! அம்மரங்களின் பூக்கள் பொன்மயமானவை. அந்த வனம் வஸந்தருது தேவதையால் எப்பொழுதும் காக்கப்படுகிறது.

ताम्रसालादुत्तरश्च सीससालः प्रकीर्तितः ।
सन्तानवाटिका मध्ये सालयोस्तु द्वयोर्नृप ॥ १०. ४३ ॥

ग्रीष्मर्तु-र्नायकस्तस्या वाटिकाया नृपोत्तम ।
सन्तापत्रस्तलोकास्तु वृक्षमूलेषु संस्थिताः ॥ १०. ४६ ॥

सीससालादुत्तरत्राप्यारकूटमयः शुभः ।
प्राकारो वर्तते राजन् मुनियोजनदैर्घ्यवान् ॥ १०. ४९ ॥

सालयोरधिनाथस्तु वर्षर्तुर्मेघवाहनः ।
वसन्ति देवाः सिद्धाश्च ये देवी कर्मकारिणः ॥ १०. ५६ ॥

वापीकूपतडागाश्च ये देव्यर्थं सर्मपिताः ।
आरकूटमयादग्रे सप्तयोजनदैर्घ्यवान् ॥ १०. ५७ ॥

पंचलोहात्मकः सालो मध्ये मन्दारवाटिका ।
अधिष्ठाताऽत्रसम्प्रोक्तः शरदृतुरनामयः ॥ १०. ५८ ॥

10.43. தாமிரக் கோட்டைக்கப்பால் ஈயக் கோட்டை கூறப்படுகிறது. இரு கோட்டைகளுக்கிடையில் ஸந்தான வாடிகை.

10.46. அரசசிரேஷ்டரே! அந்தத் தோட்டத்திற்கு நாயகன் கிரீஷ்மருது தேவதை. அம்மரங்களின் அடியில் இருப்பவர்கள் உலகிலுள்ள முவ்வகைத் துன்பங்களினின்றும் காக்கப்பட்டவர்களாகின்றனர்.

10.49–56. ஈயக் கோட்டைக்கப்பால் உள்ளது சுபமான பித்தளைக் கோட்டை. அது ஏழு யோஜனை நீளமுடையது. அதன் அதிநாதன் மேகவாகனனுகிய வர்ஷருது தேவதை. தேவியின் காரியங்களை கவனித்துச் செய்யும் தேவர்களும் சித்தர்களும் அங்கு வசிக்கிறார்கள்.

10.57–58. கிணறுகளும் தடாகங்களும் குளங்களும் தேவிக்காக அர்ப்பணம் செய்யப்பட்டவை அங்கு இருக்கின்றன. பித்தளைக் கோட்டைக்கப்பால் ஏழுயோஜனை நீளமுள்ள பஞ்சலோஹக் கோட்டை உளது. அதன் மத்தியில் மந்தார வாடிகை. நோயணுகமுடியாத சரத்ருது தேவதை இதற்கு அதிஷ்டாதா என்று கூறப்பட்டுள்ளது.

नानासिद्धा वसन्त्यत्र सांगनाः सपरिच्छदाः।
पंचलोहमयादग्रे सप्तयोजनदैर्घ्यवान् ॥ १०. ६० ॥

दीप्यमानो महाशृंगै-र्वर्तते रौप्यसालकः।
पारिजाताटवी मध्ये प्रसूनस्तबकान्विता ॥ १०. ६१ ॥

तत्राधिनाथः सम्प्रोक्तो हेमन्तर्तु-र्महोज्ज्वलः।
वसन्ति तत्र सिद्धाश्च ये देवीव्रतकारिणः ॥ १०. ६४ ॥

रौप्यसालमयादग्रे सप्तयोजनदैर्घ्यवान्।
सौवर्णसालः संप्रोक्तस्तप्तहाटककल्पितः ॥ १०. ६५ ॥

मध्ये कदंबवाटी तु पुष्पपल्लवशोभिता।
तत्राधिनाथः संप्रोक्तः शैशिरर्तु-र्महोदयः ॥ १०. ६७ ॥

निवसन्ति महासिद्धा ये देवी दानकारिणः।
नानाभोगसमुत्पन्न-महानन्दसमन्विताः ॥ १०. ७० ॥

10.60–61. பல சித்தர்கள் தங்கள் ஸ்திரீகளுடனும் பரிவாரங்களுடனும் இங்கு வசிக்கின்றனர். பஞ்சலோஹக் கோட்டைக்கப்பால் ஏழு யோஜனே விஸ்தீர்ணமுள்ளதும் கொடுமுடிகளுடன் பிரகாசிப்பதுமான வெள்ளிக் கோட்டை உளது. அதன் மத்தியில் புஷ்பக் கொத்துகளுடன் கூடிய பாரிஜாதவாடிகை.

10.64. மிகவும் பிரகாசமான ஹேமந்தருது தேவதை அங்கு அதிஷ்டாதா. தேவீ விரதங்களேச் செய்யும் சித்தர்கள் எவர்களோ அவர்கள் அங்கு வசிக்கின்றனர்.

10.65. வெள்ளிக் கோட்டைக்கப்பால் ஏழுயோஜனே நீளமுள்ள தங்கக் கோட்டை கூறப்படுகிறது. அது உருக்கிய பொன்னுலாகியது.

10.67. புஷ்பங்களுடனும் தளிர்களுடன் பிரகாசிக்கும் கதம்பவனம் மத்தியில் உள்ளது. சிறந்த சிசிர்ருது தேவதை அதற்கு அதிஷ்டாதா.

10.70. தேவியின் பொருட்டு தானங்களேச் செய்யும் மஹா சித்தர்கள் எவர்களோ அவர்கள் அங்கு வசிக்கின்றனர். அவர்கள் பலவித போகங்களாலேற்பட்ட மகா ஆனந்தத்துடன் கூடியவர்கள்.

स्वर्णसालमयादग्रे मुनियोजनदैर्घ्यवान् ।
पुष्परागमयः सालः कुंकुमारुणविग्रहः ।। १०. ७१ ।।

दिक्पाला निवसन्त्यत्र प्रतिब्रह्माण्डवर्तिनाम् ।
दिक्पालानां समष्टयात्मरूपाः स्फूर्जद्वरायुधाः ।। १०. ७६ ।।

पुष्परागमयादग्रे कुंकुमारुणविग्रहः ।
पद्मरागमयः सालो मध्ये भूश्चैव तादृशी ।। ११. १ ।।

तन्मणिस्तम्भसंयुक्ता मण्डपाः शतशो नृप ।
मध्ये भुवि समासीनाश्चतुः षष्टिमिताः कलाः ।। ११. ३ ।।

सर्वापि युद्धसामग्री तस्मिन् साले स्थिता मुने ।
पद्मरागमयादग्रे गोमेदमणि-निर्मितः ।। ११. २२ ।।

दशयोजनदैर्घ्येण प्राकारो वर्तते महान् ।
भास्वज्जपप्रसूनाभो मध्यभूस्तस्य तादृशी ।। ११. २३ ।।

10.71–76. தங்கக் கோட்டைக்கப்பால் ஏழு யோஜனை நீண்ட புஷ்பராகக் கோட்டை குங்குமம் போல் சிவந்த நிறமுடையது. அங்கு திக்பாலர்கள் வசிக்கின்றனர். ஒவ்வொரு பிரம்மாண்டத்திலுமிருக்கும் திக்பாலர்களின் ஸமஷ்டி வடிவினர்களான அவர்கள் சிறந்த வஜ்ராயுதங்களை உடையவர்கள்.

11.1. புஷ்பராகமயமான கோட்டைக்கப்பால் குங்குமம் போல் சிவந்த பத்மராகமயக் கோட்டை உளது. இடையிலுள்ள பூமியும் அப்படிப்பட்டதே.

11.3. அரசே! அதேமாதிரி ரத்தின ஸ்தம்பங்களுடன் கூடிய மண்டபங்கள் நூற்றுக் கணக்காக இருக்கின்றன.

11.22–23. எல்லாப் போர்த்தளவாடங்களும் அந்தக் கோட்டையில் இருக்கின்றன. பத்மராகமயக் கோட்டைக்கப்பால் கோமேதகரத்தினத்தால் நிர்மாணம் செய்யப்பட்டதும் பத்து யோஜனை நீண்டதுமான பெரிய பிரகாரம் உளது. அது செம்பருத்திப்பூப் போல் பிரகாசிப்பது. மத்திய பூமியும் அது போன்றதே.

तन्मध्यस्था महादेव्यो द्वात्रिंशच्छक्तयः स्मृताः ।
सर्वयुद्धसमारम्भस्तत्र देव्या विराजते ॥ ११. ३० ॥

गोमेदमयादग्रे सद्वज्रमणिनिर्मितः ।
दशयोजनतुंगोऽसौ गोपुरद्वारसंयुतः ॥ ११. ३७ ॥

तत्र श्रीभुवनेश्वर्या वसन्ति परिचारिकाः ।
वज्रसालादग्रभागे सालो वैदूर्यनिर्मितः ॥ ११. ५३ ॥

तत्राऽष्टदिक्षुपरितो ब्राह्म्यादीनां च मण्डलम् ।
प्रतिब्रह्माण्डमातॄणां ताः समष्टयः ईरिताः ॥ ११. ५७ ॥

तत्सालस्य चतुर्द्वार्षु वाहनानि महेशितुः ।
वैदूर्यमणिसालस्याऽप्यग्रे सालः परः स्मृतः ॥ ११. ६४ ॥

11.30. அதின் மத்தியில் முப்பத்திரண்டு மகாதேவி சக்திகள் உளர் எனக் கூறப்படுகிறது. எல்லாப் போர்க் கருவிகளும் அந்த தேவிகளுடன் காணப்படுகின்றன.

11.37. கோமேதகமய கோட்டைக்கப்பால் சிறந்த வயிரத்தால் நிர்மாணம் செய்யப்பட்டதும் பத்து யோஜனே நீண்டதும் கோபுரத்துவாரங்களுடன் கூடியதுமான கோட்டை உளது.

11.53 அங்கு புவனேசுவரியின் சேடிகள் வசிக்கிருர்கள். வயிரக் கோட்டைக்கப்பால் வைடூரியத்தால் நிர்மாணம் செய்யப்பட்ட கோட்டை உளது.

11.57. அங்கு எட்டு திக்குகளிலும் சுற்றி ப்ராஹ்மீ முதலானவர்களின் மண்டலம் உளது. ஒவ்வொரு பிரம் மாண்டத்தின் மாத்ருகைகளின் ஸமஷ்டி வடிவினர் அவர்கள் எனக் கூறப்படுகின்றனர்.

11.64. அந்தக் கோட்டையின் நான்கு வாயில்களிலும் மஹேசுவரியின் வாகனங்கள் இருக்கின்றன. வைடூரியக் கோட்டைக்கப்பாலும் இன்னெரு கோட்டை உளதெனக் கூறப்படுகிறது.

दशयोजनतुंगोऽसाविन्द्रनीलाश्म-निर्मितः।
तत्र पद्मं तु संप्रोक्तं बहुयोजनविस्तृतम् ।। ११. ६६ ।।

षोडशारं दीप्यमानं सुदर्शनमिवापरम्।
तत्र षोडशशक्तीनां स्थानानि विविधानि च ।। ११. ६७ ।।

सेनान्यः सकला एताः श्रीदेव्या जगदीशितुः।
प्रतिब्रह्माण्डसंस्थानां शक्तीनां नायिकाः स्मृताः ।। ११. ७१ ।।

इन्द्रनीलमहासालादग्रे तु बहुविस्तृतः।
मुक्ताप्राकारउदितो दशयोजनदैर्घ्यवान् ।। ११. ७४ ।।

मध्यभूः पूर्ववत्प्रोक्ता तन्मध्येऽष्टदलाम्बुजम्।
तत्र देवी-समाकारा देव्यायुधधराः सदा ।। ११. ७५ ।।

11.66. அது பத்து யோஜனை நீண்டு இந்திரநீலக் கற்களால் நிர்மாணம் செய்யப்பட்டது. அங்கு பல யோஜனை விஸ்தாரமுள்ள ஒரு தாமரை உளதெனக் கூறப் படுகிறது.

11.67. அது மற்றொரு ஸுதர்சன சக்கரத்தைப் போல் பதினாறு ஆரங்களுடன் பிரகாசிப்பது. அங்கு பதினாறு சக்திகளின் வெவ்வேறான ஸ்தானங்கள் இருக்கின்றன.

11.71 ஜகதீசுவரியான ஸ்ரீ தேவிக்கு இவர்களெல்லாம் சேனா நாயகிகள். ஒவ்வொரு பிரம்மாண்டத்திலும் உள்ள சக்திகளின் நாயகிகள் என இவர்கள் கூறப்படுகின்றனர்.

11.74. இந்திர நீலப் பெரிய கோட்டைக்கப்பால் மிக விஸ்தாரமான முத்துக் கோட்டை பத்து யோஜனை நீண்டுளது.

11.75. அதன் மத்திய பூமி முன் கூறியபடி உள்ளது. அம்மத்தியில் எட்டிதழ்த் தாமரை வடிவம். அதில் தேவிக்கு ஸமமான வடிவுடைய தேவியர்கள் எப்பொழுதும் ஆயுதபாணிகளாயிருக்கின்றனர்.

सम्प्रोक्ता अष्टमन्त्रिण्यो जगद्वार्ताप्रवोधिकाः।
नानाशक्तिसमायुक्ताः प्रतिब्रह्माण्डवर्तिनाम्।
प्राणिनां ताः समाचारं ज्ञानशक्त्या विदन्ति च ॥ ११. ७८ ॥

मुक्तासालादग्रभागे महामारकतो परः।
सालोत्तमः समुद्दिष्टो दशयोजन-दैर्घ्यवान् ॥ ११. ८३ ॥

षट्कोणमत्र विस्तीर्णं कोणस्था देवताः शृणु।
पूर्वकोणे चतुर्वक्त्रो गायत्री-सहितो विधिः ॥ ११. ८५ ॥

रक्षः कोणे शंखचक्रगदाम्बुज-कराम्बुजा।
सावित्री वर्तते तत्र महाविष्णुश्च तादृशः ॥ ११. ८६ ॥

वायुकोणे परश्वक्षमालाभयवरान्वितः।
महारुद्रो वर्ततेऽत्र सरस्वत्यपि तादृशी ॥ ११. ९१ ॥

11.78. உலக வியாபாரத்தை தேவிக்கு அறிவிக்கும் எட்டு மந்திரிணி தேவிகளாக அவர்கள் கூறப் படுகிறார்கள். அவர்கள் பலவிதமான சக்தி படைத்தவர்கள். ஒவ்வொரு பிரம்மாண்டத்திலுமிருக்கும் பிராணிகளின் ஸமாசாரங்களே அவர்கள் ஞானசக்தியால் அறிகின்றனர்.

11.83–89. முத்துக்கோட்டைக்கப்பால் உத்தமமான வயிரக்கோட்டை பத்து யோஜனே நீண்டது. அதில் உள்ள அறுகோணத்தில் விளங்கும் தேவதைகளேக் கூறுகிறேன், கேளும். கிழக்குக் கோணத்தில் நான்கு முகமுடையவரும் காயத்ரியுடன் கூடியவருமான பிரம்மா. நிர்ருதி கோணத்தில் சங்கமும், சக்கரமும், கதையும், தாமரையும் ஏந்திய ஸாவித்ரீ இருக்கிறாள்; அவளேப் போலவே அங்கு மகாவிஷ்ணுவும்.

11.91. வாயு கோணத்தில் பரசு, அக்ஷமாலே, அபயம், வரம், முதலியவற்றுடன் கூடிய மஹாருத்திரர் இருக்கிறார்; ஸரஸ்வதியும் அதேபோல்.

अग्निकोणे रत्नकुम्भं तथा मणिकरण्डकम् ।
दधानो निजहस्ताभ्यां कुबेरो धनदायकः ॥ ११. ९४ ॥

नानावीथीसमायुक्तो महालक्ष्मीसमन्वितः ।
देव्या निधिपतिस्त्वास्ते स्वगणैः परिवेष्टितः ॥ ११. ९५ ॥

वारुणे तु महाकोणे मदनो रतिसंयुतः ।
ईशानकोणे विघ्नेशो नित्यं पुष्टिसमन्वितः ॥ ११. ९७ ॥

महामारकतस्याग्रे शतयोजनदैर्घ्यवान् ।
प्रवालशालोऽस्त्यपरः कुंकुमारुणविग्रहः ॥ ११. १०० ॥

तन्मध्ये पंचभूतानां स्वामिन्यः पंच सन्ति च ।
हृल्लेखा गगना रक्ता चतुर्थी तु करालिका ।
महोच्छुष्मा पंचमी च पंचभूतसमप्रभाः ॥ ११. १०२ ॥

11.94—95. அக்னிகோணத்தில் ரத்னகும்பம், ரத்ன கரண்டகம் ஆகியவற்றைத் தன் கைகளில் தாங்கும் தன தாயகனுன குபேரன் பலவரிசைகளுடன் மஹாலக்ஷ்மி சேரப் பெற்றுத் தனது கணங்களால் சூழப்பெற்று தேவியுடன் இருக்கிறுன்.

11.97. சிறப்பான வருணதிக்கில் ரதியுடன் கூடிய மன்மதனும், ஈசானதிக்கில் எப்பொழுதும் புஷ்டி சக்தியுடன் கூடிய விக்னேசரும் இருக்கின்றனர்.

11.100. மகா மரகதக் கோட்டைக்கப்பால் நூறு யோஜனை நீண்டதும் குங்குமம் போல் சிவந்ததுமான பவழக் கோட்டை ஒன்று உளது.

11.102. அதின் மத்தியில் பஞ்சபூதங்களை ஆளும் ஐந்து தேவதைகள் இருக்கிறுர்கள்: ஹ்ருல்லேகா, ககனு, ரக்தா, நான்காவது கராலிகா, ஐந்தாவது மஹோச்சுஷ்மா: இவர்கள் பஞ்சபூதங்களுக்குப் பொருத்தமான பிரகாசமுடையவர்கள்.

प्रवालशालादग्रे तु नवरत्नविनिर्मितः।
बहुयोजनविस्तीर्णो महाशालोऽस्ति भूमिप ॥ ११. १०४ ॥

तत्र चाम्नायदेवीनां सदनानि बहून्यपि।
श्रीदेव्या येऽवताराः स्युस्ते तत्र निवसन्ति हि ॥ ११. १०६ ॥

सप्तकोटि-महामन्त्र-देवताः सन्ति तत्र हि।
नवरत्नमयादग्रे चिन्तामणिगृहं महत् ॥ ११. १०८ ॥

तदेव देवीसदनं मध्यभागे विराजते।
सहस्रस्तम्भसंयुक्ताश्चत्वारस्तेषु मण्डपाः ॥ १२. १ ॥

शृंगारमण्डपश्चैको मुक्तिमण्डप एव च।
ज्ञानमण्डपसंज्ञस्तु तृतीयः परिकीर्तितः।
एकान्तमण्डपश्चैव चतुर्थः परिकीर्तितः ॥ १२. ३ ॥

11.104. அரசே! பவழக் கோட்டைக்கப்பால் நவரத்னங்களால் நிர்மாணஞ்செய்யப்பட்டதும் பல யோஜனேகள் விஸ்தீர்ணமுள்ளதுமான பெரியதொரு கோட்டை உளது.

11.106. அங்கு ஆம்ஞய தேவிகளின் கிருஹங்கள் பல இருக்கின்றன. ஸ்ரீதேவியின் அவதாரங்களான தேவிகள் அங்கு வசிக்கின்றனர்.

11.108. அங்கு ஏழு கோடி மஹாமந்த்ர தேவதைகள் இருக்கின்றனர். நவரத்னக் கோட்டைக்கப்பால் மஹத்தான சிந்தாமணி கிருஹம் உளது.

12.1. அதின் மத்திய பாகத்தில் தான் தேவியின் இருப்பிடம் உளது. அங்கே ஆயிரங்கால் மண்டபங்கள் நான்கு உள்ளன.

12.3. முதலில் சிருங்கார மண்டபம், இரண்டாவது முக்தி மண்டபம், மூன்ருவது ஞான மண்டபம், நான்காவது ஏகாந்த மண்டபம் எனப்படுவது.

चिन्तामणिगृहे राजञ्छक्तितत्त्वात्मकैः परैः।
सोपानै-र्दशभिर्युक्तो मंचकोऽप्यधिराजते ॥ १२. ११ ॥

ब्रह्मा विष्णुश्च रुद्रश्च ईश्वरश्च सदाशिवः।
एते मंचखुराः प्रोक्ताः फलकस्तु सदाशिवः ॥ १२. १२ ॥

तस्योपरि महादेवो भुवनेशो विराजते।
या देवी निजलीलार्थं द्विधाभूता बभूव ह ॥ १२. १३ ॥

सृष्टयादौ तु स एवाऽयं तदर्धांगो महेश्वरः।
पंचवक्त्रस्त्रिनेत्रश्च मणिभूषणभूषितः ॥ १२. १५ ॥

12.11. அரசே! சிந்தாமணி கிருஹத்தில் பராசக்தி தத்துவாத்மகமாயிருக்கின்ற பத்துப்படிகளோடு கூடிய ஒரு கட்டில் பிரகாசிக்கின்றது.

12.12. பிரம்மா, விஷ்ணு, ருத்ரன், ஈசுவரன் ஆகியோர் இக்கட்டிலின் கால்கள் எனவும் ஸதாசிவன் பலகை எனவும் கூறப்படுகின்றனர்.

12.13. எந்த தேவி தனது லீலைக்காக இரண்டு உருக் கொண்டாளோ அவள் அந்தக் கட்டிலின் மேல் உலக நாயக ரான மகாதேவராகவும் விளங்குவாள்.

12.15. சிருஷ்டியின் ஆதியில் தேவியுடன் பாதியுடல் படைத்தவராகவே மஹேசுவரர் இருப்பார். அவர் முக் கண் படைத்த ஐந்து முகங்களுடன் ரத்தினுபரணங்களால் அலங்கரிக்கப்பெற்று விளங்குவார்.

वामांके सन्निषण्णाऽस्य देवी श्रीभुवनेश्वरी।
सौन्दर्यधारा सर्वस्वा निर्व्याजकरुणामयी।
सर्वेशत्वं महेशस्य यत्संगादेव नान्यथा ॥ १२. ३९ ॥

इत्थं राजन् मया प्रोक्तं मणिद्वीपं महत्तरम्।
ऐश्वर्यस्य समग्रस्य श्रृंगारस्याखिलस्य च ॥ १२. ६७ ॥
सर्वज्ञतायाः सर्वायारतेजसश्चाऽखिलस्य च।
पराक्रमस्य सर्वस्य सर्वोत्तमगुणस्य च ॥ १२. ६८ ॥
सकलाया दयायाश्च समाप्तिरिह भूपते।
राज्ञ आनन्दमारभ्य ब्रह्मलोकान्तभूमिषु ॥ १२. ६९ ॥
आनन्दा ये स्थिताः सर्वे तेऽत्रैवान्तर्भवन्ति हि।
एतस्य स्मरणात्सद्यः सर्वं पापं विनश्यति।
प्राणोत्क्रमणसन्धौ तु स्मृत्वा तत्रैव गच्छति ॥ १२. ७१ ॥

12.39—67. அவர் மடிமேல் இடதுபுறம் ஸ்ரீ புவனேசுவரி தேவி வீற்றிருப்பாள். அவள் அழகின் பெருக்காகவும் எல்லாச் செல்வங்களையும் உடையவளாகவும் காரணமற்ற கருணை உடையவளாகவும் விளங்குபவள். மகேசுவரனுக்கு ஸர்வேசுவரத்தன்மை அவளுடைய கூட்டுறவாலேயேயன்றி வேறு விதமாயன்று. அரசே! ஐசுவரியம் அனைத்திற்கும் சிருங்காரம் முழுவதிற்கும் உத்தம உறைவிடமான மணித்வீபம் இங்ஙனம் என்னால் வர்ணிக்கப்பட்டது.

12.68—71. அரசே! எல்லாவற்றின் ஞானத்திற்கும் எல்லா ஒளிக்கும் எல்லாப் பராக்கிரமத்திற்கும் எல்லா உத்தம குணங்களுக்கும் எல்லா தயைக்கும் இங்கு பரிபூர்ணத்துவம். அரசானந்தம் தொடங்கி பிரம்மலோகம் முடிய எல்லா நிலைகளிலும் உள்ள ஆனந்தம் எவையோ அவையெல்லாம் இதனுள் அடங்குகின்றன. இதை நினைத்த மாத்திரத்திலேயே அப்பொழுதே எல்லாப் பாவமும் அழிவடைகின்றது. உயிர் போகுந் தருணத்தில் அதை நினைப்பதால் ஒருவன் அங்கு செல்வான்.

अध्यायपंचकं त्वेतत्पटेन्नित्यं समाहितः ।
भूतप्रेतपिशाचादि बाधा तत्र भवेन्नहि ॥ १२. ७२ ॥

नवीनगृहनिर्माणे वास्तुयागे तथैव च ।
पठितव्यं प्रयत्नेन कल्याणं तेन जायते ॥ १२. ७३ ॥

॥ मणिद्वीपवर्णनं संपूर्णम् ॥

॥ इति श्रीदेवीभागवते द्वादशस्कन्धे द्वादशोऽध्यायः ॥

12.72 இவ்வைந்து அத்தியாயங்களையும் நாள்தோறும் கவனத்துடன் படித்தால் அங்கு பூத ப்ரேத பிசாசங்களின் உபத்ரவம் ஏற்படாது.

12.73. புது வீடுகட்டும் பொழுதும் வாஸ்து யாகத்திலும் இதை முயற்சியுடன் படிக்க வேண்டும். அதனுல் மங்களம் ஏற்படும்.

மணித்வீபவர்ணனம் முற்றும்.

இங்ஙனம் ஸ்ரீதேவீபாகவதத்தில் பன்னிரண்டாவது ஸ்கந்தத்தில் பன்னிரண்டாவது அத்தியாயம் முற்றும்.

॥ जनमेजयस्य देवीयागपूर्तिः ॥ ५६ ॥

व्यास उवाच—

इति ते कथितं भूप यद्यत्पृष्टं त्वयाऽनघ ।
नारायणेन यत्प्रोक्तं नारदाय महात्मने ॥ १३. १ ॥

श्रुत्वैतत्तुमहादेव्याः पुराणं परमाद्भुतम् ।
कृतकृत्यो भवेन्मर्त्यो देव्याः प्रियतमो हि सः ॥ १३. २ ॥

कुरु चाऽम्बामखं राजन् स्वपित्रुद्धरणाय वै ।
खिन्नोऽसि येन राजेन्द्र पितुर्ज्ञात्वा तु दुर्गतिम् ॥ १३. ३ ॥

56. ஜனமேஜயனுடைய தேவீயாக பூர்த்தி

வியாஸர் கூறியது—

13.1. அரசே! பாவமற்றவனே! உன்னால் எதெது கேட்கப் பட்டதோ அதெல்லாம் நாராயணரிஷியால் நாரதருக்குப் கூறப்பட்ட பிரகாரம் இங்ஙனம் உனக்கு எடுத்துரைக்கப்பட்டது.

13.2. மகாதேவியின் பரம அற்புதமான இந்தப் புராணத்தைக் கேட்ட மனிதன் கிருதகிருத்யனுவான்; அவன் தேவியின் பிரியத்திற்கு பாத்திரமானவர்களில் சிறந்தவன்.

13.3. அரசசிரேஷ்டனே! பிதாவின் துர்க்கதியை அறிந்த எக்காரணத்தால் நீ மனவருத்தமடைந்துள்ளாயோ அந்த பிதாவின் உத்தரணத்திற்காக தேவீயாகத்தைச் செய்வாயாக.

सूत उवाच—

तच्छ्रुत्वा नृपशार्दूलः प्रार्थयित्वा मुनीश्वरम्।
तस्मादेव महामन्त्रं देवीप्रणवसंज्ञकम्॥ १३. ५॥

दीक्षाविधिविधानेन जग्राह नृपसत्तमः।
तत आहूय दौम्यादीन्नवरात्रसमागमे॥ १३. ६॥

अम्बायज्ञं चकाराशु वित्तशाठ्यविवर्जितः।
ब्राह्मणैः पाठयामास पुराणन्त्वेतदुत्तमम्॥ १३. ७॥

श्रीदेव्यग्रेऽम्बिकाप्रीत्यै देवीभागवतं परम्।
ब्राह्मणान् भोजयामासाऽप्यसंख्यातान् सुवासिनीः॥ १३. ८॥

ஸூதர் கூறியது—

13.5–6. அதைக்கேட்ட அரசசிரேஷ்டன் முனீசுவரரைப் பிரார்த்தித்து அவரிடமிருந்தே தேவீப் பிரணவம் எனப் பெயர் பெற்ற மஹாமந்திரத்தை தீக்ஷா முறைப்படி பெற்றுக்கொண்டு பிறகு நவராத்திரி வந்ததும் தௌம்யர் முதலியவர்களை அழைத்து;

13.7–8. பொருளில் வஞ்சனையின்றி விரைவில் தேவீ யாகத்தைச் செய்தான். பிராம்மணர்களைக் கொண்டு தேவியின் ஸந்நிதியில் அவளுடைய பிரீதிக்காக தேவீ பாகவதமாகிய இந்த உத்தம புராணத்தைப் படிக்கும்படி செய்தான். கணக்கற்ற பிராம்மணர்களுக்கும் ஸுவாஸினிகளுக்கும் போஜனமளித்தான்.

कुमारी-र्वटुकादींश्च दीनानाथांस्तथैव च ।
द्रव्यप्रदानैनस्तान् सर्वान् सन्तोष्य वसुधाधिपः ॥ १३. ९ ॥

समाप्य यज्ञं संस्थाने संस्थितो यावदेव हि ।
तावदेव हि चाकाशान्नारदः समवातरत् ॥ १३. १० ॥

रणयन्महतीं वीणां ज्वलदग्निशिखोपमः ।
ससम्भ्रमः समुत्थाय दृष्ट्वा तं नारदं मुनिम् ॥ १३. ११ ॥

आसनाद्युपचारैश्च पूजयामास भूमिपः ।
कृत्वा तु कुशलप्रश्नं पप्रच्छागमकारणम् ॥ १३. १२ ॥

कुत आगमनं साधो ब्रूहि किं करवाणि ते ।
सनाथोऽहं कृतार्थोऽहं त्वदागमनकारणात् ॥ १३. १३ ॥

इति राज्ञो वचः श्रुत्वा प्रोवाच मुनिसत्तमः ।
अद्याश्चर्यं मया दृष्टं देवलोके नृपोत्तम ॥ १३. १४ ॥

13.9–12. குமாரிகளையும் பிரம்மசாரிகளையும் தீனர் களையும் அநாதைகளையும் அவ்வாறே திரவிய தானத்தால் எல்லோரையும் மகிழ்வித்து அரசன் யாகத்தைப் பூர்த்தி செய்து தனது ஸ்தானத்திலிருந்த பொழுது நாரதர் மஹதீ எனும் தமது வீணையை மீட்டிக்கொண்டு ஜ்வலிக்கும் தீக்கொழுந்தைப் போன்ற பிரகாசத்துடன் ஆகாயத்திலி ருந்து இறங்கினர். அந்த நாரத முனிவரைக் கண்டு அரசன் பரபரப்புடன் எழுந்து ஆஸனம் முதலிய உபசாரங்களால் பூஜித்து நல்வரவு கூறி எழுந்தருளிய காரணத்தை வினவினன்.

13.13. 'ஸாதுவே! தங்கள் வரவு எதற்காக? நான் தங்களுக்கு என்ன செய்ய வேண்டும்? தாங்கள் வந்த காரணத்தான் நான் கிருதார்த்தனுகவும் நாதனை உடைய னுகவும் ஆகிறேன்.'

13.14. அரசனுடைய இவ்வார்த்தையைக் கேட்ட முனிசிரேஷ்டர் கூறுவார்: 'அரசசிரேஷ்டரே! இன்று என்னுல் தேவலோகத்தில் ஒரு ஆச்சரியம் பார்க்கப்பட்டது.

तन्निवेदयितुं प्राप्तस्त्वत्सकाशे सुविस्मितः।
पिता ते दुर्गतिं प्राप्तो निजकर्मविपर्ययात् ॥ १३. १५ ॥

स एवाऽयं दिव्यरूपवपुर्भूत्वाऽधुनैव हि।
देवदेवैः स्तुतः सम्यगप्सरोभिः समन्ततः ॥ १३. १६ ॥

विमानवरमारुह्य मणिद्वीपं गतोऽभवत् ।
देवीभागवतस्याऽस्य श्रवणोत्थफलेन च ॥ १३. १७ ॥

अम्बामखफलेनाऽपि पिता ते सुगतिं गतः।
धन्योऽसि कृतकृत्योऽसि जीवितं सफलं तव ॥ १३. १८ ॥

नारदोक्तं समाकर्ण्य प्रेमगद्गदितान्तरः।
पपात पादाम्बुजयोर्व्यासस्याद्भुतकर्मणः ॥ १३. २० ॥

13.15–18. 'அதைத் தெரிவிப்பதற்காக வியப்புடன் உமது சமீபம் வந்துள்ளேன். துர்க்கதியை அடைந்திருந்த உமது தந்தை தனது கர்மத்தின் மாறுதலால் தேவவடிவான சரீரத்தை யடைந்து இப்பொழுது தேவதேவர்களால் புகழப் பெற்றுச் சிறப்பாக அப்ஸரஸ்ஸுகளால் சூழப் பெற்றவராய் சிறந்த விமானத்திலேறிக் கொண்டு மணித் துவீபம் செல்பவரானுர். நீர் தேவீபாகவதத்தைக் கேட்டதாலும் அம்பிகையின் யாகத்தைச் செய்ததாலும் ஏற்பட்ட நற்பயனுல் உமது பிதா நற்கதியடைந்தவராகின்ருர். நீர் அருட் செல்வம் படைத்தவர், கிருதகிருத்யர்; உமது வாழ்க்கை பயனுடையதாயிற்று.' [இங்ஙனம் கூறிவிட்டு நாரதர் வந்தபடி சென்ருர்].

13.20. நாரதர் கூறியதைக் கேட்டுப் பிரேமையால் உள்ளம் நெகிழ்ந்த அரசன் அற்புதச் செயல்களுடைய வியாஸருடைய பாதகமலங்களில் வீழ்ந்து நமஸ்கரித்தான்.

तवाऽनुग्रहतो देव कृतार्थोऽहं महामुने।
किं मया प्रतिकर्तव्यं नमस्काराद्दते तव ॥ १३. २१ ॥

अनुग्राह्यः सदैवाह-मेवमेव त्वया मुने।
इति राज्ञो वचः श्रुत्वाप्याशीर्भि-रभिनन्द्य च ॥ १३. २२ ॥

उवाच वचनं श्लक्ष्णं भगवान् बादरायणः।
राजन् सर्वं परित्यज्य भज देविपदाम्बुजम् ॥ १३. २३ ॥

देवीभागवतं चैव पठ नित्यं समाहितः।
अम्बामखं सदा भक्त्या कुरु नित्यमतन्द्रितः ॥ १३. २४ ॥

अनायासेन तेन त्वं मोक्ष्यसे भवबन्धनात्।
सारमेतत्पुराणानां वेदानां चैव सर्वशः ॥ १३. २६ ॥

13.21. 'தேவா ! மகாமுனிவரே ! உங்களுடைய அனுக்கிரகத்தால் நான் கிருதார்த்தனுனேன். நமஸ்காரத்தையன்றி உங்களுக்கு என்னுல் செய்யக் கூடிய பிரதி என்ன இருக்கிறது ?

13.22–26. 'முனிவரே ! இவ்வாறே உங்களால் நான் எப்பொழுதும் அநுக்கிரகிக்கப்பட வேண்டும்' என்று கூறிய அரசனுடைய வார்த்தையைக் கேட்டு ஆசீர்வாதங்களால் அவனை மகிழ்வித்து பகவான் பாதராயணர் பின்வருமாறு அழகிய வார்த்தைகளைப் பேசினுர். 'அரசே ! எல்லாவற்றையும் விட்டு தேவியின் திருவடித்தாமரைகளையே தொழுவாயாக. தேவீபாகவதத்தையும் ஒன்றுபட்ட மனத்துடன் நித்தியம் படி. சோம்பலின்றி எப்பொழுதும் பக்தியுடன் அம்பிகையின் யாகத்தையும் செய். அதனுல் நீ வருத்தமின்றி பிறவிப் பிணியினின்று விடுபடுவாய். வேதங்களிலும் புராணங்களிலும் முற்றும் ஸாரமானது இது.'

इत्युक्त्वा नृपवर्यं तं जगाम मुनिराट् ततः।
जग्मुश्चैव यथास्थानं धौम्यादिमुनयोऽमलाः ॥ १३. २८ ॥

देवीभागवतस्यैव प्रशंसां चक्रुरुत्तमाम्।
राजा शशास धरणीं ततः सन्तुष्टमानसः।
देवीभागवतं चैव पठञ्छृण्वन्निरन्तरम् ॥ १३. २९ ॥

॥ इति जनमेजयस्य देवीयागपूर्तिः ॥

॥ इति श्रीदेवीभागवते द्वादशस्कन्धे त्रयोदशोऽध्यायः ॥

13.28. இங்ஙனம் அரசசிரேஷ்டனிடம் கூறிவிட்டு முனிவர்களின் தலைவர் அங்கிருந்து சென்றார். மாசற்ற தௌமியர் முதலிய முனிவர்களும் தத்தமிருப்பிடமேகினர்.

13.29. அவர்கள் தேவீபாகவதத்தின் உத்தமமான புகழைப் பிரசாரம் செய்தனர். பிறகு அரசன் ஸந்தோஷம் நிறைந்த மனதுடன் தேவீபாகவதத்தை இடைவிடாது படித்துக் கொண்டும் கேட்டுக் கொண்டும் பூமியை ஆண்டு வந்தான்.

இங்ஙனம் ஜனமேஜயனுடைய தேவீயாக
வர்ணனை முற்றும்.

இங்ஙனம் ஸ்ரீதேவீபாகவதத்தில் பன்னிரண்டாவது
ஸ்கந்தத்தில் பதின்மூன்றாவது
அத்தியாயம் முற்றும்.

॥ श्रीदेवीभागवतमाहात्म्यम् ॥ ५७ ॥

सूत उवाच—

अर्धश्लोकात्मकं यत्तु देवीवक्त्राब्ज-निर्गतम् ।
श्रीमद्भागवतं नाम वेदसिद्धान्तबोधकम् ॥ १४. १ ॥

उपदिष्टं विष्णवे यद्वटपत्रनिवासिने ।
शतकोटिप्रविस्तीर्णं तत्कृतं ब्रह्मणा पुरा ॥ १४. २ ॥

तत्सारमेकतः कृत्वा व्यासेन शुकहेतवे ।
अष्टादशसहस्रं तु द्वादशस्कन्धसंयुतम् ॥ १४. ३ ॥

देवीभागवतं नाम पुराणं ग्रथितं पुरा ।
नानेन सदृशं पुण्यं पवित्रं पापनाशनम् ॥ १४. ५ ॥

57. ஸ்ரீதேவீபாகவத மாஹாத்மியம்

ஸூதர் கூறியது—

14.1–2 தேவியின் முககமலத்தினின்று வெளிப் பட்டதும் அரை சுலோகவடிவானதும் வேதஸித்தாந்தத்தைப் போதிப்பதுமான எந்த பிரசித்தமான ஸ்ரீமத்பாகவதம் ஆலிலே மேல் பள்ளி கொண்ட விஷ்ணுவுக்கு உபதேசிக்கப் பட்டதோ அதுவே ஆதியில் பிரம்மாவால் நூறு கோடியாக விஸ்தரிக்கப்பட்டது.

14.3–5. அதின் ஸாரமாக வியாஸரால் சுகரின் பொருட்டு செய்யப்பட்டது பதினெண்ணாயிரம் சுலோகங் களும் பன்னிரண்டு ஸ்கந்தங்களுடன் கூடியதுமான தேவீ பாகவத புராணம். பாவத்தைப் போக்குவதும் பவித்திர மானதும் புண்ணியமானதும் அதற்குச் சமமாக எதுவு மில்லை.

पौराणिकं पूजयित्वा वस्त्राद्याभरणादिभिः ।
व्यासबुद्ध्या तन्मुखात्तु श्रुत्वैतत्समुपोषितः ।। १४. ६ ।।

लिखित्वा निजहस्तेन लेखकेनऽथवा मुने ।
प्रौष्ठपद्यां पौर्णमास्यां हेमसिंहसमन्वितम् ।। १४. ७ ।।

दद्यात्पौराणिकायाऽथ दक्षिणां च पयस्विनीम् ।
सालंकृतां सवत्सां च कपिलां हेममालिनीम् ।। १४. ८ ।।

भोजयेद् ब्राह्मणानन्तेप्यध्यायपरिसम्मितान् ।
सुवासिनीस्तावतीश्च कुमारी वटुकैः सह ।। १४. ९ ।।

देवीबुद्ध्या पूजयेत्तान् वसनाभरणादिभिः ।
पायसान्नवरेणाऽपि गन्धस्त्रक्कुसुमादिभिः ।। १४. १० ।।

14.6–8. முனிவரே ! வஸ்திரம், பூஷணம் முதலியவற்ருல் பௌராணிகரைப் பூஜித்து அவரே வியாஸர் என்ற புத்தியுடன் அவர் முகத்திலிருந்து கேட்டு உபவாஸமிருந்து தன் கையாலோ அல்லது வேறு எழுத்தாளரைக் கொண்டோ எழுதிப் புரட்டாசிப் பௌர்ணமியன்று தங்கத்தால் செய்த ஒரு சிங்க விக்கரகத்துடன் பௌராணிகருக்கு தக்ஷிணையுடன் தானம் செய்ய வேண்டும். அலங்காரஞ் செய்யப் பெற்றதும் கன்றுடன் கூடியதும் பொன்மாலையுடன் கூடியதும் கபிலை நிறமானதுமான கறவைப் பசுவையும் தானம் செய்ய வேண்டும்.

14.9–10. அத்தியாயக் கணக்குச்சமமாக (318) பிராம்மண போஜனத்தையும் செய்விக்க வேண்டும். அதே கணக்கில் ஸுமங்கலிகளையும் குமாரிகளுடனும் பிரம்மசாரிகளுடனும் வஸ்திரங்களாலும் ஆபரணங்களாலும் சந்தனம் புஷ்பமாலை சிறந்த பாயஸான்னம் ஆகிய வற்ருலும் தேவீ புத்தியுடன் பூஜிக்க வேண்டும்.

पुराणदानेनैतेन भूदानस्य फलं लभेत् ।
इहलोके सुखी भूत्वाऽप्यन्ते देवीपुरं व्रजेत् ॥ १४. ११ ॥

नित्यं यः श्रृणुयाद्भक्त्या देवीभागवतं परम् ।
न तस्य दुर्लभं किंचित्कदाचित्क्वचिदस्ति हि ॥ १४. १२ ॥

अपुत्रो लभते पुत्रान् धनार्थी धनमाप्नुयात् ।
विद्यार्थी प्राप्नुयाद्विद्यां कीर्तिमण्डितभूतलः ॥ १४. १३ ॥

यद्गृहे पुस्तकं चैतत्पूजितं यदि तिष्ठति ।
तद्गेहं न त्यजेन्नित्यं रमाचैव सरस्वती ।
नेक्षन्ते तत्र वेतालडाकिनीराक्षसादयः ॥ १४. १६ ॥

प्रतिसन्ध्यं पठेद्यस्तु सन्ध्यां कृत्वा समाहितः ।
एकैकमस्याचाध्यायं स नरो ज्ञानवान् भवेत् ॥ १४. १८ ॥

14.11. இந்தப் புராணதானத்தால் ஒருவன் பூதான பலத்தை அடைவான். இவ்வுலகில் இன்புற்றிருந்து முடிவில் தேவியின் லோகம் செல்வான்.

14.12. சிறந்த தேவீபாகவதத்தை நாள்தோறும் பக்தியுடன் எவன் கேட்கிறானோ அவனுக்கு அடையக்கூடாதது எங்கும் எப்பொழுதும் எதுவுமில்லை.

14.13. புத்திரனில்லாதவன் புத்திரனையடைவான், தனத்தை நாடுபவன் தனத்தையடைவான், வித்தையை வேண்டுபவன் வித்தையை அடைவான். அவன் புகழ் பூவுலகை வியாபிக்கும்.

14.16. எந்த வீட்டில் இந்தப்புஸ்தகம் பூஜிக்கப்பட்டு நிலை பெறுகிறதோ அந்த வீட்டை லக்ஷ்மியும் ஸரஸ்வதியும் விட்டு விலக மாட்டார்கள். அங்கு வேதாளம் டாகினீ ராக்ஷஸர்கள் முதலியோர் நோக்கவும் மாட்டார்கள்.

14.18. எந்த மனிதன் ஒவ்வொரு ஸந்தியாகாலத்திலும் மனதையடக்கி ஒவ்வொரு அத்தியாயத்தைப் படிக்கிறானோ அவன் ஞானவானாவான்.

नवरात्रे पठेन्नित्यं शारदीयेऽति भक्तितः।
तस्याऽम्बिका तु सन्तुष्टा ददातीच्छाधिकं फलम् ॥ १४. २० ॥

वैष्णवैश्च शैवैश्च रमोमाप्रीतये सदा।
सौरैश्च गाणपत्यैश्च स्वेष्टशक्तेश्च तुष्टये ॥ १४. २१ ॥

पठितव्यं प्रयत्नेन नवरात्रचतुष्टये।
वैदिकै-र्निजगायत्री-प्रीतये नित्यशो मुने ॥ १४. २२ ॥

पठितव्यं प्रयत्नेन विरोधो नाऽत्र कस्यचित्।
उपासना तु सर्वेषां शक्तियुक्ताऽस्ति सर्वदा ॥ १४. २३ ॥

वेदसारमिदं पुण्यं पुराणं द्विजसत्तमाः।
वेदपाठसमं पाठे श्रवणे च तथैव हि ॥ १४. २६ ॥

14.20. சரத்கால நவராத்திரியில் மிகுந்த பக்தியுடன் நாள்தோறும் படிப்பவனிடம் அம்பிகை ஸந்தோஷித்து அவன் விரும்பியதைவிட அதிகமாக பலனை அவனுக்கு அளிப்பாள்.

14.21–22. முனிவரே! வைஷ்ணவர்களால் லக்ஷ்மியின் பிரீதிக்காகவும் சைவர்களால் உமாதேவியின் பிரீதிக்காகவும் ஸௌரர்களாலும் காணபத்யர்களாலும் அவரவர் இஷ்ட சக்தியின் ஸந்தோஷத்திற்காகவும் வைதீகர்களால் தங்கள் காயத்ரியின் பிரீதிக்காகவும் நாள்தோறும் நாலு நவராத்திரிகளிலும் சிரத்தையுடன் இது பாராயணம் செய்யப்பட வேண்டும்.

14.23. முயர்ச்சியுடன் இது படிக்கப்பட வேண்டும். இதில் எவருக்கும் விரோதமில்லை. எல்லோருக்கும் எல்லாக் காலத்திலும் உபாஸனை சக்திஸம்பந்தமானதேயாகும்.

14.26. பிராம்மண சிரேஷ்டர்களே! இந்தப்புராணம் வேதஸாரமானது, புண்ணியமானது. இதைப் படிப்பது வேதத்தைப் படிப்பதற்குச் சமம். இதைக் கேட்பதும் அப்படியே.

सच्चिदानन्दरूपां तां गायत्रीप्रतिपादिताम् ।
नमामि ह्रींमयीं देवीं धियो यो नः प्रचोदयात् ।। १४. २७ ।।

इति सूतवचः श्रुत्वा नैमिषीयास्तपोधनाः ।
पूजयामासुरत्युच्चैः सूतं पौराणिकोत्तमम् ।। १४. २८ ।।

प्रसन्नहृदयाः सर्वे देवीपादाम्बुजार्चकाः ।
निर्वृत्तिं परमां प्राप्ताः पुराणस्य प्रभावतः ।। १४. २९ ।।

नमश्चक्रुः पुनः सूतं क्षमाप्य च मुहुर्मुहुः ।
संसारवारिधेस्तात प्लवोऽस्माकं त्वमेव हि ।। १४. ३० ।।

14.27 ஸச்சிதானந்தரூபிணியும் காயத்ரீமந்திரத்தால் பிரதிபாதிக்கப்பட்டவளும் நம்முடைய புத்திசக்திகளைப் பிரேரணை செய்பவளும் 'ஹ்ரீம்' எனும் மந்திர வடிவானவ வளுமான தேவியை நான் நமஸ்கரிக்கிறேன்.

14.28. நைமிசாரணியத்திலிருந்த தபோதனர்கள் ஸூதர் கூறிய இவ்வார்த்தையைக் கேட்டு அந்தப் பௌ ராணிக உத்தமரை மிகச் சிறப்பாகப் பூஜித்தார்கள்.

14.29. புராணத்தின் பிரபாவத்தால் தேவியின் பாதகமலங்களைப் போற்றிய அவர்கள் எல்லோரும் பிரஸன்ன இருதயமுடையவர்களாகவும் பரமானந்தத்தை அடைந்த வர்களாகவும் விளங்கினார்கள்.

14.30. அவர்கள் ஸூதரிடம் அபராத க்ஷமாபனம் செய்து கொண்டு மீண்டும் மீண்டும் நமஸ்கரித்து 'ஐயனே! ஸம்ஸாரஸாகரத்தை தாண்டுவதற்கு நீங்கள்தான் எங்க ளுக்குக் கப்பல் போன்றவர்' என்று கூறினார்கள்.

इति स मुनिवराणामग्रतः श्रावयित्वा
सकलनिगमगुह्यं दौर्गमेतत्पुराणम् ।
नतमथमुनिसंघं वर्धयित्वाऽऽशिषाम्बा—
चरणकमलभृंगो निर्जगामाऽथ सूतः ॥ १४. ३१ ॥

॥ श्रीदेवीभागवतमाहात्म्यं संपूर्णम् ॥

इति श्रीदेवीभागवते महापुराणेऽष्टादशसहस्त्रिकायां
संहितायां द्वादशस्कन्धे चतुर्दशोऽध्यायः ।

नमस्त्रिभुवनेश्यै

॥ समाप्तमिदं श्रीदेवीभागवतं महापुराणम् ॥

14.31. இங்ஙனம் அம் முனிசிரேஷ்டர்களின் முன்னிலையில் எளிதில் அடைய முடியாததும் ஸகல வேத ரஹஸ்யமும் ஆகிய புராணத்தைக் கேட்கும்படி செய்து தன்னை வணங்கி நின்ற முனிவர் கூட்டத்தை ஆசி கூறி வாழ்த்தி தேவியின் திருவடித்தாமரைத் தேனைப்பருகும் வண்டு போன்ற ஸூதர் அவ்விடம் விட்டகன்றார்.

ஸ்ரீதேவீபாகவத மாஹாத்மியம் ஸம்பூர்ணம்.
இங்ஙனம் பதினெண்ணாயிரம் சுலோகங்களடங்கிய ஸ்ரீதேவீ பாகவதமகாபுராணத்தில் பன்னிரண்டாவது ஸ்கந்தத்தில் பதினான்காவது அத்தியாயம் முற்றும்.

முவ்வுலகநாயகிக்கு நமஸ்காரம்.

ஸ்ரீதேவீபாகவதமகாபுராணம் ஸம்பூர்ணம்.

II. புராணங்கள்

ஸ்ரீமத் பாகவத ஸாரம்: முதல் பாகம் (ஸ்கந்தம் 1-9) பக்கம் 560	10	00
ஷை இரண்டாம் பாகம் (ஸ்கந்தம் 10-12) பக்கம் 560	12	50

III. ஸ்தோத்ரங்கள்

ஸௌந்தர்யலஹரீ பாஷ்யம்	7	50
ஸௌந்தர்யலஹரீ (மூலம்) (நாகரம் தமிழ்)	1	50
சிவானந்தலஹரீ பாஷ்யம்	4	00
,, (மூலம்)	1	00
சிவ ஸ்தோத்திரங்கள்	1	50
ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம பாஷ்யம்	10	00
,, ,, பாராயணம்	6	00
,, ,, மூலம்	2	00
ஸ்ரீ லலிதா த்ரிசதீ பாஷ்யம்	6	00
ஸ்ரீ லலிதா த்ரிசதீ ஸ்தோத்ரம்	1	00
ஸ்ரீவித்யா	5	00
ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம பாஷ்யம்	7	00
,, ,, ஸ்தோத்ரம் (பாராயணத்திற்குரியது)	3	00
ஸ்ரீவிஷ்ணு ஸ்தோத்ரங்கள்	1	00
பஜகோவிந்தம்	1	00
அஷ்டோத்தர சத நாமாவளிகள்	2	00
,, அட்டை பைண்டு	4	00
ஆதித்ய ஹ்ருதயம்	1	25
சித்தி விநாயக பூஜை	0	50
நவராத்திரி பூஜை	1	00
வரலஷ்மி விரதம்	1	00

ஆசிரியர் 'அண்ணா' உரை எழுதிய
எங்கள் நூல்கள்

நாகரத்திலும் தமிழிலும் மூலமும் பதவுரை பொழிப்புரைகளும் விளக்க உரையும் குறிப்புகளும் உள்ளன.

ஈச-கேன-கட உபநிஷதங்கள்

ப்ரச்ன-முண்டக-மாண்டூக்ய-ஐதரேய உபநிஷதங்கள்

தைத்திரீய உபநிஷத்து (பக்கம் 91)

சாந்தோக்ய-ப்ருஹதாரண்யக
உபநிஷத்துகளின் ஸாரம்,
ப்ரஹ்மஸூத்ரத்துடன் (மூன்றாவது பதிப்பு)
பக்கம் 320

மஹாநாராயண உபநிஷத்து
(தைத்திரீய நாராயணவல்லி) பக்கம் 146

ஸ்ரீமத் பகவத்கீதை (விளக்கங்களுடன்)

ஸ்ரீமத் பகவத்கீதை (பாராயணம்)

ஸ்ரீமத் பகவத்கீதை மூலம் (தமிழ்) பாக்கட் சைஸ்

விவேகசூடாமணி (பக்கம் 392+XII)

SRI DEVI BHAGAVATA SARAM – Part-III		**19-00**
,, ,,	**DELUXE**	**25-00**